# வெள்ளி விழா

## மலர் - 1999



. 98
வக

உலகத் தமிழ்ப் பண்பாட்டு 7வது மாநாடு

7th International Conference on Tamil Culture

विशेष कार्य अधिकारी
**OFFICER ON SPECIAL DUTY**

राष्ट्रपति सचिवालय,
राष्ट्रपति भवन,
नई दिल्ली - 110004.
**President's Secretariat,**
**Rashtrapati Bhavan,**
**New Delhi - 110004.**

No.F.2-M/99



10th August, 1999

Dear Shri Rahman,

The President of India, Shri K.R. Narayanan, is happy to know that the International Movement for Tamil Culture, Chennai is organising its 7th International Conference on Tamil Culture and celebrating its Silver Jubilee from 27th to 29th August, 1999 at Chennai.

The President extends his warm felicitations and greetings to all those associated with the organisation and wishes the Conference and the Celebrations all success.

With regards,

கொழும்பு தமிழ்ச் சங்கம்

Yours sincerely,

(S.N. Sahu)

நூலகம்

Shri M.A. Rahman,
General Secretary-ICTC,
International Movement for Tamil Culture,
IMTC Secretariat,
375-8, Arcot Road,
Kodambakkam, Chennai 600 024.

30158

*Additional Private Secretary*
*to the Prime Minister*

प्रधान मंत्री कार्यालय
नई दिल्ली–110 011
PRIME MINISTER'S OFFICE
NEW DELHII-110011

18 August 1999

Dear Thiru Rahman,

I write to acknowledge the receipt of your letter of 21 July 1999 addressed to the Prime Minister inviting him to grace the inaugural function of the 7th International Conference on Tamil Culture proposed to be held at Chennai on 27 August 1999.

In view of the extremely busy schedule and prior commitments, it is regretted that it would not be possible for the Prime Minister to accede to your request. The Prime Minister extends his best wishes for the success of the 7th International Conference on Tamil Culture.

With regards,

Yours sincerely,

(V. Anandarajan)

Thiru M.A. Rahman
General Secretary
International Conference on Tamil
Culture Secretariat
375-8, Arcot Road
Kodambakkam
Chennai 600 024.

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்,
எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு,
இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009

நாள் 11.8.1999
தி.பி.2030/ஆடி 26.

## வாழ்த்துரை !

தமிழுணர்ச்சியென்பது தன்மானத உணர்வாக எழுந்து அழிந்துவிடாமல் அது ஒரு இயக்கமாக உருப்பெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு தமிழ் மன்றங்களும் இயக்கங்களும் தோற்றுவிக்கப்பட்டன. அவ்வழியில் உருவாக்கப்பட்ட உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களை ஒருங்கிணைத்துத் தொண்டாற்றி வருவதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற முழக்கத்தின் முழு வெற்றி காண ஓயாமல் செயலாற்றிக் கொண்டிருக்கும் கலைஞர் அரசு நடைபெறும் சூழலில் நடத்தப்படும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஏழாவது மாநாடு தமிழுணர்வாளர்களுக்கு ஊக்கத்தை வழங்கி வழிகாட்டும் என்ற நம்பிக்கையில் மாநாடு சிறப்புறவும் - வெளியிடும் மலர் அழகுற மணம் வீசவும் என் நெஞ்சார்ந்த வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்,

11.8.99

(மு. தமிழ்க்குடிமகன்)

**வ. முல்லைவேந்தன்**
செய்தி, விளம்பரம் மற்றும்
அச்சுத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009
தொலைபேசி—
அலுவலகம் : 56 26 31
இல்லம் : 493 65 77

நாள் 31.07.1999

<u>வாழ்த்துச் செய்தி</u>

<u>சிறந்திடுக! மலர்ந்திடுக!!</u>

நம்முடைய தமிழ் மண்ணே பண்பாடு நாகரிகத்தின் முதன்மைத் தொட்டிலாக விளங்குவது என்கிறது வரலாறு. இந்த வரலாற்றுண்மை பல்வேறு அகழ்வாராய்ச்சிகளால் உறுதி செய்யப்பட்டு வருகிறது.

'திங்களொடும் செழும்பரிதி தன்னொடும்
விண்ணொடும் உடுக்க ளொடும்
பிறந்த தமிழுடன் பிறந்தோம்'...

- என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் அவர்கள் குறிப்பிட்டதெல்லாம் இதன் அடிப்படையிலேதான்.

இத்தகைத் தொன்மை மிக்கதான நமது தமிழ்ப் பண்பாட்டினை நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் காக்கவேண்டிய பெரும் கடமை நமக்கிருக்கிறது. இதனை உணர்ந்து, 'உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்' கண்டுள்ள தமிழ் நெஞ்சங்களை வாழ்த்தி மகிழ்கிறேன்.

இவ்வியக்கத்தின் வெள்ளிவிழா மாநாடு சிறக்கவும், அதன் தொடர்பாக வெளியிடப்படவிருக்கும் விழா மலர் சிறக்கவும், நல்லெண்ணம் மணக்கவும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்புடன்,

வ. முல்லைவேந்தன்
(வ.முல்லைவேந்தன்). 31/7/1999

பெறுநர்

திரு. இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான்,
பொதுச் செயலாளர்,
உலகத் தமிழ்ப் பண்பாட்டு 7வது மாநாட்டு குழு,
375-8, ஆற்காடு சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

# S. Thondaman, M.P.

**Minister of Livestock Development & Estate Infrastructure**


23.08.1999

## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க வெள்ளிவிழா

## இலங்கை தமிழ் அமைச்சர் மாண்புமிகு செள.தொண்டமான்

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் தனது வெள்ளி விழாவினை, 7வது உலகத் தமிழ் பண்பாட்டு மாநாட்டோடு சேர்ந்து தமிழ்நாடு சென்னை நகரில் இம்மாதம் 27ம், 28ம் 29ம் திகதிகளில் நடைபெற இருப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மாநாட்டில் என்னையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைத்திருந்த போதிலும் சில தவிர்க்க முடியாத காரணங்களினால் அவ்வாறு கலந்து கொள்ள முடியாமல் இருப்பதையிட்டு நான் மிக்க கவலை அடைகிறேன்.

இன்று உலகில் தமிழ் மக்கள் சிறுபான்மையினர் அல்லர். அவர்கள் பல நாடுகளிலும், கணிசமான தொகையினராக பரந்து, சிறந்து வாழ்கிறார்கள். அவர்தம் பண்பாட்டினைப் பேணிக்காத்து வளர்ப்பதற்கு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் ஆற்றும் பணி போற்றுதற்குரியது.

இவ்விழா சிறப்புற நடைபெற எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

செள.தொண்டமான்
கால்நடை அபிவிருத்தி மற்றும்
தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர்.


Ministry of Livestock Development & Estate Infrastructure
45. St Michael's Road Colombo - 3
Telephone : 441848
Fax: 941 - 541364

**MENTERI KERJA RAYA, MALAYSIA**
**MINISTER OF WORKS, MALAYSIA**

**KEMENTERIAN KERJA RAYA**
JALAN SULTAN SALAHUDDIN,
50580 KUALA LUMPUR.

நமது தமிழர் பண்பாடு என்பது மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்தது. எனவே, அத்தகைய பெருமைவாய்ந்த நம் பண்பாட்டின் பழமையையும் அதன் பெருமையையும் தமிழர்களாகிய நாம் போற்றி பாதுகாக்க வேண்டும். சென்னையில் சிறப்பாக நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இந்த ஏழாவது மாநாடானது நமது பண்பாட்டைப் பற்றி உலகின் வெவ்வேறு நாடுகளில் உள்ள தமிழர்கள் நன்கு அறிய மேலும் வழிவகை செய்கின்றது. அதுமட்டுமல்லாமல், நமது கலை, கலாச்சாரம் ஆகியவை உலகம் முழுவதும் பரவ ஓர் நல்ல வாய்ப்பாகவும் இம்மாநாடு அமையும் என்பதில் சந்தேகமில்லை.

பிறர் மகிழத் தாமும் மகிழ்ந்து, பிறர் துன்பப்படும்போது தாமும் துன்பப்பட்டு வருந்தி, அவ்வருத்தம் போக்க என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யும் அன்புடையாளரே உண்மையான பண்பாளர் என்பது வள்ளுவர் கருத்து.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்"

என்னும் அடிகளில் அமைந்த பொதுநோக்கே பொலிவான பண்பாட்டின் அளவுகோல். அன்பு, அறிவு, இனிமை, இரக்கம், எளிமை, ஒழுக்கம், ஒப்புரவு, கண்ணோட்டம், கல்வி, விருந்தோம்பல் முதலிய நல்ல பழக்க வழக்கங்கள் அனைத்தும் கொண்ட நல்ல பண்புகளே பண்பாகும்.

உலகலாவிய முதல் பேரியக்கம் என்று போற்றப்பட்டு பாரிசு யுனெசுகோவில் பதிவு பெற்று திகழ்ந்து வருகின்ற நம் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமானது உலகத் தமிழினத்தைத் தமிழுடன் ஒருங்கிணைக்க வேண்டும் என்ற மனிதத்துவ தேவைகளை அடிப்படையாகக் கொண்டு, சாதி, சமய வேறுபாடுகளை அகற்றி, சமதர்ம சமுதாயம் காணும் இலக்கில் செயல்பட்டு வரும் இந்த மாநாடானது காலத்தால் அழியாமல் நிலைத்து நின்று என்றும் சிறப்புடனும் புகழுடனும் திகழ வேண்டும். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமான இவ்வியக்கம் பல்வேறு நாடுகளில் ஆலம்விழுதுபோல் பரவி அதன் பயன் உலகில் உள்ள அனைத்து தமிழினத்திற்கும் நற்பயனை விளைவிக்க வேண்டும் என இவ்வேளையில் நான் கேட்டுக்கொண்டு, அதன் நோக்கம் வெற்றியடைய எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்,

டத்தோஸ்ரீ ச. சாமிவேலு

**United Nations Educational, Scientific and Cultural Organization**
OFFICE OF THE UNESCO REPRESENTATIVE TO BHUTAN, INDIA, MALDIVES AND SRI LANKA

TEL : 6147310, 6146308, 6146285, 6146588, 6141437, 6140038 - 39
TELEX : 031-65896 ROST IN
FAX : 91-11-6143351, 91-11-6142714
GRAMS : UNESCO NEW DELHI - 110057
E-MAIL : UNESCO.NEWDELHI@UNESCO.ORG
INTERNET: http://unescodelhi.nic.in

UNESCO HOUSE
8, POORVI MARG, VASANT VIHAR
NEW DELHI - 110 057
INDIA

Ref: Moe/RP/MQ/99/1

12th August 1999

Mr. M.A. Rahman
General Secretary
ICTC
Chennai, Tamil Nadu.

Dear Mr. Rahman,

Thank you very much for inviting me to attend the inaugural function of the 7th International Conference on Tamil Culture, scheduled for 27th-29th August, 1999, in Chennai, Tamil Nadu, which also coincides with the Silver Jubilee Year of the establishment of the "International Movement for Tamil Culture".

Regrettably, due to prior commitments, I will not be able to attend this momentous and auspicious occasion. However, I am pleased and honored to be able to contribute a message, which please find sent herewith, to be published in your souvenir programme that is being brought out.

We are also enclosing a copy of **"Manifesto 2000"**, drafted by a group of Nobel Peace Laureates, towards a pledge in the daily lives of people, which UNESCO is trying to promote, and which your movement may wish to popularize.

My best wishes once again, on achieving twenty five years of commitment towards promoting the Tamil Language, Culture, Art & Literature to the general public.

## Message From The Director & UNESCO Representative to India, Sri Lanka, Bhutan and The Maldives

The International Movement for Tamil Culture, by its activities formulated to propagate culture and promote Language, Culture, Art and Literature, to the general public, works towards enhancing the ideals and objectives of the United Nations Educational, Scientific and Cultural Organisation (UNESCO), in the preservation and promotion of cultures, the very roots of human development. The IMTC, by its international nature, is also in a unique position to promote the very **"raison d'etre"** of UNESCO, which is to build a Culture of Peace, in a world best with wars. Therefore, it gives me great pleasure to write a message to the IMTC souvenir programme, in connection with its 7th Conference of the International Movement for Tamil Culture, and the occasion of its Silver Jubilee Year celebrations.

Allow me therefore, to take this opportunity to invite the International Movement for Tamil Culture, as well as its associates, to join this global movement for a Culture of Peace and Non-violence, to pledge in our lives, to; '**Respect** all life'
'**Reject** all violence'
'**Share** with others'
'**Listen** to Understand'
'**Preserve** the Planet' and
'**Rediscover** Solidarity'

Let us all get together, to carry out various activities during the period from **2001-2010, the "International Decade for the promotion of a Culture of Peace and Non-violence for the Children of the World", and to offer young people and future generations, the values that inspire them to shape a world based on justice, solidarity, liberty, dignity, harmony, and peaceful means of conflict resolution, to ensure prosperity for all.**

Our Congratulations and best wishes goes out the International Movement for Tamil Culture, for twenty five years of service in preserving and promoting its rich cultural heritage, the very essence of humanity. We look forward to the continued cooperation of IMTC towards promoting world peace, through the universal phenomenon of Culture.

Yours sincerely,

Prof. Moegiadi
Director & UNESCO Representative

# MANIFESTO 2000

For a culture
of peace
and non-violence

1 "Respect all life."

"Reject violence." 2

3 "Share with others."

"Listen to understand." 4

5 "Preserve the planet."

"Rediscover solidarity." 6

Internet :
www.unesco.org/manifesto2000

2000 INTERNATIONAL YEAR FOR THE CULTURE OF PEACE

# Fighting against dependency

**Rao Chelikani has been involved with NGOs in education for the past fifteen years. He is currently co-ordinator of the EFA Network, an umbrella mechanism for some sixty-five NGOs actively involved in basic education. In June 1996, when his mandate ends, he will return to India to continue his work at the grassroots. Mr Chelikani presents his final "balance sheet" to EFA 2000:**

***The EFA Network of NGOs was created just after the World Conference on Education for All. What impact did the conference have on NGOs' activities in basic education?***

Before Jomtien, governments believed that education was only their responsibility, but today, NGOs are taken seriously. Governments have recognized that NGOs have a definite role to play, especially in non-formal education.

***What are the principal achievements of NGOs in basic education over the past five years?***


The creation of a network of NGOs supported for the first time ever, by four international bodies (UNICEF, UNESCO, UNDP and the World Bank) is an achievement. Moreover, we have found new ways to co-operate and build partnerships. Previously, governments and inter-governmental bodies were working in one corner, while NGOs worked in another. Local bodies were not involved nor was the private sector. Since 1990, we have realized that partnerships are needed. We still have a long way to go, but we have enhanced co-operation.

***Does this indicate a more open attitude amongst governments and international agencies towards NGOs?***

Mental attitudes among officials in governments and agencies have certainly changed, but we have not yet been equipped with all the right operational tools. Here, much work remains to be done. Inter-governmental bodies and aid agencies have created a curious dependency mentality among NGOs by pumping in funds from abroad and placing consultants from the North in the field. The local and national NGOs, especially in Africa, have simply received money and tried to digest. But many of them have digested and implemented badly. Self-reliance as a value is disappearing, and that is the present danger. Accepting money from abroad is the same as begging and should be discouraged.

***Apart from this dependency mentality, what have been the main obstacles for NGOs working towards the goal of Education for All?***

NGOs generally feel that they have a different mission than the governments, but this is not entirely true. Most NGOs activities are complementary to the work of governments. Another emerging difficulty is the growing wild capitalism due to the ruling philosophy of free trade and privatization. Yet, it is important to build partnerships and to start collaborating with local, regional and national businesses rather than with multi-national corporations which can sometimes be insensitive to local needs.



© Krista Boggs

*Rao Chelikani*

***The EFA Network has been criticized for being a discussion group rather than accomplishing concrete results. What is your response to this?***

We have developed regional and sub-regional NGO networks in Asia and the Pacific, Eastern and Southern Africa, Western Africa, Central and Eastern Europe, and in the beginning of 1996, another network will be established in Central Africa. This is the first phase. The second will be a capacity-building phase to help the networks become more autonomous and action-oriented. Today, the networks don't work efficiently because NGOs are full of false expectations that funds are flowing in from outside the region. The networks must help NGOs learn how to mobilize human and material resources locally. There are many ways to raise funds for EFA. One can create a good-will football team in Cameroon, a parking area for bikes during a festival in India and a film festival in a theater in Thailand. Our hope is that in three or four years, there will be no need for a central EFA Network of NGOs.

***What is the objective of the regional networks?***

The idea is to bring together geographically close NGOs so that they can create, propose and execute joint projects. Individual NGO projects are not our concern. Instead of sending a project proposal to New York, Paris or Geneva, a project should be funded by the regional United Nations office. It would make it easier for NGOs to get funding and for U.N. agencies to know what kind of projects they support. Everything can be decided on the spot. Moreover, the idea is that NGO representatives in a regional network should be the focal point in creating national networks. However, so far I can't guarantee that this works as we wish in all countries.

***Has it been more difficult to involve NGOs in education than you thought five years ago?***

Yes, it was easy to recognize what was not working but more difficult to see what could be done to make them work together and build partnerships in education. It is easy to design structures but difficult to change the dependency mentality of people, or the excessive individualism of certain associations. The networks try to help NGOs mobilize their own resources locally, but there is still much work to do. ■

நா. மகாலிங்கம், பி. எஸ்சி., எப். ஐ. இ.

101, மவுண்ட் ரோடு,
கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி அலு. 2350814
வீடு. 4996898
தொலைநகல் : 2350041.

20.8.99

அன்புடையீர்,

வணக்கம்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க வெள்ளி விழா ஏழாவது மாநாடு நடப்பதறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அறிஞர்களை முதன்மைப்படுத்தும் அமைப்பாகத் திகழ்வதும் உலகு அனைத்தும் பரந்து வாழும் தமிழ் மக்கள் தங்கள் மொழி இனம் சார்ந்த, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கும் அமைப்பாகவும் திகழ்ந்து 25 ஆண்டுகளைக் கடந்து வெள்ளி விழா காண்பது பெருமகிழ்ச்சி தருகிறது.

இந்த இயக்கம் நீடுழி ஓங்கிப் பணி செய்ய என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

(நா. மகாலிங்கம்)

திரு. எம். ஏ. இரகுமான் அவர்கள்,
பொது செயலாளர்,
உலகத்தமிழ் பண்பாட்டு 7ஆவது மாநாடு,
ஐ. எம். டி. சி. செகரடெரியேட்,
375-8, ஆற்காடு ரோடு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.



E-MAIL: periyar @ giasmd01.vsnl.net.in
தொலை பேசி : (91) 044 - 586555
தொலைப்பதிவி : (91) 044 - 563666

# திராவிடர் கழகம்

பெரியார் திடல், 50, ஈ.வெ.கி.சம்பத் ரோடு
வேப்பேரி, சென்னை - 600 007
(தலைமை நிலையம்)

தந்தை பெரியார்
நிறுவனத் தலைவர்

பொதுச் செயலாளர்
கி.வீரமணி எம்.ஏ., பி.எல்.,

21.06.1999
நாள் : ..................

பெறுநர்

உயர்திரு. எம்.ஏ. ரஹ்மான் அவர்கள்,
பொதுச்செயலாளர்,
உலகத் தமிழ் பண்பாட்டு 7-வது மாநாடு,
175-8, ஆர்காடு சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை - 24.

பேரன்புடையீர்,

வணக்கம். தமிழ் - தமிழர் - தமிழ்ப் பண்பாடு என்பது அயல் இனப் பண்பாட்டுப் படையெடுப்பால் சிதறுண்டுள்ள நிலையில் இவற்றினை கட்டிக்காக்கும் நற்பணியில் ஈடுபடுவது சாலச் சிறந்தது.

தந்தை பெரியார் கண்கொண்டு - நோய்நாடி, நோய் முதல்நாடி, அது தணிக்கும் வாய்நாடி - மூலப் பலத்தை நோக்கி போர்தொடுக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டும் என்பதே நமது அவா! தங்களது முயற்சி வெற்றி அடைவதாகுக! மலர் சிறக்க வாழ்த்துக்கள்.

தங்களன்புள்ள,

(கி. வீரமணி)
பொதுச் செயலாளர்,
திராவிடர் கழகம்.

---

## மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

க.ப. அறவாணன், பி.ஓ.எல்., எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
துணைவேந்தர்

இப்படை தோற்கின் எப்படை செயிக்கும்?
- மனோன்மணியம்

முயன்று வரலாற்றைப் படித்தல் வேண்டும்
இயன்றால் வரலாற்றைப் படைத்தல் வேண்டும்
முடிந்தால் வரலாறாகவே வாழ்தல் வேண்டும்



21.06.1999.

வாழ்த்துகள்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஏழாவது மாநாடு சென்னையில் ஆகஸ்ட்டுத் திங்கள் 27,28,29 ஆகிய நாள்களில் நிகழ இருப்பது அறிந்து மிகுந்த மகிழ்ச்சி யடைகிறேன்.

உலகளாவிய தமிழர்களின் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றைப் பொதுமக்களுடன் உறவாடி அவ்ற்களைப் பாதுகாக்கும் அமைப்பாகக் கடந்த 25 ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் இவ்வியக்கம் தற்போது வெள்ளிவிழா மாநாட்டினைத் தமிழகத்தில் நிகழ்த்த இருப்பது மிகுந்த பாராட்டிற்குரியது.

வெள்ளி விழா மாநாடு இனிதே வெற்றி பெற என் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.

இங்ஙன்,

க.ப. அறவாணன்

# மலர் மணம்

ஓர் இயக்கம் தங்கு தடையின்றி 25 ஆண்டுகள் இயங்கி வெள்ளி விழா கொண்டாடுவது சிறப்பான செய்தியாகும். அந்த இயக்கத்தின் தலைவராக 23 ஆண்டுகள் ஒருவர் பணியாற்றி வெற்றி வாகை சூடி நிற்பது அதைவிடச் சிறப்பானதாகும். மனித ஆயுளைப் போன்றதல்ல இயக்கங்கள்–சங்கங்கள் வாழ்வு. அதனால்தான் சிறப்புக் குறித்த அழுத்தம்.

முதல் மாநாடு கண்ட சென்னையில், ஏழாவது மாநாடு நடைபெறவுள்ளது. முதல் மாநாட்டிற்கு முன்னாள் அமைச்சர் கா. இராசா முகம்மது தானாக முன்வந்து செய்த ஏற்பாடுகள், அதனை முழுமையாக ஏற்று, முகமலர்ச்சியுடன் அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் அளித்த தமிழக அரசு உதவிகள் என்றும் ஏற்றிப் போற்றத் தக்கன. அதனைப் பின்பற்றி 2வது மாநாட்டில் மொரிசியஸ் அரசு தானே முன்நின்று முழுமாநாட்டுப் பொறுப்பினையும் ஏற்று நடத்தியதை – எம் இயக்க வரலாற்றுப் பாதையில் வளர்ச்சிக்கு வித்திட்டதை –நினைவு கூர்ந்து மகிழ்கின்றோம். அந்த வரலாற்றுச் செய்திகள் பல பக்கங்களில் பரந்து கிடைப்பதை நீங்கள் படித்து மகிழலாம்.



ஏழாவது மாநாடும் வெள்ளி விழாவும் ஒரு சேர சென்னையில் நடத்த ஓர் ஆண்டுக்கு முன்பே தீர்மானித்தோம். கடந்த ஓர் ஆண்டாக தமிழக அரசுடன் தொடர்ந்து தொடர்புகள் கொண்டோம். நம்பிக்கையான பதில்கள் கிடைத்தன. இறுதிக் கட்டத்தில் இம்மாத ஆரம்பத்தில் தமிழக அரசை அணுகிய போது தேர்தல் காரணமாக உதவ முடியவில்லை என்று கூறிவிட்டார்கள்.

உலகில் பல்நாடுகளில் வாழும் சுமார் 10 கோடி தமிழர்கள் தமிழகத்தையே பெரிதும் நம்பி வாழ்கின்றார்கள். தமது வாழ்வுக்கும் உரிமைக்கும் தமிழகம் குரல் கொடுக்கும் என்று முழு நம்பிக்கையுடன் வாழ்கின்றார்கள். உலகத் தமிழர்கள் ஒன்றிணைந்து தமிழ் இனம் – தமிழ் மொழி – தமிழ் மண் காக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் உ.த.ப.இ. ஓயாது இயங்கி வருகின்றது.

முதல் மாநாடு அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் மணம் பெற்றது. ஏழாம் மாநாடு அன்பர்கள்–நண்பர்கள்–புரவலர்களால் மணம் பெறுமென நம்புகிறோம்.

இம் மலர் தயாரிப்புக்கு முழுப் பொறுப்பும் ஏற்று கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக ஏடு திருத்திச் செப்பனிட்டு இம் மலரை உருவாக்கித் தந்த எழுத்தாளரும் இலக்கு ஆசிரியருமான தேவகாந்தன் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

ஓயாது ஓடி உழைத்த தவ. பழனியப்பன், சிரமமேற்று, திட்டத்துடன் பணியாற்றிய தங்கநேயன், தாமே முன்வந்து விளம்பரம் நன்கொடை பெற்றுத் தந்த அந்தாலனார், இப்பணிக்கு ஊழியராய் அமர்ந்து பணிபுரிந்த செல்வி உமா மற்றும் அழகு ஒளி, சிவபாலசிங்கம், எஸ். பெருமாள் ஆகியோர் இம்மலர் மணம் பரப்ப உறுதுணை புரிந்தவர்கள். இவர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

இம்மலரை கணிப்பொறியில் ஆக்கித் தந்த விண்டோஸ், சென்னை–24 நிறுவனத்தின் உரிமையாளர் திரு. மாரிஸ் அவர்களுக்கும் மற்ற ஊழியர்களுக்கும் எங்கள் நன்றியை உரித்தாக்குகின்றோம்.

–பதிப்புக் குழு



# முதலாம் மாநாடு - நினைவில் சில...

*இளம்பிறை எம்.ஏ. ரஹ்மான்*



**1977** ஆம் ஆண்டு டிசம்பர் கடைசி வாரம். மலேசிய இலக்கிய நண்பர் இர.ந.வீரப்பன் அவர்களிடமிருந்து ஓர் அஞ்சலட்டை...

*நான் சென்னை வந்து மாணவர் மன்றத்தில் தங்கி உள்ளேன். சந்திக்க விரும்புகிறேன்....*

...1962 ஆம் ஆண்டில் இளம்பிறை இலக்கியத் திங்கள் இதழையும் 1964ஆம் ஆண்டு அரசு வெளியீடு பதிப்பகத்தையும் ஈழம்-கொழும்பில் துவங்கி நடத்தி வந்தேன். இதில் எனக்கு உறுதுணையாக எஸ்.பொ. இயங்கி வந்தார். அதே காலத்தில் பொன்னி இலக்கியத் திங்கள் இதழையும் நூல்கள் வெளியிடுவதையும் மலேசியா-கோலாலும்பூரில் ந. தியாகராசன் செய்து வந்தார். அவருக்கு உறுதுணையாக வீரப்பன் இருந்தார்.

இலக்கிய ரீதியாக எங்கள் உறவு பிறந்தது; நட்பு ரீதியாக வளர்ந்தது. இலக்கியக் கொள்கைகளிலும் நாங்கள் ஓரளவு கருத்து ஒத்திருந்தோம். எங்கள் இதழ்-நூல்கள் மலேசியாவுக்கும் அதேபோன்று அவர்கள் இதழ்-நூல்கள் இலங்கைக்கும் நாணயத் தொடர்பின்றி பண்டமாற்று முறையில் பகிர்ந்து கொண்டோம்.

தமிழகத்திலிருந்து புற்றீசல் போல் இலங்கை-மலேசிய-சிங்கை நாடுகளுக்கு படையெடுக்கும் தரமற்ற இதழ்களை முக்கூட்டாகச் சாடினோம். தமிழக ஒரு வழிச் சந்தையை எதிர்த்தோம். துடக்கு மனப்பான்மையுடன் எம்மை தமிழகப் பத்திரிகைகள் ஒதுக்குவதைக் கண்டித்தோம். இந்தப் பணி 14 ஆண்டுகள் தொடர்ந்தன.

''இந்த வேள்வியில் எங்களுக்குப் பலன் கிட்டவில்லை என்ற உண்மை ஒருபுறமிருக்க, பலர் மத்தியில் பரவலாக எங்கள் செய்திகள் போய்ச் சேர்ந்தன. ஒரு விழிப்புணர்வைக் கொண்டு வந்தோம்'' என்ற மன நிறைவு மட்டுமே எஞ்சியது. இந்நிலையில் டில்லியிலிருந்து எங்கள் நியாயமான கோரிக்கையை ஏற்று ஒரு குரல் ஒலித்தது. எங்களுடைய தரமான படைப்புகளுக்கு அக்குரல் அங்கீகாரம் வழங்கியது. ஈரேழு ஆண்டு காலப் போராட்டத்திற்கு வெற்றி கிடைத்தது; மகிழ்ந்தோம். மேலும் உற்சாகத்துடன் பணி தொடர்ந்தோம். டில்லியின் குரல் பேராசிரியர் சாலை இளந்திரையனார் அவர்களுடையது.

இந்த இனிய நினைவுகளுடன் மறுநாள் வீரப்பனாரைச் சந்திக்க எண்ணினேன்...

...1977 ஜனவரி முதல் தேதி நான் சென்னை வந்தேன். சில பணிகளில் ஈடுபட்டிருந்தபோது,

நண்பர் இரா. சனார்த்தனம் சந்தித்து 'மக்களாட்சி' வார ஏட்டில் பணியாற்ற அழைத்தார். நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் தோற்று விக்கப்பட்டு, அதன் இயக்க ஏடாக மக்களாட்சி வெளிவந்தது. சிறப்பாசிரியராக நாவலரும் பொறுப்பாசிரியராக நானும் பணிபுரிந்தோம். டாக்டர் சனார்த்தனம் ஏற்பாட்டினால் அதில் ஆறு மாதம் பணிபுரிந்தேன். அங்கு பல அரசியல்-இலக்கிய நண்பர்களின் நட்புறவு கிடைத்தது. அதில் மிக முக்கியமான நண்பராகக் கிடைத்த முன்னாள் ராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் ந.ப. செங்கோட்டு வேலு அவர்களை அழைத்துக் கொண்டு வீரப்பனாரைச் சந்திக்க மாணவர் மன்றம் சென்றேன்.

வனவாச மறைவிலிருந்து நேரடிச் சந்திப்பு நிகழ்ந்த அந்த முதல்நாள்-இனிமையான நாள். அளவளாவினோம்.

*உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க முதலாவது மாநாடு சென்னையில் அடுத்த வாரம் நடைபெறுகின்றது. நான் அதற்காகத்தான் வந்திருக் கிறேன். வெளிநாட்டு பேராளர்கள் ஓரிரு நாளில் வருவார்கள்.*

என் நினைவு 1974ஐ நோக்கிச் செல்கின்றது...

4வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்த போது கலவரத்தில் அல்லுண்டு போனவர்களுள் அங்கு நானும் ஒருவன். அங்குதான் சாலையாரையும் சாலினியாரையும் முதன் முறையாகச் சந்தித்தேன். அங்குதான் இவ்வியக்கம் தோற்றுவிக்கப்பட்டது. (அது பற்றிய வரலாற்றுச் செய்தியை பேரா. சாலினி அவர்கள் எழுதியுள்ளார்கள்.) திங்களிதழ்-நூல் வெளியீடு களில் நான் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த காலம் அது. இலக்கிய ஆக்கங்களில் மிகுதி நேரம் தேவைப்பட்டதால் என் பணிகளில் ஒன்றிக் கொண்டேன். கண்முன் உருவான இயக்கம் மூன்று ஆண்டுகளில் விழாக் காணும் நிலையை உணர்ந்து வியந்தேன். குற்ற உணர்வுகளுடன்...

*நான் ஏதாவது உதவ வேண்டுமா?*

...வக்ஃபு விவகாரங்களைப் பிரகாசப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இஸ்மி என்ற மாசிகையை அப்போது நடத்திக் கொண்டிருந்தேன். வக்ஃபு அமைச்சராகவும் இருந்த கா.இராசா முகமது அவர்கள் என் நண்பரானார். அதையும் என் கவனத்தில் கொண்டே இக்கேள்வியை எழுப்பினேன்.

*இல்லை. இங்கு இந்தியக் கிளை வலுவாக உள்ளது. அவர்களே எல்லா ஏற்பாடுகளும் செய்கிறார் கள். எனவே உதவி அவசியமில்லை.*

விடை பெற்றோம்.

மூன்று தினங்களின் பின் ஓர் அவசரச் செய்தி வருகின்றது. உடனே சென்றேன்.

*ரஹ்மான், இந்தியக் கிளையினர் சரியாகச் செயற்படவில்லை என்பதை இங்கு வந்தபின்தான் அறிய முடிந்தது. வெளிநாட்டு அறிஞர்கள் வரத் துவங்கி விட்டார்கள். அவர்களைத் தங்க வைக்கக்கூட ஏற்பாடு செய்ய வில்லை. ஏமாற்றமாகவும் வேதனை யாகவும் இருக்கின்றது.*

புலம்பலும் வேதனையும் வெடித்தன.


அது இரவு நேரம். அமைச்சர் நண்பர் இராசா முகம்மது அவர்களுடன் தொலைபேசியில் பேசினேன். சில விவரங்கள் கேட்டார்; கூறினேன். உடனே அழைத்தார். முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுடன் தொடர்பு கொண்டார். அன்றிரவே தங்க வசதியின்றித் தவித்த மலேசியப் பேராளர்களுக்கு பழைய சட்ட மன்ற உறுப்பினர் விடுதியில் சில அறைகள் ஒதுக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டனர். அடுத்த நாள் புதிய விடுதியிலும். மூன்று தினமும் விழா மண்டபம் சென்று திரும்ப அரசு பஸ் வசதி-மாபலிபுரம் சுற்றுலா-அங்கு உணவு -என்று தமிழக அரசு பல வசதிகளைச் செய்தது. இறுதியில் முதல்வரே தாஜ் கோரமண்டலில் விருந்து படைத்து மகிழ்வித்தார்.

முதல் மாநாட்டில் தோன்றாத் துணையாகப் பணியாற்றியது என் நினைவுக்கு வருகின்றது.

●

# தமிழீழம் ஒன்றே தீர்வு

கா. இராசா முகமது, முன்னாள் அமைச்சர்



உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஏழாவது மாநாடும் வெள்ளிவிழாவும் தமிழகத்தின் தலைநகரில் 1999 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்களில் நடைபெறவிருப்பது கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதே தமிழ்ப் பண்பாடு ஆகும். மொழி உணர்வால் தமிழர்களாகவும், இன உணர்வால் திராவிடர்களாகவும் வாழ விரும்பும் தமிழ்ச் சமுதாயத்தின் முன் மாபெரும் பிரச்சனைகளாக இருப்பவை பல. இவைகளில் மிக முக்கியமான, உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனைகளான தமிழர் ஒற்றுமை, ஈழத் தமிழர் விடுதலை உலகத் தமிழர் மாநாடு கவனம் செலுத்தும் என்பதில் ஐயமில்லை.

மத உணர்வாலும் ஜாதிப் பற்றினாலும் சிதறுண்டு நிற்கும் தமிழினம் மொழி உணர்வையும் இன உணர்வையும் முன்னிறுத்தி வாழ முன்வர வேண்டும். ஓர் இஸ்லாமியரோ, ஓர் இந்துவோ அல்லது ஒரு கிறிஸ்துவரோ முதலில் தான் ஒரு தமிழன் என்பதை உணர்ந்து கொண்டால் ஒற்றுமையின் அடித்தளம் பலம் பொருந்தியதாக அமைந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.


மொழிப் பற்றை முன்னிறுத்தி வாழக் கற்றுக் கொண்டால் ஜாதி பற்று மறைந்துவிடும். இவைகளை உள்ளடக்கியே புரட்சிக் கவிஞர் "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே" என்று பாடினார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் இலட்சியக் கனவை செயல்படுத்திக் காட்ட தமிழினம் முன் வர இம்மாநாடு உறுதுணையாக அமையும் என்றே நம்புகிறேன். "உருண்டையான உலகில் நீ எங்கே போய் நின்றாலும் உன் அருகிலேயே சூரியன் நிற்கும்" என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டால் ஈழத் தமிழர் பிரச்சனை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

'தனித் தமிழ் ஈழம்' ஒன்றே இதற்குத் தீர்வு என்பதில் தமிழினம் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். உலகின் அனைத்துப் பகுதிகளிலும் தமிழன் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஆனால் இவனின் 'வாழ்வுரிமை' ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதா என்பது பற்றி இம்மாநாடு விரிவாக விவாதம் செய்து நல்ல முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்கிற என் இலட்சிய ஆவலை இம்மாநாட்டு மலரில் பதிய வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வாழ்க தமிழ் இனம்! வளர்க ஒற்றுமை!

அன்பன்
கா. இராசா முகமது

# வாழ்த்து!



தமிழ்த் தொண்டு செய்வதற்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து வரும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர், இர. ந. வீரப்பனார் அவர்கள் உலகம் முழுவதும் மூலை முடுக்கெல்லாம் சென்று தமிழர்களின் தமிழ் உணர்வையும் பண்பாட்டையும் பரப்பி அவர்களிடம் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறார். இவர் போர்க் குணம் நிறைந்தவர். வரலாற்றை பதிவு செய்ய இவர் இயங்கும் விதம் கண்டு நான் பிரமித்துப் போனேன். இவரைப் போல் உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ வேண்டும்.

இவண்
தவ. பழனியப்பன்
அரண்மனை சிறுவயல்,
சிவகெங்கை மாவட்டம்



# மலேசியாவின் சிறந்த தமிழ் எழுத்தாளர்



**1938**-இல் கோலாலம்பூரில் பிறந்த திருமதி ந. மகேசுவரி அவர்கள் ஒரு தமிழ் ஆசிரியை. ஓய்வு பெற்றுள்ளார் தற்போது. மலேசிய தமிழ் இலக்கியத் துறையில் பெண்களின் ஈடுபாடு மிக அரிதாக இருந்த காலகட்டத்தில் எழுத்துத் துறையில் காலடி வைத்தவர் இவர்.

முதல் எழுத்துப் படிவம் - சிறுகதை - திருப்பம். தகவல் இலாகா வார இதழ் - 1957 - ஜனோபகாரி.

இவரது 2-வது சிறுகதை தமிழ்நேசன் ஞாயிறு மலரில் வெளியாகியது.

தமிழ்நேசன் நாளிதழ் ஞாயிறு மலரில் சிறுகதைகள், கட்டுரை, கவிதை, குறுநாவல், தொடர்கதைகள், மாணவர் கதைகள், சிறுவர் நெடுந்தொடர், குழந்தைப் பாடல்கள், மகளிர் தொடர் கட்டுரைகள் என்பன போன்று எல்லாத் துறைகளிலும் அடிக்கடி ஏராளமாக எழுதி 1963-ல் தமிழ்நேசனின் சிறந்த எழுத்தாளர் என தேர்வு செய்யப்பட்டு தங்கப்பதக்கம் அளித்து சிறப்பிக்கப்பட்டனர்.

நேசன் பவுன் பரிசு திட்டத்தில் மூன்று முறை பரிசு பெற்றதோடு பல முதல் பரிசுகளையும் பெற்று நேசன் வாசகர்களின் இதயத்தில் நீங்காத நிரந்தர இடம் பிடித்தவர்.

1964- தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய சிறுகதை போட்டியிலும் முதல் பரிசாக தங்கப்பதக்கம் பெற்றவர்.

தமிழ் இலக்கியக் கழகம் 'நறுங்கதைச் செல்வி' என்று பாராட்டுப் பத்திரம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அயல்நாட்டுத் தமிழர்களுக்காக நடத்தப்படும் பண்பாட்டுப் பயிற்சி வகுப்பில் கலந்து ஒருமாதப் பயிற்சியும் பெற்று பாராட்டுப் பத்திரமும் நற்சான்று பத்திரமும் பெற்றுள்ளார்.

ஆதி நாகப்பன் இலக்கியப் பரிசும் பணமுடிப்பும் பெற்றவர்.

1997-இல் கோலக்கிள்ளான் வாசகர் வட்டமும், சூரியன் இதழும் இணைந்து நடத்திய ஆண்டு விழாவில் பொன்னாடை அணிவித்துச் சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

இவரின், 'தாய்மைக்கு ஒரு தவம்' (சிறுகதைத் தொகுப்பு), 'பிறந்தநாள் பரிசு' (மாணவர் கதைகள்), 'புதிய வாரிசு' (நாவல்), போன்ற நூல்கள் வெளிவந்துள்ளன.

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் குறிக்கோள்களும், செயல் வகைகளும்

# INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE

**உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்**
**198B-2nd Floor Jalan Tun Sambanthan 50470**
**Brickfields Kuala Lumpur**

**இயக்கம் பின்வருவனவற்றின் வளர்ச்சிக்கும் தேவைக்கும் வேண்டியவற்றை மேற்கொள்ளும்**

1. ஆரியர் வருகைக்கு முன் இருந்த தமிழ்மொழி, பண்பாடு, நாகரிகம் ஆகியவை பற்றியும், ஐரோப்பியர் வருகையால் ஏற்பட்ட கலப்பைப் பற்றியும், கற்பிப்பதும் ஆய்வு செய்வதும்.
2. தமிழ் இலக்கியம், கலை, இசை, நாகரிகம், வரலாறு, மெய்ம்மம் (தத்துவம்) பண்பாடு இவற்றைக் குறித்துக் கலந்தாய்வு செய்தல்.
3. தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு, கலை, இசை, பண்பாடு, மெய்ம்மம் இவற்றைக் கற்றலும் கற்பித்தலும்.
4. மெய்ம்மம், கலை, பண்பாடு (கலாசாரம்) இலக்கியம் இவற்றில் பங்கு ஏற்பது குறித்துக் கலந்தாய்வுகள்.
5. உலகின் பல பகுதிகளில் பரவி வாழும் தமிழர்களோடு தொடர்புறவுகளை ஏற்படுத்தும் வழிவகைகளைக் காணல்.
6. தமிழர்களிடம் உள்ள வறுமையை அகற்றப் பாடுபடுதல்.
7. புதிய படைப்புக் கருத்துக்கள் - புதிய சிந்தனைகள்.
8. தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு, கலை, இசை, மெய்ம்மம், இவற்றைப் பற்றிய கூட்டங்களையும், மாநாடு களையும் உள்நாட்டிலும், உலக முழுவதிலும் நடத்துதல்.
9. தமிழர்களின் கு(ச)மூகப் பொது நலனும், பொருளியல் வளமும் பெருகும் நடவடிக்கைகள்.
10. பல இனக் குமூகங்களைச் சேர்ந்த மக்களோடு செறிவாகவும், வளமாகவும் வளரும் நட்புறவு திருக்குறள் வழி பேணுதல்.
11. அரசியல் தொடர்பற்ற அயல்நாடுகளில் உள்ள பண்பாட்டு இயக்கங்களோடு இணைந்தும் கூட்டாகவும் செயலாற்று தல்.

**கீழ்க்காண்பவற்றைக் களையப் பாடுபடும் : விலக்கித் தள்ளும்**

1. எழுத்தறிவின்மை.
2. காலத்திற்குப் பொருந்தாத முட்டுக் கட்டையாகவுள்ள பழக்க வழக்கங்கள்.
3. வன்னெறி, அடக்குமுறை, ஒடுக்கு முறை, கொடுங்கோல் ஆட்சித் தன்மை.

4. இன(வாத) வுரிமைக் கோட்பாடு இனவொழிப்பு.

5. குமுகத்திற்கு ஏற்படுத்தும் அறக்கேடும் (அநீதியும்) அரக்கத்தன்மையும்.

6. மூட நம்பிக்கை, வளர்ச்சிக்குரிய கருத்து களையும், திட்டங்களையும் கண்டு அஞ்சும் பேதைமை.

7. தமிழ்ப் பண்பாட்டு மரபில் பெண் களைத் தரக்குறைவாய்க் கொள்ளலும், அடிமையாக்கலும், கொத்தடிமை யாக்கலும்.

8. திருமணங்களில் மணக்கொடை (வரதட்சணை)க் கொடுமை.

9. குறிப்பாக வேலை முறைப் பணி களிலும், திருமணங்களிலும், பிற செயல்களிலும் தலையிடும் சாதியம்.

10. தொலைக்காட்சி, வானொலி, திரைப் படம், கதுக்காண் (வீடியோ) இவற்றின் வெறுக்கத்தக்க நிகழ்ச்சிகளும், தீமை களும்.

11. ஐரோப்பியர் புகு(நுழை)வால் ஏற்பட்ட வெறுப்பிற்குரிய விளைவுகளும், சிக்கல் களும் அவர்கள் குடிபுகுந்த காலத்தி லிருந்து தமிழ்ப் பண்பாட்டை இழிவு படுத்தித் தமிழர்களைத் தங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்ட தடைமுடை கள்.



காலஞ்சென்ற

**திரு. அந்தோணிப் பிள்ளை சௌந்தரராஜன்,**

உ.த.ப. இயக்க கனடா கிளையின் ஆரம்ப உறுப்பினரும், இயக்கத்தின் வளர்ச்சிக்கும், குறிப்பாக 6-வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டின் வெற்றிக்கும் அயராது உழைத்தவர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

# உ.த.ப.இ. உலகளாவிய கிளைகள்

**இலங்கை செயற்குழு :** 1999 முடிய தலைவர் ஆ. சண்முகலிங்கம்; செயலர் : இ. தவகோபால்; பொருளர் : செ. பரமநாதன், பொன் பூலோகசிங்கம், டாக்டர் இ. சற்குருநாதன், செயந்திகுமார்.

**மலேசியா :** மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் . தலைவர் : இர.ந. வீரப்பனார்; துணைத் தலைவர்: ப.கு. சண்முகம்; உதவித் தலைவர்கள் : கோ. நடேசன், நா. மணியம்; செயலர் : பி.எஸ். வெங்கடேசன்; துணைச் செயலர் : கன்னல் மணியம்; பொருளர் : இராம. மாணிக்கம். ஆட்சிக் குழுவினர் : மு. அன்பழகன், வீ. அருணன், அ. பழனியாண்டி, மா. அன்னியப்பன், சி. பத்மநாதன், மணியம் முனியாண்டி, G.C. முனியாண்டி, சீ. அருணாசலம், மு. சரவணன், கோ. குமரன், பி. இராஜேந்திரன், பி. இளங்கோ, ந. குப்புசாமி; காப்பாளர்கள் : மு. மணிவெள்ளையன், வே. இராசு; கணக்காய்வாளர்கள் : ந. மகேசுவரி, வீ. பொன்னி கணேசன்.

**மியான்மா (பர்மா) :** காப்பாளர் : பெரியார் டி.எஸ். மணி, யாங்கூன்; தலைவர் : ரெ. மாரிமுத்து; புரவலர் : இரா.அ. தங்கராசன்; ஆலோசகர் : திரு. ஜோசப்; துணைத் தலைவர் : இரா. கிருட்ணன், எஸ். கிருட்ணன் அம்பி, பா. சொக்கலிங்கம் இருவரும் இணைச் செயலர்கள்; பொருளர் : வ.க. வல்லமைச்சன்; இணைப் பொருளர் : த. ரகுநாதன்; கணக்காளர் : ச. சிவஞானம்; பேராளர்கள் : க. தங்கவேல், ரு. அப்பாவு, மு. இளங்கோவன், கி. அழகு, எஸ்.கே. சந்திரசேகரர், ரா. சுப்பிரமணியம், எஸ்.எஸ். பாலா; தமிழ்நாடு பேராளர் : ரவிபாண்டியன்.

இம்மூன்று நாடுகளிலும் 1974-ல் இவ்வியக்கம் வேரூன்றியது குறிப்பிடத்தக்கது.



# மண்ணெங்கும் கேட்கும்படி மணிமுரசம் அறைவோம்!

அறிவைக் கொண்டே அணுவை மாய்க்கும்
அரியநூல்கள் அழகுத்தமிழில் நறியவும் பலவாம்;
தருமத்து விதிகள் தழைத்து விளங்கும்
தர்க்க நூல்கள் தகைமைச் செயல்கள்
உளத்தினை உயர்த்த உறுபெறும் சாத்திரங்கள்
அள்ளக் குறையா அட்சய மாகவே
நிலைத்துள தமிழிலெனும் நித்திய செய்தியை
நானிலத் துக்கெல்லாம் நயம்பட உரைப்போம்!

வட்டெழுத்து கிரந்தெழுத் தென்றே பண்டுதொட்டு
வளைந்து கிடந்த தமிழன்னை இன்று
தட்டெழுத்தில் பவனிவந்து தலைநிமிர்ந்து நிற்கின்ற
தனிபாங்கு கணிப்பான்கள் தரணி எங்கும்
பட்டொளி வீசியே பறப்பது எண்ணி
புத்தொளி எழுச்சி புதுமையை எழுப்பி
எட்டுத்திக்கும் இருக்கும் எண்ணற்ற மொழிகளுக்கு
வெட்கத்தை ஊட்டி வியப்படையச் செய்கிறது!

புத்தம் புதுக்கலைகள் புனிதத்தின் கோட்பாடு
புவியெங்கும் இல்லாத புராதன சிந்தனைகள்
கிட்டுகின்ற கீர்த்தனைகள் கிளர்ந்திடும் தோள்வீரம்
கண்முட்டும் கைவினைகள் கரையாத வரலாறு
தத்துவக் கொள்கைகள் தளராத மெய்ஞ்ஞானம்
தித்திக்கும் தமிழ்ப் பதங்கள் திராவிடப் பண்பாடு
அத்தனையும் இன்ப அழகுத்தமிழில் உண்டென்று
அகிலமெலாம் கேட்கும்படி ஆர்ப்பரிப்போம் செந்தமிழ்

ஆட்சிமொழி அடுக்கடுக்காய் அகரமுதலித் திட்டங்கள்
அஞ்சாது நீதிகூற அழகுதமிழ் வாக்குமூலம்
கூச்சமின்றி கற்றிட கொள்கையுறு தமிழ்வழி;
மெச்சும் கலைசேர் மேன்மை செய்தியேடு
எச்சமயமும் போற்றுகின்ற ஈடற்ற இலக்கியங்கள்
எங்கெங்கு நோக்கினும் இயலிசைக் கணினிகள்
மெச்சும் தமிழில் மிளிரும் மகத்துவத்தை
மண்ணெங்கும் கேட்கும்படி மாங்குயிலாய் கூவிடுமே

இவண்,
பேராசிரியர் எல்.கே. அக்னிபுத்ரன்,
பழநி - 624 602, தமிழ்நாடு, இந்தியா.

# வாழ்த்துரை


பேராசிரியர் முனைவர் அ. சண்முகதாஸ்,
முதுநிலைத் தமிழ்ப் பேராசிரியர் பீடாதிபதி /
கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் உலக நாடுகளின் பல்வேறு தலைநகர்களிலே தன்னுடைய மாநாடுகளை நடத்தி வருகின்றது. தமிழ் மக்கள் இன்று உலகமெல்லாம் வாழுகிறார்கள். அவர்களெல்லோரையும் தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையிலே தொடர்புறுத்துதற்கு இவ்வியக்கத்தின் நடவடிக்கைகள் உதவக் கூடியன. இடையறாத நீண்டகாலத் தமிழ்ப் பாட்டினை எவரும் அறிந்து கொள்ளக் கூடியதாக எம்மிடம் நீண்டதொரு இலக்கியப் பாரம்பரியம் இருக்கின்றது. இத்தகு சிறப்புடைய தமிழ் மக்கள் தம்முடைய பண்பாடு பற்றி உலகளாவிய அடிப்படையிலே பேசுவது பொருத்தமானதேயாகும்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 7-வது மாநாடு சென்னையிலே நடைபெறவுள்ளது. மாநாடு சிறப்புற நடக்கவும், அம்மாநாட்டின் விளைவுகள் தமிழ் மக்களுக்கு உலகளாவிய வகையிலே நல்ல பயன்களை ஏற்படுத்த வேண்டுமென வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

# வாழ்த்துரை

பாவலர் கதிர். முத்தையன்,
அமைப்பாளர், கடலூர்க் கிளை, தமிழகம்.



உலகத் தமிழர்களின் உறவுப் பாலமாகத் தொடங்கிய உ.த.ப. இயக்கம் கடந்த 25 ஆண்டு கால வளர்ச்சியில் உலகின் 42 நாடுகளில் வேர் விட்டுப் பரவியுள்ளது. தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழ்ப் பண்பாட்டு மலர்ச்சிக்கும் வகை செய்துள்ளது. உலக மக்களின் பாராட்டைப் பெறும் வகையில் தமிழ் மொழியின் சிறப்பையும் தமிழ்ப் பண்பாட்டின் உயர்வையும் உணர்த்தியுள்ளது.

உலகத் தமிழ் மக்களிடையே தமிழ்க் கல்வியைப் பயிற்றுவிக்க சென்னை மாணவர் மன்றத்துடன் தொடர்புறவுக் கொண்டு தொண்டாற்றியுள்ளது. உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் உற்ற துணைவனாகவும் பண்பாட்டின் காப்பரணாகவும் தமிழ்மொழியின் பாதுகாவலனாகவும் திகழ்கிறது.

இருபத்தைந்து ஆண்டுகாலத் தொண்டினை நிறைவுசெய்து வெள்ளி விழா காணும் உ.த.ப. இயக்கம் தொடர்ந்து தொண்டாற்றி பொன்விழாவும் - நூற்றாண்டு விழாவும் காணுமளவும் துணைநிற்போம். வெள்ளி விழா மாநாடு மற்றும் 7-வது உலகளாவிய இயக்க மாநாடு சிறக்க இனிய நல்வாழ்த்துக்கள்.

## 'மனித மூலதனமே' இன்று உலக ஏற்றுமதி இறக்குமதிகளில் மலிவுப் பொருளாதாரம்

**(தொகுப்பு : சான்று யுனெஸ்க்கோ கூரியர்)**

''தாங்கள் பிறந்த நாட்டுக்கு வெளியே ஏறத்தாழ 12 கோடி மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் இருபது விழுக்காடு ஏதிலிகள். பன்னாட்டுக் குடிபெயர்வோரில் ஐவரில் மூவர் வடக்கு நாடுகளில் குடியேறியுள்ளனர். ஐம்பது ஆண்டுகளில், கடைசி இருபதாண்டில் மிகுதியாகியது.

''1947-ல் இந்தியாவில் 8659775 பேரும், பாகித்தானில் 7272000 பேரும் சென்றுள்ளனர். 1980-1995-ல் இலங்கையிலிருந்து சென்றவர்கள் ஒன்பது லட்சம். உலகப் பொருளாதாரத்தில் இன்று குடிபெயர்ச்சிக் கொள்கை பெரும் சிக்கலான தலைவலி என ஐ.நா. கூறுகிறது.

''ஆசியாவிலிருந்து வடஅமெரிக்காவிலும், கனடாவிலும் குடியேறியவர் 40 லட்சம்பேர்; ஐரோப்பாவிலிருந்து இங்கு வந்தோர் 12 லட்சம்; தென்னமெரிக்கா, மெக்சிகோ, மத்திய அமெரிக்காவிலிருந்து வடஅமெரிக்கா சென்றோர் 35 லட்சம்; வளைகுடா நாடுகளுக்கு வந்தவர் 70 லட்சம்; ஆசிய நாடுகளிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றோர் ஒரு கோடி மக்கள். கிழக்கு மத்திய தரைக்கடல் நாடுகளில் 20 லட்சமும், கிழக்கைரோப்பாவில் 15 லட்சமும் வந்தனர். ஆத்திரேலியாவுக்கு ஐரோப்பாவிலிருந்து பத்து லட்சமும், ஆசியாவிலிருந்து பத்து லட்சம் பேரும் வந்தனர். இவை 56 லட்சமாகி விட்டது. 150 நாட்டு மக்கள் என கணக்கு.

கள்ளக்குடியேறிகள் பலியாடுகளாக்கப் படுகின்றனர். தென்கிழக்காசியப் பொருளியல் வீழ்ச்சியில் 1997-ல் தாய்லாந்து இரண்டரை லட்சம் பேரை வெளியேற்றியது. தென்கொரியாவும், மலேசியாவும் தலா ஐம்பதினாயிரம் பேரை வெளியேற்றியது. தென்னாப்பிரிக்காவும் நான்கு லட்சம் பேரை அவ்வாறு செய்தது. வளைகுடா நாடுகள் மோசடி ஒப்பந்தத்தால் கொடூரமாக ஐந்து லட்சம் குடியேறிகளை வெளியேற்றி விட்டது. சப்பானில் ஐந்து லட்சம் பேர் கட்டுமானத் தொழிலாளிகள்.

- (கூரியர் - 1/99)

# இதய ஒலி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் வெள்ளி விழாவும் இயக்கத்தின் ஏழாவது தேசிய மாநாடும் அதனையொட்டி சிறப்பு மலர் வெளியீடும் தமிழகத் தலைநகர் சென்னையில் நிகழ இருப்பதறிந்து மெத்தவும் மகிழ்கிறேன்.

இயக்கத்தின் 25 ஆண்டுகள், முறையாக 7-வது மாநாடு!

வியப்புடன் எண்ணிப் பார்க்கிறேன். எத்தனை பட்டறிவுகள். தடைகளைக் கடந்த தீரம். இதயம் விம்மும் சிந்தனைகள். அவை ஒவ்வொன்றும் தனித்தனி வரலாறுகள். உலகத் தமிழினத்தின் இனிய உறவுகள் பெருமிதம் கொள்ளத்தக்கன. இஃது கிடைத்தற்கரிய பேறு ஆகும். எனினும், இத்தனைக்கும் என்னால் கூறமுடிந்ததெல்லாம் இந்த இயக்கத்தின் தேசியத் தலைவர் நண்பர் இர.ந. வீரப்பன் அவர்களின் இடைவிடா முயற்சி, சிந்தனை, செயல்திறன், அதற்கும் மேலே தியாக உணர்வும்தான் எனில் சிறிதும் மிகையல்ல. இந்த வெள்ளிவிழா நாளில் தமிழ்கூறு நல்லுலகு அவரை ஏற்றிப் போற்ற வேண்டும். ஆம்.

ஓர் அரசு செயல்படுத்தியிருக்க வேண்டிய அத்தனைப் பணிகளையும், ஒரு தனி மனிதரின் செம்மையான முயற்சியால் இன்று உலகத் தமிழர்களிடையே இனிய உறவு மலர்ந்துள்ளது. கரங்கள் பிணைந்துள்ளன. புள்ளி விவரங்கள் நம்முன் ஆய்வுநோக்கில் விரிந்துள்ளன. இதனை தனிப்பெரும் சாதனை என்றே வரலாறு குறிப்பிட வேண்டும். அந்த சாதனையாளர்தான் நண்பர் இர.ந. வீரப்பன் அவர்கள். இவரது 'உலகத் தமிழர்' மூன்று தொகுப்புகளும் அதனை உறுதிப்படுத்தும். இன்றைக்கு மட்டுமல்ல, வருங்காலத்திற்கும் அவைதான் 'உலகத் தமிழர்களின் வரலாற்றுக் களஞ்சியம்'

உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடும், வெள்ளி விழாவும் சீரும் சிறப்புமாக நடைபெறவும், அறிஞர் பெருமக்களின் அரிய கருத்துரைகள் தமிழ்கூறு நல்லுலகிற்கு எழுச்சியூட்ட வேண்டும் எனவும் விரும்பி வாழ்த்துகிறேன்.

நன்முயற்சிகள் அனைத்தும் வெல்க!

*அன்பன்*
**சோலை-இருசன்**

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடே உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும்

கே. ரீ. அருணாசலிங்கம்

உலகில் வாழுகின்ற தமிழர்களின் செந்தமிழும் நறுந்தமிழும் வீறுகொண்டு எழுந்து உலகளாவிய ரீதியில் ஏற்றம் பெறும் நோக்குடன் வெள்ளி விழா ஆண்டில் இயக்கத்தின் 7-வது உலக மாநாடும் வெள்ளி விழாவும் தாய்த் தமிழகத்தின் தலைநகர் சென்னையில் இடம் பெறவுள்ளதையொட்டி பூரிப்படைகின்றேன்.

தாய்த் தமிழகமும் சேய்த் தமிழ் ஈழமும் இழந்த மண்ணை மீட்க வேண்டும். இவை தமிழர் நாடுகளாக ஆக்கப்பட வேண்டும். இந்த இறைமையான கொள்கையே இயக்கத்தின் இல்ட்சியங்களாகும்.

உலகில் வாழும் 30 நாடுகளில் இயக்கத்தின் கிளைகள் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் பிரதிநிதித்துவம். அதிலும் பலர் தமிழ் பேசத் தெரியாத தமிழ் உறுப்பினர்கள்.

இதுவரை தமிழகம், மொறிசியசு, சேலம், மலேசியா, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் நடந்தேறின உலக மாநாடுகள். இப்படியான இயக்கத்திற்கு பலரின் ஏகோபித்த வேண்டுகோளின்படியே தலைமைதாங்கி நடாத்தி வளர்ச்சி கண்ட தலைவர். அதுவும் உலகில் தமிழர்கள் வசிக்கும் நாடுகளிலும் தீவுகளிலும் 43 நாடுகளுக்கு மேல் பிரயாணம் செய்து தனது தலைமைக் காலத்தில் சென்ற இடமெல்லாம் தமிழுணர்வைத் தட்டி எழுப்பி வரும் தலைமைப்பணி. இத்தகைய சிறப்புக்கள் மிக்கது உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் ஆகும். அப்படிப்பட்ட தலைவர் இலங்கையில் பிறந்து மலேசியாவில் வாழ்ந்துவரும், பேரா. டாக்ரர் இர.ந.வீரப்பனார் ஆவார்.

1974-ஆம் ஆண்டு தமிழ் ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த 4-வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின்போது தொடங்கப்பெற்ற தமிழர்களுக்கான உலகம் தழுவிய வரலாற்று முதல் பேரியக்கம் இதுவாகும்.

உலகத் தமிழராய்ச்சிக் கழகத்தினால் எதுவித பிரயோசனமும் இல்லை என உணர்ந்த மாநாட்டுக்கு வருகைதந்த உலகத் தமிழறிஞர்கள் ஒன்று கூடி சுறவத் திங்கள் 8-1-74 இவ்வியக்கம் தொடங்கப்பெற்றது. இதன் ஆரம்பத் தலைவராக அமரர் பேரா. சாலை இளந்திரையன் அவர்களும் பேராளராக குழும்ப சிட்டி இரா. கனகரெத்தினம் அவர்களும் காப்பாளராக அமரர். வணபிநா தனிநாயகம் அடிகளாரும், அமரர் யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேரா. சு. வித்தியானந்தன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அதிர்ஷ்டவசமாக 1976-ஆம் ஆண்டு தலைமைப் பொறுப்பேற்ற மலேசியா வைச் சேர்ந்த பேரா. டாக்டர் வீரப்பனாரின் செயல் வேகத்தினால், அந்த நாட்டில் தலைமையகத்தையும், ஐ.நா.வின் பார்வை யாளர் அந்தஸ்தையும் பெறுகின்ற தமிழர்களுக்கு பெருமை அளிக்கும் இயக்கமாக இன்று விளங்குகின்றது என்றால் மிகையாகாது.

★ உலகில் வாழும் தமிழர்கள் தம்முடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

★ வீழ்ந்துவிட்ட தமிழினம் மீண்டும் வீறுகொண்டு எழச்செய்ய பல நாடுகளில் வாழும் தமிழர்களை ஒன்றுபடுத்தி அவர் தம் மனதைப் பண்படுத்தவும்

★ செந்தமிழ்ப் புலவர் திருவள்ளுவரின் வாய்மொழியாக விளங்கும் தமிழர் பண்பாட்டினை உலகில் நிலைநிறுத்தவும்

தமிழ் நிலங்களுக்கு வெளியே வாழும் தமிழர்களின் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு என்பன பாதிக்கப்படாமல் அவர்கள் வாழுகின்ற நாடுகளில் உரிய பெருமையோடும் பொறுப்புணர்ச்சியோடும், செயல்படத் தேவையான சிந்தனைகளை செயல்படுத்தவும், சிறுபான்மையினர் என்பதால் அந்தந்த நாட்டில் தமிழர்களுக்கு ஏதேனும் தடைமுடைகள்

ஏற்படுமானால் அவற்றை சிறுபான்மையினர் சிக்கல் அடிப்படையில் உலக அரங்கில் ஒலிக்க செய்வதிலும் கொள்கையாக கொண்டு செயல்பட்டு வருகின்றது.

அந்த வகையில் 1977-ஆம் ஆண்டு சென்னையில் நடந்த இயக்கத்தின் முதலாவது உலக மாநாட்டில் ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு பொதுமேடை அமைத்து தமிழ் ஈழத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது. இரண்டாவது உலக மாநாடு மொறிசியஸ்சில் நடந்தபொழுது மொறிசியஸ் தலைமை அமைச்சர் கலந்து கொண்டது மட்டுமல்ல, சிறப்பு அஞ்சல் தலை தமிழில் வெளியிடப் பட்டது மட்டுமல்ல, பிரெஞ்சு தமிழர் குடியேறிய 250 ஆண்டு நினைவு தூண் நிறுவப்பட்டது.

மூன்றாம் மாநாடு சேலத்தில் நடைபெற்ற பொழுது கல்வி அமைச்சர் பேரா. அன்பழகனார் கலந்து சிறப்பித்தார்.

நான்காம் மாநாடு மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் டத்தின் இந்திராணி அவர்களின் தலைமையில் நடந்தபொழுது உலக முதல் தாய்மொழி தமிழே என பிரகடனப் படுத்தியது. 1992-ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய தலைநகர் சிட்னியில் நடந்தபொழுது அந்நாட்டு தலைமை அமைச்சர் தொடக்கி வைக்க தேமதுரத் தமிழும் தென்துருவத் தமிழரும் என்ற கருப்பொருள் மெய்ப்பித்தது. 1996-ஆம் ஆண்டில் ஆறாவது மாநாடு கனடா, ரொரண்டோவில் நடைபெற்ற பொழுது கனடாவில் வாழும் பல இலட்சம் தமிழர்களை தாய்த்தமிழ் உணர்வுக்குள் கொண்டுவரும் உலக மாநாடாக அமைந்தது மட்டுமல்ல, பல நாடுகளில் வாழும் தமிழர்கள் தங்கள் தமிழர்கள் என பெருமை அடையும் வேளையிலும் தமிழ் மொழியை மறந்து தமிழ்ப் பண்பாட்டை இழந்து வாழ்கின்றனர். சில நாடுகளில் தமிழர்கள் என்ற அடையாளத்தை இழக்கும் நிலையில் உள்ளனர்.

பிரெஞ்சு குடியேற்ற நாடுகளிலும் ஆங்கிலேயர் ஆண்ட நாடுகளிலும் எந்தமிழர் பண்பாட்டை இழந்து தாய்மொழியை துறந்து



வாழும் போக்கை மாற்றவே, புதுவையில் மார்கழி 1994-இல் 24, 25-இல் பிரெஞ்சுத் தமிழர் மாநாட்டை நடத்தினோம்.

தமிழீழத்தில் இன்று ஏற்பட்டுள்ள பாரிய இழப்புக்கள், உடமைகளையும் உறவுகளையும் இழந்த நிலையில் உள்ளனர். இவ்வகையில் உ.த.ப. இயக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியம் காலத்தின் தேவை கருதி, தமிழ் ஈழத்தில் ஏற்பட்ட விடுதலைப் போராட்டம் உலக அரங்கில் தமிழர் என்றோர் இனம் இருப்பதையும் அந்த இனம் உயர்ந்த நாகரிக மேம்பாடுடையது எனவும், உலக அரங்கிற்கு எடுத்துக் கூறும் வகையில் ஐரோப்பாவில் செர்மனியம் 1996-ஆம் ஆண்டு 13, 14 ஆடி-இல் தமிழ் ஈழ விடுதலைப் போரும் வெளிநாடு வாழ் தமிழரும் என்ற கருப்பொருள் உள்ள மாநாட்டை நடாத்தி, 20-ஆம் நூற்றாண்டிலேயே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நிறைவேற்றியது. இது உ.த.ப. இயக்கத்தின் செயல்பாடுகளில் ஒன்றாகும்.

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமும் வரலாற்றுச் சாதனைகளும்

இக்காலத்தில் உலகம் முழுவதும் வாழும் தமிழின மக்கள் தொகை பத்துக் கோடிக்கு மேல் உள்ளது. பூகோள ரீதியில் மற்ற இனத்தவர்களை விடத் தமிழர்களே உலகம் அடங்கிலும் பரந்து வாழ்கின்றனர். இவர்களின் மொழி, பண்பாடு, கலாச்சாரம், நட்புறவு போன்றவற்றின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பே நமது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமாகும். இதன் தோற்றமும், ஆற்றி வரும் பணிகளும், இன்றைய வளர்ச்சி நிலையும் வரலாற்றுச் சாதனைகள் பலவற்றைச் செய்ய உதவி உள்ளது. தமிழ்ச் சமுதாயத்துக்குத் தொடர்ச்சியான முன்னேற்றப் பயன்களை இது வழங்கி வருவதற்கும் ஏது நிலை உருவானதைத் தெளிவாக ஆய்ந்து உணரும்போது புரிந்து கொள்ள முடியும். இந்த அமைப்போடு தொடர்புள்ள முக்கியமான விடயங்கள் சிலவற்றை இங்கே தருவது பொருத்தமானதாகும்.

## உலகில் தமிழர் குடிப்பரம்பல்

உலகமெல்லாம் 55 நாடுகளில் பல லட்சக்கணக்கில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். உலக முதல் மானுடன் தோன்றிய காலம் முதலாக இன்று வரை தமிழர் வாழ்ந்திலங்கும் தென்னாடு எனப் பெயர் பெற்ற தமிழகத்தில் இன்றைய காலத்தில் ஏழு கோடி தமிழ் பேசும் மக்கள் இருக்கின்றார்கள்.

## தமிழர்களிடையே நிலவும் மொழி, பண்பாடு, வாழ்வியல் விடயங்கள்

பொதுவாகப் பல நாடுகளில் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்ற போதிலும் தமிழ்மொழி, பண்பாடு, கலாச்சார விடயங்களில் ஓரளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆயினும் பண்பாடு, பழக்க வழக்கங்கள் போன்றவற்றில் ஒற்றுமைகளும் அமைந்து விளங்குவதைக் காணலாம்.

ஈழத்தில் உள்ள தமிழர்கள் மத்தியில் தமிழ்மொழிப் பேச்சு வழக்கும் பண்பாடு, கலாச்சாரம் யாவும் நல்ல நிலையில் நிலவி வருகின்றன. வேற்றுமொழிகளான ஆங்கிலம், சிங்களம் ஆகியவற்றின் கலப்பில்லாத தூய்மையான பேச்சுவழக்கு மரபினை ஈழத் தமிழர்கள் பாரம்பரியமாகக் கையாண்டு வருகின்றனர். சங்கத் தமிழ் என்பது இன்றும் ஈழத்தில் விளங்குவதைக் காணக் கூடியதாக உள்ளது. தமிழகத்தார் தமிழ்ப் பேச்சு இப்போது ஆங்கில மாயையில் அகப்பட்டுத் திக்குமுக்காடிக் கொண்டிருக்கின்றது. அங்கே எழுதும் சுத்தமான எழுத்து வழக்கும் மேடைப் பேச்சும் ஈழத்துச் சாதாரணமான பேச்சு நடையினை வெளிக்காட்டி நிற்கின்றன. தமிழர் வாழ்ந்து வரும் மற்றைய நாடுகளில் மலேசியா, தென்னாப்பிரிக்கா, சிங்கப்பூர் தவிர்த்த மற்றைய தேசங்களில் தமிழ் பேசும் நிலை அருகியே உள்ளன. ஆயினும் புலம்பெயர்ந்த அகதிநிலையில் வாழ்வை ஓட்டிவரும் ஈழத்துத் தமிழ் மக்கள் தமிழையும், தமிழ்ப்பண்பாட்டையும், பாரியம்பங்களையும் இனிதே வளர்த்து வருகின்றார்கள்.

## அமெரிக்கக் கரிபியன் நாடுகளில் தமிழர் நிலை

200 ஆண்டுகளுக்கு முன்னர் வட அமெரிக்கக் கரிபியன் தீவுகளுக்குக் காலணித்துவவாதிகளால் கூட்டிச் செல்லப்பட்ட குடியேற்றப்பட்ட தமிழர்கள்

இப்போது தமிழ்மொழியை இழந்துவிட்டார்கள். அவர்களின் பழக்க வழக்கங்கள், கைக்கொண்டு வரும் சமயக்கிரியைகள், கோயிலில் வணக்கங்கள், கொண்டாட்டங்கள் எல்லாம் அவர்களைத் தமிழர்கள் என்று இனங்காட்டி நிற்பதைக் காணலாம். இன்றைய நாளில் அவர்களிடையே தாமும் தமிழினத்தார் என்ற இனப்பண்பாட்டு உணர்வுகள் வளர்ந்த வருகின்றன. மட்ணிக், டோபாகோ, மெக்சிகோ தேசங்களில் தமிழ்க்கல்வி போதனைகள் சுமாராக ஆரம்பித்து நடக்கின்றன. அந்த நாடுகளிலுள்ள உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தொடர்பாளர்கள் இதனைச் செய்து வருகின்றனர். புதுச்சேரிக் கிளையும் தலைமையகக் கிளையும் இதற்கு ஊக்கமளித்து வருகின்றன. இப்படியாக அழிவுநிலைக்கு ஆளாக்கப்பட்ட தமிழ்ச் சமுதாயத்தை ஒன்றிணைக்கும் முக்கியமான குறிக்கோளை நமது பேரமைப்பு கொண்டுள்ளது.

## வரலாற்றுச் சாதனைகள்

தமிழ்ச் சமுதாயத்தின் உலகளாவிய பேரியக்கமாக கடந்து போன 25 ஆண்டுகளாக வளர்ந்து பயன் விளைத்து, புகழ்சுமந்து வரும் இந்த அமைப்பின் சாதனைச் செயற்பாடுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இவை தமிழின வரலாற்றில் இடம் பெற்று வருபவையாகும்.

## சாதனைகள்

1. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் 1974-ல் யாழ்ப்பாணத்தில் உருவாகிய பின்னர் 1977-ஆம் ஆண்டில் வரலாற்றுப் புகழ்மிக்க இதன் முதலாவது உலக மகாநாடு சென்னை மாநகரில் நடாத்தப்பட்டது. இந்த மகாநாட்டில் பல நாடுகளைச் சேர்ந்த தமிழ்ப் பிரமுகர்கள் ஒன்று கூடி அறிமுகமாயினர். அவர்கள் கலந்துரையாடி புரிந்துணர்வை வளர்க்கும் நிலைமை தோன்றியது.

2 சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் (17-ஆம்) உலகில் பல இடங்களுக்குச் சென்று பரவி, காலவோட்டத்தில் தொடர்பேதுமின்றி வாழ்ந்து வரும் தமிழர்களிடையே தொடர்புறவும், நட்புறவும் துவங்குவதற்கு இந்த அமைப்பு காரணமாக அமைந்தது. தமிழர் வாழும் நாடுகளுக்கிடையில் அஞ்சல் வழித் தொடர்பும், சில போது நேரடிச் சந்திப்பும் தலைவர் மற்றும் உ.த.ப. இன் பிரமுகர்கள் சிலரின் பன்னாட்டுப் பயணங்கள் ஆகியனவையும், நூல்கள் சஞ்சிகைகள் பரிமாற்றங்கள் வாயிலாகவும் தமிழர் நட்புறவு வளரக் கூடிய சூழலும் ஏது நிலையும் உண்டாயின.

3. உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இரண்டாவது உலக மகாநாடு மொறிசியஸ் நாட்டில் அரசின் ஒத்துழைப்புடன் அந்த நாட்டின் முதலாவது தமிழ்ப் பெருவிழாவாகவும், முதலாவது தமிழ் மகாநாடாகவும் நடந்து பெருமை கண்டது. மகாநாட்டில் அந்தத் தேசத்தின் தேசாதிபதியும், பிரதம மந்திரி மற்றும் அமைச்சர்களும் கலந்து சிறப்பித்தார்கள். இது வரலாற்றுச் செய்தியாகும். இந்த மகாநாட்டைக் கௌரவித்த மொறிசியஸ் அரசு 20 சத முத்திரையுடன் வானஞ்சல் கடிதத்தாள் ஒன்றை வெளியிட்டது. அதில் 'தமிழ்ப் பண்பாட்டு மகாநாடு 1980' என்ற வாசகம் பொறிக்கப்பட்டது.

4. மொறிசியசில் நடந்த மகாநாடு அயல்நாடான றியூணியனில் வாழ்ந்து வரும் 0.3 லட்சம் தமிழ் மக்களை விழிப்படையச் செய்து விட்டது.

5. தமிழ்ச் சமுதாயத்துக்குச் சர்வதேச ரீதியில் பணி செய்யக் கூடிய நல்ல சில தமிழ்ப் பெருமக்களை இந்த இயக்கம் இனங்கண்டு பயன்படுத்தும் நிலைமை உருவானது.

6. தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, கலாசாரம் மற்றும் தாம் வாழும் நாடுகளில் மறுக்கப்பட்ட, பறிக்கப்பட்ட எல்லா உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுகள் எழுச்சிகள், உ.த.ப.-இன் நூல்கள், ஏடுகள், சஞ்சிகைகள் மூலமும், நவீன தகவல் தொடர்பு ஊடகங்கள் வாயிலாகவும் உலகத்

தமிழர்களிடையே பரவி வளர்ந்து வர பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றன.

7. எந்த நாட்டின் அரசியலில் கலக்காத, சார்பில்லாத முறையில் இந்த அமைப்பின் செயற்பாடுகள் நடந்து வருகின்றன. சாதி, மதம், அரசியல் வேறுபாடுகள் இதன் பணிகளில் குறுக்கிடாமல் விளங்கி வருகின்றமை சிறப்பம்சமாகும்.

8. தமிழகத்தில் இந்த அமைப்பு தூண்டுதலும் ஊக்கமுமளித்து வருவதால் தாய்மொழிப் பற்று வேரூன்றி வளர ஏதோ ஒருவகையில் உ.த.ப.-இன் செயல்கள் அமைந்து வருகின்றன. அரசியல், சமூக மட்டத்தில் தமிழ்ப் பயன்பாடு தமிழ்நாட்டில் உத்வேகம் பெறுவதற்கு இந்த அமைப்புத் தூண்டுதலாகச் செயற்படுகின்றது.

9. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நடாத்திய ஆறு மகாநாடுகளிலும் இயற்றப்பட்டு வெளியிடப்பட்ட தீர்மான வாசகங்கள் தமிழ்ச் சமுதாயத்தின் இன்றியமையாத உரிமைகள், அருமைகள், தேவைகள் அனைவற்றையும் காட்டி நின்றதுடன் விழிப்புணர்வு எழுச்சியையும் தோற்றுவித்தன.

10. தமிழ்நாட்டில் தமிழ்ச் சிறார்களுக்கு முன்பள்ளி முதலாகத் தமிழில் போதனை செய்ய வேண்டுமென்ற அவசியத்தை உ.த.ப. இயக்கம் காலந்தோறும் தூண்டி வருகின்றது. இதனால் தமிழ்ப் போதனையின் அவசியம் தமிழகத்தில் முனைப்புப் பெற்று வருகின்றது.

11. ஈழத்தில் தமிழ் மக்கள் உரிமை இழந்து வாழ்ந்துவரும் பிரச்சினைகள் தமிழக மக்கள் அறியாதிருந்த காலக்கட்டத்தில் 1977-இல் தமிழக மண்ணில் அந்த விடயங்கள் அமைப்பின் முதலாவது மகாநாட்டின் மூலம் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

12. சர்வதேச ரீதியில் பன்னாட்டு அறிஞர்கள், அறிவாளிகள் மகாநாட்டு மலர்களிலும், தலைமையக ஏடுகளிலும் கட்டுரை மற்றும் விடயங்கள் வரைந்து வருகின்ற நிலைமை தோன்றியுள்ளது.

13. தமிழ் இலக்கியத்துறை, எழுத்துத் துறை வளர்ச்சி பெற உதவியாக இருந்து ஊக்கமளித்து வருகின்றது. தமிழ் இலக்கிய எழுத்தாளர்கள் சர்வதேசப் பிரபல்யம் பெறக்கூடிய சூழ்நிலை தோன்றியுள்ளது.

14. மகாநாட்டு மலாகளில் சில போது பிரெஞ்சு மொழி மட்டும் அறிந்த தமிழர் படிக்க பிரெஞ்சு மொழி விடயங்கள் சேர்க்கப் பட்டன.

15. புதுச்சேரிக் கிளை ஆற்றிய பணிகளால் அமெரிக்கா, கரிபியன் தீவுகளில் வாழும் தமிழர்கள் மத்தியில் தொடர்புறவுகள் ஏற்பட்டுள்ளது. புதுச்சேரியும், மட்னிக் டொபாகோதீவு நாடும் நட்புறவு நகரங்களாக பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்காகப் புதுச்சேரிக்கு மட்னிக் தமிழ் நெஞ்சம் ரெனா வேலய்யா இருமுறை வந்து போயுள்ளார். புதுவையிலிருந்தும் உ.த.ப.-இன் குழுவொன்று மட்னிக் சென்று வந்துள்ளது. கரிபியன் மட்னிக்கில் மதுரகவி தமிழ் உறவை வளர்த்து வருகின்றார்.

16. சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடையேயும் தற்காலத்தில் போரினால் புலம் பெயர்ந்து பல நாடுகளில் வாழ்ந்து வரும் ஈழத் தமிழர்கள் மத்தியிலும் பாலருக்கான தமிழ்க் கல்வி போதனை முறையை ஆரம்பிக்கும் செயல்களுக்கு இந்த அமைப்பு ஊக்கமும், ஆக்கமும் கொடுத்து வருகின்றது. இதனால் தமிழ்க் கல்வி மொறிசியாஸ், றியூணியன், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் வெற்றிகரமாக வளர்ந்து வருகின்றது.

17. தலைவர் பேராசிரியர் வீரப்பனார் பல தடவை தமிழர் வாழும் நாடுகளுக்கு (இலங்கை உட்பட) பயணங்கள் மேற்கொண்டு உ.த.ப.-இன் பணிகளுக்கு ஊக்கமளித்து வருகின்றார்.

18. அவுஸ்ரேலியா, நியூசிலாந்து பாடசாலைகளில் தமிழ் மொழிப் போதனை சேர்க்கப்படுவதற்கு சம்பந்தப்பட்ட நாட்டுக் கிளைகளும் மற்றும் தமிழ்ச் சங்கங்களும் இணைந்து செயலாற்றியுள்ளன.

19. இந்த அமைப்பின் தலைமையக ஏடுகளான தமிழியம், தமிழ்மண், உலகத் தமிழர் குரல் ஆகியவை முறையே மலேசியா, இந்தியா, இலங்கை (யாழ்ப்பாணம்) ஆகிய இடங்களில் காலந்தோறும் வெளியிடப்பட்டு உலகளாவிய முறையில் தமிழ் இலக்கியப் பணிகள் மற்றும் தமிழ்ப் பண்பாட்டுப் பணிகளை ஆற்றி வருகின்றன.

20. தமிழ்மொழி வரலாறு பண்பாடு, தமிழர் வாழ்வியல் தொடர்பான ஆராய்ச்சிகள், உ.த.ப.-இன் பிரமுகர்களான அறிஞர்கள், ஆய்வாளர்கள் செய்து வருகின்றார்கள். இதற்காகச் சில போது உலகத் தமிழாராய்ச்சி மன்றத்துடன் இணைந்தும் செயற்பட்டு வருகின்றனர்.

21. இலங்கைக் கிளை இந்த இயக்கத்தின் தாய்க்கிளையாகச் செயற்பட்டு வருகின்றது. தலைமையகத்துடன் இணைந்து செயலாற்றி உலகத் தமிழர்களிடையே தொடர்புறவை வளர்த்து வருகின்றது.

22. ஈழத்திலிருந்து போரினாலும், போர் அநர்த்தங்களாலும் ஏதிலிகளாகப் புலம் பெயர்ந்த தமிழ்ப் பெருமக்கள் சிலர் மேலை நாடுகளில் இந்த அமைப்பில் இணைந்து முக்கியமான பொறுப்புக்களைப் பகிர்ந்து முன்னேற்றப் பணிகளைச் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

23. இலங்கைக் கிளையின் வளர்ச்சிக்கும், பரப்புதலுக்கும் 20 ஆண்டுகளாகத் தன்னலங் கருதாத இயல்பில் தனியனாக நின்று கிளையின் பணிகளுக்குப் பொருளாதாரச் சுமையைச் சுமந்து திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்கள் விளங்கி வருகின்றார். உலகத் தமிழர் குரல் ஏட்டினையும் மற்றும் வெளியீடுகளையும செய்து வருகின்றார். தலைமையகத்துடனும், கிளைகள் சிலவற்றுடனும் தொடர்புறவு கொண்டு செயலாற்றி வருகின்றார்.

24. தமிழ் மொழியில் 13 எழுத்துக்கள் சீர் அமைப்பு என்ற பெயரில் நீக்கப்பட நடைபெற்ற கண்மூடித்தனமான செயலினை இந்த அமைப்பு ஆரம்பந் தொட்டே கண்டனந் தெரிவித்து வருகின்றது. இதற்கு இலங்கைக் கிளையின் தலைவர் தொடர்ந்து பரப்புரை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

25. உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத் தலைவர் பேராசிரியர் வீரப்பனார் அவர்கள் சர்வதேச ரீதியில் எல்லா நாட்டுக் கிளைகளுடன் இடைவிடாது அஞ்சல் தொடர்பும் கொண்டு விளங்கி வருகின்றார்.

26. இந்தத் தமிழ் அமைப்பை 43 நாடுகளில் தலைவர் வேரூன்றிக் கால் ஊன்ற வைத்துள்ளார். இதற்காக அந்த நாடுகளுக்குப் பயணங்கள் மேற்கொண்டிருக்கிறார்.

27. தலைவர் வீரப்பனார், மலேசியாவிலிருந்து உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம், மலேசியக் கிளை, தமிழ் இலக்கியக் கழகம் ஆகியவற்றில் இருந்து கொண்டு தமிழ் வளர்ச்சி, தமிழ் ஆய்வுகள், தமிழ்ப் பண்பாடு, வரலாறு போன்றவற்றில் பயன்மிகு பணிகள் செய்து வருகின்றார். காலந்தோறும் நூல்கள், சஞ்சிகைகள் வெளியிட்டும் வருகின்றார். மலேசியாவில் இம் மூன்று அமைப்புகள், மலேசியத் தமிழ் மக்கள் திருக்குறள் நெறிமுறைகளை அறிந்து உணர்ந்து வாழ திருக்குறள் நெறிபரப்பும் மாபெரும் தொண்டுப் பணியை சமூக முன்னேற்றச் சேவையாக கிளைப்பிரமுகர்கள் மற்றும் மாந்தர்களுடன் இணைந்து செய்து வருகின்றவர் மணிவெள்ளையன்.

28. காலத்துக்குக் காலம் இலங்கை, இந்தியா, மலேசியா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ்,

கனடா, பர்மா, தென்மார்க் நாடுகளில் உள்ள கிளையமைப்புகள், நூல்கள் வெளியீடுகள் செய்து தமிழ் இலக்கிய, சமுதாயப் பணிகள் செய்து வருகின்றன.

29. யுனெஸ்கோ மற்றும் ஐ.நா. மனித உரிமைக் கழகம் ஆகியவற்றில் செய்யப்பட்டு, அவற்றுடன் சேர்ந்து செயற்பட்டு வரும் ஒரேயொரு கலாசார அமைப்பாக உ.த.ப. இயக்கம் விளங்கி வருகின்றது.

30. ஐக்கிய நாட்டு மன்றத்தில் பண்பாடு, கலாசாரம், மனித உரிமைப் பகுதியில் இந்த அமைப்புக்கு 1989-ல் இருந்து பார்வையாளர் அந்தஸ்து கிடைத்துள்ளது.

31. பட்டம் பெற வாய்ப்பில்லாத தமிழர்களுக்கு, அறிவாளிகளுக்கு மலேசியாவிலும் ஐரோப்பாவிலும் தமிழ் மணிப் பட்டங்கள் வழங்கும் கல்வித் திட்டத்தை 1990-ல் துவங்கி நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டத்தை இலங்கை கிளை இந்த ஆண்டில் (1999) இருந்து அமுல்படுத்த செயல்வடிவம் கண்டு வருகின்றது.

32. திருக்குறள் பல்கலைக் கழகம் அமைக்கும் நோக்குடன், புதுச்சேரி மாநிலத்தில் திருக்குறள் மையம் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

33. இந்தப் பேரியக்கமானது சாதனைகள் பல செய்து வரலாறு படைக்கக் காரணர்களாக அனைத்துலக தமிழ் நெஞ்சங்களாய் விளங்கி வரும் தமிழ்மாமணிகள் விவரம் வருமாறு :

பேராசிரியர் திரு. இர.ந. வீரப்பன், திரு. மு. மணிவெள்ளையன், திரு.பி.எஸ். வெங்கடேசன், திரு. ப.கு. சண்முகம், டத்தோ திரு. எஸ். சாமிவேலு (மலேசியா), திரு. இராமுலு (இந்தோனேசியா), அறிஞர் திரு.டி.எஸ். மணி, வல்லமைச்சன், திரு. ரெ. மாரிமுத்து (பர்மா), திரு. சுப. கரிகால்வளவன் (அந்தமான்), திரு. வீரமதுரகவி, பேராசிரியர் திரு. கதிர்முத்தையன், அமரர் திரு. இராமலிங்கனார் (புதுச்சேரி), திரு. இரா. இரத்தினகிரி, திரு. எம்.ஏ. ரஹ்மான், கவிஞர் முல்லைவாணன், திரு. ரவிபாண்டியன், திரு. சோலைஇருசன் (சென்னை), பாவலர் திரு.ஐ. உலகநாதன் (பொங்களூர்), திரு. ஆ. சண்முகலிங்கம், திரு. பொன். பூலோகசிங்கம் (யாழ்ப்பாணம், ஈழம்), திரு. கே.ரி. கணேசலிங்கம் (ஜேர்மனி), திரு. மனோகரன் (சுவிஸ்), திரு. கே. ராஜமனோகரன் (லண்டன்), அரங்க முருகையன், திரு. அலன் ஆநந்தன், திரு. பி. சண்முகசுந்தரம் (பிரான்ஸ்), திரு.எஸ். நடேசமூர்த்தி (ஹொலண்ட்), திரு. கே. ஜெயக்குமார் (டென்மார்க்), திரு. சுவாமி விஞ்ஞானந்தா (அமெரிக்கா), திரு. ரெனா வேலையா (மட்னிக்), திரு. ஆ. புஷ்பரதம், திரு. கே. ரத்தினம், திரு. எஸ். சண்முகம் (மொறிசியஸ்), பேராசிரியர் எஸ். குமாரசாமி, திரு. வே. தேவகுமார், லோயர் திரு. எஸ். கிருஷ்ணன் (றியூணியன்), பேராசிரியர் வே. கோவிந்தசாமி, திருமதி சோதிநாதன், அதிகுணன் (தென் ஆப்பிரிக்கா), டாக்டர் திரு.எஸ். சிறிஸ்கந்தராசா, மாத்தளை சோமு (அவுஸ்திரேலியா), டாக்டர் எம். ராசநாதன் (நியூசிலாந்து), திரு. க. அப்பாப்பிள்ளை (பிஜி), திரு. கருணைகமால் (ஹாங்காங்), இவர்களை விட பல இனிய இதயங்கள் இலைமறை காயாக இருந்து உ.த.ப.-இன் தொண்டுப் பணி செய்து வருகின்றார்கள்.

## சிறப்புப் பெறும் கிளையமைப்புகள்

உலகத் தமிழ் பண்பாடு இயக்கத்தின் வரலாற்றுப் பயணத்தில், மலேசியத் தலைமையகம், மலேசியக்கிளை, இலங்கை, புதுச்சேரி, மொறிசியஸ், அந்தமான், தென்னாப்பிரிக்கா, லண்டன் போன்ற இடங்களில் அமைந்த கிளையமைப்புக்கள் செய்துவரும் தமிழ்ப் பணிகள் சிறப்பாகப் போற்றப்பட வேண்டியவையாகும். தற்போது ஜேர்மனி, லண்டன், பிரான்ஸ், சுவிஸ், டென்மார்க் நாடுகளில் உள்ள கிளைகள் ஈழத்தமிழ்ப் பெரியார்களின் செம்மையான தமிழ்ப் பணிகளில் இயங்கி வருகின்றன. தலைவரின் அயராத உயர்வான உழைப்புடன் உலகத்தில் 43 நாடுகளுக்கான அவரின்


பயணங்கள் வாயிலாகவும், 40 நாடுகளில் தமிழர் நட்புறவும் பணிகளாலும், 28 நாடுகளில் கிளைகள் தோற்றப் பெற்றதுடன், வேரூன்றி வளர்ந்தும் வருகின்றன.

## தலைவர், பேராசிரியர் வீரப்பனாரின் செயல்திறன்

பேராசிரியர் திரு. வீரப்பனாரின் உலகத் தமிழ்ப் பண்பாடு இயக்கத்தோடு இணைந்த வாழ்வும் செயல் விழுமியங்களும் தமிழின வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுவிட்ட சிறப்பம்சமாகும். பல ஆய்வுப் பணிகள் கண்டு, பயனுள்ள நூல்கள் எழுதிய பெருமை பெற்ற அறிஞர் இவர். இந்தப் பெருமகன் உலகத் தமிழர்களை ஒன்றுபடுத்த தனது ஒப்பற்ற, ஓய்வற்ற தமிழ்ப் பணிகள் மூலம் 25 ஆண்டு காலமாக உழைத்து வருகின்றார். உலகளாவிய தமிழர் சமுதாயத்தின் முன்னேற்றம், ஐக்கிய உறவு, தமிழ்த் தேசியம் உரிமை வாழ்வியல் போன்ற உன்னதமான நோக்கங்களோடு பண்பாட்டு ரீதியில் உழைத்து வரும் இவரைப் போன்ற மனிதரெவரும் இன்று இல்லை. தமிழ்க் குமுகாயங்களை தமிழியக்கத்தில் பிணைக்கும் பணியில் வெற்றி குவித்து வரும் செம்மல் இவர் என்றால் மிகையாகாது.

## சாதனையின் பின்னணிச் சிறப்பு

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தில் தலைவர் வீரப்பனாருக்குப் பின்னால் நின்று பக்கத் துணையாகி பலமான அத்திவாரமாக



ஆ. சண்முகலிங்கம்

விளங்கி தம்மால் இயன்ற பணிகள் ஆற்றிவரும் குறிப்பிட்ட பெருமக்களான தமிழ் நெஞ்சங்களின் தொண்டுகள் தொடர வேண்டும். அவர்கள் ஓய்வின்றி ஊக்கமுடன் உழைக்கவும் தமிழ்த் தொண்டுப் பணிகள் தொடர்பான செயல் திட்டங்கள் தங்கு தடையின்றி நடந்து வரவும் பொன் மனங்கொண்ட செம்மல்களான நல்ல உள்ளமும் வளமும் மிக்க மாந்தர்கள் உதவிக் கரம் நீட்டி ஆதரிக்க வேண்டும். இது தமிழர் சமுதாயத்துக்கு மேன்மை கொண்டு வரும். அப்போது தமிழ்ப் பணிகள் மெல்லென ஊருந்து செல்லாமல் ஆற்றுப் பெருக்கென வேகம் கொண்டு ஓடிக் கொள்ளும் என்றால் மிகையாகாது. இது உலகமெல்லாம் பாய்ந்து பரவி தமிழ்மொழி, பண்பாடு, கலை, கலாசாரம், தமிழ் வாழ்வு போன்ற மாமணிகளைக் குவித்து வருமாதலால் தமிழர் வாழ்வில் அன்புடன் பண்பும் பயனம் மிகுந்து வருமென்பது உண்மை நிலையாகும்.

எனவே உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் என்ற உலகம் பரந்து இன்று நின்றுலவும் இந்தப் பேரமைப்பு பல ஆண்டுகளாகப் பல வகையான சமுதாய உயர்வுப் பணிகள் செய்து கொண்டு வருகின்றது. இதற்காக நேரத்தையும், உழைப்பையும், பொருளாதாரத்தையும், பயன் கருதாமல் தியாகஞ் செய்து வாழ்ந்து வரும் உ.த.ப.-இன் தொண்டர்களாகிய உத்தம மாந்தர்கள் எங்கிருந்தாலும், ஊக்கமளிப்பதுடன் போற்றப்படுதல் பண்புடைமையாகும்.

●

# உலகத் தமிழர் உறவு வளர...
# உரிமை புலர, உயர்வு மலர

முனைவர் அரு. கோபாலன்

"தமிழர்கள் இல்லாத நாடில்லை; தமிழர்க்கென்றோர் நாடில்லை" • என்கிற நிலைமை இன்று தரணியிலே இருந்தாலும் தமிழகமும், தமிழீழமும் தமிழினத்தின் தொன்மைத் தாயகங்கள் என்ற உண்மையை மறுக்க முடியாது. மறைக்கவும் முடியாது.

'உலகு', 'உலகெலாம்' என்பதே தமிழியத்தின் ஓங்கிய கொள்கையாக இருந்தாலும் இலகு தாயகம் பண்டைத் தமிழகம் என்பதை எண்ணாமல் இருக்கவும் முடியாது. கடல்கோள்கள் ஏற்படுவதற்கு முன்னால் ஈழமும் தமிழகத்தோடு இணைந்திருந்தது. இன்றுபோல் தனித் தீவாக இல்லை என்பதால், 'பண்டைத் தமிழகம்' என்பது இன்றைய ஈழமும் தமிழகமும் பிரியாத தாயகம்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை. எனினும் இன்று-

ஈழத் தமிழர், இந்தியத் தமிழர், மலேசியத் தமிழர், சிங்கைத் தமிழர், மொறிசியசுத் தமிழர், தென்னாப்பிரிக்கத் தமிழர்

- எனப் பன்னாட்டுத் தமிழர்களாய்த் தமிழினம் பரந்துபட்டு வாழ்வதும், அந்தந்த நாட்டுத் தமிழருக்கு அவரவர் வாழும் நாடே தாயகம் என்பதும் கண்கூடான உண்மையாகும்.

> ''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
> நற்றவ வானினும் நனிசிறந்தனவே''

- என்ற சொற்றமிழுக்கு ஏற்ப, அந்தந்த நாட்டுத் தமிழரும் அவரவர் நாட்டுக்கு உண்மையோடும், உரித்தோடும் நடந்து கொள்வதே சால்புடைமையாகும். அதுதான் உலகத் தமிழ்ப் பண்பாடு மாகும்.

இன்னும் சொன்னால், இன்னொரு நாட்டிலே பிறந்து வாழ்ந்தும் தாய்மொழியின் காரணமாகத் தமிழ்நாட்டையோ, தமிழ் ஈழத்தையோ, முகாமையாகக் கொள்வது பிறந்த மண்ணில் அவர்களை வேர்ப்பிடிப்பில்லாத குமுகாயமாக மாற்றிவிடும் தீங்கைக் கொண்டதுமாகும்.

ஆம்; 1930 மற்றும் 40-களில் பர்மா (மியான்மர்) மலேயா, இந்தோச்சீனா (வியட்நாம்), கம்பூச்சியா, லாவோசு, இந்தோனேசியா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் இடையிடையே தமிழகத்திற்குத் திரும்பி வராமல், அங்கேயே வீடு, நிலம், தோட்டம், தொழில் என்று வேரூன்றி வாழ்ந்திருப்பார்களேயானால் (இந்தியக் குடிகள் என்று தம்மைப் பதிந்து கொள்ளாமல் இருந்திருப்பார்களானால்) இன்று அங்கெல்லாம் பலம்வாய்ந்த தேசிய இனமாக இருந்திருப்பார்கள். அவ்வாறில்லாமல் பெரும்பான்மையோர் திரும்பிட, என்ன காரணத்தாலே அங்கேயே எஞ்சிவிட்டவர்களின் சந்ததியினரே இன்று அங்கு வாழ்ந்திருப்பதால், அவர்களுக்கு இருந்திருக்க வேண்டிய பலம் இல்லாதவர்களாக இன்று மிகமிகச் சிறுபான்மையினர் என்பதால், பலமும் வளமும் நலமும் குன்றியவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்தியாவிலும் இலங்கையிலும்கூட தமிழகத்திற்கும் தமிழீழத்திற்கும் வெளியே தமிழர்களுடைய நிலைமை இன்று அப்படித்தான் உள்ளது. ஆமாம்; இந்தியாவின் பிற மாநிலங்களிலுள்ள தமிழ் மக்களில் பெரும்பான்மையினர் இன்று மொழிவழி அமைந்திருக்கின்ற இந்திய மாநிலங்கள் உருவாகும் முன்பே, வெள்ளையர் ஆட்சியின் போதே அந்த வெள்ளையர்கள் முதலில் தமிழகத்தில் காலூன்றிப் பின்னரே இந்தியா முழுவதையும் தங்கள் ஆளுமையின் கீழ்க் கொண்டுவந்தவர்களென்பதால், அப்போதே விவசாயக் கூலிகளாகவும், பல்துறைத் தொழிலாளிகளாகவும் இந்தியப் பெருநகரங்களுக்கெல்லாம் தமிழ் மக்களை வெள்ளையர்

கள் கூட்டிச் சென்றனர். வணிகத்தின் பொருட்டும், அரசு உத்தியோகங்களின் பொருட்டும் குடியேறியவர்களும் உண்டு.

ஆனால் அவர்கள் ஆங்காங்கும் வேரூன்றி அம்மண்ணைத் தக்க வைத்துக் கொள்ளாத தாலும், ''ஆ... ஊ...'' என்னும் முன்னே தமிழகத்திற்கு ஓடிவந்துவிடுபவர்களாக இருந்ததாலும் பம்பாய், தில்லி, கல்கத்தா போன்ற பகுதிகளில் பெருந்தொகையினராக இருப்பினும் உரிய உரிமையையும் பெருமையையும் பெறாதவர்களாகவே இருந்து வருகின்றனர்.

அண்டை மாநிலங்களான ஆந்திரா, கருநாடகா, கேரளா ஆகியவற்றிலுள்ள தமிழர் களின் கதை இதிலிருந்து வேறுபட்டதாகும். அவர்கள் மொழிவழி மாநிலப் பிரிவினையின் போது தமிழ்ப் பகுதிகள் தவறாக அம்மாநிலங் களில் சேர்க்கப்பட்டுவிட்டதால், இன்று அம்மாநிலத்தவர்களாக இருக்கும் மண்ணின் மைந்தர்களாவர். இவர்களை வந்தேறுகுடிகள்' என்று எந்தக் கொம்பனாலும் கூற முடியாது.

இதைப் போலவே இலங்கையின் தென் பகுதியிலிருக்கும் தமிழர்களும் அம்மண்ணின் மைந்தர்களேயாவர். ஆம், கொழும்பிலிருந்த கோட்டை இராச்சியத்தைத் தோற்றுவித்தவனே ஒரு தமிழன் (அழகக்கோன்) என்பதும், இலங்கை முழுவதற்குமான அரசுரிமையை வெள்ளையர் எழுதி வாங்கிய கடைசிக் கண்டி மன்னன் ஒரு தமிழன் (கண்ணுச்சாமி) என்பதும் வரலாற்று உண்மைகளாகும்.

சொல்லப் போனால், இலங்கையின், ''இன்றைய வடக்கும் கிழக்கும்தான் தமிழீழம்'' என்று வரையறுக்கப்படாமல், ''எங்கெல்லாம் தமிழர்கள் அதிகமாக வாழ்கிறார்களோ அங்கெல்லாம் தமிழீழம்; எங்கெல்லாம் சிங்களர்கள் அதிகமாக வாழுகிறார்களோ அங்கெல்லாம் சிங்கள சிறிலங்கா'' எனக் கொண்டு, இலங்கையில் தமிழர்களின் உரிமைக் கோரிக்கை எழுப்பப்பட்டிருக்க வேண்டும். அப்படி எழுப்பப்பட்டிருந்தால் பெரும் பான்மையான இசுலாமியத் தமிழர்களும், மலையகத் (இந்திய வம்சாவழித்) தமிழர்களும் தமிழீழ எல்லைக்கு வெளியில் நிறுத்தப் பட்டிருக்க மாட்டார்கள். வடக்கிலும், கிழக்கிலும் திட்டமிட்டுச் சிங்களரைக் குடியேற்றியும், முப்படைத் தாக்குதல் மூலம் தமிழினத்தை மாய்த்தும் இன்று சிறிலங்கா இனங்கண்டு தமிழீழ உருவத்தைச் சிதைத்து வருகிறதே அது நடக்காது.

ஏனெனில் அப்போது தமிழர்கள் அதிகம் வாழும் கொழும்பில் ஒரு பகுதியே தமிழீழக் கோரிக்கைக்குள் வந்துவிடும். இந்தியாவில் முன்பு எப்படி ''எங்கெல்லாம் முசுலிம்கள் அதிகம் வாழுகிறார்களோ அதையெல்லாம் சேர்த்து பாக்கிஸ்தானாகவும், எங்கெல்லாம் இந்துக்கள் அதிகம் வாழுகிறார்களோ அதையெல்லாம் சேர்த்து இந்துஸ்தானாகவும் இந்தியத் துணைக் கண்டத்தையே இரண்டாகப் பிரிக்க வேண்டும்'' என்று முசுலிம்லீக் கோரிக்கை வைத்து, காசுமீர் முதல் கன்னியாகுமரி வரை உள்ள முசுலிம் மக்களின் ஆதரவைப் பெற்றதோ, அப்படித் தமிழீழக் கோரிக்கையாளர்களும் பெற்றிருக்க முடியும். அப்போது, 'தலைக்கு வந்தது தலைப்பாகை யோடு போகட்டும்' என்று சிங்களப் பேரினவாதி களை ''வடக்கு கிழக்கையேனும் தமிழீழமாகக் கொடுத்து ஒழிப்போம்'' எனத் தமிழர்களோடு ஓர் இணக்கப்பாட்டுக்கு வரச் செய்திருக்க முடியும்.

இது ஒருபுறமிருக்க, இன்றைய உலகத் தமிழர்களை 1) தமிழகம்- தமிழீழம் ஆகிய தாயகத் தமிழர்கள், 2) தமிழகம் - தமிழீழம் தவிர்த்த இந்தியா - இலங்கைப் பகுதிகளில் வாழும் தமிழர்கள், 3) சிங்கை, மலேசியா, மொறிசியசு, தென்னாப்பிரிக்கா, ரியூணியன் போன்ற நாடுகளில் தேசியச் சிறுபான்மை யினராக வாழும் தமிழர்கள், 4) பிழைப்பின் நிமித்தம் பிறநாடுகளில் சென்று வாழும் தமிழர்கள், 5) அகதிகளாகப் பல்வேறு நாடுகளில் அடைக்கலம் புகுந்திருக்கும் தமிழர்கள் என ஐந்து வகையாகப் பிரிக்கலாம்.

இவ்வய்ந்து வகை வேறுபாடுகளையும் புரிந்து கொண்டு உலகில் தமிழின நலன்களை முன்னெடுத்தோமானால் நாம் பெரும் பெரும் சாதனைகளைப் படைத்திட முடியும். அதற்கு -

1) தொடக்கக் கல்வி வரையிலாவது தமிழ் வழிக் கற்கின்ற முறையை எல்லா நாட்டுத் தமிழர்களும் மேற்கொள்ளும்படிச் செய்தாக வேண்டும். அவரவரும் தாம் வாழும் நாட்டுச் சூழ்நிலைக்கேற்ப இதை நடைமுறைப்படுத்த முயல வேண்டும். இதற்குத் தமிழ்மொழியுடன் அந்தந்த நாட்டு மொழியையும் இணைத்து இருமொழிப் பாடநூல்களை கற்பிக்கும் முறையை உருவாக்குவது பயனளிக்கும். தமிழுடன் ஆங்கிலம் மட்டும் போதும் என்னும் மூட நம்பிக்கையைக் கைவிட வேண்டும்.

2) சங்க நூற்கள், திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகியவை தமிழரின் பொது நூல்களென ஏற்று, எம் மதத்தைச் சார்ந்த தமிழரும் இவற்றில் ஊற்றம் பெற ஆவன செய்ய வேண்டும். சாதி, மதங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் கைவிட வேண்டும்.

3) பொங்கல் திருநாளை உலகத் தமிழினத்தின் தேசியத் திருநாளாக ஏற்று, அன்று எந்நாட்டிலிருக்கும், எம்மதத்தைச் சார்ந்த தமிழரும் அதைக் கொண்டாட வேண்டும்.

4) ஆண்களுக்கு வேட்டி, சட்டை, துண்டு, பெண்களுக்கு சேலை, இரவிக்கை, பாவாடை ஆகியவை தமிழரின் தேசிய உடுப்புகளாக ஏற்கப்பட்டு, குறைந்தபட்சம் தமிழர்கள் ஒன்று கூடும் விழாக்களிலும், தமிழரின் குடும்ப விழாக்களிலும் அவ்வுடுப்புகளில் தோன்றுவதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

5) கூடுமானவரை தமிழர்கள் தங்கள் பெயர்களை நல்ல தமிழில் வைத்துக் கொள்வதையும், முன்னெழுத்தை (Initial) தமிழில் போட்டுக் கொள்வதையும் வழக்கத்துக்குக் கொண்டு வரவேண்டும். ஆங்கிலம் போன்ற பிறமொழிகளில் குறிப்பிடும்போதும் க. மணி (Ka. Mani), கா. மாரி (Kaa. Mari) என்று கையாள்வது நன்றாக இருக்கும். மேலும் இசுலாமிய, கிருத்துவத் தமிழர்களும் மதத்தின் காரணமாக வேற்று மொழிப் பெயர்களைப் பூண நேரினும், தமிழ்ப் பெயர் ஒன்றையும் கூடவே ஒட்டுப் பெயராக (உ-ம் : மேரிநல்லாள் அல்லது கலைமேரி, முகம்மது எழில் அல்லது எழில் இசுமாயில் இப்படி முன்னொட்டாகவோ, பின்னொட்டாகவே) வைத்துக் கொள்ளலாம்.

6) ஒரு தமிழர் இன்னொரு தமிழரை அவர் எந்நாட்டவரெனினும் சந்திக்கும் போதும், ஒரு தமிழர் மற்றொரு தமிழருக்கு மடல் எழுதும் போதும் தமிழில் பேசுவதையும், எழுதுவதையும் கட்டாய வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

7) எந்த மொழியினரிடையே வாழ்ந்த போதும் ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தைத் தமிழ் ஏடுகளைப் படிக்க, வானொலி தொலைக்காட்சிகளில் தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்க, பார்க்க, தமிழர்கள் ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.

8) தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் தமிழ்ச் சங்கங்களை நிறுவி, வாரம் ஒரு முறையோ, மாதம் ஒரு முறையோ தமிழ் இலக்கிய இசை-நாடக விழாக்களை நடத்துவதன் மூலம் தமிழின ஒருங்கிணைப்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

9) பிற நாடுகளில் வாழும் தமிழர்கள் ஆண்டில் ஒருமுறை அல்லது வாழ்நாளில் ஒருமுறையாவது தாயகங்களுக்கு வந்து வரலாற்றுச் சிறப்புவாய்ந்த இடங்களைக் காண்பதையும், இளைய தலைமுறைக்குக் காட்டுவதையும் கடமையாகக் கொள்ள வேண்டும். அதைப் போலவே தாயகங்களில் இருப்போரும் தமிழர் வாழும் ஏனைய நாடுகளுக்குச் சென்று வருவதை ஒரு கடமையாக மேற்கொள்ள வேண்டும்.

10) வெளிநாட்டுத் தமிழர்கள் தாயகங்களிலுள்ள பண்பாட்டுச் சின்னங்களைத் தத்தெடுத்துப் பாதுகாக்கலாம். வசதியுள்ள தாயகத் தமிழர்கள் தமிழர் வாழும் பிற நாடுகளில் தமிழ்க் கல்வி, கலை, பண்பாட்டு வளர்ச்சிக்குத் திட்டமிட்டு உதவலாம்.

11) மேற்கண்டவற்றுக்கு அடிப்படைகளாக அ) உலகத் தமிழர் வங்கி, ஆ) உலகத் தமிழ்க் கல்விக் கழகம், இ) உலகத் தமிழர் உறவின் முறைச் சங்கம், ஈ) உலகளாவிய தமிழர் போக்குவரத்து நிறுவனம் ஆகியவற்றை அமைத்து, கொண்டு கொடுத்து, ஒன்றி ஓங்கி, நின்று நிலைத்து வாழ வகைசெய்திட வேண்டும்.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா"** ●

# வாழ்த்து

'நொடிப் பாவலர்' வி.ஜி. சந்தோஷம்



அன்னை தமிழை அரியணைஏற்ற
அரும்பாடு பட்டுவரும் அருங்குணவான்
ஆற்றல் மிக்க அருந்தமிழை
நெஞ்சில் கொண்ட உலகத்
தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர்
வீரப்பனார் நடத்தும் தமிழ்ப்
பெருவிழாவிற்கு தரணி எங்கும்
நற்றமிழ் கலைஞர்கள் எல்லாம்
நயம்பட ஒன்று சேர்ந்து
கொண்டாடும் மாநாடு
சிறப்புற வாழ்த்துகின்றேன்
உலகைத் தமிழால் வளர்த்துவோம் என்று
உன்னத கொள்கை கொண்ட
உயர்ந்தோரே வாய்மை யுடன்
வாழ்ந்து வள்ளுவர் தமிழ்
உள்ளத்தில் கொண்டு
உறவாடும் நற்றமிழ்ச் சித்தர்களே
நாடும் வீடும நலம் பெற
நற்றமிழால் ஒன்று சேர்ந்து
நயம் பெற பைந்தமிழையும்
பண்ணிசையால் பாடி
பரமனின் அருள் பெற்ற
செந்தமிழ்ச் செல்வர்களே
சொந்தங்களோடு சுகராகம் பாடி
சுந்தரத் தமிழால் சோதனைகள் நீக்கி
சாதனை யாக்க வந்திருக்கும்
சரித்திர நாயகர்களே
தன்மான சிங்கங்களே
தரணியெல்லாம் தமிழ் ஓங்க
தமிழர்கள் வளம் பெறுக
ஞான ஒளியுடன்
இறை அருளோடு
என்றும் வாழ்க சந்தனம் கமழ்க
பன்னீர் மணம் வீச
பாரிசாத மலர் தொடுத்து
ஞான திரவிய நல்லாசியுடன்
சாற்றினேன் சந்தக் கவிதையுடன்
சந்தோசம் கவிச்சக்கர வர்த்தி
சேர்ந்து வரலாறு மிக்க இந்த மாநாடு
ஈரடி நாயகனை வேண்டி வணங்க
வாழ்த்துகின்றேன்

●

# தமிழ் இனத் தலைவர்

தமிழினம் இன்று தமிழக அரசு, புதுச்சேரி அரசுப் பகுதிகளில் 6 கோடியைக் கொண்டுள்ளது. இதன் அருகிலுள்ள மாநிலங்களில் 1 கோடி தமிழர்களும், இந்தியாவின் பிற பகுதிகளில் 1 கோடித் தமிழர்களும், அயல்நாடுகளில் 1 கோடித் தமிழர்களும் உள்ளனர். மொத்தம் 9 கோடித் தமிழர் தொகை ஆகிறது.

தமிழினம் தற்சமயம் 9 கோடியாகக் கரைந்துவிட்டதே என்று பெருந்துக்கப்படுபவர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் வீரப்பனார் ஒருவர்தான். நியாயமாக இந்தியாவில் 60 கோடித் தமிழர்களையும் தென் கிழக்காசியாவில் 40 கோடித் தமிழர் வழியினரையும் கொண்டு சுமார் 100 கோடி பேராக இருக்க வேண்டிய இனம் இப்படிக் கரைந்து கொண்டே வருகிறதே, இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பது வீரப்பனாரின் பேராவல்.

தமிழர்கள் உலகில் எங்கும் நசுக்கப்படும் இனமாக இருப்பதையும், தமிழர் கலாச்சாரத்தை அழித்து விடுவதில் எதிரிகள் முனைப்பாக இருப்பதையும் கண்டு வீரப்பனாருக்குத் தனி எழுச்சி உண்டாகி தன் அரிய பொருளாதாரத்தை அழித்துக் கொண்டு தமிழின உயர்வுக்குப் பாடுபட்டு வருகிறார்.

மலேசியா—சுமத்ரா காடுகளில் தமிழர்கள் தோட்டப்புறத் தமிழர்களாக குடியேற்றப்பட்ட இன்னல்களை நேரடியாக அறிந்தவர். ஐரோப்பியர்கள் தோட்டப்புறத் தமிழர்களுக்குத் தந்த தண்டனைகளை நேரில் கண்டவர்.

பர்மாவில் வியட்நாமில் பயணம் செய்து தமிழர் சொத்துக்களை அந்நாடுகள் எவ்வித இழப்பீடும் வழங்காது அபகரித்ததை நேரில் கண்டு வந்தவர்.தென்னாப்பிரிக்காவிலும், மொரீசியஸ் தீவிலும் தமிழர் தமிழைக் காக்கப் போராடுவதை நேரில் கண்டவர்.

ஐரோப்பிய நாடுகளிலும், ஆஸ்திரேலியா, கனடாவிலும் திடீர் திடீர் என மாறும் கால நிலைகளில் தமிழ் மக்கள் புதுவித கால மாறுபாடுகளால் அல்லல்படும் அவதிகளைக் கண்டவர். தனித்துப் போய் புதிய நாடுகளில் அறிமுகமற்ற தமிழரைப் பிடிப்பதில் சாதனை படைத்தவர். உலகில் தமிழர் மாநாடுகள் எங்கு நடந்தாலும் சென்று, பங்குற்று சாதனை படைத்தவர்.

ஈழத் தமிழ் அகதிகள் நிலையை உலகெங்கும் கண்டவர். தமிழரசர்கள் வென்று ஆண்ட தென் கிழக்காசிய நாடுகளையும் தமிழர் சின்னங்களையும் கண்டு வந்து உலகத் தமிழர்க்கு விளக்கியவர்.


வீரப்பனாரின் வீர முழக்கம் : உழைப்பில் நாம் சீனரை வென்று விடுவோம். மொழியைக் காத்துக் கொள்வதிலும் நாம் யூதர்களையும், சீனர்களையும் விட மேலானவர்களாக இருக்க வேண்டும். நாம் கட்டிய கோயில்கள் போதும், தமிழ்ச் சாமியை மட்டும் வணங்கிவிட்டு தமிழையே பேசத் தெரியாத தமிழனாக இருப்பதில் பயனில்லை. தமிழர் தொகை கூட்ட வேண்டும். நம் தமிழினத்திற்குள்ளேயே திருமணங்கள் முடிக்கப்பட வேண்டும். தமிழ் இளைஞர்களே!! வெள்ளைத் தோல் பெண்டிர்தான் வேண்டும் என ஓடாதீர்!

வீரப்பனாரின் ஒரே ஆசை: உலகில் தமிழர்களுக்கு என்று தாயகம் ஒன்று அமைந்தால்தான் தமிழினத்திற்கு மரியாதை கிடைக்கும். இதுவரை உலகெங்கும் தமிழினம் அடிமைகள், கூலிகள், கள்ளத் தோணிகள், மதராசிகள், கிளிங்கர்கள் என்றுதான் கூறப்படுவர். தமிழரின் முதல் கடவுள் ஞாயிறு, இதைத் தமிழர்கள் சூரியன், பகலவன், ஆதவன், கதிரவன், பிரபாகரன் என்றெல்லாம் பல்வேறு பெயரிட்டு அழைப்பர். அத்தலையாயவன் வழி நின்று உயர்வு பெற வேண்டும். 21ஆம் நூற்றாண்டில் நுழைய வேண்டும் என்பதே வீரப்பனாரின் ஆசை. நாமனைவரும் அவர் வழி நடப்போமாக.

**வீர மதுரகவி**

தலைவர், பிரெஞ்சுத் தமிழர் பேரவை, புதுவை.

# வாழ்த்து



உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 7வது மாநாடு தமிழகத்தில் நடைபெறுவதை முன்னிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தமிழகம் தமிழினத்திற்காக எத்தனையோ எழுச்சிவிழாக்களை நடத்தியிருக்கின்றது; கண்டிருக்கின்றது. ஆனால் அரசியலாளரில் இருந்து பாமரமக்கள் வரையிலும் வடக்கு நோக்கி இராமனிடம் கையேந்தும் நிலை மாறவில்லை.

இராவணனின் அருமை பெருமைகளை அவன் சிறப்பை தமிழக மக்கள் எப்போது புரிந்து கொள்கின்றார்களோ அன்றே தமிழக மக்கள் மட்டுமல்ல, உலகத் தமிழினமே இழந்த ஆளுமைகளை மீளப் பெறுவார்கள்.

வம்பனுக்கு (கம்பன்) இராமனைத் தெரியாது. இராவணன் சிறப்பு இராமன் அறிவான். மீண்டும் இராவணன் திசைக்கு இராமன் வரப்போவதுமில்லை. நடக்க இருக்கின்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் மாநாடு தமிழகத்தில் இருந்து இராமனை விரட்டி மீண்டும் இராவணன் ஆட்சிக்கு வழி அமைக்க வேண்டும். தமிழினம் இழந்த ஆளுமைகளை நிலை நிறுத்த வேண்டும். உலக நாடெங்கும் பிளவுபட்டு வாழ்கின்ற தமிழினம் தமிழ்க்கலை கலாச்சார பண்பாட்டிலிருந்து விடுபடாமல் இருக்கவும் முதல் நாகரிகத்தை இந்த உலகுக்கு அறியச் செய்த தமிழினத்தின் முதன்மையை இன்றைய உலகம் அறிந்து பாராட்டவும், இந்த மாநாட்டுக்கு வருகின்ற பேராளர்களின் தீந்தமிழ்ப் பேரொலி உலகச் செவிகளில் சிந்தைக்கு விருந்தாகக் கிடைக்கட்டும்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாடு எல்லா வகையிலும் சிறப்புற்று வெற்றியுடன் நடைபெற்றிட என் உளமார்ந்த நல்வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செ. சிவராசசிங்கம்
உ.ப.தலைவர் உ.த.ப.இ. சுவிஸ் கிளை.

---

# வாழ்த்து

பாவலர் இளவேந்தன்



திரை கடலில் பயணித்துத் தேடும் செல்வம்
செந்தமிழை வளர்க்கத்தான் என்று எண்ணி
வரைமுறைகள் அளவில்லா உள்ளம் பெற்ற
வள்ளல்கள் வாழுகின்ற மலேயத் தீவு
கரை மூன்றும் தாலாட்டும் பரத மண்ணில்
கனித்தமிழர் பண்பாட்டு இயக்கம் கூட
விரைவாக வெள்ளிவிழா அழைப்புத் தந்தான்
வீருஅப்பன் விண்புகழைச் சேரும் சுப்பன்!

வீரமது விளையாடும் புனித பூமி
வெற்றியொடு கற்புநெறிப் பிறந்த சாதி
தீரமொடு பிற்போக்கைச் சாடும் நீதி
தெள்ளுதமிழ்க் கோபுரத்தைக் காட்டும் வீதி
சாரமுடன் கருத்துவுரம் பதித்த தூண்கள்
சரித்திரத்தில் தமிழியக்கம் சேர்க்கும் பண்பு
கூரான வேலாகக் கொள்கை காணும்
வெள்ளிவிழா வெற்றிபெற வேந்தன்வாழ்த்து!

முன்னாள் தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல்

# புரட்சித்தலைவரின் பண்பாட்டு உதவி



இது ஒரு நினைவேடு 1977 டிசம்பர் மத்தியில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க முதல் மாநாடு சென்னை, கற்பகம் விடுதியில் மயிலாப்பூரில் மூன்று நாளாக நடந்தது.

பத்து நாடுகளிலிருந்து வந்த ஐம்பதுபேருக்கு உணவு-உறைவிட உதவி தேவை என உணர்ந்து மாநாட்டுக்குழு கூடிப்பேசியது. இளம்பிறை எம்.ஏ. ரகுமான், இர.ந. வீரப்பன், ஜ.உலகநாதன், இரா. கனகரத்தினம், முரசு நெடுமாறன் ஐவரும், அமைச்சர் இராசா முகம்மது அவர்களைக் கண்டுபேசினர். அப்போது இரவு நேரம். அமைச்சர் இதை உணர்ந்த பின் உடனே தொலைபேசியில் முதல்வர் எம்.ஜி.ஆர். உடன் பேசினார். உடனடிப் பலன் கிடைத்தது. தூது வென்றது. எம்ஜியாரின் கருணை உள்ளமே இது.

மறுநாள் சட்டமன்ற விடுதியில் அயலகவிருந்தினர்க்கு உறைவிடம் கிடைத்தது. ஒருநாள் மாமல்லபுரச் சுற்றுலா பேருந்துப் பயணமும், சிற்றுண்டியும் இவர்களுக்கு இலவசமாய் அரசு உதவியது.

திடீரென 19-12-77ல் தாச்கோரமண்டல விடுதியில் தமிழக அமைச்சர்களுடன் முதல்வர் பேராளர்களுக்கு விருந்தளித்துப் போற்றிப் பாராட்டி, உலகத் தமிழரின் தாய்மொழி பண்பாட்டு வளர்ச்சிக்கும் உறவுக்கும் கைகொடுக்க என தலைமை வகித்துப் பேசினார்.

இதன்படி அவரது காலத்தில் இயக்கத்துடன் அணுக்க உறவு நீடித்தது.

1980 ஆகஸ்டில் மொரிசியசு நாடு அரசு உதவியுடன் 2வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டை அமரர் மா.தங்கணமுத்து நடத்திய வரலாறு அந்த அரசாங்கமே அஞ்சல்தலையும் வானஞ்சல் உறையும் வெளியிட்டுப் போற்றியது. இதற்குத் தமிழக அரசு பரதநாட்டியக் குழுவுடன் அறிஞர் குழுவையும் அனுப்பியது. இதற்காகப் பாடுபட்டவர் பேராசிரியர் சாலை இளந்திரையன்.

உ.த.ப.இ.

# வாழ்த்துக்கள்



யாழ்ப்பானத்தில் 1974—ஆம் ஆண்டு தைத்திங்களில் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்த வேண்டும் என மன்ற இலக்கைக் கிளைக்குள்ளேயே இருந்த சிங்கள அரசின் எடுபிடித் தமிழருடன் முதலில் போராட்டம் நடத்தினோம். இந்த எடுபிடித் தமிழரின் ஆலோசனையைக் கேட்டு மாநாட்டைத் தடைசெய்ய முயன்ற சிங்கள அரசுடன் போராடினோம். தடைகளை மீறி மாநாட்டை நடத்த முயன்றபொழுது அரசே தடையை நீக்கியது. இப்போராட்டங்களையும் மாநாட்டையும் நடத்திய வெற்றிக் குழுவின் முதல் அணியில் நான் இருந்தேன்.

உலகின் தலைசிறந்த தமிழறிஞர்கள் ஒன்றுகூடி ஆய்வுக் கட்டுரைகளை அரங்கேற்றினர். பிதா தனிநாயக அடிகள் பேராசிரியர் வித்தியானந்தன் ஆகியோரின் வழி நடத்தி உலக அறிஞர்கள் தம் ஆய்வுப் பெறுபேறுகளை விவாதிக்கக் காலம் அமைத்துக் கொடுத்தோம்.

இந்த மாநாட்டில் சந்தித்துக் கொண்டவர்கள் சில ஆர்வலர்கள் கூடி உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தை நிறுவினர். இதுவரை ஆறு மாநாடுகளை நிகழ்த்தியுள்ளது இவ்வியக்கம். தனது வெள்ளிவிழா ஆண்டில் ஏழாவது மாநாட்டைச் சென்னையில் நடத்துவது அறிந்து மகிழ்ந்தேன். என் இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் ஆராய்ச்சிக்கென ஒரு மன்றம், தமிழ்ப் பண்பாட்டுக்கென ஓர் இயக்கம், தமிழர் உறவுக்கென ஓர் மன்றம் என உலகளாவிய அமைப்புகள் தமிழரிடையே இயங்கி வருகின்றது. மாநாடுகள் நடத்துவதோடு மட்டும் இவ் வமைப்புகளின் பணி நிறையாது. உலகத் தமிழர் முன்னேற்றத்துக்காக ஆக்க பூர்வமாக பணி புரிவதும் இவ்வமைப்புகளின் பணியாக அமைய வேண்டும்.

ஏழாவது மாநாட்டில் வரும் பேராளர்களும் பங்காளர்களுக்கும் என் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மறவன் புலவு க. சச்சிதானந்தன்**

துணைத் தலைவர், அனைத்துலக தமிழாராய்ச்சி மன்ற
இலங்கைக் கிளை செயலாளர்,
தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழு



# உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் வரலாற்றுச் சுருக்கம்

**1974**ம் ஆண்டில் ஈழதேசம் **யாழ்பாணத்தில்** நாலாவது உலகத் தமிழ் **ஆராய்ச்சி** மகாநாடு நடந்தது. அதே நேரத்தில் **08.1.1974ல்** நமது உலகத் தமிழ் பண்பாட்டு **இயக்கம்** யாழ்ப்பாணம் நகரில் **உருவாக்கப்பட்டது**. இது அமைவதற்கு திரு. இரா. கனகரட்னம் என்பார் மூலவராக இருந்துள்ளார். இந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்கு உலக நாடுகளிலிருந்து பல பெரியார்கள் வந்திருந்தார்கள். அவர்களில் இந்தியப் பேராசிரியர் முனைவர் திரு. சாலை இளந்திரையன், திருமதி சாலினி இளந்திரையன் மற்றும் யாழ்ப்பாணப் பேராசிரியர்கள் என பிதா எஸ். தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் திரு. சு. வித்தியானந்தன், திரு. இரா. கனகரட்னம், திரு. எஸ். இரா சரட்னம் போன்றோர் யாழ். நகரில் ஒன்றுகூடி இந்தப் புகழ் வாய்ந்த அமைப்பினை ஆரம்பித்தார்கள். இதன் முதலாவது தலைவராக பேராசிரியர் திரு. சாலை இளந்திரையன் நியமிக்கப்பட்டார். பொதுச் செயலாளர் பொறுப்பு திரு. இரா. கனகரட்னம் அவர்களிடம் விடப்பட்டது. பேராசிரியர் சாலையார் அவர்கள் இந்தியாவிலிருந்து உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கப் பணிகள் செய்து வந்தார். திரு. இரா. கனகரட்னம் அவர்கள் இலங்கையிலிருந்து கொண்டு வெளி நாடுகள் சிலவற்றில் இருந்த தமிழ்ப் பெருமக்கள் சிலருடன் அஞ்சல் வழியாக தொடர்புறவை வளர்த்துப் பணியாற்றி வந்தார். அதே காலம், தென்னாப்பிரிக்கா திரு. என்.சி. நாடார், திரு. மு. அன்பன், லண்டன் திரு. கி. ஞானசூரியன், அந்தமான் திரு. சு.ப. சுப்பிரமணியன், பீஜி. திரு. கா. அப்பாப்பிள்ளை, இந்தோனேசியா திரு.எஸ். மாரிமுத்து, திரு. எம்.எஸ். ராமுலு, மலேசியா திரு. இர. ந. வீரப்பனார் போன்ற அறிஞர்களின் தொடர்புறவுகள் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்துக்கு கிடைத்து வந்தன.தலைவராகச் செயலாற்றி வந்த பேராசிரியர் திரு. சாலையார் இரண்டு ஆண்டுகள் செயற்பட்டார்.

1977ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளை தொடங்கி வைக்கப்பட்டது. இதில் ஆர்வமுள்ள இளையர்களாக பொன். பூலோகசிங்கம், ஆ. சண்முகலிங்கம், இ. சற்குருநாதன், செ. பரமநாதன், நா. பத்மநாதன் போன்றோர் இணைந்து கொண்டு துரிதமாகச் செயற்படலாயினர். அதே ஆண்டில் டிசம்பர் மாதத்தில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் உலக மாநாடு சென்னை மாநகரில் நடத்தப்பட பேராசிரியர் திரு. சாலையார், திரு. கனகரட்னம், திரு. இராம. ந. வீரப்பன் போன்றோர் சிறப்பாகச் செயற்பட்டுழைத்து வந்தனர். மாநாட்டின் பின்னர் மலேசியத் தமிழர் திரு. இராம. ந. வீரப்பன் அவர்கள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். திரு. இரா. கனகரட்னம் தொடர்ந்து பொதுச் செயலாளராக இருந்து வந்தார். பின்னர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பணிகள் இந்தியா, இலங்கை, மலைசியா ஆகிய தேசங்களில் நடந்து வந்தன. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின்

கொள்கை பரப்பும் ஏடாக "உலகத் தமிழர் குரல்" என்னும் சிறு ஏட்டினை திரு. இரா. கனகரட்னம் 1976ல் துவக்கி வெளியிட்டு வந்தார்.

திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்களின் ஒத்துழைப்புடன் 04 இதழ்கள் பிரசுரிக்கப்பட்டன. 1980ம் ஆண்டுவரை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பணிகளைச் செய்து வந்த திரு. இரா. கனகரட்னம் அவர்கள் அந்தப் பணிகளைக் கைவிட்டு ஒதுங்கிக் கொண்டார். இதனால் தலைவர் திரு. இர. ந. வீரப்பன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி திரு. ஆ. சண்முகலிங்கம் உலகத் தமிழர் குரல் ஏட்டின் ஆசிரியப் பணியை ஏற்று இன்று வரை உலகத் தமிழர் குரல் வெளியீட்டுப் பணியைச் செய்து வருகின்றார்.

இந்த அமைப்பின் இரண்டாவது உலக மகாநாடு 1980ல் மொறிசியஸ் நாட்டில் அமைந்தது. பின்னர் மொறிசியஸ் றீயூனியன், தென்னாப்பிரிக்கா, லண்டன், சிங்கப்பூர், பர்மா, அமெரிக்கா, மலேசியா ஆகிய நாடுகளில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் கிளைகள் தோற்றுவிக்கப்பட்டன. தலைவர் வீரப்பனார் இலங்கை, இந்தியா, பர்மா போன்ற நாடுகளுக்கு பயணங்கள் மேற்கொண்டு, கிளைகளின் செயற்பாடுகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்து வந்தார். 1985ஆம் ஆண்டில் சேலத்திலும் 1987ஆம் ஆண்டில் மலேசியாவிலும் நமது அமைப்பின் சர்வதேச மகாநாடுகள் நடத்தப்பட்டன. 1980க்குப் பின்னர் அமைப்பின் பொதுச் செயலாளர் பணிக்கு மலேசியாவைச் சேர்ந்த திரு. மு. மணிவெள்ளையன் நியமிக்கப்பட்டு 1997ஆம் ஆண்டு வரை செயலாற்றி வந்தார். 1992ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவிலும் 1996ஆம் ஆண்டு கனடாவிலும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் உலக மகாநாடுகள் இடம் பெற்றுள்ளன. எல்லா மகாநாட்டு நிகழ்வுகளுக்கும் உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் தமிழ் அறிஞர்கள் சென்று கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

### உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஆரம்பகால பிரமுகர்கள்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமானது சாதனைகள் படைக்கப் பாடுபட்டுப் பக்க பலமாக இருந்த பெரியார்கள் சிலராக இருந்தாலும் அவர்களின் பங்கும் பணியும் இன்றும் அமைப்பின் வளர்ச்சிக்குப்



பேருதவியாக விளங்கி நிற்கின்றன. அவர்களின் விபரம் பின்வருமாறு: திரு. இர.ந.வீரப்பன், திரு. மாசி அண்ணாமலை, திரு. ப.கு. சண்முகம், திரு. ஆ. சண்முகலிங்கம், திரு. பொன். பூலோகசிங்கம், திரு. இ. சற்குருநாதன், திரு. செ. பரமநாதன் (இலங்கை), திரு. வீரமதுரகவி, திரு. சோலை இருசன், திரு.எம்.ஏ. ரஹ்மான் (சென்னை), திரு. சுப. சுப்பிரமணியன் (அந்தமான்), திரு. மா. தங்கணமுத்து, திரு. ஆ. புஸ்பரதம் (மொரீசியஸ்), திரு. மு. அன்பன் (தென்னாப்பிரிக்கா), திரு. வீ. தேவகுமார் (ரியூனியன்), டாக்டர் திரு. எஸ். சிறீஸ்கந்தராசா (ஆஸ்திரேலியா), டாக்டர் திரு. எம். ராசநாதன் (நியூசிலாந்து), திரு. எஸ். மாரிமுத்து, திரு. எம்.எஸ். ராமுலு (இந்தோனேசியா), திரு. டி.எஸ். மணி, திரு. ரெ.மாரிமுத்து (பர்மா).

**வரலாற்றுச் சாதனைகள்**

தமிழ்ச் சமுதாயத்தின் உலகளாவிய பேரியக்கமாக கடந்து போன 25 ஆண்டுகளாக வளர்ந்து பயன் விளைத்து, புகழ்சுமந்து வரும் இந்த அமைப்பின் சாதனைச் செயற்பாடுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இவை தமிழின வரலாற்றில் இடம் பெற்று வருபவையாகும்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் 1974ல் யாழ்ப்பாணத்தில் உருவாகிய பின்னர் 1977ஆம் ஆண்டில் வரலாற்றுப் புகழ்மிக்க இதன் முதலாவது உலக மகாநாடு சென்னை மாநகரில் நடத்தப்பட்டது. இந்த மகாநாட்டில் பல நாடுகளைச் சேர்ந்த தமிழ்ப்பிரமுகர்கள் ஒன்றுகூடி புரிந்துணர்வை வளர்க்கும் நிலைமை தோன்றியது.

தொடர்பேதுமின்று வாழ்ந்து வரும் தமிழர்களிடையே தொடர்புறவும், நட்புறவும் துவங்குவதற்கு இந்த அமைப்பு காரணமாக அமைந்தது. தமிழர் வாழும் நாடுகளுக்கிடையில் அஞ்சல் வழித் தொடர்பும், சில போது நேரடிச் சந்திப்பும் தலைவர் மற்றும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பிரமுகர்கள் சிலரின் பன்னாட்டுப் பயணங்கள் ஆகியவையும், நூல்கள் சஞ்சிகைகள் பரிமாற்றங்கள் வாயிலாகவும் தமிழர் நட்புறவு வளரக்கூடிய குழலும் ஏது நிலையும் உண்டாயின.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இரண்டாவது உலக மகாநாடு மொரீசியஸ் நாட்டில் அரசின் ஒத்துழைப்புடன் அந்த நாட்டின் முதலாவது தமிழ் பெருவிழாவாகவும், முதலாவது தமிழ்ப் மகாநாடாகவும் நடந்து பெருமை கண்டது. இந்த மகாநாட்டைக் கௌரவித்த மொரீசியஸ் அரசு 20 சத முத்திரை யொன்றை வெளியிட்டது. அதில் தமிழ்ப் பண்பாட்டு மகாநாடு 1980 என்ற வாசகம் பொறிக்கப்பட்டது.

மொரீசியசில் நடந்த மகாநாடு அயல்நாடான ரியூனியனில் வாழ்ந்து வரும் 3 லட்சம் தமிழ் மக்களை விழிப்படையச் செய்துவிட்டது.

தமிழ்ச் சமுதாயத்துக்குச் சர்வதேசரீதியில் பணி செய்யக் கூடிய நல்ல சில தமிழ்ப் பெருமக்களை இந்த இயக்கம் இனங்கண்டு பயன்படுத்தும் நிலமை உருவானது.

சர்வதேச ரீதியில் பன்னாட்டு அறிஞர்கள், அறிவாளிகள் மகாநாட்டு மலர்களிலும், தலைமையக ஏடுகளிலும் கட்டுரை மற்றும் விஷயங்கள் வரைந்து வருகின்ற நிலைமை தோன்றியுள்ளது.

தமிழ் இலக்கியத்துறை, எழுத்துத் துறை வளர்ச்சி பெற உதவியாக இருந்து ஊக்கமளித்து வருகின்றது. தமிழ் இலக்கிய எழுத்தாளர்கள் சர்வதேசப் பிரபல்யம் பெறக்கூடிய சூழ்நிலை தோன்றியுள்ளது.

மகாநாட்டு மலர்களில் சிலபோது பிரஞ்சு மொழி மட்டும் அறிந்த தமிழர் படிக்க பிரஞ்சு மொழி விஷயங்கள் சேர்க்கப்பட்டன.

புதுச்சேரி கிளை ஆற்றிய பணிகளால் அமெரிக்கா, கரிபியன் தீவுகளில் வாழும் தமிழர்கள் மத்தியில் தொடர்புறவுகள் ஏற்பட்டுள்ளன. புதுச்சேரியும், மட்னிக்டொபாகோ தீவு நாடும் நட்புறவு நகரங்களாக பிரகடனப் படுத்தப்பட்டன. இதற்காகப் புதுச்சேரிக்கு மட்னித் தமிழ் நெஞ்சம் ரேனா வேலய்யா இருமுறை வந்து போயுள்ளார். புதுவையிலிருந்தும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் குழுவொன்று மட்னிக் சென்று வந்துள்ளது.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடையேயும் தற்காலத்தில் போரினால் புலம் பெயர்ந்து பல நாடுகளில் வாழ்ந்து வரும் ஈழத் தமிழர்கள் மத்தியிலும் பாலருக்கான தமிழ்க் கல்விப் போதனை முறையை ஆரம்பிக்கும் செயல்களுக்கு இந்த அமைப்பு ஊக்கமும்,


ஆக்கமும் கொடுத்து வருகின்றது. இதனால் தமிழ்க் கல்வி மொரீசியஸ், ரியூனியன், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் வெற்றிகரமாக வளர்ந்து வருகின்றது.

தலைவர் பேராசிரியர் வீரப்பனார் பல தடவை தமிழர் வாழும் நாடுகளுக்கு (இலங்கை உட்பட) பயணங்கள் மேற்கொண்டு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பணிகளுக்கு ஊக்கமளித்து வருகின்றார்.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து பாடசாலைகளில் தமிழ் மொழிப் போதனை சேர்க்கப்படுவதற்கு சம்பந்தப்பட்ட நாட்டுக் கிளைகளும் மற்றும் தமிழ்ச் சங்கங்களும் இணைந்து செயலாற்றியுள்ளன.

இந்த அமைப்பின் தலைமையாக ஏடுகளான *தமிழியம், தமிழ் மண், உலகத் தமிழர் குரல்* ஆகியவை முறையே மலேசியா, இந்தியா, இலங்கை (யாழ்ப்பாணம்) ஆகிய இடங்களில் வெளியிடப்பட்டு உலகளாவிய முறையில் தமிழ் தமிழ் இலக்கியப் பணிகள் மற்றும் தமிழ்ப் பணிகளை ஆற்றி வருகின்றன.

[redacted]



தமிழ்மொழி வரலாறு, பண்பாடு, தமிழர் வாழ்வியல் தொடர்பான ஆராய்ச்சிகள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பிரமுகர்களான அறிஞர்கள், ஆய்வாளர்கள் செய்து வருகின்றார்கள். இதற்காகச் சில போது உலகத் தமிழாராய்ச்சி மன்றத்துடன் இணைந்தும் செயற்பட்டு வருகின்றனர்.

இலங்கைக் கிளை இந்த இயக்கத்தின் தாய்க்கிளையாகச் செயற்பட்டு வருகின்றது. தலைமையகத்துடன் இணைந்து செயலாற்றி உலகத் தமிழர்களிடையே தொடர்புறவை வளர்த்து வருகின்றது.

ஈழத்திலிருந்து போரினாலும், போர் அனர்த்தங்களாலும் ஏதிலிகளாகப் புலம் பெயர்ந்த தமிழ்ப் பெருமக்கள் சிலர் மேலை நாடுகளில் இந்த அமைப்பில் இணைந்து முக்கியமான பொறுப்புகளைப் பகிர்ந்து முன்னேற்றப் பணிகளைச் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

இலங்கைக் கிளையின் வளர்ச்சிக்கும் பரப்புதல்களுக்கும் 20 ஆண்டுகளாகத் தன்னலங் கருதாத இயல்பில் தனியனாக நின்று கிளையின் பணிகளுக்கான பொருளாதாரச் சுமையைச் சுமந்து திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்கள் விளங்கி வருகின்றார். உலகத் தமிழர் குரல் ஏட்டினையும் மற்றும் வெளியீடுகளையும் செய்து வருகின்றார்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் பேராசிரியர் வீரப்பனார் அவர்கள் சர்வதேச ரீதியில் எல்லா நாட்டுக் கிளைகளுடனும் இடைவிடாது அஞ்சல் தொடர்பும் கொண்டு விளங்கி வருகின்றார். இந்தத் தமிழ் அமைப்பை 28 நாடுகளில் தலைவர் வேரூன்றி கால் ஊன்ற வைத்துள்ளார். இதற்காக 28 நாடுகளுக்குப் பயணங்கள் மேற்கொண்டிருக்கிறார்.

காலத்துக்குக் காலம் இலங்கை, இந்தியா, மலேசியா, ஜேர்மனி, பிரான்ஸ், கனடா நாடுகளில் உள்ள கிளையமைப்புகள், நூல்கள் வெளியீடுகள் செய்து தமிழ் இலக்கிய சமுதாயப் பணிகள் செய்து வருகின்றன.

●

# உலகத் தமிழர் எதிர்காலம்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் அனைத்திந்தியக் கிளைகளின் 22.12.1996ம் தேதிய ஒருங்கிணைப்புக் கூட்டம் பரிந்துரைத்து உலகத் தமிழர் எதிர்காலக் கருத்தரங்கில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள்.

1. இந்தியப் புயல்—மழை வெள்ளப் பேரிடர் நிதித் திட்டத்தை தேசிய ரீதியில், இந்திய அரசு அமைக்க வேண்டும். இதுவே ஆண்டாண்டு தோறும் ஏற்படும் பேரழிவுக்கு உடனடி பயன்படும்.

2. 'அமுதசுரபி' என்னும் வறுமை ஒழித்து ஏழைகளுக்கு உணவுதரும் தேசியத் திட்டத்தை, தமிழக அரசு பொங்கலில் தொடங்குமாறும், எல்லா சமய கோயில்களில் இதைக் கட்டாயப் படுத்தி அறநிலையத்துறை மூலம் செயல்படுத்து மாறும் இவ்வரசை வேண்டுகிறது.

3. ஓர் ஊழல் ஒழிப்புப் பேரவையை அமைத்து இது ஊழியரியக்கமாவதைச் சட்டமாக்கி செயல்படுத்துமாறு தமிழக அரசை வேண்டுவதுடன், இந்தியாவில் இருபதுலட்சம் அரச ஊழியர்களையும் இதில் அங்கம் வகிக்கப் பதிவு செய்யப்பட வேண்டும் என டில்லிக்குப் பரிந்துரைக்கலாம் என அதனைக் கோருகிறது.

4. பஞ்சமி என்ற தமிழக நிலவுரிமை பழங்குடித் தமிழர்க்குக் கட்டாயமாக வழங்கப் (பூதானம்)படவேண்டும். ஆதித்திராவிடரல்லாத பிற்படுத்தப்பட்டோருக்கும், பெரும்பாலும் நிலமற்றோர்க்கும் இக்காணியாட்சி தருதல். நிலமிழந்தோர்க்கு இது காப்புறுதியாகும்.

5. தமிழகக் கல்வித் திட்டத்தில், கட்டாயப் பாடங்களாக பண்பாட்டுக் கல்வி (திருக்குறள் உட்பட) சிலம்பம், ஓகம் முதலியவற்றைச் சேர்க்க வேண்டும். தேசிய சீருடை—காலணி அணிவதை 1997ல் செயல்படுத்தல்.

6. தமிழ் மொழி வளர்ச்சியில் கருத்தூன்றி இருக்கும் தமிழக அரசின் அமைச்சர்களும், சட்டமன்ற — நாடாளுமன்ற உறுப்பினர்களும் தத்தம் பெயர்களை நற்றமிழ் மொழியில் எழுதுமாறு, தமிழ்நாளேடுகளும் அதுபோல் செயல்படுமாறும், வேண்டப்படுகிறது. கலப்பில்லாமல் தமிழைக் கையாண்டு எங்கும், எதிலும், தமிழாக விழைகிறது.

7. மாண்புடைய மாநிலங்களாக, சமபங்கீட்டு உரிமைச் செயலாட்சியுடன் இந்தியப் பேராட்சியைத் திகழச் செய்ய, இக்கூட்டாட்சிச் சமத்துவத்தை இந்தியாவின் அரசியல் அமைப்புடன் மறுவாய்வு செய்யப்பட வேண்டும். என்றும், மூதறிஞரான சி. சுப்பிரமணியம் போன்றவர்கள் அதிபர்களாக ஆக்கப்பட வேண்டும் எனவும் விழைகின்றோம்.

8. குறைந்து வரும் அயலகத் தமிழர் உட்பட இந்திய வம்சாவழியினரின் சுற்றுலாவை பெரிய அளவில் ஈர்க்கத்தக்கப் பெருமுயற்சிகளை, தமிழகமும் இந்தியாவும், மற்ற நாடுகளைப் போல் (அயலுறவை) விரிவுபடுத்த வேண்டும். இதற்குத் தடைமுடையான (விசா—நுழைவாணை) சட்டத்தைத் தளர்த்தி அதிகளவு விளம்பரம் செய்யலாம். வாணிகம் முதலிய கூட்டுத் தொழிலில் முதலீடுகளை செலுத்தப் பயணப் பயன்களையும் செய்து தருவதுடன், சென்னையில் மிகப் பெரிய விடுதியை அமைக்கலாம்.

9. இலங்கையில் பல லட்சம் பேர் மனிதவுரிமைக்கு எதிராகவே நடத்தப் படுகிறார்கள். மண்—மானம்—வீடு — உடை— உணவு—உயிர் இழப்புகளால், சீரழியும் இப்பேரிடரிலிருந்து அவர்களை மீட்டுக் காப்பாற்ற, உடனடியாக இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இந்தியா இதில் அக்கறை செலுத்தத் தவறுமானால் வரலாற்றுப் பழி இதற்கு ஏற்படும் என உலகத் தமிழினம் இவ்வரசுகளைக் கனிவுடன் வேண்டுகிறது.

10. மலேசிய, சிங்கப்பூர் நாடுகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுக் கிடக்கும் ஐம்பதா யிரத்துக்கு மேற்பட்ட தமிழர் — இந்தியர்களை மீட்டுத் தாய்நாட்டுக்கு கொணருமாறு மாநில — மத்திய அரசுகளை விழைகிறது.

**-பாவலர் முல்லைவாணன்**

# மறைந்தும்

# மறையாத

# மாணிக்க ஒளி

பல்வகை தனிச்சிறப்புகளையும் தன்னகத்தே கொண்டது பெருமை வாய்ந்த பருத்தித் துறை நகரம். இலங்கையின் சிகரமாக அமைந்து பெருமை பெறுகின்றது. இங்கே புகழ்பூத்த சைவ ஆலயங்களும், வித்தியாசாலைகளும் மலிந்து, பொலிந்து, விளங்க அறிஞர்களும் பெருமக்களும், பெருந்துறை வணிகர்களும், பண்டிதர்களும், காலத்துக்கு காலம் உருவாகி பெருமை சேர்த்தார்கள். அதன் சிறப்போடு சேர்ந்ததுதான் வியாபாரி மூலையெனும் சிற்றூர். அச்சிற்றூரிலே இருந்து தன்னடக்கத்துடன் மக்கள் விடிவிற்காக தர்மம் புரிந்த தர்ம வீரர் இன்று நம்மிடையே இல்லை. யார் அந்த தியாக தீபம்? அவர்தான் விநாயக தரும நிதிய நிறுவனர் தேசாபிமானி ஆ.சி. முருகுப்பிள்ளை ஐயா அவர்கள்.

சாந்தமும், சன்மார்க்கமும் கொண்ட ஆன்மீகச் செல்வர் வருமானத்தை ஈட்டும் நோக்கில் மட்டும் இப்பெருந்தகை ஈடுபட வில்லை. சமுதாயப் பொறுப்புடன் மக்களுக்கு சேவையாற்றி நன்மை புரியும் நோக்குடன் தொழிலை தன் சுயமுயற்சியினால், கடும் உழைப்பினால் உருவாக்கினார். அப்பெருந்தகை தொடங்கிய தொழில் மலர்ச்சிபெற்று வெற்றி மணக்கும் வேளையிலும் அப்பெருமகனின் பணியும், அடக்கமும் மக்கள் மனதில் நிலைபெற்று என்றும் நிலைத்து வியக்கத் தக்க மாமனிதராக விளங்கினார்.

கல்விசாலைகள், அறக்கட்டளைகள், அநாதை இல்லங்கள் ஆகியன உருவாக அடக்கத்துடன் அரும்பாடுபட்டு அப்பணியில் எங்களை ஈடுபடச் செய்தார். இந்த வளர்ச்சியும் வளமும் என் உள்ளுணர்வை தூண்டின. அறச்சிந்தனையும் தெய்வ திருவருளும் பலப் பல நலந்தரும் பணிகளை ஆற்றிட தர்மகர்த்தா சபையினருக்கு நல்ல வாய்ப்புகளை வழங்கி பணிபுரிய வைத்தார். நன்னெறியும் நல்லறமும் கொண்டதோடு அமையாது சிறந்த நிர்வாகியாக இருந்து எமக்கு வழிகாட்டி சபையின் நடவடிக்கைகட்கு வழி நடத்தி பணிபுரிய வைத்தார்.

**—சிவ. ஆறுமுகசாமி, ஜே.பி**
**வி.த.நி. தலைவர்.**

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்- கனடா

மேற்புலத்து நாடுகளில் அதிகமான தமிழ் மக்கள் வாழுகின்ற நகரமாகிய ரொறொன்ரோ மாநகரில் 6வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டை நடத்த வேண்டுமென்ற ஆவலுடன் 1994ம் ஆண்டு முதற் பகுதியில் சில பேராளர்கள் முயற்சிகள் எடுத்தனர். அந்த முயற்சிகள் கைகூடாமல் மாநாடு நடைபெற மாட்டாது என்ற நிலை உருவாகியது. இதை உணர்ந்த திரு. சின்னத்தம்பி செல்லையா அவர்கள் தனது அயரா முயற்சியால் 1994 மார்ச் மாதம் 3ம் திகதி "வூபேண்" கல்லூரி மண்டபத்தில் கனடா வாழ் தமிழ் மக்களை அழைத்து பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டினார்.

அக்கூட்டத்தில் 6வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டை கனடாவில் நடத்த வேண்டுமா என மக்களின் அபிப்பிராயத்தை நாடி நின்றாடிர். இக்கூட்டத்தில் மாநாடு ரொறொன்ரோ மாநகரில் நடைபெற வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

வழக்குரைஞர் திரு.மனுவல் யேசுதாசன் அவர்களின் ஆலோசனைப்படி மாநாட்டுக் குழு ஒன்று நிறுவப்பட்டது. இக்குழுவின் ஆலோசனைப்படி இவ்வியக்கம் சட்ட வலுப்பெற்ற ஒரு அமைப்பாக உருவாக்கப்பட்டு கனடாவில் நிரந்தரமாக செயற்பட வேண்டும் என்ற செயற்குழுவின் தீர்மானப்படி ஒன்ராறியோ மாகாணச் சட்டங்களுக்கு அமைய பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக நிறுவப்பட்டது.

திட்டமிட்டபடி 6வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு உலகிலேயே பிரசித்தி பெற்ற ''ரொறொன்ரோ மெற்றோ கொன்வென்சன் சென்ரரில்" 1996ம் ஆண்டு ஆகஸ்து மாதம் 24ம் 25ம், 26ம் திகதிகளில் சிறப்பாக நடந்தேறியது.

மாநாட்டுடன் செயற்பாட்டை நிறுத்தி விடாமல் வருடாவருடம் கனடா கிளை நிகழ்ச்சிகள் நடத்திவருகிறது. 1977 ஆகஸ்து மாதம் "மத்தாப்பு" நிகழ்ச்சி மண்டபம் நிறைந்த மக்கள் முன்னிலையில் இடம் பெற்றது.

1998 செப்டம்பர் மாதம் திருக்குறள் மாநாடு நடைபெற்றது. மழலைப் பிரிவு, கீழ்ப் பிரிவு, நடுப்பிரிவு, மேற்பிரிவு ஆகிய பிரிவுகளுக்கான திருக்குறள் மனப்போட்டிகளில் 153 போட்டியாளர்கள் பங்கு பெற்றனர்.

முதல் தடவையாக ஆங்கில மொழியில் திருக்குறள் மாநாடு நடைபெற்றது கனடாவில்தான். இம் மாநாடு ரொறொன்ரோ மாநகர தொலைக்காட்சி நிலையங்களில் ஒளிப்பரப்பப் பட்டது குறிப்பிடத் தக்கது. 1998 நொவம்பர் வருடாந்திர மத்தாப்பு நிகழ்ச்சி இடம்பெற்றது. 1999 ஆகஸ்து திருக்குறள் மாநாட்டுக்கு முன்னோடியாக திருக்குறள் மனனப் போட்டிகள் நடைபெற்றன. இதில் 270 போட்டியாளர்கள் பங்கு பெற்றனர்.

6வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு சிறப்புடன் நடந்தேறவும், எம் இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும் தனது கடைசிக்கால வாழ்கையை அற்பணித்து அண்மையில் அமரத்துவமடைந்த திரு. அந்தோனிப்பிள்ளை சௌந்தரராஜன் அவர்களுக்கு கனடா கிளை நன்றியுடன் அஞ்சலி செலுத்துகிறது.

புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் மொழி அழியாது நிலைத்து நிற்க உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் — கனடா பல முயற்சிகளை எடுத்து வருகிறது.

செயற்குழு
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்,
கனடா.

# கனடா மொன்றியாலில் நடைபெற்ற 6வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு

கல்கிதாசன், குயுபெக்

அழகிய தமிழ் அனைத்துலகும் பரந்து கொடி போலப் படர்ந்து, நதிபோல ஓடி நாணாமல் கோணாமல் நல்ல தமிழ்ப் பண்பாடு பேண நயகரா வரை வந்து விட்டதே!

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் இன்று சாத்தியப்படுவதற்கு ஒரே ஒரு காரணம் என்னவென்றால் காலத்தால் அழியாத தமிழ் மொழியும் அதன் சீரிய பண்பாடும்தான் எனின் அது மிகையாகாது. தமிழ்ப்பண்பாடு உலகெங்கும் ஊர்வலம் போய் இன்று இந்த வட அமெரிக்க நாட்டுப் பண்பாட்டு விழுமியங்களுடன் இனையாமல் தனக்கெனத் தனியான இடத்தைப் பிடித்து ஓங்கிவளர்வதைக் காணத் தமிழின் சீரிளமைத் திறன் வியந்து பாராட்ட வேண்டியுள்ளது.

தமிழக, தமிழ் வல்லுநர்களைக் கனடாவுக்கு அழைத்து இம் மாநாட்டைச் சிறப்பிக்கப் பல வழிகளிலும் பாடுபட்ட கலாநிதி நிர்மலா சுரேஷ் அவர்கட்கு கனடாத் தமிழர்கள் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளனர்.

திரு. செல்லையா தலைமையில் நடந்த இம்மாபெரும் மாநாட்டு வேலைகளில் திரு. சபாநடேசன், திரு. யேசுதாசன், திரு. ராஜ்குமார், திரு. சௌந்தரராஜன், திரு. விக்கினேஸ்வரன், திரு. செல்வா, கவிஞர் கந்தவனம், புலவர் சிவானந்தம் (ஈழத்துச் சிவானந்தன்), கலாநிதி பாலசுந்தரம், திரு. செகராஜசேகரம், திரு. சிவநேசன், ஜனாப் ஹன்ஷீர், செல்வி சாந்தி, திருமதி. யேசுதாசன் முதலானோருடன் மொன்றியால் மாநகரைச் சேர்ந்த திரு. கனக்ஸ், திரு. சண்முகராஜா, திரு. சத்திய மூர்த்தி, திரு. குமரகுரு, திரு. வேலாயுதம், திரு, சிவானந்தம், திரு. திருலோகநாதன், திரு. முருகவேள், திரு. குகதாசன், கோன்வாள் குகனேந்திரன், திரு. லிங்கம் முதலானோரும் மிக்க விருப்புடன் மும்முரமாக ஈடுபட்டு உழைத்தனர்.

ஈழத் தமிழர்களின் ஓர் மாநாடு என்ற ஓர் நினைப்பு இங்கு வாழும் ஈழத்தமிழர்கள் மத்தியிலே நிலைபெற்று விடும் அளவிற்கு அவர்களே முற்றிலும் முன்னின்று இம்மாபெரும் மாநாட்டினை வெற்றியாக நடத்தி முடித்துள்ளனர். இருப்பினும் ஈழத்திலிருந்து இங்கு புலம் பெயர்ந்து வாழுகின்ற தமிழர்களைப் போலவே பிற தேசங்களிலிருந்து வந்து வாழும் தமிழர்கள் கூடுதலாக இருந்தும் அவர்களது ஒத்துழைப்பு குறைவாகவே கிடைத்தது.

உலகளாவிய ரீதியில் பண்பாடு காக்கும் ஓர் சாதனமாக மாறி உலகத்தின் பல்வேறு மூலைகளிலும் வாழுகின்ற மக்களையும் ஒன்றிணைக்கும் ஒரு பாலமாக விளங்குகின்றது இவ் இயக்கம்.

ரொரோன்டோவில் நடைபெற்ற மூன்று நாள் மாநாட்டைத் தொடர்ந்து மொன்றியால் மாநகரில் ஆகஸ்ட் 31ம் திகதியன்று உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 21வது ஆண்டு நிறைவு விழாவினை கியூபெக் கிளையினர்



மிகவும் உற்சாகத்துடன் செய்து முடித்தனர். இவர்களுக்கு வேண்டிய உதவிகளை வர்த்தகர்களும், விளையாட்டுக் கழக அங்கத்தவர்களும் புனர் வாழ்வுக் கழகத்தினரும், தனிப்பட்டோரும் செய்து கொடுத்தனர்.

வடஅமெரிக்காவின் பாரீஸ் என அழைக்கப்படும் பேரழகுப் பெருநகராம் மொன்றியால் மாநகரம் சென்றலோரன்ஸ் நதி தீரத்தில் அமைந்துள்ளது. பிரெஞ்சு மொழி பேசுகின்ற இம்மாநிலத்தில் இன்று தமிழ்த் தென்றல் வீசுகின்றது. அன்று விரல் விட்டே எண்ணக்கூடிய அளவில் தமிழர்களைக் காணமுடிந்தது. ஆனால் ஈழத்திலிருந்து வந்த புலம்பெயர்வு காரணமாக பன்னீராயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் இங்கு சுதந்திரப் பறவைகளாக எல்லாச் சௌகரியங்களுடனும் சந்தோசமாக வாழ்கின்றனர்.

இங்கு தமிழும், தமிழ்ப்பண்பாடும் வளர்ந்து கொண்டிருக்கிறது. தமிழ் ஈழம் தாயகம், தாய்மண், தமிழ் மண், இதையெல்லாம் மறந்து சொகுசாக டாம்பீக வாழ்க்கை வாழும் ஈழத் தமிழர்களையா அகதிகள் என்பது? இல்லை, கனடாவின் அதிதிகளே!

மொன்றியால் விழா தொய்வில்லாமல் மாலை 3.30 மணி தொடக்கம் நள்ளிரவு தாண்டியும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. திரு. எஸ்.பி. கனக்ஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின் நிகழ்ச்சிகளை பொன் சிவா வரதராஜன் தொகுத்து வழங்கினார். பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் மங்கள விளக்கேற்றியதும் செல்வி கீதா இராமகிருஷ்ணன் தமிழ் வாழ்த்தினைப் பாடினார். தொடர்ந்து வரவேற்புரையை திரு. சண்முகராஜா கூற திரு. எஸ்.பி. கனக்ஸ் தலைமையுரை நிகழ்த்தினார். உலகம் பூராவுமிருந்து கனடாவுக்கு வருகை தந்துள்ள தமிழ் அறிஞர்களையும், சினிமாக் கலைஞர்களையும் காண மொன்றியால் தமிழர் மிகவும் வாஞ்சையுடன் மண்டபம் நிறைந்து நின்றனர். இத்தகையதோர் மாபெரும் விழா இதற்கு முன்னர் நடைபெறவில்லை என்றே கூறலாம்.

மண்டப ஆரம்பப் பகுதி திலீபன் அரங்கமாக அமைக்கப்பட்டிருந்தது. சிவாஜி மகேந்திராவும், திருமதி தாரகா சற்குணபாலாவின் நாட்டிய ஸ்ருங்கா நடனப் பள்ளி மாணவி செல்வி ஜனற் இராசநாயகமும் இணைந்து அபிநயம் — நடனம் செய்தனர். திரு. மகேந்திராவுக்கு சிவாஜி போல அபிநயம் பிடித்து சிவாஜியின் ஏதாவது ஒரு பாடலுக்கு நடிப்பதே அவரது கடுமையான கலை வாழ்வு. அதற்காகப் பாராட்டுப் பத்திரங்களும், பொன்னாடையும் பெறுவது வழக்கம். மகா விசிறி செல்வி ஸ்ரீ ஸ்கந்தராஜா லக்சுமியும், செல்வி தயாபரன் தயாநிதியும் இணைந்து திருமதி வாசுகி வள்ளுவன் என்பவரது பயிற்சியில் நடனம் நடந்தது. செல்வி. ஆர்த்திகா பாலசந்திரசர்மா என்ற சிறுமியின் கண்கவர் நடனத்தால் சபை குதூகலிப்புக் கொண்டது. பெருங்கவிகோவுடன் கனேடியத் தமிழ்க் கவிஞர்கள் கவிதாராஜன் கந்தவனம், வீணை மைந்தன் ஆகியோரும் தம் திறமைக்கேற்கக் கவிபுனைந்து வாசித்தனர். திறமைக்கேற்ப பரிசுகளையும் பெற்றுக் கொண்டனர். வாழ்த்துரை வழங்கிய புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்களது கணீரென்ற தெளிந்த தீந்தமிழ்ப்பேச்சில் அதிக விடயங்கள் தமிழ் மக்களின் சிந்தனைக்கு விருந்தாகின.

இந்த வகையில் ஈழத்துச் சிவானந்தனை உலகத் தமிழினம் நன்கு பயன்படுத்திக் கொள்வது நன்மைதரும். அவர் ஓர் தமிழிலக்கிய மகாசமுத்திரம். அண்ணாமலை பெற்ற கன்னல் தமிழ்மலை!

இனி இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியரும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க 21வது ஆண்டு பூர்த்தி விழாவின் பிரதம விருந்தினருமான பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களது உரை நிகழ்ந்தது. கற்றவர்கள், மற்றவர்கள் மெய்சிலிர்க்க கன்னித் தமிழிலே

மிகவும் ஆழ்ந்த தமிழ்ப் பேச்சொன்று இக்கனடாவிலே நிகழும் என யாரும் எதிர்பார்த் திருக்கவில்லை. கனடா வாழ் தமிழ் மக்களுக்கு ஏற்ற பல புத்திமதிகளை அவர்மிகவும் நாசூக்காக எடுத்தியம்பினார். கனடாவில் சொகுசாக வாழுகின்ற நீங்களா அகதிகள்? இல்லை — வடபுல மரங்கள், தெருக்கள் ஓரம் வாடுகின்ற மக்களே உண்மையான அகதிகள்.

ஆயின் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களது தமிழ்ப்பண்பாட்டு விழுமியங்கள் பற்றிய பேச்சு ஒன்றே இவ்விழாவை இங்கு வாழும் மக்களைச் சிறப்படையச் செய்ததெனின் அது மிகையாகாது.

பேராசிரியர் கா, சிவத்தம்பி அவர்களது தமிழ் இலக்கியப் புலமைகாகவும், யதார்த்த சமுக நோக்கிற்காகவும், விமர்சனத் திறனுக்காகவும் நாடகத்துறை நெறிப்படுத்தலுக்காகவும், கல்வி அபிவிருத்திக் காற்றிய சேவைக்காகவும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் கியூபெக் கிளையின் தலைவர் திரு. எஸ்.பி. கனக்ஸ் அவர்கள் தமிழ்மக்களின் சார்பில் ஓர் பாராட்டுக் கேடயத்தை வழங்கிப் பொன்னாடையும் போர்த்திக் கௌரவித்தார்.

தொடர்ந்து கலைவாணரின் தமிழிசைகானம் கேட்டது. நல்ல சங்கீத ஞானமும், சன்மார்க்க சிந்தனையும், சலசலப்பான நீரோடையான சத்தமும்தான் நிச்சயம் கலைவாணரை இப்பெருநிலைக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். மிகவும் இனிய கீதங்கள். அத் துடன் நாட்டியப் பேரொளி திருமதி. ஜெயலட்சுமி ஈஸ்வர் அவர்களது நடனங்கள் அந்த நள்ளிரிவிலே துள்ளிப் பாய்ந்து வந்த வெள்ளி மானாட்டமாயிருந்தன.

இறுதி நிகழ்ச்சிதான் இன்னிசை நிகழ்ச்சி. தீபன் சக்கரவர்த்தி அவர்கள் மேடைக்கு வருகிறார். உடனே கடிகாரத்தைப் பார்த்து விட்டு எல்லோருக்கும் காலைவணக்கம் செய்கிறார். ஆமாம் நள்ளிரவைத்தாண்டும் வேளை. இருந்தாலும் திருச்சி லோகநாதனின் இசைப் புதல்வரல்லவா? இன்னிசை நிகழ்ந்தது. இனிதாகவே இருந்தது. வாராய் நீ வராய் மறுபடியும் கனடாவுக்கு வராய்... என்று பாடு கின்றனர். கனேடியத் தமிழர்கள். உ.த.இ.இயூபெக் கிளைக்குப் பொருளாராக இருக்கும் திரு.சத்தியமூர்த்தி அவர்கள் நன்றி நவின்றார்.

இப்படியான ஓர் இனிய விழாவை மொன்றியால் சரித்திரத்திலேயே தமிழ்மக்கள் கண்டு களித்திருக்க மாட்டார்கள். இவ்விழாவிலே நிறைவும் குறைவும் வழமையான விழாக்கள் போல இருந்திருக்கலாம். ஆனால் நிறைவுகளே நிறைய இருந்தன.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஏழு தீர்மானங்கள் வருமாறு:

1. கனடா நாட்டு ரொன்ரோா நகரில் நூலகம் தமிழ் வரலாற்று ஆவணங்கள் முதலாயின இடம் பெறும் வண்ணம் தமிழ்க் கலாச்சார மையம் ஒன்றை அரசு, பொதுமக்கள், வள்ளல்கள் உதவியுடன் அமைத்தல் வேண்டும்.

2. கனடா வாழ் தமிழ்ப் பிள்ளைகள் தமிழைக் கற்க உரியவற்றைச் செய்தல் வேண்டும்.

3. குரும்பசிட்டி கனகரத்தினம் வசம் இருக்கும் முதன்மையான ஆவணங்கள் ஒளிப்பதிவு செய்தல் வேண்டும்.

4. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தை யுனெஸ்கோ அங்கீகரித்துத் தமிழ்க்கலை முதலியவற்றை வளர்க்க ஆவன செய்தல் வேண்டும்.

5. உலகம் எங்கும், எட்டுக் கோடி தமிழர்கள் வாழுகிறார்கள். தனக்கென்று ஒரு தனிநாடு இல்லாமல் அவர்கள் அவதியுற்று வருகிறார்கள் . அவர்களுக்குப் பல்வேறு வகையில் உதவும்படியாக உரிய பிரதிநித்துவம் வழங்கும்படி ஐ.நா.வை வேண்டுதல் வேண்டும்.

6. இலங்கைத் தமிழீழப் பகுதியில் வாழும் தமிழர்கள் உணவு, உடை, உறைவிடம் முதலான அடிப்படை வசதிகளின்றி வெயிலிலும், மழையிலும் பேரவதிப்பட்டு வருகிறார்கள். அனைத்துலக மருத்துவம் முதலான உதவிகள் பாதிக்கப்பட்டோரைச் சென்று சேர்வதில்லை. ஐ.நா. இதனைக் கவனத்தில் கொண்டு, அவசர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்மாநாடு வேண்டுகிறது.

7. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள், ஒரு மனதாக தமிழீழத்தை ஆதரிக்கிறார்கள். தமிழீழத்தில் வாழும் தமிழர்க்குச் சுயாதீனமாகத் தங்கள் எதிர்காலத்தை, முடிவை வெளிப்படுத்துவதற்கான வசதிகளை ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்த வேண்டும் என்று இம்மாநாடு வேண்டுகிறது.

# புதுச்சேரியில் திருக்குறள் பல்கலைக் கழகம்

இந்தியாவில் ஒரு மலேசியத் தமிழர் திருக்குறள் கல்லூரி ஒன்றை, விடுதிகளுடன் அமைப்பது இதுவே முதல் தடவை.

புதுச்சேரி மாநிலத்தில், புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கு கிழக்கே கடற்கரைப் பகுதியில் இது அமைகிறது.

இருபது இலட்சம் உருவாயில் இதனைத் திட்டமிட்டு, ஐந்தாண்டு காலத்தில் கட்டிடங்கள் கட்டப்பட்டு கல்லூரி இயங்கும். தொடர்ந்து கட்டுமான வேலைகள் நடைபெறும்.

ஒன்பது பேர் கொண்ட அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் இயக்குநர் வாரியம், அய்வராயம், எண்மர்குழு, பேராசிரியர்கள் தேர்வு ஆகியவை படிப்படியாக அமையும்.

தமிழ் மறையாகத் திருக்குறளைக் கற்பதும் கற்பிப்பதும், குறளாயம், திருக்குறளின் பல்வேறு பகுப்பாய்வு செய்வதும் இதன் அடிப்படைத் திட்டங்கள். ஆய்வகங்கள் போன்ற ஏடுகளை வெளியிட்டுப் பரப்பும். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், அதன் கிளைகள், மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், தமிழ் இலக்கியக்கழகம் ஆகியன இதற்கு உறுதுணை வழங்கும்.

உலகம் எங்கிருந்தும் இதற்குப் பங்குகள் — நிதிகள் — நன்கொடைகள் திரட்டப்படும். முதலில் தமிழிலும், பிறகு படிப்படியாகத் திருக்குறளை மலாய், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் படிப்பிக்கப்படும்.

சீனம், ஜப்பான் போன்ற உலக மொழிகளிலும், குறளியப் பாடம் நடத்தியும், ஒப்பாய்வு செய்யும். இம்மொழிகளில் மொழியாக்கம் செய்யத்தக்க பேராசிரியர்களைத் திரட்டும்.

மாணவர் பயிலும் கல்லூரி அல்ல இது. இலவயமாக, உணவு உறைவிட வாய்ப்புரிமையில் ஆய்வாளர்கள் தங்கிப் பணியாற்றுவர். திருக்குறளை மும்மொழியில் (தமிழ் — ஆங்கிலம் — மலாய்) முதலில் வெளியிடும்.

உலக விருது — பட்டம் — பரிசு போன்ற திட்டங்களை வகுத்துத் தெளிவான அறிவியல் ஆய்வாகத் திருக்குறளைப் பரப்பச் செய்யும்.

இலாப நோக்கின்றிச் செயல்படும் இதனை அறக்கட்டளை நிருவகிக்கும். பதிவு செய்யப்பட்டு விட்ட இவ்வறக்கட்டளை இப்போது, இயங்கத் தொடங்கி விட்டது.

புதுமையும் புரட்சியுங்கொண்ட இக் குறிக்கோள், தனியார் மயமாக, எந்தக் கட்டுப்பாடுமின்றி இயங்கத்தக்கது. கட்டிடத்துக் கான மண்ணும் நிலமும் வாங்கப்பட்டு விட்டமை குறிப்பிடத்தக்கது.

மலேசியாவில் கடந்த தை மாதத்தில் (1996) நடைபெற்ற உலகத் தமிழ்மறை திருக்குறள் மாநாட்டுப் பிரகடனப்படி இது அமைகிறது.

தமிழகச் செல்வர்களும், வெளிநாட்டுத் தமிழர்களும் இதற்குக் கொடை வழங்கலாம் என பேராசிரியர் இர.ந. வீரப்பனார் விடுத்த வேண்டுகோளில் விழைகிறார். தொடர்பு கொள்வோர் இதற்கு எழுதலாம்

**– வீரப்பனார் அறக்கட்டளை**

**வாரியத் தலைவர், நிறுவனர், புதுச்சேரி.**



# குறள்நெறி நிகழ்வுகள்

நாம் தமிழர். நமது நெறி தமிழியம். நமது வேதம் திருக்குறள். இக் கோட்பாடுகளில் உணர்ந்து செயல்படுவதே நமக்கும் ஆக்கந் தரும். இவை நமது சான்றோர் நமக்கு எடுத்துக் கூறிய உண்மையாகும். தமிழியம் என்பது புதிய கண்டு பிடிப்பு அன்று! நம் பழந்தமிழர் கண்ட நெறியாகும். அவற்றைப் பேணுவது நமது மரபாகும்; கடமையுமாகும்.

நமது இயக்கத்தில் உறப்பினராகியுள்ள பலர் தம்தம் குடும்பங்களில் ஒவ்வொரு நாளும் காலை—மாலை வேளைகளில் திருக்குறள் ஓதி வருவது கண்டு பெருமிதங் கொள்கிறோம். திருக்குறள் ஓதி வருவது சிறந்த பயனை அளிக்கும். உடல் — உள்ளம் — உயிர் தூய்மை பெறும். காலையில் எழுந்ததும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஐந்து நிமிட நேரமாவது திருக்குறளை ஓதி விட்டுத்தான் பிற வேலைகளை நாம் கவனிக்க வேண்டும் என்பதை உறுதியுடன் பின்பற்றுங்கள்.

**தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் முன் நின்று நடத்தும் நிகழ்வுகள்**

*1. குழந்தைப் பிறப்புப் பெயர்ச்சூட்டு விழா — 30ஆம் நாள் விழா!*

*2. காதணி விழாவும் பிறந்த நாள் விழாவும்!*

*3. தமிழ் எழுத்து எண் அறிவிப்பு விழா!*

*4. திருமண விழா, மணமக்கள் ஓராண்டுத் திருமண நினைவு நாள் விழா! மணவுறுதிப்பாட்டு விழா!*

*5. தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் விழா!*

*6. புதுமனை புகுவிழா!*

*7. மூத்தோர் பொன் விழா — 60ஆம் அகவை நிறைவு !*

*8. திருக்குறள் நம் மறை — தமிழ்ப் பண்பாட்டுக் குடும்பக் கூட்டங்கள்!*

*9. நீத்தார் கடன் மற்றும் நினைவேந்தல் நாள்!*

*10. அமரர்களான பெற்றோர் நினைவு நாள்!*

*11. இல்லப் பெயர்சூட்டு விழா!*

மேற்காணும் நிகழ்வுகளை தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையில் நடத்திக் கொள்ள முன்கூட்டியே இசைவு பெற்றுக் கொள்ளுதல் நலம். செய்முறைப் பணிகளை பொதுச்செயலரிடம் நேரிடையாக விளக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

*பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*

*நெறிநின்றார் நீடுவாழ் வார் நம் மறை அதி : 1 குறள் : 6*

உண்மையை மறவாதே ... நேர்மையில் தவறாதே ... ஒழுக்கத்தை

ஒருபோதும் கைவிடாதே ... நல்ல வாழ்வு வாழ இதைவிட நல்ல வழியில்லை.

(கி.ஆ.பெ. விசுவநாதம்)

இவ்வண்ணம்
**மு. மணிவெள்ளையன்**
பொதுச் செயலர்

செருமனி பெர்லின் நகரில் 1993ல் நடைபெற்ற பன்னாட்டுதமிழுறவு மன்ற மாநாட்டிற்கு வந்திருந்த திரு. வீரப்பனார் அவர்களை வரவழைத்து, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தை செருமனியில் அறிமுகப்படுத்தினார் திரு. கேரி. கணேசலிங்கம். அதன்பின்னர் தான் தமிழீழத்தில் அமைக்கப்பட்ட இப்படியொரு இயக்கம் இருப்பதை தமிழீழ மக்களே அறிந்தார்கள். கணேசலிங்கம் அவர்கள் செருமனிக் கிளையின் தலைவராக அமர்ந்து இயக்கத்தை நடத்தி வந்த வேளையில், தமிழ்மணி புலவர் தேர்வை ஐரோப்பாவில் முதன்முறையாக 94ல் அறிமுகப்படுத்தினார். அதன் விளைவாக


நான் பொறுப்பேற்ற கடந்த நான்காண்டுகளில், ஐரோப்பிய நேரமின்மை வாழ்க்கைக்குள்ளும் விடாது முயன்று எமது கிளை பல சாதனைகளைப் புரிந்துள்ளது. 1996ம் ஆண்டு செருமனி இறைனி மாநகரில் உலகின் பல நாட்டு தமிழர்களும் கலந்து கொண்ட எழுச்சித் தமிழ் மாநாடு ஒன்றை நடத்தியது. அந்த மாநாட்டில் தான், தமிழீழ விடுதலைப் போரின் கால் நூற்றாண்டு கால வரலாற்றில், முதன் முறையாக தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழீழ மக்களின் பாதுகாவலர்கள், அவர்களது செயற்பாடுகள் சரியானவை, அதனால் உலகத் தமிழர்கள் அவர்களை ஏற்றுக் கொள்கிறார்கள் என்ற தீர்மானம் கையொப்பச் சான்றோடு

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் - செருமனி

இயக்கம் ஐரோப்பாவெங்கும் அறியப்பட்டு செல்வாக்குப் பெற்றது. அந்த நிலையைப் பயன்படுத்திக்கொண்ட கணேசலிங்கம் அவர்கள் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் கிளைகளை அமைத்து ஐரோப்பிய ஒன்றியம் ஒன்றை உருவாக்கி வலுப்படுத்தி அதன் அமைப்பாளராகப் பொறுப்பேற்று, இயக்கத்தைப் புலம் பெயர்ந்த மக்கள் மத்தியில் நிலைப்படுத்தினார். இதன் காரணமாக இயக்கம் உலகம் முழுவதும் வலுவும் வளமும்பெற்றது. இந்த இயக்க வளர்ச்சிக்கு கணேசலிங்கம் அவர்களின் அரும்பாடு ஒன்றுதான் காரணம். 1996ல் கனடாவில் நடைபெற்ற இயக்கத்தின் ஆறாவது மாநாட்டில் அவர் அனைத்துலகச் செயலாளர் நாயகமாகத் தெரிவானார். அதன்பின் அனைத்துப் பதவிகளையும் தன் கையகம் வைத்திருக்கக் கூடாது என்ற பேருணர்வினால், செருமன் கிளைத் தலைவர் பதவியைத் துறந்த என்னிடம் அப்பொறுப்பைக் கையளித்தார்.

பிரகடனப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து 1997ல் தமிழ் எழுச்சி விழாவும், தமிழ் மணி பட்டத் தேர்வில் தேர்வடைந்தவர்களுக்கான பட்டமளிப்பும் நடைபெற்றது. அதற்கு தமிழகத்திலிருந்து திராவிடர் கழகத்துப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்களும் முனைவர் இரா. சனார்த்தனமும், தாவரவியல் விஞ்ஞானி முனைவர் லலிதாகுமாரி சனார்த்தனமும் கலந்து சிறப்பித்தார்கள். அந்த விழாவில் செல்வி. ஈழச்செல்வி சனார்த்தனம் அதியற்புதமான எழுச்சி நடனம் ஒன்றை வழங்கினார். என்னுடைய ஆட்சிக் காலத்தில் ஆண்டுதோறும் தமிழ்மணி தேர்வினை எமது கிளையே பொறுப்பேற்று நடத்தி வருகின்றது. அதுமட்டுமல்லாமல், இத்தேர்வில் தோற்றும் தேர்வாளர்களுக்கு வேண்டிய வகுப்புகளும் இலவசமாக எம்மால் நடத்தப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றியப் பொறுப்பாளர் கணேசலிங்கம் அவர்களின் அமைப்பு முயற்சிகளுக்கு செருமனிக் கிளையே





மேலே : சொமனியில தமிழக அமைச்சா் தமிழ்க் குடிமகன்

கீழே : 1996 சொ்மனி எழுச்சி விழா

பக்கபலமாக நின்று, ஐரோப்பியச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு வருகிறது. இக்காலத்துள் இருதடவைகள் தலைமையகத் தமிழின் சார்பில், பாரிசு நகரில் அமைந்துள்ள யுனெசுக்கோ நிறுவனத்துடன் தமிழர்களுடைய உயர் கல்விச் செயற்பாடுகளும் அதற்கான உலக உதவிகளும் பற்றி இரு தடவை கலந்துரையாடல்களை மேற்கொண்டது.

சிறப்புச் செயலாக திருக்குறளை மையமாகக் கொண்ட குறள்மணி பட்டத் தேர்வொன்றை செருமனியை இயங்கும் தளமாகவைத்து ஐரோப்பா வெங்கும் அறிமுகப் படுத்தியுள்ளோம். அக்குறள்மணி நெறியின் எண்பேராயத்து முதல்வராக, தமிழக தமிழ்நலத்துறை அமைச்சர் மாண்புமிகு தமிழ்க் குடிமகன் அவர்கள் அமர்ந்துள்ளனர். அவ்வரிய பணிகளை செம்மையுறச் செய்வதற்கு என்னோடு தோள் கொடுத்து நின்ற துணைவர்கள் இரா. தனபாலசுந்தரம், தமிழருவி நயினை விசயன், நாச்சிமார் கோவிலடி இராசன், ஈழம் இராசகருணா, குறிப்பாக காப்பாளர் கனேசலிங்கம் ஆகியோராவர். அவர்களது அருந்துணையைப் போற்றுகின்றேன்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் — செருமனி — செயற்குழு

தலைவர்: தமிழ்மணி நா.சி. கமலநாதன், ஆசிரியர் *கமலம்* முத்திங்கள் ஆய்விதழ்

துணைத் தலைவர்: தமிழ்த்திரு த. செல்வராசா

செயலாளர்: இரா. தனபாலசுந்தரம் செருமனிய கணக்காளர்

இணைச் செயலர்: நயிநை விசயன், ஆசிரியர்: *தமிழருவி*

கலைச் செயலாளர்: வில்லிசைச் செம்மல் நாச்சிமார் கோவிலடி இராசன்

கலைத் துணைச் செயலாளர்: மலரும்மாலை சிவனேசன்

பொருளர்: தமிழ்மணி சி. இராசகருணா, ஆசிரியர் *ஈழம்*

வெல்க எமதியக்க அனைத்துநாட்டு ஏழாவது மாநாடு.

இவண்

**நா.சி. கமலநாதன், செருமனி.**

# சேலத்தில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு 3வது மாநாடு 1985

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் மூன்றாவது உலகத் தமிழ் பண்பாட்டு விழா சேலத்தில் நடந்தேறியது. டிசம்பர் திங்கள் 13, 14, 15ம் நாட்களில் நடைபெற்ற விழாவிற்கு முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமை தாங்கினார். இயக்கத்தின் தலைவர் இரா. ந. வீரப்பன் அவர்களின் பெரும் முயற்சியால் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல நாட்டுப் பேராளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

முத்தமிழ்க் காவலர் தலைமைதாங்க மாநாட்டினை டாக்டர். கோ. சூடாமணி வரவேற்புரை அளித்தார். மாநாட்டில் கலந்து கொண்ட பல நாட்டுப் பேராளர்களும் பின்காணும் தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

1. தமிழ்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அதனை சுமூகமாகத் தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கும், இலங்கையரசு ஈழ முன்னணி இருதரப்பினரும் ஏற்றுக் கொள்ளச் செய்ததற்கும், அகதிகளை ஆதரித்தும் பாடுபட்ட இந்திய நடுவண் அரசுக்கும், தமிழக அரசுக்கும், தமிழகம் மற்றும் பிற மாநில அரசியல் கட்சிகளுக்கும் இம்மாநாடு மனப்பூர்வமான நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

2. ஸ்ரீலங்கா அரசின் தமிழ் இனப் படுகொலையைக் கண்டனம் செய்து ஐ.நா. மன்றத்திலும் மனித உரிமை மன்றத்திலும் குரல் கொடுக்குமாறு இந்திய அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. இலங்கையுடனான எல்லாத் தொடர்புகளையும்

துண்டித்துக் கொள்ள வேண்டும் என்றும், மாநாடு இந்திய அரசை வற்புறுத்துகிறது.

3. தமிழீழ விடுதலைக்காக போராடிவரும் எல்லா ஈழப் போராளிகளுக்கும் மாநாடு நன்றி தெரிவிக்கிறது. ஆனால் இவற்றுள் ஒருமைப்பாடும் ஒரே தலைமைத்துவமும் வேண்டும் என மாநாடு அவற்றை வற்புறுத்துகிறது.

ஸ்ரீலங்கா அரசின் கொடுஞ்செயல்களை இம்மாநாடு வன்மையுடன் கண்டிக்கிறது.

5. தமிழீழ விடுதலைக்குரிய உண்மையான சான்றுகளை இந்திய அரசு உணர்ந்து இந்தியாவின் சமாதான நடவடிக்கைத் திட்டத்தை புறக்கணிக்கும் ஸ்ரீலங்காவின் கபட நாடகத்தை அரசியல் ரீதியாக, இந்தியா ஏற்றுக் கொள்ளக் கூடாது. அதை மாநாடு வேண்டுகிறது. நாடாளுமன்றமும் சட்ட மன்றங்களும் ஸ்ரீலங்காவைக் கண்டிக்க வேண்டும்.

6. இந்தியாவுக்கு விரட்டப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரையும் முழு உரிமையோடும் (குடியுரிமை—வாக்குரிமை), பாதுகாப்போடும் இலங்கையில் சென்று வாழ்வதற்குரிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு இந்திய அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

7. இலங்கையிலிருந்து இந்தியா திரும்பி உள்ள தோட்டத் தொழில்களில் ஈடுபாடுடைய இந்தியத் தமிழர்களை (ஸ்ரீமாவோ — லால்பகதூர் ஒப்பந்தப்படி) அந்தமான் நிக்கோபார் மற்றும் லட்சத்தீவுகளில் மறுகுடி ஏற்றம் செய்வதன் மூலமாக அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகத் தமிழக அரசு மேற்கொண்ட முயற்சியை விரைந்து நடைமுறைப்படுத்துமாறு இந்திய அரசை இம்மாநாடு வேண்டுகிறது.

8. நாடற்றவர்களாக (இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் சில நாடுகளில்) வாழும் லட்சக்கணக்கான இந்தியர்களுக்கு — தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குமாறு சம்பந்தப்பட்ட நாடுகளை இம் மாநாடு வேண்டுகிறது.

9. தமிழ்நாட்டில் வாழும் இந்திய வம்சாவளியினர்களுக்கு வழங்கப்பட்ட குடியுரிமை சிங்கப்பூர், மலேசியா, பர்மா, இலங்கை போன்ற நாடுகள் திடீரென மீட்டுக்கொள்வதும், சில நாடுகளுக்கு அகதிகளாகப் பிழைக்கப் போனவர்களும், சில நாடுகளில் நிலையாக வாழ்ந்தவர்களும் தங்களின் இனச்சிக்கலைத் தீர்த்துக் கொள்வதற்காக மேற்கொண்ட முயற்சிகளைப் பெரிது படுத்தி எடுத்துக் கொண்ட நாடுகடத்தல் போன்ற நடவக்கைகளை மறுபரிசீலனை செய்து அவர்களுக்கு வாழ்வு அளிக்குமாறு அந்தந்த நாடுகளை இம்மாநாடு பணிவுடன் வேண்டுன்றது.

10. பர்மா போன்ற நாடுகளில் இந்தியர்கள் தலைவரி கட்டி வாழும் நிலை உள்ளது. இந்நிலையை மறு பரிசீலனை செய்து மேற்கண்ட மக்களுக்கு மனித உரிமைகளை வழங்குமாறு சம்பந்தப்பட்ட நாடுகளை இந்த மாநாடு வேண்டுகிறது. இந்திய அரசு மீண்டும் அரசியல் ரீதியிலும் பிற வகைகளிலும் முயற்சிகளை மேற்கொள்ளுமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

11. இந்தியாவில் பொருளியல் மேம்பாட்டிற்குப் பெரிய வாய்ப்பாக அமையும் என்பதால் சேது சமுத்திரத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுமாறு இந்திய அரசாங்கத்தை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

12. முழு சுதந்திர நாடுகளாகப் பிரகடனம் செய்க

பிரஞ்சுப் பேரரசு ஆட்சிப் பிடியிலிருந்து அதன் காலணிகள் முழு அரசுரிமை பெற வேண்டும். பசிபிக் கடல்த் தீவுகள், கரிபியன்கடல் தீவுகள், இந்துமாக்கடல் தீவுகள் ஆகியவற்றில் வாழும் இந்திய வம்சாவளிகளான தமிழர்கள் கலப்புக் கலாசாரத்திலிருந்து, எந்தவகையான அடிமைத் தனத்திலிருந்தும் விடுதலை பெற வேண்டும். இத்தீவுகளில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ்க் கல்வியைப் படிப்பிக்க வேண்டும். பாரிசில் பிரஞ்சுத் தமிழுறவு மையம் ஒன்று அமைக்க வேண்டும். பாரிசில் தமிழ் வானொலி ஒலிப்பரப்பு நிறுவ வேண்டும். ரீயூனியன், நியூகலிடோனியன், தாதித்தி தொங்கா மற்றும் கரிபியன் தீவுகளுடன் இத் தொடர்புகளை உருவாக்க வேண்டும்.

13. ஐ.நா. விலும் அணிசாரா நாடுகள் பேரவையிலும் கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் அமைதி முதலிய சமாதான வளர்ச்சிப் படைகள் அமைக்க வேண்டும். இதனால்

இனவொழிப்புக் கொடூரங்களைத் தடுக்கலாம். பெரும்பான்மை மக்களைச் சிறுபான்மையோர் தம் படைபலத்தால் இனவழிப்பு செய்து வரும் நாடுகளுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். உலகப் பொருளகத்திடம் இத்தகைய நாடுகளுக்கு நிதி உதவி மற்றும் கடன் கொடுக்க மறுக்கச் செய்ய வேண்டும்.

*14. வரதட்சனைக் கொடுமை*

வரதட்சனைக் கொடுமையால் தமிழகமும், ஈழமும் படும் பண்பாட்டுப் பேரழிவுகளைத் தடுக்க தமிழக அரசும் இந்திய அரசும் எடுத்துவரும் திட்டங்களைப் பாராட்டுகிறோம். தமிழகத்தைப் போல் புலனாய்வுத் தண்டனைச் சட்டத்தைக் கொணர்ந்து பிற இந்திய மாநிலங்களும் இந்திய மத்திய அரசும் கட்டாய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*15. புதுவையில் அமைக்கப் பெற்றுள்ள மத்திய பல்கலைக் கழகம்*

புதுச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள மத்திய பல்கலைக் கழகத்தைப் பாராட்டுகிறது மாநாடு. இதில் புதுவை, அந்தமான் நிக்கோபர் தீவுகள் லட்சத் தீவுகளுடன் தமிழகம் தவிர பிற இந்திய மாநிலங்களின் தமிழ்க் கல்வித் துறைகளையும் இணைக்க வேண்டும். தமிழ்மொழியைக் கல்லூரிக் கல்வி வரை உயர்த்தி ஒருமுகப்படுத்துமாறு இம்மாநாடு இந்திய கல்வி அமைச்சைக் கோட்டுக் கொள்கிறது. தொடக்கப் பள்ளி முதல் கல்லூரி வரை (10ம் வகுப்பு வரை) தமிழைக் கட்டாய மொழியாக்குமாறு வேண்டுகிறது. அயல்நாடுகளான பிற தொலைதூரப் பகுதிகளில் வாழும் இந்திய வம்சாவளிகளின் தமிழ்க் கல்விக்கான ஒரு தொடர்புத்துறை மையமும் இப்பல்கலைக் கழகத்தில் அமைப்பது மிக அவசியம்.

*16. பிரஞ்சு — தமிழ் ஆய்வு மன்றம்*

இந்த ஆய்வுக்கழகம் மறுவாழ்வு பெற வேண்டும். இது பாரிசிலும் புதுச் சேரியிலும் திருத்தம் பெற்று பிரஞ்சு — தமிழ் ஆய்வகம் என்ற பெயரில் உருவாக்கம் பெற வேண்டும். 250 ஆண்டுகளுக்குள்ளான பிரஞ்சுக் காலனிகளில் குடிபுகுந்த தமிழர்களின் ஆக்கங்கள், வரலாறுகள் தகுதிவாய்ந்த பாடல்கள் போன்றவை வெளியிட வேண்டும். தமிழ் பிரஞ்சு, ஆங்கிலம் இந்தி மொழிகளில் இந்நூல் படைக்கப்பட வேண்டியது அவசியம். பிரஞ்சு மொழியில் படைக்கப்பட்டவற்றை (தமிழர்களால் எழுதப்பட்டவை) தமிழாக்கி வெளியிடும் கடமையும் இதற்குண்டு. பிரஞ்சுத் தமிழுறவு மையமாகவும் இது செயல் ஆற்ற வேண்டும்.

*17. அயலக நாடுகளுக்கு அஞ்சல்வழிப் பட்ட கல்வி*

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் அஞ்சல் வழிப் பட்டக் கல்வி (உலகத் தமிழ்ப் பணித் திட்டம்) யை இந்தியாவுக்கு வெளியே அயல்நாடுகளுக்கும் விரிவுப்படுத்துமாறு இந்தியப் பல்கலைக் கழகங்களின் மன்றத்தைக் கேட்கிறது இம்மாநாடு. குறிப்பாக இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு ஆகிய இன்னும் பல நாடுகளில் இத்தகைய திட்டம் தேவை என்பதை தமிழக அரசுக்கும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கும் மாநாடு மீண்டும் வேண்டுகோள் விடுகிறது. இதுபோல் சென்னை பல்கலைக் கழகமும் செய்ய வேண்டும்.

18. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக அயல் கல்வித்துறை அயலக நாடுகளில் தமிழர் குடிபெயர்ந்த வரலாற்றுடன், இன்றைய தமிழியக்கத் துறைகளையும் ஆராயத்தக்க ஆய்வகங்களையும் நிறுவி, அயலகத் தமிழ் ஆய்வாளர்களை நியமிக்குமாறும், தக்க ஏந்துகளை அமைக்குமாறும் வேண்டுகிறது. நிற்க, இராஜராஜ சோழன் ஆயிரம் ஆண்டு நினைவுப் பரிசுத் திட்டத்தில் தமிழகத்திற்கப்பால் எழுதப்பட்ட வெளிநாட்டு நூல்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என இம்மாநாடு தமிழக அரசு கல்வியமைச்சை வேண்டுகிறது.

19. தமிழ்நாட்டுப் பாடத் திட்டத்தில் பல்வேறு உலகநாடுகளில் வாழும் தமிழர்கள் தொடர்பான வரலாறு, பண்பாடு, வாழ்வுச் செய்திகளை இணைக்குமாறு இம்மாநாடு தமிழக அரசு கல்வித் துறையை வேண்டிக் கொள்கிறது.

20. தமிழ்நாட்டிலிருந்தும் (சென்னை) பிறபகுதிகளிலிருந்தும் வெளியாகி தமிழ்ப் பண்பாட்டைக் குலைக்கும் ஆபாச மஞ்சள் ஏடுகளைத் தடுத்து நிறுத்த உடனே நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அந்தந்த நாட்டு அரசுகளையும் தமிழக அரசையும், இந்திய அறிஞர் பெருமக்களையும் இம்மாநாடு வேண்டுகிறது.

21. சென்னைத் தொலைக்காட்சி நிலையத்திலிருந்து ஒளிபரப்பப்படும் தமிழ் நிகழ்ச்சிகளை தமிழகம் முழுதுக்கும் இலங்கை உட்பட அனைத்துப் பகுதிக்கும் விரிவு படுத்துமாறும் ஏற்ற மாற்றங்கள் செய்யுமாறும் இம்மாநாடு வேண்டுகிறது. சேலத்தை மையமாகக் கொண்டு இந்த ஒளிப்பரப்பு விரிவாக்கப்பட வேண்டும் என வேண்டுகிறது.

22. பொங்கல் திருநாளை தமிழர் திருநாளாக உலகம எங்கும் உள்ள தமிழர்களைக் கொண்டாடச் செய்யுமாறு உலகம் தமிழர்களைக் மாநாடு வேண்டுகிறது.

23. சிலம்பம், களரி, ஓகம் போன்ற பழந் தமிழர் விளையாட்டுக் கலைகளைப் பாடத்திட்டத்தில் சேர்க்குமாறும், இவற்றைக் கல்வி நிலையங்களில் கட்டாயக் கல்வியாக்குமாறும் தமிழக அரசை இம்மாநாடு வேண்டுகிறது.




சேலம் மாநாடு டிசம்பர் 13, 1985

மலேசியாப் பெண்கள் பிரதிநிதிகளுடன் செல்வி பொன்னி, செல்வி வெற்றிச்செல்வி, செல்வி ஆனந்தி, கு. நாகம்மையார்



# மொரீசியசில் கூடிய பேரவை

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பொதுப் பேரவை கடந்த 1989 ஆம் ஆண்டில் டிசம்பர் திங்கள் நான்காம் நாளன்று மொரீசியசில் மொகாவின் மகாத்மா காந்தி கல்லூரியில் உள்ள சுப்பிரமணிய பாரதியார் அரங்கில் நடைபெற்றது.

இந்தப் பொதுப் பேரவையில் கீழ்க்கண்ட நாடுகளிலிருந்து பேராளர்கள் வந்து கலந்து கொண்டனர். மொரீசியசு, மலேசியா, இந்தோனேசியா, தமிழ்நாடு, சிறீலங்கா, இரீயூனியன், சிங்கப்பூர், தென்ஆப்பிரிக்கா, யு.கே., பிரான்சு ஆகிய நாடுகளாகும்.

இந்தப் பொதுப் பேரவையில் ஒருமித்த உணர்வுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருவன.

1. சிறீலங்காவில் தங்களின் சொந்த நிலத்தில் விடுதலைக்காகப் போராட்டம் நடத்திக் கொண்டுவரும் தமிழர்களுக்கு இந்தப் பொதுப்பேரவை தனது முழுமையான ஆதரவினை உறுதிப்படுத்திக் கொள்கின்றது. சிறீலங்கா தமிழர்கள் தாங்கள் இழந்த மதிப்பும் மரபுரிமையும் மீண்டும் பெறுவதற்குரிய முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அவர்களின் நிலைமையைக் கண்டு இந்தப் பொதுப் பேரவை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

2. 'தொடர்பறற காரணங்களால அதிகார மீறுதல் அதன் தொடர்பாக மக்களுக்கு விளைவிக்கும் தொல்லைகளுக்காக இந்தப் பொதுப் பேரவை கவலை தெரிவித்துக் கொள்கிறது.

3. பல்வேறு நாடுகளுக்குச் சென்று குடியேறிய மதிப்புமிகு தமிழர்கள், தங்களின் கலை கலாச்சாரத்தையும், தாய்மொழியையும் உலகளவில் அங்கீகாரம் பெற வேண்டுமாய் இந்தப் பொதுப் பேரவை கருதுகிறது.

5. இந்தப் பொதுப் பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் :

அ. தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும் கல்லூரியிலும் தமிழ் மொழியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும்.

ஆ. இத் தீர்மானத்தை தமிழ்நாட்டில் உள்ள குறைந்தது தொடக்க நிலைப் பள்ளிகள் அளவிலாவது கட்டாயப் பாடமாக அமலாக்கத்திற்கு கொண்டுவருவதுடன் அதை உறுதிப் படுத்தவும் வேண்டும்.

கீழ்க்கண்டவற்றை ஆராய்ந்து நடைமுறைப் படுத்த வேண்டும்.

1. தமிழ் நாட்டில் உருவாக்கப்படுகின்ற பொருட்கள் அனைத்தும் விற்பனைக்காக விநியோகம் செய்யும் முன் அப்பொருட்களில் தமிழ் எழுத்துக்களால் பொறிக்கப்படல் வேண்டும்.

2. தொழில் அதிபர்கள், தங்களின் தொழிற்சாலைப் பணிகளுக்குத் தமிழ்ப் பட்டதாரிகளை வேலைக்கமர்த்திக் கொள்ளு மாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

3. அரசுப் பணிகளுக்கு தமிழ்ப் பட்டதாரி களை வேலைக்கமர்த்திக் கொள்ள வேண்டும்.

4. தமிழர்கள் வாழ்கின்ற எல்லா நாடுகளிலும் தமிழ் நாட்டு அரசு முறையான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

5. தமிழ்நாட்டு அரசு, தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளுக்குத் தனிக் குழுவை அனுப்ப அவர்களின் மொழியியல் கலையியல்பு நிலைமைகள் ஆகியவற்றை ஆராய்ந்து அறிக்கை ஒன்றைத் தயாரித்தளிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

6. தமிழ்நாட்டு அரசு, தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளில், அந்நாட்டு மொழிக் கொள்கை களைக் கூறுவதுடன் தமிழ்மொழி அதன் கலாசாரம் ஆகியவை உயர்வடைய ஆணை யிடல் வேண்டும்.

7. சிறீலங்காவில் உள்ள தமிழர்கள் தமக்கென தனிநாடு பெற்று வாழும் விருப்பத்தை நிறைவேற்றி மேற்கொண்டு அந்நாட்டில் இரத்தம் சிந்தும் நிலையினைப் போக்கிட ஐக்கிய நாட்டு நிறுவனம் உதவும் நடவடிக்கையின் மீ து அளவிட முடியாத நம்பிக்கையினை இப்பொதுப்பேரவை கொண்டுள்ளது.

தமிழக மக்கள் சுயமரியாதையுடனும் வளமான வாழ்வும் பெற்று வாழ இப் பொதுப் பேரவை தமிழக அரசுக்கும் தமிழக மக்களுக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கின்றது.

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நாடுகளின் பேராளர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளாத காரணத்தால், பேரவையில் கலந்து கொண்ட அவையினர் தங்களின் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டனர். தொடர்ந்து அவர்கள் இப்பொதுப் பேரவையில் ஆராய்ந்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்ற முடிவுகள் ஆகியவற்றை முழுமையாக ஏற்றுக் கொண்டனர்.

பேரவையில் கலந்து கொள்ளாத நாடுகள் : பீஜி, பாண்டிச்சேரி, ஆஸ்திரேலியா, ஜெர்மனி, சிசில்ஸ். ●

# சிட்னி மாநாட்டு சிறப்புகள்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

5வது மாநாட்டில் சிட்னியில் 5.10.92ல் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் ஒரு மனதாக எடுக்கப்பட்ட தீர்மான முடிவுகள்:

1. சிட்னியில் 5வது மாநாட்டை மிகச் சீரும் சிறப்புமாக நடத்திய மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழுவுக்கும், இதில் பாங்குடன் பங்கு பற்றிய தமிழ்க் கழகங்களுக்கும், உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத் தலைமையகம் நன்றி பாராட்டுகிறது.

2. பேராசிரியர் இ.ஜே. எலியேசர் (தலைவர், ஆத்திரேலிய தமிழ்க் கழகங்களின் பேரவை, மெல்பர்ன்) முன்மொழிந்து, டாக்டர் என். இராசலிங்கம் (நியூசிலாந்து தமிழர் கழகத் தலைவர், ஆக்லந்து) வழிமொழிந்த நான்கு தீர்மானங்களையும் கூட்டம் ஏற்கிறது.

3. 1994 மத்தியில் கனடா தொரண்டோவில் 6வது உலக மாநாட்டை நடத்த வேண்டும் என திரு. எட்வர்ட் நிழல் சந்திரா (செயலாளர் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம், கனடா) முன் மொழிவை மலேசியக் கிளை திரு.பி.கு. வேலு வழிமொழிந்தார்.

இதுபோல் 7வது மாநாட்டை 1996ல பீஜித்தீவில், தென்னிந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம் சார்பில் நடத்துவோம் என பீஜி பேராளர் டாக்டர் பொன்னுசாமி கவுண்டர் முன்மொழிய, நியூசிலாந்து கிளைப் பேராளர் எம்மார் பாலகணபதி வழிமொழிய ஏற்கப்பட்டது.

4. உலகெங்கிலுமிருந்து வெளிவரும் தமி ழேடுகளுக்குள் ஓர் இணைப்பும் இன பிணைப்பும் ஏற்படுத்தும் பொறுப்பாண்மையை ஏற்படுத்தி, இவற்றில் தமிழினத் தன்னுரிமைக்கும் தமிழியக கருப்பட்டுக்கும்

ஆதரவுடன் செயல்படும் தொடர்புறவுகளை இத்துடன் வலுவாக்குதல்.

5. பீஜியில் தமிழ்க் கல்வித் தொடரை எட்டாம் வகுப்புவரை நீடிக்குமாறு, பீஜி அரசாங்கத்தை இம்மாநாடு வேண்டுகிறது. பீஜியைவிட்டு வெளியேறக் கூடாது என அத் தமிழர்களை வேண்டிக் கொள்கிறது.

6. ஆஸ்திரேலியா — நியூசிலாந்து முதலிய பசிபிக் தீவுகளில் வாழும் பழங்குடி மாந்தர்களையும், இடப்பெயர்களில் வழங்கும் தமிழடி வேர்களை ஆராய்ந்தும், பழந்தமிழர் வரலாற்றுடன் ஒப்பிட்டாய்வு செய்யுமாறும் ஆய்வாளர்களை மாநாடு வேண்டுகிறது.

7. சிறுவர் தமிழ்க் கல்வியைத் தளருமுகமாக்குவதைப் போக்கி, தமிழகம் இந்திய அரசுகளைக் கனிவுடன் வேண்டிக் தமிழைக் கட்டாயம் பயிற்சி மொழியாக்கிப் பள்ளியில் சட்டதிட்டம் செய்வது உடனடி அவசியம் என மாநாடு உணர்கிறது.

8. கொச்சைத் தமிழ்ப் பேச்சு மொழிக்கு இலக்கண விளக்கம் வேண்டும் என்ற சில தமிழாசிரியர் ஓலங்களை இம்மாநாடு கண்டனம் செய்கிறது.

9. தலைமையகம் பரிந்துரைத்து வழங்கிய தீர்மானங்களையும், மாநாட்டு ஆய்வாளர்கள் பரிந்துரைத்தவற்றையும் இந்த அவை ஏற்கிறது. கிளைகள் அனுப்பிய பரிந்துரைகளையும் இப்பேரவைக் கூட்டம் ஏற்கிறது.

அ. தமிழீழம் மற்றும் தமிழகத்திலும், தமிழர் வாழ்வுரிமைகளை, அவற்றின் கோட்பாடுகளை இம்மாநாடு ஆதரிக்கிறது.

ஆ. எழுத்துத் திருத்தம் செய்து வருவதைக் கண்டனம் செய்வதுடன், இத்திட்டத்தை இக்கூட்டம் புறக்கணிக்கிறது.

இ. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இலங்கைக் கிளையின், தமிழீழப் போர் அமைதிப் பிரகடனத்தை மாநாடு ஒப்புக் கொள்கிறது. ஏதிலிகளாக்கப்பட்ட தமிழீழத்து மக்களின் உணவு, மருந்து, பாதுகாப்புக்கு உத்திரவாதம் வழங்கி, சர்வதேசரீதியில் இதற்கு மனிதவுரிமைகளைப் பெறுவது.

ஈ. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நியூசிலாந்து கிளையின் தமிழ் மொழிப் பாடத்திட்டமும், பாடநூலும் சரியான ஒருங்கிணைப்புடன் உருவாக்கித் தருதல் வேண்டும் என்றும், இதற்குத் தலைமையகமும் உதவ வேண்டும் என்பது முடிவு.

உ. தமிழர் தகவல் மய்யம் அல்லது உலகத் தமிழர் பண்பாட்டு நூலகத்தை தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் அமைக்கவும், இதற்கு ஊக்கமும் ஆக்கமும் தந்து ஒத்துழைத்தல் அவசியம். இது நூலகமாக மட்டுமல்லாமல், தமிழ் ஆவணக் காப்பகமாகவும் பாதுகாப்புடன் செயல்படுத்தப் பட வேண்டும்.

ஊ. உலகமெங்கும் ஒரே வகையான (அகவை 7—12) தமிழ் - மொழிப் பாடத் திட்டமும், (தொடக்கப்பள்ளி முதல்) பாடநூல்களும், உலகளாவிலான தமிழ்த் தேர்வும் ஆண்டுதோறும் நடத்தும் இவற்றை உருவாக்குதல்.

எ. உலகத் தமிழ்ப் பண்பாட்டு கிளைகளும், தலைமையகம் பொறுப்பாளரும், தலா ஓராண்டுக்கு இருபது பவுன் நன்கொடைக் (ஸ்டெர்லிங் பவுன்) கட்டணம் வழங்க வேண்டும் என்றும், எல்லா நாட்டுக் கிளைகள் சட்டப்படி பதிவு செய்யப்பட்டுவிட வேண்டும் எனவும், புதிய கிளைகளை அமைக்கவும், பழைய கிளைகளையும் தொடர்புக் குழுக்களையும் புதுப்பித்துவிட வேண்டும் என மாநாடு வேண்டுகிறது.

ஏ. யூனெசுகோவை, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தை அங்கீகரிக்குமாறும் இதன் சட்டதிட்டப் படியே உ.த.ப.இ. யை இதன் தலைமையகச் செயலவையை உருவாக்குமாறும் இம்மாநாடு வேண்டுகிறது. யூனெசுகோவும் யுனைட்டெட் நேஷனும் உலகெங்கும் தாய்மொழிக் கல்விக்கு வழி செய்யுமாறு, அந்தந்த அரசாங்கத்திற்குப் பரிந்துரைக்குமாறு வேண்டுகிறது. எந்தத் தேசிய அரசாங்க சார்பற்ற உலக நிறுவனமாக இதனையை (I.M.T.C.ம் கிளைகளும்) ஏற்குமாறு யூனெசுக்கோவை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

ஐ. தமிமீழ மக்கள் வாழ்வுரிமைகளுடன் ஈழத்தின் வடக்கு—கிழக்குப் பகுதிகளைப் பாதுகாத்து வரும் மாண்புள்ள மக்கள் நடவடிக்கைகளைப் பாராட்டுகிறது இம்மாநாடு.

ஒ. உலகத் தமிழர் குரல் ஏடு, தமிழியம் ஏடுகளை இலவசமாகப் பதிப்பிட்டு உலகெங்கும் அனுப்புவதை மாநாடு பாராட்டுகிறது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க நோக்கமும், திட்டங்களும், யாப்பும் இது.

1974ல் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது, நோக்கமும் திட்டமும், தமிழகத்தை மையமாக வைத்து அங்கிருந்து தமிழக அரசின் உதவியுடன், உலகளாவிய அளவில் இயக்கத்தைப் பரவச் செய்து, உலகத் தமிழர்களை ஒன்றிணைத்தல். இதன் அடிப்படையில் யாப்பு அமைக்கப்பட்டது. ஆனால் தமி

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
# தென்மார்க் பிரகடனம்

ழக அரசின் ஒத்துழைப்புக் கிடைக்காத காரணத்தால் 1987ல் மலேசியாவில் நடந்த நாலாவது மாநாட்டில் யாப்புகள் திருத்தப் பெற்றன. சென்னை முதல் மாநாட்டுப் பேரவைத் தீர்மானமும், 1981ல் மதுரைப் பேரவைத் தீர்மகனமும், இந்தப் புதிய யாப்பும் ஏற்கப்பெற்றன.

அ. 1974ல் உருவாக்கப்பட்ட யாப்பும் திட்டமும் 1987ல் முடிவுற்று, புதிய யாப்பும் திட்டமும் உருவாக்கப்பட்டு பத்தாண்டுகளாகச் செயற்பட்டு வருகிறது.

ஆ. இந்தியாவிலும், இலங்கைத் தீவில் தமிழீழத்திற்கு வெளியே உள்ள எவருக்கும் தலைமைப் பதவியும், பொதுச் செயலாளர் பொறுப்பும் அளிப்பதில்லை. தலைமையகம் அகிலத் தலைவரின் நாட்டில் இயங்கும். இது நிரந்திர விதியாகும்.

இ. சனநாயக முறைப்படி 2 அல்லது 3 ஆண்டுக்கு ஒருமுறை தலைவர் தேர்ந்தெடுக்கப் படுகிறார். மற்றத் தலைமையகப் பதவிகள் நியமிக்கப்படுகின்றன. இது உலகப் பேரவையாகும். கிளையற்ற நாடுகளில் இருந்து உறுப்பினர்கள் அல்லாதாரும் கலந்து கொண்டு சிறப்புப் பொறுப்பை வகிக்கலாம்.

ஈ. கிளைகளும் தலைமையகமும், அந்தந்த நாடுகளில் அந்தந்த நாட்டுச் சட்டப்படி பதிவு செய்யப்பட வேண்டும். இது 1978 முதல் உள்ள திட்டமாகும்.

இவ்வாறு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் பதிவாகிய நாடுகள்.

1. புதுவை (இந்தியா) 1981
2. மலேசியா 1986
3. நியூசிலாந்து 1991
4. தஞ்சாவூர்... தமிழ்நாடு 1991
5. மொரீசியசு 1978
6. கனடா 1996
7. சுவிட்சர்லாந்து 1996
8. பிரான்சு 1997
9. செர்மனி 1997

தமிழருக்கென்று இறைமையுள்ள ஒரு தமிழரசு இல்லை. இதனால் அச்சமும் அவலமும் நிறைந்த சூழலால் தாய்க் கிளையான இலங்கைக் கிளை பதியப்படவில்லை. மிகப் பெரிய பாதிப்பு இது. பழம் புகழ் பெற்ற தமிழினமும் தமிழ் மொழியும் அடிமைப்பட்டுக் கிடக்கின்றன. இதனால் எமது இலட்சிய வெறி தமிழீழமும் தமிழகமும் தமிழரசுகளாக வேண்டும். இதை இயக்கம் நிரந்தரக் கொள்கையாகக் கொண்டிருக்கிறது.

யாப்பும் உபவிதிகளும் :

1. கட்டணம் — இது நாட்டுக்கு நாடு வேறுபடும் (1987 ன்படி) : உறுப்பினர் கட்டணம் ஆண்டுக்கு 5.00 பவுண். ஆயுள் உறுப்பினர் கட்டணம் 50.00 பவுண்.

2. மாற்றப்பட்ட புதிய கட்டணம் : உறுப்பினர் கட்டணம் ஆண்டுக்கு 10.00 பவுண். ஆயுள் உறுப்பினர் கட்டண் 100.00 பவுண்.

3. கட்டணப் பங்குரிமை

தலைமையகம், மண்டலம், கிளை இவை தலைக்கு மூன்றில் ஒன்றாகப் பகிர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

4. மண்டலம் இவ்வாறு வகுக்கப்படும்.

அ. ஐரோப்பிய ஒன்றியம்

ஆ. கனடா அமெரிக்க ஒன்றியம்

இ. இந்தியா, அந்தமான், இலங்கை ஒன்றியம்

ஈ. தென்கிழக்காசிய ஒன்றியம்

உ. தென்னாப்பிரிக்கா, இந்துசமுத்திரத் தீவுகள் ஒன்றியம்

ஊ. அரபு, மத்திய கிழக்கு நாடுகள் ஒன்றியம்.

எ. ஆத்திரேலியா, நியூசிலாந்து, பசுபிக் தீவுகள் ஒன்றியம்.

5. எமது இயக்கத்திற்கு நிரந்தர யாப்பு கிடையாது. அவசியத்தின் பேரில் எந்த யாப்பும் மாற்றப்படலாம். ஆனால் பேரவை அல்லது பேரவையின் முக்கிய பெரும்பான்மை உறுப்பினர்கள் கூடி ஆய்வு செய்தே மாற்றப் படலாம்.

6. வைப்புக் கணக்கும் சேமிப்பும் :

1. எல்லாக் கிளைகளும் வங்கிக் கணக்கு வைத்திருக்க வேண்டும்.

2. தலைமையகம் தனியே கணக்கு வைத்திருக்கும்.

3. உலகப் பொருளகம் அமைத்தல் உறுப்பியப் பட்டயம் :

**1998 முதல் ஆயுள் உறுப்பினர்க்கு உறுப்பியப் பட்டயம் வழங்கல் நடைமுறைப் படுத்தப்படும். உறுப்பியப் பட்டயம் பெற உரித்துடையோர் :**

1. ஏதாவது ஒரு நாட்டுக் கிளையில் சேர்ந்து ஆயுள் உறுப்பினர் கட்டணம் செலுத்திய உரிமை உள்ளவர்.

2. ஐந்து ஆண்டுகள் இயக்கத்திற்காக உழைத்தவர்.

3. திருக்குறள் தன் வாழ்வியல் நெறியாகக் கொண்டு ஒழுகுபவர்.

**திட்டங்கள்**

1. இந்த யாப்பின் உபவிதிகள் 7வது மாநாட்டில் அவசியம் ஏற்படின் திருத்தம் பெறலாம்.

2. யுனசுகோவில் அரசு சார்பற்ற உலக இயக்கம் எனப் பதிவு செய்து, அதனுடன் இணைந்து பாடுபடல்.

3. உலகத் தமிழாராய்ச்சி மன்றம் போல் நாம் வெள்ளிவிழாவிற்குப் பின் பொது மாநாடாக, நடாத்தாமல் யுனசுக்கோ உதவியுடன் இயக்கச் சார்பு மாநாடு நடத்த வேண்டும்.

4. உலகத் தமிழ் அமைப்புகளை இணைத்து, பேரவை உருவாக்கப் பாடுபடல்

5. உ.த.ப.இ. தலைமையக நிதியகம் ஒன்றை அமைத்தல். இதனை ஐரோப்பாவில் — சுவிசு நாட்டில் அமைக்கலாம். இதற்காக 1000 சுவிசுப் பிராங்க் திரட்டல்.

6. பயணப் பேராசிரியர் உலக வலம் வருதல். கரிபியன், கயானா, தென்னாப்பிரிக்கா, ரியூனியன், பிஜி, பசுபிக் தீவுகள், இந்தோனேசியா போன்ற தமிழ் ஒழிந்த நாடுகளில் இது நிகழ வேண்டும். பாட்டு, இசை, பரதம், தமிழ்க் கல்வி ஒளிநாடகம் (சினிமா) கலைக்குழுக்கள் மூலம் தமிழை, தமிழ் நாகரீகத்தை மீட்டல். தமிழகத்துத் தனியார் அரசின் உதவியை இதற்குப் பெற முயலல்

7. 1998—2002 கால எல்லையில் ஒரு ஐந்தாண்டுத் திட்டம் அமைத்து உலகளாவிய பண்பாட்டுப் படையெடுப்பு நடத்துதல்

8. புதுச்சேரியில் அமைக்கப்பட்டு வரும் திருக்குறள் பல்கலைக் கழகத்தை இயக்கம் தத்து எடுத்து வளர்க்க வேண்டும். இதற்குப் பல இலக்கம் ரூபாய் நிதி திரட்டி உதவ வேண்டும்.

9. 1999 ல் சுவிசு நாட்டில் நடைபெறவுள்ள 7வது மாநாட்டை மூன்று அடிப்படையில் வகுத்துச் சிறப்புற நடத்துதல். கிளைகளின் தலைவர்கள் கட்டாயமாக வந்து பங்குபெற அவர்களுக்குப் பயணக் கட்டணம் வழங்கல் வேண்டும். மூன்றுநாள் மாநாடு பின்வருமாறு அமையும்.

1. முதல் நாள் வெள்ளிவிழா

2. பொது மாநாடு (எவரும் பங்கு பெறலாம்)

3. இயக்க மாநாடு (பேராளர்கள் பங்கு பெறுதல்)

மாநாட்டுக்குழு ஒரு இலக்கம் சுவிசுப் பிராங்க் நிதி திரட்ட வேண்டும். யுனசுக்கோ, பொதுநிதி, கட்டணம், விற்பனை, அரசுகள் நிதி மூலம் பெறலாம். பொது மகாநாடு, தமிழ், தமிழர் உலகப் புலம் பெயர்வு, அவற்றின் நிலை வாழ்வியம், குறளறம் போன்ற ஆய்வுகள் இடம் பெறும். இயக்க மாநாடு, கிளைகள் தலைமையகம் எவ்வாறு ஏன் இயங்குகிறது, அவற்றின் வரலாற்றுச் சாதனைகள், அடைந்த சோதனைகள், கடந்த கால, நிகழ்கால எதிர்கால நிலைகள் குறித்து நடாத்தப்படல் வேண்டும்.

10. ஏடுகள்—நூல்கள் வெளியீடு : தமிழ்மண் உலகத் தமிழர் குரல் போன்ற சிறு சிறு ஏடுகளில் திருக்குறளைப் பரப்பவும், விற்று நிதி சேர்க்கவும், ஆங்கிலத்தில் பெயர்க்கவும் தொண்டாற்றல் இதற்காகத் தக்கார் பலரை நியமித்தல்.

11. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க இந்திய ஒன்றியம் 250 பக்கத்திற்குக் குறையாமல் வெள்ளிவிழா மலர் வெளியிட வேண்டும்.

அம்மலரில் 25 ஆண்டுகாலச் சாதனைகள், பாடாற்றிய தலைவர்கள் பற்றிய குறிப்புகள், நிகழ்ச்சிப் படங்கள், தலைமையகப் பொறுப்பாளர்கள், விபரம், அரசுகள், தலைவர்களின் வாழ்த்துச் செய்திகள், முதலியன உள்ளடக்கப்பட்டு, உலக வரலாற்றுத் தமிழ்க் களஞ்சியமாகத் திகழ்தல் வேண்டும். அனைத்துலகிலும் இயக்கத்தின் சார்பாக, உலக நிறுவனங்களில் பார்வையாளர்களாகவும், பேராளர்களாகவும் உள்ளவர்கள் இடம்பெற வேண்டும்.

12. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஆவணக் களஞ்சியம் தொகுத்தல். மாநாட்டு நிகழ்வுப் படங்கள், வீடியோக்கள், விழா மலர்கள், இயக்க வரலாற்றுச் செய்தி ஏடுகள், 25 ஆண்டுகாலத் தலைவரின் வரலாற்றுக் குறிப்புகள், தலைமையகம் உட்படக் கிளைகளின் எழுத்தாலான ஆவணங்கள், இயக்க ஏடுகள் நூல்கள் இயக்க இயங்கலின் அனைத்துச் செய்திகளும் தொகுக்கப்படல் வேண்டும். நாடு தோறும் இதற்காக ஆவணக் காப்பகம் பதியப்பட வேண்டும். தலைமையகப் பொறுப்பாளர் ஒருவர் இதற்கு ஆண்டு ஒன்றுக்கு 100 டாலர் இலவச நிதியாகக் கட்டாயம் வழங்க வேண்டும். இதில் விடப்பட்ட திட்டங்களைத் தீர்மானங்களை பேரவையின் ஆய்வுக் கூட்டம் கலந்தாய்ந்து சேர்க்கலாம்.

### நோக்குகள்

தாய்க் கிளையான தமிழீழக்கிளை அங்கே நிகழும் அவலத்தால், அடிமைத்தனத்தால், இராணுவக் கொடுமைகளால் இயங்கவும், பதியவும் முடியாமல் இருக்கிறது. நமது இயக்கத்தின் தலைமைப் பணியும் செயலும் இறைமைப் பணியாகவே செயல்படுகின்றன. இயக்கத்திற்கு நிதியில்லை. கட்டாயமாகக் கட்டணங்களைத் திரட்டித் தருவதில்லை. பல நாடுகளில் கிளைகள் தொடர்புக் குழுக்களாகவே இயங்கி வருகின்றன. எந்தக் கிளையும் தலைமையகத்திற்கு நிதி வழங்குவதில்லை. மாபெரும் இழப்புகளையும் பிரச்சினைகளையும் வளர்த்துள்ள நாடுகளாக, தமிழர் புலம் பெயர்ந்தவை உள்ளன. கடந்த 300 ஆண்டுகளில் தமிழினம் தமிழ் தமிழ்ப் பண்பாடு முற்றிலும் இழிவடைந்துள்ளன. மீட்கப்பட முடியாமலுள்ள இந்த மக்களை மாற்றவே மாநாடுகளை வெவ்வேறு நாடுகளில் நடத்துகின்றோம். அதுவும் பொது மாநாடாக நடந்தன. வெள்ளிவிழா மாநாடு அப்படி நடவாமல் இயக்க மாநாடாக நடக்கும். ஆரிய—திராவிடக் கலாச்சாரங்கள் உலகத் தமிழினத்தின் ஒற்றுமைக்கு வெடி வைத்துள்ளன. அரசியலும் மதமும் கேடு விளைவிக்கின்றன.

தமிழொழிந்த நாடுகளில் தாய்மொழிக் கல்வியை மீட்கவோ, வளர்க்கவோ இந்திய அரசும், தமிழக அரசும் பாடுபடவோ, முயலவோ இல்லை. எம்.ஜி.ஆர். காலத்தில் சிறிது உதவி செய்யப்பட்டது. 1977 — 1980 மாநாடுகளில் சில அரசுகள் உதவி செய்தன. ஆறு மாநாடுகளிலும் இயக்கப் பேராளர்கள் பல நாடுகளைப் பிரதிபலிப்புச் செய்யவில்லை. தனிப்பட்டவர்களே அம்மாநாடுகளில் ஆய்வாளர்களானார்கள். தமிழகத்தில் தமிழ் கட்டாயக் கல்வி இல்லை. இதைச் சுட்டிக்காட்டிப் பல நாடுகள் தமிழ்க் கல்வியைப் புறக்கணித்துவிட்ட நிலை. தமிழகத்துத் திராவிட அரசுகளையும் டில்லி வடவர் அரசையும் தமிழர்கள் நம்ப முடியாது. 20 ஆண்டுகள் 36 நாடுகளில் தலைவர் வலம் வந்து, ஆய்வு செய்து, கண்டு—கேட்டு எழுதிய இரண்டு உலகத் தமிழர் நூல்களும், தென்னாப்பிரிக்காவில் 77 நாட்கள் போன்றவை உலகத் தமிழர் களஞ்சியமாகும். இச்சாதனைகள் தொடரப்பட வேண்டும். உலகத் தமிழர் வரலாற்றில் இது அரிய செயல். பழந்தமிழரும் அவர் தம் மொழியும் உலகில் பரவாத நாடில்லை; மொழியில்லை கலை இலக்கியம் இல்லை. புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் கடந்த இருபது ஆண்டுகளாக எங்கள் இயக்கத்தைப் புரிந்து கொண்டு, ஊக்கமூட்டி வளரச் செய்கின்ற சூழலில், நமது பொறுப்புக் கூடுகிறது. இதற்கு உரிய தொண்டர்கள் தேவை. திருக்குறளைத் தமிழர் நெறியாக உலகமெங்கும் பரப்புவதும், அதனை உலக மொழிகளில் படைப்பதும், படிக்கச் செய்வதும் நமது பெரும் பொறுப்பு. ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும் விடுதலைக்கான போரையும் இயக்கம் அங்கீகரிக்கிறது.

# ஏழுமாநாட்டுக் கருப் பொருள்கள்

*8*-1-1974ல் கொழும்பு விடுதியில் பத்து நாட்டுத் தமிழறிஞர்கள் கூடி தமிழுடன் உலகத் தமிழர்களை இணைத்து நட்புறவுடன் தமிழக-இந்திய தொடர்வை வளர்த்துப் போற்ற வேண்டும் என முடிவெடுத்து, பேராசிரியர் சாலை இளந்திரையன் தலைமையில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் அமைந்தது. உலகத் தமிழாராய்ச்சி மன்றம் சாதிக்க விரும்பாததையும், அதைப் போலவே சில அடிப்படையான சட்டதிட்டக் கொள்கையுடன் இயக்கம் அமைத்தனர்.

தமிழும், தமிழரும் பிரிக்க முடியாதது. பிரிந்து கிடக்கும் வேறுபாடுகளை அகற்றப் பாடுபடுவதும் இதன் நோக்கம். முந்நூறு ஆண்டுகளில் ஐரோப்பியரால் புலம் பெயர்ந்தோரிடையே உள்ள தடைமுடைகளைப் போக்கி நட்புறவுடன் ஈடுபாடு கொள்வதும், தமிழ்மொழிந்த சூழலை மாற்றுவதும் இதன் கோட்பாடாக ஆகியது. குரும்பசிட்டி இரா.கனகரத்தினத்தின் ஆர்வமும் திட்டமும் இதில் சேர்ந்தது. தமிழாசிரியரை அனுப்பி, தமிழுதவி தந்து, தாய்மொழி துறந்துவிட்ட நிலையைப் போக்க எண்ணினர்.

**திண்ணிய எண்ணமாக்கப்படவில்லை.**

*1. 1977*ல் முதல் மாநாடு சென்னையில் பழைய பண்பாட்டு மரபுகளை ஓங்கி உரைத்தது. இலங்கையில் தமிழர் எல்லாத் துறைகளிலும் தமது மரபுகளை ஏன், எப்படி



இழந்தது என ஆராய்ந்து மாநாடுஇது. தமிழீழம் உருவாவது அவசியம் என இம்மாநாடு உணர்ந்தும், தமிழகம் உணரவில்லை.

2. இரண்டாவது மாநாடு, 1980ல் மொரிசியசில் நடந்தது. உலகத் தமிழ்ப்பண்பாட்டு மாநாடு என, இயக்கத்தைப் புலப்படுத்தி அனைத்துலக மாநாடாக அரசாரதவுடன் இதனை பெரியார் தங்கணமுத்து நடத்தினார். அஞ்சல் தலையும், வானஞ்சல் கடிதமும் தமிழில் பொறித்த சாதனை இப்பெரியாரைச் சாரும்.

3. மூன்றாவது மாநாடு 1985ல் சேலத்தில் நடைபெறக் காரணமானவர் சங்கொலி சோலை இருசன். தமிழக அரசு இந்திய அரசு— உதவிகள் கிட்டவில்லை. மக்களின் கூட்டுறவுப் பலமே, இம்மாநாடு தமிழ்ப்பண்பாட்டுக் கலைகளுடன் பழந்தமிழ்-பழந்தமிழராய்வுகளை ஆய்ந்தது.

மொரிசியசு மாநாடு ஆங்கிலத்திலும் பன்மொழியாளர்களை இவ்வியக்கத்தின் பண்பாட்டுக் கொள்கையைப் பறைசாற்றி, அரசுதவியின்றி தமிழைப் புரக்க முடியாது என வலியுறுத்தியது. இந்தியாவிலும், தமிழகத்திலும் இலங்கையைப் போலக்கூட (தேசிய) ஆட்சிமொழியாகத் தமிழ் இல்லாதிருந்தது. இதனால் தமிழர் வாழும் நாடுகளில் தமிழ் கட்டாயமில்லை என்ற நிலை இன்னமும் நீடிக்கிறது.

4. நான்காவது மாநாடுதான், மலேசியக் கோலாலும்பூரில் 1987ல் நடந்தபோது, திட்டவட்டமான ஒரு கருப்பொருளை முன்வைத்து நடத்தியது."உலக முதன்மொழி தமிழே!" இதனடிப்படையில் ஆய்வுகள் சிறப்புடன் நடந்தன. ஆனால், 13ஆண்டாக இருந்த இயக்கத்தின் கோட்பாடும் அமைப்புத்திட்டமும், நிரந்தரவிதியும் மாற்றப்பட்டன. உலகளாவிய தமிழர் ஒருங்கிணைப்புக்கான மரபுவேர்களை ஆழமாக வேரூன்றச் செய்தது.

தொடர்புறவு அமைப்புகளும், கிளைகளும் அந்தந்த நாடுகளில் இதன் பெயராகப் பதிவு செய்து இயங்கவேண்டும். தலைமையகம் யுனெஸ்கோவில் பதிவாக்கப்பட வேண்டும் எனவும் முடிவெடுத்துச் செயல்பட்டனர். இப்படி பத்துநாடுகள் பதிவாகின. இருவேறு முனையில் அமைப்பும், நோக்கமும் சரியான திட்டமுடன் வினையாற்றும் முயற்சியில் வென்றது. தாய்மொழித் தமிழ்க்கல்வியே வேரும் தூரும் என்று மெய்ப்பித்தது மாநாடும், இயக்கமும்.

5. ஐந்தாவது மாநாடு 1992ல் ஆத்திரேலியா சிட்னியில் புலம்பெயர்ந்த தமிழீழத்தாரால் நடத்தப்பட்டது. இதற்கு மூலக் காரணமாக இருந்தவர் பேராசிரியர் ஸ்ரீஸ்கந்தராசா. இவரது உறுதுணையான பெரும் முயற்சியே, தென்துருவத் தமிழர்களை இணைக்க முடிந்தது. இதில் வடக்கும் தெற்குமட்டுமல்ல, கிழக்கு மேற்கு நாட்டுத் தமிழரும் கைகொடுத்து உரிமை எழுச்சி பெற்றனர். பதினைந்துக்கு மேற்பட்ட நாடுகள் பங்கெடுத்தன.

6. ஆறாவது கனடா — துரந்தோ மாநாடு பழந்தமிழர் மரபுகளையும் இலக்கியம் முதலிய பண்பாட்டுச் செறிவுகளையும் வெளிப்படுத்தி தமிழை உயர்த்திக் காட்டியது. இம்மாநாட்டைச் சிறப்புடன் நடத்தி வென்றவர் திரு. சி. செல்லையா என்ற மூதறிஞர். இம்மாநாடு நடத்துவதற்கான பல்லாண்டு முயற்சியை அங்கு செய்து இயக்கத்தை வேரூன்றியவர் ஈழத்துப் பூராடனார். பல முரண்பாடுகளையும் இம்மாநாடு களைய முயற்சித்தது.

முதலிரண்டு மாநாடுகளுக்கு தமிழக அரசு உதவிகள் பெரியளவில் இருந்தன. அமரர் முதல்வரான ம.கோ. இராமச்சந்திரனார் அருளிய ஒத்துழைப்பு இயக்கத்தின் வேர்க் கொள்கைக்கு ஊன்று கோலாக இருந்ததைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். மொரிசியசுக்கு தமிழக அரசு அமைச்சர் குழுவும், பேராசிரியர் குழுவுடனும் கலைக்குழுவுடனும் சென்று சிறப்பு செய்தனர்.

7. ஏழாவது மாநாடு மீண்டும் மூன்றாவது முறையாக இந்தியாவில் அதுவும் சென்னையில் நடப்பதும் இது இயக்க 25 ஆண்டு வரலாறு குறித்த வெள்ளிவிழாவாக அமைவதும் சிறப்புடன் குறிக்கத் தக்கன. மூன்று நாளில் இதன் வரலாற்றுப் பாதையைத் திரும்பிப் பார்ப்பதும், திருத்திக் கொள்வதுமான திட்டத்தை தீட்டும்.

21ம் நூற்றாண்டில் தமிழும் தமிழர்களும் என்பது மாநாட்டுக் கருப்பொருள் இது. 20ம் நூற்றாண்டில் இழந்தவை என்ன என்பதைக் கண்டுபிடிக்கும் ஆய்வரங்கமாகவும் திகழும்.

●

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
## பிரான்சு

செயற்குழு உறுப்பினர்களின் பெயர்கள்

1. திரு. அலன் ஆனந்தன் — தலைவர்
2. திரு. வீ. தேவகுமாரன் — இணைத் தலைவர்
3. திரு. கன்னிய சீலன் வல்மி — செயலாளர்
4. திருமதி. ஆனந்தன் பானுமதி — பொருளாளர்
5. திரு. சண்முகசுந்தரம் — செயற்குழு உறுப்பினர்
6. திரு. தாமஸ் பிரபு — செயற்குழு உறுப்பினர்
7. திரு. ஞானசேகரன் வல்மி — செயற்குழு உறுப்பினர்

பிரான்சு கிளையானது 1997 ஆம் ஆண்டில் அரசில் பதியப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையேனும் 20 உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு, தமிழ்ப்பண்பாட்டை ஐரோப்பிய மக்களும் அறியும் வகையில் செயல்படுகிறது

தமிழகத்திலிருந்து பாரீசு வருகின்ற தமிழ் அறிஞர்களையும் தலைவர்களையும் சந்தித்து இங்குள்ளவர்களின் நிலை, தமிழ் உணர்வுடன் கூட்டு செயல்பாடுகளை விளக்குகிறார். இங்கு வாழும் ஈழத் தமிழர்களின் பெரும்பாலான நிகழ்ச்சிகளிலும் கலந்து சிறப்பிக்கின்றார்.

பிரான்சு கிளையானது 2000ல் சிறப்பு மாநாடு ஏற்பாடு செய்யும்.

தமிழர்களின் ஒற்றுமையும் — வளர்ச்சியும் மேன்மையுற திரு. அலன் ஆனந்தன் இந்நாட்டில் Dugny நகரமன்ற உறுப்பினர்.

### பிரான்சு நாடு

மனித நேயம் என்றால் இந்நாட்டு மக்களிடம்தான் மிகுதியாகக் காணலாம். பலவிதமான அரசியல் நோக்கங்களால் பிளவு பட்டாலும் பிறருக்கு உதவ வேண்டும் என்கிற மனித உள்ளமே இது.

இந்தியர்களுக்கும், வேற்று நாட்டவர் களுக்கும் ஏன் ஐரோப்பியர்களுக்கும்கூட மொழிப் பிரச்சனையால் இந்நாட்டை நன்கு அறிந்து கொள்ள முடியாமலிருக்கிறது.

மொழி வளமோ, தமிழை விட வயது குறைந்ததெனினும் இந்நாட்டவர் மொழியை நேசிக்கின்றனர்.

மனித உரிமைகளை வேண்டி போராடிய மாமனிதர்கள் உதயமான நாடு. உதாரணமாக ரூசோ, வால்டேர், தான்தோன், மான் முலன் போன்றோர்கள்

செஞ்சிலுவைச் சங்கமானது இன, மொழி, நிற பாகுபாடின்றி ஏழைகளுக்கு—குறிப்பாக வேற்று நாட்டவர்க்கு, எல்லாவகையிலும் உதவி வருகின்றது.

உப்பு அதிகமாக போட்டு உணவு தயாரித்து நாக்கு சுவைப்பட உண்ணுகிற தமிழனுக்கே இன்னமும் சரியான முறையில் இன மொழியுணர்வு வரவில்லை. தாய்மொழிமீது பற்று கொணடு செயலாற்றும் இவர்கள் மொழி வெறியர்களில்லை; மொழியைத் தாய் போல் நேசிக்கிறார்கள். அவ்வளவே.

இந்நாட்டின் விடுதலைத் தலைவனாக போற்றி மதிக்கப்பட்ட டிகால் தன் இறுதிக்காலத்தில் மிகச் சிறிய கிராமத்தில் வாழ்ந்து மறைந்தார். டிகாலின் கல்லறை அவர் வாழ்ந்த கிராமத்தில் மிக மிக எளிய முறையில் இன்றளவும் உள்ளது.

ஒரு தொழிற்கூடத்தின் நிறுவனர், தலைவர்

தனது அலுவலகத்திற்குக் கொள்வினை செய்திருந்தார். அந்தப் பொருளைக் கொண்டு வந்தவர் நுழைவு அனுமதியுடன் உள்ளே தன் வாகனத்தோடு சென்றார். அந்நிறுவனத்தின் விதிமுறை உள்ளே செல்லுகையிலும், வெளியேறுகையிலும் உரிய அனுமதி ஒப்பம் வேண்டும். முன்னர் கூறப்பட்ட நிறுவனர், தலைவருடைய பொருள் கொண்டு செல்ல வாகன அனுமதி ஒப்பம் இருந்தது. வெளியில் செல்ல வாகன அனுமதியை வாகன ஓட்டுனர் கொடுக்க வில்லை. சோதனைக்கு பொறுப்பாளரோ வெளி அனுதியில்லாமல் வாகனத்தை வெளியே அனுமதிக்கவில்லை. ஓட்டுனர் — தலைவருக்குத் தான் கொண்டு சென்றேன் என்றார். சோதனையாளர் வெளியே அனுமதி மறுக்க ஓட்டுனர் அலுவலகம் திரும்பி நிலைமையை பல கோடி மதிப்புமிக்க நிறுவனர் தலைவரிடம் விளக்கியுள்ளார்.

தலைவர் நிறுவனர் தானே நடந்துவந்து மன்னிப்பு கோரி தவறுக்கு வருத்தம் கூறினார்.

சோதனையின் பொறுப்பாளர் நான்தான் தலைவர் நிறுவனர் இன்னமும் இருக்கிறார்.

முதல், இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் செர்மானிய போர்வீரர்கள் பிரான்சின் வடபகுதியில் பிரெஞ்சு மாதர்களை எச்சிலாக்கினர். போரில் கணவனை இழந்த பெண்களும் — மன உணர்வுகளுக்கு ஆளாக்கப்பட்டு மகவுகளை ஈன்றனர்.

இனக் கலவை முதல் உலகப் போரிலிருந்தே துவங்கிவிட்டது. காமத்தால் தன்னையிழந்தவர்களுக்கு உதயமானவர்களோ உரிய முறையில் குடும்பத்தைக் கொண்டு செல்ல இயலாமல் போயிற்று. நன்மையோ, தீமையோ 18 வயதானதுமே ஆணோ, பெண்ணோ அவர்களே எதிர்காலத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். திருமண வாழ்க்கை குறைந்து கொண்டு வருகின்றது. கூட்டு வாழ்க்கை இணைந்து வாழ்வது பிள்ளை பெற்றுக் கொள்ளுவது வேலையிலும சரி பணச் செலவிலும் சரி பங்கிட்டுக் கொண்டு வாழும் நவநாகரீக முறையில் இவர்களது வாழ்க்கை முறை உள்ளது.

தேர்தலில், மோதல், கொலை நிகழாத நாடு.

அகஅழகையும், அன்பையும், அறிவையும் மதிக்கத் தெரிந்த நாடு பிரான்சு.

—அலன் ஆனந்தன்.

[redacted]



ஜெனிவா ஐ.நா. மன்றத்துக்கு வெளியிலுள்ள உலக உருளை [redacted]

# ஐரோப்பிய ஒன்றியத் தமிழர்களே ஒன்றிணைவோம்!

*13—7—96ல் செருமணிய எழுச்சி மாநாட்டில் தலைமைச் சிறப்புரையில், உரையாற்றிய உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க அனைத்துலகத் தலைவர் பேராசிரியர் முனைவர் இர.ந. வீரப்பனார் அவர்களின் சுருக்கவுரை:*

"அகர முதல் எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு!"

என்று திருவள்ளுவர் பெருமான் 2027 ஆண்டுக்கு முன்பே அகரத் தமிழே ஆதியில் முதலில் தோன்றியது என்றார். மொழிகளுக் கெல்லாம் மூத்தது தமிழே என்றார். ஓர் லட்சம் ஆண்டுக்கு முன்பே தோன்றிய முதலினம் தமி ழினம். ஐம்பதாயிரம் ஆண்டுக்கு முன்பே தோன்றிய எமது தமிழ்மொழி. உலகத்தின் உருவாக்கம் போல் ஏழுகோளங்கள் தோன்றிய பிரபஞ்சத்தின் ஆதிமுதல்வனான பகலவனே ஞாயிறு. இதனால் பிரபஞ்சத்தில் உயிர்கள் தோன்றின.

"அண்டமும் பிண்டமும் கண்டவர் தமிழர்." இதனை உலகில் முதலில் தோற்றுவித்தவரும், உலகில் பரப்பியவரும் தமிழே முதன்மை பெற்றது. சைவத் தமிழ் பரப்பி இறைமையை உலகில் பரப்பித் தமிழறம் வளர்த்தனர். தமிழ் நீதியுடன், தமிழ்ப் பண்பாட்டைப் பரப்பியும், ஓம்பியும் வாழ்ந்த வாழ்வு நம்முடையது.

அறிவியல் மொழியான தமிழுடன் அகப்புற வாழ்க்கை நெறிகளை வகுத்தத் தமிழினம், நெறிகெட்டு தறிகெட்டுப் போனது ஏன்? எப்படி இந்த அவலம் ஏற்பட்டது? தொல்காப்பியம் வகுத்த வாழ்விலக்கணம் ஐயாயிரம் ஆண்டுக்கு முன் தோன்றி பண்பாடு போற்றினர்.

ஈராயிரம் ஆண்டுக்கு முன் தமிழகத்தில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம் தமிழரின் வரலாற்றுடன் தமிழ் நீதிகளைக் கூறியது! முத்தமிழான தொல்காப்பியம் திருக்குறள் — சிலப்பதிகாரம் மூன்றையும் கற்காத தமிழரும் பெருகினர். தமிழராட்சியும் அருகியது. ஈழமும், தமிழகமும் தமிழை வளர்த்தது சட்டமாக இல்லை! அறமாகப் போற்றாமல் வீழ்ந்து கிடந்தனர். குமரியிலிருந்து பிறந்து வளர்ந்து உலகம் முழுதும் பல்லாயிரமாண்டுக்கு முன் பரவிய தமிழன், தனது தாய்மொழி வேர்களை, ஆங்காங்கு பரப்பினான். தமிழரும் பரவிய உலக வரலாறுகள் மறைக்கப்பட்டன! மாற்றி எழுதப்பட்டன. பொய்களைப் பரப்பி, வடமொழி சொல்லும் வேதமும் ஐரோப்பியர்கள் வழி தமிழினத் துரோகிகள் பொய்மைப் பரப்பிப் பல உலகப் பல்கலைக் கழகங்கள் தமிழை விடுத்து வடமொழி போற்றிப் பரப்பிப் புகழ்ந்தார்கள்.

1962ல் உலகத் தமிழாராய்ச்சி மன்றம் டில்லியில் அமைத்தார்கள் தமிழறிஞர்கள் சிலர். இது தன்பாதை மாறியது! இதில் புல்லறிஞர் பலர் புகுந்தனர். தமிழுக்கு முந்தியது என வடமொழியைப் புகுத்தித் தமி ழறிஞர்களைப் புறக்கணித்தனர். இச்சங்கம் அரசியல்வாதிகளாலும், போலிப் பேராசிரியர்களாலும் தமிழரைப் பற்றிய வரலாற்று உண்மைகளை இதில் இணைக்க மறுத்து ஒறுத்தனர். இதன் உலக மாநாடு 1974ல் யாழ்பாணத்தில் நடந்தபோது, பத்து நாட்டுத் தமிழர்கள் அங்கே தனியாகக் கூடிப் பேசி, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் அமைத்து அதில் தமிழுடன் தமிழரை இணைத்துப் பிணைத்து தமிழ் மொழியை அதனுடன் ஒன்றிணைத்தனர். தமிழர் தாய் மொழி கற்று, அதன் வாழ்வியலை மறுக்காமல் மறக்காமல் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்னும் குறிக்கோளை உருவாக்கினர்.

இன்று இது, இப்படி வளர்ந்து 23 ஆண்டுகள் ஆகின்றன. உலகம் எங்கும் பத்து

நாட்டுக் கிளைகளாக இருபது — முப்பது நாடு ஆகியது. அகலமாகப் பரவி, ஆழமாக வேரூன்றியது. பல அறிஞர்கள் இதற்குப் பாடுபட்டு உழைத்தனர். பல்வேறு பேராசிரியர்களால் இது பன்னாடுகளில் பண்பட்ட மக்களை உருவாக்கி தமிழோடு வாழ்பவர்களாக ஆக்கியது!

ஐரோப்பியர் வருகையால் இந்தியாவிலும் இலங்கையிலும் இருநூறு ஆண்டாக, அவர்கள் பண்பாட்டைப் புண்படுத்திவிட்டனர். இவர்கள் உலகு எங்கும் தமிழர்களை ஐம்பது நாடுகளில் கொண்டுபோய் குடியமர்த்தினர். இப்படியாக பிரஞ்சுப் பகுதி 27 நாடுகளில் அறவே இன்னும் தமிழை மறந்து வாழ்கின்றனர். தாய்மொழியை இழந்து வீழ்ந்து கிடக்கின்றனர். ஈழத்திலும் இந்தியாவிலும் ஆளும் உரிமைகளையும் தமிழர் இழந்து போயினர். மலேசியா, சிங்கப்பூர் இருநாடுகளில் மட்டும் தமிழ் வாழ்கிறது! மற்ற நாடுகளில் தமிழ் அழிந்தது.

எது ஒரு மொழிக்கு வேர் என்பதை மறந்து பிரஞ்சுத் தமிழர் தாய்மொழிக் கல்வியான தமி ழ்ப் பள்ளிகளை ஒழித்தனர். அரசுகளே இதை அழிக்க, இந்த மூடஇனமே காரணமாகியது. கொடுமை இன்னும் நிலவுகிறது. 2ம் போர்க் காலத்துக்குப் பின் ஐம்பது ஆண்டாக கரிபியன் தீவுகளிலும், பசிபிக் தீவுகளிலும் ஆப்பிரிக்க— மொரீசியஸ் ரியூனியன், மடகாஸ்கரிலும் தாய்மொழி ஒழிக்கப்பட்டது. தென்னாப் பிரிக்கத் தமிழர் ஆங்கிலத் தமிழர் ஆயினர். இந்தோனேசியத் தமிழர் முப்பது ஆண்டில் மலாய்த் தமிழர் ஆகிவிட்டார்கள்.

தமிழ் நாட்டில் விடுதலை அரசு என்ற பெயரில் ஆளும் திராவிட அரசுகளும் தமி ழாட்சியைக் கொண்டு வரவில்லை. தமிழுக்கு முதன்மை தராத ஆட்சிகளே அவை. இந்திய அரசும் ஏமாற்றியது; திராவிட அரசுகள் தமி ழைக் கட்டாயக் கல்வியாக்கவில்லை. இலங்கையிலுள்ள தமிழுரிமையைக் கூட தமி ழகம் பேணாமல், தமிழகம் இந்தியைப் புரக்கிறது. ஈழம் மலேசியா என்ற இரு நாடுகளே தமிழ்ப் பயிரை வளர்க்கின்றன. தமிழகம் தன் ஆரம்பக் கல்வியைக் கூட ஆங்கிலத்தில் வளர்க்கிற கொடுமை உலகில் வேறு எந்த நாடுகளிலும் இல்லை. தமிழைப் போற்றாத தமி ழர் பெருகினார்கள். உலகின் பத்துகோடியில் பாதிப்பேர் தாய்மொழி கற்காதவர்கள். சாதிமதச் சதிகளால், போலிக்கலாச்சாரப் போதையில் மதிமயங்கி எது பண்பாடு, எது தமிழ்ப் பண்பாடு என அறிந்து தெளிவில்லாமல் கெட்டு விட்டனர். "கலாச்சாரம் என்ற புறக்கூத்து" தமிழ்ப் பண்பாட்டு வேர்களைக் கொண்டியங்க வில்லை. தமிழில்லாத கல்வி தமிழறம் போதிக்கவில்லை. கலை இலக்கியத் தமி ழறிவில்லாத கூட்டமாகியது. தமிழினம், இவ்வாறு தமது அடிப்படை உரிமை முதலிய கடமைகளை இழந்து போலிகளானார்கள். இனச் சிதைவும் மொழிச் சிதைவும் ஏற்பட்டக் குழப்படித் தமிழினம் கேடுகெட்டுவிட, போலித் தலைவர்கள் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் மாறிமாறிவந்து ஏமாற்றினார்கள். திராவிடனுக்கும், ஆரியனுக்கும், சிங்கள வனுக்கும், மலாயனுக்கும், விடுதலை வாங்கித் தந்துவிட்டு, விடுதலை பெற்ற நாடுகளில் அடிமைகளானார்கள். அடிமைத் தமிழினத்தை உலகம் எங்கும் விளைவித்தார்கள். இந்தக் கொத்தடிமையே எங்கும் பரவியது. இதனைக் களைய வேண்டும். எப்படி எங்கு இதனைச் சாதிப்பது என்ற கனவுகளை நினைவாக்கியது உ.த.ப. இயக்கமே என்பது உலக உண்மை! 1974ல் ஈழத்தில் அமைந்த இவ்வியக்கம் 1977ல் தன் முதல் மாநாட்டை சென்னையில் நடத்தி உலகளாவிய பேரியக்கமாகியது. 2வது மாநாட்டை 1980ல் மொரீசியஸ் நாட்டில் நடத்திற்று. 3வது மாநாட்டை 1985ல் தமிழ் நாட்டின் சேலத்தில் 20 நாட்டுப் பேராளருடன் 2000 பேருடன் கூடி 3 நாள் நடத்தியது. இதுபோல் 1987ல் நாலாவதாக மலேசியாவின் கோலாலும்பூரில் அனைத்துலகப் பேராளர் களுடன் கூடிச் சாதித்தது. 1992ல் தன் 5வது மாநாட்டை ஆத்திரேலியா சிட்னியில் நடத்தி, இதுவே உலகளாவிய தமிழின—தமிழ் மொழி மாநாடு எனப் பெயர் பெற்றது.

அடுத்த மாதம் 6வது மாநாடு கனடாவில் நடக்கிறது. உலகப் பேரியக்கமாகவும், கட்சி— அரசியல் — மதம் ஆகியவற்றில் சாராத— சேராத, தன்னாட்சியுடன் தன்னதிகாரத்துடன் நடத்தப்பட்டன இம்மாநாடுகள் எனப் பறை சாற்றுகிறோம்!

ஐரோப்பாவில் ஏழுகிளைகளின் இணைப்பு மாநாடே இது. ஐரோப்பிய ஒன்றியமே இதனை நடத்துகிறது. தமிழீழ எழுச்சி மாநாடு என 1977ல் பிரகடனம் செய்தாலும் இன்று இதனையே முழுக் கொள்கையாகப் பிரகடனம் செய்கிறது. நாங்கள், "தமிழர் பண்பாடு" எனப்

பலவாறாகப் பிரிந்து கிடக்கும், பிளவுபட்டுப் போய்விட்ட தமிழினக் கோளாறுகளைப் போற்ற முடியாது. தமிழரல்லாத தமிழரைக் காப்பாற்றுவது எங்கள் இலட்சியமல்ல தமிழொழிந்த தமிழர்களால் தமிழுக்குப் பயனில்லை. அவர்கள் வெறுந் தமிழர்களாக ஒதுங்கிப் பதுங்கி வாழ்வது அறமல்ல. உலகில் தாயை இழந்தவர்களின் பேராளராக நாம் இயக்கத்தைக் நடத்த முடியாது! தமிழுடன் தமிழர் வாழ்வே அமுதம்!

சொ்மணியில் நடந்த எழுச்சி மாநாட்டுத் தீர்மானங்கள்!

1. தமிழ்மணி புலவர் பட்டத் தேர்வை நடத்திவரும் உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க ஐரோப்பிய ஒன்றியத்தைப் பாராட்டுவதோடு — புலம்பெயர்ந்து வாழும் அனைத்துத் தமிழர்களும் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி தமிழில் உயர் கல்வி பெறுமாறு இம்மாநாடு அழைக்கிறது.

2. நீண்ட நாட்களாக இங்கு வாழும் தமிழீழத் தமிழர்களின் கல்வி கலாச்சார பண்பாட்டு வளர்ச்சிக்காக ஐரோப்பிய நாட்டரசுகள் உதவி வழங்க வேண்டுமென இம்மாநாடு பணிவுடன் வேண்டுகிறது.

3. ஆத்திரேலியாவில் 'கான்பரா' நகரில் நடைபெற்ற மாநாட்டில் அரிய சமநீதியைத் தீர்மானமாக நிறைவேற்றிய தமிழர் சம்மேளத்தை இம்மாநாடு கனிவுடன் பாராட்டுகிறது.

4. தமிழக முதல்வர் அவர்களை, தமிழன் தமிழீழத் தமிழர்களின் துயர் துடைக்க முடிந்தவரை முயலுமாறும், தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழீழ மீட்புப் படையாக அங்கீகரிக்குமாறும் இம்மாநாடு கோருகிறது.

5. இந்திய நடுவணரசை தமிழ்மக்கள் நியாயமான தமிழீழ தனிநாட்டுக் கோரிக்கையை அங்கீகரிக்குமாறும் இம்மாநாடு பணிவுடன் வேண்டுகிறது.

6. தமிழீழ விடுதலைப் புலிகள் என முத்திரை குத்தப்பட்டு தமிழகத்துச் சிறைகளில் சிறையிடப்பட்டுள்ள தமிழீழ அகதிகளை உடனடியாக விடுதலை செய்வதுடன் ஈழத் தீவினிலே சிங்களச் சிறைக்கூடங்களில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ள தமிழீழ இளைஞர்களையும் இளம்பெண்களையும் விடுதலைசெய்யுமாறு ஸ்ரீலங்கா அரசைக் கட்டாயப் படுத்துமாறு, தமிழக அரசை இம்மாநாடு வேண்டுகிறது.

7. தமிழீழச் சகோதரிகள் சீரழித்துக் கொல்லப்பட்டும், குழந்தைகள் முதல் முதியோர் வரை கழுத்தரியப்பட்டும் உலகம் காணாத காட்டுமிராண்டித் தனமாக அரச பயங்கரவாதம் சிங்கள அரசினால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டும், இன்றும் பதவிகளுக்காகவும், வயிற்றுப் பாட்டுக்காகவும் சிங்கள வெறியர்களுடன் கூடிக் குலாவும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் மற்றும் போராளர் குழுக்களையும் இனியாவது மனம் திருந்தி ஸ்ரீலங்கா இனவாதிகளிடம் இருந்து விலகிக் கொள்ளுமாறு இம்மாநாடு கட்டாயப் படுத்துகின்றது.

8. 19ஆம் நூற்றாண்டிலும் கூடத் தனி நாடாக இருந்த தமிழீழத்தைச் சிங்கள இராச்சியத்துடன் இணைத்தவர்கள் ஐரோப்பியர்கள். எனவே, இன்று எங்கள் மண்ணை மீட்டு எம்மினம் இறைமையுடன் வாழ முயல்வதை ஐரோப்பிய சமூகம் அங்கீகரித்தாக வேண்டும் என்று இம்மாநாடு எடுத்துரைகின்றது.

9. தன்னுரிமையுள்ள தனி நாடொன்று தமிழர்களுக்கு இன்மையால் தமிழர்கள் உலகமெங்கும் துன்புறுகிறார்கள். எனவே, ஐ.நா. மன்றில் உலகத் தமிழர் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படல் வேண்டுமென இம்மாநாடு ஐ.நா.மன்றை கோருகிறது.

10. தமிழீழ விடுதலைப் போரையும் அதனை நடத்திச் செல்லும் தமிழீழ விடுதலைப் போராளிகளையும் கொச்சைப் படுத்தும அனைத்துச் சக்திகளையும இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

11. தமிழீழ விடுதலைப் போரை சரியான இலக்கு நோக்கிய தடத்தில் நடத்திச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் தலைவர் வே. பிரபாகரன் அவர்களையும் அவர்களது செயற் பாடுகளையும் அனைத்துலகத் தமிழர்களின் ஒப்புதலோடு இம்மாநாடு அங்கீகரிக்கிறது.

12. தமிழீழமே தமிழர்களின் வாழ்வின் உயிர்ப்புக்கு ஆதாரம் என்றும் பீரகடனப் படுத்துமாறு இம்மாநாடு கோருகிறது.

●

# யுனெஸ்கோ - உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் இணைந்து செயற்பட முடிவு

உலகத் தமிழப் பண்பாட்டு இயக்கத்தினால் பாரிசிலுள்ள யுனெஸ்கோ அமைப்பு தலைமையகத்தில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையின் பின்னர் எடுக்கப்பட்ட நிழற்படமொன்று.

மேற்படி பேச்சுவார்த்தையில் யுனெஸ்கோ நிறுவனத் தலைவர் திரு. ராவ் செலிகனி அவர்களுடன் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பொதுச் செயலாளர் கே.ரீ. கணேசலிங்கம், துணைத் தலைவர் நா.சி. கமலநாதன், செயலாளர் அலன் ஆனந்தன், பிரான்ஸ் கிளை நிதிப் பொறுப்பாளர் இ. இராசகருணா, அமெரிக்கக் கிளை தலைவர் சுவாமி விஞ்ஞானந்தா, சுவிஸ் கிளைத் தலைவரும் இயக்க நிதிப் பொறுப்பாளருமான ம. மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமும யுனெஸ்கோ நிறுவனமும் இணைந்து செயற்பட இணக்கம் காணப்பட்டுள்ளதாக மேற்படி இயக்கப் பொதுச் செயலாளர் கே.ரீ. கணேசலிங்கம் அறிவித்துள்ளார். பாரிஸில் இரு தரப்பினருக்குமிடையே நடந்த சந்திப்பை ஈடுத்தே இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் தமிழ்மொழியை விஞ்ஞான முறைகளில் இலகுவாகப் புகட்டல், பண்டைத் தமிழ் இலக்கியங்களை உலக நலன்களுக்காகப் பயன்படுத்துதல், ஈழத் தமிழர்களும், உலக சிறுபான்மை இனங்களும் கலை; கலாசார வழியில்ஒன்றுபடவும், புரிந்துணர்வை வளர்க்கவும் பாடுபடல் ஆகிய இந்நோக்கங்களுக்காக ஐரோப்பாவில் நிரந்தர பணிமனை அமைத்து மனித நலன்களுக்காக யுனெஸ்கோவுடன் இணைந்து செயற்படல் குறித்து மேற்படி பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டது.

பேச்சுவார்த்தையின்போது இயக்கத்தின் 24 வருட செயற்பாட்டு ஆவணங்கள் யுனெஸ்கோ தலைவரிடம் கையளிக்கப்பட்டன. யுனெஸ்கோ அமைப்புக்கும் உலகத் தமிழர் இயக்கத்திற்கும் இடையில் இன, மொழி, மனிதநல செயற்பாடுகளுக்கான ஒத்துழைப்பும் நிதி உதவி பெறுவதிலும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

சுமார் 3 மணி நேரமாக நடந்த இச் சந்திப்பில் வெளிநாடுகளில் வாழும் தமிழர் நலம் பேணுவதில் உறுதியான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.


நான் இந்தியனாக இருப்பதால் உலகின் பழையதும், சிறந்ததுமான தமிழர் நாகரீகத்தை அறிவேன் என்றும் அதை நீங்கள் வளர்க்க முயல்வது மிக்க மகிழ்ச்சியை ஊட்டுவதாகவும் யுனெஸ்கோ நிறுவனத் தலைவர் திரு. ராவ். செலிகனி கூறினார்.

செய்தி : ஈழ முரசு - 1997.

# தமிழ்மணி புலவர் தேர்வும் ஐரோப்பாவும்

சங்க காலம் தொட்டு நேற்றுவரை தமிழகத்திலும் ஈழத்திலும் மட்டுமே தமிழ் வளர்க்கும் செயற்பாடுகளும், தமிழ்ப் புலமைக் கல்வி, புலவர்களுக்கான கற்கை நெறிகளும் நடைபெற்று வந்தன. நேற்று தமிழர் மிகுதியாகக் குடியேறிய சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் இச்செயற்பாடுகள் முனைப்புக் கொண்டன. அதுவும் புதிய காலத்திற்கு ஏற்ப மாறிவரும் மொழி நடைக்கு அல்லாமல் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த கடுந்தமிழ் நடையிலேயே புலவர் கற்கை நெறிகள் பின்பற்றப்பட்டு வந்தன. அதன் பயனாகக் கற்று தேறிய புலவர்கள் குமுகாயத்தோடு ஒத்துப் போக முடியாத கொடுந் தமிழ் நடையிலேயே எழுதியும் பேசியும் வந்தார்கள். காலந்தோறும் வரும் சொல்லை ஏற்று அதனால் இளமை வளம் பெறும் கன்னித் தமிழ் இப்புலவர்களால் பயன்பெறவில்லை. மக்களும் கொடுந்தமிழ்ப் புலவர்களை, அவர் தம் படைப்புகளை — நயங்களை உள்வாங்கிக் கொள்ள முடியாமல் புறக்கணித்தார்கள். அதன் காரணமாக மரபுவழியான செய்யுட் பெருந்தமிழ்க் காவியங்கள் பல நூற்றாண்டுகளாகத் தமிழில் தோன்றவேயில்லை. இதன் விளைவு, சங்க காலத்துப் புலவர் பரம்பரைக் கற்றல் வழி கைவிடப்பட்டு, கடந்த ஐம்பது ஆண்டுகளில் மெல்ல மெல்லப் புலவர் கற்கை நெறிகள் மறைந்து போயின. நேற்று வரை இருந்த சில புலவர்களும், தமிழுக்கும் தங்கள் வாழ்வுக்கும் தொடர்பில்லாமல் வாழ்ந்து சென்றார்கள். இக்கால கட்டத்தில்தான் ஐரோப்பிய பாணியிலான பி.ஏ., எம்.ஏ. போன்ற கலைப் புலவர் தேர்வுகள் உருவாகி, பழம் புலவர் பரம்பரை நின்ற இடத்திலிருந்து புதுப் புலவர் பரம்பரை தொடங்கிற்று. இவர்கள் முன்னைய புலவர்களைப் போல உயிருள்ள இலக்கண நூல்களாக இல்லாமல் தேவையான இலக்கணக் கல்வியோடு மொழியியல், குமுகாயம் என்று பலதுறை வரலாறு அறிவுபெற்ற புலவர்களாகத் தோன்றினார்கள். இந்த வரிசையில் ஆர்.பி. சேதுப்பிள்ளை அறிஞர் அண்ணா — மு. வரதராசன் போன்ற எண்ணற்ற புலவர்கள் தோன்றி, இலகு தமிழ்ப் பெருங் காப்பியங்களைப் படைத்து தமிழன்னைக்குச் சூட்டி மகிழ்ந்தார்கள். இவர்களின் மொழிநடை உரைநடை எனப்பட்டது. இந்நடை இலகுவாக மக்களிடையே அரங்கேறி, மக்களை ஆட்கொண்டது. இவ்விடத்தில் உரைநடைத் தரத்திற்கு ஏற்ப இலகுக் கவிநடையும் தோன்றி வரவேற்புப் பெற்றன. பாரதிதாசன், ஐ. உலகநாதன், மகாகவி, சாலை இளந்திரையன் போன்ற ஏராளமான புலவர்கள் இலகு தமிழில் பாக்களால் அருந்தமிழ் பணியாற்றினர். அதே வேளை இவ்வுரை நடையும் இலகுக் கவிநடையும் விரிவுபட்டு போதிய இலக்கண இலக்கிய பயிற்சியும், மொழி ஆற்றலும் அற்றவர்களின் கைகளில் அகப்பட்டது. அதன் பயன் புதுக்கவிதை என்றோர் துறை உண்டாயிற்று. புதுக்கவிதைகள் கூட எதுகை மோனை ஊடாகப் பாடப்படின் இனிய சுவைதரும். அதைவிட்டு வெறும் சொல்லடுக்கை புதுக் கவிதை என்று எழுதிக் குவித்தார்கள். இங்கும் கூடக் கவியரங்கங்கள் பல அப்படித்தான் அரங்கேறுகின்றன. இதனால் தமிழின் இலக்கியத் தரமும் ஆழமும் குறைந்தது. அதேவேளையில் புதுப் புலவர்களில் பெரும்பான்மையோர் ஆங்கில மோகமும் வடமொழி முதன்மையும் கொண்டவர்களாக இருந்தார்கள். வடமொழியிலிருந்து, தமிழுக்கும், தமிழர் நாகரீகத்துக்கும் ஆதாரம் தேடினார்கள். இந்தக் கூட்டத்தின் பெரும் புலவன் வடவாரிய பாதம் தாங்கி வையாபுரிப் பிள்ளையே இதற்குச் சான்று. இவர்களால் தமிழின் தூய்மையும் தனித்துவமும் மறைக்கப் பட்டது. இவ்வேளையிற்தான் தன்மானமும் தமிழ் மானமும் மிக்க தமிழகத்துப் புதுப்புலவர்கள் முனைந்து தமிழ்காக்க எடுத்த செயற்பாட்டின் விளைவே தமிழ்மணி புலவர் தேர்வு. இத்தேர்வின் சிறப்பம்சம் என்னவெனில் தமிழ்ப் புலவனுக்கு இருக்க வேண்டிய மொழியிலக்கணம் — யாப்பிலக்கண அறிவு பழந்தமிழ் செய்யுட் பயிற்சி — புதுக் கவிதைகள் பற்றிய பயில்வு உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களின் சூழல் இலக்கியங்கள் — தற்காலப் பல்கலைக் கழகப் பாடநூல்கள் — உரைநடைக் காவியங்கள் — சிறுகதை — உரைவீச்சு (சாலை இளந்திரையன் ) —சங்க

செர்மனி எழுச்சி விழாவில் (1996)



இலக்கியங்கள்—பல்வேறு வகைப்பட்ட இலக்கியங்களின் ஆய்வு எல்லாவற்றுக்கும் மேலாக குறள் நெறியை மையப்படுத்தும் பாடநோக்கு என்றிவ்வாறாகப் பல்துறை அறிவும் பயிற்சியும் நிறைந்ததாக இப்புலவர் பயிற்சி அமைக்கப்பட்டுள்ளது. இத்தமிழ் மணித் தேர்வு மூலம் நல்ல தமிழ்ப் புலவர்கள் தோன்று கிறார்கள் என்று கல்விமான்கள் வாழ்த்தி உள்ளனர்.

இத் தமிழ் மணித் தேர்வுபற்றி கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்பு சேர்மனிக்கு வருகை தந்த பேராசிரியர் இர. ந. வீரப்பன் அவர்கள் மூலம் கேட்டறிந்த தமிழ்மணிச் செம்மல் கே.ரி. கணேசலிங்கம் பொருளைச் செலவழித்து அரும்பாடுபட்டு, இத்தமிழ்மணித் தேர்வை ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தினார். கடந்த நான்காண்டாக இத்தேர்வு நடத்தப்பட்டு வருகின்றது. தமிழின் வரலாற்றில் முதன் முறையாகவும், தமிழ் நிலங்களுக்கு வெளியே முதன் முறையாகவும் கடந்த 30.08.97 ல் சேர்மனியில் ஐந்து புலவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடாத்தப்பட்டது.

வெறும் புத்தகப் பூச்சிகளைப் பட்டதாரி களாகவும், படித்தோர் என்ற முத்திரையுடன் வெளி வரவிடுகின்ற தமிழகத்து இலங்கைப் பல்கலைக் கழகங்கள் வழங்குகிற சான்றிதழ் களையே, கல்வியறிவின் சான்று எனக் கருதுகின்ற போலிமையை உடைத்து அடிப்படைத் தகுதிச் சான்றிதழ்களின் மூலம் தேவையில்லை. வழங்கப்பட்ட பாடநூல்களைக் கற்றுத் தேறும் ஆற்றலே. இத் தேர்வில்த் தேவையான அடிப்படைத் தகுதி என்ற திறந்த வெளிக் கல்விக் கொள்கையை சிலர் இத்தேர்வில் கண்டு, தமிழ மணிப் புலவர் தேர்வு ஏதோ சாதாரண விடயமென்று தங்கள் பலவீனத்தால் எண்ணுகிறார்கள்.

ஐரோப்பாவில் கடந்த ஐந்தாண்டாக இக்கல்விப் பெருவெள்ளத்தை கடக்க முயன்றோர் ஏராளம். ஆனால் மிகச் சிலரே கரையேறினர். இன்னும் சிலர் முயன்று முன்னேறி வருகின்றனர். இடையில் தாண்ட தடைப் பட்டவர்கள் மீண்டும் மீண்டும் முயன்று வெற்றி காண வேண்டுமென்று வேண்டுகின்றேன்.

தமிழுக்காக வாழ்வோர் சாவதில்லை. வாழ்க தமிழ்!

—தமிழ்மணி, **நா.சி.கமலநாதன்**

# இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகம்

உலகின் பல்வேறு நாடுகளிலும் தமிழர்கள் பரந்து பட்டு வாழ்கின்றார்கள். அதுபோலவே அவர்கள் தங்கள் தங்கள் நாடுகளில் பற்பல சங்கங்களையும், கழகங்களையும் அமைத்து அதன் வழி செயல்பட்டும் வருகிறார்கள் என்றாலும் இலண்டன் வாழ் தமிழர்களாகிய நாங்களும் எங்கள் அமைப்பு நிறுவனமாகிய தமிழர் முன்னேற்றக் கழகமும் ஒல்லும் வகையான சிறப்பாகப் பணியாற்றி தமிழக தமிழின மேம்பாட்டுக்குப் பலவகையாலும் துணை நின்றோம், நிற்கிறோம், நிற்போம் என்பதும் வெள்ளிடை மலை.

தமிழ் இன, மொழி நாட்டு விடுதலையை வென்றெடுக்கவும், உலகமெல்லாம் பரந்து வாழும் தமிழர்களின் துயர் துடைக்கவுமான கொள்கை களை முன்னிலைப்படுத்தி கடந்த 1976ல் தமிழர்களின் தனிப்பெரும் விழா நாளாம் பொங்கல் திருநாள் அன்று தமிழர் முன்னேற்றக் கழகம் தொடங்கப் பட்டது என்பது வரலாற்றுச் செய்தி.


கடந்த பல ஆண்டுகளாகத் தமிழர் முன்னேற்றக் கழகம் செய்து வந்த அளப்பரிய அரும்பெரும் பணிகளை அறிவீர்கள் என்று நம்புகிறோம். தமிழர் முன்னேற்றக் கழகம், திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி, தமிழன் குரல், நியூகாம் த.மு.க. இளைஞர் மன்றம் என்னும் மூன்று துணை அமைப்புகள் மூலமும் தம் பணியைச் செவ்வையாய்ச் செய்து வருகிறது என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி.

எங்கள் பணியின் குறை நிறைகளைச் சுட்டிக் காட்டியும், நாங்கள் இன்னும் எவ்வெவ் வழிகளில் பணியாற்றிச் செயல்படலாம் என்பதற்கான கருத்தறிவித்தும் தங்கள் திறனாய்வினை எங்கட்கு வெளிப்படுத்திட வேண்டுமாய்த் தமிழகத் தமிழர்களை, தமிழீழத் தமிழர்களை, உலகத் தமிழர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம்.

கதைபேசிக் கொண்டிருக்க நேரமில்லை. காலம் வரும் என்பதிலிலும் சாரமில்லை என்ற கருத்தறிந்து...... அவர் வரட்டும் இவர் வரட்டும் எனக் காத்திராமல், ஆற்றல் இல்லா ஊற்றங்களைத் துணைக் கொள்ளாமல்...... முன்பார்த்துப் பின்பார்த்து, பக்கம் பார்த்து முடிவிடத்தை இங்கேயே எண்ணிப் பார்த்து....

அறிவு வளப் பொதுமை நலச் சமுதாயம் அமைத்திட, தமிழின எழுச்சிக்கும் விடுதலைக்கும் விடிவு காண முடிவு காண வஞ்சினம் ஏற்றிடுவோம்.

**-ம. தேவதாசு, தலைவர்**



மேற்கு லண்டன் வெம்பிளி நகரில் 1998ல் நிகழ்ந்த புலம் பெயர்ந்தோர் பற்றிய ஒரு கருத்தரங்கு

# உலகமாந்தரின் வரலாறு சரியாக எழுதப்படவில்லை!

உனெஸ்கோ அமைப்பகம் பல ஆண்டுக்குமுன் ஆறுமடலமாக வெளியிட்ட மானிட வரலாறு, சரிவர இல்லை. அதன் முதன் மடலத்தில் மாந்தன் பிறந்தகம் திட்ட வட்டமாய்க் கூறப்பட்டிருக்கவில்லை. அதன் ஆய்வுத் தொகுப்பாளர்கள் தத்தம் விருப்பத்தையே அதில் கூறினர்.

ஒருவர் மடகாசுககர் தீவுப் பக்கத்தையும், மற்றவர் கென்னியாவையும் கூறுவது சரியல்ல ; குமரியே மாந்தன் பிறப்பகமும் தமிழன் தோன்றிய இடமுமாகும். ஆரிய வெறியாலும் இயன்மொழியான தமிழறியாததாலும் அம்மானிட வரலாறு பொய்த்தது.

குமரி முனைக்குத் தெற்கில் இரண்டாயிரம் கல் தொலைவில் இந்துமாவாரியில், மூழ்கிப் போன குமரிக் கண்டத்தின் வரலாறு அவர்களால் ஆராயப்படாமல் எடுத்த நூலாக்கத் தவறுகளை மீண்டும் உனெசுக்கோ திருத்தச் செய்ய வேண்டும்.

சிலப்பதிகாரச் சான்று இப்படி உளது :

*"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்*
*குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள*
*வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு*
*தென்திசை ஆண்ட தென்னவன் வாழி!"*

**-(சிலம்பு : 11:19:22)**

*1800 ஆண்டுக்கு முன் இளங்கோவடிகள் சான்று இது.*

பண்டைத் தமிழக ஆட்சி கி.மு.10,000ல் தொடங்கியது. இது மன்னர் வழி ஆட்சி. மக்களாட்சியின் தோற்றம் கி.மு.3ம் நூற்றாண்டில் முகிழ்ந்தது. இதனால் திருவள்ளுவர் மக்களாட்சியே வேண்டும் என வரையறுத்தார்.

இவரது காலம் கி.மு. முதல் நூற்றாண்டு (கி.மு.21) குமரிமலைநாட்டில், முதல் மாந்தனின் நாகரிக வளர்ச்சி நான்முகப் படிமம் 1. தென் குரங்கன். 2. கற்கருவி மாந்தன் 3. நிமிர்மாந்தன் 4. மதிமாந்தன்.

**சான்று : மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடைமை.**

# பழந்தமிழர் இறைமையில் கடவுள்

குமரியில், ஓர் இலக்கம் ஆண்டுக்கு முன்பே, ஒவ்வொரு நாளும், இரவுக்குப் பின் கதிரவன் தோன்றியபோது கைகளைக்கூப்பி அவ்வெய் யோனைக் கும்பிட்டுத் தொழுதவன் ஆதி தமிழன். இத்துணை நீண்ட காலம் இவ்வாறு செய்து வருவதும், தமிழ்ப் புத்தாண்டு கதிரவனுக்கு நன்றி கூறிப் பொங்கலிட்டு வருபவனும் தமிழரது இறைமை வழக்கம்; முழுநிலவன்று விழா எடுத்துப் போற்றிப் புரந்து இறைமை போற்றுவதும் தமிழரின் வாழையடி வழக்கில் உளது.

எங்கும் பரவிய பரம்பொருளை நம்பியவனும், மனம் — மொழி — மெய் உணர்வால், கடவுள் என்று முதன் முதலாகப் பெயரிட்டவனும் தமிழனே. தன் உடலின் ஐம்புலனறிவால் உணர்ச்சியை ஒருமுகப்படுத்திவிட முடியும் என உலகெங்கும் பரப்பியவன் தமிழனே!

# 56 நாடுகளை ஒரே நாடாக்கினான் வெள்ளையன்

*1947* வரை இந்தியாவை ஆண்ட ஆங்கிலர் அதை ஒரே நாடாக ஒருங்கிணைத்து இருநூறு ஆண்டு ஆட்சியை முடித்தான். பன்னாட்டு உட்கண்டமான அப்போதும் சிற்றரசுகள் 545 தன்னாட்சியுடன் திகழ்ந்தன. எனினும் இந்தியா ஒரே நாடு என்பதாக வெளி நாடுகளையும், உலக ஒன்றியத்தையும், இன்று நம்ப வைத்ததில் இந்தியாவின் பெருந்தோல்வி.

வேத ஆரியன் இந்தியாவில் புகுந்தது கி.மு. 1500. அவரது மொழி பிராகிருதம் (இந்தோ ஐரோப்பியம்). அக்கலப்பு மொழி தமிழருடன் கலந்து சமற்கிருதம் என்ற கூட்டுமொழியாகி இலக்கிய மொழியாகியது. பேச்சு மொழியாக வழக்கில் இல்லை.

ஆங்கிலேயருக்கு முன் வடஇந்தியாவில் முசுலீம் மன்னராட்சியில் பாரசிகம், உருது, அரபு மொழிகள் வழக்கில் இருந்தன. தமிழ் மொழியே இந்தியா முழுதும், ஆரியர் வருகைக்கு முன்பும் பேசப்பட்டது. ஆங்கிலேயர் காலத்தில் தான் கலப்பு மொழியான இந்துத்தானி என்ற வட இந்தியப் புதுமொழி பரவியது. இது தென்னாட்டில் புகவில்லை.

# அறிவியல் :
# ஊழ்ஊழிக்கால ஞாயிறும் கோள்களும்!

வானகமான புடவி (பிரபஞ்சம்)யின் தோற்றம் 1400 கோடி ஆண்டுக்கு முன். ஞாயிறான சூரியன் அணுக்களின் ஒளிக் கோளமாகியது 1000 கோடி ஆண்டுக்கு முன்புதான். இதன் உயிர்ப்பாற்றல் அப்போது தோன்றியதே. அதன் வெடிப்புக் கோள்கள் உருவாகிய காலம் பிறகுதான். இது 450 கோடி ஆண்டுகளாகின்றது.

ஒரு மாபெரும் 'பெரும் வெடிப்பு' கதிரவனில் ஏற்பட்டதும் அதன் பிறகுதான். இது 1500—2000 கோடி ஆண்டுகளுக்கு முன் வெடித்துப் பரவி, விண்ணில் ஓர் ஒளிப் பிரளயம் தோன்றியது. ஐம்பூதங்களோ உயிரியல் படைப்போ இல்லாத காலகட்டம் அது.

ஏழுகோளங்களான ஒன்றில் —பூமியில் ஏழுகண்டப் பாறைப் பிளவுகள் எழுந்து வெடித்துப் பிளந்தன. இது தோன்றி பத்து கோடி ஆண்டாகிறது. பூமியான உலகச் சுழற்சியில் கொடுங்காற்றூழி, பனியூழி, தீயூழி, கடல் (நீர்) பிரளயஊழி, ஐம்பூத ஊழி இடைவிடாமல் பல காலம் நிகழ்ந்து கொண்டேயிருந்தன. இவ்வாறு 25 ஆயிர அடி உயரப் பாறைகள் பிளந்தன. கண்டப் பிளவுகளாக அவை நகர்ந்தன.

அப்போது மற்ற உயிரினமும் அதற்கு முன் ஐந்துயிரிகளும், உலகில் தோன்றியிருக்க வில்லை. அப்போது ஆப்—மலைப் பாறையும் பயங்கர ஒலியுடன் பிளந்தது. இதன் உயரம் 17218 மீட்டர். பத்தாயிரம் ஆண்டுக்குமுன்தான் கற்காலம். இது மனிதக்காலம். இது கி.மு. மூவாயிரம் ஆண்டுகள் வரை தொடர்ந்தது.

**-வியாழன்**

*பட்டறிவான செய்தி :*

*ஞாயிறு வெப்பத்தால் ஞாலம் வளி மண்டலத்தின் இயற்கைப் பேரிடரை விளைவித்தது!*

*25.5.1998* அன்று அமாவாசை கரிநாள் வைகாசி திங்கட்கிழமை. சித்திரைக் கோடையிலிருந்து பூமத்திரேகைப் பூமிப் பகுதி கொடூர வெப்பமடைந்திருந்தது. கிழக்காசிய மண்டல நாடுகளின் செய்திகளை அன்று படித்தேன்.

காற்றழுத்தம் மிகுதி. இது பசிபிக்கிலும் கூடிவிட்டது. தமிழ்நாட்டில் 110 டிகிரி உஷ்ணம். கடந்த 88 ஆண்டில் இல்லாத அளவு கூடியது. தென் கிழக்காசியா எங்குமே இப்படி அனலானது வெப்பம். அமாவாசைக்குப் பிறகும் சில நாட்கள். செய்திகள் இவற்றைப் புலப்படுத்தின.

வளிமண்டலக் காற்றதிர்வால், மங்கோலியா, லாவோஸ், பகுதிகளில் விமானம் விழுந்தது. மத்திய சீனாவில் கடும் வெள்ளம். அத்துணை மழை மிகுதி. வட வியட்நாமில் அனோய் நகரில் மண விலக்கு செய்து கொண்டவர் பலராம். மனித மண வெறுப்பும், பாலியத் தொல்லையும் உண்டாக்கும் தூக்கமின்மையால் மனிதர்கள் அவலமுற்றனர். இப்படி சூரியக் கதிர்களின் அதிர்வால், ஒளிப் பிறழ்வு உண்டாகியது. வானிலைக் கோளாறுகள் நிகழ்ந்தன.

வளி மண்டல அதிர்ச்சியை அவைகளே உண்டாக்கின. ஐம்பூத விபரீதமான தாக்கம் கடும் விளைவைத் தந்தது. உலக மையத்தின் வெப்பம் வாயுவை விடுவதும், ஊமை வெப்பநிலை நீடித்தது. நள்ளிரவுவரை மன எரிச்சலால் மக்கள் கிறக்க மடைந்தனர். இயற்கைப் பேரிடரின் துன்பம் ஒரு பக்கம். செயற்கைக் கோள்களின் அறிவியல் தாக்கம் மறுபக்கம்.

**-வீரப்பனார்.**

# உலக ஊழிப் பேரிடர்களும், மாந்தர் அழிவியலும்

ஒவ்வொரு தனிமனிதரின் பிறப்பும் இறப்பும் இயற்கையாக நிகழ்வது. இது வியப்பல்ல.

கி.மு.1500க்கு முன் பழந்தமிழர் தென்னாடான குமரிக் கண்டத்தின் உடைபட்ட பகுதிகள் நீரில் மூழ்கியது. அப்போது கீழ்த்திசையிலும் தென்மாவாரியிலும் கடல்கோள்கள் பல நிகழ்ந்தன. எத்தனையோ கோடி மக்கள் மண்ணுடன் மூழ்கினர். நோவா கால ஊழி வெள்ளப் பெருக்கிலும் பல கோடி அழிந்தது.

கி.மு. ஆயிரத்தில் பாரதப் போரில் பல லட்சம் மக்கள் மடிந்தனர். கி.பி. 79ல் நிகழ்ந்த வெசுவியசு எரிமலைக் கொதிப்புகளால் பாம்பேய் இத்தாலிய நகரம் பன்னிரெண்டடி ஆழத்தில் புதையுண்டது. இலண்டனில் கி.பி. 1349ல் பயங்கர கொள்ளை நோயும் மக்களை அழித்தது. 1565ல் இந்தியாவில் விசயநகரப் பேரரசுக்கும், முகமதிய அரசுக்கும் நடந்த போரில் (தலைக்கோட்டை) ஓர் லட்சத்துக்குமேல் மக்கள் கொலைபட்டனர். 1665ல் பெரிய கொடுநோயாலும், 1666ல் பெருநெருப்பாலும் பலர் மடிந்தனர். அழிபட வரலாறு மிகுதி.

1914—18ல் முதல் உலகப் போரில் எண்பத்தைந்தரை லட்சம் உலக மக்கள் மாண்டனர். 2ம் உலகப்போரில் (1939—45ல்) ஒன்றரைக் கோடிக்கு மேல் மடிந்தவரின் எண்ணிக்கை இருக்கும். 1975ல் சீன நிலநடுக்கத்தில் முப்பது லட்சம் மக்கள் புதையுண்டனர்.

1876—78ல் பழைய மைசூரில் மிகப்பெரிய பஞ்சத்தால், பத்து லக்கத்துக்குமேல் மாண்டனர். அதே சமயத்தில் தமிழகத்தின் ஐந்து மாவட்டத்தில் நிலவிய கொடும் பஞ்சத்தில் நாற்பது லட்சம்பேர் மாண்டுவிட்டனர். இயற்கை ஊழிப் பேரிடர்களாலும், மனிதப் போர்களாலும், வறுமையாலும் கோடிகோடியாக மாண்டும், இன்று உலக மக்கள் கணக்கற்றுப் பெருகிவிட்டது.

[redacted]



[redacted]

# புடவியில் கதிரவன், பூமி தோற்றம்

ஐநூறு கோடி ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்டது பூமி என்ற உலகத் தோற்றம் என்பது வெள்ளையர் கணிப்பு. நூறு கோடி ஆண்டுக்கு முன் உலகம் புடவியின் தூசியும் — ஆவியும் கொண்ட வெப்பக் காற்றால் சுழன்ற காலம் அது. இப்படி இதைச் சுழலச் செய்யும் புவிசர்ப்பாலும், ஞாயிறு கோளின் அணுக்களும் கோடிக் கணக்கிலும் உருவாகின. இருளும் மங்கலும் அவற்றைப் பேயாய், கணங்களாய் உருவாக்கிய கதிரவன் அப்போது பெரிய தீப்பந்தமாகவே திகழ்ந்தது.

பிரமாண்டமான தூசி மண்டலமாக புடவியும் அப்போது தோன்றி, இருள்மயமாக விளங்கியது. இச்சுழற்சியும், விண்ணகமும், அமைதியுற பல லட்சம் ஆண்டாகியது. அதன் பிறகுதான் உயிரணு உருப்பெற்றதாம். தோற்றமற்ற உயிர்ப்பணு அது.

கதிரவனை மையமாகக் கொண்டு புவியில் 9 கோளங்கள், தீப்பிழம்பாகத்தான் அதிலிருந்து வெடித்தும் தொலைவில் அவை சுற்றிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கோளமும், தன்னிலையில் தனி வட்டமாகச் சுழல்கின்றது. ஒவ்வொன்றுக்கும் பல லட்சம் கல் தொலைவுக்கு இடைவெளி உண்டு.

ஈர்ப்பாற்றல் ஒன்றுக்கொன்று மோதச் செய்யவில்லை. சூரிய ஆற்றலின் ஈர்ப்புப் பூமியின் கடும் வெப்பம் படிப்படியாக குளிரச் செய்த மேல்பகுதி பாலைப் பாறையாக ஆயிற்று. பூமியின் உட்பகுதி தீக்குழம்பாகியது போல் வட— தென் துருவ மண்டலங்கள் பனிப்பாறைகள் ஆயின. இவை பனிப்பாறைத் திட்டுகள். இவ்வாறு முதலில் ஏழுமாக்கண்டமே பூமி.

பூமியின் மேற்பகுதி நிலம் — நீர் ஆகியது. பாறைகள் படிப்படியாக உடைந்து, பிறகே மண்ணிலமாகியது. உள்முகப் பூமியின் பூகம்பம் எரிமலை வெடிப்பால் உயரமான மலைப் பாறைகள் எழுந்து காய்ந்து விளங்கியது.

**பூமியின் பெரும்பிளவுகளால் ஏழு கண்டம் தோன்றின**

இருபது கோடி ஆண்டுக்கு முன் பூமியின் பல பிளவுகளால் ஏழுகண்டங்கள் உருவாகின. முதலில் பூமியின் மையமாக இருந்த ஒரே வட்டத் தாமரைப் பகுதி இரு பிளவாகப் பிளந்தது. இது பூமியின் (பூமத்திரேகைக்கு வடக்கே) 47 டிகிரி பாதையில் முதற் பிளவு உண்டாகியது. தென்பகுதி கொண்டுவனம் (குமரிக் கண்டம்) என்றும் வட பகுதி லாவராசியா எனவும் பெயரிட்டனர்.

அப்போது கடல்நீர் யாவும் உறைந்து எரி மலைகள் வெடித்து பூமியின் உள்ளும் புறமும் பிளவுற்றன. இதனால் பெரும் பிளவுகள் ஏற்பட்டன.

இரண்டாவது வெடிப்புகளால், முதல் பிளவுகள் அப்பிளவுடன் நகர ஆரம்பித்தது. அதன்பின், பதின்மூன்றரை கோடி ஆண்டுக்கு முன் மூன்றாவது பிளவும் நகரச் செய்தது. பிறகும் இது உடைந்து பிளந்தது. ஆறரை கோடி ஆண்டுக்கு முன்னும் இப்பிளவால் நகர்ந்த பகுதியும் கண்டமாகியது.

(சான்று : Our World - 6 Vol - 1993)

ஆரம்ப காலத் தொடக்கம் ஐம்பூத மாறுபாட்டால் இவ்விளையும் (மண் நீர் காற்று வான்) ஏற்பட்டது. பனி — காற்று — மழை — குளிர்மை — குறைவான வெப்பம் இவையாவும் இயங்கிய பாதிப்பு தான் அக்காரணம். கடும் வெப்பத்துடன் கொடுங்குளிரே இது.

இருநூறு கோடி ஆண்டுகளுக்கு முன் இவ்வாறு நிகழ்ந்திருக்கும் என்றும் சொல்லப்படுகிறது. அப்போது கடும்பாறைகள்,

கொடும்வெப்பத்தாலும் கொடுங் குளிர்ச்சியாலும் நிறமாறின. பிறகு வெடித்தன.

இருநூறு கல் உயரே பூமியின் மேல் நிலையே காற்று மண்டலம் எட்டு கிலோ மீட்டர் உயரத்தின் சுழற்சியில் காற்று புயலாக — சூறாவளியாக மாறுகின்றது. இதன் விளைவு ஆற்றல் 483 கிலோ மீட்டர் அழுத்தம். காற்று ஒரு மணிக்கு 119 கி.மீ. விரைவாக வீசும்.

**முதல் உலகப் பூகோள கரைவரிப் படம்**

மத்திய (பூமத்திய) கிழக்கு நாடுகளின் கரை வரிப்படம் உரோமன் காலத்தில்தான் முதன் முதலில் வரையப்பட்டது. இதில் கடல்—கப்பல், தரைவழி — குதிரைப் படை — அதனாட்சித் தலைவர்கள் ஆகிய படங்கள் கீறப்பட்டுள்ளன. மத்திய தரைக்கடல் பகுதிகள், நைல் நதி (நீல ஆறு) செருசலம் குறிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவும் ஆப்பிரிக்காவும் அப்படத்தில் மய்யமாகவே இருந்தன என்பது குறிப்பிடத் தக்கது. ஏன் இந்தியா மய்யமாக இருந்தது?


மெர்காடர் (கி.பி. 1512—94) என்பவர் வரைந்த உலகப்படம் இது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக் காலத்தைக் காட்டும் உலகப்படமே இது என்றார். சதுரத்துக்குள் உலக வட்டம் இது. இதுவே அந்த முதல்படம்.

வட்டமிட்டு அதற்குள் எழுதப்பட்டிருந்தது இப்படி :

AMERICA - INDIA NOVA

பூமத்திய பகுதிக்குக் கீழ் இந்தியா — நோவா அதில் காட்டப்பட்டது. தென் துருவக் கண்டம் பெரியது. வடக்கே அமெரிக்க கண்டப் பகுதி உள்ளது. வட துருவமும் தென் துருவமும் ஒட்டிய கண்டமாக வடக்குத் தெற்காகக் காட்டப்பட்டது. பூமத்திய ரேகைக்கு கீழே முக்கால் பகுதியே அழிந்த குமரி உட்பட ஆப்பிரிக்கா-இந்தியா — சீனா — ஆத்திலேலியா — பல தீவுகளாக அது இருக்கலாம்.

ஐந்து கண்டமும் இப்படி ஒரே பக்கத்தில்தான் தோன்றியதாக அவ்வுண்மை எடுத்துக்காட்டப் பட்டது சரியே. மறுபக்கம் இப்போது விட — தென் அமெரிக்கக் கண்டப் பகுதியே அன்று இருந்திருக்கவில்லை. நகர்ந்து மேற்கே சென்றதுதான் உண்மை. இது இருபது கோடி ஆண்டுகளுக்கு முன் என்றும் சொல்லப்பட்டது.



# கூட்டுறவு

தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தின் வளர்ச்சியையும் அதன் புகழையும் கூட்டுறவு பத்திரிகை மூலம் அறிந்துகொள்ள முடிகிறது, அதோடு மட்டுமல்ல. பொதுவாக மலேசிய நாட்டின் சூழ்நிலைகளும் தெரிந்து கொள்ள முடிகிறது என்றும் ரீயூனியன் நாட்டை சேர்ந்த பேராசிரியர் வி. குமாரசாமி கூறினார்.

தாமும் இன்னும் சிலரும் ஒரு தோட்டத்திற்கு அழைத்து செல்லப்பட்ட போது அந்த தோட்டத்தின் நுழைவாயிலிலேயே வரவேற்று தேவையான விளக்கங் களையும் செய்தார்.

கூட்டுறவுச் சங்கம் வளர்ந்து வரும் வளர்ச்சியும் அது நிர்மாணித்திருக்கும் விஸ்மா துன் சம்பந்தன் கட்டிடமும் இந்திய சமுதாயத்தை மலைசியாவில் உயர்த்திக் காட்டுவதாக இருப்பதை தாம் உணர்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமரர் துன் சமபந்தனை தாம் பார்த்ததில்லை, ஆனால் அவர் ஆரம்பித்து வைத்த கூட்டுறவு சங்கம் டத்தோ வால் உயர்ந்துள்ளதைப் பார்க்கிறேன் என்றார் அவர்.

இந்தியாவிலிருந்து நான்கு தலைமுறையினருக்கு முன்பு வந்தவர்கள் தான் ரீயூனியன் நாட்டிலுள்ள பரம்பரையாவார்கள். கரும்புத் தோட்டத்தில் வேலை செய்வதற்குத்தான் அவர்கள் அழைக்கப்பட்டு வந்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

நான்கு தலைமுறையாக காலம் ஓடிவிட்டதால் இங்கு வந்தவர்கள் தமிழை மறந்து விட்டார்கள். அந்தத் தமிழ் இப்போதுதான் புத்துணர்வு பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

மொழிகளைப் போல் தமிழ் மொழியும் இணைந்து நாட்டில் போதிக்கப் பட வேண்டும் என்ற அதிகாரத்தை அவர்கள் வழங்கினார்கள் அதிலிருந்து தமிழ்மொழி பல்கலைக் கழகங்களில் போதிக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் கூறினார்..

ஆறரை இலட்சம் பேர் வாழும் ரீயூனியன் நாட்டில் இரண்டரை இலட்சம் பேர் தமிழர்கள் ஆவர். ஆங்கிலம், ஜெர்மன், ஸ்பெயின் ஆகிய மொழிகள் இருந்து வரும் இந்த நாட்டில் தமிழ்மொழி மூன்று பல்கலைக் கழகங்களில் போதிக்கப்பட்டு வருகின்றது என்றார்.

பிரஞ்சு நாட்டின் நாடாளுமன்றத்திற்கு இங்கிருந்து ஏழு பேர் நாடாளுமன்ற உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றனர். அதில் நால்வர் இந்தியர்களாவர் என்று குறிப்பிட்ட நாட்டின் பருவ காலமும் நான்காகும் என்றார் அவர்.

வீட்டு வேலை செய்யும் சாதாரண தொழிலாளி 4000 பிராங்ட் சம்பளம் பெறுகிறார். மலேசிய ரிங்கிட் 2000 ஆகும். ஒருவருடத்திற்கு ஆறு வாரம் அவர்களுக்கு விடுமுறை உண்டு. அவர்கள் ஓய்வு பெற்றால் 80 சதவிகிதம் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ஆறு பிள்ளைகள் அடங்கிய குடும்பத்திற்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த சம்பளம் அப்படியே ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. வேலை கிடைக்காதவர்களுக்கு ஒரு கணிசமான தொகை உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது. குமஸ்தா வேலை செய்யும் ஒருவர் அகிகபட்சம் 12000 பிராங்ட் சம்பளம் பெறுகிறார்கள். இது மலேசியா ரிங்கிட் 6000 ஆகும்.

இதில் மற்றொரு சிறப்பு என்னவென்றால், சிறு தெய்வங்களையும் இந்துக்களில் பலர் வழிபடுகின்றனர். அதாவது முனீஸ்வரன், காத்தவராயன் ஆகிய கோயில்களைக் கொண்டு வழிபடுகிறார்கள். கோயில் திருவிழா என்ற வகையில் ஆண்டுதோறும் இந்தக் கோயிலில் விழா எடுத்து 200 ஆடுகள் வரை கொண்டு வந்து அவைகளை வெட்டி ஆண்டவனுக்குப் படைத்து அவர்கள் உண்பார்களாம்.

மடகஸ்கருக்கு மொரீசியசுக்கும் மத்தியில் இருக்கும் தீவுதான் ரீயூனியன் என்ற எங்கள் நாடு. இந்த நாட்டிற்கு புதியவர்கள் யாரும் வந்து குடிபுகமுடியாது. குடியுரிமையும் கிடைக்காது. நாட்டில் உள்ள சில வேலையை யாரும் செய்ய முடியாது என்று கணிக்கப்பட்ட பிறகு அந்த வேலைக்கு திறமையானவர்கள் மனு செய்து பரிசீலனை செய்த பிறகே அந்த திறமையானவர்கள் குடியுரிமை பெற்று இந்த நாட்டிற்கு வேலைக்கு வர அனுமதிக்கப்படுவர். அந்த அளவுக்கு வெளிநாட்டவர்கள் இந்த நாட்டில் நுழைவதற்கான சிரமங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அனுமதி இல்லாதவர்கள் யாரும் இங்கு வர முடியாது என்று பல கருத்துக்களை அவர் தெரிவித்தார். ●

# நான் ஏன் என்னை உலகளாவிய தமிழ்த் தூதனாக ஆக்கிக் கொண்டேன்?

## இர.ந.வீரப்பனார்

இது என் இயல்புக்குரிய கேள்வி. ஆமாம் ஏன் இந்தப் பொறுப்புக்கு நானே என்னை ஆக்கிக் கொண்டேன் என இன்னமும் நினைவில் என்னை உலுக்குகின்றது. எண்பதுகளில் இது உலகளாவிய தூதுக்கு என்னை ஆட்கொண்டது. என்னுள் ஏற்பட்டுவிட்ட இறைமை இது. இது படிப்படியாக வளர்ந்து தளரா வளர்தெங்கு போல் வானுயர்ந்து விட்டது.

இதுவே இறையாண்மை என்னுள் புகுத்தியது. அறத்தின் ஊழியாக நான் இயங்கினேன். செயல்பட்டேன். இழந்தது பணம் என்றாலும் வளர்ந்தது பண்பியக்கம். உலகளாவிய சாதனை என்னுள் வேதனையை விளைவிக்க வில்லை.

திட்டமிடுதல் — சிக்கனம் — சேமிப்பு என்பதில் விழிப்பாக இருந்து செயல்பட்டேன். ▶

---

# இயக்கத்தின் இதயமான சான்றோர்கள்

**1974** முதல் 25 ஆண்டுகளில் பல நாடுகளில் இயக்கத்தை அமைத்தும், ஆதரவு தந்தும், உறுதுணை வழங்கிய இவர்கள் அமரர்களா கின்றனர் நன்றியுடன் நினைவு கூர்ந்து, அஞ்சலி சாற்றுகிறோம்.

தமிழீழத்துத் தந்தை செல்வா, தனிநாயக அடிகளார், முனைவர் சு. வித்தியானந்தன், புலவர் சிவபாதசுந்தரம், தென்னாப்பிரிக்கா சோதிநாதன், ஆர். என். நாடார், மொரீசி.ஸ் பெரியார் மா. தங்கணமுத்து, இலண்டன் க. நவசோதி, சென்னை புலவர் தணிகை உலகநாதன், பாங்காக் கோவிந்தசாமி, பர்மா சௌந்திர பாண்டியன், மலேசியா முருகு சுப்பிரமணியன், மாசி.


அண்ணாமலை, தாய்லாந்து சங்கரமணியம், அந்தமான் சுப.சுப்பிரமணியன், வேறு சிலரும், விவரந்தெரியாததால் விடப்பட்டிருக்கலாம். பொறுத்தருள்க. “தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை!”

# முதுமையிலும் தமிழியமாக வாழும் எமது சான்றோர்கள்

உ.த.ப. இயக்கத்தை அமைத்துப் பாடுபட்ட இப்பெரியார்கள் சிலர் உட்பட, பலரும் உறுதுணையாக கிளையின் வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றினார்கள். சிலர் இன்னமும் தளர்ச்சியின்றி வழிகாட்டு கின்றார்கள். இவர்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர் :

பீஜித்தீவு க. அப்பா பிள்ளை, கனடா ஈழத்துப் பூராடனார், பேராசிரியர் சாலை இளந்திரையன், பேரா. சாலினி இளந்திரையன், கலாநிதி எளிசர்(மெல்பன்), இலண்டன் அரங்க முருகையன், சங்கொலி சோலை இருசன், நியூசிலாந்து ம.ரா. பாலகணபதி, பர்மா பெரியார் டி.எஸ். மணி, ஒகி சுவாமி விஞ்ஞான நந்தா (அமெரிக்கா) டர்பன் மு. அன்பன், சிங்கப்பூர் இர. ஜெயதேவன், ரியூனியன் வி. குமாரசாமி, தென்னாப்பிரிக்கா வே.கோவிந்தசாமி, திருமதி காமாட்சி சோதிநாதன், திருமதி. புஷ்பம்மாள் முருகன் மற்றும் பலர் உள்ளனர்.

“நெறி நின்றார் நீடுவாழ்வார்!”



திருவள்ளுவரும், வள்ளலாரும் வழிநடத்தினர் போன்று உணர்ந்தேன். திருக்குறளைக் கற்றுக் கற்றுத் தெளிவு பெற்றேன். தனித்திரு- பசித்திரு - விழித்திரு என்பது என் வழிமுறையானது.

என் சிறிய ஓய்வூதியம் பெரிய பெரிய திட்டப்படியான செலவுக்கு வழிதிறந்தது. ஆசைகள் அடங்கின. இலட்சியம் அதை அழித்தது. 22 ஆண்டுகளில் இப்படி உலக வலம் வந்தேன். 1976ல் தொடங்கிய நடைப் பயணம் இப்போது 1998லும் வீறுடன் செயல்படுகிறது. சுற்றிவந்த நாடுகள் 36 என்கிற போது ஏற்படுகின்ற பெருமிதம் வியப்பானது. நானே நம்ப முடியாமலிருக்கிறது. -

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற எண்ணம் — எழுபதுகளில் எதிரிகளாக உலகப் பல நாடுகளில் பரந்து வாழும் ஈழத் தமிழர்கள் எனக்குக் கைக்கொடுப்பார்கள் என்ற அழுத்தமான திண்ணமே அதற்கு உயிர்தந்தது.

1977ல் நான் முதன் முதல் தமிழீழம் சென்றது ‘அங்கு உலகத் தமிழர்ப் பண்பாட்டு இயக்கத்தை அதன் ஈடுபாட்டைக் கண்டு கதைத்து சென்னையில் அதன் முதல் மாநாட்டை நடத்தி முடிப்பதுதான் என்ற இலட்சிய வெறியே. இது அசாத்தியமானது என கைவிட்ட தமிழக நிலையை மாற்றினோம். 1979லும் ஈழம் போனேன். எல்லாமே வெற்றி என சொல்ல முடியாவிட்டாலும் ஈழமே உலகிற்குத் தமிழேடுகளையும், நூல்களையும் அப்போது அனுப்பி வந்தது. இதில் நான் குறியாகவே இருந்திருக்கிறேன்.

பண்பாட்டு இயக்கத் தலைமைப் பொறுப்பு என் தலையில் சுமையாக அமைந்தது. இது இப்படி இன்றுவரை தொடரலாமா? சுமையை சுவையாக மாற்றிக் கொண்டதில் நான் வெறுப்படையவில்லை. இன்று உலகம் என்ற தலைப்பைத் தன் தலையில் சூட்டிக் கொண்ட பலர் போலல்ல எங்கள் மடைமை.

ஓர் உலகப் பேரியக்கம் உண்மையில் உலகளாவிய இயக்கமாகப் பாராட்ட வேண்டும் என்ற துடிதுடிப்பான பிடிப்பு என்னை நாடு நாடாகச் சென்று அன்பையும் பண்பையும் அங்கு விதைக்கத் தூண்டிற்று. நேர்முக சந்திப்பும், பல நாள் தங்கிக் கதைத்தும் கொஞ்சநஞ்சமா? புரிந்து கொள்ளப்பட்ட என் பயணக் கதை பாதையும் மாறவில்லை. திட்டத்தையும் மீறவில்லை.

இது ஒரு நீண்ட காலப் பண்பாட்டுப் படை எடுப்பு என்றே ஒவ்வோராண்டும் ஒரு நாடு இருநாடு என என் தமிழியத்தூது பயன்பட்டது. இது பண்பட்ட பட்டறிவைத் தந்தது. அதுவே மிகுந்தும், சிறந்தும் உயர்ந்தது.

தொடக்கத்தில் எங்கள் செயல்படும் நோக்கு சிக்கலான பயன்களை விளைவித்தது. கடிதத் தொடர்புகளால், தமிழொழிந்த நாடுகளின் நட்புறவும் நாள்பல கடந்தும், வெற்றிமுகம் தன் காட்சியைத் தரவில்லை. தொலைதூர நாடுகளில் தமிழையிழந்து வாழும் தமிழகத் தொடர்பற்ற அவர்களை ஈர்க்கவே முடியாமலிருந்தது. இருநூறு முந்நூறு ஆண்டுகளாகவே தம் தாய்மொழி மரபுகளை இழந்துவிட்டவர்களின் செல்வச் சிறப்புகளான பண்பாடுகளை மீட்பதில் காலங்கடந்தது. கானல் நீராகிய காட்சிகள் மிகுதி.

இப்படி இருபது முப்பது நாடுகளில் நம் கலாசாரத்தை மீட்கப்பாடுபடுவது எப்படி என வழி தெரியாமல் கிழக்கிலும், மேற்கிலும் அலைக்கழிந்து வருகிறார்கள். தூர கிழக்குப் பசிபிக்கிலும் மத்திய அமெரிக்காவின் மேற்கில் கரிபியன் தீவுகளிலும் இந்த அவலங்கள் மிகுதி.

பிசித் தீவிலும், கயானாவிலும் சிக்கலானது இது ஒன்றுதான். ஆப்பிரிக்காவின் மத்தியிலும் இதுவே. இரண்டாம் உலகப் போருக்குப் பின் இங்கெல்லாம் எழுந்த எழுச்சியில் கோயில் கட்டிக் கொண்டு கும்பிடும் பழக்கம் வந்தது. ஆனால் இழந்தது தமிழ், தாய்மொழி ஊனத்தைப் போக்கவில்லை. அதை மீட்போம் என்ற உணர்வுமில்லை.

"எவ்வ துறைவது உலகம், உலகத்தோடு அவ்வ துறைவது அறிவு" என்ற போக்கு தான் என்னை இயக்கியது. அஞ்சாமை, துணிவுடைமை, நன்னமபிக்கை என்ற அடிப்படையில் என் பயணப்பாதை நீண்டது எனினும் சில நாடுகளுக்குப் போகத்தான் வேண்டும் என்ற அவா நிறைவேறவே இல்லை.

மொரிசியசுக்குப போன நான் ரியூனியனுக்குப் போக முடியாதது என் தவறல்ல. சட்டம் தடுத்தது. சட்டம் தடுக்காத பிஜீத் தீவுக்குப் போகும் எண்ணம் மாய்ந்து விடவில்லை.

'உலகத் தோடு ஒட்ட ஒழுகல்' என்பதைச் செயல்படுத்த எனக்கு உறுதுணை வழங்கியவர்கள் ஈழத் தமிழர்களே! உலகளாவிய அவர்களின் பேராதரவு எனக்கு ஊக்கமூட்டியது.

இயக்க வெள்ளி விழா நடக்கிறது. 25 ஆண்டுகள் கழிகின்றன. 1974க்கும் 1998க்குமி டையில் இது அமைகிறது. ஐந்து நாடுகளில் ஆறு மாநாடுகளை நடத்தியது பெரிய வெற்றி என நாம் இறுமாப்புக் கொள்ளக் கூடாது. நடந்த மாநாடுகள், இயக்கக் கூர்தலற வளர்ச்சியைப் பிரதிபலிக்கவில்லை. உலகத் தமி ழர் சந்திப்பு அரங்கமாகவும், பல நாட்டில் பலருடன் வந்து ஆய்வுப் புலத்தின் நுண்ணாய்வும் நெருக்கமடைந்தன இயக்கத்தின் இணைப்பாக நெருங்கவில்லை

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு" என்பது என்னுள் விழிப்பூட்டிய பாங்கு செறிவானது. நுண்பொருள் காண்பது அறிவு என்பதைக் கொண்டுதான் தென்னாப்பிரிக்காவில் நான் கடுமையாகப் பேச வேண்டியதாயிற்று.

வீட்டில் தாய்மொழியைப் பேசவேண்டிய கட்டாயமாக்காத வரையில் இழந்ததை எப்படி எப்போது மீட்கப் போகிறீர்கள் என மொரிசியஸ் தீவிலும் (1989), தென்னாப்பிரிக்கா விலும் (1993) கடுங்குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறேன். இது என் இறையாண்மையில் ஏற்பட்டதுதான். தவறு என்று உணரும் மனத்தைத் திருத்திக் கொண்டு நடக்காதது ஏன்? காலஞ்சென்ற பெற்றோர்களின் மீது பழிபோடுவது எதற்காக என்பதே என் கேள்விகள். அப்போது வெறும் மதமும், கலாசாரமும், உணவும் அவர்களைத் தமிழர் என அடையாளங்காட்டவில்லை. இவ்வாறு அடையாளமிழந்தவர்கள் எப்படிப் பட்டோர்? பண்பாடில்லாத கலாசாரந் தேவையா?

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்'' என அன்றே திருவள்ளுவர், இவர்களைத் திருத்த முடியாது என்றார். வேலைக்கும் பிழைப்புக்குமாக அவர்கள் கல்விச் சூழல் இருந்ததால் இப்பெரிய தாக்கம் தாக்கியது.

உலகம் தழீஇயது ஒட்பம்' எனக்கொண்ட எனக்கு, அவர்களில் 'மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு' என மாறுபட்டனர் சிலர். இதனால் இம்மாறுபாடு இயக்க நோக்கில் ஊறுபட்டதாயிற்று. ஊழ் இப்படி நடந்தது.

# வன்னி வளநாட்டில் கண்ணீர்ச் சாக்காடுகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளிடையே போஷாக்கு இன்மை பெரும்பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தொண்டர் நிறுவனங்களின் ஒன்றியம் கொழும்பில் உள்ள மனிதாபிமான சேவையாற்றும் தொண்டர் நிறுவனங்களின் ஒன்றியத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களின் சுகாதாரம், கல்வி, உணவு, உட்பட மனித வாழ்க்கைக்கு அவசியமான துறைகளில் உள்ள பாதிப்புகள், பொதுவான நிலைமைகள் குறித்து அந்த அறிக்கையில் புள்ளி விவரங்களுடன் தெரிவித்துள்ளது.

சுகாதாரத் துறையில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாகவும், இதன் காரணமாக மலேரியா, வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கு உரிய நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை சீராக மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை போசாக்கின்மை மிக மோசமாகப் பாதித்துள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகின்றது. கடந்த டிசம்பர் மாதம் தொடக்கம் இவ்வருடம் ஆனி மாதம் வரையிலான 6 மாத காலப் பகுதியில் 5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களை மாதாந்திரம் அவதானித்து, அவர்களுடைய உடல் நிறைகளைப் பதிவு செய்து பட்டியலிட்டதில், ஒரு வயதுக்குக் குறைவான 14 ஆயிரத்து 267 குழந்தைகளில் 19.7 வீதமானவர்கள் போஷாக்கின்மையால் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளார்கள் என்பது புலனாகியுள்ளது. ஒன்று தொடக்கம் இரண்டு வயதுக்கு உட்பட்ட 56 ஆயிரத்து 259 சிறுவர்களில் 52.7 வீதமானவர்கள் போஷாக்கின்மையால் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளதாகக் கண்டறியப் பட்டுள்ளது.

இரண்டு தொடக்கம் 5 வயது வரையுள்ள 38 ஆயிரத்து 580 சிறுவர்களில் 57.2 வீதமானவர்கள் போஷாக்கின்மையால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப் பட்டுள்ளமைக்கான காரணங்கள் என்ன என்பது குறித்தும் இந்த ஆய்வின்போது ஆராயப்பட்டுள்ளது. அதன்படி...

○ கடந்த 1983ஆம் ஆண்டு முதல் வடபகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கின்ற யுத்த நிலைமைகள்.

○ கடந்த 1992ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரையிலான பகுதியில் திருகோணமலை யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்த நிலையில் வன்னிப் பகுதியில் வந்து தஞ்சமடைந்தமை.

○ மக்கள் தொகையின் அதிகரிப்பிற்கு ஏற்ப வன்னிப் பகுதியில் அடிப்படைச் சுகாதார இருப்பிட வசதிகள் மேம்படுத்தப்படாமை.

○ கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட மிக மோசமான மலேரியா மற்றும் வயிற்றோட்ட நோய்களின் தாக்கங்கள் .

○ இடம் பெயர்ந்த மக்களிடையே பெருகியுள்ள வேலையில்லாத் திண்டாட்டம்.

○ அரசாங்கத்தின் மோசமான நிவாரண வெட்டு நடவடிக்கை.

தட்ப வெப்ப நிலைகளினாலும் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளினாலும் ஏற்பட்ட உணவு உற்பத்தி மீதான பாதிப்புகள்.

கடந்த 1996 ஆம் ஆண்டு முதல் குழந்தைகள், பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணிப் பெண்கள், நோயாளிகள் போன்றோருக்கான திரிபோஷா உணவுப் பொதிப் பங்கீடு நிறுத்தப்பட்டமை போன்ற காரணங்கள் சிறுவர்களின் உடல் ஆரோக்கிய நிலைமைகளைப் பாதித்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில் கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களில் 25 ஆயிரம் மாணவர்கள் பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாமல் இருக்கின்றனர். இதனால் அவர்களின் உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்பு ஆகியன பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக முல்லைத் தீவு மாவட்ட கல்விப் பணியாளர் எஸ். சுப்பிரமணியம் திருகோணமலை சென்ஜோசப் கல்லூரியில் யுனிசெவ் நிறுவனம் நடத்திய கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

இந்த இரு மாவட்டங்களிலும் பிறப்புச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் கல்வி பயிலும் இந்த மாணவர்களின் பிரச்சினை.... ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதி அவர்களுக்குப் பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பதிவாளர் நாயகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கடந்த 1995இல் இருந்து யாழ்மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து வன்னி மாவட்டங்களுக்கு சுமார் 50 ஆயிரம் மாணவர்கள் வந்தனர். அவர்களின் பிறப்புச் சான்றிதழ்கள், அவர்கள் யாழ் மாவட்டத்தில் படித்த பாடசாலைகளில் இருந்து காணாமல், அழிந்து போய்விட்டன. இப்பிறப்புச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் கொழும்பில் அல்லது யாழ் செயலகத்தில் இருக்கக் கூடும். அங்கு சென்று இவற்றைப் பெறமுடியாத நிலையில் இவர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு உதவி புரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும் எனவும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

—திரு.

# யுனெசுகோ:
# தேசிய விடுதலைப் போர்களை வெகுவாக புறக்கணிக்கிறது

**1945**—1995 ஐ.நா. பொன்விழா கொண்டாடப்பட்டுள்ளது. யூனெசுக்கோ 50 ஆண்டு வரலாறும் அதன் பதிவாவணங்களில் பதிவு பெற்றன. இவற்றின் முக்கிய குறிப்படைவுகளையும் வெளியிட்டனர். அமைதிக்கு ஆற்றுப்படுத்தும் நடவடிக்கைகளின் வேதனை — சாதனைகளுடன், தோல்விகளையும் குறித்துக் காட்டப்பட்டது. அமைதிகாப்புப் பணியில் எவ்வாறு வெற்றிகள் வீழ்ந்துபோயின என்ற சோகக்குறிப்பும் உண்டு.

இந்தப் பல்வேறு அதனமைப்புக்களில் சில நெறிப்படுத்திய பயணங்கள் எவ்வாறு மாற்றப்பட்டுப் போயிருக்கின்றன என்ற செய்திகளையும் நாம் அறிந்தோம். ஆனால் அதன் ஆவணங்கள் முழுமையடையவில்லை. ஆட்சிப்படையணிகளைக் கொண்ட அரசுகள் மட்டுமா? மனித உரிமை, மண்ணுரிமைப் போரியல் வரலாறு ஏன் அதில் இல்லை?

ஐ.நா. ஆற்றுப்படுத்தியது நூற்றுக்கு நூறு வெற்றியல்ல என அதன் ஆவணங்கள் கூறுகின்றன. பல நாடுகளில் மனித உரிமைக்கான தனித்தனி தேசிய உரிமைப் போராட்டங்களின் வரலாற்றை அது தொகுக்கவில்லை. உள்நாட்டுத் தேசிய இனவரலாறும் மொழியினப் போர்களும் அதில் இடம் பெறவில்லை. அரசு சார்பற்ற (NGO) அந்த பேரியக்க வரலாறும் அதன் சாதனைகளையும் அதன் ஆவணங்கள் புறக்கணித்து உள்ளன. ஐரோப்பிய இனவாதிக்கப் பண்பாட்டு மரபே அதில் மிளிர்கின்றன. பன்னாட்டு இனங்களின் எழுச்சியும் ஆட்சியுரிமையும் எவ்வாறு எப்போது பறிக்கப்பட்டன என்பதை எல்லாம் அது கைகழுவி இருக்கிறது.

இந்தியாவில் வெள்ளையர் வந்தபின் தங்கள் பேராண்மைக்காக 56 நாடுகளை ஒன்றாக்கினார்கள். இலங்கையிலும் அதுபோல் இரண்டு நாடும் இரு தேசிய இனங்களும் இருந்ததை ஒன்றாக்கி ஆண்டார்கள். ஈழத்தில் 1972 வரை மண்ணுரிமை பறிக்கப்பட்டு சிங்களவர்களிடம் கொடுத்துவிட்ட ஆங்கிலேயர்களின் செயலுக்குப் பின் அங்கு தேசிய இனப்போர், ஒரு அரசு போலவே தலை எடுத்தது. இது ஐரிஸ் தேசிய விடுதலையைப் போலவே அமைந்தது. பயங்கரவாதச் செயலைச் செய்து வரும் அமெரிக்காவே உலகச் சட்டாம்பிள்ளை. இது பேசும் மனித உரிமை, போலியானது. இதனை நம்பி பல தடவை ஐ.நா. தவறு செய்திருக்கிறது.

பிரஞ்சுக் குடியாட்சித் தீவுகளிலும், இந்தோனேசியாவிலும், சிறப்பாக ஐரோப்பியர் எங்கெங்கு நாடு பிடித்து ஆண்டார்களோ அவற்றின் சிக்கல்களை அந்தந்த நாட்டுத் தேசிய மனித உரிமைகளை மூடி மறைத்துவிட்டனர். இந்த வரலாற்றுச் செய்தி ஐ.நா. உலக வரலாறும், அதன் ஆவணங்களிலும் நாடுகளுக்கிடையிலும், ஒரு நாட்டின் இரு வேறு தேசிய இனங்களுக்கு இடையிலும் நடந்த சுயாட்சிப் போர்கள் இடம் பெறாமல் போயிருக்கின்றன. ஒரு நாடு அதே நாட்டின் மற்றொரு தேசிய இனத்தைத் தன் படைவலிமையால் கொல்லப்பட்ட வரலாறும் அதில் பதிவாக்கப்படவில்லை! ஐ.நா.- யூனெசுக்கோவின் குறிப்புகளில் ஏன் தேசிய இன மக்களின் அந்த விடுதலைப் போரியல்கள் வரலாறாக ஆக்கப்படவில்லை? ஐம்பது ஆண்டுக்கு முன் ஐரோப்பாவில் இன அரசியல் மாற்றங்கள் ஏற்பட்ட குறிப்புள்ளபோது, இன்றுவரை அதே ஐம்பது ஆண்டின் வரலாற்றில் இது இடம் பெறவில்லை. அப்போரியல் வரலாறுகள் ஐ.நா. ஆவணப் பதிவுகளில் இடம் பெறாமல் மறைக்கப்பட்டது. இதன் மூலம் ஐரோப்பிய அமெரிக்கர் சதியாகும்.

ஐ.நா. கடமையும், பண்பாண்மையும் என்ன? அதன் முக்கிய வரலாற்றுத் தேதிகளிலும் இது

இல்லை. முக்கியப் போர்கள் என்ற தலைப்பிலும் பல முக்கிய போர் குறிப்புகள் இல்லை. இந்தியா, பாகிஸ்தான் அரசிடமிருந்து கிழக்கு வங்கத்தை மீட்டுத் தந்தது, இந்தியப்படை 1987ல் அத்துமீறி தமிழீழத்தில் நுழைந்தது முதலியன அதில் இடம் பெறவில்லை. மூன்றாம் தரப்பு நாடுகளின் போராட்ட உரிமைகளும் அதில் காணோம். சார்பற்ற உலகப் போரியக்க விடுதலைக் குறிப்பேடுகள் அனைத்தும் மறைக்கப்பட்டு இருக்கின்றன. சில நாட்டுப் பல இனமக்களின் அரசியலமைப்பு, ஓரினத்திற்கு மட்டுமே பயன் தருவது இதன் கண்களுக்கு படவில்லையா? பல இன சமுதாயங்கள் அமைந்த ஒரு நாடு, ஓரினச் சிறுபான்மையின் வல்லதிகார அரசியல் சாசனத்தைத் திருத்தச் செய்த அரசியல் முறையீடுகள் அதன் குறிப்பேடுகளில் இருந்தும் நாளடைவில் அது நீக்கப்பட்டது. மனித உரிமைப் பொதுமைச் சாசனமாக எழுதச் செய்யத் தூண்டும் அதிகாரம் ஐநாவுக்கிருந்தும் ஏனோ அப்படிச் செய்ததோ?

இந்தியாவில் ஒரு சிறுபான்மை இனம் பல இனத் தேசியங்களை படைபலத்தாலும், பணபலத்தாலும் ஆளுவது மூடி மறைக்கப்பட்டது. இலங்கையில் பெரும் பான்மை சிறுபான்மையை ஒழிப்பதும் அவ்வாறே! எத்தனையோ பிரச்னைகள் அதனை நம்பிய அடித்தளம் ஐ.நா பேரவையில் வெட்டதிகாரத்தில் ஒழிக்கப்பட்டன. மூன்றில் இரண்டு என்ற வாக்கு முடிவு தருமத்தின் அடிப்படையல்ல. சிறுசிறு நாடுகள் பேரவையில் கொத்தடிமை ஆக்கப்பட்டு இருக்கிறது. எந்த ஓரினத்திற்கு மட்டும் நீண்டகால சிறப்புரிமை தருவது எல்லாம் உள்நாட்டு அரசியல், அந்நாட்டுச் சிக்கல் என அந்த உலகம் வாளாதிருப்பது உலக அறநீதியல்ல. தனி மனித உரிமைச் சாசனத்தில் தலையிடுதல் செய்யோம் என்று அதன் செயலாண்மை கூறுவது வேடிக்கை.

இந்தியா, இந்தோனேசியா, இலங்கை, மலேசியா, பிலிப்பைன்ஸ், சீனா போன்ற நாடுகளில் இச்சீரழிவு மிகுதி. ஜெனீவா ஒப்பந்தம் பல நாடுகளால் மீறப்பட்டன. மூன்றாம் நாடுகளும் சார்பற்ற (அரசாங்கமற்ற) தேசிய இனங்களின் கருத்துக்கள் மறைக்கப்பட்டன. பல உட்சதிகள் பண அரசியலில் விளைந்திருக்கின்றன.

ஐ.நா. மன்றம் உலகப் போர்களைத் தடுத்துச் சமாதானமும் அமைதியும் நிலைநாட்டியுள்ள சூழல்களில் அதன் கடமையும் பொறுப்பும், செயல்களில் ஏற்பட்டுள்ள தோல்வியைப் பட்டியலிட்டுள்ளது. ஏமாற்றக் குறைபாடுகள் ஏன் தோன்றின என்பதையும் அது விளக்கியுள்ளது. வரலாற்று அடித்தளம் சிதறுண்டதாக அது வருந்துவதற்கு காரணமே அதன் அமைப்புகளின் ஓட்டையே. உலக முதலாளியங்களில் வல்லதிகாரம் இம் மன்றத்தில் இல்லை என அதனால் சொல்ல முடியவில்லை.

இருநூறு முந்நூறு ஆண்டுகளில் உலகத் தலைவிதிகளையே மாற்றிய ஐரோப்பிய பல அரசுகளால் ஏற்பட்ட விளைவுகளும், அவை அந்தந்த நாட்டுத் தேசிய இனங்களுக்கு விடுதலை வழங்காமல் இன்னமும் படைபலம், பணபலத்தால் ஆண்டுவரும் நிலைகள் மறு ஆய்வு செய்வதும், அடுத்த ஐம்பது ஆண்டுகளில் ஐ.நா. பணியாக வேண்டும். இப் பல்வேறு கண்டங்களில் இருந்து வெறும் மனித உரிமை மட்டும் போதும் என அகதிகளாக ஓடி வாழும், இந்த ஐரோப்பிய நாடுகளின் எதிர்காலம் எப்படி ஆகும்? அறிவியல் கலாச்சாரங்களில் மூழ்கி உணவு, உடை, உறைவிடத்துக்காக இவ்வாறு போவோரின் போராட்டம் வேறு ; மண்ணுரிமை சுயாட்சிக்காகப் போராடும் தேசிய இனக்கடமை வேறு.

அமைதிக்கு ஆற்றுப்படுத்தும் பெரு விழாவுக்கு அரசு சார்பற்ற பேரியக்கம் அழைக்கப்படவில்லை. அரசு ஆளுங்கட்சி சேராத இவ்வியக்கங்களுக்கும் பங்குடமை தருவது 21ம் நூற்றாண்டில் ஏற்படும். உலகில் முதல் அமைதிப் போர்களை நடத்தியவர்கள் தமிழர்களே! ஆற்றுப் படைகளில் வரலாறு உண்டு! சங்க இலக்கியங்களிலும் அதற்குமுன் திருக்குறளிலும் போர்களையும், வல்லாண்மையையும் ஆற்றுப்படுத்திய வரலாறுகள் தமிழர்களுடையது. உலகம் எங்கும் மிகப் பழங்காலத்தில் இதனைச் செய்துள்ளனர். உளவறிவு ஒற்றுக்கலை, தூது, பயணச் செலவு, பண்பாண்மை ஆகிய உத்திகளால் திருவள்ளுவர் காலத்துக்கு முன்னும் பின்னும் இவ்விதக் கருத்துக்கள் பரப்பப்பட்டிருக்கின்றன. போர்கள் ஒழிக்கப்பட்டன. அமைதி காக்கப்பட்டது. சிற்றரசரும், அறிவியல் புலவர்களும், சான்றோரும் இதனைச் செய்தனர்.

**சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப் படை நூல்கள் 1600 ஆண்டுக்கு முன்** பாடப்பட்டவையும், அதன் பிறகு நிகழ்ந்ததும் உண்டு. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பாடு தி.வ. (கி.மு) காலத்துக்கு முன்பே தமிழர்களால் உலகம் எங்கும் தூது சென்று பரப்பப்பட்டன.

மத்தியக் கிழக்கிலும், அதன் ஆசிய, அராபிய ஆப்பிரிக்கப் பகுதிகளில் தரைவழி — கடல் வழியாக நாவலந்தீவிலிருந்து இவ்வாறு சென்றவர்கள் பாடாற்றினர். ஆற்றுப்படுத்தும் கலைகளைக் கற்றுத் தந்தவர் தமிழரே முதன்மை! ஆரியர்களல்ல, இதற்கு பாரதம் — இராமாயணப் போர்களே சான்று ஆதாரமாகும். ஆரியப் படை கடந்த தமிழரசர்களே இதனைச் சாதித்தனர். ஆரிய முனிவர்களுமல்ல. ஆரிய அரசர்களுமல்லர். முதலாளிய முடியரசாக உலக மன்றம் ஆகக் கூடாது.

●

---

# பண்பாட்டுப் பரிதி

உலகமெல்லாம், ஒருகுடும்ப மாக வேண்டின்,
உயர்ந்ததமிழ்ப் பண்பாடு பரவ வேண்டும்
நலமான உண்மையிதை நெஞ்சில் வைத்தே
நாடெல்லாம் சுற்றிவரும் தேனீ ஆவான்;
புலமையினில் வீரப்பன் கடலே போன்றான்;
பொழுதெல்லாம் தமிழொன்றே மூச்சாய்க் கொண்டான்
பலநாட்டில் வாழ்கின்ற தமிழர் தம்மைப்
பண்பாட்டின் அடிப்படையில் ஒன்றாய்ச் சேர்த்தான்

ஈரைந்தாண்டுகளாக இந்தத் தொண்டை
எத்தனையோ இடர்ப்பாடு நேர்ந்தபோதும்
வீரப்பன் எனும்பெயருக் கேற்றாற்போல
வெற்றியினை மலைபோலக் குவித்து வைத்தான்
பாரெல்லாம் தமிழ் மணந்தான் பரவு தற்குப்
பகலிரவு உழைப்பவனை அறியார் யாரே!
சீரான "கானல்வரி" கதைகள் பூத்த
தேன்சிந்தும் இலக்கியத்தைப் படைத்த செம்மல்

திறனாய்வுத் துறையிலே புதுமை கண்டான்:
செவ்வியநற் கட்டுரைகள் சிறப்பாய்த் தந்தான்
இறவாத பூஞ்சோலை ஆகும் அந்த
இனிய தமிழ்க் கட்டுரைகள் அனைவருக்கும்
உறவான பண்பாட்டின் இயக்கத் தந்தை
உத்தமனாம் வீரப்பன் பணிகள் எல்லாம்
அறநெறியாம் ஆலமர விழுதாய் இந்த
அவனியிலே வேரூன்றி வளர்க! வாழ்க!

**—அமரர் தணிகை உலகநாதன்**
**சென்னை வானொலி சிறுவர் சங்கம் முன்னாள் பேரவைத் தலைவர் 1986**

பண்டிதத் தேர்விலும், புலவர் தேர்விலும் வென்ற பாவாணர் சென்னைப் பல்கலைக் கழகம் நடாத்திய வித்துவான் தேர்வும் எழுதி வெற்றி பெற்று பின்னர் பி. ஓ.எல்.தேர்வும் எழுதி கலை முதியர் (எம்.ஏ.) பட்டம் பெற்றார். எம்.ஓ.எல். பட்டம் பெறுவதற்குப் பாவாணர் விரும்பி அப்பட்டத்திற்குரிய ஆய்வில் அமிழ்ந்தார். திராவிட மரபு தோன்றிய இடம் குமரி நாடே என்னும் பொருள் பற்றி இடுநூல் (Thesis) எழுதிப் பல்கலைக்கழகத்தில் படைத்தார்.

பாவாணரின் இடுநூலைப் பல்கலைக்கழகம் ஏற்காமல் தள்ளிவிடவே அதனால் இனிமேல் இந்தியாவுக்குள் எனக்கு ஒரு தேர்வும் இல்லை என்று முடிவு செய்து முற்றிலும் சொல்லாய்விலேயே வாழ்நாளெல்லாம் செலவிட்டார் பாவாணர். பாவாணர் ஐம்பது ஆண்டுகள் சொல்லாய்விலேயே அழுத்தமாக ஊன்றிய உரவோர்.

தமிழாராய்ச்சியில் ஆழ முழுகித் தமிழின் அடிமட்டத்தைக் கண்ட இவர் சொல் ஆராய்ச்சியில் வழக்கும் செய்யுளுமாகிய இருவகை வழக்குகளையும் இயல்பாக எடுத்துக் காட்டி தமது ஆய்வுத் திறத்தை திறம்பட நிறுவியுள்ளார். இருவகை வழக்குகளிலும் இவர் பெற்றிருந்த புலமை சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் என்னும் நூலில் வழக்கற்ற சொற்கள் என்று வரையும் பகுதியால் நன்கு புலப்படும்.

உலகின் முதுமொழி தமிழே என்பதை ஐயந்திரிபற நிலைநாட்டிய மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் எழுதிய இறுதிக் கட்டுரை உலகத் தமிழ் கருத்தரங்கு மாநாடு என்னும் கட்டுரையாகும். இருப்பினும் உலகத் தமிழ் ஐந்தாவது மாநாடு மதுரை மாநகரில் 4.1.1981—ல் நடைபெற்றபோது வெளியிட்ட மலரில் இடம் பெற்றதும் பாவாணரால் மாநாட்டில் படிக்கப் பெற்றதும் ஆகிய கட்டுரை, *தமிழின் பிறந்தகம்* என்பதாகும். தமிழனின் பிறந்தகம் கட்டுரைப் பொழிவின் இடையே 5.1.1981ல் மாரடைப்பால் தாக்குண்டு 15.1.1981—ல் இயற்கையுற்றார்.

பாவாணர் தலைமையேற்று தமிழியக்கக் கொள்கைகளைப் பரப்புவதற்கு அமைக்கப்பட்ட அமைப்பே உலகத் தமிழ்க் கழகமாகும்.

**நன்றி : தினமுரசு**

# அகதிகள், குடிபெயர்ந்தோரின் உரிமைகளுக்கான பேரணி

ஜேர்மன் நாட்டில் தற்போது அரசியலில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், வெளிநாட்டவர்களுக்கு எதிரான செயற்பாடுகள், வேலையில்லாத் திண்டாட்டங்கள் இவைகளினால் பல நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவைகளைக் கருத்தில்கொண்டு வெளிநாட்டவர், அகதிகளை வெளியேற்றும் நோக்குடன் ஜேர்மன் உள்நாட்டு அமைச்சகம் பல சட்டமாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.



பேர்லினில் அமரர் கி.ஆ.பெ. அவர்களுடன் தமிழறிஞர்கள்

ஜேர்மனியிலே அகதி அந்தஸ்துக் கோரி விண்ணப்பித்தவர்களில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம்பேர் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு சகிப்புப் பத்திரம் பெற்றவர்களாக எந்த நேரமும் நாட்டைவிட்டு வெளியேற்றப்படக் கூடியவர்களாக நிம்மதியற்று பயந்த சூழலில் வாழ்ந்து வருகின்றனர். சுமார் 6000 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்களும் இப்பேற்பட்ட சூழலில் இருக்கின்றார்கள். இவர்களில் பலர் மிக நீண்ட காலமாக வாழ்ந்துவரும் குடும்பத்தவர்களும் அடங்குவர். இவர்கள் வேலை செய்பவர்களாக, பிள்ளைகள் இங்கேயே பிறந்து படித்து வருபவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் வேலை வாய்ப்புகள் கிடைத்தால் தாங்கள் அகதி என்று வந்த விண்ணப்பம் செய்ததை மறந்து ஏதோ விசாக்கள் இருக்கிறது தானே என்ற எண்ணத்துடன் அகதி விண்ணப்ப வாக்குகள் பற்றியோ அதனால் பிற்காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியோ சிந்திக்காமல் இருந்ததினாலேற்பட்ட நிலைதான் காரணமாகும். புதிதாக வந்து அகதி விண்ணப்பங்கோரி சொந்தப் பிரச்சனைகளை நிரூபிக்க முடியாத காரணங்களால் அகதிவிண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களும் பலர் அடங்குவர்.

இவர்களது நிலைகளைக் கருத்தில்கொண்டு சர்வதேச மனித உரிமைச் சங்கம் பிறேமன், உலகத் தமிழர் இயக்கம் ஜேர்மனி இரண்டும் இணைந்து இந்த ஆண்டில் ஜேர்மன் ரீதியான பேரணி ஒன்றினை நடத்த ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். இதற்கு ஜெர்மன் ரீதியாக ஐம்பதிற்கு மேற்பட்ட அகதிகளுக்கான குழுக்கள் அவற்றிற்கு ஆதரவானவர்கள் அனைவருக்கும் ஆதரவுதந்து அகதிகள் மீது எடுக்கப்படும் மனிதாபிமானமற்ற அரசின் செயற்பாடுகளைக் கண்டிக்கும் முகமாகவும், அகதிகளைத் திருப்பி அனுப்புவதை நிறுத்தக் கோரியும், அகதிகளுக்கெதிராக பரவலாக நடத்தப்பட்டுவரும் தாக்குதல்களைக் கண்டித்தும் இந்தப் பேரணியை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பேரணிக்கு சமய ஸ்தாபனங்கள் சில அவைகளது சங்கங்கள் வெளிநாட்டவர்களை எதிர்க்கும் வலதுசாரிகளுக்கு எதிரான அமைப்புகள், ஜேர்மன் ரீதியான ஒரு மனிதனும் சட்ட விரோதமாக இல்லை என்ற அமைப்பு, வெளிநாட்டவர்களுக்கு ஆதரவான ஜேர்மனிய குழுக்கள் அதிக ஆதரவைத் தருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பேரணி ஆவணி மாதம் 15—ம் திகதி பிறேமன் நகரத்தில் ஆரம்பித்து புரட்டாதி 20ம் திகதி கேல்ன் நகரத்தில் முடிவடையும். இது ஜேர்மனியின் பிரதான நகரங்களூடாக நகரம் நகரமாகச் செல்லும். சுமார் 25 முக்கிய நகரங்களில் (கிழக்கு மேற்கு உட்பட) தரித்து நின்று அங்கு சிறிய பேரணி, தகவல் மேசைகள், கலை கலாச்சார நிகழ்வுகள், கண்காட்சிகள் என்பன நடத்தப்படும். இதன் மூலம் அகதிகளாக வந்தவர்களது அரசியல்

பிரச்சினைகள், அவர்களது சொந்த நாட்டிலுள்ள அரசியல் பிரச்சினைகள், மனித உரிமை மீறல்கள் என்பனவற்றை வெளிப்படுத்துவதே முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் அந்த உள்நாட்டு நிலைகளை ஜேர்மன் நாட்டவர்களுக்கு மட்டுமல்ல ஏனைய நாட்டவர்களுக்கும் வெளிப்படுத்த முடியும். இப் பேரணி நகரத்துக்கு நகரம் செல்லும்போது பேருந்தில் செல்வதாகவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பேரணியில் தமிழ் மக்கள், குர்திஸ் மக்கள், வியட்நாமியர், ஏனைய ஆசியநாட்டவர், ஆப்பிரிக்க நாட்டவர், தென் அமெரிக்க நாட்டவர், ஜேர்மனிய மக்கள் ஜேர்மன் அகதிக் குழுக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். ஜேர்மனியில் இருக்கும் அகதிகளைத் திருப்பி அனுப்பாதீர்கள். அவர்களது சலுகைகளைக் குறைக்காதீர்கள். அவர்களது மனிதாபிமான உதவிகளை நிறுத்தாதீர்கள் அவர்களை திருப்பி அனுப்புவதால் அவர்கள் தங்கள் நாடுகளில் உயிர் ஆபத்துகளை எதிர்கொள்வார்கள் என்பவைகளை அடிப்படையாக வைத்து துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப் படுவதுடன், பதாகைகளும் கொண்டு செல்லப்படும்.

ஜேர்மனியைப் பொறுத்த வரை பொதுவாக அரசியல்வாதிகள் வெளிநாட்டவர் அகதிகள் பற்றிய பலவிதமான அறிக்கைகளை வெளியிடுகின்றார்கள். அகதிகளது சமூக உதவிப் பணத்தைக் குறைத்துள்ளார்கள். சகிப்புப் பத்திரம் வைத்திருப்பவர்களுக்கான உதவிப் பணத்தை முற்றாக நிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளார்கள். இவர்கள் நல்ல வதிவிட அனுமதி இல்லாத காரணத்தால் வேலை செய்ய முடியாது. சமூக உதவிப் பணமும் கிடைக்காதுவிட்டால் இருப்பிட வசதியும் கிடைக்காது. இதனால் இவர்கள் பொருளாதார நெருக்கடியால் தாங்களாகவே நாட்டைவிட்டுப் போக நிர்ப்பந்திக்கப் படுவார்கள். அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேறும் படி கடிதம் வந்தவர்கள் தாங்களாக வெளியேறாத பட்சத்தில் கட்டாயமாக குற்றத்தடுப்புப் போலீசாரால் பிடித்து அனுப்பப்படுகிறார்கள். இவைகள் எல்லாம் மனிதாபிமானமற்ற செயல், ஜனநாயக நடைமுறைக்கு அப்பாற்பட்ட செயல்கள் என்பதனை எடுத்துக்காட்டவே இப்பேரணி முனைகிறது.

ஜேர்மனியிலே அகதி என வந்து விண்ணப்பித்து அகதி அந்தஸ்த்துக் கிடைத்திருந்தாலும் அதுகூட ஒரு நிரந்தரமற்ற நிலையில்தான் உள்ளதெனக் கூறவேண்டியுள்ளது. அகதி விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஐக்கிய நாடுகள் அகதி தாபனத்தின் 52—வது பிரிவின்படி ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களது வழக்குகளை மீளாய்வு செய்து நிராகரித்து அவர்களுக்கு சகிப்புத் பத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. இதைவிட வதிவிட அனுமதிப்பத்திரம், காலவரையற்ற அனுமதிப் பத்திரம் பெற்றவர்களும் தேவை ஏற்படின் அவர்களது அகதி விண்ணப்ப வழக்குகள் மீளாய்வு செய்யப்பட்டு நிராகரிக்கப்படலாம். நீண்டகாலமிருந்து பழைய நடைமுறை விதிகளுக்கமைய (Alt Fall Regalung) வதிவிட அனுமதி பெற்றவர்களது அனுமதிகள் கூட மீளப் பெறப்பட வாய்ப்புண்டு. ஜேர்மனியில் வெளிநாட்டவர் சட்டத்தில் புதிய நடைமுறைவிதி என மாற்றத்தைக் கொண்டு வந்தமையால் இத்தகைய சந்தேகங்கள் எழுகின்றன. இதனை தற்போது இந்த அனுமதிப்பத்திரங்கள் வைத்திருப்பவர்களது குடும்ப ஒருங்கிணைப்பு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதைக் கொண்டு உறுதி செய்யக் கூடியதாக இருக்கிறது.

அதாவது முன்பு வதிவிட அனுமதிப்பத்திரம் (Aufenthalt erlaubnis), தற்காலிக வதிவிட அனுமதிப்பத்திரம் (Aufenthalt Befugnis) வைத்திருப்பவர்கள் தங்களது மனைவி பிள்ளைகள் நாட்டிலிருந்து கூப்பிட்டு இங்கு இருக்க அனுமதி கொடுத்தவர்கள் தற்போது அந்த அனுமதியைக் கொடுக்க மறுகின்றார்கள். இது வெளிநாட்டவர்களது உரிமைகளை மட்டுப்படுத்தும் ஜேர்மன் வெளிநாட்டவர் சட்டத்தினை நிரூபிக்கின்றது.

இதைவிட குற்றச் செயல்கள் செய்பவர்கள், ஜேர்மன் சமூகத்திற்கு இடையூறு விளைவிப்பவர்களான வெளிநாட்டவர்கள் எந்தவிதமான அனுமதிப் பத்திரம் வைத்திருந்தாலும் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்படலாம் என்று வெளிநாட்டவர் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இப்படியான

நடைமுறை பொதுவாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் படிப்படியாகக் கொண்டு வரக்கூடிய நிலை உள்ளது. எனவே தமிழர்களாகிய நாங்கள் எமது எதிர்காலம் எமது பிள்ளைகளின் எதிர்காலம் என்பவற்றை நன்கு சிந்தித்து திட்டமிட்டுக் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம் என்பதனை நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையிலிருந்து சிங்கள இனவாத அரசின் கொடுமைகள், கொலைகள், மனித உரிமை மீறல்கள், பாலியல் வல்லுறவுகளி லிருந்து தப்பித்துவரும் தமிழ் அகதிகளை தனிப்பட்ட சொந்த பிரச்சினைகளுக்கான காரணங்கள் நிரூபிக்கப்படாத இடத்து அவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்ப முற்படுகிறது. ஆனால் இலங்கைக்கு கோடிக்கணக்கான ரூபாய்களை அபிவிருத்தி நிதி எனக்கொடுக்கின்றது. இந்தப் பணத்தைக் கொண்டுதான் சிறீலங்கா இனவாத அரசு தமிழ் மக்களுக்கெதிரான மனிதாபிமானமற்ற இன அழிப்புப் போரை நடத்தி வருகின்றது.

1997—ம் ஆண்டு ஆரம்பத்தில் ஜேர்மன் மாநில வெளிநாட்டு அமைச்சுக்கள் தங்களது வெளிநாட்டவர் காரியாலயங்கள் மூலம் தமிழர்களைத் துரிதமாகத் திருப்பி அனுப்பின. ஆனால் இது இடையில் தடைப்பட்டது. காரணம் சீறிலங்கா தூதரகம் நாடு கடத்துவதற்கான அவசர கடவுச் சீட்டு வழங்குவதை இடை நிறுத்தியிருந்தது. பின்னர் ஜேர்மன் அரசு சிறீலங்கா அரசு உதவிப்பணத்தை 20 மில்லியன் மார்க்குகள் கொடுத்தவுடன் அவசர கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டன. திருப்பி அனுப்புவதும் துரிதப்படுத்தப்பட்டது. மீண்டும் இந்த ஆண்டில் தடையேற்பட்ட காரணத்தால் திருப்பி அனுப்புவது குறைவாகவே காணப்படுகிறது.

ஜனநாயக விரோத, மனிதாபிமானமற்ற மனித அடிப்படை உரிமை மீறல்களை வெளிப்படுத்தி எங்களது உரிமைக்காகக் குரல் கொடுக்கவும், எங்களது நாட்டில் எமக்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளிப்படுத்தவும், அகதிகளை மனிதாபிமானமற்ற முறையில் திருப்பி அனுப்பாதீர்கள் எனக்கோரியுமே இந்தப் பேரணி நடத்தப்படுகிறது. நாம் எதிர்த்துக் குரல் கொடுப்போம். அகதிகளாக இங்கு வந்திருப்போர், குடிபெயர்ந்து வந்திருப்போர் எந்த நாட்டிலிருந்து வந்திருந்தாலும் ஜேர்மனியில் எப்பகுதியில் இருந்தாலும் தங்களது நாட்டு நிலையினை எடுத்து வெளிப்படுத்த மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுக்க ஒன்று கூடுங்கள் இந்தப் பேரணியில்.

இப்பேரணி பிறேமன், கம்பர்க், கீல், லூபெக், பேர்ளின், டிறெசிட்டன், லைப்சிக் கொட்டிங்கன், கனோவர், பிலபெல்ட், பியூனர், ஒசுநாபுறூக் றேகன்சு பேர்க், முன்சன், மூபிங்கன், பிறைபேர்க், இசுராசுபேர்க் பிரான்சு, றியர், மைன்சு, வீசுபாடன், பிறாங்போர்ட்டு, கனோவ் பொண், கோப்பிளன்சு, போகும், கேண் ஆகிய நகரங்களிலும் அண்மித்த நகரங்களிலும் வாழ்ந்து வரும் தமிழீழ மக்கள் அந்தந்த நகரங்களுக்கு இந்தப் பேரணிவரும் பொழுது அதில் கலந்துகொண்டு ஒத்துழைப்புக் கொடுக்கவும். இப்பேரணி வரும் திகதிகள் பத்திரிகைவாயிலாக அறிவிக்கப்படுவதுடன், கூடியவரை அந்தந்த நகரங்களில் வாழும் தமிழீழ மக்களுக்கு உலகத் தமிழர் இயக்கம் அறியத் தரும். இந்த நகரங்களில் தமிழீழத்தின் உண்மை நிலையினை வெளிப்படுத்த தகவல் மேடை, கண்காட்சிகள், கலைநிகழ்ச்சிகள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இவைகளிலே பெருந்திரளாகக் கலந்து எமது தாயகத்தின் உண்மை நிலைகளை ஜேர்மன் மக்களுக்கு வெளிப்படுத்த ஒத்துழைப்பு நல்கும்படி உலகத் தமிழர் இயக்கம் தமிழீழ மக்களை கேட்டுக் கொள்கிறது.

இந்த நிகழ்வுகளின் மூலம் நாங்கள் தமிழீழத்தின் அரசு மேற்கொண்டுவரும் இன அழிப்பு போர், அதனால் ஏற்படும் மக்களின் இழப்பு, பொருளாதார அழிவு, மக்கள் இடப்பெயர்வு, அவர்கள் படும் துன்ப துயரங்கள், மருந்துத்தடை, பாலியல் வல்லுறவுகளால் ஏற்படும் கொடுமைகள் போன்ற மனித உரிமை மீறல்களை நாங்கள் ஜேர்மன் மக்களுக்கு வெளிப்படுத்துவதுடன், தமிழ் அகதிகளைத் திரும்ப அனுப்ப வேண்டாம் என்ற கோரிக்கையையும் முன் வைக்க முடியும். எனவே இப் பேரணியில் அனைத்துத் தமிழீழ மக்களும் கலந்து கொள்ள வேண்டியது அவர்களது தார்மீகக் கடமையாகிறது.

**-இரா. சோமஸ்கந்தன்**

பொதுச்செயலாளர், ஜேர்மன் உலகத் தமிழர் இயக்கம்

# மொரீசியசு தமிழர் வரலாறு (1735-1985)

**"ஒவ்வொரு நாடும் தனது வரலாற்றைப் பற்றிப் பெருமையடைகிறது. தமிழர்களாகிய நாங்களும் எங்களுடைய வரலாற்றை அறிந்து பெருமை கொள்கிறோம்."**

*3000* ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் கடலோடிகள் மொரீசியசு தீவினைக் கண்டு பிடித்துள்ளார்கள்.

*1735*—இல் தமிழரின் கட்டட கலைத்திறன் அறியமுடிந்தது. தீவினுள் உள்ள துறைமுகம், அரண்மனைகள், கோட்டைகள், கற்கட்டிடங்கள், சாலைகள், கோயில்கள் போன்றவை தமிழரின் கைவண்ணங்களில் உருவாகினர்.

*1736*—இல் பி. தாண்டவன் ஏ. குருநாதன் மற்றும் பலர் தமிழ் மொழியினையும் பண்பாட்டினையும் பேணி வளர்த்தார்கள்.

*1740*—இல் மொரீசியசில் தமிழ் வணிகர்கள், சிற்பிகள், நகை வியாபாரிகள் போன்றோர் குடியேறியிருந்தார்கள்.

*1744*—இல் மொரீசியசில் தமிழ் வணிகர்கள், சிற்பிகள், நகை வியாபாரிகள் போன்றோர் குடியேறியிருந்தார்கள்.

*1744*—இல் தமிழர்கள் பிரஞ்சுக்காரர்களோடு இணைந்து ஆங்கிலேயரைத் தோல்வியடையச் செய்து மெட்ராசினைக் கைப்பற்றினார்கள்.

*1771*—இல் போர்ட் லூயிசின் வடக்கே முதல் முருகன் கோவிலைத் தமிழர்கள் அமைத்தனர்.

*1772*—இல் முதல் தமிழர் இடுகாடு அமைக்கப்பட்டது.

*1773* முதல் *1809* வரை தமிழர்கள் பெரும் நிலச் சொந்தக்காரர்களாக மாறினார்கள்.

*1810*—இல் மெட்ராசு உள்நாட்டுப் படையினரும் இன்ஜினியர்கள், தமிழ்ப் படையின் உதவியோடு Mapou Bay என்ற இடத்தை அடைந்து கைப்பற்றினார்கள். இப்போரில் *8,740* தமிழ்ப் படைவீரர்களும் அதிகாரிகளும் பங்கேற்று மொரீசியசு தீவினைக் கைப்பற்ற பிரிட்டீசாருக்கு உதவினார்கள். இதனால் சர் ரோபாட் பார்குவர் தமிழர்களுக்கு அரசாங்க அலுவலகங்களில் உயர் பதவிகளை அளித்தார். தமிழர்கள் தமிழ் மொழியிலேயே ஆங்கிலேய முடியாட்சிக்கு கட்டுப்படுவதாக சத்தியம் செய்து கொடுத்தனர்.

*1827*—இல் முதல் பாராளுமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றிருந்த வெள்ளிவேல் அண்ணாசாமி Bon Espoir சீனித் தோட்டத்தின் உரிமையாளராக மாறினார்.

*1834*—இல் பாரோடா மருத்துவத் துறையைச் சார்ந்த டாக்டர் மலையப்பா சின்னப்பிள்ளை மலேரியா நோயினை எதிர்க்கும் வழிமுறைகளைக் கண்டுபிடித்தார்.

*1835*—இல் இந்தியாவிலிருந்து ஒப்பந்த தொழிலாளர்கள் மொரீசியசுக்கு கொண்டு வரப்பட்டனர்.

*1838*—இல் மொரீசியசு வணிகப் பொருளகத்துக்கு தமிழர்கள் நிதியுதவியளித்தனர்.

*1843* முதல் *1863* வரை Le Mauricion மற்றும் Le Cerneen ஆகிய ஏடுகளில் தமிழ் மொழியில்

செய்திகள் வெளியிடப்பட்டன.

1852—இல் 1770 ஏக்கர்களைக் கொண்ட Bon Espoir சீனி தோட்டத்தினை எம். திருமூர்த்தி செட்டியார் வாங்கினார்.

1856—இல் அறுபதினாயிரம் இந்தியர்களின் தலைவர்களாக எம். சின்னத்தம்பூ மற்றும் எம். மைலாப்பூர் முனிசாமி ஆகியோர் இருந்தனர்.

1872—இல் ராயல் கல்லூரியின் ஆசிரியராக இருந்த எம். ராஜரெத்தினம் முதலியார் இந்தியர்களின் பாதுகாப்புக்குப் பாடுபட்டார்.

1935—இல் எம். ராமசாமி கணபதி என்பார் பெரும் பொறுப்புக்கு உயர்த்தப்பட்டார்.

1936—இல் எம். சிதம்பரம் கறுப்பன் மற்றும் சிலரும் தொழிற் கட்சியினை அமைத்தனர்.

1943—இல் அஞ்சலை என்ற பெண்மணி சுடப்பட்டு இறந்தார்.


1960—இல் தமிழர் ஒற்றுமை கட்சி அமைக்கப்பட்டது.

1966—இல் போர்ட் லூயிசின் முதல் மேயராக எம். கிருஷ்ணமுருகன் பொறுப் பேற்றார்.

1735—முதல 1985வரை மொரீசியசு நாட்டின் எல்லா துறைகளிலும் எ.கா : கல்வி, வணிகம், அரசுப் பணி, நீதித் துறை, பொருளாதாரம், தொழிற்துறை, அரசியல், தமிழர் சமயம், கலை, பண்பாடு போன்றவற்றின் வளர்ச்சிக்குத் தமிழர்கள் நிறைய பணியாற்றியும் பணிபுரிந்தும் வருகின்றனர்.

மேலும் கடந்த காலத்தில் மொரீசியசு கலை —ஓவியம், கட்டிடக் கலை, சிற்பம் போன்ற வற்றில் தமிழரின் பங்கு பெருமளவு இருந்து உன்னதநிலையும் அடைந்துள்ளது. 250 ஆண்டுகள் வரலாறும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

லெமூரியாக் கண்டம்



# மொரிசியசு பெரியார் தங்கணமுத்து சாதனை

உ.த.ப.இ. தலைமைக் குழுவின் பொருளாளராகப் பதவி ஏற்ற (1977ல்) மொரிசியஸ் நாட்டின் மிகப் பெரும் பதவியிலிருந்த மாமனிதர், 1980ல், இயக்கத்தின் 2வது மாநாட்டை, அந்நாட்டு அரசாங்கப் பொறுப்பிலும், அதன் செலவினத்திலும், நடத்திக் காட்டிய பேறு பெற்றவர். தமிழக அரசின் அமைச்சரவைக் குழுவையும், கலைக்குழுவையும் இதற்கு அழைத்து வந்து நடத்தினார்.

இத்தீவின் மத்திய நகரத்தில், மய்யமான ஓரிடத்தை விலைக்கு வாங்கினார். அமரர் தங்கணமுத்து தமது முதிய வயதிலும் போராடி, துணிச்சலாக வெல்லும் திறன் படைத்தவர். பாரிஸ் நூலகத்தில், அரசு பழஞ்சுவடி காப்பகத்திலிருந்து, ஆதாரம் திரட்டிக் கொணர்ந்து, மொரிசியசில் முதன் முதலாக தமிழர் குடிவந்தது கி.பி.1730ல் என நிரூபித்து, இந்த நினைவுத் தூணை அறுபது அடி உயரத்தில் நாட்டினார். நான்கு மொழியில் பெயர் பட்டயம் பொறித்தவரான இவர், புதுச்சேரி பரம்பரை. தனிமனிதருக்குச் சிலை வைக்கும் தமிழக மரபை வெறுத்தார். ஆனால் நினைவுத் தூணுக்கருகில், இவரது உருவத்தையும் வைக்க வேண்டும் என உ.த.ப.இ.விரும்புகிறது.




மொரிசியசு தமிழர் குடியேற்ற 250வது ஆண்டு நினைவுத் தூண்

இந்தியா-இலங்கைக்கு வெளியே, பிறநாடுகளில் முந்நூறு ஆண்டுகளில், வேறு எவரும், எந்த நாட்டிலும் இது போன்ற சாதனையைப் படைக்கவில்லை. பெரியார் தங்கணமுத்து அவர்கள் 94 அகவை வாழ்ந்தவர். தம் துணைவியின் கல்லறைக்குப் பக்கத்திலேயே, தமக்கும் குழிவெட்டி வைத்திருந்ததை 1989ல், உலகப் பலநாட்டுப் பேராளர்களை அழைத்துச் சென்று காட்டினார்.

இந்த நினைவுத் தூண், மாமணி மண்டலமாகத் திகழ்வதையும், நாங்கள் கண்டு, மலர்மாலை சாற்றிவிட்டு வந்தோம். அழகிய நகரமன்றப் பூந்தோட்டத்தில் இந்த அரிய நினைவகம் தமிழர் மரபை நிலையாகக் காட்டிக் கொண்டு ஒளிவீசும் கலங்கரை விளக்காக நிற்கிறது. சாதனைத் தமிழரான அவர் புகழ் வாழ்க!.

# மொரீசியசு அருணாசலம் புட்பரதம்



தமிழர் நலம் பேணும் தறுகண்மையாளர் பேரறிஞர் புட்பரதம் அவர்கள் 1997ல்தமிழகத்திற்கு வருகை தந்திருந்தார். அமைதியுடனும், தன்னடக்கத்துடனும் தமிழ்ப் பணி புரியும், புட்பரதம் அவர்கள் சிறந்த சிந்தனையாளர். தம்முடைய மீக்கெழுந்த ஆர்வத்தால் தமிழைப் பயின்று மொரீசியசு நாட்டில் தமிழர்க்கு ஒரு அரணாகவும், ஒளி விளக்காகவும் தொண்டாற்றி வருகிறார். அவர் கூறியது :

'எனது தாத்தா காஞ்சிபுரம், தந்தை தென் ஆப்பிரிக்கா, அம்மா தென் ஆப்பிரிக்கா. அப்பா தென் ஆப்பிரிக்கா சென்று சீறிலங்கா வந்து மொரீசியசில் குடியேறினார். 1937—ஆம் ஆண்டு ஆறாவது குழந்தையாக மொரீசியசில் பிறந்தேன்.

நான் தமிழை முறையாகக் கற்கவில்லை. எனது தந்தையார் வெள்ளி தோறும் தேவாரம், திருவாசகம் வழிபாடு செய்ய வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்புடன் இருப்பார். குடும்பத்தார் எல்லோரும் இணைந்து இசை நிகழ்ச்சி, நாடகம் காண்போம். தமிழில் உரையாடும் வாய்ப்பு அக்கா மூலம் இருந்தது. எனக்குத் தமிழ் கற்க வேண்டும் என்ற ஆவலும் பிறந்தது.

இலண்டன் கேம்பிரிட்சு பல்கலைக் கழகத்தில் அக்கா துணையுடன் 10ம் வகுப்பு தேர்வு படித்தேன். அதில் தமிழ் ஒரு பாடம். இலண்டன் பல்கலைக் கழக உயர்நிலை தமிழ்ப் பயிற்சிக்குப் பிறகு ஊக்கம் பிறந்தது. தமிழ் தெரியும் என்ற நம்பிக்கையும் பிறந்தது.

1964 தனிநாயக அடிகளைச் சந்தித்து அவர்கள் வாயிலாக மதுரைப் பல்கலைக் கழகத்தில் படிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். இளங்கலை, முதுகலைப் படிப்பை மதுரை தியாகராசர் கல்லூரியில் சொந்த செலவில் படித்துத் தேர்வு பெற்றேன்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடம் தான் தமிழ் உணர்வு இருக்கிறது. போலித் தமிழ் உணர்வுகளை அடியோடு நீக்க வேண்டும். கடைவீதிகளில் பெயர் பலகைகள் அனைத்தும் தமிழிலேயே இருக்க வேண்டும். தமிழ் வளர்த்த மதுரையில் கட்டணக் கழிவறை என்பதற்கு பதிலாகக் கழிப்பறை என்று உள்ளது. அனைத்து நிலையிலும் திருந்திய தமிழாகவே இருக்க வேண்டும்.

உண்மைதான். தமிழுக்கு என்று ஒரு துறையை ஒதுக்கி தமிழக அரசு மக்களுக்கு ஒரு விழிப்புணர்வையும், நம்பிக்கையையும் தந்திருக்கிறது.

தமிழ் நாட்டுக்காரர்கள் ஏன் வேறு மொழியை ஆதரிக்க வேண்டும் நான் பிற மொழிகளை அறிந்து தான் கூறுகிறேன். பிரெஞ்சு, ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன் ஆகிய நான்கு மொழியும் கற்றவன் கூறுகிறேன். எவ்வகையில் தமிழ் குறைவாக உள்ளது தமிழர்கள் புலித்தோல் போர்த்திய பசுவாக உள்ளனர்.

நல்ல தமிழில் செய்தித்தாள்கள் வெளிவர ஆவன செய்ய வேண்டும். தொலைக் காட்சிகளில் நல்ல தமிழ் இருக்க வேண்டும். போலித் தமிழ் உணர்வை அடியோடு நீக்க வேண்டும்.

# அந்தமான் நிக்கோபார் தீவுகளில் முத்திரைத் தமிழர்கள்

சுப. கரிகால்வளவன்

செல்லுலர் சிறைக்குடம் வரலாற்று சிறப்பு வாய்ந்தது. இந்தியாவிலிருந்து கற்கள் கொண்டுவரப்பட்டு இந்திய சிறைக் கைதிகளால் கட்டப்பட்டவை. 2-வது உலகப் போரின் போது ஜப்பானியரின் குண்டு வீச்சில் அழியாத 4 பிரிவுகள் மட்டுமே இன்று கம்பீரமாக காட்சியளிக்கிறது.

1942-ல் ஜப்பானியர்கள் இத்தீவை ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றினர். இங்கிருந்துதான் இலங்கை திரிகோண மலைக்கு ஜப்பானியர் குண்டு வீசினர்; அதே சமயம் சென்னையையும் தாக்குதற்கான பீதியையும் ஏற்படுத்தினர். இந்திய தேசிய இராணுவத் தலைவர் நேத்தாஜி சுபாஸ் சந்திரபோஸ் முதன் முதலில் இத்தீவு மண்ணில் மூவண்ண தேசிய கொடியை ஏற்றிவைத்தார்.

நக்காவரம் என்ற நிக்கோபார் தீவு 11-ம் நூற்றாண்டில் ராஜேந்திர சோழனால் கைப்பற்றப்பட்டு சோழனின் ஆளுமைக்குட் பட்டது. புலிக்கொடி பொறித்த கல்வெட்டு நிக்கோபாரிலும், தஞ்சை பெரிய கோவிலிலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது, இதைப்பற்றி கடல்புறா என்ற சரித்திர நாவலில் சாண்டில்யன் அவர்கள் விரிவாக எடுத்துரைத்துள்ளார். இங்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய மர ஆலை உள்ளது. இது ஏறத்தாழ 100 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும். 15-9-1970ல் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை திறக்கப்பட்டது. பின்னர் நடு அந்தமான் ரங்கத்தீவில் திமுக பேச்சாளர் ஆசைத்தம்பி அவர்களின் சிலை திறக்கப்பட்டது. இப்போது பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் சிலையும், விடுதலைப் போராட்டத் தளபதி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் திருக்குறள் தந்த தெய்வப்புலவர் திருவள்ளுவர் சிலையும் நிறுவ ஏற்பாடாகி வருகிறது.

1947ல் ஆங்கிலேயர் தீவைவிட்டுச் சென்றபின்பு ஆணவம் பிடித்த அதிகாரிகள் ஏதேச்சையான போக்கால் தொழிலாளிகளை வஞ்சித்து நீதியை நசுக்கி மிதித்து வந்த சூழலில் 1952-ல் அந்தமான் முரசு நிறுவன ஆசிரியர் சுப.சுப்பிரமணியனாரின் முத்த சகோதரர்கள் சுப.பொன்னுச்சாமி, சுப.மூர்த்தி அவர்களால் தீவில் முதன்முறையாக தொழிலாளிகளின் சங்கம் 'தமிழரசு தொழிலாளர் கழகம்' தொடங்கப்பட்டது.

இதனால் அதிகாரிகள் சினமுற்று சுப.பொன்னுசாமி சகோதரர்களை கொடுமைப்படுத்தினர். அதன் பின்னர் கே.ரத்தினம் மற்றும் அவரது மைந்தன் கே.ஆர்.கணேஷ் அவர்கள் வீறு கொண்டு பாட்டாளியின் கூட்டாளியாக உறுதுணையான தொழிலாளர் சங்கத்தை1956-ல் தொடங்கினர். இத்தனை சிறப்பு வாய்ந்த அந்தமான் நிக்கோபார் தீவுகளில் சுற்றுலா பயணிகளின் வருகை டிச.—ஏப். வரை காணப்படும்.

# பழந்தமிழர் இறைமை

ஆதிமனிதத் தாயகமான குமரிக் கண்டம் அழிவுக்குப் பின், பழந்தமிழர் இதன் வடக்கே சம்புத்தீவம் என்ற நாவலந்தீவுக்குக் குடிபெயர்ந்தனர். குமரியில் மூதூரான தென்மதுரை அழிந்த பிறகு திக்குத் தெரியாமல் திசைதப்பிப் பல பகுதிகளில் குடியேறினர்.

ஏழ்தெங்கு நாடுகள் என்பது ஏழு நாடுகளான ஏழேழு நாற்பத்தியொன்பது நாடுகளாக வழங்கின. அவற்றின் பிரிவுகள் 1. மணலான ஏழு மதுரை நாடு 2. ஏழு முன்பாலை நாடு 3. ஏழு பின்பாலை நாடு 4. ஏழு மலைநாடு 5. ஏழு குணகரை கிழக்கு நாடு 6. ஏழு குறும்பானை நாடு 7. ஏழு கொள்ளம் நாடு கிழக்கில், மணல் நாடுகளில் தென்னையும், மேற்கில், பாலை—பாறை உயர்ந்த பூமியில் பனையும் விளந்த இந்நாடுகள் 49 ஆகும்.

ஈழநாடு வடபுலத்திலிருந்த யாழ்ப்பாணத் தீபகற்பம். ஈழநாட்டின் தென்பகுதி மூவாயிரம் ஆண்டுக்குமுன்பே கடலிலிருந்து மேலே எழும்பிய தென்னிலங்கை. இதற்குக் கீழே இருந்தது தான் குமரிக் கண்டம். ஈழத்தைப் பிரித்த வட எல்லைதான் பேராறான பஃறுளி; இதன் பொருள் பலதுளி.

மூதூர் என்ற கபாடபுரம் பட்டினம் கடற்கரை நகரமாதலால் இது அழிந்தது. இதன் வடமேற்கே சென்ற பாண்டியன் வைகை ஆறு வழியே சென்று வடமதுரையான இன்றைய மதுரை மாநகரை அமைத்தான். இது கூடல் நகரமாக ஒரு காலத்தில் இருந்தது. கடலும் ஆறும் நீர்வழி உறவான பழந்தமிழர் நகரம் இது. மணலூர் அல்லது மணலியூர் என்ற பெயர் எடுத்தது.

கிழக்கிந்தியத் தீவுகளான இந்தோனேசியா சிதறிய தீவுகளாகி, தென்பாலி என்ற தீவுதான் பாலி.

(சான்றுகள் : புலவர் குழந்தை எழுதிய இராவண காவியம் பழந்தமிழகம் படம் மற்றும் பக்கம் 68, 69 – 1946ம் ஆண்டு)

தி.மு.3000லும், தி.மு. 2400லும், தி.மு.700லும் தென் கடல் பொங்கி நாடுகள் மூழ்கப்பட்டன என புலவர் குழந்தை குறிப்பிட்டிருக்கிறார்.

(குறிப்பு : திருவள்ளுவராண்டுக்கு முன் தி.மு.)

மூன்றாவது கடல்கோளான தி.மு. 700ல் கடல் பெருகிய காலம் இன்று 2730 ஆண்டுகளாகின்றன. இதுதான் வீணைக் கொடியோன் இராவணன் காலக் கடற்கோளாகும். இலங்கையின் கிழக்கில், திருக்கோணமலையின் பாறைப்பிளவுதான் இராவணன் வெட்டு என்று சொல்லப்படும், அவனது காலத்தின் மிகப் பெரிய பூமியின் அழிவு. 2730 ஆண்டுக்கு முன் ஆடிப்பதினெட்டில் பெருமலைப் பிரிவான, தென்னிமயம் எனக் கருதப்பட்ட திருக்கோணசு வரம் அழிந்தது.

தென் சிவகிரியான பனிமலை நாடு அப்போது, கொடும் ஊழிக்கு இரையாகி கடலில் மூழ்கியது. அன்று பழந்தமிழகத்தின் தென்பகுதி, ஈழத்தின் மேற்கே தலைமன்னாரி லிருந்து, வடக்கே, தஞ்சாவூரின் மன்னார்குடி யின் இடைப்பட்ட அகன்ற இலங்கை அழிந்தது. இப்போதுள்ள இலங்கையைப் போன்ற ஒரு

பகுதி அழிந்தேபோனது. ஊழின் இறைமை இது.

இலங்கேசுவரன் என்ற இரணியனும், இலங்கையை ஆண்ட மாமன்னன்தான்.

செருசலம் என்ற சிறந்த சேலம் அமைதி ஆலயமாக சமயசார்பற்ற முறை பண்பாட்டு மாநகரமாக கி.மு.0167ல் கட்டப்பட்டது. இது சோழமன் கோயில். இங்குக் குடியேறிய தமிழர் மற்றும், வெவ்வேறு இனமக்களுக்காக சோழமன் அரசரால் கட்டப்பட்டது. கி.மு. ஆயிரத்தில் இந்தியாவிலிருந்து தமிழரின் நாவாய் என்ற கப்பல் இங்கு வந்துள்ளது. இதற்கு முன்பே கிரேக்கரும் எவனரான அரபியரும் தமிழக மன்னர்களைக் காணவும் வணிகஞ்செய்யவும் வந்திருக்கிறார்கள். சேரநாடு முத்துமாலை, தோடு (அணிமணிகள்), காசுகள் அச்சிடும் வெண்கலம், தேக்கு, மிளகு, முத்து, கிரேக்கா அரிசி, கருவாப்பட்டை ஆகிய மணப்பொருட்கள் அனுப்பியது. பட்டு, தலைமுடியுடன் இதில், மயிரால் நெய்த துணியும் அடங்கும். சோழ நாட்டிலிருந்து மயில்தோகை, சந்தனமரம், வெள்ளி, பொன், வைரம், (நவமணிகள் உட்பட) சென்றன.

சோழன் மரணம் கி.மு. 922 வரை இத்தொடர்புகள் இருந்தன. அதற்குப் பிறகும் இத்தொடர்பு நீடித்தது. உரோமர்கள் கி.பி. 70லும் கி.பி.600ல் இசுலாமியரான அரபுக்களும் இதனை வளர்த்தனர்.

தமிழகம் கொல்லர்களையும், தச்சர்களையும், அங்கு அனுப்பியது. சமசதுரப்பாறைக்கல் வடிவம் வெட்டுவதில் இவர்கள் வல்லவர்கள். சிற்பம் வடிப்பதிலும், கலைநுட்பத்திலும் சிறந்த பணிகளைக் கற்கச் செய்தும் உருவாக்கிய கலைகள் செருசலத்திலும், எகிப்திலும், பிறபகுதிகளிலும் அழியாமல் உள்ளன.

சேரமன்னன் கி.பி. 192ல் இவ்வாறு மரத்தொழில் வல்லுநர்களை அனுப்பினான். பாண்டியன் இரு தூதர்களை கி.மு. 26—ல் அனுப்பியதும் உண்டு. உரோம வீரர்கள் பாண்டியர் மாளிகையைச் செப்பமிட்டதும் உண்டு. வாயக்ஷ—கோளறிவு நிபுணர்கள் கணித்துச் சொன்னவாறு செயல்பட்டனர்.

அரபுக் கடலில் ஆதவனின் தட்சணாயினம் புறப்படும் காலம் நாவாய், தென்மேற்குப் பருவ காற்றில் 40 நாட்களில் தமிழகம் வந்து சேரும். தமிழகத்திலிருந்து வடமேற்குக் கடலில் (அரபுக் கடல்) செங்கடல்வழி, அலெக்சாண்டிரியா, அரபு, கிரேக்கம், செருசலம் (இசுரேல் — பாலத்தீனம் — ஈபுறுநாடு) செல்லும். சூலைமாதம் 17ல் (ஆனி மாதம் முதல்நாள்) இக்கப்பல் புறப்பட்டுப் போகும். இதுவே பயணக் காலம். ஒவ்வொரு ஆண்டும் வந்து போகும்.

இருண்ட காலத் தமிழகத்தை பொற்காலம் என இப்பகுதிக்கு வந்த ஆய்வாளர் தாலமி எழுதினார். அந்தக் காலம் கி.மு. 258. (சிலப்பதிகாரம், அகம், புறம் நூல்களில் ஏராளமான சான்றுகள் உண்டு).

சேரநாட்டுத் தலைநகர் முசிறிக்கு வந்த எகிப்து கடலோடிகள், மூன்று மாதம் தங்கி டிசம்பர் சனுவரிக்குள் நாடு திரும்பிவிடுவர். பிளினி என்னும் மேலைநாட்டார் கருத்துப்படி, நான்கு கோடி ரூபாய்க்கு மேலை நாட்டார் ஏற்றுமதிப் பொருள்களை கொண்டு சென்றனராம்.

ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனது மதுரைக் கோட்டையின் நுழைவாயில் காப்போராக கிரேக்கர் இருந்தனராம். பூம்புகாரில் எவனர், எயினர், ஊணர் குடியிருப்புகள் இருந்ததாக குறிப்புகள் உள்ளன.

பத்து லட்சம் பவுண் பெறுமதியான பொருட்களை அக்காலத்தில் தமிழகம் ஏற்றுமதி செய்தது என ஆய்வாளர் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை தம் நூலில் எழுதியிருக்கிறார். (**சான்று** : Tamil India *5—12—1926*) இவரது நூலில் பல சான்றுகள் உள்ளன. அப்போது கவிதைகளுடன் ஒரு புலவரும் மேல்நாடு சென்றாராம். நாகபுரமான சாவகம், கடாரம் (அல்லது காழகம்) என்ற பர்மா, ஈழநாட்டின் திருக்கோணமலை துறைமுகங்கள் இப்பண்டமாற்று வணிகங்களை நடத்தின.

Origin and Spread of the Tamils என்ற நூலிலும் 1947ல் வெளிவந்தது) பல அரிய சான்றுகள் உள்ளன.

தமிழர் பரவிய நாடுகள் கிரேக்கம், இசுகாட்லாந்து கிழக்கு என்றார். கால்டுவல். மிலேச்சநாடு மடகாசுகர் பாலைநாடு ஆத்திரேலியா; மேற்கு அவுணபுரமும் (கருப்பரான நீக்குரோ) கிழக்கு நீலபுரமும் (எகிப்து) ஆப்பிரிக்காவே.

## இந்து ஆரியர் இந்தியாவுக்குள் வந்தது கி.மு.1500!

வேதகால இந்தோ ஆசிரியர் கிழக்கு ஐரோப்பாவின் கசுபியன் கடல் பகுதியில் நாடோடியாகத் திரிந்தனர். அங்கிருந்து நான்கு பக்கமும் சென்று தங்கள் மந்திர தந்திரங்களுடனும், வேதசாதனையாலும் பன்னாட்டரசுகளுடன் கலந்தனர்.

இந்தியாவின் ஆரியக்காவு கொடுத்த கணவாய்வழி பஞ்சாப்பில் நுழைந்துவிட்டனர். இரு நூற்றாண்டு வரை விந்தியம் தாண்டி தெற்கே வர முடியவில்லை. ஆடுமாடு மேய்ப்பது இவர்தம் வாழ்க்கை.

தமிழர்கள் செழிப்பாக வாழ்ந்த பகுதி சிந்துநதிக்கரை. அரப்பா, முகஞ்சதாரா பகுதிகளிலும் செல்வச் செழிப்பான நாகரிகத்துடன் தமிழினம் வாழ்ந்தது. விந்தியமலை வரை இது படர்ந்திருந்தது. தமிழே எங்கும் பேசப்பட்டது.

ஆரிய வெள்ளையரின் ரிக் வேதம் கி.மு.1500 — 1200 கால கட்டம். அதற்குப் பின் அதர்வண வேதம் ; உபநிடதம் (கி.மு. 900—600). பிறகுதான் வேதகாலச் சமயம் கி.மு. 6ம் நூற்றாண்டில் தொடங்கியது.

வேதாந்தம் உள்ளம் — மனச்சான்று சித்தாந்தமாக இல்லை. சித்தமே ஆறறிவின் இறையாண்மை. இதை மறுப்பது வேதாந்தம்.

## உகாப்தம் 5101 எப்படி சரியாகும்?

கி.மு. 3012 பிப்பிரவரி 17ம் பக்கல் கலியுகம் தொடங்கியது என்பதை, இந்தியாவுக்கு வந்த இவர்கள், தமிழரிடமிருந்து கற்றுக் கொண்ட சைவசித்தாந்த ஆண்டை இதன் அறிவியலைத் திருடினர். இப்போது கலியுகத்தின் பிறப்பானது உகாப்தம் 5101 என்று சொல்லிக் கொள்ள இவர்களுக்குக் தகுதியுமில்லை; உரிமையும் இல்லை கலியுகம் பிறக்கும் போது இவர்கள் இந்தியாவில் இல்லை. இவர்களது முன்னோர்களும் இங்கு இல்லை.

எனவே, 5101 ஆண்டுகளுக்கு முன் சமற்கிருதம் தோன்றியது என்பது பிழையானது; தவறான வாதம் இது.

கலியுகத்துக்கும் சமற்கிருதத்துக்கும் சம்பந்தமே இல்லை.

ஆதிமுதலில் இவர்களிடம் சோதிடமும் இல்லை; வானியல் — கோளவியல் ஆய்வும் இல்லை. தமிழ் வேதங்களையும், சித்தாந்த மர்மங்களையும், அதன் நுண்ணறிவுகளையும், தங்களுடையவை என எழுதிவைத்துக் கொண்டு, தமிழியங்களை அழித்து விட்டனர். இது 3500 ஆண்டாக செய்யப்பட்டு வருகிறது. இந்தியா ஆரியர் வந்த சமயத்தில் இருண்டும் மருண்டும் வலுவிழந்தும் பல பிரிவுகளாகிக் கிடந்ததே வந்தவர்களுக்கு நல்ல அரிய வாய்ப்பாயிற்று. சமற்கிருதம் பேசப்பட முடியாதது.



# அருள்மாமணி ஆறுமுகம் பிள்ளையவர்கள் ஆய்வின் கணிப்பு

ஒரு சதுர்யுகம் ஆயிரம் ஆண்டு; 29 சதுர்யுகத்(29000)துக்கு முந்தியது இராமலிங் கேசுவரம். சேதுநாட்டின் மிகப் பழங்கால தென்னகரக் கோயில். இதை ஆரிய மன்னர் இராமேசுவரம் என்று இராம—இராவணப் போர்க்குப் பிறகு சதியாகப் பெயர் சூட்டிக் கொண்டார்கள்.

வளைகுடாவிலுள்ள மகேசுவர லிங்கத்துக்கு முன்பே, ஆதி சைவ மடமாகவும், லிங்கேசுவரமாகவும் இதுவே திகழ்ந்தது. பாண்டியன் சேதுபதி மன்னர் காலத்தது இது. கோயில்கள் தோன்றுவதற்கு முன்னர் தலவிருட்சங்கள் ஊன்றி வளர்க்கப்பட்டன. இதுதான் இலந்தை மரம். முடிச்சுகள் விழுந்துள்ள இம்மரம் பத்தாயிரமாண்டு உயிருடன் இருக்கும்.

தஞ்சாவூர் சுவாமி மலையில் 64 படிகள் உண்டு. இதில் நான்கு படிகளில் 4 உகங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. உத்தரகோச மங்கையிலும், வேறு பல தலவிருட்சங்கள் உண்டு.

விந்திலிருந்து மனிதன் தோன்றியதால் விந்துமதம் என சைவ சமயத்துக்குப் பெயரிட்டார்கள். எனவே இச்சமயத்தைக் கணக்கிட முடியாது. எத்தனையோ லட்சக் கணக்கான ஆண்டு இச்சமய வரலாறாகும். நமது தொன்மைக் கதைகளிலும், தமிழிலக்கியங்களிலும் ஏராளமான சான்றுகள் உள்ளன.

—சான்று: **தினமணி** 13—4—1988.

# புதுச்சேரித் தமிழர் மொரிசியசில் குடியேறிய 250ம் ஆண்டு நினைவுத்தூண்

உலகில் தமிழர் குடியேறியதற்கான வரலாற்றுச் சின்னம் இங்குதான் முதன் முதலில் ஏற்பட்டது.

1989ல் நானும், திரு.மு.மணிவெள்ளையனும் பெரியார் திரு. தங்கணமுத்து இல்லத்தில் 40 நாள் தங்கியிருந்தோம். எங்களுடன் டர்பன் திருக்குறள் பெரியார் மு.அன்பன் அவர்களும் தங்கிய ஒரு கிழமை, நாங்கள் மூவரும், பித்தோன் என்ற அவரின் ஊரில் சமைத்து உண்டோம்.

அந்த வேளையில் ஒருநாள் எங்களை அவர் அழைத்துக் கொண்டுபோய் விழா நடத்தியதில், நாங்கள் பலரும் பலநாட்டுத் தமிழர் சார்பில் மலர் வளையம் நினைவுத் தூண் முகப்பில் சார்த்தி உணர்ச்சிபூர்வமாக மகிழ்ந்தோம்.

1980ல் அவரது பெருமுயற்சியால், அரசு சார்பில் தமிழ்ப்பண்பாட்டு மாநாடு நடந்ததும், நினைவுத் தூணை அமைத்ததும் அவரது அரிய பெரிய சாதனைகள். நாங்கள் 1977ல் சென்னையில் முதல் மாநாட்டை நடத்தினோம். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் வரலாற்று நாயகராக விளங்கிய பெரியார் தங்கணமுத்து 1996ல் காலமாகிவிட்டார்.

நாங்கள் சென்றிருந்த வேளை, 7வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடும் அங் கு நடந்தது. அதன் திறப்பு விழாவில் நான் கலந்து கொண்டேன். 4-12-89ல் உ.த.ப.இ. பேரவை மாநாட்டை, அவர் தொடங்கி வைத்ததையும் மறக்கவே முடியாது!

வீரப்பனார்

# புலம் பெயர்வுகளால் புலம்பல்

1966—1976 காலகட்டத்தில் கனடா சென்ற கரிபியன் தீவினருக்கு இப்பட்டறிவு ஏற்பட்டது. சமய்க்கா, மெக்சிக்கோ நாடுகளில் இந்நிலை ஏற்பட்டது.

அப்போது துருக்கியர் உட்பட பல நாட்டார் செர்மணிக்குள் புகுந்து பல காலமாகிய பின் 45 லட்சம் பேராகியது. இது நாட்டின் மொத்த மக்களில் 35 விழுக்காடு. மேற்கு செர்மணியில் மட்டுமே இது 29 லட்சம். பல அயல் நாட்டு மக்களின் தொகை இது. படிப்படியாக குடிபுகல் கோட்பாடும், குடிவாழ்வுச் சிக்கலுக்கான சட்ட திட்டமும் மாற்றம் பெற்றுவிட்டது. இப்பரம்பரையினரின் 16 வயதுக் குட்பட்டவர் பத்து லட்சமாக வளர்ந்த நிலை காட்டியது. வந்தவர்கள் மட்டுமே திரும்பிவிட வேண்டும் என்பது சட்டமாக்கப்பட்டது. இவர்களின் வேறுபட்ட சமூக அமைப்பு பண்பாட்டு மரபு மொழிவேறுபாடு ஆகியவற்றை உடைத்தது.

வியக்கத்தக்க அளவு தொழிலாளர் தேவை ஒரு பக்கம் வளர, உள்நாட்டார் இதற்குத் தகுதியற்ற சூழல் மறுபக்கம் தாக்கியது. குடிவந்தோரின் பிள்ளைகள் எட்டரை லட்சம் பேர் பள்ளிகளில் பயின்றனர்.

தென்னாப்பிரிக்காவில் நுழைந்த வடபகுதி மக்கள் 1975ல் இரண்டரை லட்சமாகியது. ஒன்பது வடபகுதி நாட்டினர் இவர்கள். ஆனால் வடகண்டம் எங்குமே 28 லட்சம் பேர் இவ்வாறு புலம்பெயர்ந்துவிட்டனர். பஞ்சமும், உள்நாட்டுப் போர்களும் இதன் பின்னணிகள்.

# வேழத்தமிழர்களான ஈழவர்கள்

1985வரை ஐம்பது ஆண்டுக்ளில் மொராக்கோ, அல்சிரியர்களான அகதிகள் பிரான்சில் அடைக்கலம் புகுந்தனர். இந்த ஆறு லட்சம் பேரில், பலரின் எண்ணம் தாய்நாடு திரும்பிவிட வேண்டும் என்பதே. ஆனால் பிரஞ்சு பழக்க வழக்கம், கல்வி போன்ற சிக்கலாலும், இவர்களது பிள்ளைகள் திரும்பிவிட மறுத்தனர். சிக்கலான, பண்பாட்டு சமயம், தாய்வழி மரபுக் கலாசாரமும் இந்த இளைஞர்களால் மறுக்கப்பட்டன. நெறிமுறையும் தம் அடையாளமும் மாற்றப்பட்டு விட்டன. மனத்தில் புயல் வீசியது. பலர் திரும்பும் நிலையில்லாமல் தவித்தனர். கலாசார சீரழிவும், கொடூரபுண்பாடு நேர்ந்துவிட்டது.

அப்போது யூனெசுகோ, உலகில் இரண்டேகால் கோடி மக்கள் அயல்நாடுகளில் தொழிலாளிகளாக வாழ்ந்தனர் என்றது.

18ம் நூற்றாண்டில், ஐரோப்பியர்களால் குடிபெயர்வுகள் ஏற்படுத்தப்பட்டன. பீசித்தீவு தொங்கா, நியூகலிதோனியாவுக்கு, ரியூனியன், சீசெல்சு, மொரிசியசு, மடகாசுகருக்கும் பிறகு கரிபியனில் பல தீவுக்கும் கரும்புத் தொழிலுக்கும் தமிழகம் உட்பட பல இந்தியப் பகுதிகளில் கொண்டு சென்ற இந்தியர்களின் அடையாளம் முழுதும் மாறிவிட்டது. தாய்மொழி ஒழிந்தது.

எண்பது—தொண்ணூறுகளில் சென்ற ஈழத் தமிழர்கள் மட்டுமே தத்தம் அடையாளத்தைக் காப்பாற்றிக் கொள்கின்றனர். இது மாறலாம்.



# தமிழுக்கு அகவை 50,000!

தமிழ் மொழியின் வயது ஐம்பதாயிரம் ஆண்டு. இதை நிரூபிக்க அந்த அளவு சான்றுகள் உள்ளன. இது பழந்தொன்மொழி! ஆதியில் தோன்றிய மூத்த மொழி! பலதாய் ஆதியில் தோன்றிய மூத்த மொழி! பலதாய் மொழிகளின் தாய்மொழி செம்மொழி என்பது இதன் செழுமைக்குச் சான்று.

எண்ணும் எழுத்தும் இயல் ஐந்துமாகத் தோன்றித் துவங்கி வளங்கியது. பண்ணும் நான்காகவே தோன்றியது. இது முத்தமிழ் மூலத்தை எத்துறையிலும், எத்திசையிலும் பரப்பியது; பதினொரு நாடகக் கூத்து வகையை எண்பிக்கும்.

ஆதி மனிதன் அழிபட்ட குமரிக் கண்டத்தில் கதிரவனைக் கண்டு பிறந்த மொழி! ஓர் லட்ச ஆண்டு முன்னே இப்படி அகரம் எனச் சொல்லி ஆதிபகவனைத் தொழுதவன் அவ்வாதி மனிதன். ஆதித்தன் என எழுஞாயிறைத் தொழுது போற்றினான். ஆதிபகலவனைத் துதித்து மதித்துப் புகழ்ந்து ஆடிப்பாடி மகிழ்ந்தவன் அவனே.

அ—இ—உ என உணர்ச்சியால் இவன் முதலில் பேசும் மாந்தன் ஆனான். அகரம் — இகரம்—உகரம் என்பதை அது, இது, உது என்று ஓம்பி, ஒலி பிளிறினான்! இவனது வாயில் மொழி பிறக்கு முன் இவ்வொலி பிறந்தது.

குமரிக் கண்டம் கடலில் மூழ்கியதும் தப்பித்து வடபுலம் பாரதக் கண்டத்தில் மதுரையை அமைத்து மூடிசூட்டிக் கொண்டவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. இது இருபத்தெட்டாயிரம் ஆண்டாகியது. இவன் தந்தை சோமசுந்தர பாண்டியன்.

●

# சிவன் ஆண்டு 78000

பழைய குமரியின் வடமதுரையில் எழுபத்தெட்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்டவன். நிலவுலகின் முதலாவது மாமன்னன். மீனக்கொடியுடைய சகலகலா வல்லவன்.

**முருகன் ஆண்டும் இதுவே.**

குமரியில் ஐம்பதாயிரம் ஆண்டுக்கு முன் பேசப்பட்ட தமிழ், சேதுவில் இருபதாயிரம் ஆண்டுக்கு முன் வழங்கிய தமிழ், சிந்துவில் ஆறாயிரம் ஆண்டுக்கு முன் ஆட்சியிலிருந்த தமிழ் ஆணி வேருள்ள இயற்கை மொழி இறைமை மொழி. ஐந்து பேரூழிகளிலும் அழியாமல் பேசப்பட்ட மக்கள் மொழி இது.

சங்கம் வைத்து வளர்த்த மொழியே இதுதான். மூன்று தமிழ்ச் சங்கங்கள் மதுரையில்அமைத்து தமிழும், தமிழ் இலக்கியமும் வளர்க்கப்பட்டன. தமிழ்ச் சங்கத்தின் இவ்வரலாறே பத்தாயிரம் ஆண்டு தனிவரலாற்றுக் காலமாக இருந்தது.

இரண்டாம் தமிழ்ச் சங்கம் உக்கிர பெரு வழுதி என்ற பாண்டிய மன்னன் தலைமையில் இயங்கியது. ஐம்புலவரின் ஐந்து நூல்களில் ஒன்றுதான் தொல்காப்பியம்; மொழியின் இலக்கண நூல்; தமிழ்ப் பாடலின் இலக்கண விளக்க நூலே இது. இது எழுதப்பட்டு ஏழாயிரம் ஆண்டாகிறது.

உலகின் தொன்மொழியும், முதல் தாய் மொழியும், நீண்ட வரலாறும் உள்ளதே செம்மொழி. தெற்கேயிருந்து வடக்கே வந்ததால், இதன் சிறப்பு தென்மொழியாகும். இருபதாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பரதம் என்ற (சம்புத்தீவு) நாவலந்தீவான அகன்ற தமிழகத்தின் ஒரே மொழியானது.

●

**ஒலியும் மூலமும் எழுத்தும்**
**வழங்கியது தமிழ்தான்**

ஆயிரக்கணக்கான இலக்கியச் சான்றுகளும், நூற்றுக் கணக்கான ஆங்கிலத்தின் ஆய்வு முடிவான ஆதாரங்களும் இதற்கு உள்ளன. முதுகெலும்புள்ள ஒரே உலகமொழி.

வடமொழிக்கும், இதுவே வேர்மொழி. இந்திய மொழிகளுக்கெல்லாம், தாயாகவும் விழுதியாகவும் விளங்கி வருவது தமிழ்.

சமற்கிருதத்துக்கு ஒலியும், மூலமும், எழுத்துகளையும் வழங்கியது தமிழ். இபுரு மொழி முதல் லத்தின், உரோமன், அரபு மொழிகளுக்கும் இதுவே தாயாக இருந்து புலம்பெயர்ந்தோரால், கருவாகி உருவாகின; உருவாக்கப்பட்டன.

ஆதிமாந்தரின் உயிராக—உணர்வாக— உணர்ச்சியாகவே இம்மொழி அவர்களின் நாவில் உதித்தது. சுட்டிச் சொல்லிக் காட்டி உணர்த்திய சுட்டொலிகள் மூலமே, இத்தமிழ் வளர்க்கப்பட்டது.

அம்மா என்ற அகரச் சொல், உலக மொழிகளில் எல்லாம் ஒரே பொருளும் ஒரே ஒலியுமாகத் திகழ்வதே பெருஞ்சான்று.

கிரேக்கத்தின் மூலமும், எகிப்தின் கருவும், ஆரியத்தின் உருவும், தமிழ் ஊன்றாமல் அவை தோன்றி வளர்ந்து விடவில்லை.

கல்விக் கலைகள் 64ம் பரதநாட்டிய வகை 108ம் யாப்பு வகை 18க்கு மேலும் உள்ள ஒரே ஆதிப் பழம் மொழி தமிழே. வட மேற்கே தமிழர் பரவலால், பரவியதும் சிதறுண்ட தென்கிழக்காசியத்தீவுகளில் புதுமொழிகளை உருவாக்கிய தாயாகவும் விளங்கிய இம்மொழி பழங்குடிகளிடம் புதுமொழிகளை பத்தாம் நூற்றாண்டுக்குப் பின் உருவாக்கியது.

**-வியாழன்.**

●

உலகில் முதன் முதலில் தோன்றிய நாகரிக இனத்தான் தமிழன். அவன் மொழி தமிழ். தமிழ்நாடு தவிர, மேற்கிலும், வடக்கிலும் திராவிட மொழிகளாகத் தமிழ் திரிந்தது. மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளுவ மொழிகளாகப் பரவின. தமிழகத்தில் இதனால் தமிழ் அழியவில்லை. ஓர் லட்சம் ஆண்டு இப்படி.

தமிழுக்கு அகவை ஐம்பது ஆயிரம் ஆண்டு. தமிழ் தனிமொழி; இதன் தொன்மை—முன்மை—தாய்மை—

## செந்தமிழே செம்மொழி!

தலைமை — இறைமை சிறப்பானது. தமிழிலக்கியம் தோன்றிய காலம் கி.மு.10000. தொல்காப்பியம் கி.மு.5000ல் தோன்றிய இலக்கண நூல். திருக்குறள் எழுதப்பட்ட ஆண்டு கி.மு. 21.

தமிழர் தோற்றத்தின் வரலாறு இது.

*"பொய்யகல நாளும் புகழ்விளைத்த லென்வியப்பாம்*

*வையகம் போர்த்த வயங்கொலிநீர் – கையகலக்கல் தோன்றி*
*மண்டோன்றாகக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடி."*

தமிழ்மொழி தோற்ற வரலாறு இது:

*"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி ஏங்கொலிநீர்*
*ஞாலத் திருளகற்றும் – ஆங்கவற்றுள் மின்னேர் தனியாழி*
*வெங்கதிரோன் றேனையது. தன்னே ரிலாத தமிழ்."*

கல் மண்ணாகாத காலத்திலேயே தமிழன் தோன்றிவிட்டான். உலக இருளகற்றும் கதிரவன் தோற்றமும், மாந்த மன இருளைப் போக்க வந்தது தமிழின் தோற்றமும் ஒன்றே.

1300 ஆண்டுக்குமுன், புறப்பொருள் வெண்பா மாலை என்ற நூலில், புலவர் ஐயனாரிதனார் இப்படி கூறியதே மிகப்பெரிய சான்று.

# மறைந்து கிடந்த தமிழ் வேர்கள்

நூறாண்டுக்கு முன்வரை, கால்டுவெல் ஆங்கிலப் புலவர் காலத்தில் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், பதினெட்டு மேற்கணக்கு நூல்களும் தமிழர்க்குத் தெரியாமல் மறைந்து கிடந்தன. மூவாயிரமாண்டாக ஆரியம் தமிழை ஒதுக்கியும், பதுக்கிய பனுவல் வேர்போல் மேலே எழுந்தது; விழுதாகப் பேசப்பட்ட தமிழ் வழக்குப் பேச்சும் கதைப்புமாக வாழ்ந்தது.

உயிர்—மெய்—உயிர்மெய் என்ற மூவகை எழுத்துக்களால் கூடியதும், மூச்சுட்டு ஒலிகளை முதலாகக் கொண்டதும் தமிழ்நெடுங்கணக்கு. இதுதான் உலகில் முதன்முதல் தோன்றியது. தமிழுக்கு வேரும் விழுதும் உண்டு. வடமொழிக்கு வேரில்லை.

தமிழ்நாடு மட்டுமல்ல தமிழீழமும் வரலாறு, மக்கள், கொள்கை, உணர்ச்சி, மொழி, இலக்கியம் ஆகிய தனித்தன்மைகளால், பிற நாடுகளைவிட முற்றிலும் வேறுபட்டது. தமிழகத்துக்கப்பால் இந்திய நாட்டுக்குள்ளே சமற்கிருதத்தை தலைமேலற்றிக் கொண்டு கூத்தாடும். தமிழுக்கு இத்தலைவிதி எதுவுமில்லை. தமிழ் செம்மொழி. செந்தமிழ் மொழி; தனித்துவம் உடையது.

தென்மொழியினத்துக்குரிய சிறப்பிலக்கியம் உட்பட வரலாற்றுச் சான்றுகளும் தமிழிலேயே உள்ளன. தமிழனுக்கும் தமிழுக்கும் வரலாறு இல்லை என்பதும், குமரியிலிருந்து இவ்வரலாறுகள் தொடங்கவில்லை என்பதும், முப்பது ஆண்டுக்கு முன்பே, தேவநேயப் பாவாணரால் மறுக்கப்பட்டு, ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்பட்டு விட்டது. திசைதிருப்பும் தீயர்கள் ஆரியர்மட்டுமல்ல; திராவிட ஆரியரும் உண்டு.

## கருநாடகத்தில் தமிழரே மிகுதி கன்னடர் குறைவு

1981ம் ஆண்டில் கருநாடகத் தமிழரின் எண்ணிக்கை 90 இலக்கம். பெங்களூர்த் தமிழர்கள் நகரின் மக்கள் தொகையில் நூற்றுக்கு 50 பேராவர். பெங்களூர், கோலார் தங்கவயல், குடகு, பெல்லாரி, சித்திரதுருகம், கொள்ளேகாளம் போன்ற இடங்களில்தான் கருநாடகத் தமிழர்கள் பெருமளவில் வாழ்ந்துவருகின்றனர். 1876—78ஆம் ஆண்டுகளில் தமிழகத்திலும் தோன்றிய பெரும்பஞ்சத்தால் வந்தவர்களே தங்கவயல் தமிழர்கள்.

1978—79ஆம் ஆண்டில் மொத்தம் 267 தமிழ் தொடக்கப் பள்ளிகள் இருந்தன. பெங்களூர்ப் பல்கலைக் கழகத்தில் இணைக்கப்பட்டுள்ள பெரும்பாலான கல்லூரிகளில் பயிலும் பெரும்பகுதி மாணவர்கள் தமிழ் மாணவரே ஆவர். இருப்பினும் அங்கெல்லாம் தமிழை ஒரு கல்விப் பாடமாக வைப்பதில்லை. கருநாடகத்திலுள்ள தமிழ்ப் பள்ளிகள் எல்லாம் இன்று வேகமாக மூடப்பட்டு வருகின்றன.

சான்று : **விழுதுகள் 1997.**

## தமிழ் இலக்கணத்தைத் திராவிட இலக்கணம் எனச் சொல்லக் கூடாது

தமிழ் திராவிட மொழி என்று சொல்லுவதும், எழுதுவதும் மூளைக் கோளாறு! தமிழகத் தலைநகர் ஆய்வாளர்களில் பலர் தறுதலைத்தனமாக நடந்து, மாணவர் தலையில் நஞ்சேத்திவிடுவர். யப்பான் மொழியில் தமிழ் வேர்கள் மிகுந்துள்ளன என்பதைக் கூட மாற்றி திராவிட இலக்கணம் என்பர். இவர்கள் தாய்த் தமிழுக்கே இரண்டகம் செய்கிறார்கள்.

''இதுபோன்ற குழப்பங்களை கருவறுக்கத்தானே பெருஞ்சித்திரனார் கண்ட தென்மொழி என்னும் உலைக்களம் மூன்று பத்து ஆண்டுகளாக ஓய்வு ஒழிச்சலின்றி இயங்கி வந்தது. தேவநேயப் பாவாணர் தலையெடுத்து, அவற்றின் மொழியில் புரட்டை அம்பலப்படுத்தினார்" என்கிறார் குணா.

# திருத்தாளம் அருகிவிட்டது

1961—1974 காலகட்டத்தில் இந்தியாவின் மொத்தத் தெலுங்கரில் 18 சதவிகிதமான 67 இலட்சம் பேர் ஆந்திராவுக்கு வெளியே வாழ்ந்தனர். இதில் 34 லட்சம் தெலுங்கர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்தனர். தமிழக வட மாவட்டங்கள் தவிர தென் மாவட்டங்களில் ஏழரை லட்சம் இவர்கள்.

நெல்லை மாவட்டத்தில் 1881ல் 36 சதவிகிதம் பேர் தெலுங்கர். 1921 ல்- கோவையில் 15 சதவிகிதத்தினர் இவர்கள் இருந்தனர். இது நான்கு வகை தெலுங்குப் பரம்பரை. வடஆற்காடு, செங்கை மாவட்டங்களில் இவர்கள் படிப்படியாக ஊடுருவி தமிழ் மண்ணை அபகரித்துக் கொண்டனர். பழந்தமிழர்களிடமிருந்த மண் இப்படி பறிபோயிற்று. தமிழரின் நிலபுலங்களை வந்தேறிகள் கைப்பற்றிக் கொண்ட வரலாறு ஐநூறாண்டுக்கு மேலிருக்கும். 1529 முதல் விசயநகர விசுவநாதநாயக்கன் காலமுதல் இது தொடர்கிறது.

1961—1971 ஆண்டுகளுக்கிடையில், கேரளத்துக்கு அப்பால் வாழ்ந்த மலையாளிகள் நான்கு லட்சம். கோவை நகரில் 1921ல் 8.41 சதவிகிதத்தினர் இவர்களிருந்தனர். மதுரை மாநகரில் தமிழரல்லாதார் மூன்றில் ஒரு பகுதி. நாயக்கர் - மராத்தியர் ஆட்சிகளில் மளமளவெனப் பெருகியது.

1967ல் சென்னை மாநகரில் மார்வாடிகள் ஒரிரு ஆயிரமிருந்தது. இன்று பலபத்தாயிரங்களாக விழுதூன்றி வளர்ந்துவிட்டது. தமிழக வரவுசெலவினத்தைவிடப் பெரியது இவர்களின் பணபலம். 1961ம் ஆண்டு மக்கள் தொகையில் தமிழ்நாட்டுத் தமிழர் 73.8 சதிவிகிதத்தினர் சென்னையில் மட்டும் 71 சதவிகித்தினர் தெலுங்கர் 14.1 சதவிகிதம்.

இந்த ஒட்டுண்ணிகள் தமிழகத்தில் பெருகுவதற்குத் திராவிட அரசியலாரே காரணமாகவும், புரவலராகவும் வாய்த்ததனால் வந்த வினை தமிழகப் பொருளாதாரம்.

சான்று : **விழுதுகள் 1997.**

●

## மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 25 ஆண்டு நிறைவு

# வெள்ளி விழா சாதனைகள்

ஓர் இலட்சம் மலேசிய வெள்ளி விலையுள்ள ஓர் இல்லத்தை தனது பணிமனைக்காக சொந்தமாக்கிக் கொண்டுள்ளது. 1974ல் அமைந்த இவ்வியக்கம் வேரூன்றிய, உ.த.ப.இ. கிளையாகவும், பதிவாகி இங்கு இயங்கிவரும் பேரியக்கமாகும். இது வெள்ளி விழா சாதனை. இருபது மாடி, அடுக்குயர வீடமைப்புத் தொகுதியில் இது கீழ்த்தரை வீடாகும். இந்த மனை தமிழ் இல்லமாக — தமிழுள்ளமாக அமையும். இதில் அலுவலகம், வகுப்பறை, கூட்டம் நடத்துமிடம், நூலகம், ஆவணக் களஞ்சியம், படிப்பகம் ஆகியவற்றுடன் திகழும் 1993ல் தொடங்கப்பட்ட மத.ப.இ. கட்டிட நிதியின் சேமிப்பான பத்தாயிரம் வெள்ளியை, பத்து விழுக்காடு முன்பணமாகச் செலுத்தி இதனைக் கொள்முதல் செய்துள்ளது. இருபது ஆண்டில் மாதம் அறுநூறு வெள்ளிவீதம் இக்கடனைச் செலுத்தி முடிக்கும் பொறுப்பு செயற்குழுவுக்கு உண்டு. இதில் ஆட்சிக்குழு மற்றும் எல்லா உறுப்பினர்க்கும் பங்களிப்பு உண்டு. உலகின் இருபது நாடுகளில் இயங்கும் உ.த.ப.இ.ல் இதுவே பெரிய கிளையும், பலசாதனை படைத்துததுமாகும்.

இவ்வில்லம் தலைவர் வீட்டுக்கு அருகில் உள்ளதும், புதிய கிள்ளான் மாநகரப் பகுதியான பெரிய வளாகமும் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.ம.த.ப.இ. வுக்குச் சொந்தமான பெயரிலும், இருபது பேர் மாதாந்திரமாக நிதிவழங்கி வருவதால் இவர்களே இதன் பங்குரிமையுடன் சொத்துடைமையாளர்களாக விளங்குவர். அரும்பாடுபட்டிருக்கிற கட்டிட நிதிக் குழுவும் இனி பொதுநிதியைத் திரட்டுகிற முயற்சியிலீடுபட்டு ஆவணங்கள் வாங்கும். எனவே உலகளாவிய உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க ஆதரவு வேண்டும்.

# ஐரோப்பாவில் எழுச்சித் தமிழ் விழாக்கள்

சுவிட்சர்லாந்து பெர்னில் 23.8.97ல் எழுச்சி விழா நடந்தபோது மலேசியப் பேரா. வீரப்பனார், சென்னை திரு. கி. வீரமணி முனைவர் இரா. சனார்த்தனம், பொதுச் செயலர் திரு. கே. ரீ. கணேசலிங்கம் ஆகியோர், திரு.ம. மனோகரன் தலைமையில் சிறப்புரை ஆற்றினர். தமிழ்மணிப் புலவர் பட்டச்சான்றிதழ் வழங்கப்பட்டது. செல்வி ஈழச் செல்வி பரதம் ஆடினார். பல குழுவினர் நடனம், கோலாட்டம், நகைச்சுவை வழங்கினர். திருமதி. சனார்த்தனம், பாரிஸ் சக்திப்புயல், செர்மனி நா.சி. கமலநாதன், கீழ்க்கரை பொன்னையன் ஆகியோரும், வேறு சிலரும் உரை நிகழ்த்தினர். பாட்டரங்கம், நூற்காட்சியும் நடத்தப்பட்டன. பிறேமன் தமிழ்க்கலை மன்றம் நாடகம் படைத்தது.

மறுநாள் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க தலைவர் வீரப்பனார் தலைமையில் பங்கு பெற்ற இருநாட்டுப் பேராளர்கள் ம. மனோகரன், செ. சிவராசசிங்கம், பொ முருகவேள், க. மனோகரன், நா.சி. கமலநாதன் கே.ரீ. கணேசலிங்கம், இரா. தனபாலசுந்தரம் த. இராசன்.

30.8.97ல் செர்மனியில் எழுச்சி விழா பேருரை ஆற்றியவர்கள் : திரு. கி. வீரமணி, முனைவர் இரா. சனார்த்தனம் வரவேற்பை கணேசலிங்கம், நன்றியுரையை கமலநாதன் சிறப்பித்தனர்.

ஈழத் தமிழருக்காக, மேற்குலகில் குரல் கொடுக்கவும், அல்லலுறும் தமிழீழத்தவருக்கு உதவித் தொகை வழங்கவுமே இவ்வெழுச்சி விழாக்கள் நடத்தப்பட்டன.

20.9.98ல் இது போன்ற விழா டென்மார்க்கில் இஸ்காண்டிநேவியன் கிளை கவிவேழம் பாரதிபாலன் தலைமையில் சிறப்புற நடத்தியது. கவியரங்கம் நடத்தி, நூல் வெளியிட்டு பல நிகழ்ச்சிகளை நடத்தியது.

## ஐம்பது ஆண்டுகளில் உலகக் குடி பெயர்வால் ஏற்பட்ட இழப்பு என்ன, எப்படி?

உள்ளமே புரட்சிப் பூக்கள் பூக்கும் இடம். அமைதியும் இந்த இதயத்தில்தான் மலர வேண்டும். இதனை திருவள்ளுவர், அன்பும் பண்பும் கொண்டுவிட்டால் உள்ளம் பூக்காடாகிவிடும், இதில் அமைதியும் பூத்து விடும் என்கிறார்.

இதையே யூனெசுகோவும் தன் அமைதித் தத்துவம் என்கிறது. உலக மனசாட்சி என்றும் ஒன்றுபடாததும் இயற்கையே!

1946களில் குடிபெயர்வு விரிவாகியது. இரண்டாம் போருக்குப் பின் பலர் நாடற்றுப் போயினர். உலக ஒன்றியக் குறிப்பின்படி குடிபுகல் கொள்கை வேறுவேறாக இருந்தது. 1949ல்தான் உலகின் இவ்வாறான குடிபெயர்ச்சியை அம்மன்றம் எண்ணத் தலைப்பட்டது. அம்மக்களின் கடும் பிரச்சினை என்ன ஏன் என ஆய்ந்தது. பண்பாட்டுத் தன்னுரிமைக்கு வழி வகுத்துக் கொள்ள அது பரிந்துரைத்தது. குடியமர்ந்தபின் முதன் முதலாக இரு மொழிச் சிக்கல் சூழ்நிலைத் தாக்கலுடன் ஆரம்பித்தது. ஆனால் இது தீர்க்கப்படவில்லை.

இருண்ட கண்ட ஆப்பிரிக்காவின் நாடுகடந்தோரின் தரைவழி குடியமர்வுக்குக் கடல் தாண்டி வாழும் இவ்வாறான வாழ்க்கைச் சூழல்கள் வேறு வேறுபட்டவை. 1960ல் பாதிக்கப்பட்ட இசுகாண்டிநேவிய நாடுகள் இவ்வாறு அலைமோதின.

## மாண்பற்றவர் ஆண்கள் மட்டுமா?

இந்தியர், பாகித்தானியர், வங்கதேசத்தார் ஊடுருவி குடியேறிவிட்ட நிலை இசுகாண்டிநேவியாவில் அதிகரித்துவிடவே இவர்களால், "நோர்வே நார்வேயர்களுக்கு மட்டுமல்ல!" என்ற போராட்டம் தலை யெடுத்தது. இங்கு இவர்களின் சமூக அமைப்பும், மனப் பான்மையும் அறவே மாறிவிட்டது. இப்படி 1975ல் இனம், மொழி, மரபுரிமை தலையெடுப்பும் அதிகரித்தது. குடியிருப்பான வீடு சொந்தமாக இருப்பவரே, தமது மனைவி மக்களை அழைக்கலாம் என்றும், வீடில்லாத எவருமே, அவர்களைக் கொண்டுவர முடியாது என்றும் சட்டதிட்டம் புகுத்தப்பட்டுவிட்டது.

வளைகுடா ஆறுநாடுகளில் 1980 களில் 130 லட்சம், மொத்த மக்களில் 40 லட்சம் பேர் அயல்நாட்டார்கள். இது அதிகரித்தபோது மூன்றில் ஒன்றாகிவிட்டது. பல்வேறு சிக்கலும், துன்பமும் இவர்கள் தலையில் வீழ்ந்தது. இது சமநிலையாகியும், வந்தவர்கள் எல்லோருமே ஆண்கள் — தொழிலாளர்கள். வளைகுடாவில் ஐரோப்பியரும், ஆசியரும் பெருகியும் எல்லாத் தொழில்களிலும் இவர்களே இருந்தனர். ஆனால், அரபியர் வாக்குரிமை உள்ள குடிகள். குடிபெயர்ந்த யாவரும், ஒப்பந்த ஊழியர்களே. தொழிற்சங்கத்தில் சேர்வது மட்டுமே மனித உரிமை.

## விடுதலை! விடுதலை! விடுதலை!

இந்தி(ய) அரசுச்சட்டத்தின் 370வது பிரிவைத் தமிழகத்திற்கும் விரிவுபடுத்தச் சொல்லிக் கேட்டும் நம்முடைய ஞாயமான உரிமை முழக்கம் புறக்கணிக்கப்படுமாயின், தமிழகமும் ஈழவழியில் மண்மீட்சிக்காகவும், தேசிய விடுதலைக்காகவும் போரிட வேண்டிவரும் என்பதை இந்தி(ய) ஆளவந்தார்கள் தெளிவாக உணரச் செய்ய வேண்டும். அந்த ஆளவந்தார்களை நோக்கிப் பந்தை அடித்து விட்டோம்! இனி, ஆட வேண்டியது அவர்கள்தாம்!

—நூல் : விழுதுகள்

## ஆறாம் நூற்றாண்டு கல்வெட்டு கண்டுபிடிப்பு

தருமபுரி மாவட்டம், பொம்மிடி அருகே கே.என். புதூர் சக்கிலிச்சி ஏரியில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை சேலம் தருமபுரி மாவட்ட தொல்பொருள் அலுவலர் க. கிருஷ்ணமூர்த்தி கி.பி. 6ம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்றையும் கி.பி. 7ம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்றையும் கண்டுபிடித்துள்ளார்.

ஒரு கல்வெட்டில் வீரனின் உருவத்துக்கு வலது பக்கம் தமிழ்மொழியில் வட்டெழுத்தில் எழுதப்பட்டுள்ளது. கொங்கிளவரசர் மக்கள் பொற்சாத்தனார் தாயனூர் நாட்டின் மீது போர் தொடுத்து பசுக்கூட்டத்தை (தொறு) கவர்ந்து செல்ல முனைகின்றார். அதனை பொன்னந்தியார் சேவகர் வழுதியர் மகன் தடுத்து நிறுத்துகிறார்; அந்தப் போரில் பத்திரன் என்பவர் இறந்துவிடுகிறார். அவருக்காக எடுக்கப்பட்டதே இந்த நடுகல்லாகும் என்பது இந்தக் கல்வெட்டின் பொருள்.

மற்றொரு நடுகல் கி.பி. 7ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. வீரன் கைகளில் கத்தியும், கேடயமும் வைத்துள்ளான். வீரனின் தலைக்கு மேலும் இடப்புறமும் வட்டெழுத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதில் மொத்தம் ஆறு வரிகள் உள்ளன. வீரனுக்கு வலப்பக்கம் மதுக்குடம் காட்டப்பட்டுள்ளது.

தாயனூர் நாட்டின் மீது கங்கப்படை வந்தபோது குலமாணிக்க இளவரையர் மகன் படையெடுத்து வந்த எதிரியுடன் போரிட்டு வீர மரணம் அடைந்தான். அவன் பெயர் கலிப்பொ. அவனுக்காக எடுக்கப்பட்டதே இந்த நடுகல். காரிப்பெருமாறன் என்பவர் தாயனூர் நாட்டையாள குலமாணிக்கம் இளவரசராக இருந்துள்ளார். போர் தருமபுரி மாவட்டம் கடத்தூரில் நடந்துள்ளது.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள இரண்டு நடுகற்களும் கொங்குநாட்டு வரலாற்றிற்கு குறிப்பாக சேலம் மாவட்ட வரலாற்றிற்குப் பெரிதும் துணைபுரியும் என சேலம், தருமபுரி மாவட்ட தொல்பொருள் அலுவலர் ச. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**-தமிழ்நேசன் 13.8.88**

# கடல் கொண்ட பூம்புகாரில் மூழ்கிக் கிடக்கும் அதிசயங்கள்

கடலுக்குள் மூழ்கி அழிந்து போன பூம்புகார் நகரில் ஏராளமான அதிசயங்கள் மூழ்கிக் கிடக்கின்றன. அவை மெல்ல கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

சங்ககால இலக்கியங்களில் குறிப்பாக சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களில் இடம் பெற்று, வர்ணிக்கப்பட்ட நகரம் பூம்புகார் ஆகும். காவிரி ஆறு கடலில் சேரும் இடத்தில் அமைந்துள்ள துறைமுகத்தைக் கொண்ட நகர் பூம்புகார். இதற்கு காவிரிப் பூம்பட்டினம் என்ற பெயரும் விளங்கி வந்தது.

செல்வச் செழிப்புடன் திகழ்ந்த இந்த வாணிப நகரில் பல்வேறு நாட்டைச் சேர்ந்த வணிகர்கள் வந்து வர்த்தகம் செய்தனர் என்று சிலப்பதிகாரமும் மணிமேகலையும் குறிப்பிடுகிறது. சோழர்களின் தலைநகராகவும் பூம்புகார் நகரம் விளங்கியதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இந்த நகரம் தற்போது முழுமையாக அழிந்துவிட்டது. பூம்புகாரை கடல் விழுங்கியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்த நகரத்தை கண்டுபிடிக்க தீவிரமாக முயன்று வருகின்றனர். சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் குறிப்பிட்டுள்ளதைத் தவிர வேறு எந்த தகவலும் இல்லாமல் அவர்கள்

தங்கள் ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். ஆரியர்கள் காலத்திற்கு முற்பட்டு இருந்து மூன்றாம் நூற்றாண்டு வரை இந்த புகார் நகரம் நீடித்திருக்க வேண்டும் என கருதப்படுகிறது.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் 1967—ம் ஆண்டு புகார் நகரத்தில் புத்தர் மதத்தினர் வசித்துள்ளனர் என்பதை கண்டறிந்தனர். தொடர்ந்து அவர்கள் நடத்திய ஆய்விற்கு நல்ல பலன் கிடைத்தது. இந்த ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதவாக்கில் காவிரி கடலில் கலக்கும் பகுதியில் (பூம்புகார் நகரம் இருந்ததாக கூறப்படும் பகுதியில்) பருத்தி வயல் ஒன்றின் அடியில் செங்கல்லால் கட்டப்பட்ட கட்டிடம் ஒன்றை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த கட்டிடத்தின் சுவர்கள் 3 அடி அகலம் உள்ளன. இந்த கட்டிடம் புத்த விகாரமாக இருக்கக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

புராதன பனைமரம் ஒன்றும் அந்த இடத்தில் கண்டுபிடிக்கப் பட்டு உள்ளது. சிதிலம் அடைந்த நிலையில் உள்ள அந்த பனை மரத்தின் வயதை கண்டுபிடிக்க அனுப்பப்பட்டு உள்ளது. அந்த மரத்தின் வயது தெரிந்தால் பல்வேறு சந்தேகங்களுக்கு விடை கிடைக்கும்.

இதேபோல் கடலுக்கடியில் புதையுண்டு கிடக்கும் நகரத்தைப் பற்றியும் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. ஆனால் இதற்கு செலவு அதிகமாகிறது. சமீபத்தில் நடந்த ஒரு கடல் ஆய்வு சில வாரங்களே நீடித்தன. ஆனால் அரசுக்கு இதன் மூலம் ரூ.17 லட்சம் செலவு ஏற்பட்டது. பூம்புகார் பற்றி கடல் ஆராய்ச்சி முழுமையாக நடைபெற்றால் அதற்கு பல கோடி ரூபாய் செலவாகும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஆனால் இதற்கு அரசும் போதிய நிதி ஒதுக்குவதில்லை. இதனால் அகழ்வாராய்ச்சிப் பணி மிகவும் தாமதமாக நடைபெற்று வருகிறது. கடலும் ஆறும் சந்திக்கும் முகத்துவாரத்தை கடல் அழித்து வருகிறது.

மாநில தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இயக்குனர் நடன. காசிநாதன் கூறுகையில், காவேரி கோவிலுக்கு செல்லும் வழி முழுவதுமாக மணலால் மூடப்பட்டு உள்ளது. கடல் அலை காரணமாக மண் அரிப்பு தவிர்க்க முடியாததாகி விடுகிறது என்றார். கடல் மேலும் அழித்து விடாமல் இருக்க அதிகாரிகள் ஆங்காங்கே குழி வெட்டி உள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற கடல் ஆராய்ச்சியின் மூலம் புகார் துறைமுகத்தின் காலம் மட்டுமல்லாமல் துறைமுகத்தின் எல்லைகள் பற்றியும் ஆராய்ச்சியாளர்கள் ஒரு முடிவிற்கு வந்துள்ளனராம்.

துறைமுகம், அருகில் உள்ள தரங்கம்பாடி வரை நீண்டு இருந்து இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். புகார் நகரத்தின் 5 கிலோ மீட்டர் தூரத்தை கடல் விழுங்கி இருக்கக் கூடும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இல்லையென்றால் சிலப்பதிகாரம் மட்டுமல்லாமல் இந்தியாவிற்கு வந்த பல்வேறு பயணிகள் குறிப்பிட்டு உள்ள காப்பியங்களில் வர்ணிக்கப்பட்ட புகார் நகரத்தின் அடையாளங்கள் எதுவுமே மீதமில்லாமல் போயிருக்காது என்பது அவர்களசது கருத்து.

புகார் நகரத்தில் பவளங்கள் விற்பனைக்கு என தனி தெருவும், சந்தனம், ஆபரணங்கள், தங்கம், நவரத்தினங்கள் விற்பனை செய்ய தனித்தனி தெருக்கள் இருந்தன என்று சிலப்பதிகாரத்தில் வர்ணிக்கப்பட்டு உள்ளன. இது உண்மையா என்று கண்டறிய ஏற்பட்ட ஆர்வம் இந்த ஆராய்ச்சியை தொடர வழிவகை செய்துள்ளது.

புகார் நகரத்தில் இருந்து உலகம் முழுவதும் வணிக தொடர்புகள் இருந்தது உண்மையா என கண்டறியும் ஆய்வு நடந்து வருகிறது. பூம்புகார் பகுதியைச் சுற்றிலும் மண்பாண்டங்களின் உடைந்த பகுதிகள் கிடப்பதை காணலாம். அவற்றில் பல பல்வேறு நுட்ப வேலைகளுடன் கூடியவையாக இருந்தன. இதனால் இந்த மண்பாண்டங்கள் ஐரோப்பிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு இருக்கலாம் என்று கருதப்பட்டது.

ஆனால் அவை தமிழகத்தில் தயாரிக்கப்பட்டவைதான் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தமிழர்களுக்கும் ரோமானியர்களுக்கும் இடையே 2—ம் நூற்றாண்டிலேயே வர்த்தகத் தொடர்பு இருந்து வந்துள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ரோமானியர்கள் எண்ணெய் மற்றும் மதுவகையை தேக்கி வைக்க பயன்படுத்திய ஜாடிகள் கண்டுபிடிக்கப் பட்டு உள்ளன.

இதேபோல் இந்தியாவுடன் வர்த்தக உறவு இருந்தது என்று எந்த ஒரு நாட்டிலும் குறிப்பு இருந்தால், தமிழக பகுதியில் இருந்துதான் வாணிபம் நடந்தது என்ற குறிப்புகள் காணப்படுகின்றன. ஆசியாவிலும், பாபிலோனியாவிலும் 5ம் நூற்றாண்டு வரை இந்தியாவிடம் இருந்து அரிசி, மயில்கள், சந்தனம் போன்ற பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு இருப்பது கண்டறியப்பட்டு உள்ளது.

இவை அனைத்தும் திராவிட பகுதியில் நடந்துள்ளது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இதுபோன்ற ஆதாரங்களை ஒருங்கிணைக்கும்போது பூம்புகார் என்று ஒரு வாணிப நகரம் சங்க காலத்தில் இருந்து இருக்கக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறிகின்றனர்.

பூம்புகாரில் இருந்து மீட்கப்பட்ட பல்வேறு பொருட்கள் மிகவும் வியப்பளிக்கின்றன. ஒரு ஜோடி புத்தர் பாதம் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. தாமரை வடிவிலான பீடம் அதில் மாணிக்கங்கள் பதிக்கப்பட்டு உள்ளன. வட்ட வடிவமான கிணறு கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

அரை வட்ட வடிவிலான கட்டிடங்கள் செங்கற் சுவர்கள் போன்றவை பூம்புகார் நகரம் இருப்பதை உறுதி செய்கின்றன. இவற்றை வைத்துப் பார்க்கும்போது கிறிஸ்துவுக்கு 300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தும், கிறிஸ்துவிற்கு 4 நூற்றாண்டுகளுக்கு பின்னரும் பூம்புகார் நகரம் இருந்து இருக்கக் கூடும் என கருத்துகள் நிலவுகின்றன. கடந்த மார்ச் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட புத்த விகாரத்தில் பயன்படுத்தப்பட்ட செங்கல் 60 செ.மீ. நீளத்திற்கு 40 செ.மீ. அகலமுடையது.

இதை வைத்து அந்த கோவில் கட்டப்பட்ட காலத்தை கணிக்க முயன்று வருகிறார்கள். அந்த ஆராய்ச்சியாளர்கள் ஒருபுறம் தீவிரமாக ஆராய்ந்து வரும் நேரம் அவர்களுடைய பல்வேறு கண்டுபிடிப்புகள் காணாமல் போய்விடுகின்றன. 1960—ல் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ராமனால் கண்டுபிடிக்கப் பட்ட தங்கமுலாம் பூசப்பட்ட ஒரு அடி உயர மைதீஸ்வரன் சிலை மாயமாக மறைந்தது. அந்த சிலை அருங்காட்சியகம் ஒன்றில் பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டு இருந்தது. சில வருடங்களுக்கு முன் அது காணாமல் போனது. அதன்பின் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் பல்வேறு பொருட்களை பாதுகாத்து வருகின்றனர்.

அரசு போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்து பூம்புகார் நகரத்தை தோண்டி எடுக்கும் முயற்சியை துரிதப்படுத்தினால் பூமிக் கடியிலும் கடலுக்கடியிலும் மறைந்து கிடக்கும் பல அதிசயங்கள் வெளியாகும்.

இல்லையேல் பூம்புகார் என்றால் தமிழக அரசின் கைவினைப் பொருட்கள் விற்பனை அங்காடிதான் என்று வருங்கால சந்ததியினர் கூறுவார்கள் என்பது நிஜம். ●



திருச்சி – கங்காதரன் கோயிலின் சிவநடனங்களான புடைச் சிற்பங்கள்

# நாயக்க மன்னர் கால நாணயங்கள் சேலத்தில் கண்டுபிடிப்பு!

சேலம் மாவட்டத்தில் பல இடங்களிலிருந்து பண்டைய மன்னர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள் கிடைத்துள்ளன. இத்தகவலை நாணயவியல் ஆய்வு மையத்தின் இயக்குநரும் பேராசிரியருமான ஏ.திருஞான சம்பந்தம் தெரிவித்தார்.


பண்டைய மன்னர்கள் வணிகத்திற்கு பயன்படுத்திய வெவ்வேறு நாணயங்கள் சேலம் மாவட்டத்தில் கிடைத்துள்ளன. ஆத்தூர் வசிஷ்ட நதிக்கரையில் கண்டெடுக்கப்பட்ட செப்பு நாணயங்கள் முன்னர் சேந்தமங்கலம் ராமச்சந்திர நாயக்கர் வெளியிட்ட செப்புக் காசுகள் ஆகும்.

இவற்றின் முகப்பில் சங்கு, சக்கரம், நரசிம்மர், சிவன், பார்வதி, கோதண்டராமர், பறவை, யாளி போன்ற வடிவங்கள் பதிக்கப்பட்டுள்ளன. இவை செப்பில் அச்சடிக்கப்பட்ட காசுகள் ஆகும்.

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலத்தை ராமச்சந்திர நாயக்கர் என்ற பாளையக்காரர் ஆட்சி செய்துள்ளார். அவரது ஆட்சிக் காலத்தில் இந்த செப்புக் காசுகள் வெளியிடப் பட்டுள்ளன. அந்தக் காசுகளின் மறுபுறத்தில் முத்துப்பரல் வட்டத்திற்குள் மன்னரின் குறுவாள் சின்னமும், வாளின் இருபுறமும் சந்திரனும், சூரியனும் "நா—மபூ" என்ற எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு காசின் எடையும் 3/5 கிராம் ஆகும். சக்கரம் பதிக்கப்பட்ட காசின் எடை 4 கிராம் ஆகும். காசுகளின் விட்டம் 15 மில்லி மீட்டர்.

கி.பி.1254—1295ம் ஆண்டில் கிருஷ்ணகிரி அருகே குந்தாரிணியை என்ற பகுதியைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்த வீரராமநாதன் மன்னன் காலத்தில் நிறுவப்பட்ட கல்வெட்டுகள் அதிகமாக சேலம் பகுதியில் கிடைத்துள்ளன. இந்த மன்னர் ஆட்சிக் காலத்தின்போது 15க்கும் மேற்பட்ட நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அந்தக் கல்வெட்டுகளில் கழஞ்சு, காசு,, வராகன், பொன், பணம், சலாகை, உதாரன், அச்சு என நாணயங்களைக் குறிக்கும் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

மேற்குறிப்பிட்ட நாணயங்கள் அக்காலத்து மக்களிடையே புழகத்தில் இருந்துள்ளதாகவும் தெரிய வருகிறது. இந்த மன்னர் காலத்தில் வெளியிடப்பட்ட செப்பு நாணயங்களின் புறப்பகுதி அனைத்திலும் மூன்று வளைவுகளின்கீழ் அங்குசமும் இருபுறமும் விளக்கும், வெண்சாமரமும் காணப்படுகின்றன.



மாமல்லன் உருவாக்கிய கற்கோயில்கள் 7ஆம் நூற்றாண்டு

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தொடக்க கால வரலாறு

—சாலினி இளந்திரையன்

1973 முற்பகுதியில் ஈழத்தின் குரும்பசிட்டி என்னும் ஊரைச் சேர்ந்த கனகரத்தினம் என்னும் அன்பர் என் துணைவருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் தாம் உலகத்தின் பல நாடுகளில் வாழும் தமிழர்களைப் பற்றிய குறிப்புகளைச் சேகரிக்கத் தொடங்கி, அது இன்று கணிசமாக வளர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்திருந்தார். பல தூரத்துத் தீவுகளில் வாழும் தமிழர்கள் தமிழை மறந்துவிடக் கூடிய நிலை உருவாகி வருவதையும் சுட்டிக்காட்டி, அவர்கள் தமிழர்களாக வாழ உதவக் கூடிய ஓர் அமைப்பு உருவாக வேண்டியதன் அவசியத்தையும் எழுதியிருந்தார்.

என் துணைவர் பேராசிரியர் சாலை இளந்திரையன் அவருடைய இந்த முயற்சியை வெகுவாகப் பாராட்டினார். 'உலகத் தமிழ் மாநாடுகளை நடத்துகின்ற உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் அறிஞர்களை முதன்மைப் படுத்தும் அமைப்பு. பொது மக்கள் உறவாடி ஒருவருக்கொருவர் உதவி, தமிழ் மொழியையும் பண்பாட்டையும் பாதுகாக்க ஓர் அமைப்பு இருப்பது தேவையே. அதற்கு என்னாலான எல்லாவகையிலும் துணை நிற்பேன்' என்று எழுதினார்கள்

செப்டம்பர் மாதவாக்கில் கனகரத்தினம் இது பற்றி மற்றுமொரு கடிதம் எழுதினார். 'உங்களுக்கு எழுதியிருந்தது போலவே தமிழகத்துத் தமிழ்ப் பேராசிரியர்கள் பலருக்கும் எழுதினேன். மு.வெ. போன்ற ஓரிருவரை இதற்குத் தலைமையேற்று இந்த அமைப்பை வழிநடத்தக் கேட்டுக் கொண்டேன். யாரும் இதில் உங்கள் அளவு ஆர்வம் காட்டவில்லை. தலைமை ஏற்கும்படி நான் கேட்டவர்களும் மறுத்துவிட்டார்கள. நீங்கள் யாழ்ப்பணத்தில் நடைபெற இருக்கும் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வருகை தர இருக்கிறீர்கள் என்று அறிகிறேன். அப்போது என்னிடமுள்ள குறிப்புகளை வைத்து ஒரு கண்காட்சி அமைக்கவும் திட்டமிட்டு வருகிறேன். உலகத் தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் என்ற அமைப்பைத் தங்கள் தலைமையில் உருவாக்க விரும்புகிறேன். தில்லியில் இருந்தாலும் நாடறிந்த தமிழ் அறிஞராக இருப்பதால் உலகளாவிய அமைப்புக்குப் பொருத்தமாக இருக்கும். நீங்கள் இதை மறுக்கமாட்டீர்கள் என்றும் நம்புகிறேன்' என்பதே அவர் கடிதத்தின் சாரம்.

என்னுடைய துணைவர் இரண்டு செய்திகளை முதன்மையாகக் குறிப்பிட்டு அவருக்குக் கடிதம் அனுப்பினார். ஒன்று, இன்றைய இலங்கைச் சூழலில் உலகத் தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் என்று பெயரிட்டால் எதிர்விளைவுகளை ஏற்படுத்திவிடக் கூடும். எனவே தொடர்ந்து இயங்க வேண்டிய இந்த அமைப்புக்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் என்று பெயரிடுவது பொருத்த மானதாகும் என்பது உலகத்துப் பலநாடுகளிலும் வாழுகின்ற தமிழர்களுக்கு உதவ இந்தியத் தமிழகமே முன் நிற்க வேண்டியிருக் குமாதலால்

தமிழகத்திலிருந்தே யாராவது தலைமை ஏற்கும்படியாக முயல்வோம். முடியாவிட்டால், நான் தலைமை ஏற்க எந்தத் தடையுமில்லை. நாலாவது உலகத்தமிழ் மாநாட்டுக்கு வரும் போது இது பற்றி முடிவு செய்து கொள்வோம் எனப்து மற் றொன்று.

நான்காவது உலகத் தமிழ் மாநாடு சிங்கள அரசின் கெடுபிடியில் சிக்கித் தவித்தது. சனவரி 3ஆம் நாள் தொடங் கிய மாநாட்டுக்குத் தில்லியில் டிசம்பர் 30ஆம் தேதிதான் விசா வழங்கினார். இதற்கிடையில் கனகரத்தினமும் அவ்வப்போது கடிதங்கள் எழுதி நிலைமைகளைத் தெரிவித்தார். எனவே, ஒரு கடிதத்தில் என் துணைவர், இந்த அமைப்புப்பற்றி இப்போது பத்திரிகைகளுக்குச் செய்தி தரவேண்டாம். தொடங்கிய பிறகு விரிவாகச் செய்தி தருவோம் என்று குறிப்பிட்டு எழுதினார்கள்.

ஜனவரி 6ஆம் தேதி காலையில் தான் நாங்கள் மாநாட்டிற்குச் செல்ல முடிந்தது. அங்கே கனகரத்தினம் வந்து சந்தித்தார் இப் போதைக்கு நீங்களே தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னார். 8ஆம் தேதி மாலையில் ஓர் உணவுவிடுதியில் அமைப்புக் கூட்டத்தை ஏற்பாடு செய்வதாகச் சொல்லிச் சென்றார். 7ஆம் தேதி மாலை அவர் எழுதியிருந்த உலகத்தமிழர் நூலையும் பெற்றுவந்தோம். 8ஆம் தேதி காலையில் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தொடர்பாக இரண்டு செய்திகள் எங்களை மிகவும் உறுத்தின. உலகத் தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் என்பது உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் என்று மாற்றப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தித் தனிப்பட்ட முறையில் கனகரத்தினத்துக்கு எழுதிய கடிதம் அப்படியே முழுமையாக உலகத்தமிழர் நூலில் இடம் பெற்றிருந்தது. அன்றைய காலைச் செய்தித்தாளில் உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் சாலை இளந்திரையன் தலைமயில் உருவாகப் போகிறது என்ற செய்தி வெளியாகியிருந்தது. *'கடைக் கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக் கொட்கின் எற்றா விழுமம் தரும்'* என்ற போக்குடைய என் துணைவர் கனகரத்தினத்தின் இந்தப் போக்கு பற்றிச் சிறிது கவலை கொண்டார். என்றாலும் முன்வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்ற நடைமுறை உடையவராதலால் அந்த விடுதிக்குக் குறித்த நேரத்திற்குச் சென்றோம். கனகரத்தினத்திடம் வருவதாக வாக்களித்திருந்த ஈழத்தமிழர்கள் யாரும் வரவில்லை. இந்தியா, தென் ஆப்பிரிக்கா, மலேசிய அறிஞர்களும் கனகரத்தினமும் சேர்ந்து அமைப்பை உருவாக்கினோம். கனகரத்தினம் அவர்களிடம் நயமாக இந்தக் குறைகளைச் சுட்டிக் காட்டி, நிதானமாகச் செயல்படவேண்டும் என்றும் நான் தலைமைப் பொறுப்பில் இருக்க வேண்டும் என்றால் என்னுடைய அனுமதி இல்லாமல் நீங்கள் அறிக்கைகள் எதுவும் பத்திரிகைகளுக்குத் தரக்கூடாது என்றும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திவிட்டு, இந்த அமைப்பைப் பற்றி ஓர் அறிக்கையும் அங்கேயே உருவாக்கப்பட்டுப் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டது.

அந்த மாநாட்டுக்கு வந்திருந்த பலநாட்டுத் தமிழர்களின் முகவரிகளையும் பல பத்திரிகைகளின் முகவரிகளையும் சேகரித்துக் கொண்டோம். தமிழ்நாட்டிற்கு வந்ததும் தமிழ்ப் பத்திரிகைகளுக்கெல்லாம் இந்த அமைப்பு பற்றிச் செய்தி அனுப்பினோம். தில்லி சேர்ந்ததும் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தைக் கூட்டிப் பல பகுதி மக்களுக்கும் இச்செய்தி சென்று சேர வழிவகை செய்தோம். அன்று உலகெங்கிலும் நல்ல தொடர்பு கொண்டிருந்த லண்டன் முரசு பத்திரிகையில் இச்செய்தி வெளிவந்தது. பி.பி.சி நிறுவனத்தாருக்கும் இது பற்றிக் கடிதம் எழுதினோம். அவர்களும் இச் செய்தியை விரிவாகப் பரப்பினார்கள். பி.பி.சி.யின் செய்திக்குறிப்பு பல நாட்டுத் தமிழர்களை எங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளச் செய்தது குறிப்பாக அன்றைய பர்மா நாட்டுத் தமிழர்களும் மொரிசியஸ் நாட்டுத் தமிழர்களும் பிஜித் தீவுத் தமிழர்களும் இத்தகைய அமைப்புக்காகவே ஏங்கி நிற்கிறோம் என்று மிகுந்த மிகிழ்ச்சியுடன் கடிதம் எழுதினார்கள். ஒவ்வொரு நாட்டிலிருந்தும் இரண்டு மூன்றுபேர் கடிதம் எழுதியிருந்தால் அவர்கள் ஒன்றிணைந்து ஓர் அமைப்பை உருவாக்கித் தலைமைச் செயலகமான தில்லிக்கு அறிவிக்கச் செய்தோம். ஆறு மாதங்களுக்குள் 14 நாடுகளில் கிளைகள் ஏற்பட்டன தாமரைச்சின்னம் அமைக்கப்பட்டது. நடைமுறை விதகிள் வகுக்கப்பட்டன. உறுப்பினர் பட்டயம் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு செய்தியும் கனகரத்தினத்துக்கும் முறையாகத் தெரிவிக்கப்பட்டது.

அமைப்புகள் உருவாக உருவாக, ஆர்வம் மிக்க கடிதங்கள் வந்து குவியக் குவிய, விரைவிலேயே எல்லோரையும் ஓரிடத்தில் கூட்ட வேண்டும் என்ற ஆர்வ எழுச்சி பிறந்தது.

தில்லிக்கு வந்த ந.மகாலிங்கம் போன்ற தமிழ்நாட்டுத் தொழிலதிபர்கள், தெ.பொ.மீ. போன்ற அறிஞர் பெருமக்கள், க.ராஜாராம் போன்ற அரசியல்வாதிகள், குன்றக்குடி அடிகளார் போன்ற தமிழ் ஆர்வலர்கள் எல்லோரிடமும் இதுபற்றிப் பேசினோம். அவர்கள் தந்த உற்சாகத்தோடு தமிழநாட்டில் பலரோடும் கடிதத் தொடர்பு கொண்டோம். எல்லோரிடமிருந்தும் வந்த இணக்கமான எழுச்சியான *பதில்களைக் கண்டபோது தமிழனுக்கு வீழ்ச்சியில்லை, தமிழன் கீர்த்தி தாழ்வதில்லை தமிழ்நாடு, தமிழ் மக்கள், தமிழ் என்னும் பேருணர்ச்சி இந்நாயல் போலே தமிழ் நாட்டில் எந்நாளும் இருந்ததில்லை என்ற* புரட்சிக் கவிஞரின் வரிகளே நெஞ்சில் நிழலாடின *1975* டிசம்பரில் மாநாட்டை நடத்துவதென் றும் **பத்து நாட்கள் பண்**பாட்டுப் பயிலரங்கம் பத்து **நாட்கள் பண்**பாட்டுச் சுற்றுலா என்ற முறையில் *(25—12—75)* முதல் *(15—1—76)* வரை விரிவான திட்டம் ஒன் றைத் தயாரித்தோம். தமிழ்நாடு முழுவதும் சுற்றிவந்த பட்டறிவு இருந்தால் எந்தெந்த வழியில் சென்று எவ்வெவற்றைப் பார்க்கச் செய்து எங்கெங்கே உணவும் கூட்டமும் தங்கலும் ஏற்பாடு செய்யலாம் என்றும் ஒழுங்குபடுத்தினோம்.

மாநாட்டு அமைப்புக்குழு என்று பெரியவர்களை எல்லாம் இணைத்து ஒரு குழுவும் சுறுசுறுப்பாக இயங்கிச் செயற்பட இளைஞர்களின் செயற்குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. செயற்குழுவின் கூட்டம் மே மாதத்தில் சென்னையில் கூடித் திட்டங்கள் அனைத்தையும் விவாதித்தது. அதுவரை செய்திருந்த ஏற்பாடுகள் எல்லோருக்கும் நிறைவைத் தந்தன. மலர்க்குழு, விளம்பரக்குழு கருத்தரங்கக்குழு, சுற்றுலாக்குழு என்று பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. நாங்கள் தில்லியிலிருந்ததால் விழாக் குழுவினர் செயலாளராக சோமலெயும் துணைச் செயலாளராக வலம்புரிஜானும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் நடைபெற இருந்த பண்பாட்டுப் பெருவிழாவின் விழாக் குழு பின்வருமாறு அமைந்தது:

தலைவர் : டாக்டர் சாலை இளந்திரையன்

காப்பாளர்கள் :

மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம்

தமிழக அமைச்சர் திரு. க. இராசாராம்

பல்கலைச் செல்வர்
திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு

திருவண்ணாமலை ஆதினம் அருட்திரு குன்றக்குடி அடிகளார்

தொழிதிபர் திரு. நா. மகாலிங்கம்

சிந்தனையாளர் திரு. ஏ.பி. ஜனார்த்தனம்

நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. ஆ.கா.அ. அப்துல் சமது

கலைமாமணி திரு. எஸ்.டி. சுந்தரம்

தொழில் விற்பன்னர்
திரு. வி.ஜி.பன்னீர்தாஸ்

செயலாளர் :திரு. சோமலெ

துணைச் செயலாளர் :
திரு. வலம்புரிஜான்

உறுப்பினர்கள் :
செயற்குழுவில் உள்ள அத்துணை பேரும்

செயற்குழு :

தலைவர், செயலாளர், துணைச் செயலாளருடன்

வகுப்புகள் :டாக்டர் பொன் கோதண்டராமன்

திரு. க.த. திருநாவுக்கரசு

சொற்பொழிவு, கருத்தரங்கு :
திரு. க.ப.அறவாணன்

கண்காட்சி :திரு. இரா. முத்துக்குமாரசாமி

கொடுமுடி சண்முகம்,

உணவு, போக்குவரத்து :
சிலம்பொலி செல்லப்பன்,

டாக்டர் அவ்வை நடராசன்,

கலை நிகழ்ச்சிகள் :
எஸ்.வி.எஸ்.மணியன்

சிறப்பு மலர் :
கவிஞர் அழ.வள்ளியப்பா

திரு. ஜே.எம். சாலி


பொதுத்தொடர்பு :
திரு.பா.வளன் அரசு

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தைப் பற்றிப் பலரும் விளக்கம் கேட்கவே தமிழ்ப் பண்பாட்டுக்கு ஓர் இயக்கம் என்ற குறுநூலும் எழுதப்பட்டது. தஞ்சை, மதுரை, நெல்லை, கோவை, சேலம் ஆகிய இடங்களில் வரவேற்பு, கலை நிகழ்ச்சிகள் ஆகியன நடைபெறவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

உலக நாடுகள் பலவற்றிலுமிருந்து பேராளர்களைத் திரட்டும் பொறுப்பும் சாலையாருடையதாக இருந்தது. ஒரு நாட்டிலிருந்து இரண்டு முதல் ஐந்து பேர் வரை வரலாம் என்று முடிவு செய்தோம். பல நாட்டினர் அதற்கும் மேலாகப் பலர் வர விருப்பம் தெரிவித்து எழுதினார்கள். தமிழ் நாட்டிலும் எல்லோரோடும் கடிதத் தொடர்பை முறையாக வைத்துக் கொண்டதோடு செப்டம்பர் முதல் வாரத்தில் ஒரு வாரம் சென்னை வந்து செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் சந்தித்து நடைபெற்றிருந்த விவரங்களைத் தெரிந்து கொண்டதோடு முதல்வர் கருணாநிதியைச் சந்தித்தோம். டிசம்பர் 25ல் மாநாட்டைத் தொடங்கி வைக்க ஒப்புதல் தந்ததோடு மாநாட்டு பேராளர்கள் தங்க, சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் 100 அறைகள் தரவும், மாநாட்டுச் செலவுக்காகக் கணிசமான ஒரு தொகை தரவும், வாக்களித்தார். நாங்கள் செய்ய வேண்டிய பணி, நீங்கள் செய்கிறீர்கள். இந்த உதவிகளைச் செய்ய வேண்டியது எங்கள் கடமை' என்று திறந்த உள்ளத்தோடு பாராட்டினார்.

மற்ற அமைச்சர்களையும் ம.பொ.சி.,பாவாணர் போன்றவர்களையும் சந்தித்தோம். கி.ஆ.பெ.வி.யைச் சந்திக்க நினைத்தும் வாய்ப்பில்லாததால் கடிதம் மட்டுமே எழுதினோம். மகிழ்வோடு பதில் எழுதினார். அமைச்சர் இராசாராம் அவர்களுடனும் சோமலெ அவர்களுடனும் சட்டமன்ற தலைவர் புலவர் கோவிந்தனைச் சந்தித்து, சட்டமன்ற விடுதியில் பேராளர்கள் தங்க அறைகள் பற்றி முதல்வரிடம் பேசியதைக் குறிப்பிட்டோம். முதல்வர் சொன்னார், தமிழக்கு இப்படி ஒரு விழா நடப்பது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி. எப்போது வேண்டுமோ அப்போது என்னைச் சந்தியுங்கள் என்று சொன்னார்' நான் தில்லியில் இருப்பதால் சோமலை உங்களைச் சந்திப்பார்' என்று சொல்லி நன்றி தெரிவித்து விடைபெற்றோம். செனகல் பிரதமர் செங்கோரும் விழாவுக்கு வர இசைவுதந்தார்.

பேராளர்களெல்லாம் சென்னையில் நாங்கள் எங்கே தொடர்பு கொள்வது என்று கேட்கத் தொடங்கினார்கள். எல்லாச் செயற்குழு உறுப்பினர்களும் அவ்வப்போது சந்தித்துக் கலந்துறவாட ஓர் அறையும் தொலைபேசியும் இருந்தால் நல்லது என்று விழாச் செயலாளர் சோமலெயும் எழுதினார். எனவே புலவர் கோவிந்தனைச் சந்தித்து மாநாட்டுச் செயலகமாக ஓர் அறையும் ஒரு தொலைபேசியும் கேளுங்கள் என்று எழுதினோம். அது பிறகு பேராளர்கள் தங்கும்போது வசதியாக இருக்கும் என்றும் கருதினோம். அக்டோபர் நடுவில் புலவர் கோவிந்தனைச் சந்தித்தார் சோமலெ. புலவர் கோவிந்தன் கலைஞரைச் சந்தித்து விட்டு வாருங்கள் என்று சொல்லியிருக்கிறார். அடுத்தநாள் காலைச் செய்தித்தாளில் பண்பாட்டு விழாத் தொடக்க நாளாக அறிவிக்கப்பட்டிருந்த டிசம்பர் 25ல் இங்கே எப்படி இருப்பார்? புலவர் கோவிந்தன் வேறு இப்படிச் சொல்கிறார் என் று மருண்ட சோமலெ, உடனே எங்களோடு தெலைபேசியில் தொடர்பு கொண்டார் எங்களுக்கும் திகைப்பாகவே இருந்தது. இது ஏதோ அறியாமல் நேர்ந்துவிட்ட குழப்பமாக இருக்கலாம். உடனேயே நமது காப்பாளர்களில் ஒருவராகிய அமைச்சர் திரு. இராசாராம் அவர்களைச் சந்தித்து விவரம் சொல்லி அவருடனேயே கலைஞர் கருணாநிதியைச் சந்தியுங்கள். பொதுக்குழு தேதியை மாற்ற முடியுமா? மாற்ற முடியாதென்றால் 24 மாலையிலேயே நம்முடைய தொடக்க விழாவை வைத்துக்கொள்ளலாமா என்று கேளுங்கள் என்று சொன்னோம். அதன்படியே இருவரும் கருணாநிதியைச் சந்திக்கச் சென்றிருக்கிறார்கள். அமைச்சரை மட்டும் உள்ளே அழைத்த கருணாநிதியார் இந்த விழா நடந்தால் சாலை இளந்திரையனுக்குப் பெயர் கிடைக்கும் இதில் நமக்கென்ன லாபம்? எனக்கு இந்த விழாவில் பங்கேற்கவோ அவர்களுக்கு உதவவோ விருப்பமில்லை என்று அடித்துச் சொல்லவே திகைத்துப்போன இராசாராம், 'இப்போது இப்படிச் சொன்னால் எப்படி?' விழா ஏற்பாடுகள் எல்லாம் என்று சொன்னவரை முடிக்கவிடாமலே அவர்கள் எப்படியாவது நடத்திக் கொள்ளட்டும். நான் சொன்னால் சொன்னது தான். இதுபற்றி இனிமேல் பேசவேண்டாம்' என்று சொல்லிவிடவே இராசாராம் மவுனமாக சோமலெயை அழைத்துக்கொண்டு வீடு திரும்பினார். இந்த வகையாகக் கலைஞர் முடிவெடுத்ததற்கு என்ன காரணம் என்று





தெரியவில்லை என்னிடம் இது குறித்து ஒன்றும் பேசவில்லை. அவர் சொன்னதை வைத்துப் பார்க்கும்போது யாரோ அவர் உள்ளத்தில் பொறாமை எண்ணத்தைத் தோற்றுவித்து விட்டார்கள் என்று தெரிகிறது என்று மனம் கசந்து சொல்லிவிட்டு எங்களுக்குத் தொலைபேசி மூலம் அவரே நடந்த செய்தியைச் சொன்னார். இப்போது கோபத்தில் சொன்னாலும் ஒரு வாரம் கழித்துப் பார்த்தால் ஏதாவது பயன் இருக்குமா? நான் சென்னை வரவா? என்று என் துணைவர் கேட்டார். பயன் இருக்கும் என்று தோன்றவில்லை. வள்ளுவர் விழா நடத்தியதில் மிச்சம் 3000 ரூபாய் இருக்கிறது. அதைத் தருகிறேன் வேறு ஏற்பாடுகளைச் செய்து விழாவை நடத்துங்கள். பொதுக்குழு இருப்பதால் நானும் விழாவில் கலந்துகொள்ள வாய்க்காது. இதற்கு மேல் என்ன சொல்வது என்றே புரியவில்லை' என்று தொலைபேசியை வைத்துவிட்டார்.

அன்று இரவு சோமலெயுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டோம். 'இராசாராம் அவர்கள் மிகவும் நொந்து போயுள்ளார். அவர் இல்லாத சமயத்தில் மற்றவர்கள் கூடிப்பேசி இந்த முடிவுக்கு வந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கிறேன். காரணம் தெரியவில்லை' என்று சொன்னார். என்ன காரணமாக இருந்தாலும் தமிழக முதல்வர் கலந்து கொள்ளவில்லை என்றால் வெளிநாடுகளிலிருந்து வரும் பிரதிநிதிகளாகட்டும், தமிழ் நாட்டு அறிஞர் பெருமக்களாகட்டும், சுற்றுலா ஏற்பாடுகளை அங்கங்கே செய்ய முன் நிற்கும் தி.மு.க. வினராகட்டும் வாட்டமும் தயக்கமும் காட்டுவார்களே. அதனால் பேரெழுச்சியாகத் தொடங்கிய ஒன்றை அரங்களவாக மட்டும் தானே நடத்த முடியும் அதனால் மாநாட்டின் நோக்கமே முற்றாகச் சிதைந்து குழப்பம்தான் மிஞ்சும். இப்போதைக்கு இதை ஒத்திப் போடுவதைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை என்று என் துணைவர் மனம் நொந்து குறிப்பிட்டதைச் சோமலெயும் ஏற்றுக் கொண்டார். அப்படியே செய்து எல்லாருக்கும் அறிவித்துவிடுங்கள், நிலைமையைச் சீராக்கி அடுத்து ஆண்டு வெற்றிகரமாக நடத்துவோம். மனம் தளரவேண்டாம். முதலிலேயே மறுத்திருந்தால் வேறுவகையாகத் திட்டமிட் டிருக்கலாம். இப்போது பெரிய விழாவாக எல்லோருக்கும் அறிவித்துவிட்டுச் சிறிய அளவாக நடத்தினால் கேலிக் குரியதாகவே

அமையும். நன்றாகத் திட்டமிட்டுப் பிறகு நடத்துவோம். வருந்த வேண்டாம். இப்போதைக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது என்று மட்டும் அறிவியுங்கள் என்று சொன்னார். நாங்களும் அப்படித்தான் நினைத்தோம். செனகல் பிரதமருக்கும் வெளிநாட்டுப் பேராளர்களுக்கும் இந்த அறிவிப்பை வெளியிட்ட போது எங்கள் உள்ளமும் உடலும் கூசின. தமிழ் நாட்டின் செய்தியை தெரிவித்தோம்.

இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவென்றால், மாநாட்டுக்கு வர ஆயத்தமாகிக் கொண்டிருந்த வெளிநாட்டுப் பேராளர்கள் எல்லாம் என் துணைவரின் செயல்திறன் இன்மையே காரணம் என்று கொதித் துச் சாடினார்கள். அவர்களுடைய நேரத்தையும் பணத்தையும் வீணடித்து விட்டதாகக் குமுறினார்கள். தமிழகத்துப் பெருமகக்ளோ ஓர் ஆறுதல் வார்த்தை சொல்லவும் இல்லை. செய்யாத குற்றத்துக்குச் சிறை இருந்தது போன்று இருந்தது என் துணைவரின் மணநிலை. நான் இருந்ததுதான் அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லியிருந்தால் முன்பு இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றப் பொறுப்பிலிருந்து விலகி மன்றம் நிலைபெறத் துணைநின்றது போல் செய்திருப்பேன். இப் போது தமிழுக்கு வர இருந்த பெரு பேறு அல்லவா பறிபோய் விட்டது என்று சொல்லிச் சொல்லி வருந்தினார்கள் . இந்த மாறுதலைச் செய்யவும் காலம் கடந் துவிட்ட சூழ்நிலையில் ஒத்தி வைக்கப்பட்டது என்று அறிவித்துவிட்டு எங்களுக்குள் மறுகுவதை விட வேறுவழி தெரியவில்லை.

ஆனால், வெளிநாட்டிலிருந்து வந்த சொல்லம்புகள் தன் செயல்திறனில் முழுநம்பிக்கையும் பெருமையும் கொண்ட என் கணவர் உள்ளத்தைத் துளைத்தெடுக்கவே உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலக முடிவு செய்து செயலாளர் கனகரத்தினத்துக்கு வேறொரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு எழுதினார்.

நான்காவது உலகத் தமிழ் மாநாட்டின் கடைசி நாள் நடந்த போலீசார் தடியடி இலங்கையில் பல அரசியல் குழப்பங்களைத் தோற்றுவித்தது. இதனாலும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பால் கனகரத்தினத்தின் நூலால் சில அய்யப்பாடுகள் தோன்றியிருந்ததாலும் அவரை இந்த விழாவில் நேரடியாக ஈடுபடுத்த விரும்பவில்லை. தமிழ்நாட்டில் விழா நடக்க இருந்தால் விழாக்குழு முழுக்க முழுக்கத் தமிழ் நாட்டவரைக் கொண்டு உருவாக்கப்பட்டது. விழாக்குழுச் செயலாளரையும் இயக்கச் செயலாளரையும் குழப்பிக் கொண்டு, தன்னைப் புறக்கணிப்பதாகக் கனகரத்தினமும் கடுமையாக எழுதியிருந்தார். அப்போதே அவருக்கு நிலைமைகளைத் தெளிவுபடுத்திக் கடிதம் எழுதியிருந்தார் என் துணைவர். இப்போது அதையும் குறிப்பிட்டு இனி நான் தலைவராகத் தொடர்வதற்கு என் மனம் இடம் தரவில்லை. மாநாட்டை நடத்தி முடித்த பிறகு நீங்களும் புரிந்து கொள்வீர்கள் நானும் விலகிக் கொள்ளலாம் என்று நினைத்தேன். இப்போது அதற்கும் வாய்ப்பு இல்லை. விரைவில் மற்ற நண்பர்களோடு கலந்து முடிவெடுத்துத் தெரிவியுங்கள். எல்லாப் பொறுப்புகளையும் ஒப்படைக்கக் காத்திருக்கிறேன். என்று எழுதினார்கள் இரண்டு மாதங்களுக்குப் பிறகு மலேசியா நாட்டைச் சேர்ந்த இர.ந. வீரப்பனார் அவர்கள் தலைவராக இருக்க ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அவரிடம் எல்லாவற்றையும் ஒப்படைக்குமாறும் கனகரத்தினம் எழுதினார். அப்படியே செய்தார் என் துணைவர்.

இரண்டாண்டுகள் கழித்து 1977—ல் வீரப்பனார் சென்னையிலேயே அந்த மாநாட்டை அரங்க அளவாக நடத்த முற்பட்ட போது, நாங்களும் கலந்து கொண்டோம் எங்களால் ஆன சிறிய உதவிகளைச் செய்தோம். எப்படியும் இந்த இயக்கம் அழிந்துவிடக் கூடாது. அப்படி அழிவது தமிழுக்கு அழிவு என்று உணர்ந்ததால் சிறிது சிறிதாகவாவது வளரட்டும் என்று கருதினோம். வீரப்பனாரின் பெரிய முயற்சியால் இன்று இந்த இயக்கம் மேலும் பல நாடுகளில் கிளை பரப்பி ஐ.நா.வில் பார்வையாளர் அந்தஸ்தைப் பெற்றிருப்பது எங்க்ளுக்குப் பெருமகிழ்வு தந்து வந்த செய்தியாகும்.

என்றாலும் 1975—ல் நடக்க முடியாமல் போன அந்தத் தமிழ்ப் பண்பாட்டுப் பெருவிழா எங்களின் வாழ் நாள் சோகமாக நிலைத்துவிட்டது. அதற்குக் காரணம் அது ஏன் நிறுத்தப்பட்டது என்பது இன்றளவும் எங்களக்குத் தெரியவும் இல்லை புரியவும் இல்லை என்பதுதான்.

●

# மலேசியத் தமிழ்க் கல்வியும் தமிழ்ப்பள்ளிகளும்

15ம் நூற்றாண்டில் மலாக்காவின் மலாய் மன்னராட்சியில் தமிழும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. தமிழக வணிகர்கள் இங்குப் பணியாற்றிய போது தமிழில் கணக்கு வழக்குகளை எழுதினர்.

அடுத்து, புலவர் ஸ்ரீலானா என்பவரும் தமிழறிந்துள்ளவராதாலால், இவரே முதன் முதலில் மலாய் மொழியில் மலாக்கா மன்னர்களின் வரலாற்றை எழுதினார். 16ம் நூற்றாண்டில் வீடுகளில் இஸ்லாம் சமயத்துடன் தமிழும் படிப்பிக்கப்பட்டு வந்தது. பிறகு 18ம் 19ம் நூற்றாண்டுகளில் அத்தொடர்ச்சி விட்டுவிட்டு தொடர்ந்தது. திண்ணைப் பள்ளிகளில் இரவில் இது அரைகுறையாக நடந்தது.

முன்ஷி அப்துல்லா(1796-1854)வும் இப்படிப் படித்து, தமிழகம் சென்று இரு மொழிப் புலமை பெற்று, மலாய் இலக்கியம் படைத்தார். பின்னர் போர்த்துகீஸ்-டச்சு பேயாட்சியிலும் இத்தகையவர்களால் ஒடுக்கப்பட்ட தமிழகக் கடலோடிகளான மலாக்கா செட்டிகள் திரும்ப முடியாமல், தமிழைச் சமயமாகக் கோயிலுக்குள் முடக்கிக் கொண்டனர்.

தஞ்சோங்கிலிங், காஞ்சிபுரம், (கஜாபெராங்) தெங்காரா, தரங்கம்பாடி வட்டாரத்தில் வாழ்ந்த இவர்களின் தலைமுறையில் மட்டுமே, தங்களுக்குள் (ஆண்கள்) தமிழும் வாழ்ந்தது. தமிழ் முனிவரால், படை வீரர்களுக்கு சிலம்பம் (சிலாட்) முதலிய தற்காப்புக் கலைகள் கற்பிக்கப்பட்டன. இவ்வாறு தமிழனின் தொடர்புறவு வரலாறாக உளது. தொடக்கம் எழுதாமல் பலர் முடிவு எழுதுவது தவறு.

**தோற்றத்தின் வளர்ச்சியும் வாழ்வும்**

1816ல் முதன் முதலாக ஆங்கில ஆட்சியில், பினாங்கில் முதல் தமிழ்ப் பள்ளி எழுந்தது. 1850ல் மலாக்காவிலும், பின்னர் சிங்கப்பூரிலும் உருவாக்கப்பட்டது. முதலில் தமிழர்களே தமிழ்க் கல்வியை தோட்டப் புறங்களில் மேற்கொண்டனர். 1920-1937 காலகட்டத்தில் இப்படி அமைந்தன தமிழ்ப் பள்ளிகள்.

1957ல் 888 தமிழ்ப்பள்ளிகள் இருந்ததாகக் கணக்கு. இது படிப்படியாகக் குறைந்து 1998ல் 530 ஆகிவிட்டது. இன்று ஒரு லட்சம் பிள்ளைகளே இப்பள்ளிகளில் படிக்கின்றனர். எல்லாமே தொடக்கப் பள்ளிகள் ஆறாம் வகுப்பு வரையே படிப்பு. ஆறாண்டு கல்வி இது.

சென்ற ஆண்டில் தொடக்கப் பள்ளிகளில் கல்வி கற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 94907 பேர் மட்டுமே. இவ்வெண்ணிக்கை ஏற்றங்கண்டு ஒரு இலட்சமாகியிருக்கிறது. இவ்வெண்ணிக்கையில் கால் பகுதியினர் மலாய்-சீனப் பள்ளிகளுக்குப் போய்விடுகிறார்கள். 15,000 பேர் படிக்காமல் வேலை செய்து எதிர்காலத்தை வீணாக்கி விட்டனர்.

நாற்பது ஆண்டுகளில், தோட்டங்களின் வீழ்ச்சியில் புதிய நகரத் தொழிலமைப்பு நகரவிரிவு ஆகிய திட்டங்களாலும், தொலைவு, கல்விச் சட்டம், புதியத் தமிழ்ப் பள்ளி கட்ட முடியாமை போன்ற திட்டங்களாலும், தமிழ்ப் பிள்ளைகள் பிறமொழிப் பள்ளிகளுக்குப் போய் விடுகிறார்கள்.

இன்று பதினைந்து லட்சம் தமிழர்கள் இங்கு வாழ்ந்தும், பல்வேறு பிளவும்-சிக்கலும், ஏற்றத் தாழ்வும் முரண்பாட்டை விளைவித்துள்ளது. தரமும் உரமும் இல்லாத நிலையிலும் தமிழ்ப் பயிரை வளர்த்து, தமிழின் மானத்தைக் காப்பதும் தமிழ்க்கல்வியே!

500 ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏன்! இருபது ஆண்டு சிக்கலான இது அரசுத் திட்டத்தின் முரண்பாடு. தேசியமொழியில் சிறப்புத் தேர்ச்சி பெறாதவர்கள் இதில் சேர்க்கப்படுவதில்லை. இறுதிக் கல்விச் சான்றிதழில் தேசியமொழி கட்டாயத் தேர்ச்சி இல்லாததால் மாணவர்கள் ஆசிரியராக முடிவதில்லை.

எட்டு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் ஆறு கல்லூரிகள் மூடப்படவிருப்பதால் பற்றாக்குறை பல்லவியும் மேலும் நீடிக்கும். 12 ஆயிரம் பேர் படித்ததில், இனி எட்டாயிரம் பேரே படிக்கவிருப்பதால் சிக்கலும் முரண்பாடும் நீடித்துத் தமிழ்ப்பள்ளியைக் கெடுக்கும். இதற்கு தீர்வு காண்பது நமது முக்கியமான பணியாகும்.

**-ம. நண்பன் (20.12.98)**

# புகழின் காலம் மீண்டும் பூத்தது

காசி ஆனந்தன்

புகழின் காலம் மீண்டும் பூத்தது!
முகம் சிவப்பான தமிழன் முளைத்தான்!
நெடிய துயிலும் பகைமுன் நிலம் விழும்
கொடிய பணிவும் அடிமையர் குனிவும்
விலகத் தோள்கள் வீங்கி நிமிர்ந்த
உலகத் தமிழன் உலா நிகழ்ந்தது!
செந்தமிழ் நாடும் தீந்தமிழ் ஈழமும்
எந்தமிழ் மண்ணென் றிருந்தும் ஏதிலி
வாழ்வு தாங்கி வளைந்து திசைதொறும்
கீழ் எனக் கிடந்தஎந் தாழ்வும் கேடும்
தீரத் தமிழன் தீரத் தமிழனாய்
பாரத்தனையும் அதிரப் பாய்ந்தான்!
கருந்திரை வானம் கிழியஎங் கண்முன்
அருந்தமிழ் ஈழம் புயலாய் அவிழ்ந்தது!
நாடுயிர் வாழ நஞ்சினை உண்ணும்
பீடு கொண்டொரு பிள்ளை பிறந்தான்!
இடிகடல் மூழ்கி மாற்றார் போர்க்கலம்
பொடிபடக் குண்டாய் வெடிக்கும் புலிமகள்
ஆக்கிப் படைத்த வீரம் அறிந்து தன்
மூக்கில் விரலை வைத்தது வையம்!
இனித்தளை இல்லை இல்லை என்றுலகில்
தனித் தமிழ் ஈழம் தலை தூக்கிற்று!
நிலவாய் நின்றது தமிழன்
உலகமா மன்றில் உயர்த்திய கொடியே!

# ஈழத் தாயை வணங்குவோம்

கவிமணி பெரி. பழநிவேலன் – சிங்கப்பூர்

**(இசைப்பாடல்)**

தாயை வணங்குவோம் ! வீரத்
தாயை வணங்குவோம்! –வெற்றித்
தாயை வணங்குவோம் ! ஈழத்
தாயை வணங்குவோம்!!

அடிமை விலங்கை அறுத்தெறி வதற்கே
ஆர்ப்பரித் தெழுகிறாள் இலங்கையில் நாளும்
இடியாய்ப் பாய்ந்தே இடர்களை முறிக்கும்
ஈழத் தாயை இனிதே வணங்குவோம்
(தாயை)

வீங்கிய வீரத் தோள்களின் முழக்கம்
ஓங்கிய வானதிர் உறுமிடும் நாடு
வாங்கிடத் துடிக்கும் விடுதலைப் புலிகளைத்
தாங்கிடும் ஈழத் தாயை வணங்கிடுவோம்
(தாயை)

தமிழனுக் குலகில் தனிப்புகழ் பெருமையை
தந்தநம் "பிரபா கரன்" எனும் தம்பியை
தமிழருக் களித்த தமிழீழத் தாயை
தலைமேற் கொண்டு தாங்கியே வணங்குவோம்!
(தாயை)

தமிழ்சிறந்து வாழும்மண் தமிழ்வீரம் செறிந்திடும் மண்
தமிழர்ப்பண் பாடுயர்ந்து தலைநிமிர்ந்தே வளரும்மண்
தமிழினத்தின் தன்மானந் தனைகாக்கும் தலைமண்ணாம்
தமிழீழத் தாள்பணிந்து தலைநிமிர்ந்தே வணங்குவோம்!
(தாயை)

வெங்கொடுமைச் சாக்காட்டில் வெற்றிகளைக் குவிப்பதற்கே
செங்குருதி கொப்பளிக்க சீறிவிளை யாடுகின்றார்
சிங்களவர் காட்டாட்சி சிதைப்பதற்கே எம்பொடியர்
தங்கநிகர் தம்பிகளின் தாள்பற்றி வணங்கிடுவோம்
(தாயை)

ஈழத்தில் வாழ்கின்றாள் எம் வீரத் தாயின்றே
ஈழத்தை நெஞ்சத்தில் ஏற்றிவைத்தே தொழுதிடுவோம்
ஈழத்தில் உருவாகும் ஈடில்லா தமிழீழம்
வாழத்தான் தமிழரெல்லாம் வழிதேடி வணங்குவோமே!

# உலகத் தமிழினமே....!

## (இசைப்பாடல்)

கவிவேழம் பாரதிபாலன் –தென்மார்க்

உலகத் தமிழினமே உன்வாழ்வை எண்ணிப்பார்
ஊருலகில் உனைக்காக்கும் உறவொன்றை எண்ணிப்பார்
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தால் ஒரு முகமாய்
உலகத் தமிழினத்தை உறவாடவைத்தவர்
எம் அப்பர் அவர் வீரப்பர் – எம்
தமிழ்காக்கும் பேரப்பர்
(உலகத்)
யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றது புறப்பாட்டு – இங்கே
எல்லா ஊரும் தமிழர் – ஆனால்
எங்கட் கில்லை உறவு
ஒன்று கூடு தமிழா – உந்தன்
உரிமை காக்க எழுவாய்
பலமொழி பேசும் நாட்டின் பண்பாட்டில் மூழ்கிடாமல்
தமிழனாக நிமிர்வாய் – தமிழ்
பண்பாடாய் மிளிர்வாய்
ஒன்று கூடு தமிழா!– உந்தன் உரிமை காக்க எழுவாய்!
ஒன்று கூடு தமிழா ! உந்தன் உரிமை காக்க எழுவாய்
தமிழ்த்தாயுன் தெய்வமென்றே தலை நிமிர்ந்து எழுவாய் – எங்கள்
தலைவர் காட்டும் பாதையிலே இணைந்து உய்வு பெறுவாய் –
எங்கள்
உலகத் தமிழ்ப் பண்பாட்டில் இணைந்து வாழ்வு பெறுவாய்!
ஓ தமிழா ! ஓ தமிழா ! ஓ தமிழா!

பதிப்பு : தமிழ்மண்

# இனத்தை அரிக்கும் கறையான்கள்

அமரர் பாவலர் அ.பு. திருமாலனார்

*இருட்டடிப்பே செய்யும் கூட்டம் – இங்கு*
*இருக்கின்ற போதிங்கு உண்மைக்கே தேற்றம்*
*உண்மையை செரிக்கின்ற உள்ளம் – கண்டால்*
*உதவாது பறிப்பவர்காண் பெரியதோர்ப் பள்ளம்*

*விரும்பினால் வேம்பையும் தேனாய் – ஏற்பார்*
*வெறுப்பினால் தேனையும் வேம்பாகக் கொள்வார்*
*பொதுநலப் பண்புடை யோரை – பொல்லா*
*தன்னலத் தாரென மாற்றுவார் ஊரை*

*தமிழ்வாழ நாம் வாழ்வோ மென்பார் – நல்லத்*
*தனித் தமிழ்ச் சான்றோரைப் பகையெனக் காண்பார்*
*அறிவார்ந்த உலகியல் தம்மை – தனது*
*அறிவென்னும் எல்லைக்குள் அடங்கிய தென்பார்*

*அறியாமை அறியாமை யென்பார் – பிறர்*
*அறிவுக்குள் தனதறி யாமையை மறைப்பார்*
*புரியாத பேருக்கு முன்னால் – எல்லாம்*
*புரிந்தவர்ப் போலவே தனைக் காட்டிக் கொள்வார்*

*விழுமியக் கொள்கையோ ரென்பார் – தானோர்*
*விழுதென்றுக் கூறியே பழுதாக்கிக் கொள்வார்*
*பழந்தமிழ்க் கொள்கையைப் பேணும் – நல்ல*
*பகுத்தறி வின்றியே பண்பினைக் கொல்வார்*

# புரட்சி உலகம் செய்வோம்

**எடுப்பு**

*புதியதோர் உலகம் செய்வோம் – கெட்டப்*
*போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்*

**தொடுப்பு**

*அறிஞர் தம் இதய ஓடை*
*ஆழ நீர் தன்னை மொண்டு*
*செறிதரும் மக்கள் எண்ணம்*
*செழித்திட ஊற்றி ஊற்றி*
*குறுகிய செயல்கள் தீர்த்து குவலயம் ஓங்கச் செய்வாய்*
*நறுமண இதழ்ப் பெண்ணே!*
*உன் நலம் காணார் ஞாலம் காணார் (புதியதோர்..)*

**முடிப்பு**

*பொதுமக்கள் நலம் நாடிப்*
*புதுக்கருத்தைச் சொல்க!*
*புன்கருத்தைச் சொல்வதிலோர்*
*ஆயிரம் வந்தாலும்*
*அதற்கொப்ப வேண்டாமே*
*அந்தமிழர் மேன்மை*
*அழிப்பாரைப் போற்றுதற்கும்*
*ஏடுபல வாழ்ந்தால்*
*எதிர்ப்பன்றோ தமிழர்களின்*
*எழுதுகோல் வேலை*
*ஏற்ற செயல் செய்சுற்கும்*
*ஏன் அஞ்ச வேண்டும்? (புதியதோர்...)*

*–பாரதிதாசன்*

# பழந்தமிழ் நாடே... !

## அமரர் புலவர் குழந்தை

1. தீப்பிழம் பாச்சுழலும் – ஞாயிற்றிற்
சிதறிய வோர்பொறி யேயுலகாம்
ஆப்பழம் பொறிமுதலில் –ஆ
டாறிய ததனடுக் கூறதுவாம்

2. ஆடிடும் பம்பரத்தின் – நடுவிட
மதுசுழல் வதுபோல் உலகநடுக்
கோடிடம் மிகச்சுழல –முதலில்
குளிர்ந்ததவ் விடமுயிர் மலர்ந்திடவே

3. ஆதலால் அவ்விடமே – பழந்தமி
ழகமெனு முதலர சகமாகும்
ஈதலால் தமிழர்களின் – அர
சியற்பழம் பெருமைக் கயற்சான்றேன்

4. அப்பழந் தமிழ்மக்கள் – பேசிய
அம்முதன் மொழியே ஆங்காங்கின்
வெப்பதட் பினுக்கேற்ப – வெவ்
வேறுபன் மொழியாய் விரிந்ததுவே

5. அலகு பலவியலா – அக்கால்
அமைதரு மப்பழந் தமிழகமே
உலக முதன்மாந்தர் – தோன்றிய
உறையுளென் றறிவர்க ளறைகுவரே

6. கமரிடைக் கயல்பிறழும் –செழுங்
கழனிகள் சூழிரு கரையிலகும்
குமரிபாய் தருதலினால் – அதனைக்
குமரிநா டென்றனர் தமிழர்களே!

(புலவர் குழந்தை – அரசியலரங்கம் – 1964)

# குமரி முதல் சிந்து வரை

அமரர் புலவர் குழந்தை

1. விந்த வடக்கு விளங்கி யிருந்த
நந்தமிழ் மக்கணன் னாகரி கத்தைச்
சிந்து வெளிப்புறந் தேறி யறிந்தார்
சிந்தை மகிழ்ந்து செருக்குற நாமே

2. ஆயநன் னாட்டி னணியுறுப் பாக
ஞாயிறு செல்ல நடுக்குற வோங்கிச்
செயுயர் வானின் றிகழ்மணித் தூரணின்
மீயுயர் செல்வக் குமரி விளங்கும்

3. குணகரை குன்றங் குறும்பனை யோடு
மணமிகு தெங்க மதுரைமுன் பாலை
இணருபின் பாலையோ டேழ்தலை மேய
உணவமல் நாற்பதோ டொன்பது நாடே.

4. அன்று வான மளாவு பனிமலை
ஒன்று மாழியா நின்றது வாரியும்
சென்று மூழ்கிடு தோறுமத் தென்னிலம்
இன்று போலாங் கெழுந்தத் தொன்மலை

5. ஆத வான்முத லவ்வயி னேயுயிர்
போத நின்ற புகழின தாதலான்
மாத மிழக மக்களே மாநிலம்
மீது போந்த முதலென விள்ளுவர்.

6. உலக முன்னா – டுயர்தமிழ் நாடதே
உலக முன்மக்க ளொண்டமிழ் மக்களே
உலக முன்மொழி யொணம்டமி ழேயிதை
உலக மின்றறி யாநிலை யுள்ளதே!

7. ஆங்க ரும்பிய அந்நாக ரிகமே
வீங்கு சிந்து வெளியில் மலர்ந்துபின்
ஊங்கு சென்றிவ் வுலக முழுவதும்
பாங்கு டன்மணம் வீசிப் பரந்ததே!

(இராவண காவியம் – 1946)

# விதிக்கும் விதிசெய்ய வேண்டும்!

பெருங்கவிக்கோ

எத்திக்கும் புகழியக்கம் கண்ட செம்மல்
எழுச்சிக்குக் கட்டியங்கள் கூறும் தோழர்!
இத்தகைய வினைத் திட்பம் கொண்ட பேரில்
வியப்பார்ந்த செயல் முடிக்கும் வீரப் பன் நம்
வித்தகரின் தமிழ் தமிழர் தொண்டைப் பற்றி
விரிவான எதிர்காலம் பேசும்! நல்ல
புத்தகம் போல் இவர் வாழ்வோ நிலைத்திருக்கும்
போற்றுவகை உலகத் தமிழ்ப் பண்பாட்டுக்கே.

இவ்வியக்க முதலாம் நல் மாநாட்டைத்தான்
இணையில்லாத் தோழர் அரு. கோபாலன் தன்
செவ்வியநல் பாதைவழி நடத்தும் மாட்சிச்
சிறப்பினையே பெற்றவருள் யானும் உண்டே!
தெவ்வர்களாய்த் தமிழ்ப் பகையை கொண்டார் என்று
சீரோங்க வெள்ளிவிழா இயக்கம் காணும்
ஒவ்வொருநல் அடிச்சுவடும் உயிர்ப்பை ஊட்டும்
உலகரங்கில் தமிழ்தமிழர் உயர்வை நாட்டும்!

உலகமொழி செம்மொழியின் பெருமை நம்மின்
உன்னதமாம் மொழிபெறவே செயல்கள் வேண்டும்.
நலந்திகழும் இலக்கிய நல்வளர்ச்சி காணும்
நனி திட்டச் செயற்பாட்டை ஊக்க வேண்டும்
தலம் போற்றும் தமிழ்தமிழர் கலைகள் எல்லாம்
தானோங்கும் திட்டங்கள் தீட்ட வேண்டும்
பலம் வாய்ந்த உலகமையம் தமிழர் கண்டே
பாரெங்கும் வழிவகைகள் புதுக்கல் வேண்டும்

ஈழத்தில் நம் தோழர் களத்தில் நின்றே
எல்லையிலா கொடுகளை ஏற்கின்றார்கள்
வாழத்தான் அவரெண்ணும் தலைவர், ஒப்பில்
தாழவிடாத் தலைவர்தான் வெல்ல வேண்டும்
தமிழர்க்குத் தமிழீழ நாடு வேண்டும்
வீழவிடா உறுதிக்கே உலகம் உள்ள
ஓங்குதமிழ் மக்களெல்லாம் முனைதல் வேண்டும்!

வேற்றுமைகள் வேரற்றுப் போக வேண்டும்
விதிக்கும்விதி செய்வினைகள் மலர வேண்டும்
கூற்றுவனும் அஞ்சுவகை செயல்கள் வேண்டும்
கூடிச் செய் ஒற்றுமைகள் வளர வேண்டும்
நாற்றங்கள் பயிர்போன்ற எண்ணம் எல்லாம்
நல்விளைவு காணுகின்ற ஆக்கம் வேணடும்
சீற்றங்கொள் நெஞ்சங்கள் தீமை மாய்த்துத்
திறம்காணும் அறங்காணும் முயற்சி வேண்டும்!

# சாலையாரின் புரட்சிக் கீதங்கள்

1. அடம்பின் கொடியும்
திரண்டால் மிடுக்கு
அல்லல் படுவோர்
இணைந்தால் நெருப்பு

2. தமிழ்நாடு தமிழர்க்குச்
சொந்த வீடு
தமிழினமே உடனே நீ
அமைத்துப் போடு

3. கதைபேசிக் கொண்டிருக்க நேரமில்லை
காலம் வரும் என்பதிலும் சாரமில்லை!

4. சேதாரம் இல்லாமல் நகைசெய்ய இயலாது!
சிலரேனும் மடியாமல் பகை வெல்ல முடியாது!

5. எக்கொடுமை கண்டும் நாங்கள் குனிவதில்லை
ஏன் குனியும் நேர்மையிலே தழைத்த நெஞ்சம்

6. வெறுப்படைந்த தோழர்கள் விழிப்படைந்து வாருங்கள்
பொறுப்புணர்ந்த வீரராய்ப் புரட்சி செய்ய வாருங்கள்!

7. மாமியார் தீட்டினாலும் மருமகள் தீட்டினாலும்
அரிசி வெளுக்க வேண்டும் படித்தவன் நடத்தினாலும்
படிக்காதவன் நடத்தினாலும் புரட்சி வெடிக்க வேண்டும்!

8. ஒதுக்கப்பட்ட தோழர்கள் உயர்ந்தெழுந்து வாருங்கள்!
பதுக்கப்பட்ட யாவையும் பகிர்ந்து கொள்ள வாருங்கள்!

9. ஏதேதோ பேசிக் கொண்டு இருக்கின்ற இளையீர்!
இடுப்புக்குள் நலிவேறிக் கிடக்கின்ற முதியீர்!
போதாது போதாது நாம் கொண்ட சீற்றம்
பொங்கட்டும் இதயத்தில் புதுரத்த ஓட்டம்!

10. முட்டையா? கூமுட்டையா?

"இந்த நாட்டு முற்போக்குகள் என்னும் கூர்மைப் பார்வைப் பருந்துகளிடம் சிக்கியுள்ள வர்க்கப் புரட்சியை விடுதலை செய்து புண்ணுக்கு மருந்திட்டு பரிவும் பாதுகாப்பும் தந்து வளர்த்தால் ஒன்று கூடக் கூமுட்டை போகாதோ?

11. தமிழ்நாட்டைத் தேற்ற முடியாது!
"செத்துக் கொண்டே வரும் – இத்தமிழ் நாட்டினை
தேற்றுவது எப்படியோ? – அதில்
சேர்ந்து கொண்டே வரும் மாபெரும் நோய்களை
நீக்குவது எப்படி யோ?
பொத்துக் கொண்டே வரும் கோபம் சிலர்க்கு
அவர்போக்கை எடுத்து வைத்தால் – நம்மைப்
போக்கடித்தேவிட எத்தனிப்பார் நல்ல
நோக்கத் தொடுத்துரைத்தால்!"

12. "எதிர்ப்புக்கு எதிரே இடது கை
பணிகள் நடந்திட வலதுகை!"

# அவனா நீ?

கவிவாணர் ஐ. உலகநாதன்

இமயத்தில் உன் கொடியா?
ஈழத்தை வென்றவனா?
எகிப்துக்கும் கிரீசுக்கும்
எழில்முத்துத் தந்தவனா?
அமிழ்தனைய திருக்குறளை
அகிலத்திற் களித்தவனா?
அறம்பாடு சிலம்போடு
புறப்பாட்டைத் தந்தவனா?

●

பரணியெனும் போர்ப்பாட்டைப்
பாடியவன் பரம்பரையா?
பார்புரக்கும் காப்பியங்கள்
படைத்தளித்துக் காத்தவனா?
தரணியெலாம் நாகரிகத்
தாய்ப்பாலைச் சுரந்தவனா?
தமிழ்மகனா? உன்பாட்டன்
தனித்தாண்ட தென்னவனா?

●

இல்லையடா இல்லையவை
எல்லாம் பொய்க் கற்பனையே!
ஏடெல்லாம் உண்மையென்றால்
ஏனில்லை அந்தநிலை?
உள்ளதெனில் தொல்புகழில்
ஒருசுவடும் இன்றுளதா?
ஓய்வுபெற்ற பாவலர்கள்
உருட்டிவைத்த புரட்டடா!

●

கலையேந்தி நிலமாண்ட
கதைகண்ட தமிழனுக்கும்
கையேந்தி நிலைகுலைந்த
உனக்குமென்ன சம்பந்தம்?
உலகேந்திப் பாராட்டப்
புகழேந்தித் தமிழனுக்கும்
ஓடேந்திப் போராடும்
உனக்குமென்ன தொடர்புண்டு?

●

வாழ்ந்தவர்கள் என்றுரைக்க
வடுவுண்டா சுவடுண்டா?
வாழ்க்கையிலே அக்கால
வளமதுதான் துளியுண்டா?
தாழ்ந்தவர்கள் என்றுரைக்கச்
சான்றுகளோ கோடியுண்டு!
சரித்திரத்தைத் துணைக்கழைத்துத்
தலைமறையப் பார்க்காதே!

●

வாழ்ந்தவனும் நீயல்லன்;
வாழ்பவனும் நீயல்லன்!

## இனப்பற்று

தீப்பொறிப் பாவலர் பொன்னுசாமி

தமிழன் கடையில் தமிழன் நுழையத்
தயக்கம் கொள்வதும்

✦

தமிழன் வந்தால் தமிழில் பேசத்
தவறிச் செல்வதுவும்

தமிழன் செய்த தவற்றைச் சுட்டித்
தர்க்கம் செய்வதுவும்

✦

தமிழன் தமிழனைச் சுரண்டிச் சுகிக்கத்
தருணம் பார்ப்பதுவும்

தமிழன் கண்ணீர்த் துளியைப் பார்த்துத்
தமிழன் நகைப்பதுவும்

✦

தமிழன் தலையைச் சாய்க்கத் தமிழன்
தன்னைச் சிதைப்பதுவும்

மானத் தமிழனை நாணச் செய்யும்
ஈனச் செயல்களடா! –இதைக்

✦

காணக் காண என்னுள் எத்தனை
கவிதைப் பொறிகளடா!

# குறளைப் பழிப்பானைக் குதறுவீரே!

–முதுபெரும் பாவலர் சா.சி.குறிஞ்சிக்குமரனார்

தமிழாலே வாழ்கின்றான் தமிழ்தந்த
பொருள்வளத்தால் தனைமறந்து

இமிழ்ஞாலம் போற்றிமகிழ் எந்தமிழின்
வள்ளுவத்தை இகழும் பேயன்

தமிழ்பயிலும் மாணவர்பால் தமிழ்நெறியைப்
பயிலாதீர் என்று சொல்லும்

உமிழ்ந்துமிழும் இழிதகவில் உயிர்த்துவரும்
அவனுருவைக் கிழித்தல் வேண்டும்

✣

உண்பதுவும் தமிழ்ச்சோறு உடுப்பதுவும்
தமிழ்தந்த உடைகள் மற்றும்

தின்பதுவும் திணிப்பதுவும் தமிழ்
தந்த பிச்சையென சிந்திக் காது

கண்ணிருந்தும் குருடனென கருத்தழிந்த
மூங்கையனாய் கயமை போற்றும்

புண்ணில்வளர் புழுவெனவே புரண்டுவரும்
அவனுடலைப் பொசுக்க வேண்டும்!

✣

ஆசிரியன் என்றாலும் அருங்குறளைப்
பழிப்பவனை அறைந்து கேட்க

கூசாதீர் இளந்தமிழீர்! குணங்கெட்டான்
தமிழனல்ல தமிழை நாளும்

மாசின்றி ஓதிடுவீர் மதிவளர்க்கும்
குறள்நெறிக்கு மாசுண்டாக்கக்

கூசிடுவீர்! இனமுணர்வீர்! குறள் பழிப்பான்
குரல்வளையைக் குதறு வீரே!

✣

கொஞ்சுதமிழ் வள்ளுவத்தில் கூறாத
பொருளில்லை அறமு மில்லை

நெஞ்சத்தை மகிழ்வித்து நிலவுலகின்
இயல்பனைத்தும் நிகழ்த்திக் காட்டும்

விஞ்சிநிற்கும் வாழ்வியலின் மீமிசையின்
கூறெல்லாம் விளக்கிச் சாற்றும்

நஞ்சழிக்கும் திருக்குறளை நவிலாதே
என்பவனை நசுக்க வேண்டும்!

✣

மாணவர்க்கு வகுப்பறையில் தமிழ்பயிற்றும்
ஆசிரியன் மான மின்றிப்

பேணவரும் நல்லொழுங்கைப் பெருநெறியாம்
அறக்குறளைப் பிழையென் பானேல்

நாணமதை அறியாது நடுத்தெருவில்
இழுத்திழியும் நாயைப் போன்றான்

கோணனவன் பிறப்பினிலே குறைமிகுதி
எனவிடுத்துக் குறளைக் கற்பீர்!

✣

# கன்னித் தமிழின் தனிச் சிறப்பு

முத்தமிழ்க் காவலர் கி.ஆ. பெ. விசுவநாதம்

தமிழ்மொழி ஒரு தனிமொழி, தனித்துத் தோன்றி, தனித்து இயங்குகிற ஒரு தனி மொழி. அது உலகின் முதல் மொழி. ஆதலில் அதற்கு எந்த மொழியின் துணையும், அன்றும் தேவைப்பட்டதில்லை. இன்றும் தேவைப்படுவதில்லை. தமிழுக்கு உயர் தனிச் செம்மொழி என்று பெயர். இதற்கு உயர்ந்த மொழி, தனித்த மொழி செம்மையான மொழி என்று பெயர்.

இந்தியாவில் இன்று பேசப்பெற்றுவரும் மொழிகள் அனைத்தும் ஆரியம், தமிழ் என்ற இரண்டே இனங்களில் அடங்கிவிடும். தமிழுக்குத் திசை — தெற்கு, மலை — பொதிகை, நாகரிகம் — காவிரி. ஆரியத்திற்குத் திசை — வடக்கு, மலை — இமயம், நாகரிகம் — கங்கை.

ஆரியர் மத்திய ஆசியாவிலிருந்து இந்நாட்டில் குடியேறியவர். ஆரிய மொழி இந்நாட்டில் குடியேறிய மொழி. 'சதுர்மறை ஆரியம் வருமுன் சக முழுதும் நினது' எனப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ்த் தாயை நினைத்து வியந்து பாராட்டியுள்ள சொற்களும் இதனை மெய்ப்பிக்கும்.

வடக்கே ஆரியம் அங்கிருந்த பல மொழிகளிலும் பரவியது. சிலவற்றை விழுங்கியது. சிலவற்றை உருமாற்றிப் புதிய மொழியாக உண்டுபண்ணியது. சிலவற்றைத் தன்னோடு இரண்டறக் கலக்கச் செய்துவிட்டது. தெற்கே தமிழ் மொழி சில மொழிகளைப் பெற்றது. அவை 'கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு என்பன. 'கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் உன் உதரத்து (வயிற்றில்) உதித்தெழுந்தே ஒன்று பலவாயின' என்ற பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்திலிருந்தும் இவ்வுண்மையை நன்குணரலாம்.

இம்மொழிகள் கூட மக்களின் விழிப்புக் குறைவினால் தமிழை விட்டுச் சிறிது விலகி வடமொழியைச் சார்ந்து வருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் இம்மொழிகளில் நூற்றுக்கு எழுபது எண்பது தமிழ்ச்சொற்கள் காணப்பட்டன. வர வர ஐம்பதாகக் குறைந்து வந்து, இப்போது நூற்றுக்கு 40 தமிழ்ச் சொற்கள் மட்டுமே காணப் படுகின்றன. இன்னும் சில ஆண்டுகளில் இம்மொழி ஆரியத்தால் விழுங்கப்பட்டுவிடும் நிலையிலிருந்து வருகின்றது. சிலர் இம்மொழிகள் ஆரியத்திலிருந்து வந்தவை எனவும் கூறிவருகின்றனர். இது தவறு.

ஒரு மொழியின் தாய்மொழி எது? என்பதை எவரும் எளிதில் அறியமுடியும். அதற்குத் துணை புரிபவை மூன்று.

1. அம்மொழியின் உயிர் எழுத்துக்கள்
2. எண்ணுகின்ற எண்ணுப் பெயர்கள்
3. மக்கள் உறுப்புகளின் பெயர்கள்

இம்மூன்றையும் ஆராயத்தொடங்கினால் உண்மை தானாகவே வெளிப்பட்டுவிடும். எடுத்துக்காட்டாக முதலில் மலையாள மொழியை ஆராய்வோம். அதன் உயிர் எழுத்துக்கள் 'அ' முதல் 'ஔ' அனைத்தும் தமிழ் எழுத்துக்களே. ஒன்று, இரண்டு, பத்து, நூறு என எண்ணும் எண்கள் அனைத்தும் தமிழ் எண்களே. மக்கள் உறுப்புகளில் தலை, நெற்றி, மயிர், கண், மூக்கு, காது, வாய், நாக்கு, பல், உதடு, தொண்டை, கழுத்து, கை, நெஞ்சு, வயிறு, தொடை, கால், விரல், நகம், தோல், எலும்பு வரையாகவும் தமிழ்ச்சொற்களே ஆகும்.

பிற மொழிகளின் மீது ஆதிக்கம் செலுத்த விரும்பிய ஆரியர் அம்மொழிகளில் தங்கள் சொற்களைத் திணித்தனர். அதற்கு முன்னோடியாக அவர்களின் ஜ,ஸ,ஷ, ஹ, க்ஷ என்ற வடமொழி எழுத்துக்கள் ஐந்தையும், திணித்தனர். இதனால் கடந்த நூற்றாண்டில் அவர்கள் தமிழை விழுங்கி வெற்றி பெற்று விடுவோம் என்று கூட நம்பினார். பிற மொழிச் சொற்கள் தமிழில் கலந்தால்தான் தமிழ் மொழி வளரும் என்று கூறினர். இதை நம் முன்னோர்களில் சிலர் நம்பியதும் அவர்களுக்கு மகிழ்வைத் தந்தது.

ஆங்கிலேயர் காலத்தில் இருந்தவர்களில் பெரும்பான்மையோர் அவர்களே ஆதலின் 'மென்' 'உமென்' என்பதை கூட 'ஆண்கள்' 'பெண்கள்' என எழுதவிரும்பாமல் 'புருஷர்கள்' 'ஸ்திரிகள்' என்றே எழுதித் தமிழ்ச் சொற்களை அழிக்க முனைந்தனர் என்றாலும் தமிழறிஞர்கள் பலர் இவற்றைத் துணிந்து எதிர்த்ததால் அவர்களின் எண்ணம் வீணாயிற்று.

தமிழின் தனித்தன்மையை நிலை நிறுத்திக் காட்டிய பெருமை மறைமலையடிகள் ஒருவருக்கே உண்டு. இன்றேல் தமிழும் தெலுங்கு, மலையாளம் போல ஆரியத்தோடு கலந்து போயிருக்கும். இத் தனித்தமிழ் நடைக்கு மறைமலையடிகள் நடை என்ற பெயரும் உண்டு. தமிழ் உள்ளவரை மறைமலையடிகள் பெயரும் இருந்தே தீரும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கூட திருமண அழைப்புகளில் விவாகம், முகூர்த்தம், பத்திரிகை, வருஷம் மாஸம், தேதி, சிரஞ்சீவி, சௌபாக்கியவதி, நிச்சயம், இஷ்ட மித்திர பந்து ஜன ஸமேதராக விஜயம் செய்து வதூவரர்களை ஆசிர்வதிக்கப் பிரார்த்திக்கிறேன் என்ற சொற்கள் காணப்பெற்றன. இப்பொழுது இச்சொற்கள் அனைத்தும் விலக்கப் பெற்று தனித் தமிழில் திருமணம், அழைப்பு, ஆண்டு திங்கள், நாள், திருச்செல்வன், திருச்செல்வி, உறுதி, உற்றார், உறவினர், சுற்றம், சூழ வந்திருந்து மணமக்களை வாழ்த்தி அருள வேண்டுகிறேன் என்பவை காணப்பெறுகின்றன. தலைவர், சொற்பொழிவாளர், செயலாளர், பொருளாளர், நன்றி கூறல் என்பவைகளை யெல்லாம் வட மொழியினர் அக்கிரசனாதிபதி, பிரசங்கியார், காரியதரிசி, பொக்கிஷதார், வந்தனோபசாரம் என்றெல்லாம் மாற்றி அவற்றைத் தமிழ் என்று எழுதியும், பேசியும் வந்தனர். இக்காலத் தமிழ் மக்களின் விழிப்புணர்ச்சி அதைத் தவிடு பொடியாக்கி விட்டது.

தமிழ்ப் பகைவர்கள் சிலர் தங்களைத் தமிழ் எழுத்தாளர்கள் என்று கூறிக்கொண்டு மன்னன் தன் தோள்களில் மலர்மலை அணிந்து தேர் ஏறி ஊர்வலம் வந்தான்'என்ற சொற்றொடரை ராஜன் தன் புஜங்களில் புஷ்ப ஹாரங்களைச் சூடிக் கொண்டு ரதம் ஏறிப் பவனி வந்தான் என மாற்றி எழுதியும், இவ்வாறு எழுதினால் தான் தமிழ் வளரும் என்று கூறியும் தமிழ் புலவர்களின் எதிர்ப்பை மட்டுமல்ல, பொதுமக்களின் எதிர்ப்பையும் பெற்று அழிந்துபோயினர். இவை அனைத்தும் தமிழோடு ஆரியம் புரண்டு அழிந்த கதை.

தமிழுக்கு உள்ள தனித்தன்மைபோல் வடமொழிக்கு ஒரு தனிமையுண்டு. *ஓம் நாளிகேரம் சமர்ப்பயாமி! ஓம் சந்தம் சமர்ப்பயாமி! ஓம் சந்தம் சமர்ப்பயாமி! ஓம் புஷ்பம் சமர்ப்பயாமி* எனக்கூறும் பொழுது அம்மொழியின் தனித்தன்மையும் அதன் ஓசையில் ஓர் சிறப்பும் **இருப்பது** போற்காணப்படும். அதை விட்டு **"ஓம்** கோகனட் சமர்ப்பயாமி, ஓம் சாண்டல் சமர்ப்பயாமி, ஓம் சாண்டல் சமர்ப்பயாமி, **ஓம்** பிளவர் சமர்ப்பயாமி!" எனக் கூறினால் வடமொழிக்குத்தான் என்ன பெருமை? ஆங்கிலத்துக்குத்தான் என்ன பெருமை என்பதைச் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும்.

"பிறமொழிச் சொற்களைக் கலந்தால்தான் தமிழ் மொழி வளரும்" என்பது உண்மைக்கு மாறானது. இது, "கற்களைக் கலந்தால் தான் அரிசி வளவும்" என்பதைப் போன்றது. தமிழ் வளர வேண்டிய நிலையில் இல்லை. அப்படி வளர வேண்டுமானாலும் அதற்கு இவர்கள் தேவையே இல்லை.

புரியும் மொழி, புரியா மொழி என எந்த மொழியும் இல்லை. ஒரு மொழி புரியவில்லை என்றால் அவர் அந்த மொழியை படிக்க வில்லை என்பது பொருள். "தமிழ் தெரிய வில்லை, புரியவில்லை" என்று சொல்லுகிறவன். தமிழைப் படிக்காதவன். தமிழைப் படிக்காதவனுக்காக "நானும் ஒரு புதுத்தமிழில் எழுதுகிறேன்" என்று சொல்லுகிறவன் தமிழ் எழுத்தாளனாக இருக்க முடியாது. "நானும் தமிழைப் படிக்க மாட்டேன், நீ எழுதுகிற தமிழ் எனக்கும் புரிய வேண்டும்" என்று கூறுபவர்களை அறிஞர்கள் மதிக்க மாட்டார்கள்.

தமிழ் செல்வளம் மிகுந்த மொழி. புதிய சொற்களை உருவாக்கவும் ஏற்ற மொழி. இரயில் சைக்கில் என்பன நம் நாட்டுப் பொருள்களல்ல. அவைபுதியவைகளாக வந்தபோது தமிழில் புகைவண்டி, மிதிவண்டி என மிக எளிதாகப் பெயரிட்டு விட்டனர். அண்டர் கிரவிண்டு டிரையினேஜ் என்பதைத் தமிழும் ஆங்கிலமும் அறியாத பட்டிக்காட்டு நண்பர் ஒருவர் இங்கு என்ன புதைசாக்கடையா போடுகிறீர்கள்? எனக்கேட்டது கண்டு வியந்து போனேன். இவ்வாறு எத்தனையோ பிற மொழிச் சொற்களுக்கு ஏற்ற கலைச் சொற்களைத் தமிழில் எளிதாக உருவாக்கலாம்.


உலகில் உள்ள மொழிகளில் எந்த மொழியின் துணையுமின்றி தனித்து இயங்கும் ஆற்றல் படைத்த ஒரேமொழி நம் தாய் மொழியான தமிழ் மொழி. இது காறுங்கூறிய வற்றால் தமிழ் மொழியின் தனிச் சிறப்பை அறியலாம்.

# மொழி ஞாயிறு

# தேவநேயப் பாவாணர்

கட்டுரைத் தொகுப்பு :
மு. மணிவெள்ளையன்

தூய தமிழ்த்தொண்டுக்குத் துணையாக நல்லோர் பலர் வீறுகொண்டெழுந்தனர். தமிழ் மொழியின் ஆக்கத்திற்காகப் பாடுபட்ட மறைமலை அடிகளாருடன் திரு.வி.க., ந.மு. வேங்கடசாமி நாட்டார் போன்ற பெரியோர்களோடு பாவாணரும் பெரும்பங்கு ஆற்றினார்.



மொழி ஆராய்ச்சியில் உயர்ந்து நின்ற அறிஞர்களில் தலையானவராகவே தேவநேயப் பாவணர் போற்றப்படுகின்றார். உண்மையைப் பற்றிக் கொண்டு ஊக்கமாய் உழைத்த ஆராய்ச்சியாளரான பாவாணர் தமிழில் தூய்மை காப்பதில் முன்னின்றவர். தூய தமிழில் பேசுவதில் வல்லவர். ஆங்கிலம் உட்பட வேறு எந்த மொழிச் சொற்களையும் தம் எழுத்திலும் பேச்சிலும் கலக்காத அறிஞர் பெருந்தகையாவார். பிறமொழிச் சொற்களுக்கு இணையாகத் தமிழ்ச் சொல் இல்லாவிடின் புத்தம் புதிய சொற்களை உருவாக்கும் திறன் பெற்றவர். இலக்கண இலக்கியப் புலமையோடு மேனாட்டு முறைப்படி மொழியாராய்ச்சி செய்த புலமையுடையவர். சொற்களுக்கு வேர்ச்சொல் கண்டுபிடித்து தமிழுக்கு வளமென்னும் நீரைப் பாய்ச்சியவர். தமிழ் இன நாகரீக ஆய்வுகளில் தலைசிறந்து விளங்கிய இவர், சென்னையில் வாழ்ந்த காலத்தில் மறைமலை அடிகளாருடன் தொடர்பு கொண்டு தமது ஆராய்ச்சிக்கு ஊக்கம் பெற்றவராவார்.

மொழி ஆய்வில் பாவாணர் வெளியிட்ட முதற் பெரும் நூலாக *ஒப்பியன் மொழி நூல்* திகழ்கின்றது. தமிழின் தொன்மை, முன்மை, தாய்மை முதலிய தனிப்பண்புகளைப் புலப்படுத்த மேலை நாட்டு, மொழித்துறை வல்லுநர்களான மாக்சுமுல்லர், கால்டுவெல் போன்றோரின் ஆய்வுகளைச் சான்றாகக் கொண்டுள்ளார்.


உலகின் முதல் மொழிக்கொள்கையை வலியுறுத்திய பாவாணர் தமது *முதல் தாய்மொழி* என்னும் நூலில் "மொழியானது இந்நாட்டில் பொதுவாய் கருதப்படுகிறபடி இறைவனால் படைக்கப்பட்டதுமன்று, இயற்கையாய் உள்ளதுமன்று, மாந்தரால் ஆக்கப்பட்டதே. ஆயின் ஒருவரால் மட்டுமன்று, கழிபலவூழிகளாகக் கணக்கற்ற தலைமுறையாளரால் சிறிது சிறிதாக ஆக்கப்பெற்றதாகும்" என்று விளக்கியுள்ளார்.

மொழிப் பெரும் புலவர் ஞா.தேவநேயப் பாவாணரின் தமிழ்த் தொண்டு அளவிறந்தது. இவர் நெல்லை மாவட்டத்தில் 7.2.1902 இல் பிறந்தவர். தமிழகத்தில் இவர் பிறந்த ஊர் சங்கர நயினார் கோயிலை அடுத்துள்ள பெரும்புத்தூராகும். பாவாணரின் தந்தையார் ஞானமுத்தர். இவர் பள்ளியாசிரியராகப் பணியாற்றியவர். தாயார் பரிபூரணத் தம்மையார். பாவாணர் இளமையில் பயின்ற வடாற்காடு மாவட்டம் ஆம்பூர் நடுநிலைப் பள்ளியிலேயே பின்னாளில் உதவித் தமிழாசிரியராக 1921—ஆம் ஆண்டு அமர்ந்தார்.

திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச்சங்கம் நடத்திய தனித்தமிழ் புலவர் தேர்வை 1926—ஆம் ஆண்டு எழுதி தேர்ச்சி பெற்றார்

# விண்வெளியும் தமிழரும்

தமிழ்மணி அரங்க முருகையன், இலண்டன்



பலகோடி ஆண்டுகளுக்கு முன்னர் முதலில் ஓரணுச் சிற்றுயிர் கடலிலேயே தோன்றியதாக அறிவியலறிஞர்கள் கூறுகின்றனர். அதற்குப் பின் படிப்படியாக நிலத்தில் உயிரினங்கள் முகிழ்ந்து வளர்ந்ததை மாணிக்க வாசகப் பெருமான் தம் திருவாசகத்தில்

*புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்*

*பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்*

*கல்லாய் மனிதராய்.......*

உருவாகின என்று தம் திருவாசகத்தின் வழி விளக்குகிறார்.

நிலத்திலே தோன்றி அந்நிலத்திலே தானாகவே வளர்ந்த காய், கனி, கிழங்கு முதலியவற்றைத் தின்றும், பின்னர் கண்டறிந்தும், பட்டறிவாலும், நெல் கோதுமை, கம்பு, கேழ்வரகு போன்றவற்றை விளைவித்தும் பயன்பெற்ற மாந்தர் நன்றி கொன்றவராய் நிலத்தினைக் கொத்தியும், தோண்டியும், அகழ்ந்தும், கழிவுகளைக் கொட்டியும் பாழ்படுத்திக் கேடு விளைவித்தமைக்காக மனம் வருந்தியவராய், நிலத்தின் அளவிடற்கரிய பொறுமையைப் போற்றி

*அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல*
*இகழ்வார் பொறுத்தல் தலை*

—என்று கூறினார், தமிழ்மறை அருளிய திருவள்ளுவ நாயனார்.

நிலத்தினை உயிர்கள், புல், செடி, கொடி, மரம் போன்றவை எண்ணிக்கையில் 460000க்கும் மேற்பட்டவை என்பர் அறிஞர். அவற்றுள் பல்லாயிரக் கணக்கானவற்றை மாந்தர் நிலத்தில் இல்லாதழித்தொழித்தனர். இதுபோன்றே மாந்தர் வேட்டையாடியதாலும், அவை வாழுமிடங்களை அழித்தொழித்ததாலும், இவ்வுலகினின்றே பல்லாயிரக் கணக்கான விலங்குகளும், பறவை இனங்களும் முற்றாக மறைந்து போயின.

நிலத்தைப் பாழ்படுத்திப் பின் நிலத்தில் வாழும் பற்பல விலங்குகள், பறவைகளையும் அழித்த பின்னர் மாந்தர்களின் கவனம் கடல் மீது திரும்பியது. மாந்தரின் இத்தகைய பேராசையை மனத்திலிருத்தியே தத்துவ மெய்ஞ்ஞானியும் தமிழ்ச் சித்தருமான தாயுமானவ அடிகளார்,

*"ஆசைக்கோர் அளவில்லை; அகிலமெலாம் கட்டி ஆளினும் கடல் மீது*

*ஆணைசெலுத்தவே நினைவர்"* என்று கூறினார்.

கடக்க இயலாதது (கட + அல்) என்று பொருள் தரும் கடலை மரக்கலம் செலுத்தி மாந்தர் கடந்தனர். நிலத்திலே தாங்கள் செய்தனவற்றையெல்லாம் கடலிலும் செய்யத் தலைப்பட்டனர். கடல்வாழ் உயிரினங்களான மீன்கள் திமிங்கிலம் போன்ற விலங்குகள் போன்றவற்றை அளவுக்கதிகமாகப் பிடித்தழித்தனர். பவளப் பாறைகள், கடல்நீர் வாழ்த் தாவரங்கள் போன்றவற்றைப் பேராசையோடு வாணிகப் பொருளாக மதித்து அளவுக்கதிகமாக சேகரித்து அவை பெருமளவில் அழிந்துபடக் காரணமாயினர்

கடலிலே அணுகுண்டு போன்றவற்றை வெடித்தனர். நச்சுப் பொருட்களையும் தங்களுக்குத் தேவைப்படாத கழிவுகளையும் கொட்டினர். அவை எந்த அளவில் சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கும் என்பதைக் கிஞ்சித்தும் அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை.

தாங்கள் வாழும் நிலத்தையும், நிலத்தைச் சுற்றிலுமுள்ள கடலையும் பாழ்படுத்திய மாந்தரின் கண்கள் விண்ணை நோக்கின. கதிரவனையும், திங்களையும், ஏனைய கோள்களையும், விண்மீன்களையும் நெடுங்காலமாகவே தங்கள் அறிவுக்கும் சந்திக்கும் எட்டிய வகையில் ஆராய்ந்து வந்த மாந்தர், பறவைகள் போலப் பறக்கவும், நிலத்திலும், கடலிலும் தங்கள் செல்வாக்கெனும்ஆட்சியை நிலைநாட்டியதைப் போலவே விண்வெளியை தாங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் முயலத் தலைப்பட்டனர்.

பட்டங்கள் எனும் காற்றாடிகளை முதலில் பறக்கவிட்டுப் பின்னர் மாந்தர் பறவைகள் போல வானில் பறக்க விழைந்தனர். சிறகுகளையும் மெழுகையும் வைத்து ஒட்டிய செயற்கை இறக்கைகளைப் பயன்படுத்தி உயரமான இடங்களில் இருந்து குதித்து, இறக்கைகளை அசைத்துப் பறக்க முயன்றதுமுண்டு. சூடான எடை குறைந்த இலியம் போன்ற காற்று நிரம்பப் பெற்ற பலூன் எனப்படும் நொய்வ வளிக்க உண்டுகளில் ஏறி உயரப் பறந்து மகிழ்ந்தனர். 1903 ஆம் ஆண்டில் இரைட் சகோதரர்கள் எனப் பெயரிய அமெரிக்கர்கள் வான்வெளியில் பறக்க வல்ல வானூர்தி ஒன்றினை உருவாக்கி ஓர் ஒப்பரிய சாதனையைச் செய்தனர். அதற்கு முன்னரே சியோவ்கோவ்ஸ்கி எனும் உருசிய நாட்டவர் வானூர்திக்கான அடிப்படைத் திட்டமொன்றைப் புனைவரைவு செய்திருந்தார் என்று சொல்வாருமுண்டு.

இராக்கெட் என்று இப்போது அழைக்கப்படும் விண்வெளியில் எழும்பும் வாணங்களைத் தார்த்தாரியர் எனும் சீன இனத்தவர் முதன் முதலில் கி.பி. 1232ஆம் ஆண்டில் மங்கோலியர்களுக்கு எதிராகப் பயன்படுத்தியதாக வரலாறு கூறுகிறது. கி.பி. 1780 ஆம் ஆண்டு இந்தியாவில் மைசூரில் அரசோச்சிய ஹைதர் அலி திப்பு சுல்தான் எனும் குறுநில மன்னன் அவற்றை ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பயன்படுத்தியதாகவும் வரலாற்றின் வழி அறிகிறோம்.

பத்தாம் நூற்றாண்டிலேயே தமிழர்கள் விண்வெளியில் பறக்க வல்ல பொறிகளைக் கொண்டிருந்தனர் என்பதைத் திருத்தக்க தேவரின் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சீவக சிந்தாமணி வழி அறிகிறோம். ஏமாங்க நாட்டு மன்னன் சச்சந்தனையும், அவனது மனைவியையும் அமைச்சன் வஞ்சகமாகக் கொல்ல முற்படுகையில் சச்சந்தன் சூலுற்றிருந்த விசையை எனும் தன் பட்டத்தரசியை மயிற் பொறியில் ஏற்றி அரண்மனையிலினிறும் விண்ணில் பறக்கச் செய்ததைப் பற்றி அறிந்து மகிழ்கிறோம்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகளார் திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும் என விண்வெளியில் சுழலும் கோள்களைப் போற்றித் தம் காவியத்தைத் தொடங்குகிறார். தமிழ்மறையாம் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரும் தம் நூலில் வானகம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் பழந்தமிழர் மரபைப் பின்பற்றித்

*"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்*

*விண்ணொடும் உடுக்க ளோடும்*

*மங்குல் கடல் இவற்றோடும் பிறந்ததமிழுடன்*

*பிறந்தோம் நாங்கள்"* என்று முழங்குகிறார்.

தமிழரின் பழைமை மிகு திருநாளான பொங்கல் விண்வெளியின் வேந்தனான கதிரவனுக்கும், மழைக்குமாக நன்றி செலுத்துவதற்காக உருவாக்கப் பெற்ற விழா அல்லவோ!

தமிழரின் முழுமுதற் கடவுளான சிவபெருமான் தம் திருமேனியில் விண், நீர், தீ, காற்று, நிலம் ஆகியவற்றைக் கொண்டவராகக் காட்சியளிக்கிறார். அவரது சடைமுடியில் சூடியுள்ள பிறை விண்ணையும் அவர் தம் சடைமுடியிலிருந்து கங்கை நீராக கீழிறிங்கி வருதலையும், கையில் தீ ஏந்தியுள்ளமையையும், நெருப்பு எரியக் காற்று வேண்டுமென்பதையும், அவர் உடலிலே பூசியுள்ள பொடி மண் போன்றதாதலோடு அவர் மலை மீது அமர்ந்திருத்தலையும் மகிழ்ந்து நோக்குக. தவிரவும், சிவனார் திருவாரூர், காஞ்சிபுரம்

ஆகிய தலங்களில் நில வடிவிலும், திருவானைக்காவில் நீர் வடிவிலும், திருவண்ணாமலையில் தீ வடிவிலும், திருக்காளத்தியில் காற்று வடிவிலும், தில்லை எனும் சிதம்பரத்தில் ஆகாய வடிவமாகவும் தோன்றி அருளுவதாக அன்பர்கள் வழிபடுவர்.

தமிழரின் கோயில்களில் பழங்காலந் தொட்டே கதிரவன், திங்கள், செவ்வாய், அறிவன், வியாழன், வருணன், காரி போன்ற கோள்களை கோயில்களில் வைத்துள்ளதையும், வாரத்தின் ஏழு நாட்களுக்கும் ஞாயிறு, திங்கள், செவ்வாய் என்பன போன்று கோள்களின் பெயர்களையே சூட்டியுள்ளமையையும் எண்ணிப்பார்க்க வியப்பே மேலிடும்.

மேற்கண்டவாறு கோயில்களில் ஒன்பது கோள்களை நிறுவிய நிலையிலும், அக்கோள்களில் நடுநாயகமாக சூரியனை அமைத்துள்ளமை சூரியனைச் சுற்றித்தான் பிற கோள்கள் சுழலுகின்றன; கோள்களின் தலைவன் நடுநாயகன் சூரியனே என்ற உண்மையைக் கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னரே அறிந்திருந்தனர் என்பதை அப்பர் எனச் சிவபெருமானால் அன்பாக அழைக்கப் பெற்ற திருநாவுக்கரசர் இயற்றிய தேவாரத்தின் கோளறு பதிகம் வழி அறிகிறோம்.

கடைச்சங்க காலத்து நூல்களுள் ஒன்றாகிய பரிபாடலில் சில பாடல்கள் ஒரு குறிப்பிட்ட நாளில் வானத்தில் விண்மீன்கள் எங்கெங்கு இருந்தன என்பதைக் காட்டுவது தமிழரின் தொன்மையான வானவியலறிவைச் சுட்டி விளக்குகின்றன.

இவற்றையெல்லாம் கொண்டு மிகப் பழங்காலந் தொட்டே தமிழர்கள் விண்வெளியைப் பற்றிய பல்வேறு வானவியல் நுணுக்கங்களை நன்கறிந்திருந்தனர் என்பதை அறியலாம்.

கட்டுரை எழுதப் பயன்பட்ட நூல்கள்:


1. திருக்குறள்

2. சிலப்பதிகாரம்

3. சீவக சிந்தாமணி

4. தாயுமானவர் பாடல்கள்

5. பண்டாரகர் க. இந்திரகுமார் எழுதிய விண்வெளியில் வீரகாவியங்கள்.


●



கோனாரக்கில் உதயமான ஞாயிறு ஆலயம்
13ஆம் நூற்றாண்டு

# இன்றைய இளைய தலைமுறை என்ன சொல்கிறது?

சுவர்ணராசா நிலக்சன், கொழும்பு

நாம் நாலாபுறங்களிலிருந்தும் பல்வேறு தடைகளையும் அச்சுறுத்தல்களையும் தாண்டியே எமது பயணத்தைத் தொடர வேண்டி நிலையிலிருக்கின்றோம். நான் என்ன சொல்ல விரும்புகிறேனோ அதை வெளியில் சுதந்திரமாகச் சொல்வதற்கு முடியாத நிலைமையே இன்றைய எமது சமுதாயத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரதும் நிலைமையாகப் பெரிதும் உள்ளது. இது இளஞ் சமுதாயத்துக்கு மட்டும் உரிய பிரச்சினை இல்லாவிட்டாலும் பேச்சுச் சுதந்திரத்திலுள்ள மட்டுப்பாடுகளால் பெரிதும் பாதிக்கப்படுவது நாம் தான். காரணம், எமது உணர்வுகள் கட்டுப்பாடின்றி மடை திறந்த வெள்ளமெனப் பாயும் தன்மையுள்ளவை. அவ் உணர்ச்சிகளைப் பாய்ந்தோட அனுமதிக்கக் கூடிய வாய்க்கால்களாக ஊடகங்களும் ஏனைய பெரியவர்களும் செயற்படாத பட்சத்தில் உன்னதமான பல படைப்புகள் திறமைகள் எமது உள்ளங்கைகளின் உள்ளேயே தேங்கி நின்று எமது ஆர்வத்தைச் சிறுகச் சிறுக அழித்து விடுகின்றன.

பிரச்சினைகள் என்றால் வசதி வாய்ப்புகள் அற்று நாகரிக நவீன விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சிகளுக்கு வெகு தூரத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களது நிலைமை கற்பனை செய்து பார்க்க முடியாதது. வாழ்க்கை நிலை, அமைவிடம் பல்வேறு காரணங்களாலும் ஓரங்கட்டப்படுதல் போன்றவற்றால் பல்வேறு திறமை மிக்க இளைஞர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவர வேணடியது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்!

அதில் கூடிய வாய்ப்புகள், வசதிகளும் இன்றைய இளஞ்சமுதாயத்தைத் திசை திருப்ப வல்லவையாக இருக்கின்றன. நாளை இவ்வுலகிற்கு ஒளியூட்டி இருளகற்றும் கதிரவர்களாக விளங்க வேண்டிய இளைஞர்கள், இன்று காரிருளினுட் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாளைய உலகின் சக்திகளாக விளங்க வேண்டிய இளஞ்சமுதாய சகதிக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. எத்தனையோ ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டு தமது அறிவையும் திறமைகளையும் வளர்க்க வேண்டிய இளஞ்சமுதாயம் 'யார் பேசுகிறீர்கள்? எங்கிருந்து பேசுகிறீர்கள்? என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?' என்று பாலர் வகுப்புக் கேள்விகளுக்கு விடை சொல்வதற்காக மணிக்கணக்கில் காத்திருந்து தமது பொன்னான நேரத்தை மண்ணாக்கிக் கொண்டிருக்கிறது.

வியாபார நோக்குடையவர்களின் கவர்ச்சிகரமான விளம்பரத் தந்திரங்களால் இலகுவில் ஆட்கொள்ளப்படக் கூடிய நிலையிலுள்ள இளஞ் சமுதாயம், மெல்ல மெல்ல மூளைச்சலவைக்கு உட்பட்டுக் கொண்டிருக்கிறது. சமுதாயத்தில் எரிகின்ற எத்தனையோ பிரச்சினைகள் இருக்க ஒருபகுதி மக்கள் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி படும் அவலங்களைப் படம் பிடித்துக் காட்டுவதை விடுத்து வைற்லெக்கான் கோழி கூவுவதும் சோப்பு சீப்பு கண்ணாடி விதவிதமாய் வாங்குவதும் தான் இன்றைய ஊடகங்களை ஆக்கிரமித்துள்ளன.

இவற்றால் இலகுவில் திசை திருப்பப்படும் இளஞ்சமுதாயம், தம்மைச் சுற்றியுள்ள தீர்க்கப் படாத பிரச்சினைகளைப் பற்றிய எவ்வித சலனமும் இன்றி இருபத்தி நான்கு மணி நேரமும் இனித்திடும் இன்ப கானங்களுள் மூழ்கியிருக்கின்றது.

●

# இன்றைய தமிழர்

கல் தோன்றி மண் தோன்றாக் காலம் தொட்டே தமிழினம் இவ்வுலகில் வாழ்ந்து வந்திருக்கிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, வீரம், மானம் ஆகிய குணங்களிலும் சிறந்து விளங்கிய தமிழினம் உலகில் ஒப்பற்ற நிலையை அடைந்து பல இனங்களுக்கு முன்னோடியாக விளங்கியது.

தமிழரின் பொற்காலமான இராஜராஜன், இராஜேந்திரன் காலத்தில் தமிழர்களின் செல்வாக்கும், ஆதிக்கமும் கிழக்காசியா முழுவதும் பரந்திருந்தது. ஆனால் இன்று தமிழினத்தின் நிலை என்ன? தமிழர்கள் இன்று மிகவும் சீரழிந்த நிலையை அடைந்துவிட்டனர். இதற்குக் காரணம் என்ன? தமிழர்கள் தமது பாரம்பரியத்தையும், சரித்திரத்தையும், பழம்பெருமையையும் மறந்ததுதான் இந்த நிலைக்குக் காரணம்.

இன்றைய தமிழர் பலருக்கு ஆங்கிலம் தெரியும். தமிழ் தெரியாது. (ஆங்கிலச் சொற்கள் பலவற்றைச் சேர்த்துத் தமிழைக் சிதைத்துத் தமிழைக் கொலை செய்கிறார்கள்.) ஆங்கிலப் பண்பு தெரியும். தமிழ்ப் பண்பு தெரியாது. இராமாயணம் தெரியும், சிலப்பதிகாரம் தெரியாது. மகாபாரதம் தெரியும், திருக்குறள் தெரியாது. ஷேக்ஸ்பியரைத் தெரியும். இளங்கோவடிகளைத் தெரியாது. விவேகானந்தரைத் தெரியும் இராமலிங்கரைத் தெரியாது. சத்ய சாயிபாபாவைத் தெரியும். இரமண மகரிஷியைத் தெரியாது. ஐன்ஸ்டைனைத் தெரியும். இராமானுஜத்தைத் தெரியாது. சொக்ரதீசைத் தெரியும். இராதாகிருஷ்ணனைத் தெரியாது. நியூட்டனைத் தெரியும். சந்திரசேகர ராமனைத் தெரியாது. ஜூலியஸ் சீசரைத் தெரியும். இராஜேந்திர சோழனைத் தெரியாது.

இப்படி அடுக்கடுக்காகக் கூறிக் கொண்டே போகலாம்.

தமது மொழியைப் பேசக் கூச்சப்படும் இனம் தமிழினம் ஒன்றுதான்! தமது இனத்தின் சாதனைகளை அறியாத இனம் தமிழினம் ஒன்றுதான்! தமது இனத்தின் சாதனைகளைப் போற்றாத இனம் தமிழினம் தான்!

இந்த அவல நிலை நீடிக்கும் வரை, தமிழர்கள் தமது பெருமையை உணர்ந்து செயலாற்றும் வரை, தமிழினத்துக்கு விமோசனம் கிடைக்காது என்பது வெள்ளிடை மலை.

டாக்டர். மகேசன் இராசநாதன்,
நியூசிலாந்து.

# ஆப்பிரிக்க பேல் மொழியில் தமிழ்ச் சொற்கள்

ஆப்பிரிக்க மொழியான பேல் என்ற மொழியில் திராவிடச் சொற்கள், குறிப்பாகத் தமிழ்ச்சொற்கள் நிறைய உள்ளன. பேல் என்ற இனத்தவர் கருப்பு இனத்தைச் சேர்ந்தவர் அல்லர். ஐரோப்பிய நாடுகளில் உள்ள ஜிப்சி என்ற நாடோடி இனத்தைச் சேர்ந்தவர். இவர்கள் ஆப்பிரிக்க நாட்டில் வாழ்ந்தாலும் கருப்பு இன மக்களுடன் கலக்காமலேயே வாழ்கின்றர், இவ்வினத்தவர் செனேகால் நாட்டில் 16 ஆம் நூற்றாண்டிலிருந்து வாழ்வதாகத் தெரிகிறது. இவர்கள் ஆரம்ப காலத்தில் பணக்கார கருப்பர்களின் ஆடு, மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இவர்கள் மொழியான பேல் செரேர் என்ற மொழியுடன் நெருங்கிய தொடர்புள்ளதாக இருக்கிறது. செரேர் என்ற மொழி செனேகால், கினியா போன்ற நாடுகளில் பேசப்படும் ஒரு கிளை மொழியாகும். தியோலா என்ற மொழியும்,


**ப. சண்முகசுந்தரம்,**

**பிரான்சு**


வொலொப்(ஃ) என்ற மொழியும் செனேகால் நாட்டின் கிளை மொழிகளாகும். தியோலா மொழி செரேர் என்ற மொழியுடன் தொடர்பு உள்ளதாக இருக்கிறது,

**சகாரியன் மொழி** :கிழக்கு சகாரப் பகுதியில் பேசப்படும் சகாரியன் என்ற மொழியும் பேல் செரேர் மொழிகளுடன் தொடர்புள்ளதாக இருக்கிறது. அந்த நாட்டில் ஆடு, மாடுகள் மேய்த்து வாழ்ந்து வந்த இனத்தவர் செனேகால் நாட்டிற்கு மிகப் பழங்காலத்திலேயே வந்து குடியேறியதாகத் தெறிகிறது, அவர்கள் மொழியில் உள்ள பல சொற்கள் நைல் நதிக்கரையில் வாழ்ந்த பழைய எகிப்தியர் மொழியிலிருந்தும், ஆசியாவிலிருந்து வந்த இடைச்சாதியினருடைய மொழியிலிருந்தும் கடன் வாங்கப்பட்டவை. ஆசியாவிலிருந்து வந்தவர்களுள் தென்னிந்தியாவிலிருந்து வந்த திராவிடர்கள் குறிப்பிடத் தக்கவர்கள் என்று போமான் என்ற இனநூல் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.' இந்தத் திராவிட இனத்தவர் தான் சூடான் நாகரிகத்தையும், கானா, மாலி போன்ற பேரரசுகளையும் உருவாக்கியவர் என்று அவர் குறிப்பிடுகிறார். கிழக்குச் சகாரியன் மொழியின் பல சொற்களும் இலக்கண அமைப்பும் திராவிட மொழிகளொடு நெருங்கிய தொடர்புடையனவாக உள்ளன. அந்தச் சகாராப் பழங்குடிகள் ஆப்பிரிக்க கருப்பு இனத்துடன் கலந்ததால் பல திராவிட மொழிச் சொற்கள் ஆப்பிரிக்க மொழிகளில் கலந்து அம் மொழிகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்தன.

இந்தியாவை அடுத்துள்ள பெலுசிஸ்தானத்தில் பேசப்படும் பிராவுயி என்ற மொழியிலும் திராவிடச் சொற்கள் அதிகம் உள்ளன. பிராவுயி மொழி பேசும் மக்களும் இடையர் இனத்தைச் சேர்ந்தவர். பேல் மொழி பேசும் மக்களுக்குக் குறிப்பிடும்படியான வரலாறு இல்லாததால் அவர்களால் ஆப்பிரிக்க மொழிகள் வளர்ந்தன என்று கூற ஆதாரங்கள் இல்லை. இருப்பினும் பேல் மொழியிலும், செரேர் மொழியிலும் பல, பிராவுயி, தமிழ்ச் சொற்களும் இலக்கண வடிவங்களும் உள்ளன. செனேகால் மொழிக்குழு மற்றும் செரேர் பேல் மொழிகளின் சொற்களின் சொல்லமைப்பை திராவிட மொழிகளால்தான் விளக்க முடிகிறது. அம்மொழிகளின் உச்சரிப்பும் ஒத்திருக்கின்றன. நீக்ரோ ஆப்பிரிக்க மொழிகளில் உள்ளது போல் திராவிட மொழிகளின் மெய்யெழுத்துக்கள் உதடு பல் அண்ணம் போன்றவைகளால் உச்சரிக்கப்படுகின்றன. பின்வரும் எடுத்துக் காட்டுகள் பேல் மொழி பிராவுயி மொழியோடு அதிகத் தொடர்புள்ளதாய் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

**செனேகால்:** பின்வரும் எடுத்துக்காட்டுகள்

சொல் அமைப்பை விளக்குகின்றன. சொல் வடிவம் எல்லா செனேகால் மொழியிலும் ஒரே மாதிரியாக இல்லை; வொலப் மொழியில் வேர்ச் சொல்லைப் பிரிக்கலாம். தொழிற் பெயருக்கு முன் மூக்கொலி (முன்னொட்டாக) இருக்கும்.

இந்த அ,இ,உ போன்ற சுட்டுகள் எல்லா மொழிகளிலும் நிலைத்திருக்கவில்லை. சில மொழிகளில் அவை மறையத் தொடங்கி விட்டன; இவை பெயர் உரிச்சொற்களைப் போல் சொல்லுக்கு முன் வருகின்றன. இடப் பெயர்களைப் போல் விகுதிகளையும் பெறுகி ன்றன. கன்னடம் போன்ற மொழிகளிலும் இவ்வமைப்பைக் காணலாம்.

பொதுவாக மாடு சம்பந்தப்பட்ட தமிழ்ச் சொற்கள் பேல் இன மக்கள் மூலமாகத்தான் ஆப்பிரிக்க மொழிகளில் கலந்தன. மாடு சம்பந்தப்பட்ட சொற்களை அப்பேல் ஆதிவாசிகள் திராவிடரிடமிருந்து, எகிப்து நைல் நைதிக்கரையில் வாழ்ந்த நூபிய ஆயர்கள் மூலமாக எகிப்திய வரலாற்றுக் காலத்துக்கு முன்பே பெற்றனர். இந்நூபிய ஆயர்கள் தான் எகிப்தியர், சொமாலியர், புல்பே போன்ற இனத்தவரின் முன்னோர்கள். மாடு சம்பந்தப் பட்ட சொற்கள் திராவிட ஆசியாவிலிருந்து செனேகால் வரையிலுள்ள மொழிகளிலும் ஒரே மாதிரியாக உள்ளன என்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளால் அறியலாம்.

## நீல ஆற்றங்கரை நாகரிகம்

ஷேக் திதியான்ந்தியாய் என்பவர் இச்சொற்கள் அனைத்தும் திராவிட மூலத்திலிருந்து வந்தவை என்று விளக்கிக் காட்டியிருக்கிறார். செனேகால் நாட்டு மொழி இயல் வல்லுனரான இவர் மேற்கூறிய சொற்களை பழந்தமிழ்ச் சொல்லான நகுவாலும் (பசு), துளுச்சொல்லான நக்குவாலும் விளக்கலாம் என்று கூறுகிறார். அவர், பேல் இன மக்களின் முன்னோர்கள், திராவிட, எத்தியோப்பிய இனக்கலப்பால் தோன்றி யவர்கள் என்று நம்ப இடமுண்டு என்கிறார். ஒரு பிரிவு எத்தியோப்பியர்கள் திராவிடருடன் கலந்ததால், அதிலிருந்து பல எத்தியோப்பிய நிலோத் (பழங்கால நீல நதிக்கரை எகிப்தியர்) பிரிவுகள் தோன்றின. அப்பிரிவினர் நாளடைவில் தமிழினின்றும் மெல்ல மெல்ல விலகிச் சென்றனர் என்று கூறுகிறார். ஆயர் சம்பந்தப்பட்ட சொற்கள் அனைத்தும் புலர் என்ற ஆப்பிரிக்க மொழியில் பெரும்பாலும் திராவிடச் சொற்களாக் உள்ளன. ஆனால் பேல் போன்ற பிற அப்பிரிக்க மொழிகளில் அவ்வாறு இல்லை.

அவ்வின மக்களின் நான்கு பிரிவுகளில் ஒரு பிரிவினர் மட்டும் "க" என்ற ஆயர் பிரிவினர். அவர்கள் மூலமாகத்தான் மாடு சம்பந்தப்பட்ட சொற்கள் அம்மொழியில் கலந்தன. அம்மொழியில் "அக" என்ற சொல் தீட்சை பெற்றவன் அல்லது தலைவன் என்று பொருள். தமிழிலும் அக என்றால் தீட்சை பெற்றவன், தலைவன், பிறரை ஓட்டிச் செல்பவன் என்று பொருள். இதனால்தான் பேல் மொழியில் ஆயர் சம்பந்தப்பட்ட சொற்கள் தமிழிலிருந்து வந்தவை என்று கூற முடிகிறது.

ஆனால் இச்சொற்கள், சொமாலி, அஃபார், சிதாமே, பெழா போன்ற பிரிவுகளிலும் குறைகிறது. தமிழ்ப்பண்பாட்டை எத்தி யோப்பிய மொழியிலிருந்து பெற்ற பேல் மொழி அதினின்று வேறுபடுவதற்கு இதுவே காரணம். பேல் இன மக்கள் தமிழ் ஆயர் இனத்தைப் போல் மாட்டிற்கும், மாட்டினத் திற்கும் முக்கியத்துவம் கொடுத்தனர். எகிப்தியரும் தமி ழர் போல் காளைக்கு முக்கியத்துவம் கொடுத்தனர் அவர்களும் காளையை "கா" என்ற சொல்லால் குறித்தனர். (கா என்றால் உயர்ந்தது, சிறந்தது என்று பொருள்). இவ்வாறு, மனித வளர்ச்சியில் மாடும், மாட்டினங்களும் மனிதனின் செல்வங் களாகவும், உறவினர் களாவும் மதிக்கப்பட்டன.

தமிழில் ஆயர் என்றால் தாய்மார் என்று பொருள். தமிழ் "கோ, கோன்", கடவுள் என்பதைக் குறிக்கிறது. கோனின் பலர்பாலான கோனார் ஆயர் என்ற பொருளைத் தருகிறது.

புலவர் மொழியிலும் பேல் மொழபோல் ஆயர் சம்பந்தப்பட்ட சொற்கள் தமிழ்ச் சொற்களாகவும் ஆயர் இனமும் தமிழ் ஆயர் இனத்துடன் ஒத்திருக்கிறது. இவ்வாறு பேல், க, கன் அதாவது கடவுளின் மக்கள் அல்லது மாட்டுமக்கள் தமிழ் கோன், கோனார் உடன் தொடர்புள்ளதாக இருக்கிறது. இப்பேல் ஆயர் பிரிவினர் தமிழ் ஆயர் போல் குளித்தல் சடங்குகள், வான நூல் அறிந்தவர். இவ்விரு பிரிவினரும் ஒரே விதமான பண்பாட்டைக் கடைபிடிப்பவர்.

# தமிழ் கற்றலில் கற்பித்தலில் மரபுவழியே சிறந்தது

திருமதி. பொன்னி கணேசன், கிள்ளான்

சிறு வயது முதலே பேசவும் உச்சரிக்கவும் இவர்கள் தெரிந்து கொண்டிருப்பதால் பிழையின்றி படிக்கவும் எழுதவும் இவர்கள் படிப்பிக்கப்படுகின்றனர். செவிவழியாக கேட்டலே இதன் முதன்மை நோக்கம். கேட்டல் — படித்தல் — எழுதுதல் என்ற இந்த முத்திறன் ஆற்றலை அவர்களிடம் கற்பிக்கும் ஆசிரியரே உருவாக்கி வளர்க்க வேண்டும்.

படம் பார்த்துப் படித்தல், தமிழ் நெடுங் கணக்கை அடையாளங் காணல், பாடுதல் முதலிய இருவித நோக்கமும். படிப்படியாக சித்தியாகும். உயிர் எழுத்துக்கள், உயிர்மெய் எழுத்துக்கள் யாவும் படித்துப் படித்து அடையாளங் காணவே பல மாதங்கள் ஆகும். இது ஆறாண்டிலும் தொடர வேண்டும். உயிர்களின் குறில் நெடில் ஒலிப்பும், இதுபோல உயிர்மெய் எழுத்துக்களின் உச்சரிப்பும், ஏன் வேறுபாடுகள் உள்ளன என மாணவர்கள் பாடம் படிக்கும்போதும், சொற்களை உச்சரிக்கும் போதும் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள்.

இந்த குறில் நெடில் ஒலிப்பு முறை மலாய் ஆங்கிலத்துக்கு இல்லை. மாணவர்கள் மும்மொழி கற்க வேண்டிய கட்டாயக் கடமை உள்ளது. எனவே தமிழைக் கற்பிப்பதிலும் கற்பதிலும் தாய்வழி மரபு முறைகளையே பின்பற்றப்படுவது மிக்க அவசியம். இந்த அணுகுமுறை இருதரப்புக்கும் இயல்பானது. இயற்கையானது.

தமிழ் மொழி எழுத்தும் பேச்சும் ஒன்றுபட இயங்குவது; இயக்கப்படும் இறைமை முறை பண்பாட்டு மொழியான இதனை இரு தரப்பும் பண்பட்ட வழியில் கற்பதே சிறந்தது. கற்பிப்பதே சாலவும் சரியான வழிமுறையாகும்.

ஆறு ஆண்டுகளில் ஒரு மாணவர் ஏன் தாய்மொழிக் கல்வியிலும் இதன் முத்திறன் ஆற்றலிலும் வளர்ச்சி பெறாமல் போகிறார் என சிந்திப்பதற்கு ஏற்ற காரணங்கள் உண்டு. மூன்று மொழியையும் ஒன்றுபோல் படிக்கச் செய்வதும், கற்பித்து வருவதும், பயில்வதும் தவறான முறைகளால் எழுந்த இழப்பாகும்.

ஒரு மொழியைப் படிக்கும் அறிவியல் அணுகுமுறை வேறு, மரபு வழி முறை வேறு. தமிழ் பயிற்று முறையே மரபு முறையானது. பழங்காலத்தில் இருந்து வாழையடி வாழையாக மரபியல் பண்பாட்டறிவு மூலம் தமிழ் மொழிக் கல்வியை வளர்த்து வந்தனர்.

திருவள்ளுவரும், ஔவையாரும் இவ்வாறே உணர்த்தினர், எண்ணும் எழுத்தும் இரு கண்கள் என்று. ஔவையார், சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் என்று வலியுறுத்திக் கூறுவது மரபு வழி போதனைக்கே முதலிடம். மூன்றுவித அடிப்படையான பழக்கமே கல்விக்கு வேர்கள். இதனையே செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் என்றார் திருவள்ளுவரும். முதலில் பிள்ளைக்கு கல்வியை ஊட்டும் வாயில் செவிகள். எனவே ஐம்பொறியாற்றலே கல்வியை வளர்க்கும் இயல்புக் கருவிகள். இவை ஐந்தும் இயற்கையான அறிவுப் புலனை வளர்க்க மாணவர்களைப் பழக்குதல் நலம். இதனால் அறிவியல் ரீதியில் கல்விக்கண் திறனை வளர்க்கலாம். கடந்த காலத்தில் இது நூற்றுக்கு ஐம்பதுக்கு மேல் வெற்றி பெறாமற் போனதற்கு பிழையான கற்றலும் கற்பித்தலுமே ஆகும்.

செவிப் புலனறிவுக்கு மிக முக்கியமானது பாடுதல். பாடுமுன் கேட்பது பல முறை நிகழ வேண்டும். தமிழ் மரபுமுறைப் பாடப் பயிற்சி குறைந்ததால் சில கேடுகள் இருதரப்பாருக்கும் நேர்ந்தன. தமிழைத் தமிழாகவே கற்பித்தல் வேண்டும். இது மாறுமானால், குறிக்கோள் சிதறும். இதனைப் பட்டறிவுமிக்க ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்வதை நான் அறிவேன்.

மூன்று மொழி கற்கும் ஒரு மாணவியின் மனோ நிலை நிலைகுலைவதும் உண்டு. பிஞ்சு மூளையில் ஏற்படுத்தக் கூடிய சுமையும், பொறுப்பும் இக்காலத்தில் மிகுதி. இதனாலும் தாய்மொழியைக் கற்றுக் கொள்வோர், தாய்வழி மரபுகளையே பின்பற்ற வேண்டும். ஏனைய நவீன அறிவியல் வழிப்போதனை சிறக்காது.

அதுமட்டுமல்ல. முற்றிலும் இது வழியை முரண்படுத்தி நோக்கத்தைச் சிதைத்துவிட்டது.

விளையும் பயிர் முளையிலே தெரிய வேண்டுமானால் கற்றல் கற்பித்தல் பயிற்சிகளையே மாற்றும்படி பரிந்துரைக்கச் செய்வது தமிழைப் பொறுத்தமட்டிலும் மிக மிக இன்றியமையாதது. அடிப்படையிலேயே மாறுதல் செய்யத் திட்டமிடுவது நல்லது. பயிலும் முறை-பயிற்சிப்போக்கு இரண்டும் மரபு வழி அணுகும் முறையைச் சார்ந்தே போக வேண்டும். இந்தப் போக்கு வளரும் தன்மை உள்ளது; தமிழியத் திறன்களை மாணவர் பெறுவர்.


ஐந்தாண்டுகளுக்கு மேல் பயிற்றுவிக்கும் ஆசிரியர் தமது பட்டறிவுக்காலத்தைத் திரும்பிப்பார்க்க வேண்டும். திருத்தம்பெற வேண்டும். குறைகளைத்திருத்திக் கொள்ளலாம். இதனால் இவர்க்கும் மாணவர்க்கும் பயனுண்டு.

எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்ற பழமொழி ஆசிரியரையும் குறிக்கும். இதனால் இப்பணி இறைமைப் பணி, புனிதமான தொழில் எனக் கருதும் மனப்பாங்கு வேண்டும். தாய்மையின் சிறப்பைப் பெறுவோராகவே ஆசிரியர் தம்மைக் கருதலாம். தாதிமை வேலை என்றோ, ஆயா வேலைதான் இது என்றோ கருதுவது குற்றம்.

மலேசியத் தமிழ்ப் பள்ளியில் பயிற்றுவிப்பதையே இங்கு நான் கூறும் பயிற்று வழி முறையாகும். தமிழ்ப் பற்று மொழிப் பள்ளியான இங்கு மட்டும், தமிழ் கற்றல், கற்பித்தலில் பாரம்பரிய மரபுவழி பேணப்படாத நிலைகளை மாற்ற வேண்டும் என கருதுகிறேன்.

இதே முறை இடைநிலை-உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகளிலும் இருக்க வேண்டும். பயிற்றுமுறை மாறாத வரைக்கும் பயிலும் வழி சிக்கலாகவே தொடரும். மலேசியப் பாடத் திட்டம் தாய்மொழி வரைக்கும் அது சிறந்தது. பிற மொழிச் சொற் கலப்பு தமிழுக்குக் கூடாது. இதனால் பாதிக்கு மேல் மொழியியல் தேர்ச்சி பெறவில்லை என்பது நீண்ட நாளைய குறைபாடு என்பது கணிப்பு. இது தவறாகாது. இருவழி அணுகுமுறை என்பது இரு பக்கப் பார்வையின் நோக்கமாகப் பயனீடு பெறும். ஆசிரியர்-மாணவர் இருவர் நோக்கமும் வெல்லும்.

நன்றி : **மலேசிய நண்பன்**



போர் வீரர்களின் பரிவாரப் போரியக் காட்சி.
திருவரங்கக் கோயிலின் உட்புற சிற்பங்கள்

# அந்தமான் நிக்கோபார் தீவுகளில் முத்திரைத் தமிழர்கள்

சுப. கரிகால் வளவன்

**வ**ங்கக் கடலின் நடுவே ஏறததாழ 8248 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பில் விரிந்து காணப்படுகிறது எமது அந்தமான் நிக்கோபார் தீவுகள். ஏறத்தாழ 439 பசுமை மிகுந்த தீவுக் கூட்டங்களின் அமைப்புதான் இது.

தலைநகர் போர்ட்பிளேயரிலிருந்து தமிழ் தாயகம் சென்னை சுமார் 1190 கி.மீ. தூரத்திலுள்ளது. தலைநகரிலிருந்து சென்னைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்தும் இருந்து வருகிறது. சென்னையை தவிர கல்கத்தா, விசாகப்பட்டணம் ஆகிய இருபெரு நகரங்களுக்கும் பயண கப்பல் சேவை நடத்தப்படுகிறது. அ.நி. நிர்வாகத்தின் கப்பல்துறையும், இந்திய கப்பல் சேவையை நடத்தி வருகிறது.

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் 86 விழுக்காட்டு பகுதிகள் காடுகளால் சூழப்பட்டவை. மீந்த 14 விழுக்காட்டு தீவுகளில் மட்டுமே மக்கள் வசிக்கின்றனர் என்பது வியப்பிற்குரிய செய்திதான். ஆண்டொன்றிற்கு இங்கு 3180 மில்லி மீட்டர் மழை பொழிகிறது. தீவின் தலைநகர் போர்ட்பிளேயரின் முக்கிய கடைவீதி அபர்டீன் பஜார் எனப்படுகிறது.

தீவில் எல்லா இன, மத, சாதி மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இந்த மக்களுக்குள் அடிக்கடி கலப்புத் திருமணங்கள் அவ்வப்போது நடப்பதைக் காண முடியும் . தாயகத்தோடு தொடர்பு கொண்ட குடும்பங்கள் மட்டுமே தம் குழந்தைகளுக்கு தாயகத்திலேயே மணம் முடிக்கின்றனர்.

இங்கு வாழும் பெரும்பான்மை இனம், வங்க இனமும், தமிழினமும்தான். அதைத்தவிர தெலுங்கர்கள், கேரளத்தவர்கள், பீகாரிகள், பஞ்சாபிகள் என இந்தியாவின் எல்லா இன மக்களும் பேசும் பொதுவான மொழியாகும். இங்குள்ள அரசு செயல்பாடுகளனைத்தும் ஆங்கில மொழியிலேதான் நடைபெறுகிறது இங்குள்ள மொத்த மக்கள் தொகை மூன்று லட்சமாகும். இந்தத் தீவின் தென் முனையாக கருதப்படும் பீக்மீலியன் பாயிண்ட் இன்று இந்திரா முனை என்றழைக்கப்படுகிறது. பல்லின மக்கள் வாழும் இத்தீவைச் சிறிய இந்தியா என்றும் பெருமையாக அழைக்கலாம்.

இங்குள்ள அகில இந்திய வானொலி கலை நிகழ்ச்சிகளில் மொத்தம் 9 பிராந்திய மொழி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் லெப்டினன்ட ஆட்சி பால்ட் பிளேயர் என்பவருடன் வேறு சிலரை இத்தீவின் குடியேற்ற அமைப்புக்கு அனுப்ப இத்தீவை தகுந்த இடமாக தேர்ந்தெடுத்தார்.

அதன்படி 1789—ல் முதன்முதலாக சிறு குடியேற்றம் நடைபெற்றது. மலேரியா, காலரா மற்றும் பல தொத்து நோய்களின் அபாயங்களின் காரணமாக 1796ல் இந்த குடியிருப்பு காலி செய்யப்பட்டது. பிறகு கடல் விபத்துக்குள்ளாகி கரைகளில் ஒதுங்கும் கடலோடிகளின் பாதுகாப்பிற்காக இங்கு கடற்படைத்தளம் ஒன்று அமைக்கப்பட்டது.

1857-ல் இந்தியாவெங்கும் சிப்பாய்க் கலகம் மக்களிடையே புரட்சிக் கனலை ஏற்படுத்தியது. இதை முதல் இந்திய சுதந்திரப்போர் என்றும் கூறலாம். அதில் ஈடுபட்ட புரட்சியாளர்களை அடக்க-சிறைக் கைதியாக்கி கொடுமைப்படுத்த ஓரிடத்தை தேர்ந்தெடுத்தனர் ஆங்கிலேயர் அதன்படி அந்த சிறைக்கைதிகளால் 1890-ல் ஏழுபிரிவுகள் கொண்ட மாபெரும் சிறைக்கூடம் கட்டப்பட்டது. அதன் பின் இந்திய விடுதலை வீரர்களையும் பெரும் கிரிமினல் கைதிகளையும் தண்டிக்க சிறந்த இடமாக தேர்ந்தெடுத்து அவர்களை இங்குள்ள செல்லுலர் சிறையில் அடைத்து கொடுமைபடுத்தினர். இவ்வாறாக குற்றவாளிகளின் குடியேற்றம் தீவில் ஏற்பட்டது

# பர்மாவில் தமிழர்

பா.நா.இரவி பாண்டியன், தமிழ்நாடு

*1958*-இல் பர்மாவில் பெரும் புரட்சி ஒன்று ஏற்பட்டது. அஃதாவது கையின் மொழி பேசக் கூடியவர்கள், அந்த நாட்டு வரலாற்றில் முகாமை இடம் பெறுபவர்கள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் முதல் கருவிகள் ஏந்திப் பர்மியப் படையை எதிர்த்துப் போராடிப் பர்மிய நாட்டின் நான்கில் மூன்று பங்கைக் கைப்பற்றி விட்டார்கள். மீதம் இருந்ததோ இரங்கூன் நகரம் ஒன்றுதான். அப்பொழுது பர்மிய அரசு இந்திய அரசின் உதவியை நாடியது. நேருவும் தயங்காமல் இந்தியப் படையை அனுப்பி வைத்தார். இந்தியப் படை இரங்கூனில் இறங்கியதைக் கேள்விப் பட்டவுடன், முன்னோக்கி வந்து கொண்டிருந்த கையின் இனத்து வீரர்கள் பின்வாங்கி ஓடிச் சென்றார்கள். இவ்வாறு அந்தப் பெரும் புரட்சியை முறியடித்த பெருமை இந்திய நாட்டுக்கே சேரும்.

1954—இல் இன்னொரு அரசியல் நிகழ்ச்சி நடந்தது. பர்மிய அமைச்சரவையில் உள்ள ஒருவன் அந்த நாட்டுத் தலைவராயிருந்த போஜேவ் அவுன்சான் முதல் மற்ற 13 அமைச்சர்களையும் சுட்டுக் கொன்றான். பிறகு அவனும் தூக்கிலிடப்பட்டான். அதற்குப் பின் அந்நாட்டின் ஆளும் பொறுப்பை ஊனு என்பவர் ஏற்றுக் கொண்டார். இவரின் ஆட்சிக் காலத்தில் நம் இந்தியர்களுக்கு நல்ல சலுகைகள் அளித்தார். இவர் இந்தியர்களின் மேல் அன்பும் மதிப்பும் கொண்டவர். சில காலம் கழித்து, இவர் சில வெளிநாடுகளுக்குச் சென்று பர்மிய நாட்டின் பொருளியலை மேம்படுத்தத் திட்டமிட்டார். அத்திட்டப்படி வெளிநாடுகளுக்குச் சென்றார். அப்பொழுது பர்மிய நாட்டின் படைத் துறைத் தளபதிகளில் ஒருவரான போஜேவ் நேவின் என்பவரின் மேற்பார்வையில் நாடு இருக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்துச் சென்றார்.

போஜேவ் நேவின் தமது படைத்துறை ஆட்சியை 1960—இல் அமைத்தார் அன்றோ! அந்தச் சூட்டோடு சூடாகப் பல திட்டங்கள் தீட்டினார். அந்த நேரத்தில் (1962) இந்தியர்களும் சீனர்களும் பர்மியப் பொருளியல் மேம்பாட்டில் முகாமையாக இருப்பதைக் கண்டு பெரிதும் பொறாமை கொண்டார். உடனே வெளிநாட்டவர்களின் தொழிற்சாலைகள் பல்லாயிரக்கணக்கான குறுக்க (ஏக்கர்) நிலங்கள், கோடிக்கணக்கான சொத்துக்கள் அனைத்தையும் தேசிய உடைமையாக்கினார்.

இந்த ஏற்பாட்டினால் பெரிதும் இழப்புற்றவர்கள் நம் இந்தியர்கள் தாம்; குறிப்பாகத் தமிழர்கள் தாம்! தமிழர்கள் பெரிதும் துயரமும் தொல்லையும் அடைந்தனர். இனி அந்நாட்டில் வாழ்வதற்கு வழியில்லை என்று கண்டனர். இதன் விளைவாக 1964 முதல் 1974 வரை ஏதிலிகளாகத் தங்கள் தாயகமான தமிழகத்திற்குத் திரும்பினர்.

படிப்படியாகப் பர்மாவில் தமிழர்களின் உரிமை பறிக்கப்பட்டது. பர்மாவில் வெளியான தமிழ்த்தாளிகைகளான *தொண்டன், இரசிக இரஞ்சினி* ஆகியவை தடை செய்யப்பட்டன. வேறு நாட்டு மொழிகளில் செய்தித்தாள்கள் வெளிவரக் கூடாது என்று சட்டம்

இயற்றப்பட்டது. பர்மாவில் திரையரங்குகளில் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய படங்கள் திரையிடப் பெற்று வந்தன. அவற்றிலும் பெரும்பாலும் தமிழ்ப் படங்களே அதிகம் திரையிடப்பட்டு வந்தன. உடனே பர்மிய அரசு ஒரு சட்டம் இட்டு, இந்தியாவிலிருந்து ஒரு மொழிப்படந்தான் இனி வாங்கப்படும்; அது தமிழாகவோ, இந்தியாகவோ, தெலுங்காகவோ — எதுவாகவோ இருக்கலாம் என்று இந்திய அரசுக்குத் தெரிவித்தது. அந்த சட்டத்திற்குப் பின் இந்தி வெறிபிடித்த இந்திய அரசு, தமிழ்ப் படத்தையும் தெலுங்குப் படத்தையும் அனுப்புவதை நிறுத்திவிட்டு, இந்தியப் படங்களை மட்டுமே அனுப்ப முடிவு செய்தது. இந்தத் தீர்மானத்திற்குப் பின், பர்மாவில் திரையரங்குகளில் தமிழ்ப் படம் காட்டப்படமாட்டாது என்பதையறிந்த தமிழர்கள் மிகவும் வருத்தம் கொண்டார்கள்.

பர்மாவில் 1960—ஆம் ஆண்டுக் கணக்குப் படி இந்தியர்கள் மொத்தம் 21 இலட்சம் ஆகும். இதில் ஏறத்தாழ 10 இலட்சம் பேர் தமிழகம் வந்துவிட்டார்கள். இப்பொழுது ஏறத்தாழ 7 1/2 இலக்கம் தமிழர்களே இருக்கிறார்கள்.

இதேபோல், பர்மாவில் தனிமொழிக் கல்விக் கூடம் இருக்கக் கூடாது என்றும் பர்மிய அரசு சட்டம் போட்டது. இதனால் தமிழர்களின் கல்விக் கூடங்கள் மூடப்பட்டன. இதனால் தமிழர்களின் கல்வி நிலை மிகவும் கீழானது. தற்பொழுது பர்மாவில் உள்ள சில தமிழ்க் கோவில்களிலும் சிலரின் வீடுகளிலுந்தான் தமிழ்க்கல்வி கற்பிக்கப்படுகிறது. எனவே, தமிழர்களின் கல்வி நிலை நாளுக்குநாள் தாழ்ந்து போனது.

1960 முதல் இன்று வரை பர்மாவில் படைத்துறை ஆட்சியே நடைபெற்று வருகிறது. அதனால் பர்மிய அரசியல் நிலைகளை வெளிநாடுகளுக்கு எட்டாதஅளவுக்கு வைத்திருக்கிறார்கள். பர்மாவில் எழுத்துரிமை, பேச்சுரிமை எல்லாம் பறிக்கப்படடுப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. உலகிலேயே வெளிநாட்டுத் தொடர்பு குறைவான நாடு பர்மாதான். தற்பொழுது ஆளும் அனைத்ததிகார ஆட்சிக்கு எதிராகச் சில பொழுது கிளர்ச்சித் திட்டங்கள் தீட்டப்பெற்றன. ஆனால் அவை உடனுக்குடன் ஈடுபட்டவர்களுக்குத் தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டது.

மாணவர்களுக்கும் படை வீரர்களுக்கும் பெரும் போராட்டமாகவே நடந்தது. போராட்டம் மூன்று நாட்கள் நடந்தது. அக்கால் நூற்றுக் கணக்கான மாணவர்கள் படைத் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மாணவர் அடக்கி ஒடுக்கப்பட்டனர். 1962—க்கு பின் 1974—இல் நடந்த பெரும் புரட்சி இது. ஆனால் இச்செய்தி துளியும் வெளி உலகுக்குத் தெரியாதவாறு பர்மிய அரசு மூடி மறைத்துவிட்டது.

அங்குள்ள பெரும்பான்மைத் தமிழர்கள் இலங்கையில் தனி நாடு கிடைப்பதை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர்.

பர்மாவிலும் பொது நிலை அமைப்புகள் சில இருக்கின்றன. ஆனால் தமிழ் மொழிக் காகவும் தமிழர்களுக்காகவும் பாடுபடும் மன்றங்கள் மிகவும் குறைவான வையே. பர்மாவில் தமிழுக்காகவும் தமிழர்க்காகவும் அன்று முதல் இன்று வரை பாடுபடுபவர் பர்மா தன்மானக் கட்சித் தலைவரும், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பர்மா கிளையின் தலைவருமான ஐயா பி.எசு. மணி அவர்களும், மோல் மேன் நகர் மாரிமுத்து என்பவருந்தாம். அவர்கள் தாம் பர்மாவில் தமிழர்களுக்காக உண்மையில் தங்கள் வாழ்க்கையையே ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். பர்மாவில் தமிழர் பலர் தமிழ்ப் பற்றுடனும் தமிழ்ப் பண்புடனும் வாழ்வது இவர்களைப் போலும் சிலர் முயற்சிகளினால் தான் என்று கூறலாம்.

தமிழர்கள் பர்மாவில் அதிகமாக வாழும் பகுதிகள் கம்பை, தென்காஞ்சி (தென் காந்தன்), தாக்கேட்டா முதலியவையாகும். தமிழர்கள் பர்மிய நாட்டின் உண்மையான உயர்வுக்குப் பாடுபட்டுள்ளார்கள். அவர்களுள் பெரும் பாலோர் தாயகம் திரும்பியதால் அங்குள்ள வேளாண்மை குறைந்துள்ளது. ஆனால் தமிழர்களுக்குப் பர்மியர்கள் கொடுத்த பட்டம் கல்லா என்பது. கல்லா என்றால் நாடுவிட்டு நாடு வந்தவர்கள் என்று இழிவாகக் குறிக்கப் படும் ஒரு சொல். இச்சொல் தமிழர்களுக்குச் சினத்தை மூட்டுவதாகும். உண்மையில் இன்றும் தமிழர்கள் அங்கு அரத்த வெயர்வை சிந்தி உண்மையாக உழைக் கிறார்கள். பர்மாவில் கூலி தூக்குவது பெரும்பாலும் தமிழர்கள் தாம்! கடுமையான வேலைகளில் ஈடுபடுபுவர்கள் எல்லாரும் தமிழர்களே!

# மியன்மா (பர்மா) நாட்டின் தமிழர்கள்

ரெ. மாரிமுத்து
தலைவர், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம், மியன்மா கிளை

கி.மு.200—300 ஆண்டின் இடைப்பட்ட காலத்தில் அசோக மன்னன் இந்திய நாட்டில் தென்னகம், இலங்கை ஆகிய நாடுகளுக்கு அனுப்பி பௌத்தமதத்தை பரப்பிய நாளில் பர்மிய நாட்டுக்குடிற்கும் ஒரு குழுவினர் வந்தனர். இங்கே வந்த பௌத்த மதத்தோடு காஞ்சிபுரத்திலிருந்து பல்லவ லிபி பண்பாடு நாகரிகம் ஆகியவைகளும் தற்போது தட்டோன் எனப்படும் சுவர்ணபூமி நாட்டில் பரவியதாக பர்மிய கலாச்சார வரலாறு என்ற நூல் கூறுகின்றது.

புரோம் நகரத்தின் தெற்குப் பகுதியான மோசா என்ற கிராமத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பொன் தகட்டில் காணப்படும் பௌத்த சாசனம் பல்லவ லிபியால் எழுதப்பட்டுள்ளன அக்காலத்தில் பர்மாவை அரசு புரிந்த மன்னர்களின் பெயர்கள் சூரியவிக்ரமன் சிம்ம விக்ரமன் என்றெல்லாம் சூட்டப்பட்டுள்ளன.

பர்மாவில் 1900 ஆண்டுகளுக்கு முன் அழிந்து போன விஷ்ணு நகரை ஆய்வு செய்ததில் இங்கு கண்டெடுக்கப்பட்ட பானை அதில் உள்ள சித்திரங்கள் அனைத்தும் தென்னகத்தின் 'அரிக்கன்மேடு என்ற பகுதியில கிடைக்கப் பெற்றுள்ள பானைகளும் ஒரே மாதிரியாக உள்ளன.

**உலகப் புகழ் பெற்ற பகான (அல்லது) அரிமதனப் புரம்)**

முன்பு அர்மதனப்புரம் என்றும் தற்பொழுது பகான என்றும் அழைக்கப்படும் நகர் உலகப் பிரசித்திப் பெற்றதாகும். இந்நாட்டை கிபி. 1084 — 1112) சான் சித்தா என்ற மன்னன் ஆண்டுவந்தான். இங்கே கிடைத்த கல்வெட்டு ஒன்று—சான்தித்தா என்ற பர்மிய மன்னன் பகான் நகரத்துக்கு வருகை தந்த சோழ வேந்தனுக்கு புத்தம் தர்மம் சங்கம் என்ற முப்பொரும் தத்துவங்களை பொன்னேட்டில் சிவப்பு மையால் எழுதி அறிவித்ததிற்கிணங்க சோழ மன்னன் பௌத்த மதத்தைத் தழுவி ஏற்றுக் கொண்டான்" என்று கூறுகின்றது.

**கி.பி. 317 - பகானில் உள்ள வைணவத் திருக்கோவில்**

சிந்தக் கோவிலை தலைவர் இர. ந. வீரப்பனாருடன் நாங்கள் சென்று பார்த்தோம். சிவன் சிலை எல்லாம் அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப் பெற்றுள்ளன. இந்தக் கோவில் அக்காலத்தில் அங்கே வாழ்ந்த தமிழர்கள் மற்றும் இந்துக்களுக்காக கட்டப்பெற்ற கோயிலாகும்.

**13ஆம் நூற்றாண்டு தமிழ் கல்வெட்டு**

கல்வெட்டின் பொருள் : "ஸ்ரீ குலசேகரரின் மாணவர் மலை மண்டலம் மகோத்யா பட்டணம் வாழ் .... வீரியன் என்ற வைணவ சமயத்தைச் சார்ந்த சான்றோர் 'அரிபட்டன்புரம்' என்ற புகான் நகரின் நாநாதேசிகன் நகர ஆழ்வார் கோவிலில் மண்டபம் ஒன்றை கட்டி (நிலையுடன் கூடிய) கதவு ஒன்றையும் தானம் செய்தான்.

சுமத்ரா சாஸனமும் பகான் (பர்மா) கல்வெட்டும் வியந்தகு வகையில் ஒற்றுமையாக உள்ளன. இதனால் பர்மாவிற்கு 12ம் நூற்றாண்டு முதற்கொண்டே தமிழர்கள் வணிகம் போன்ற தொழில்காரணமாக வந்தும் சென்றும் வாழ்ந்தும் வந்தனர் என்பது உறுதியாகின்றது.

**இந்தியர்கள் (தமிழர்) பர்மா வருகை**

கீழ்பர்மா பிரிட்டனின் கைவசமானதற்குப் பின் 1852ம் ஆண்டுமுதல் இந்தியர்கள் பெரும் எண்ணிக்கையில் பர்மாவுக்கு வரத் தொடங்கினர். பல தொழிலில் ஈடுபட்டவர்கள்

எனினும் விவசாயத் தொழிலாளர்களே அதிகம். 1876ம் ஆண்டு தொடக்கம் தமிழகத்திலிருந்து விவசாயத் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டனர். பர்மாவில் 1931ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்தியர் எண்ணிக்கை:

| இனம் | பர்மாவில் பிறந்தவர்கள் | இந்தியாவில் பிறந்தவர்கள் |
|---|---|---|
| தெலுங்கர் | 10386 | 100196 |
| தமிழர் | 22536 | 57011 |
| இந்து | 12820 | 68580 |
| ஒரிஸ்ஸா | 1076 | 31826 |

1931ம் ஆண்டு பர்மாவில் இந்தியரின் (பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்) எண்ணிக்கை பத்து இலட்சமாகும். 1930ல் ஏற்பட்ட இந்தியமியர் இனக் கலவரத்தாலும் பர்மியர்களின் விடுதலை தேசிய உணர்ச்சியினாலும் அதுவரை இந்தியாவின் மாநிலமாக இருந்து வந்த பர்மா தனி நாடாகப் பிரிந்ததாலும் 1941ம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் பர்மாவில் பரவியதாலும் 5 இலவசம் இந்தியர்கள் இந்நாட்டை விட்டு வெளியேறினர்.

1962ம் ஆண்டு ஏற்பட்ட அரசு மாற்றத்தினால் இரண்டு லட்சம் அகதிகள் தாயகம் திரும்பினார். திரும்பியவர்களில் பலர் இங்கே தொடர்ந்து வாழ்வதற்கும் தொழில் செய்யவும் வாய்ப்பும் வசதியும் இருந்தும் தவறான எண்ணத்தில் சென்றனர். தரகர்களும் தங்கள் வருமானத்திற்காக பல தமிழர்களை அனுப்பினர்.

பாரத அரசும் தவறான முடிவெடுத்து கப்பலை அனுப்பி மக்களை அழைத்துக் கொண்டது. உண்மையிலேயே பாதிக்கப் பட்டவர்கள் ஒரு சிலர் மட்டுமே! கால நேரம் சூழல்களுக்கு ஏற்ப தங்களை தயார் செய்துகொண்டு வாழும் மூன்று இலட்சம் தமிழர்கள் இன்று இந்தியத் தமிழர்களை விட நன்றாகவே வாழ்கின்றனர். அன்று இந்தியர்களில் வட நாட்டார் இங்கே வளமுடன் வாழ்ந்தனர். அந்த நிலை இன்று மாறி தமிழரின் நிலை மேலோங்கியுள்ளது. பொருளாதார நிலையில் மற்ற நாடுகளைப் போல சீனர்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

●

நிழலாட்ட ஓவியப் பாவைகள்





# உயிரான தமிழும் சீன மொழியும்

கருணை. ஏ. கமால், ஆங்காங்

உலகெங்கும் வாழும் தமிழர்கள் ஒன்று சேர்ந்து உறவாடும் வகையில் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் பல நாடுகளில் பண்பாட்டு தூதுவர்களைப் பெற்று இயங்கி வருகிறது. உலகளாவிய மாநாடுகள் நடத்தி தமிழர்களை விழிப்படையச் செய்தும் வருகிறது. அதற்காக அதனை வாழ்த்துகின்றேன். நம் தமிழரை தமிழுணர்வின் அடிப்படையில் ஒன்று சேர்ப்பது என்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை நானறிவேன். நான் செயலாளராக இருந்து பணியாற்றி வருகின்ற தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் வாயிலாகவும் நம்மவர்களிடமிருந்து பல படிப்பினைகளைப் படித்தும் மனம் சோர்ந்திடாமல் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறேன். இம்மாநாடு நடத்துபவர்களும் நிச்சயமாக அப்படியான இடையூறுகளை சந்திப்பார்கள் என்பது நானறிந்த உண்மை. மனதில் தொய்வு ஏற்படாமல் பகைமை பாராட்டாது உவகையுடன் செயல்படும் ஆற்றலை பெறுவோமாக.

இங்கே நான் வாழ்ந்து வரும் ஹாங்காங் நாட்டில் பெரும்பான்மை பெற்ற சீன மக்களுடன் வாழ்ந்து வந்தாலும் விரலை விட்டு எண்ணத்தக்க தமிழர்களையெல்லாம் ஒன்று சேர்த்து இரண்டு கண்களைப் போன்று தமிழ்ப் பண்பாட்டுக் கழகமும் உலகத் தமிழர் ஒன்றுமைக் கழகமும் முதன்முதலாக இந்த ஹாங்காங் நாட்டில் 'தமிழ் மணம்' என்ற இரண்டு மாதத்துக்கு ஒரு இதழ் வீதம் வெளியிடுகிறது. இப்பணியினை உலகத் தமிழர் ஒன்றுமைக் கழகம் செய்து வருகிறது. ஆறாவது உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் 'உலக முதல் மொழி தமிழ்' என்ற ஆய்வினை அனுப்பியிருந்தேன். அதனைத் தொடர்ந்தே உலக மொழிகளிலே தமிழ் மொழியின் சொற்கள் சேர்ந்து வாழ்ந்து வருவதையும் ஆராய்ந்து வரும் வேளையில் சீனமொழில் செந்தமிழும் சேர்ந்து வாழ்ந்து அந்த மொழிக்கும் உயிரூட்டிக் கொண்டிருப்பதை இந்த நேரத்தில் விளக்கிட முனைகிறேன்.

ஹாங்காங் என்ற நாடு செஞ்சீன பூமியின் தென்கோடியில் அமைந்துள்ள நாடு. இதை பிரிட்டிஷ் அரசு குத்தகைக்கு எடுத்து தன் நாட்டைப் போன்று கவனமுடன் நடத்தி வருகிறது. 1997ல் குத்தகைக் கால கெடுமுடிந்து சீனாவின் ஆட்சியின் கீழே இந்த நாடு வந்துவிடும். அந்த சீன நாட்டின் தலை நகர் பெய்ஜிங் என்றுதான் விளங்கும். இந்த சீனாவின் தலைநகர் முதலில் நஞ்ஜிங் என்ற இடத்தில் இருந்தது. சீன நாட்டு வரலாறு அறிந்தவர்கள் இதை அறிவர். இந்த நஞ்ஜிங், பெய்ஜிங் என்ற பெயர் நம்முடைய தூய தமிழ்ப் பெயர் என்பது எத்தனை பேர்களுக்குத் தெரியும்? இதோ அதன் விளக்கம் : சிறந்த மண் வளமும் நீர் வளமும் கொண்ட பகுதியாக விளங்கும் இடத்தைப் பெற்ற இடம் நஞ்சை நிலம் என்போம். இந்த நஞ்சை நிலம் வளமிகக் கொண்டு விளைபொருள் பெருகி மக்கள் அதை வாங்கிச் செல்ல வந்து குவிந்தனர். பிற பகுதி மக்களும் இங்கே குடிபெயர்ந்து வந்து குடியேறினர். அதனால் விளை நிலங்களை அழித்து கட்டிடங்கள். கிடங்குகள், களஞ்சியங்கள், மக்களுக்குத் தேவையான மருத்துவ மனைகள், கல்விக் கூடங்கள் அமைத்திட திட்டமிட்டபோது சான்றோர்கள் பலர் கூடி நஞ்சைப் பகுதியில் இவற்றைச் செய்யாமல் புஞ்செய் பகுதியில் கட்டுமான வேலைகளை செய்தால் விளை நிலத்தை அழிவிலிருந்து காப்பாற்றி விடலாம் என்று புஞ்சையில் அவற்றையெல்லாம் அமைத்தனர்.

நஞ்சை மண்ணும் புஞ்சை மண்ணும்தான் இன்றைய மொழி வளர்ச்சியில் நஞ்ஜிங்,

பஞ்ஜிங் என மாறி இந்த புஞ்ஜிங் — பீஜிங் — பீகிங் எனவாகி தற்போது பேய் ஜிங் என மாற்றம் கண்டுள்ளது. இன்று இதுதான் சீனாவின் தலைநகர்.

## சீனத்தில் தமிழ்ச் சொற்கள்

நஞ்சை மண்ணும் சீனாவில் சிறப்புகளைப் பெற்ற இடந்தான். சூலு சுஹாய், குவாங்கோ இதுமாதிரியான இடங்களைக் காணும்போது தஞ்சை மண்ணின் வளமிகுந்த காட்சிகள் நம் கண்ணில் படும். சூலு என்ற இடத்தில் உள்ள ஒரு மலையில் புலிக்கொடி பறந்ததாக வரலாற்றில் அறிய முடிகிறது. அதனால் அவ்விடம் சோழா Choza என்பதிலிருந்து சூலு என்று மாறியுள்ளது. சீன நாட்டில் நான் காலூன்றி நின்றபோது எனக்கென்னமோ எனது தாய்நாட்டில் நிற்பதுபோன்ற உணர்வைப் பெற்றேன். அதற்குக் காரணம் நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் மண்ணில் மஞ்சளும், இஞ்சியும், செங்கரும்பும், தன் சோலைகளை அசைத்து அசைத்து விளையாட்டுக் காட்டியது. காவிரி, வைகை, தென் பண்ணை ஆறுகளைவிட பலவகையில் சிறப்புப் பெற்ற மஞ்சள் நதியும், முத்தாறும் அந்த மண்ணை முத்தமிட்டு செழிப்புச் செய்கிறது. மண் வளத்துடன் சீனமொழிதமிழ் வளத்தையும் அறிந்திட வேண்டும் அல்லவா? இதோ ஒரு உதாரணத்தைத் தருகிறேன். நான் ஒரு அரை நூறு சொற்களை எடுத்து விளக்குகின்றேன்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள சீனமொழிச் சொற்கள் தாய்த் தமிழோடு எத்தனையோ வகைகளில் ஒத்திருப்பதை அல்லது ஒலி அமைப்புகள் பொருள்கள் ஒன்றாய் இருப்பதை அறிக.

| செஞ்சீனம் | செந்தமிழ் |
|---|---|
| 1. அம்பா | அம்மா, மாம்மி |
| 2. பாப்பா | அப்பா |
| 3. அப்பா | தாத்தா |
| 4. நீ | நீ |
| 5. **சைலேவா** | தம்பி, சிறுவன் (செயல்லவா) |
| 6. ச்சாய் | சேய், குழந்தை |
| 7. ஙோ | ஞான், யான், நான் |
| 8. கோ | பெரியவர், கோ |
| 9. ஈசன் | வைத்தியர், மருத்துவர், உயிர் காப்பவர் |
| 10. தாய்லோக் | தாய்நாடு |
| 11. தை தை | தையல், மனைவி |
| 12. ஓய் | ஓய், வொய், (ஹலோ) |
| 13. பங்கய்யா | பங்காளி, நண்பன் |
| 14. தாய்லோவா (தாயல்லவா) | சகோதர, உடன்பிறப்பு அண்ணன் |
| 15. வா, வாய் | மொழி |
| 16. வாயி | வழி, வாயில் இடம் |
| 17. தங் | தங்கு, தஞ்சம், பொறு |
| 18. தாக்கா | தாக்குதல் தாக்கு |
| 19. லாக்கா | மிளகாய் உறைப்பு (மி)ளகா(ய்) |
| 20. பொ(த்தகம்) | புத்தகம், நூல் |
| 21. பாஃயா | விரைவு, துரிதம், பாய்ந்துவா |
| 22. பை | பைய, ஊனமுள்ள |
| 23. காவு | காப்பாற்றுவோம் |
| 24. ஹோமா | சுகமா, நலமா |
| 25. தின்பான் | சாப்பிடுமிடம் |
| 26. யன் | பையன், ஆள், நபர் |
| 27. சொ(ன்)ங் | சொன்னவை எழுதுதல் |
| 28. செய் | செய், உருவாக்கு, எழுது |
| 29. செய்சொன்ங் | எழுதிய மடல், சொன்ன செய்திகள் |
| 30. மன்கீன் | மனுக்கள், ஆவணம் |
| 31. லேங்கா | இலங்குகின்ற, அழகு, எழில் |
| 32. மாவ்(மியாவ்) | பூனை |
| 33. காயி(ே)காயி | கோழி |
| 34. ங்கண் | **கண்** |
| 35. அம்பலம் | **பொது,** எல்லாம்,அம்பலம் |
| 36. இ(ரண்டு) | இரண்டு |
| 37. ஹோய் | போய், திற,போகவிடு |
| 38. சான் | தடு, மூடு, சாற்று |
| 39. ஃபுங் | பூங்காற்று |
| 40. தாஃபுங் | புயற்காற்று |
| 41. சவுகான் | சவக்காரம், சலவைக்கட்டி |
| 42. ஆந்தி | அந்தி, மாலை |
| 43. ஹாங்க | வாங்க, நடவுங்கள் |
| 44. மசி | மை |
| 45. பிம்பின் | பின்னால், பின்புறம் |
| 46. கூலை | குழல், கூடு, குழாய் |

| | |
|---|---|
| *47. ஃபோச்சோ* | *புகைச்சல், தீ* |
| *48. வந்தோ* | *வந்துவிட்டார், கண்டுவிட்டேன்* |
| *49. தக்* | *தகும்* |
| *50. ஹோய் ஊய்* | *கூட்டம்* |

*குறிப்பு: அடைப்புக்குள் உள்ள சொற்கள் உதாரண விளக்கம் என்பதை அறிந்து கொள்ளவும். இதைப் போன்று சில நூறு வார்த்தைகளைக் காட்ட முடியும். உயிர் என்பது கண்ணுக்குத் தெரியாது.*

*அது அசையும் இரையும் ஓசையில்தான் உயிரைக் காண முடியும் என்பதுபோல் உலக மொழிகள் ஒவ்வொன்றிலும் உயிராக விளங்குவது தமிழ். இதை நான் ஒரு தமிழன் என்பதனால் மிகைப்படுத்திக் கூறவில்லை. மக்கள் விளங்கிட வேண்டி அட்டவணையாகத் தந்தேன்.*

**தாத்தாரியன்**

*தமிழன் எப்படி ஆரிய மாயையை எதிர்த்துப் போராடியுள்ளானோ அப்படியே சீனர்களும் ஆரியமாயையை எதிர்த்துப் போராடியுள்ளனர். டாட்டாரியன்தான் தாத்தாரியனாகி, தாத்தாச்சாரியாகவும் மாறி தமிழனுக்குப் புரியாத மொழிகளைப் பேசி புதுமொழியுடன் புதுமையான குழப்பத்தையும் உண்டு பண்ணியுள்ளனர் : மொழியின் பிரிவுகள் இதோ பாருங்கள்: சீன மொழிப் பிரிவு, மெண்டரீன், கென்டனீஸ், ஹொக்னைன், சாங்காய்னீஸ். இதில் சில உட்பிரிவுகளும் உள்ளன. உலக மொழிகள் ஏராளம். ஆங்கிலம் என்ற மொழியோ உலக மொழிகளிலிருந்து 50 மொழியின் கலவை என்பதை யாரும் மறுக்க முடியாது. சீனமொழியில் தமிழ் உயிராகி சீன மொழி பயிராகியுள்ளது.*

*சீன மொழியிலிருந்து எண்ணிலடங்கா சொற்களை வட மொழியில் புகுத்தியுள்ளனர். ஆகவே, தமிழ் மொழியில் திருத்தம் செய்ய முன்வருபவர்கள் இனியாகிலும் தமிழில் பிற மொழிச் சொற்கள் கலக்கவில்லை. உலகமொழிக்கெல்லாம் தமிழே உயிராக உள்ளது என்பதை உணர்ந்து வளரும் இளைய தலைமுறை தாய்மொழியை விரும்பி படிக்க என்ன செய்யலாம் என்ற வகைதனை அறிய வேண்டும்.*

●

# கல்லும் தமிழ் இசை பாடும்!

**அரச்சலூர் இசைக் கல்வெட்டு**

1

| | | | | |
|---|---|---|---|---|
| த | தை | தா | தை | த |
| தை | தா | தே | தா | தை |
| தா | தே | தை | தே | தா |
| தை | தா | தே | தா | தை |
| த | தை | தா | தை | த |

2

| | | | | |
|---|---|---|---|---|
| கை | த | தை | த | கை |
| த | தை | த | தை | த |
| தை | த | தை | த | தை |
| த | தை | த | தை | த |
| கை | த | தை | த | கை |

இசைப் புதிர் இவை; நுட்பம் தரும் இசை அமைப்புள்ளவை இவை. மேலே கண்ட கல்வெட்டுகளையும், நேர்நேராகப் படித்தாலும் பக்கவாட்டில் படித்தாலும் ஒரே மாதிரி வரும். படித்துப் பாருங்கள்! பாடிப்பாருங்கள்! இசை பிறக்கிறது! இன்பம் பிறக்கிறது!

தமிழிசை பிறந்த கதை இது! இது மட்டுமல்ல; பாடலும் ஆடலும் — ஆடலும் பாடலும் இப்படித்தான் பிறப்பெடுத்தன. பரத நாட்டியம் இவ்வாறே பாரதத்தில் பிறந்து — வளர்ந்து உலகில் பரவியது.

**தொகுப்பு - இர. ந. வீரப்பன்**

## தமிழ்க் கல்வெட்டு புதிர்

*தமிழ்க் கல்வெட்டு புதிர்? 17ம் நூற்றாண்டு தமிழகம் பழங்காலத்திலிருந்தே புதிர் முறைக் கணக்கு தமிழ் (எழுத்து) எண்களில் இருந்தது. குமரி மாவட்டக் கல்வெட்டு இது. ஒன்று முதல் ஒன்பது உள்ள ஒன்பது சதுரத்தில் ஒன்பது எண் கள் உள்ளன. அவை 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9.*

தமிழ்க் கல்வெட்டு இப்படி உண்டு

| | | |
|---|---|---|
| 4 | 9 | 2 |
| 3 | 5 | 7 |
| 8 | 1 | 6 |

| | | |
|---|---|---|
| ச | கூ | உ |
| ங | ரு | எ |
| அ | க | சு |

**இதன் பொருள் இவ்வாறு ஆகும்: இவ்வெண்களைக் குறுக்காகவோ, நெடுக்காகவோ மூலைவட்டமாகவே கூட்டினால் 15 தான் வரும். கூடவில்லை குறையவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இதுபோல் அறிவியல் பூர்வமான பல தமிழ்க் கணக்குகள் உள்ளன. பல காலம் வாழ்கின்றன.**

# வட எழுத்து உருவாக்கப்பட்ட வரலாறு

தமிழ் வரி வடிவம் வடசொல் ஒலி வடிவமாக்கப்பட்டது. வடக்கே வாழ்ந்த தமிழர் திராவிடர்க்குத் தென்மொழியான தமிழைப் பேசவும், அதுபோல் எழுதவும், தொன்மொழி யான தமிழ் வரிவடிவங்களையே சிவஞான முனிவர் (கி.பி. 1785) காலத்தில் 'வடசொல் எழுத்துக்கள் ஐந்து', தமிழ்நெடுங்கணக்கு அடிப்படையில் உருவாக்கப் பட்டன. இவை—

**ஜ ஷ ஸ ஹ க்ஷ.** ஆகிய ஐந்தும் இவ்வாறு 'ஈரெழுத்து' ஓரெழுத்தாக ஆக்கப்பட்டது. உயிரும் மெய்யும் உயிர்க் குறியீடுகளாக, தமிழ் நெடுங்கணக்காகவே ஏற்கப்பட்டன. அகத்தியர் காலத்தில் ஆரம்பித்து, தொல்காப்பியர் உறுதி செய்து, சிவஞானமுனிவர் விரிவாக்கி, வீர மாமுனிவர் (கி.பி.1890) காலத்தில் முழுவுருவம் பெற்றுது இது. குளிரும், வட மொழி ஆதிக்கச் சூழலும் கொண்ட வடபுல பாரதத்தில் தமி ழைப் பரப்பிய சூழல் இது. வட எழுத்து தமிழே வடமொழி வரிவடிவு ஆகியது.

தமிழ் ஒலியாலும், எழுத்தாலும் வடசொல் கலப்பின்றி இயங்கும். தனித்தமிழ் மொழியாக

| வடஎழுத்து | தமிழ் வடிவம் | திருத்த மாற்றம் | ஆங்கில ஒலி விளக்கம் | மெய்கள் |
|---|---|---|---|---|
| ஜ | ஐ ⇒ | உ⇒உ | JA ச | ஜ் |
| ஷ | உ + டி = | உடி | SHA 'ழ' ஒலி | ஷ் |
| ஸ | ள + ல = | ஸ | SHA ச ஒலி | ஸ் |
| ஹ | வ+ ற = | உற | HA அ–ஆ ஒலி | ஹ் |
| க்ஷ | ⇓ க்ஷ+ டி= | சஷ | TCHA ச,ச்ச ஒலி | க்ஷ் |
| தனிக்குறியீடு உகரம் ௗ ஊகாரம் ூ | அல்லது ⇑ க + உ + டி = | வடமொழி ஜு Ju | ஒலிக்கு வரிவடிவு ஜூ Joo | |

தனித்தியங்கும் வழக்கு மரபாக இயங்குவது தமிழின் தொன்மை. வடசொற்கலப்புடன் பலுக்குவதும், எழுதுவதும் ஆரியமரபு. தெற்கிலும் வடக்கிலும் தட்பவெப்ப நிலை மாறும்போது தமிழைப் பலுக்கவே இயற்கையாக வடசொல்வந்து வழக்கில் வாழ்வது இயல்பு.

●

ஸ்ரீ = ட + ரீ + ஶ = ஸ்ரீ

உ என்னும் தமிழ் ஒலிக் குறியீடு — தமி ழுயிர் எழுத்தே தமிழர்க்கு உயிர் என்பதைக் குறிப்பது உ இதுவே தொன்று தொட்ட வழக்கு.

# பசுபிக் பிராந்தியத்தில் தமிழ் மொழியின் நிலை என்ன? ஓர் ஆய்வு

திருமதி கலையரசி சின்னையா பி.ஏ.(டிளே.).எம்.ஏ.

## முன்னுரை

பெரும்பாலான இந்திய இலங்கைத் தமிழர்கள் தங்கள் தாய்நாட்டில் இருந்து வெளியேறி உலகின் பலநாடுகளிலும் குடியேறி வாழ்கின்றனர். இரு காலப்பகுதிகளில் இக் குடியேற்றம் அதிகளவில் நடந்துள்ளது. முதலாவதாக 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், இந்திய உபகண்டத்தில் இருந்து பலர் இன்னொரு நாட்டிலே குடியேறும சந்தர்ப்பம் கிடைத்தது. அதனால் குடியேறிய நாட்டினரின் தாக்கங் களுக்கு உட்படாது தங்கள் மொழியைப் பேசி, தங்கள் பண்பாட்டைப் பேணுவதற்கான சூழலை உருவாக்கி வாழ அவர்களால் முடிந்தது. காலப்போக்கில் அரசு ஆதரவு, சூழல் என்பன சாதகமாக அமைந்தவிடத்து தமிழ்மொழி இந்த நாடுகளில் ஒரு நிலையான இடத்தைப் பெற்று வளர்ச்சியடைந்து வரக்கூடியதாக இருந்தது.

ஆங்கிலேயர்களின் குடியேற்ற நாடுகளிலே கூலியாட்களாகவும், கொத்தடிமைகளாகவும் குடியேற்றப்பட்டபொழுது அவர்களிலே தென் இந்தியத் தமிழர்களும் அடங்கினர். சிங்கப்பூர், மலேசியா, பீஜி, மொறீசியஸ், தென்னாப் பிரிக்கா ஆகிய நாடுகளிலே முதலிற் குடியேறிய தமிழர்கள் இவ்வகையினரே. இவர்களைத் தொடர்ந்து இந்த நாடுகளின் அபிவிருத்தி தொடர்பாக ஏற்பட்ட வேலைவாய்ப்புக்களைப் பயன்படுத்தி இந்திய இலங்கைத் தமிழர் பலரும் இந்த நாடுகளிலே குடியேறினர். இரண்டாவதாக இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து கல்வி, பொருளாதாரம், அரசியல் ஆகிய காரணங்களை முன்வைத்துக் கல்விகற்ற மத்தியதரவர்க்கத்தினர் பலர் அபிவிருத்தியடைந்த நாடுகளிலே குடியேறத் தொடங்கினர். பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, ஜேர்மெனி, பிரான்சு, சுவிட்சலாந்து ஆகிய நாடுகளிலே குடியேறிய தமிழர்கள் இவ் வகையில் அடங்குவர்.

சிங்கப்பூர், மலேசியா, பீஜி முதலான நாடுகளில், இந்நாடுகளின் அபிவிருத்திக்காக முதலிலே தமிழர்கள் குடியேற்றப்பட்ட பொழுது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சார்ந்தவர்கள் ஒன்றாக இன்று சிங்கப்பூரில் தமிழ் உத்தியோக மொழிகளில் ஒன்றாக இருப்பதுடன் உயர்நிலைப் பள்ளி வரை இரண்டாம் மொழியாகவும் கற்பிக்கப்படுகின்றது. மலேசியாவில் தொடக்கநிலைப் பள்ளிகளிலே தமிழ் இரண்டாம் மொழியாக இடம் பெற்றுள்ளது. இரு நாடுகளிலும் தொடர்பு சாதனங்களிலே தமிழின் ஆட்சி குறிப்பிடத்தக்களவில் உள்ளது. தமிழரது பண்பாட்டை விளக்கத்தக்க வகையிலே தமிழ்ப் பண்டிகைகள், விழாக்கள், கோவில் திருவிழாக்கள் என்பன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. தீபாவளியும் தைப்பூசமும் அரசாங்க விடுமுறை நாட்களாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. பீஜியிலும் 'சங்கம்' என்ற இயக்கம் உருவாகி சங்கம் பள்ளிகள் நிறுவப்பட்டும், சங்கம் கோவில்கள் கட்டப்பட்டும் தமிழ்மொழியையும் பண்பாட்டையும் பேணுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சங்கம் பள்ளிகளிலே தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது. அரசாங்க ஆசிரியர் பயிற்சிப்பள்ளியில் 1986ஆம் ஆண்டிலிருந்து தமிழ் இரண்டாம் மொழிப் பாடமாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. எட்டாம் வகுப்பு பீஜி அரசாங்கத்

தேர்விலே தமிழை ஒரு பாடமாக இடம் பெறச் செய்யும் முயற்சியும் தற்போது நடைபெறு கின்றது.

இரண்டாவது காலப்பகுதியில் அபிவிருத்தியடைந்த நாடுகளிலே குடியேறிய தமிழர்களைப் பல வழிகளிலும் மேம்படுத்தும் நோக்கத்தை முக்கியமாகக் கொண்டு குடியேறியவர்கள். அதனால், தாங்கள் குடியேறியுள்ள நாடுகளின் புதிய சூழலுக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளல், புதிய நாட்டிலே தங்களை நிலைப்படுத்திக் கொள்வதற்கு அடிப்படையான தொழிலைத் தேடிக் கொள்ளல், தாம் வாழும் புதிய சமூகத்தினருடன் ஒத்து வாழக்தக்க வகையிலே தம்மையும் வளர்த்துத் தமது தலைமுறையினரையும் வளர்த்தெடுத்தல் என்பனவற்றில் இவர்கள் முக்கிய கவனம் செலுத்துகின்றனர்.

அவற்றிற்கு அப்பால் தமிழ்மொழியையும் தமிழ்ப்பண்பாட்டையும் பேணிப்பாதுகாப்பது. தமது தலைமுறையினரிடம் தமிழ் மொழி அறிவையும் தமிழ்ப் பண்பாட்டு உணர்வையும் ஊட்டுவது இவர்களுக்குப் பிரச்சனைக்குரிய விஷயமாக உள்ளது. இந்நிலையில் அபிவிருத்தியடைந்த நாடுகளிலே குடியேறி உள்ள தமிழர்களின் அடுத்து வரும் தலைமுறை யினரின் நிலை என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

## இன அடையாளமும், பண்பாடும் மொழியும்

ஒரு இனத்தின் அடையாளம் (Identity) அவ்வினத்தின் மொழியினை அடிப்படை யாகக் கொண்டுள்ளது. "மொழி ஒரு தொடர்பு சாதனக் கருவி மட்டுமல்ல, அது ஒரு இனத்தின் அடையாளச் சின்னமும் ஆகும். என்பது சமூக மொழியியல் ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். "Loss of Language entailed Loss of Identity" என்ற கருத்தினை 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜேர்மன் தத்துவஞானி Herder விளக்கியுள்ளார் என்பர். ஒரு இனத்தின் பண்பாட்டு அடிப்படையிற் பார்க்கையிலும் மொழி தான் முக்கிய இடம் பெறுகின்றது. மொழிப் பண்பாட்டின் உணர்வு பூர்வமான பகுதியாக இருப்பதுடன் அப் பண்பாட்டினை விளக்குகின்ற முக்கிய ஊடகம் ஆகவும் அமைகின்றது. எனவே அபிவிருத்தியடைந்த உலக நாடுகள் பலவற்றில் இன்று குடியேறி உள்ள தமிழர்களின் வருங்காலத் தலைமுறை யினர் தமிழர் என்ற அடையாளத்துடன் இருக்க வேண்டுமானால் அவர்களைத் தமிழ் மொழி அறிவுள்ளவர் களாக, தமிழ் பேச, எழுத, வாசிக்கத் தெரிந்தவர்களாக நாம் வளர்க்க வேண்டும். இது சாத்தியமற்றது, தேவையற்றது என்று சொல்லி பிரச்சினைகளில் இருந்து நாம் ஒதுங்கி வாழக்கூடாது.

சிறந்த இலக்கிய வளம் படைத்த ஒரு மொழியை அந்த மொழித் தொடர்புடைய ஒரு பண்பாட்டைப் பல ஆண்டுகளாகப் போற்றி வரும் நாம் பிரச்சினைகளைத் தெளிவாக விளங்கி அவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழி வகைகளைத் தேட வேண்டும்.

இந்நோக்கில் நியூசிலாந்துத் தமிழர்களின் மொழிநிலை, மொழிப்பேணல் (Language Maintenance) தொடர்பான அவர்களின் செயற்பாடுகள், பிரச்சினைகள் என்பனவற்றை விளக்கி, அவற்றின் அடிப்படையில் எமது வருங்காலத் தலைமுறையினரிடையே தமிழ் மொழி ஆற்றலை வளர்ப்பதற்கு நாம் செய்ய வேண்டிய சில வழிமுறைகளைக் கூறுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## நியூசிலாந்துத் தமிழரும் தமிழ் மொழியும்

நியூசிலாந்திலே தமிழர்களின் குடியேற்றம் அறுபதுகளில் தொடங்கி எண்பதுகளில் அதிகரித்தது. இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பீஜி முதலான நாடுகளில் இருந்து தமிழர்கள் நியூசிலாந்தின் பல பகுதிகளிலும் குடியேறியுள்ளனர். இவர்களின் தொகை தற்போது ஐயாயிரத்துக்கு மேற்படாது.

நியூசிலாந்தின் மொத்தச் சனத்தொகையில் (3,373,929) இது மிக மிகச் சிறு தொகையாகும். இக்கட்டுரையின் முற்பகுதியிலே குறிப்பிட்டது போல் நியூசிலாந்திலே குடியேறிய தமிழர்கள் கல்வி, பொருளாதாரம், அரசியல் ஆகிய காரணங்களை முன்வைத்துத் தம்மை மேம்படுத்தும் நோக்கில் குடியேறியவர்களே.

இந்த வழியிலே தொடர்ந்து தமிழர்கள் நியூசிலாந்திலே குடியேறுவதற்குச் சாதகமான சூழல் இருக்கின்றது எனத் தற்பொழுது கூற முடியாதுள்ளது. இதனாலே தமிழர்களின் சனத்கொகை நியூசிலாந்தில், குடியேற்றத்தாற் பெருகுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு என்றே சொல்லலாம்.

## முதலாவது தலைமுறையினரின் முயற்சிகள்

நியூசிலாந்திலே தமிழர்களின் குடியேற்றம் மிக அண்மைக் காலத்தில் ஏற்பட்ட தொன்றாகையால் பெரும்பாலான தமிழர்கள் முதலாவது தலைமுறை நியூசிலாந்தினராகவே உள்ளனர். தாய்நாட்டுத் தொடர்பும், தமிழ் மொழிப் பற்றும் பண்பாட்டு உணர்வும் நீங்காத நிலையில் முதலாவது தலைமுறை நியூசிலாந்துத் தமிழரிடையே பெரும்பாலும் தமிழ்மொழி பேணப்பட்டும் போற்றப்பட்டும் வருகின்றது. இவர்கள் தமக்கிருக்கும் தமிழ் மொழி ஈடுபாட்டை வெளிப்படுத்தவும், தமது வருங்காலத் தலைமுறையினரிடம் தமிழ்மொழி அறிவை வளர்க்கவும், தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பை உணர்த்தவும் என, சில முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

தமிழர்கள் அதிகமாக வாழும் வெலிங்டன், ஆக்லாந்து, ஹமில்ட்டன் ஆகிய முக்கிய நகரங்களிலே தமிழ்ச் சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. தமிழர் பண்பாட்டுடன் தொடர்பான விழாக்களை நடத்தியும் தமிழ்மொழியைக் கற்பித்தும் தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ்மொழியையும் பேணும் முயற்சியில் இச் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. 1983ஆம் ஆண்டில் வெலிங்டனில் அமைக்கப் பட்ட 'வெலிங்டன் தமிழ்ச்சங்கம்' வருடத்தில் நான்கு நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாகக் கொண்டாடி வருவதும், 1988ஆம் ஆண்டிலிருந்து வாரமொருமுறை தமிழ் மொழி வகுப்பினை நடத்திவருவதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

தமிழ்ச் சங்க நடவடிக்கைகளுக்கு அப்பால், மொழி, பண்பாட்டுப் பேணலுக்கு உதவத் தக்க வேறு சில வழிகளிலும் முதலாவது தலைமுறையினர் முயன்று வருகின்றனர். சமய அடிப்படையில் ஒன்று கூடி வழிபாடு செய்தல், தனிப்பட்ட கலைஞர்களை ஊக்குவித்து அவர்கள் மூலமாக இசை நடன வகுப்புகளை நடத்துவித்தல் வானொலியில் தமிழ்மொழி ஒலிப்பரப்பினை இடம்பெறச்செய்தல் என்பன அவற்றுள் முக்கியமானவை.

முதலாவது தலைமுறையின்ரின் இத்தகைய முயற்சிகள் தமிழ்மொழி உணர்வையும், தமிழர்களது பாரம்பரியக் கலைகள் பற்றிய அறிவையும், அவற்றைப் பயில வேண்டும் என்ற ஆர்வத்தையும் எமது இளம்தலைமுறையினரிடையே சிறிதளவாவது வளர்க்கின்றன என்பதிலே சந்தேகமில்லை. எனினும், இத்தகைய முயற்சிகள் மூலம் முதலாவது தலைமுறையினர் பலர் தம்மைத் தாமே திருப்திப்படுத்திக் கொள்கின்றனர் என்று நிச்சயமாகக் கூறலாம். தாம் அனுபவித்த ஒன்றை முற்றாக இழக்க விரும்பாமல் புதிய சூழலிலும் அவற்றை ஓரளவு நடைமுறைப் படுத்தி திருப்தி அடைகின்றவர்கள் தமது இளந்தலைமுறையினரிடம் அவை சென்றடைகின்றவனா என்பதிலே கவனம் செலுத்துவதாகவோ, சென்றடைய வேண்டும் என்ற உறுதியுடன் செயற்படுவதாகவோ தெரியவில்லை.

## இரண்டாம் தலைமுறையினரின் நிலை

இரண்டாம் தலைமுறையினர் என்ற வகையில் இங்கு நோக்கப்படுபவர்கள் முதலாவது தலைமுறை நியூசிலாந்துத் தமிழர்களின் பிள்ளைகள் பெற்றோர்களின் வளர்ப்பினாலும் முதலாவது தலைமுறையினரின் மொழி பண்பாட்டுப் பேணல் முயற்சிகளினாலும், பல இன மக்கள் (Ethnic Groups) வாழ்கின்ற நியூசிலாந்திலே தாமும் தமது அடையாளத்தைக் காண விரும்புவதினாலும் தமக்கென்று ஒரு மொழி ஒரு பண்பாடு இருக்கின்றது என்ற மேலோட்டமான உணர்வுள்ளவர்களாக இரண்டாம் தலைமுறையினர் இருக்கின்றார்கள். எனினும் நியூசிலாந்துச் சூழலில் இவர்களின் வளர்ச்சியின் எல்லாப் படிகளிலும் ஆங்கிலம் முதலிடம் பெறுவதும், ஆங்கில மொழி அறிவுடன் இவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையை வசதியாகக் கொண்டு நடத்தக் கூடியதாக இருப்பதும், ஆங்கிலத்துக்கு மேலாக தமிழ் மொழியைக் கற்க வேண்டும், தமிழ் மொழியைப் பேச வேண்டும் என்ற ஆர்வத்தை இவர்களிடம் வளர்க்கத் தடையாக உள்ளன. இவர்கள் தமிழ்மொழி அறிவைப் பெறவும், தமிழ்மொழியைப் பேசும் ஆற்றலை வளர்க்கவும் உதவும் இடங்களாக அமைபவை வீடு, தமிழ்ச் சமூகத்தினர் ஒன்று கூடும் இடங்கள், தமிழ் வகுப்பு என்பனவே. இவ்விடங்களில் இரண்டாம் தலைமைமுறையினர் தமிழ் மொழியை எந்தளவிலே பயன் படுத்துகின்றனர் என்பதனை அவதானித்துப் பார்த்ததில் பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன.

■ இரண்டாம் தலைமுறையினரில் 75

சதவிகிதத்தினர் வீட்டிலே தமிழ் பேசுவதில்லை. பெற்றோர்கள் தமிழில் பேசினாலும் பிள்ளைகள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே பதிலளிக்கின்றனர்.

■ 15 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் தமக்குள் உரையாடும்பொழுது ஆங்கிலத்தையே பயன்படுத்துகின்றனர். தமிழ்மொழியைப் பேசும் ஆற்றல் உள்ள பிள்ளைகள் கூட இப்படியான சூழ்நிலையிலே தமிழ் மொழியைப் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுகின்றனர்.

■ 15 வயதுக்கும 25 வயதுக்கும் இடைப் பட்டவர்களில் 50 சதவிகிதத்தினர் தமிழ் மொழியை நன்கு பேசக்கூடியவர்களாக உள்ளனர். தமிழ்ச் சூழலில் இருந்து 10, 12 வயதிலே தமிழ் அறிவுடையவர்களாக இங்கு வந்தமையாலேதான் இவ்வாற்றல் இவர்களுக்கு இருக்கின்றது. இன்றும் இவர்களின் உரையாடலிலே தமிழ் கணிசமான இடத்தை எடுக்கின்றது. ஆனால் தமிழ்மொழியை நன்கு பேசத் தெரியாத தங்கள் வயதினருடன் ஒன்றாகக் கூடுமிடங்களில் இவர்களின் உரை யாடல் மொழி ஆங்கிலமாக மாறுகின்றது. இப்படியான சந்தர்ப்பத்திலே தமிழ்மொழி பகிடி (Joke) விடுவதற்குரிய ஒன்றாகப் பயன்படுத்தப் படுவதையும் அவதானிக்க முடிந்தது.

■ பொதுவாக இரண்டாம் தலைமுறை யினருள் மொழியாற்றல் உள்ளவர்கள் — தமிழ் மொழியிலே பேச, வாசிக்க, எழுதத் தெரிந்தவர்கள் 10 சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளனர். தம்மிடம் இருக்கும் ஆற்றலை வளர்க்கவும், பயன்படுத்தவும் முடியாத நிலையில் இவர்களுக்கும் துணிவு குறைந்து வருகின்றது.

முன்னர் குறிப்பிட்டது போல ஆங்கிலம் நியூசிலாந்தில் வாழும் இரண்டாம் தலைமுறையினரிடையே எல்லாவிதத்திலும் முதலிடம் பெறும் மொழியாக இருப்பதனால், தமக்குப் பழக்கப்பட்ட, நன்கு தெரிந்த மொழிக்கு இவர்கள் முக்கியத்துவம் கொடுப்பது இயல்பே. இது தவிர்க்க முடியாத ஒன்றாகும். எனினும் இந்த மனப்பாங்கு இப்படியே தொடருமானால் எங்கள் இரண்டாம் தலைமுறையினர் முற்றாக மொழி மாற்றத்திற்கு (Language Shift) உட்படும் நிலை விரைவில் வந்து விடலாம். அதனால் இரண்டாம் தலைமுறையினரிடையே மொழிப் பேணலின் இன்றியமையாமையினை ஆழமாக உணர வைத்து, இரண்டாவது மொழியாகத் தமிழ்மொழி ஆற்றல் உள்ளவர்களாக இவர்களை உருவாக்குவதற்கான வழிவகை களில் நாம் உறுதியுடன் செயற்பட வேண்டும்.

## மொழிப் பேணலுக்குச் சாதகமாக அமையும் காரணிகள்

நியூசிலாந்திலே குடியேறியுள்ள தமிழர்களாகிய எங்களுக்கு எமது மொழியைப் பேணி வளர்ப்பதற்குச் சாதகமாக அமைவன என்ன என்று சிந்தித்துப் பார்க்கையில் எமது வலுவிழந்த நிலை தெளிவாகும். ஒரு சமூகத்தினரின் மொழிப் பேணலுக்குச் சாதகமாக அமையும் காரணிகளில் அச் சமூகத்தின் சனத்தொகை முக்கியமான தொன்றாகும். இது எமக்கு இல்லை. அதனால் தமிழ்மொழி வளர்ச்சிக்கான சூழலை உருவாக்கவோ, தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தேவையான நெடுங்கால நடவடிக்கைகளில் துணிந்து இறங்கவோ எம்மால் முடியாது உள்ளது.

அடுத்து தாய்நாட்டுத் தொடர்பு குறைந்தவர்களாக நாம் ஒதுக்கப்பட்டிருப்பதும் —அதாவது, அரசியல், பொருளாதார காரணங்களினால் நாம் அடிக்கடி தாய்நாட்டுக்குச் செல்லவோ அல்லது தாய் நாட்டில் இருப்பவர்கள் இங்கு வரவோ முடியாத நிலையில் ஒதுக்கப்பட்டிருப்பதும் மொழிப் பேணலில் எம்மை வலுவிழக்கச் செய்கின்றது. தாய்நாட்டுடன் எமக்கு நெருக்கமான தொடர்பு இருக்குமானால் எங்கள் இளந்தலைமுறையினரிடையே மொழி உணர்வையும் மொழியாற்றலையும் நாம் வளர்த்துக் கொள்ளலாம். சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் தமிழ்மொழி பேணிப் போற்றப்படுவதற்குத் தாய்நாட்டுத் தொடர்பும் ஒரு முக்கிய காரணம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சனத்தொகை குறைந்த நிலையில், தாய்நாட்டுத் தொடர்பில் இருந்தும் ஒதுக்கப்பட்டவர்களாக இங்கு வாழும் நாங்கள் தமிழ் மொழி பேணலுக்குத் தேவையான சில நடவடிக்கைகளை எமது அண்மைநாட்டுத் தமிழர்களுடன் சேர்ந்து பிராந்திய அடிப் படையிலே செயற்படுத்துவது அவசியமானது.

(1992 7வது சிட்னி மாநாட்டில் வழங்கப்பட்டது இது)

# இந்த எண்கள் தமிழ் எண்களே!

அரசு ஓர் ஆணை பிறப்பித்துள்ளது. வாகன உரிமையாளர்கள் விரும்பினால் ஊர்திகளில் தமிழிலும் பதிவு எண்கள் எழுதிப் பொருத்திக் கொள்ளலாம்.

தாங்கள் பயன்படுத்தும் ஊர்திகளில் எழுத்தையும் எண்களையும் தமிழில் எழுத வேண்டுமென்று பலர் விரும்பினர். இது தொடர்பாக போக்குவரத்து ஆணையரின் குறிப்புரை கோரப்பட்டது. அவரது கருத்துரு பரிசீலிக்கப்பட்டு ஏற்கப்பட்டு, செயல்படுத்துவது என முடிவு எடுக்கப்பட்டது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. அரசு தமது ஆணையில் எண்களைப் பொறுத்தவரையில் உலக எண்களையே (Arabic Numbers) பயன் படுத்தலாம் என்று அறிவித்துள்ளது. அப்படி யானால் தமிழ் எண்களை தமிழ் நாட்டில் பயன்படுத்தக் கூடாதா என்று தமிழர்கள் கேட்பதில் தவறில்லையே!

இப்போது நடைமுறையில் இருக்கும 1, 2, 3 என்ற இந்த எண்கள் அராபிய எண்கள் என்று அரசு கூறியுள்ளது. மற்றும் பலர் இதனை ஆங்கில எண்கள் என்று எண்ணிக்கொண்டும் எழுதிக் கொண்டும் இருக்கிறார்கள். இவை அராபிய எண்களா? ஆங்கில எண்களா? என்ற வேறுபாடு இருந்தாலும் 'தமிழ் எண்கள் இல்லை' என்பதில் மட்டும் உறுதியாக இருக்கிறார்கள்.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப
இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

—என்றார திருவள்ளுவர். உயிர்களுக்கு எண்ணும், எழுத்தும் இரண்டு கண்களாகும். "அதில் ஒரு கண்ணாகிய தமிழ் எழுத்துக்களை எடுத்துக் கொண்டோம். ஆனால் மற்றொரு கண்ணாகிய தமிழ் எண்களை விட்டு விட்டோம். அவற்றைப் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?..." என்று குமரி அனந்தன் சட்டப் பேரவையிலேயே கேட்டார்.

க,உ என்பன போன்ற எண்களையே தமிழ் எண்கள் என்றும், 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 என்ற எண்கள் தமிழ் இல்லை என்றும் பேசினார். யாரும் இதை மறுக்கவில்லை.

தமிழ் எண்கள் மீண்டும் புழக்கத்துக்குக் கொண்டு வரப்படுமா? என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் தமிழ்க் குடிமகன், இது குறித்து முதல்வர், கல்வியமைச்சர் ஆகியோருடன் பேசினேன்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை கூட மைல்கற்கள் தமிழில் இருந்துள்ளன. படிப்படியாக கவனிக்கலாம் என்று இருக்கிறோம் என்று இரண்டு ஆண்டுகளுக்கு

முன்பே (4—8—96) ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார்.

அமைச்சர் தந்த இந்தப் பதிலின் பொருள் என்ன? இப்போது உலகமெங்கும் நடைமுறையில் இருக்கும் இந்த எண்கள் தமிழ் எண்கள் இல்லை என்று கூறுவதாகக் கொள்ளலாமா?

மறுக்க வேண்டிய தமிழாசிரியர் கழகம் போன்ற பொறுப்புமிக்க தமிழ் அமைப்புகளும் இப்போது வழக்கில் இருக்கும் எண்கள் தமிழ் எண்கள் இல்லை என்ற நோக்கில் 'தமிழ் எண்களைப் பயன்படுத்த வேண்டும்' என்று தீர்மானங்கள் இயற்றின.

இப்போது தமிழக அரசு தமிழுக்கென்று ஓர் அமைச்சகமும் ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் தமிழ் எண்களைப் பற்றி ஒரு தவறான கருத்து பத்திரிகைகளில் எழுதப்படுகின்றன. தமிழக அரசே இப்போது அறிவித்துள்ளது.

இந்த எண்களைப் பற்றிய கருத்து இப்போதுதான் இப்படி எழுந்துள்ளது என எண்ண வேண்டாம். 1960 ஆம் ஆண்டு மத்தியக் கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்திலும் இந்தப் பிரச்சினை எழுந்துள்ளது.

"இந்தியாவில் கல்வி சம்பந்தமாக உலகத்தில் வழங்கி வரும் எண்களையே பயன்படுத்துவது என்று மத்திய கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது" என்று, "கல்விக்கு அராபிய எண்களே — ஆலோசனைக் குழு முடிவு" என்ற தலைப்பில் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டன.

இது பற்றி புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 'அவை அராபிய எண்கள் அல்ல, தமிழ் எண்களே' என்று தம் இதழாகிய 'குயில்' ஏட்டில் 24.1.1960 அன்று எழுதினார்.

"பெரியாரை என் வீட்டில் கரும்பலகையின் முன் வைத்து இன்றுள்ள 1, 2 தமிழ் எண்களே என்பதை எழுதிக் காட்டி விளக்கினேன். அதை வைத்தே நேரு, 'இந்த எண்கள் இந்தியாவிலிருந்து வெளிநாடு சென்றவைகளே' என்று பொதுவாகக் குறிப்பிட்டதை மறுத்து, 'விடுதலை'யில் அவை தமிழ் எண்களே என்று விரித்தெழுதினார்" எனக் கூறியுள்ளார்.

"ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் வரிவடிவம் எப்படி இருந்தது என்பதை அரசினர் ஆராய்ச்சித் துறையின் சுவடியில் காண்க. கண்டால் இன்றைய 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 ஆகியவை தமிழ் எழுத்துக்களே என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இந்தத் தமிழ் எண்களை இங்கு வணிகத் தொடர்புடைய அராபியர் கொண்டு போயினர். அவர்களிடமிருந்து மேல் நாட்டினர் கற்றுக் கொண்டனர். ஒரு மாற்றமும் செய்யாமல் அவர்கள் அப்படியே எடுத்துக் கொண்டனர். அவர்கட்குக் கிடைத்த அன்றைய உருவம் நாளடைவில் மாற்றத்திற்கும் உள்ளாயிற்று!'' என்று பாரதிதாசன் எழுதினார்.

இதன் பிறகும் இந்த உண்மை உலகம் எங்கும் சென்று சேர வில்லை. ஏன், தமிழ் மக்களுக்கே சென்று சேரவில்லையே! காரணம் என்ன?

தமிழர்களுக்கு வரலாற்று அறிவு இல்லாமை; தமிழறிஞர்களுக்கு தம் மொழி பற்றிய ஆய்வின்மை; தம் பிள்ளையை 'என் குழந்தை' என்று கூறவும் தயக்கம்; யார் என்ன சொன்னால் நமக்கென்ன என்று தலைகுனிந்து செல்லும் தாழ்வு மனப்பான்மை. இதற்கெல்லாம் மேலாக தமிழ்ப் பேராசிரியர்களின் சோம்பல் நிலை.


டாக்டர் மு. வரதராசனார் தம் 'மொழி வரலாறு' என்னும் நூலில் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 என்ற இந்த எண்கள் தமிழ் எண்களே என்பதை கல்வெட்டுத் துணை கொண்டு நிரூபித்துள்ளார்.

அது வருமாறு

"1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என இன்று உலகமெங்கும் எழுதப்படும் எண்கள் அரபி எண்கள் என்று கூறப்படுகின்றன. ஆனால் அரபியர்களுக்கு இந்த எண்களின் பழைய வரலாறு பற்றி ஒன்றும் தெரியவில்லை; அவர்கள் இவற்றை இந்திய எண்கள் என்கிறார்கள். வட நாட்டு அறிஞர்களுக்கும் இவற்றின் தோற்றம் பற்றி ஒன்றும் விளங்கவில்லை. தமிழ்நாட்டின் பழைய எண் வடிவங்களைப் பற்றி இவர்கள் அறியாமல் இருத்தலே இவ்வாறு அனைவரும் தடுமாறுவதற்குக் காரணமாகும். அரபி எண்கள் என்றும், இந்திய எண்கள் என்றும்

கனடா, தூரந்தோவில் கோ.சி. கணேசலிங்கம், பழ. நெடுமாறன், அலன் ஆனந்தன் (1996)





மலேசியா, பினாங்கு பாலத்தில் க.ப. அறவாணர்

இவ்வாறு தடுமாறிக் கூறப்படும் அந்த எண்கள் (1, 2, 3 முதலியவை) பழைய தமிழ் எண்களே என்பது பழந்தமிழ் எண் வடிவங்களை நோக்கின் உணரப்படும்.

இவற்றை நோக்கி எண்ண வல்லார்க்கு 1,2,3 முதலிய எண்களின் எழுத்து வடிவம் தமிழகம் உலகத்திற்கு அளித்த கலையே என்னும் உண்மை புலப்படும்" என்று எழுதிய டாக்டர் மு.வ., கல்வெட்டு ஆதாரத்தையும் வெளியிட்டுள்ளார்.

இந்த எண்களைத் தமிழ் எண்கள் என உலகம் ஏற்றுக் கொண்டாலும் உள்ளூர்த் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளத் தயங்குவதுதான் ஏன் என்று தெரியவில்லை. தமிழில் ஏதேனும் நல்ல கருத்துக்கள் தென்பட்டால் அது அன்னியரிடமிருந்து வந்ததென்று கூறுவதும், ஆங்கிலத்திலிருந்து கிடைத்ததென்று கூறுவதும் நமது மரபாகிப் போனது.

கால்டுவெல் போன்ற மேல்நாட்டு மொழியறிஞர்கள் தமிழினை உயர்தனிச் செம்மொழி (Classical Language) என உலகறிய அறிவித்தபோதும், இந்த நாட்டில் இன்னும் ஏற்றுக் கொள்ளப்பட வில்லையே! தாய்மொழிப் பற்று குறைந்த நாட்டில் தாய்நாட்டுப் பற்று எப்படி ஏற்படும்? பொன் விழா விடுதலையைப் பூரிப்புடன் கொண்டாடி முடித்திருக்கும் இவ்வேளையில் இதனை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த எண்கள் தமிழ் என அறிந்தும் இதன் மாற்று வடிவங்களையே தமிழ் என நினைத்து புழக்கத்துக்கு கொண்டு வர முயல்வது சரியன்று. இது தேவையற்ற வேலை; வேலையற்ற வேலை.

உலகம் ஏற்றுக் கொண்டதை நாமும் உவப்புடன் ஏற்போம். காலங்கள் தோறும் எல்லாமே மாறும். மாறுதல் மட்டுமே மாறாதது என்பது விதி. மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுவதே அறிவுடைமை. மொழிக்கும், சமுதாயத்துக்கும் வளர்ச்சியாகும்.

இந்த எண்கள் தமிழகம் உலகத்துக்கு அளித்துள்ள கொடை. இதனை உலகம் அறியச் செய்ய வேண்டும். முதலில் உள்ளூர்த் தமிழர்கள் உணர வேண்டும். பெற்ற பிள்ளையை அடையாளம் காண மறந்தது பெரிய கொடுமையல்லவா?

# ஏர்முனைத் தமிழாக்கத்திற்கு வேர் வினைச் சொல்

தொகுப்பு : வீரப்பனார்

| வினை | பெயர்சொல் | வினைச்சொல் |
|---|---|---|
| வெல் | வேல், வேலன், வேலவன், வெற்றி | வென்று |
| அழு | அழுகை, அழுதவன் | அழுதான் |
| கல் | கல்வி, கற்றவன், கற்கை | கற்றான் |
| மாள் | மாண்டவன், மாண்டவள் | மாண்டார் |
| மாண் | மாண்பு, மாணவன், மாண்பன், மாட்சி | மாண்பான் |
| துள் | துள்ளல், துள்ளியவன் | துள்ளியது |
| விழு | விழுது, விழுந்தவன் | விழுந்தான் |
| எண் | எண்ணம், எண்ணன் | எண்ணினேன் |
| நட | நடன், நடனம், நடப்பு | நடந்தான் |
| ஆகு | ஆகியவன், ஆகியவள் | ஆகியது |
| இல் | இல்லன், இல்லள் | இல்லை |
| உண் | உண்டவன், உண்டவள் | உண்டேன் (உணவு) |
| ஈ | ஈதல், ஈட்டு, ஈகை | ஈந்தான் |
| அறி | அறிவன், அறிஞன் | அறிந்தாள் |
| ஊது | ஊதல், ஊதி, ஊதை | ஊதினேன் |
| ஏறு | ஏற்றம், ஏற்றவன் | ஏறினேன் |
| ஒண்டு | ஒண்டியவன், ஒண்டியவள் | ஒண்டினான் |
| ஓது | ஓதல், ஓதம், ஓதன் | ஓதினான் |
| காண் | கண்டவன், காட்சி | கண்டாள் |
| கிட | கிடங்கு, கிடப்பு, கிடக்கை | கிடந்தது |
| கொல் | கொலை, கொல்லி, கொல்லை | கொன்றான் |
| சிரி | சிரிப்பு, சிரித்தவன், சிரித்தவள் | சிரித்தேன் |
| செல் | சென்றவன், செல்கை, செலவு | சென்றது |
| சா | செத்தது, செத்தவன், சாவு | செத்தான் |
| தா | தந்தவன், தருதல், தந்தவர் | தந்தான் |
| வா | வருகை, வரவு, வந்தவன் | வந்தாள் |
| போ | போதல், போக்கு, போனவர் | போனேன் |
| திற | திறப்பு, திறவி, திறந்தவர் | திறந்தார் |
| கேள் | கேள்வி, கேட்டல் | கேட்டார் |
| படு | படுக்கை, படுத்தவர் | படுத்தேன் |
| பாடு | பாட்டு, பாடகன், பாடகி | பாடினேன் |
| புகு | புகுப்பு, புக்கான், புகுந்தவர் | புகுந்தது |
| தடு | தடுப்பு, தடை | தடுத்தேன் |
| விடு | விட்டவன், விடுப்பு, விடுதலை | விடுத்தது |
| நகு | நகைப்பு, நகைத்தல், நகைத்தவன் | நகைத்தான் |
| அள் | அள்ளல், அள்ளியவன், அள்ளியவள் | அள்ளினான் |

*சாத்தூர் சேகரன் ஆய்வுகள் :*

# ஆங்கிலமும் பிரஞ்சும் தமிழ்தான்

## லோகநாயகி

'ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன்' என்று உலகின் எந்த மொழியை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்.... எல்லாமே தமிழ்தான்....! என்று திடுக்கிட வைக்கும் ஒரு தகவலைக் கூறுகிறார் மொழியியல் நிபுணரான சாத்தூர் சேகரன்!

நாடுவிட்டு நாடுபோகாத அடிப்படை வார்த்தைகள் என்று ஒவ்வொரு மொழியிலும் உண்டு. அம்மா, அப்பா, கண், காது, மூக்கு முகம் என்று மனிதன் தோன்றியதிலிருந்தே இருக்கும் இப்படிப்பட்ட அடிப்படை வார்த்தைகள் மொத்தம் இருநூற்று நான்கு. இதில் குறைந்தபட்சம் இருபது வார்த்தைகளுக்காவது இரண்டு மொழிகளுக்குள்ளும் ஒற்றுமை இருந்தால் போதும் அந்த இரண்டு மொழிகளும் ஏதாவது ஒரு காலத்தில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும் என்கிறார்கள் மொழி அறிஞர்கள்!

"இருபது வார்த்தைகள் என்ன... உலக மொழிகள் ஒவ்வொன்றிலும், நூற்றுக்கும் மேற்பட்ட வார்த்தைகளில் ஒற்றுமையைக் காட்ட என்னால் முடியும்'' என்று தீர்மானமாகக் கூறுகிறார் சாத்தூர் சேகரன்.

இப்படி இவர் கூறுவதற்கு பூகோளரீதியான ஒரு காரணத்தையும் முன் வைக்கிறார்.

"மனிதர்கள் எல்லோரும் குமரிக் கண்டத்தில் இருந்துதான் உலகம் முழுக்கப் போய்க் குடியேறி இருக்கிறார்கள். அன்று பேசப்பட்டு வந்த பழந்தமிழ்தான் இன்றும் சிற்சில மாற்றங்களுடன் (அதுவும் இலக்கணவிதிப்படி மாற்றப்பட்டு) உலக மக்களால் பேசப்பட்டு வருகிறது..... " என்கிறார் உறுதியுடன்.

சமக்கிருதம் ஆட்சி செலுத்தும் பனாரசு பல்கலைக்கழகங்களிலும் ஆராய்ச்சி நிலையங்களிலும் தன் கருத்தைத் துணிந்து பேசியும் இருக்கிறார்.

இந்த மொழியியல் ஆராய்ச்சி கார்டுவெல் தனது புத்தகத்தில் சமக்கிரும் சீனம் சிந்திய மொழி (ருசிய, மங்கோலிய, சைபீரியா, ஜப்பான், கொரியா போன்ற இடங்களில் பேசப்பட்டு வரும் மொழிகள்தான் சிந்திய மொழிக்குடும்பம்) போன்றவற்றோடு தமிழுக்கு இருக்கும் ஒற்றுமைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அதற்குப் பின் தமிழுக்கும் பல்வேறு உலக மொழிகளுக்கும் இருக்கும் உறவு பற்றிப் பல நாட்டு அறிஞர்கள் எழுதிய புத்தகங்களைப் படித்திருக்கிறார்.

இதே துறையில் ரொம்பவும் அரிதான புத்தகங்கள் என்ற வகையில் உலகம் முழுக்கத் தேடிக் கிட்டத்தட்ட இருபதாயிரம் புத்தகங்கள் வரை தன் நூலகத்தில் சேமித்தும் வைத்திருக்கிறார்.

எல்லாவறறையும் படித்தபோது இலக்கண ரீதியான சில அடிப்படை விதிகள் பிடிப்பட்டுப் போயிற்று....! அந்தப் பதினைந்து விதிகள் ஆச்சரியமாக எல்லா மொ்ழிகளுக்கும் பொருந்தி வந்தன. இந்த அடிப்படை விதிகளை ஒருவர் தெரிந்து கொண்டால் போதும் தமிழ் மூலம் உலகின் எந்த மொழியையும் கற்றுக்கொள்ள முடியும். ஆர்வம் இருப்பவர்களுக்கு ஒரு வாரம் கூடப்போதும் என்கிறார் இவர்.

தமிழுக்கும் மற்ற மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைபற்றித் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக இதுவரை எழுதியுள்ள புத்தகங்கள் நாற்பதுக்கும் மேல்!

இவரது வேலை எல்லா உலக மொழிகளுக்கும் தமிழ் அர்த்தத்தோடு அகராதி எழுதுவதுதான்! இப்படி இதுவரை கிட்டத்தட்ட நூறு அகராதி தயாராகிவிட்டது. தவிர வார்த்தைகள் எப்படிப் பிறக்கின்றன என்று சொல்லும் வேர்ச்சொல் அகராதி நாற்பதை (பல்வேறு மொழிகளுக்கானது) பிரசுரிக்கத் தயார் நிலையில் வைத்திருக்கிறார்.

தமிழில் பெரிய அளவில் வேர்ச்சொல் அகராதியை வெளியிட ஆரம்பித்தவர் தேவநேயப் பாவாணர்தான். சுமார் 6000 வார்த்தைகள் கொண்ட அதன் முதல் பாகத்தை ஒன்பது வருடங்கள் பாடுபட்டு முடித்தார் அவர். அதற்குப்பின் டாக்டர் மதிவாணன் என்பவர் அதன் இரண்டாம் பாகத்தை வெளியிட்டார். தேவநேயப் பாவாணரைப் போலவே ஆறாயிரம் வார்த்தைகள் கொண்ட அகராதி முடிக்க அவருக்கும் ஒன்பது வருட காலம் ஆனது.

தமிழக அரசின் இந்த வேர்ச் சொல் அகராதி திட்டத்தில் இன்னும் பத்துப் பாகங்கள் மீதியுள்ளன.

இதைப் பற்றிக் குறிப்பிடும்போது சாத்தூர் சேகரன் என்னிடம் அரசு இந்தப் பணியை ஒப்படைக்கட்டும் மீதியிருக்கும் 10 பாகங்களையுமே ஐந்தே வருடங்களில் தான் முடித்துத் தருகிறேன். காரணம் இத்தனை வருட ஆராய்ச்சியில் விஷயங்கள் என் விரல் நுனியில் இருக்கின்றன.

இவரது இன்னொரு சாதனை ஒரு மொழியில் எழுதப்பட்ட ஒரு கடிதத்தை வைத்துக் கொண்டு உலகின் அனைத்து மொழிகளிலும் (இலக்கணச் சுத்தமாக), கம்ப்யூட்டர் மூலம் மொழிபெயர்த்து பெறமுடியும் என்பதுதான்.

கம்ப்யூட்டரில் ஏற்கனவே புரோகிராம் செய்து வைக்க வேண்டியது மட்டும் என்னுடைய பொறுப்பு. இதற்காக வெளிநாடுகளில் இருந்து நிறைய அழைப்புகள் வந்தன. என் சாதனை தமிழகத்திற்குத் தான் முதலில் பயன்பட வேண்டும் என்பதால் அந்த அழைப்புக்கெல்லாம் நான் செவிசாய்க்கவில்லை...! என்கிறார் சாத்தூர் சேகரன்!

●



# செர்மணியில் தமிழ்ப்பிள்ளைகளின் எதிர்கால உளவியல் தாக்கங்கள்

திருமதி. க. நாகேசுவரி (வேடமார்க்)

மனித வரலாற்றில் இன்று இருக்கக் கூடிய எந்த ஒரு மனிதக் குழுவும் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ இடப்பெயர்ச்சிக்கு உட்பட்டு வருவதை நாம் வரலாற்றில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அப்படி இடம் பெயர்ந்து வாழ நேரிட்ட போதிலும் அவர்கள் தங்களுக்கே உரித்தான பண்பாட்டு நாகரிகங்களைப் புதிய சூழலிலும் தங்க வைத்துக் கொள்ள முற்படுகின்றனர். ஆனாலும் புதிய சூழ்நிலையில் ஏற்படும் அனுபவங்களைப் பண்பாடுகளை, அவர்கள் எவ்வகையில் ஆளுமைப் படுத்திக் கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்ததே அவர்களின் எதிர்காலம்.

இக்காலகட்டதில் பல்வேறு காரணங்களினாலும் அரசியல் உரிமைகளும் அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்ட மிதிக்கப்பட்ட காரணத்தினால் ஏற்பட்ட போர்ச் சூழலினாலே தமிழீழத்திலிருந்து உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழும் புதிய மேலைத்தேய சூழ்நிலைகளில் எதிர்நோக்கும் பிரச்சனைகளும், சிக்கல்களும் கவனிக்கப் படவேண்டியவை. இயந்திரம் மயமாக்கப்பட்ட மனித வாழ்க்கையில் குடும்பத் தலைவனின் பங்கு வழமையான அளவிலிருந்து குறைந்துவிடத் தாயின் பங்கும் கடமையும் அதிகரித்து நிற்கின்றது.

நாளைய சந்ததிக்கான அடித்தளம குழந்தைகளை வளர்த்தெடுக்கும் இப்பருவத்திலேயே இடப்படவேண்டும். ஏதோ நாள் கழிய பிள்ளைகளும் வளர்கின்றார்கள் என்று எழுந்த மானமாக நோக்காமல் அவர்களைப் பாதித்து நிற்கக் கூடிய உளவியல் தாக்கங்களைக் கிரகித்துணர்ந்து தகுந்த ஆலோசனைகளை வழங்க முன்வர வேண்டும். இல்லாவிட்டால் அந்நியச் சூழ்நிலையில் காணப்படும் கவர்ச்சித் தனத்தினால் அவர்கள் ஈர்க்கப்பட்டு தங்களின் எதிர் காலத்தை வறியதாக்கி விடுவார்கள். இக்கடமை தாய் தந்தை இருவருக்கும் உரியதே.

இதற்குத் தாய் தந்தையர் தம நாட்டுப் பற்றுள்ளவர்களாகவும், குழந்தைகளுக்கு அறிவூட்டி வழிநடத்தும் ஆர்வம் உள்ளவர் களாகவும் இருத்தல் அவசியம். இன்றைய நிலையில் ஏனைய நாடுகளை விட தமிழீழத்தைச் சேர்ந்த பெண்கள் படிப்பிலும் உயர் கல்வியிலும் மிக அக்கறை காட்டி வருகின்றார்கள். இன்று புலம் பெயர்ந்து ஐரோப்பாவில் வாழும் பெண்களும் அவ்வாறே உயர் கல்வி நாட்டம் உடையவர்களாக இருக்கின்றார்கள்.

இந்த நிலையில் ஐரோப்பாவிலும ஏனைய நாடுகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டு வரும் தமிழ் மணிப்புலவர் பட்டப் படிப்பு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இப் பாடத் திட்டத்திலுள்ள நூல்களோ நாம் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கூட இதுவரை கண்டிருக்க முடியாத அறிவுக் களஞ்சியங்கள். ஒரு வித பட்டப் படிப்பிற்கும் வசதியற்று இருந்த நாம் இவற்றில் பங்கு பற்றுவதன் மூலம் மேன்மேலும் நம் அறிவை விரிவுபடுத்தி, நம் குழந்தைகளுக்கு நல்லதோர் எதிர்காலத்தை உருவாக்க முடியும். ஆனாலும் பரீட்சையில் பங்கு பற்றும் பெண்கள் அதிக திறமையைக் காட்டுவதும் ஒரு சிலர்

பரீட்சைக்கு விண்ணப்பித்து விட்டு பயத்தாலோ என்னவோ பின்னடைவதும் வருந்தத் தக்கதே.

இன்றைய ஐரோப்பிய சூழ்நிலையில் ஆண்களை விடப் பெண்களே தம் பிள்ளைகளின் படிப்பில் பண்பாட்டை வளர்ப்பதில் முக்கிய பங்கு எடுக்கிறார்கள். பெரும் பகுதியான ஆண்களுக்கு அதைப் பற்றிச் சிந்திக்கவே நேரம் கிடைக்காது.

**பண்பாட்டை வளர்க்கும் பெண்கள்**

ஐரோப்பாவில் ஒவவொரு தமிழ்க் குடும்பத்தையும் எடுத்து ஆராய்ந்து கொண்டு போனால் பெரும்பான்மை வீடுகளில் தாய்மார்தான் பிள்ளைகளுக்குக் கல்விச் செல்வத்தை வழங்குவதில் கண்ணும் கருத்துமாக இருப்பதை உணரலாம்.

ஒரு பெண் இயற்கையாக அறிவில்லாதவள். மற்றவர்கள் உன் மகன் சான்றோன் எனக் கூறினால், அவள் ஈன்ற பொழுதைவிட மகிழ்ச்சி அடைவாள். அளப்பரிய சேவைக்கும் இடையே எவ்வளவு வித்தியாசம் காணப்படுகின்றது.

குடும்பத்தின் சகல சுமைகளையும் சுமப்பதுடன் தம்பிள்ளைகளுக்கு கல்விச் செல்வத்தை வழங்குவதிலேயே அதிக நேரத்தைச் செலவிடும் ஒரு தாய் அப்பிள்ளையின் கல்வி சம்பந்தமாகவோ அல்லது ஒழுக்கம் சம்பந்தமாகவோ பாடசாலையிலும் சரி வெளியிலும் சரி தன் பிள்ளை சகலராலும் பாராட்டத்தக்கவராக இருக்க வேண்டும் என்பதில் பெரும் அக்கறை கொள்கிறாள். இக்கருத்தைத்தான் திருவள்ளுவர் கூறினாரோ?

இன்றைய ஐரோப்பியச் சூழலில் குறிப்பாக யேர்மனியில் அகதிகள் உதவிப் பணமும், மதுப் பொருட்களின் மலிவு விலையும் தம்மைப் பெரிய தமிழ்த் தொண்டர் என்று காட்டிக்கொள்ளும் குடும்பங்களிலே பெண்களைத் துன்புறுத்தி கொடுமைப்படுத்த காரணமாகின்றன. பலகாலம் வெளிநாடுகளில் தனித்து வாழ்ந்தவர்கள் திருமணம் முடித்த பின்பும் அதையே தொடர்கின்றன. கொடுமை தாங்க முடியாத பெண்கள் பலர் கையில் ஒரு குழந்தை, வயிற்றில் ஒரு குழந்தை என சுமந்து கொண்டு பெண்களுக்கான முகாம்களில் அடைக்கலம் புகுந்துள்ளார்கள். இவ்வாறான இளம் பெண்களினதும் குழந்தைகளினும் எதிர்காலம் கேள்விக் குறியே?

என்றோ ஒரு நாள் நாம் தாய்நாட்டிற்கு சுதந்திரத் தமிழீழத்திற்குத் திரும்ப வேண்டும், அல்லது நாம் எம் உறவினர்கள் என்று கூறிக் கொண்டு இன்னொரு நாட்டிற்குப் போக வேண்டி வரும். இந்நிலையில் ஒவ்வொரு நாட்டிலுள்ள பிள்ளைகளும் தம் நாட்டு மொழியை மட்டும் தெரிந்திருந்தால் இரு நாட்டுத் தமிழ்க் குடும்பப் பிள்ளைகளும் எந்த மொழியில் பேசுவார்கள், அல்லது நாம் தமிழகத்திற்குப் போகும் போது எம் உறவினர்களுடன் பேசுவதற்கு ஒரு மொழி பெயர்ப்பாளரையும் கொண்டுதான் செல்ல வேண்டும்.

இன்னும் சில தமிழ்க் குடும்பங்களின் வாழ்க்கை நிலை வருந்தத் தக்கதாகவே உள்ளது. என் மகன் டாக்டருக்குப் படிக்கின்றான், என் மகன் வழக்கறிஞருக்குப் படிக்கின்றான், எனச் சில பெற்றோர் மார்தட்டிக் கொள்கின்றார்கள். அதே போல நடை, உடை, பாவனை, எல்லாமே வெளி நாட்டுப் பாங்கே.

ஆனால் அப் பிள்ளைகளுக்குத் தமிழ் தெரியுமோ என்றால் தெரியவே தெரியாது. இவர்களால் தமிழீழம் என்ன பயனைப் பெறப் போகின்றது? இல்லை, இங்குள்ள தமிழர்கள் கூட இவர்களால் எந்தப் பயனையும் பெறமுடியாது. இந்த இடத்தில் தாயும் தந்தையும் தம் எதிர்காலக் கடமையை மறந்து செயல்படுவது வருந்தத் தக்கது.

இன்னும் சில தமிழ் மொழிபெயர்ப்பாளரும் கூட அரசாங்கத்தின் கைக் கூலிகளாகச் செயற்பட்டு இங்கு வரும் புதிய அகதிகளுக்குத் துரோகம் விளைவிக்கின்றார்கள் இந்த நிலையிலும்கூடப் பெற்றோர் தம் பிள்ளைகளை இரு மொழியிலும் அறிவாளி ஆக்குவதன் மூலம் புதிய அகதிகளுக்கு உதவலாம். மொழிபெயர்ப் பாளர் ஆக்கலாம்.

யேர்மனியைப் பொறுத்தவரையில் தமிழாலயங்கள் தமிழ்ப் பிள்ளைகளுக்கு அளப்பரிய சேவையைச் செய்து வருகின்றன. ஆனாலும் தமிழாலயப் பாடசாலைகளை நடத்தி வரும் சில பெற்றோர் தம் புகழுக்காகவே அதை நடத்தி வருகிறார்கள். அவர்களின் பிள்ளைகளை எடுத்தால் முதலாவது டொச் பாடசாலையில் முன்னிலை பெற வேண்டும். அதன் பின் மெல்ல மெல்லத் தமிழைப் படித்தால் சரி என்ற கருத்து நிலவுகின்றது. இந்த நிலையில் இவர்களின் தமிழ்த் தொண்டு அர்த்தமற்றதாகி விடுகின்றது.

# குறளறமே இல்லறக்கொள்கையின் மாண்பு

இர.ந. வீரப்பனார்

உள்ளக் கிளர்ச்சியில், பாலியப் புரட்சியே தனிமனிதனைப் புண்படுத்துவது. இதயத்தில் அமைதி வெறுமையாகப் பூப்பதில்லை. பதினெட்டு வயதில் பூப்பெய்திவிட்ட பெண்ணும் ஆணும் பண்பட்ட மனத்தாலும், பயிற்சியாலும், தங்களைத் தற்காத்து, மனத்திட்பமுடன் வாழ முடியும்.

ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற மணவாழ்வோ, காதலின், களவியம் கற்பியல் வாழ்வோ இவர்களைப் பண்படுத்தும்.

7000ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் இதற்கு இலக்கணம் கண்டார். இதற்குத் திருவள்ளுவரே வழிகாட்டினார். உலக மக்களுக்கு இதை அறச்சட்டமாக்கினார். ஏன் அவர் தமிழில் எழுதினார் என்றால், உலகின் முதல் குடி தமிழர் என்பதாலும், உலகெலாம் சென்று பரந்து, வேரூன்றிய ஆதி இனம் என்பதாலும் இப்படி அவர் உத்தியுடன் எழுதினார். இதுவே அன்றும், இன்றும் வாழ்விய வழக்கமாகியது.

இதை-வாழையடி வாழையாக வந்த வழக்கத்தை—இளங்கோவடிகளும், தம் சிலப்பதிகாரக் கதையில் எடுத்துக் காட்டி, கணவன், மனைவி இல்லறமே நல்லறம் என்று வழியமைத்தார். இவ்வறம் தவறினால், உள்ளமும் உடலும் கெட்டு, ஐம்பூதத் தாக்கத்தால் அழிவார் என்றார்

அகத்திணை என்ற தொல்காப்பியக் கோட்பாடு, இப்பொருளதிகாரத்தின் இலக்கணம். இதுவே அப்போது எழுந்த முதல் அறிவியல் நூல். இந்த நாகரிகமே உலக நாகரிகமாகியது. குடியேறியவர்களும், பன்னாட்டாரும், ஆரியரும் இவ்வழக்கப்படி வாழ்ந்தனர். வடபுலம்-தென்புல நாடுகளில் அன்று இவ்வழக்கு இல்லை. ஐரோப்பா மற்றும், அமெரிக்கா, அரபுநாடுகளிலும் இப்பண்பாடு பரப்பப்பட்டது. பழங்குடி பண்பியமான இது உலகப் பொதுமையாகியது. இன்று ஆயிரக்கணக்கான இனங்கள், கோடிக்கணக்கான அம்மக்கள் 'ஒருதாரத் தம்பதியராக' இணையும் பிணையுமாக வாழும் வாழ்க்கையே உலகப் பொதுவறமாக நிலவுகிறது. இதை வகுத்தது தமிழினமே.

பெரும்பான்மை இல்லற அமைப்புக் கொள்கை, உலகக் கோட்பாடாகியது. திருக்குறள் படைப்பும், பரவலும் வந்த பிறகே, மதங்கள் உருவாக்கப்பட்டு, வள்ளுவர் கோட்பாட்டைப் பின்பற்றிக் கொண்டன. ஆண்-பெண் குடும்பக் குழுமங்கள் சாதி மாறுபாடாகவும், சூழ்நிலை, மொழி, வேறுபாடு எதுவானாலும், மனையற வினையைமட்டும், பழந்தமிழறமாகிய இதனை முழுமையாக ஏற்றுக் கொண்டது. இன்றைய பழங்குடி மக்கள்கூட காதல் அல்லது பெற்றோர் விருப்பப்படி ஒருவனுக்கு ஒருத்தியை, அறநெறி என ஏற்றுக் கொள்கிறார்கள்.

இவ்வாறான குமரிக்கண்டக் கோட்பாடே, பூமத்தியரேகையின் ஆதிமனித நாகரிக மரபாக வளர்ந்து, எங்கும் பரவி நின்று நிலைத்தது. இருமனப் புரட்சிப் பூக்கள் அமைதி பெற்றது இவ்வாறே.

ஏழை—செல்வர் என்ற வாழ்விய வேறுபாடு எதுவும், இந்த வாழ்விலக்கண விதிகளுக்கு கட்டுப்பட்டுள்ள மரபை மீறவில்லை.

ஐம்பொறியும் ஆறறிவும் இணைந்து செயலாற்றிக் கொள்ளவும், தம்பதியர் இல்லறத்தின் கடமையிலிருந்து நழுவாமலும், நழுவியவர் வாழ்வின் கோளாறுகளை அறிந்து தெளிந்தும் போற்றிவருகிறார்கள். எந்த அரசும், சட்டமும் இதனை மாற்றவில்லை. மாற்றிவிடாமல், இதுவும் சமூக—அரசநீதிகளில் ஒன்று என ஏற்றுக் கொண்டனர்.

மனமும் அறிவும் பிளவுபட்டு, உள்ளம் சோர்ந்து, காதல் வாழ்வு கசந்து போவதைக் கண்டும், கேட்டும், படித்தும் போற்றிய இப்பண்பாடு ஊழூழிகாலம் நின்று நீடிக்கும்.

மாந்தர் இனவளர்ச்சிக்கு, இக்குடும்பக் கோட்பாட்டில், ஆண்—பெண் இரு குழந்தைச் செல்வங்களே போதும் என்ற சித்தாந்தமும், உலகில் இன்றும் நிலவுகிறது. சில இனங்களில் இது வேறுபடுகிறது. செல்வநிலை இதை மாற்றுகிறது.

அமைதிப் பொதுமைக்கு இவ்வாறான அற வாழ்வுக் கதைகள், சிலப்பதிகார கதைகளைப் போல், கண்ணகி – மாதவியின் மாண்புகள், இந்தியா எங்கும் பரவின. தமிழினம் குடிபெயர்ந்த நாடுகளிலும் இதனைத் தெய்வமாகவும், வழிபடும் இறைமையாகவும் வழிபட்டு வருகிறார்கள். 'காதலறம் என்பதே இறைமை உணர்வு என உலகம், இதற்கு அஞ்சுகிறது.'

# தமிழ் இலக்கணம் கூறும் நால்வகை பெயரச் சொற்கள் யாவை?

தமிழ்மணி நா.சி. கமலநாதன், செர்மனி

ஒரு இனம் வாழ அதனுடைய மொழி வாழ வேண்டும். மொழி வாழ்ந்தால் மட்டுமே அந்த இனத்தினுடைய அடையாளஙகளாகிய நாகரீகம், பண்பாடு, வாழ்வியல் வழக்குகள், அகவொழுக்கங்கள் காப்பாற்றப்படும். இதை நன்றாக உணர்ந்த தெற்கு மேற்குக் காக்கேசியர்கள் (ஆரியர்கள்) இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இன்றைய புத்தியல் நாள் வரை திட்டமிட்டு, பல பண்டைய இனங்களது தனித்துவத்தை அழிக்கும் சூழ்ச்சிகளை விடாது முயல்கிறார்கள். இந்த முயல்வில் உலகம் முழுவதும் இணைந்து நிற்பது, பழந்தமிழ் பேரினத்தை எப்படியும் அழித்து ஆரியத்துள் சங்கமமாக்கி விட வேண்டும் என்பதில் தான் இந்த முயல்வை இன்று நாம் எடுக்கும் மாநாடோ அல்லது இதுவரை எடுக்கப்பட்ட எந்த மாநாடுகளோ அல்லது இனி எடுக்கப்படக் கூடிய மாநாடுகளோ மாநில அரசுகளோ தடுத்துவிட முடியாது. அது தடுக்கப்பட வேண்டுமானால், எங்கள் தமிழ்ப் பெருங் களஞ்சியத்துள் சேர்க்கப்பட்டுள்ள குப்பைகளை அகற்றித் தமிழைத் தூய்மைப் படுத்த வேண்டும். தொல்காப்பியம் முதல் குறள் வரை பழந்தமிழிலும் இன்று நடைமுறையில் உள்ள கழகத் தமிழ் அகராதி முதல் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி வரை களையெடுக்கப்பட்டு தமிழின் தூய்மை பேணப்படல் வேண்டும். இந்த முயல்வில் தமிழன் துணியவேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத் தொல்காப்பியம் பற்றிச் சிறிது எழுதுகிறேன்.

தொல்காப்பியப் பெருநூல் தமிழ் நால்வகைப் பெயர்ச்சொற்களை உடையது எனக் கூறும்.

நிலந்தரு திருவிற் பாண்டியன் முதல் ஊழிக்கு முற்பட்டவன். அதாவது வடவர் நாவலந்தீவினுள் கால் வைப்பதற்கு ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவன். அவனுடைய காலத்தில் எழுந்த நூலில், வடசொல் என்றொரு சொல் இடம் பெறவே முடியாது. தொல்காப்பியம் பிறந்த காலத்தில் அப்படியொரு மொழியே உலகத்தில் கிடையாது.

பாயிரத்தில் நக்கீரனார் , இடை—கடைச் சங்கத்தாருக்கு நூலாயிற்று தொல்காப்பியம்

**எங்கள்**
**தமிழ் மொழியில்**
**உள்ள**
**குப்பைகளை அகற்றி**
**தமிழைத் தூய்மைப்படுத்த வேண்டும்**

எனக் கூறியுள்ளார். எனவே தொல்காப்பியம் முதற்சங்க நூலாயிற்று எனவே, ஆத்திரேலியாவும், ஆப்பிரிக்கமும், பாரசீகமும் ஒன்றாக இருந்த குமரிக் கண்டத்தில் எழுந்த நூல். அதிலே குறிக்கப்பட்டுள்ள பன்னிரு நிலங்கள், கடைச் சங்கத்துப் பனம்பாரனார் கூறும், “வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்” என்ற சுருங்கிய பிற்காலத்துத் தமிழகத்து எல்லைகளைச் சார்ந்ததல்ல. பன்னிரு நாடு என்று இன்று பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூமி நாடு, மலைநாடு, அருவாநாடு, வடதலைநாடு என்று இன்றைய சுருங்கிய தமிழகத்தைச் சார்ந்து சொல்லப்படுகிறது. நூல் எழுந்த காலத்துக் குமரிக்கண்டப் பரந்த தமிழகத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்தப் பன்னிரு நாடுகளும் கணக்கிடப்படின், உலகம் முழுவதும் அதனுள் அடங்கும். அதை அறியமுடியாதவர்கள் அறிந்த அளவுக்குள் அடக்கிக் கொண்டு தவறுகளை எழுதியுள்ளார்கள். சீதநாடு நீர்மிகுந்த நாடாக இருத்தல் வேண்டும். பூமிநாடு பாலைநிலமாக இருத்தல் வேண்டும். தென்பாண்டி என்பது அழிந்த குமரியாக இருத்தல் வேண்டும். எனவே பண்டைத் தமிழகம் உலகின் முக்காற் பகுதிக்கும் மேலான நிலப் பகுதிகளைக் கொண்டதே. எனவே வடசொல் என்றொரு சொல்வகை தமிழில் இல்லவேயில்லை. அல்லாமலும் தொல்காப்பியத்தைப் பின்பற்றிய கடைச்சங்க நூல்கள், எப்படித் தொல்காப்பிய வழி வடவெழுத்துக்களையும், வட சொற்களையும் தம்முள் தாராளமாகக் கொண்டிராமல், தூய தமிழ்வழி நின்றன? அது எப்படி முடியும்? அனைத்திற்கும் முதலான முதல் நூலே வடசொல் என்று ஒருவகைச் சொல்லைச் சொல்லியிருந்தால் அதைவிட்டு, சங்கப் புலவர்கள் எப்படித் தொல்காப்பியத்தை மீறியிருக்க முடியும்? முடியாது. ஆகவே, கடைச்சங்கத்திற்கும் பிற்பட்ட காலத்தில் தொல்காப்பியத்துள் வெட்டி ஒட்டி ஊடுருவல் செய்யப்பட்டது என்பது புலனாகிறது. பிற்காலச் சோழர் காலத்தில் பிராமணர் அல்லாதாருக்குக் கல்வி மறுக்கப்பட்டிருந்ததையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

திசைச் சொல் என்றொரு சொல் இருக்க வடசொல் என்றொரு வகை இருப்பது தவறாகும். வடசொல்லும் திசைச் சொல்லே. இது புகுத்தப்பட்ட சதியாகும் என்று சில தமிழ் அறிஞர்கள் சில வருடங்களுக்கு முன்பு, விவாதித்தது பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒரு முடிவைச் தரவில்லை. விவாதித்ததுடன் நின்றுவிட்டது.

இன்று தமிழகத்திலும் சரி, வேறு தமிழர் வாழும் இடங்களிலும்,சரி, பேராசிரியர்களும் , முனைவர்களும், புலவர்களும் நிறைந்து கிடக்கிறார்களே, ஏன் தமிழகத்திலே வீதிகள்தோறும் பள்ளிகள் இருக்கின்றனவோ இல்லையோ, வீதிகள் தோறும் முனைவர்களும் முதுகலைவாணர்களும் நிறைந்து கிடக்கிறார்களே, இவர்களெல்லாம், இந்தச் சதிகள் பற்றி ஆக்க பூர்வமாகச் சிந்தித்துச் செயற்படாமல் என்ன செய்து கொண்டிருக் கிறார்கள்? திருத்த முடியாதது என்கிறார்களா? திருத்தினால் அரசு ஏற்றுக்கொள்ளாது என்கிறார்களா? இருந்தது போல் இருந்துவிட்டுப் போகட்டுமே என்கிறார்களா? மானமுள்ள போராட்டம். பெரியார் ஈ.வெ.ராவுடன் போய்விட்டதா? சாலை இளந்திரையன் போன்ற வேழங்கள் தோன்றியும் தமிழினம் சிந்திக்க மறுக்கிறதே! ஐயோ தமிழினமே! உன்னைக் காப்பாற்றுவது யார்?

என் இனிய தமிழகத்தின் இளஞ்சிங்கங்களே! ஆதிசிவன் பெற்றுவிட்டான் ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர் வேதியன் கண்டு

**திசைச் சொல்**
**என்றொரு சொல் இருக்க**
**வட சொல்**
**என்றொரு வகை இருப்பது**
**தவறாகும்**

*படின் என்றால் வந்தடைதல் என்று பொருள்படும் காலத்துப் படும் சொற்கள் வந்தடையும் சொற்களாகும்*

மகிழ்ந்து எழில்மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான் என்று தமிழ் தோன்றிய காலத்தை மறைக்கக் கரடி விட்ட பார்ப்பாரச் சுப்பிரமணியனை உயர்த்தும் தமிழகத்துப் பார்ப்பாரப் பல்கலைக் கழகங்களை நம்பிக் கொண்டிராமல், நீங்களே தமிழ்ப் புரட்சிக்கு வித்திடுங்கள். என் எண்ணத்தை இதில் நான் உங்களுக்குச் சொல்வேன்.

தொல்காப்பியம் கூறும் ''கடிசொல் இல்லைக் காலத்துப் படினே'' என்று காலந்தோறும் விளையும் மாற்றங்கள், புதிய தோற்றங்கள், புதிய புதிய சொற்களை ஒரு மொழிக்குள் கொண்டு வரும். அப்படி வருதல் தவறல்ல என்பது பொருள். ஏறக்குறைய இரண்டாயிரங்களுக்கு முன்பு எழுந்த சங்க இலக்கியங்களில் இருக்கும் சொற்கள், பெரும்பாலானவை அருஞ்சொற்களாகி வருகின்றன. பெரும்பாலானவை நடைமுறையில் இன்றில்லை. ஆனால் தமிழில் இருக்கின்றன. இன்றிருக்கும் ஏராளமான சொற்கள் அன்று இருந்ததில்லை. ஆனால் சொற்குறித்த பொருள் அன்றும் இருந்தது. இன்றும் இருக்கிறது. அப்பொருள் குறித்த சொல் காலத்திற்கு ஏற்ப மாறுபாடடைந்து வருகிறது. அண்ணா காலத்தில் அத்தான் என்றொரு அழகு தமிழ்ச்சொல் பிறந்து சமுதாயத்தை முற்றாக ஆட்கொண்டது. புதிய அறிவியற் பரம்பலின் பின் புதிய பொருட்களின் தோற்றத்தால், புதிய நாகரீகங்களின் கலப்பால் சொல்நயமும்—பொருட்செறிவும் கொண்ட சொற்கள், ஏராளமாக திசைச் சொற்களாக அல்லாமல், தமிழில் தோன்றின. இப்படி உருவாகி வரும் சொற்கள், இயற்சொல்—திரிசொல் —திசைச்சொல் என்னும் வகைக்குள் அடங்கா.

எனவே, காலத்திற்கேற்ப வரும் சொற்களைத் தமிழ் ஏற்கும் என்று கூறிய தொல்காப்பியம், அப்படி வரும் சொற்கள் எந்த வகைக்குள் அடங்கும் என்று வரைவிலக்கணம் தராமலா விட்டிருக்கும்.

காலத்துப் படின், படின் என்பது படுதல் என்னும் தொழிற்பெயரின், எதிர்கால வினைமுற்று. படுதல் என்பது வந்தடைதல்.

புள்படுதல்—புட்படுதல் என்பது, புன்செய்களில் தானியங்களைக் கவரப் பறவைகள் வந்தடைதல் — நெய்தலில் உணங்கலைக் (கருவாடு) கவரப் பறவைகள் வந்தடைதல். எனவே, படின் என்றால் வந்தடைதல் என்று பொருள்படும். எனவே காலத்துப்படும் சொற்கள் வந்தடையும் சொற்களாகும். வந்தடையும் சொற்களைச் சொல்வகைப் படுத்தின் "வருசொல்" எனப்படும்.

இந்த வருசொல் தான் தமிழின் கன்னித்தன்மை ஆகும். மொழியின் இளமையைக் காத்து நிற்கும் சொல் ஆகும்.

வடமொழியும், இலத்தீனும், கிரேக்கமும், எபிரேயமும் போன்ற மிகப்பழமையும், இலக்கிய வளமும் கொண்ட மொழிகளெல்லாம் அழிந்துபட, இந்த மொழிகளுக்கெல்லாம் மிகப் பழமையானதும், அனைத்துக்கும் ஆதிமூலமான தமிழ்மொழி, என்றும் அழியா இளமையுடன் இன்றும் நின்று நிலவுவதன் ஒரே இரகசியம், இந்த வருசொல்தான். காலத்திற்கு ஏற்பப் புதிய சொற்கள் பிறப்பதைத் தமிழ் ஏற்கிறது. இலக்கணவழியால் மட்டுமல்ல, அதனுடைய எதற்கும் இளகிக் கொடுக்கும் இயற்கை ஒலி அமைவாலும் ஏற்க முடிகிறது.

தமிழ் மொழி வலிந்து ஒலியமைத்துச் சமைத்த வடமொழி ஐரோப்பிய மொழிகள் போன்றதல்ல. அது இயற்கையின் ஒலிகளில் பிறந்த மொழி. அதனால் காலத்தால் படும் சொற்களை இடரின்றி ஏற்கிறது.

சிலப்பதிகாரம் நெஞ்சையள்ளும. அன்றும் அள்ளியது. இன்றும் அள்ளுகிறது. ஆனால்

*காலத்துக்கு ஏற்ப புதிய சொற்கள் பிறப்பதை தமிழ் ஏற்கின்றது*

*அண்ணா, சேதுப்பிள்ளை போன்றோரின் நடை இலகுவும் சுவையும் பெற்றது*

அது இன்றைய தமிழில் இல்லை. அதைப் படித்து இன்புற உரையாசிரியர் வேண்டும். கம்பன் காலத்துக் காவியங்கள் அதைவிட இலகு தமிழில் பிறந்தன. மீனாட்சிசுந்தரம், சுப்பிரமணியக் கவிஞன் போன்றோரின் நடை இன்னும் இலகுவாயிற்று. அண்ணா, சேதுப்பிள்ளை போன்றோரின் நடை இன்னும் இலகுவும் சுவையும் பெற்று மக்களிடம் நன்றாக இடம்பிடித்தது. இன்று சாலை இளந்திரையனின் உரைவீச்சுத் தமிழ் இளம் உள்ளங்களை நிரப்பும் வேகம் கொண்டது. இன்னும் புதுக் கவிதைகள் — புதுப்புது படைப்புகள், சொல் நயம் பொருள் வேறுபட்டுக் கொண்டே பிறந்த காலத்திற்கு ஏற்பத் தமிழின் இளமையைப் பேணி வருகின்றன. அற்றைத் தமிழும் இற்றைத் தமிழும் இணைந்து செழுமையடைகின்றன. இந்தச் செழுமைக்கு இந்த இளமைக்கு உயிரூட்டமாய் இருப்பது காலத்துப்படும் "வருசொல்" தான். எனவே, தமிழின் நால்வகைப் பெயர்ச்சொற்கள், இயற்சொல்—திரிசெல்—திசைச்சொல்—வருசொல் என்றாகும். வருசொல் என்ற சொல்லின் 'ரு' வை அகற்றிவிட்டு அவ்விடத்தில் 'ட' வைச் சேர்ப்பது வடவனுக்கு இலகுவாயிற்று. புறத்தில் ஒரு பாடலில் "குரவர்த் தப்பிய கொடியோர்" என்ற வரியைப் "பார்ப்பார்த் தப்பிய கொடியோர்" என்று மூலத்தையே சாமிநாத ஐயர் என்ற பார்ப்பார் மாற்றியதைச் சாலை இளந்திரையன் கண்டறிந்து எழுதினார். ஒரு எழுத்தை மாற்றுவதா பெரிய வேலை? மாற்றிவிட்டான். வருசொல் வடசொல் ஆயிற்று. வடசொல்லானது மட்டுமல்ல, எச்சவியல் சூத்திரம் 6 "சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்" என்று கூறுகிறது. சூத்திரத்துள் சூத்திரம் — விட்ட பார்ப்பான் அதுவும் போதாது என்று தமிழின் தூய்மையைப் அழித்து, வடமொழியால் மூடிவிட 6ம் சூத்திரத்தையும் புகுத்தினான் எனத் தோன்றுகிறது.

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார் — தமிழுக்கும் வடமொழிக்கும் பொது எழுத்தால் வந்த சொல்லேயன்றி, வடவெழுத்தாலேயே அமைந்த சொல் சிதைவுபட்டு வரினும் பொருந்தின் நீக்கார். பார்ப்பாரச் சூழ்ச்சித் திறன்தான் என்னே! ஒலி மாத்திரையில் இருந்து குறிலும் நெடிலும் அளபெடையும் மொழிமுதல் எழுத்து புணர்ச்சி என்று மொழியியலின் சகல துறைகளாலும் நுணுகி ஆராய்ந்து, இது இப்படித் தான் என்று இலக்கண வரம்பிடப்பட்ட தமிழ்மொழியில் வடமொழி நுழையும் இடத்தில் மட்டும் வேலியும் இல்லை, வரம்பும் இல்லை. சிதைந்து வரினும் ஏற்றுக் கொள்ளலாம். தொல்காப்பியத்தில் அத்தனை இயல்களிலும் வராத வடசொல் நுழைப்பு, எச்சவியல் என்னும் குறைநிரப்பல் பகுதியில் இடம் பெற்றுள்ளது என்றால் தமிழறிஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்ல, திருக்குறள் முதல் அகம் புறம் சார்ந்த அதிக இலக்கியங்களில் ஆரியச் சதி நுழைக்கப்பட்டுள்ளதைக் கண்டு கொதித்து இவற்றை எடுத்துக் காட்டுவதற்கு என்றே நான் கமலம் என்ற முத்திங்கள் தமிழாய்விதழை வெளியிட்டு வருகின்றேன். இப்பணியில் தமிழ்ப் பணியாளர்கள் ஒன்று சேர்ந்து சாவாமருந்தாகிய தமிழ்ப் பயிருள் களை எடுக்க வேண்டும்.


அன்புத் தமிழகத்து இளந்தமிழா! நீ கற்ற கல்வியாவது இனித் தமிழைக் காக்கட்டும். என் கருத்தை எண்ணிப்பார்த்து, உங்கள் ஆய்வுத் திறனால் இதைவிடவும் உயர்ந்த உண்மைகளைக் கண்டறிந்து, இந்த விஷயத்தில் மட்டுமல்ல, தொல்காப்பியம் முழுவதையும் சீரமைக்கவும், வடமொழி ஆதிக்கத்தைத் தகர்க்கவும் பாடுபடுங்கள்.

●

*வரம்பிடப்பிடப்பட்ட தமிழ் மொழியில் வடமொழி நுழையும் இடத்தில் மட்டும் வேலியும் இல்லை, வரம்பும் இல்லை.*

# உணவு, உடை, தமிழ்ப் பண்பாடு

மருத்துவப் பேராசிரியர், செ.நெ. தெய்வநாயகம்



தமிழகத்தில் உணவுப் பழக்கங்களில் ஒரு அடிப்படை இழை ஓடிக்கொண்டிருப்பதை நாம் அனைவரும் உணர வேண்டும்.. ஆதி காலத்திலிருந்தே இயற்கை உணவை தமிழர்கள் விரும்பி உட்கொண்டார்கள்.

ஞாயிறு போற்றும் கூட்டமன்றோ? சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா என்ற வழக்கு அனைவரும் தெரிந்த ஒன்று. பழங்கள், காய்கறிகள் உட்கொள்ளுதல், கீரையை நன்றாக சமைத்து உண்ணுதல் போன்ற செய்திகள் புறநானூற்றில் தெளிவாக உள்ளன.

தமிழரும், உணவும் காலப்போக்கில் வெகுவாக மாறுபட்டு இன்றைய நிலையில் அதிகமாக மாற்றப்பட்ட உணவுகளையும் கண்ணாடிப் புட்டிகளில் அடைக்கப்பட்ட பானங்களையும் உணவகங்களிலும், கடைகளிலும் வாங்கி உண்ணும் பழக்கம் பரவி விட்டது.

தமிழகத்தில் பல சிற்றூர்களில் தூய குடிநீர் கூட கிடைக்குமா என்ற ஐயப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆனால் அங்கெல்லாம் புட்டிப் பானங்கள் தாரளமாகக் கிடைக்கின்றன.

எனவே உணவுக்கு அடிப்படையான தூயநீரை எவ்வாறு பாதுகாத்து உட்கொள்ள வேண்டும் என்பதை தெளிவாக தமிழர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இதற்கு ஒரு அடிப்படை வழியுண்டு. மழைநீரை நீர்நிலைகளிலும் நிலத்தடியிலும் சேமித்து அதைத் தூய்மை கெடாமல் பாதுகாத்து பயன்படுத்தும் முறையை தமிழ் மக்கள் அனைவரும் சிறு வயது முதல் தெரிந்து

கொள்ள வேண்டும். இதைப் பள்ளிகளில் ஒரு பாடமாகவே பயிற்றுவிக்க வேண்டும்.

தமிழகத்தில் தென்மேற்கு பருவக்காற்று 40 விழுக்காடுதான் மழைநீரைக் கொடுக்கிறது. மற்ற 60 விழுக்காடு பருவமழை மூலம்தான் அந்த நீரும் ஐப்பசி, மார்கழி, தை மாதங்களில் மட்டும்தான் கிடைக்கிறது. அப்போது ஓடைகளில், ஆறுகளில் ஓடிவரும், தண்ணீரை தடுத்து நிறுத்தி ஆங்காங்கே சேகரிக்க வேண்டும். ஊர் மக்கல் ஒன்று சேர்ந்து மழைச் சுனைகள் கட்டி விட்டால் நிலத்தடிநீர் தானாகப் பெருகும். கிணறுகளில் நீர்தங்கும்.

இவ்வாறு செய்தால் அண்டை மாநிலங்களை தண்ணீருக்காக கெஞ்ச வேண்டியது வராது. நீர் நிலைகள் மீது தூசுகள் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்த நீரை கதிரவனின் கதிர்களே தூய்மைப்படுத்தி விடும்.

ஆக தமிழர்கள் விழிப்போடு குடிநீரை பாதுகாத்துப் பருக வேண்டும்.

**உணவு வகை**

சத்து நிறைந்த, தூய்மை கெடாத, ஒருவித தீங்கும் செய்யாத உணவுகளைச் சாப்பிட வேண்டும். உலகெங்கிலும் வாழும் தமிழர்களுக்கு என்று தனிச் சிறப்பு உணவுகள் உண்டு. அதில் ஒன்று பழைய அமுது. நீர் உணா என்றும் சொல்லப்படும். இரவில் நீர் ஊற்றி வைத்து காலை நீரோடு இருக்கும் சோறு (பழைய அமுது) மிகவும் சிறந்த உணவாகும்.

வெந்த சோற்றில் நீரைப் போட்டு மூடிவைத்து விடுவதால் ஊட்டச் சத்து சேர்க்கும். பாலைத் தயிராக்கும் காளான் வளர்ந்து நன்மை புரியும். வெப்ப நாட்டில் உடலைக் குளிர்விக்கிறது பழைய அமுது. மண் சட்டியில் இட்டு வைத்தால் மேலும் குளிர்ந்து தெம்பூட்டும்.

> *இளம் கன்றுக்கு தாய்ப் பசுவின் பாலை உட்கொண்டு சேமித்து சீராக்கி குருதியோடு சேர்ப்பதற்காக நான்கு இரைப்பைகள் உண்டு*

கதிரவனின் கதிர்கள் படவாய்ப்பில்லாத நீரை காய்ச்சி வைத்துக் கொள்ள வேண்டும். அரசு சோதனைக் கூடங்களில் கொடுத்து நீரை சோதித்துப் பார்த்துக் கொள்ளலாம். இவைகளில் கிருமிகள் உள்ளனவா, உப்பு அதிகமாக இருக்கின்றதா, இரும்புச் சத்து அதிகமாக இருக்கின்றதா, புளோரீன் என்று சொல்லட்டும் தனிமச்சத்து அதிகமாக இருக்கின்றதா என்பதையெல்லாம் பொதுநல அமைப்புகள் சோதித்து சொல்லுவதற்கு முன்வரவேண்டும்.

நல்ல குடிநீர் எடுத்துக் கொண்டால் சேலத்தில், தருமபுரி போன்ற இடங்களில் காணப்படும் வெண்காவிப் பற்கள் முத்துப் பற்களாக மாறும், வரும் தலைமுறையில். இது மட்டுமல்லாமல், நல்ல குடிநீரையே குடித்தால் புழு பூச்சிகள் உடலில் சேர்வது குறைந்துவிடும். பூச்சிகள் உடலில் சேரச் சேரத்தான் குழந்தைகளின் உடல்நலம் பாதிக்கப்படுகின்றது.

நாகரிகம் என்ற பெயரால் பதப்படுத்தப் பட்ட கொழுப்புகள் நிறைந்த உணவை காசு கொடுத்து நம் மக்கள் விழுங்குகிறார்கள். ஆனால் அமெரிக்கா போன்ற நாடுகளில் இயற்கை உணவைத்தான் சாப்பிட வேண்டும் என்றும், இயற்கை உரம் இட்டதும் வேறுபொருள்கள் சேராததுமான உணவை மட்டுமே உட்கொள்ள வேண்டும் என்றும் கருத்து பரவி வருகின்றது.

அடுப்பில் வேகவைக்காமல், சுடவைக்காமல், காந்தம் செய்யாமல் சாப்பிடும் இயற்கை மாறா பழங்களும், காய்கறிகளும், பருப்பு வகைகளும் சாலச் சிறந்தன.

நம்முடைய உணவில் எது தேவையென்றால் புரதம், மாவு, சிறிது கொழுப்பு. ஊட்டச் சத்து மாவுச் சத்து நிறைந்த கனிகள் காய்கறிகள் இனங்களை உட்கொண்டால் உடல் சிறப்புற்று இயங்கும். உயிரை வளர்க்க உடல் வேண்டும் என்றார் திருமூலர். உயிரின் வீடு உடல்.

*1950, 60*களில் மருத்துவக் கல்லூரிகளில் மேல்நாட்டு உணவு ஆகிய புலால் உணவை ஒரு சிறந்த உணவு, முதல்தரம் வாய்ந்த புரதம் என்று கற்பித்து வந்தனர். இதை ஆங்கிலத்தில் First Class Protein என்று கூறினார்கள்.

இன்று அவர்களே இந்தப் புலால் உணவை தேவையற்றது என்றும் மனிதன் நல்ல உடல் நலத்துடன் வாழ்வதற்கு இறைச்சி, முட்டை தேவை இல்லை என்பதையும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்த மாமிச உணவில் தேவைக்கு அதிகமாக கொழுப்புச் சத்து உண்டு. தேவைக்கு மிறிய புரதச் சத்து உண்டு. இதை உண்ணுவதால் தேவைக்கு அதிகமாக கொழுப்புச் சத்தும், புரதச் சத்தும் உடலில் சேர்ந்து நோய்கள் பெருகும். இதய வலு குறையும். எவ்வாறெனில், குருதியில் கொழுப்புச் சத்து அதிகமாகிவிட்டால் உடலில் குருதி ஓட்டம் குறைந்து, இதயத் தமனிகளில் குருதி ஓட்டம் தடைப்பட்டு மாரடைப்பு ஏற்படலாம். இதைப் போலவே பக்க வாதம் என்று சொல்லப்படும் மூளைத் தமனி அடைப்பு ஏற்படவும் ஏதுவாகிறது. இதனால் புலால் உணவைத் தவிர்க்க வேண்டும்.

**ஆங்கிலேயர் ஆட்சி சென்றபிறகுதான் தமிழரின் உடையையும் பண்பாட்டையும் சீரழிக்கும் போக்கு அதிகம்**

பால் உணவையும் சிறந்தது என்று வெளிநாட்டினரும் நம் நாட்டினரும் பரப்பி வருகின்றனர். ஆனால் அறிவு பூர்வமாக பார்க்கும்பொழுது குழந்தை பிறந்து 1 1/2 வயது வரைக்கும்தான் தாய்ப்பால் தேவைப்படுகிறது. பசும்பால் எருமைப்பால் மனித உடலுக்கு தேவையில்லை. இளம் கன்றுக்கு தாய்ப்பசுவின் பாலை உட்கொண்டு சேமித்து சீராக்கி குருதியோடு சேர்ப்பதற்காக நான்கு இரைப்பைகள் உண்டு. ஆனால் மனிதருக்கு இருப்பது ஒரே ஒரு இரைப்பைதான். நான்கு இரைப்பை செய்ய வேண்டிய செரிமானத்தை ஒரு பை எப்படிச் செய்யும்?

மாட்டுப்பால் சேர்த்தால் நெஞ்சுச் சளி கட்டும் என்பது நடைமுறைச் செய்தி. ஆஸ்மா நோயுள்ளவர்கள் பால் உணவை அடியோடு நிறுத்திவிட்டால் நுரையீரல் மூச்சுக் குழலில் சேரும் சளி குறைந்து விடுகிறது.

அப்படி என்றால் பால் அறவே வேண்டாமா? இல்லை மிகுந்த நோய்வாய்ப்பட்டு அல்லது காய்ச்சல் அடித்து இளைத்து மிகவும் சோர்ந்துள்ளவர்கள் புத்துணர்ச்சி வருவதற்கு சில நாட்கள் பால் எடுத்துக் கொள்ளலாம். இதுபோல் தாய்ப்பால் கிடைக்காத குழந்தைகளுக்கும் பசுப்பால் தண்ணீரைக் கலந்து கொடுக்கலாம்.

பாலைப் பயன்படுத்துவதற்கு ஒரு சிறந்த வழி, அதை மோராக்கி குடிப்பதுதான். இதில் கொழுப்புச் சத்து குறைந்து உபரியான வெண்ணையையும் அகற்றி விடுவதால் உடலுக்கு நல்லது. வெப்பமும் குறைந்து விடுகிறது.

முக்கனிகளில் மா, பலா, வாழை சாப்பிடுவதால் ஈளை (ஆஸ்மா) நோய் வராது. மாம்பழம் சாப்பிட்டால் மலம் இளகி பேதியாகும், சூடு என்று பயப்பட வேண்டாம். ஈளை நோய் கண்டவர்கள் தவிர்க்க வேண்டிய பழங்கள் சாத்துக்குடி, எலுமிச்சை, கமலாப்பழம் இவைகளில் சிட்ரிக் அமிலம் உண்டு. இது பலருக்கு நெஞ்சில் சளி கட்டும். மற்ற பழங்கள் அனைத்தையும் ஈளை நோயுள்ளவர்கள் உட்கொள்ளலாம்.

நாள்தோறும் இரண்டு வாழைப்பழம் சாப்பிட்டால் மலம் எளிதில் போகும். உடம்புக்கு தேவையான தனிமம் மற்றும் ஊட்டச்சத்து புரதச் சத்து யாவும் மிகத் தூய்மையான நிலையில் கிடைக்கின்றன.

இந்த வாழை உற்பத்தியைப் பெருக்க வேண்டும். வாழை, தக்காளி, மஞ்சள், வெங்காயம் சாகுபடி செய்யும் உழவர்களுக்கு உற்பத்தி பெருகும்போது இவைகளைப் பாதுகாக்க முடியாமல் விலைச்சரிவின் மூலமாக தாங்க முடியாத நட்டம் ஏற்படுகிறது.

அதிகமாக விளையும் இப்பொருள்களைக் கெடாத வண்ணம் பாதுகாத்து உணவாகவும் ஊட்டச் சத்தாகவும் பயன்படுத்தும் வழிமுறைகளை ஆராய்ந்து தெரிந்து கொள்ளவேண்டும். உணவுப் பொருளை பதப்படுத்தி சீராக்கி மிக அதிகமாக தமிழகத்திலும் தமிழ் பேசும் உலகத்திலும் பரப்பி ஆக வேண்டும். அப்போதுதான் பயிர் செய்யும்

தமிழ் உழைப்பாளிக்கு போதிய வருவாய் கிடைக்கும். தொழிலும் சிறக்கும். சிற்றூரை விட்டுவிட்டு நகரங்களை நாடும் பழக்கமும் குறையும்.

**தமிழரும் உடையும்**

தமிழகத்தின் தலைநகரில், தமிழர்களை யாரேனும் கண்டால் அவர்கள் தமிழர்கள்தான் என்று சொல்லுவதற்கு அடையாளம் உண்டா? ஏன் இந்த ஆடை மாற்றங்கள்? உடைமாற்றங்கள்? 200 வருடங்கள் ஆங்கிலேயர் ஆண்டார்கள். அப்பொழுதுகூட ஆண்களும் பெண்களும் எமது பண்பாடுகளுக்கு ஏற்ப உடைகளை அணிந்தே வந்தனர். ஆங்கிலேயர் ஆட்சி சென்ற பிறகு தமிழ் நாட்டில் உடையையும் பண்பாட்டையும் சீரழிக்கும் வகையில் பஞ்சாபி உடைகளும் கலப்பு ஆங்கிலம் பேசும் போக்கும் தமிழர்களிடம் பரவி வருகிறது.

இந்த பஞ்சாபி உடைகளுக்கு சில பெண்கள் சொல்லும் காரணம் நாங்கள் ஓடுவதற்கும் பேருந்தில் பயணம் செய்வதற்கும் எளிதாகவுள்ளது என்கிறார்கள். இது நாகரிகம் என்பதை தவிர வேறொன்றுமில்லை. தஞ்சாவூரில் உள்ள பெரியகோவில் என்ற நெடிய உயர் கட்டிடம் ஆயிரத்துநூறு வருடங்களுக்கு முன்னால் தமிழரால் கட்டப்பட்டது. இதில் பணிபுரிந்த பெண்களின் பங்கு அளிப்பரியது. இவர்கள் அனைவரும் சேலை கட்டிக் கொண்டுதான் மிக உயரமான பகுதிகளுக்கு சாரம், சாய்தளம் போன்ற அமைப்புகளிலும் ஆபத்தான பகுதிகளிலும் நின்று பணிபுரிந்தார்கள்.

இன்றும் வயல்களில் சேலைகட்டிக் கொண்டுதான் களையெடுத்தல், கதிர் அறுத்தல், நெற் கதிர் சுமந்துகொண்டு செல்லுதல் போன்ற கடினமாக வேலைகள் செய்கிறார்கள். அவர்கள் யாரும் பஞ்சாபி உடை அணிவதில்லை. பஞ்சாபி உடைகள் வந்த பிறகுதான் கற்பழிப்புகள் பெருகியுள்ளன.

சேலை என்பது தொண்டுதொட்டு வரும் உடை மட்டுமல்ல. நம்முடைய நெசவாளர்கள் சிறந்த முறையில் பல வண்ணங்களில் சேலைகளை தயாரித்து தருகிறார்கள். இன்று பஞ்சாபி உடைகள் பெருகி விடுவதால் நெசவுத் தொழில் செய்யும் தமிழர்கள் ஏழ்மை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இதை நாகரிகம் பேசும் பெண்கள் தமிழ், தமிழர் என்று பேசும் எழுத்தாளர்களும், பேச்சாளர்களும் சிந்திக்க வேண்டும்.

நமது நாட்டின் வெப்பத்திற்கு ஏற்ற உடைகள்தான், சேலை மற்றும் வேட்டி, தலைப்பாகை அல்லது வெள்ளைத் தொப்பி ஆகியவை தமிழர்களுக்கு ஏற்றதாகும்.

**ஒழுக்கமும் பண்பாடும்**

பன்னாட்டு நிறுவனங்களின் தாக்கம் திரைப்படம், தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள் நிறுவனங்கள் மூலமாக தமிழ் மண் முழுமையாகப் பரவி நம் இளைஞர்கள் சீரழிந்து வருகிறார்கள். இதன் வெளிப்பாடுதான் அமெரிக்காவில் உள்ள கொலராடோ மாநிலத்தில் டென்வர் என்ற நகரத்தின் அருகே இரண்டு பள்ளி மாணவர்கள் தங்களுடன் உடன்பட்டிருக்கும் மாணவர்களை சரமாரியாக சுட்டுக் கொல்ல ஏவிய மனநிலை.

இதில் அவர்கள் "நாங்கள் தனிமைப் படுத்தப்பட்டோம், எங்கள் பெற்றோர் எங்களைப் பற்றி கவலைப் படவில்லை. மற்ற இளைஞர்களும் எங்களை கேலி செய்கின்றனர்" என்றெல்லாம் வருத்தப்பட்டு, மனதில் வக்கிரபுத்தி வளர்ந்து எளிதாக வாங்கக் கூடிய கடைத் தெருவில் துப்பாக்கிகளைக் கொண்டதாக அமெரிக்க சமூகம் தானே, இத்தகைய சமுதாய சீரழிவுப் போக்குக்கு வழி வகுத்தது. அங்கெல்லாம் குழந்தை பிறந்தவுடன் சில ஆண்டுகளிலேயே தாய், தந்தை குழந்தைகள் உறவு, பிணைப்பு குறைந்து விடுகிறது. பிள்ளைகளை தனியே வளர்க்கும் பாங்கு வளர்ந்து விட்டது. ஆனால் இப்பொழுது இதன் விளைவுகளை உணர்ந்து கொண்டு கூட்டுக் குடும்ப முறையை விரும்பி ஏற்றுக் கொள்கிறார்கள்.

எமது தமிழ்க் குடும்பங்கள் தொழில் காரணமாகவும், இனப் பிரச்சனை காரணமாகவும் பிரிந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாலும் அங்குள்ள தமிழர்களோடு நட்பு ஏற்படுத்திக் கொண்டு நம் இனத்தவர் பொறுமையாகப் பழக வேண்டும்.

விரசமான கேளிக்கை, மதுவகைப் பழக்கங்களில் இருந்து விடுபட்டு, தமிழர் வாழ்வு செழிக்கவும், உலகத் தமிழர் முன்னேற்றத்திற்கு ஒன்றுபட்டு பாடுபடுவோம்

# சித்த மருத்துவம் சிறக்கும்

## டாக்டர் ஜி. சிவராமன்

தேசிய சித்த மருத்துவ மையத்திற்கு அண்மையில் சென்னை -தாம்பரத்தில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தமிழின அறிவியலின் ஆழ்ந்த கருத்துக்களில் ஒன்றே சித்த மருத்துவம்; அகிலம் முழுவதும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் ஆய்வுகளில் அக்னிப் பிரவேசம் செய்து, எந்நாட்டவர் சிந்தையிலும் இனி இருந்திடச் செய்யப் போகும் அரிய முயற்சியின் முதல்படி.

பக்குடுக்கையாரின் புறநானூற்று வரிகளே இன்றைய அணுக் கொள்கையின் முதல் வித்து என்று டொமாக்ரடீஸ், எம்பீ டாக்ஸ் போன்ற ஐரோப்பிய அறிஞர்களின் கூற்று வெளிப்படுத்துகிறது. இங்ஙனம் தமிழ் அணுவியல் படைத்த நம் முன்னோர் அதன் அடிப்படையில் இம்மண்ணுக்கு உகந்த மருத்துவத்தையும் படைத்து நம்மைக் காத்தனர்.

மாற்றான் கொண்டு வந்த நாகரிகத்தால் 'மாற்று மருத்துவமாய்' இதனைக் கூறி நம் தாய்க்குத் தாதிப் பட்டம் கட்டிவிட்டு, இயற்கையை, இயல்பை மீறி விட்டு, இன்னலில் தவிக்கிறோம். இனியும் மடமை கூடாது! மாற்று மருத்துவம் நம் சித்த மருத்துவமல்ல; நம் முதல் மருத்துவம் இந்திய மருத்துவ முறையான சித்த மருத்துவம்தான் என்பதை நமக்கும், அறிஞர் உலகுக்கும் உணர்த்திட அடிக்கல் நடப்பட்டுள்ளது.

"தேசிய சித்த மருத்துவ மையம் தமிழகத்தில் அமைக்கப்படும்" என்று 1984 ஆம் ஆண்டே அறிவிக்கப்பட்டது. பல தடைக் கற்களை மீறி, அதன் மூலம் கல் தாம்பரத்தில் ஊன்றப்பட 15 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. இந்த இடைப்பட்ட காலத்தில் அறிவியல் வித்துகள் வேற்று நாட்டவர்களால், அங்கீகாரம் பெறப்பட்டு காப்புரிமைக் களத்தில் நிற்கின்றன. வேம்பு, மஞ்சள், இலவங்கப்பட்டை ... வரிசையில் இன்னும் எத்தனையோ.... இனியும் காலதாமதம் கூடாது.

தேய்வு நோயையும்(AIDS) கட்டுப்படுத்தும் ஆற்றல் சித்த மருத்துவத்திற்கு உண்டு என ஆரம்ப முடிவுகள் வெளிவந்துள்ள இச் சூழலில் இன்னும் இம் மருத்துவத்திற்கு உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெறவில்லை. இதைப் பெறுவது இம் மையத்தின் தலையாய கடமை. தமிழ் பேசும் மக்களிடையே அன்றாட வாழ்வில் இணைந்து நிற்கும் இம் மருத்துவம் நவீன அறிவியலின் பார்வையில் ஒப்புநோக்கப்பட்டு, இதன் உண்மைகள் உலகுக்கு உணர்த்தப்பட வேண்டும். இதற்கான களப்பணி மிக முக்கியமானது.

இன்றளவும் தமிழகமெங்கும் சிதறிக் கிடக்கும் பரம்பரை மருத்துவர்களின் அறிவை, களப்பணி மூலம் சேகரிக்க வேண்டும். வறுமையில் இழந்தவை, வாரிசால் தொலைந்தவை, வாய்ப்பின்மையால் மறைந்தவை எனப் பட்டியலிடலாம். இப்பரம்பரை அறிவினைப் பாதுகாக்க இயலாமல் நிற்கும் நிலையை மாற்றி, அறிவியல் பார்வையுடன் அவர்களின் அறிவை அரங்குக்குக் கொண்டு வர வேண்டும். மருத்துவப் பட்டதாரிகளும், அறிஞர்களும் இம்மையத்தை அதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அந்நாளில் தனிநபருக்காக அவரவர் உடல் நிலைக்கு ஏற்றாற்போல் தனித்தனியாக மருந்துகள் சித்த மருத்துவர்களால் செய்யப் பட்டன. ஒருவருவருக்கு கொடுக்கப்படும் மருந்து, மற்றவருக்குச் சிறப்பாகப் பயன்தராது என்ற நிலை அப்போது. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயன்படும்படி, வெவ்வேறு திறன் நிலையில், வீரிய நிலையில் கூடிய பல மருந்துகள், ஆய்வுப்பாதையில் வெளிப் படுத்தப்பட வேண்டும். மருந்து களுக்கான மூலிகை மற்றும் மூலப் பொருள்களைத் தேர்வு செய்வதில் தொடங்கி மருந்து ஆக்கத்தின் ஒவ்வொரு நிலையிலும் பின் முடிவிலும் தர நிர்ணயம் செய்யப்பட வேண்டும். எவரும்

எளிதில் பெறக் கூடிய வடிவில், விலையில், அருகில் அவை கிடைக்கும் வழியைக் காண இம் மையம் ஆவன செய்ய வேண்டும்.

குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்படுவது போல, சித்த மருத்துவ நோய்த் தடுப்பு முறைகளான உரைமருந்து வழங்குதல் போன்றவை அறிவியல் விளக்கங்களுடன் கட்டாயமாக்கப் பட வேண்டும். அதற்கு அடிப்படை ஆய்வுகள் அனைத்தையும் இம் மையம் மேற்கொள்ள வேண்டும். இதற்காக, கிராமப்புறங்களில் திரட்டப்பட்டு, அவை சோதிக்கப்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும்.

1964 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சித்த மருத்துவக் கல்லூரியில், ஏறத்தாழ 35 ஆண்டுகள் சென்ற பின்னரும் பாடத் திட்டங்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதும் இல்லை. சொற்ப எண்ணிக்கையில் வெளியாகியுள்ள புதிய புத்தகங்களில்கூட புதிய கருத்துகள் ஏதுமின்றி மறு அச்சாக மட்டுமே அமைந்துள்ளன. இத்துறையின் இயல்பான பரிணாம வளர்ச்சி கூட இல்லாமல் போனதற்கு இது ஒரு தலையாய காரணம். இக்குறையைக் களைய இம் மையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய ஆய்வு நூல்கள் பல வெளிவர வேண்டும். உலகெங்கும் நடைபெறும் பழம் மருத்துவ முறைகளின் ஆய்வு முடிவுகள் சித்த மருத்துவம் பயிலும் மாணவருக்கு பயன்படும்படியாய் உடனுக்குடன் கிடைக்க வேண்டும். அதில் முனைவோருக்கு இத் தேசிய மையம் ஊக்குவிப்பு அளிப்பதுடன் மையத்தின் பொறுப்பாளர்கள் பேராசிரியர்கள் இதைக் கட்டாயக் கடமையாகச் செய்ய வேண்டும்.

சித்த மருத்துவத்தின் உட்பிரிவுகளான வர்ம சிகிச்சை மற்றும் யோக சிகிச்சைப் பிரிவுகளில் முழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 'சித்த மருத்துவம் முழுமையான மருத்துவம்; உடல், மனம் இரண்டையும் ஒருங்கே பேணும் மருத்துவம்' என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் 'பக்க விளைவு இல்லாதது, மீண்டும் நோய் வராது தடுக்கும், முழுமையான நலன் கிடைக்கும்' என்ற மக்களின் நம்பிக்கையை நிலைபெறச் செய்ய இயலும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இம்மையம் கொண்ட ஆய்வுகளின் முடிவுகள், அரசு பொது மருத்துவமனைகளின் மூலம் மக்களுக்குப் பலனளிக்கச் செய்ய வேண்டும். மஞ்சள் காமாலைக்குக் கீழாநெல்லி என்பது அனைவரும் அறிந்த மருந்து. ஆனால் அக்கீழாநெல்லி சூரணம் அரசு சித்த மருத்துவமனை மருந்தகத்தில் கிடையாது.

தமிழ்மரபு காக்கப்பட வேண்டும்; வளர்ந்து உயர வேண்டும் என்று கருதும் தமிழ்ச் செல்வர்கள் சித்த மருத்துவ ஆய்வு மருந்துகளின் தர நிர்ணயம் போன்றவற்றை மேற்கொள்ள தனியார் நிறுவனங்களையும் தொடங்கலாம். தரப்படுத்தப்பட்ட சித்த மருந்துகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை களையும் தொடங்க இதுவே சிறந்த நேரமாகும். தனியார், அரசு கூட்டு முயற்சி மிகக் குறுகிய காலத்தில் சிறந்த பயனைத் தரும்.

தேசிய சித்த மருத்துவ மையம், சித்த மருத்துவர்களின் நெடுநாள் கனா; தமிழின அறிவியல் அரங்கேறவிருக்கும் சங்கப்பலகை. இனியும் நொடிப்பொழுதும் தாமதிக்காமல், அரசும், இதன் அமைப்பாளர்களும் முழு வீச்சுடன் செயல்பட வேண்டும். இதன் மூலம் அடுத்த நூற்றாண்டில், தமிழர் அறிவியலான சித்த மருத்துவத்தின் துணை கொண்டு, நோயில்லாத நலவாழ்வு நமக்கெல்லாம் கிடைத்திடச் செய்ய வேண்டும்.

(கட்டுரையாளர், சென்னை சித்த மருத்துவப் பட்டதாரிகள் சங்கச் செயலாளர்)

## சோழர் காலத்து வாள்

திருச்சியில் சோழர் காலத்து வாள் ஒன்று ஜெயம் கொண்டம் அருகே கிடைத்துள்ளது.

திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டான் அருகே ஆயுத களம் என்ற இடத்தில் உள்ள ஒருவரிடமிருந்து பழங்காலத்து வாள் ஒன்றை தொல் பொருள் ஆராய்ச்சி நிறுவனம் பெற்றுள்ளது. இந்த வாள் சோழர் காலத்தைச் சேர்ந்தது என்று தெரியவந்தது.

ஆயுதகளம் என்ற இடம் கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள பிரகதீஸ்வரர் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது. எனவே ஆயுத தயாரிப்புகளின் மையமாக இந்த இடம் விளங்கியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அதேபோல் கொத்தமங்கலம் என்ற இடத்தில் உள்ள வைணவ கோயிலில் இரண்டு கற்பலகைகள் காணப்படுகின்றன. ஒன்றில் குடக்கூத்து என்று எழுதப்பட்டுள்ளது. குடக்கூத்து என்பது இக்காலத்திய கரக ஆட்டத்தைக் குறிப்பது ஆகும்.

# வர்மக் கலை மர்மம்

**கிள்ளி**

வர்மம் ஒரு மர்மம் என்பது முதுமொழி. வர்மம் வன்மமாக உடல் உறுப்புக்களில் ஏற்படுவது. படுவர்மம் பன்னிரண்டு, தொடுவர்மம் தொண்ணூற்றாறு என்பது சித்தர்கள் கூற்று. உடலில் 12 இடத்தில் அடிபட்டால் படுவர்மம் உண்டாகும். அதுபோல 96 இடத்தில் தொட்டு அழுத்தினால் தொடுவர்மம் ஏற்பட்டு விடும். இவை 108ம் மர்மமானவை. உயிருக்கும் உடலுக்கும் ஆபத்து தரக்கூடியவை. இயற்கையாகவோ, விபத்து — ஆபத்து ஏற்படுவதனாலோ இந்த அபாயம் ஏற்படலாம்; அல்லது தாக்கப்படுவதாலும் இவற்றுக்கு வலியும் நோவும் உண்டாகும். வர்மத் தாக்கு என்ற அடி — உதைப் பயிற்சியாலும் இந்நோய்களைக் குணமாக்கலாம், அல்லது சித்த மருத்துவமும் இதற்கு வைத்தியம் ஆகும். பழந்தமிழ்ச் சித்தர்கள் இவற்றுக்குரிய அரிய நூல்களைப் பாடல்களாகவே எழுதி வைத்துள்ளனர்.

முறிவுசாரியான வர்ம வரலாறு :

*கேளப்பா தடியடிகள் படுவதாலும்*
*கெடியான எறிவிசைகள் கொள்ளலாலும்*
*வாளப்பா கட்டைகுற்றி தட்டலாலும்*
*மாற்றானின் கைப்பிடிகள் படுதலாலும்*
*மேலப்பா ஆகாசமதிலே நின்று*
*மெய்மறந்து கைமறந்து விழுதலாலும்*
*தாளப்பா பற்பலவாம் விதத்தினாலே*
*சங்கையில்லா காலமது சாருந்தானே!*

உடலில் நாடி நரம்புகள் தட்டுப்பட்ட உடனே உணர்விழந்து, உயிரிழக்கும் அபாயம் உண்டாகிவிடுவதுண்டு. பழஞ்சுவடிகளில் உள்ள வர்ம உத்திகளை, அதன் மர்ம உண்மை களைப் பழங்காலச் சித்தர்கள் கண்டு பிடித்து உள்ளுணர்வாக உணர்ந்ததை எழுதியும், பயிற் சித்தும் இக்கலையைப் பாதுகாத்தனர். மூவாயி ரத்து ஐநூறு ஆண்டுக்கு முன்பே இக்கலை தமி ழரிடம் வாழ்ந்தது. வர்ம சூத்திரம் என்ற இதன் மர்மம் பொதுமக்களுக்கு விளங்காமலும், எல்லாரும் விளக்கிக் கூற முடியாமலும் உள்ள ஒரு அருங்கலையாகும் இது.

வர்ம வடிவாட்டம் என்ற தற்காப்புக் கலை இன்று உலகில் பெருஞ் செல்வாக்குடன் ஆடப்படும் "குத்துச் சண்டை" போன்ற வீர விளையாட்டாகும். அடித்திடும் இப்போர்க்கு நுட்பத் திறனும் திடீர் உத்தியும் விளையாடுவோருக்கு வேண்டும். இருவர் விளையாடும் இதுவே "வரஸ்சிலிங்" என்ற போட்டியை உலகம் வீராவேசமாக ரசிக்கிறது.

இதில் வல்லவர்களான தமிழர்களை வென்றுவிட முடியாத அளவில் பலர் இன்றும் குமரி மாவட்டத்திலும், கேரளாவிலும், இங்கும் உள்ளனர். இக்கலை ஏழாம் நூற்றாண்டில் பல்லவ அரசர்களாலும், சீனா, நிப்பொன் நாடுகளில் புத்த சமயம் பரப்பச் சென்ற தமி ழராலும் அங்கும் உலகெங்கும் பரப்பப்பட்டன. காஞ்சிப் பேரரசர் போதிதர்மன் என்ற தமிழர் இக்கலையை வீர விளையாட்டாகவும், போர்க்கலையாகவும், வைத்தியச் சாதனையுடன் பரப்பிவிட்டார். அங்கும், கிழக்காசியாவிலும் செறிவாக பரவி வளர்ந்தது.

**தொட்டுக் காட்டும் வித்தை இது!**

சீனாவில் சூழின் குத்துச் சண்டையாகவும், குங்பூ, ஜூடோ, ஜியூ ஜிட்சூ (குத்து வரிசை), கராத்தே (கரம் = கையாட்டம்) எனப் பல பெயரில் தற்காப்பு விளையாடல்களாகி விட்டன. இதற்கு அடிப்படையே "களரி பயிட்" என்ற (களப்பயிற்சி) தமிழர் கலையாகும். மலாயில் "சிலாட்" என்ற சிலம்பம் எனச் சொல்லப்படுவதாகும். இக்கலையும் அதற்கு மூலவித்தாகும். கொரியா விளையாட்டு "தேக்குண்டோ!"

"உரிமி வாள்" என்ற இருபக்கக் கூர்வாளை பழங்காலத்தில் புத்தச் சீடர்கள் பயன் படுத்தினர். சீனச் சூழின் கோயிலில் அக்காலத்தில் இப்பயிற்சி ''சுழல்வாள்'' போர்ப்பயிற்சியுடன் திகழ்ந்தது. வெறும் கை கால்களால் தற்காத்துப் போராடும் சண்டையும், கட்டைக் கம்பு, நெட்டைக் கம்பு (சிலம்பம்)களால் போரிடும் முறையும் கத்திக் கவசத்துடன் போரிடும் முறையும் பல்வேறு உத்திகளால் வளர்ந்தன. அக்காலங்களில்

புத்தமதப் பரப்பியத்துக்கும், உள்ளாட்சிப் போர்களுக்கும், அயலகங்களில் 19ம் நூற்றாண்டு வரை கிழக்காசியாவில் வீர தீரத்துடன் இப் போர்க்கலை வளர்க்கப்பட்டன. சீனா, கொரியா, நிப்பொன் நாடுகளில் மன்னர்கள் தத்தம் நாடுகளில் வளர்த்தனர். இங்கு கோயில் காவல் தெய்வங்களாக (துவார பாலகர்கள்) சிலைகள் நாட்டப்பட்டன. "அடிக்கு அடி!" என்பது இதன் வீரக்கூற்று. "அடி! இடி! குத்து! வெட்டு! — இழுத்தெறி! உதை — எகிரி உதை" என்ற வீர விளையாட்டுக்கள் இன்று "சிலம்படி வளமாக" வளர்ந்து வருகிறது.

இந்த வர்மம் முதலிய சிலம்பக் கலைகளில் இறைப்பற்றும், குருபக்தியும் இல்லாதவர்கள் சிறப்படைய முடியாது. வர்மக்கலை பயில வயது மிகுந்தவர்க்கே வரும் என்பது ஒரு கொள்கையாக நம்பப்பட்டு வருகிறது.

"போர்முறை கற்று வைத்தியம் கற்காதவர் ஆசான் ஆகார்!" என்பது வர்மாசிரியர்களின் கருத்து. சட்டமுனி சில சட்டங்களையும், நுட்பங்களையும் திட்டமிட்டு வகுத்தவர். இவ்வாறு பல சித்தர்களான குருமுனிவர்கள் இதன் திறன்களை உருவாக்கினர். செஞ்ஞாயிற்றுச் சித்தர்களும், நெற்றிக்கண் சிவனார்களும், பரதப் பரஞ்சோதிகளும், அகத்தியரும், திருமுருகரும், பழந்தமிழ்ப் பாண்டிய, சேர, சோழ மன்னர்களும், போர்த் தளபதிகளும் இக்கலைகளில் வல்லவர்களாக இருந்திருக்கின்றனர்.

82 வயதான தோக்கோ குரு கண்ணன் என்பவர் வர்மத்தின் மர்மங்களை நன்றாக தெரிந்தவர். அவர் மலேசியாவில் 60 ஆண்டாக சிலம்பப் பயிற்சி நடத்தி வருகிறார். அவரது இயக்கந்தான் "உடற்பயிற்சி தற்காப்பு மன்றம்!" இது பதினாறு ஆண்டு காலமாகப் பதிவு செய்து கிள்ளானிலும், பெட்டாலிங்கிலும், தேசியப் பல்கலைக்கழகத்திலும் பல நூறு பேருக்குப் பயிற்சித்து வருகிறது. இவர் இன்றும் உடல் நலமும் பலமும் பெற்று வளத்துடன் பயிற்சி தந்து நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. மகா குருவான இவர் எளிமையான தோற்றமுடையவர்.

இவர் வர்மக் குறிப்புகள் சிலவற்றை விளக்கினார். வர்மத்திற்கு மூலிகை மருந்துண்டு, அல்லது மறுபடியும் (வேறிடம்) அடிப்பதால் அதனைத் தீர்க்கலாம். வேறு மருந்துண்டு. அடிபடாத வேறு ஓரிடத்தில் "நரம்பு உருவுதல்" அந்த வைத்தியம். உருவுதல் என்பது (நாடி நரம்பு, மூட்டு — சதைப் பிறழ்வு) பழக்கத்தால் ஏற்பட்ட பயிற்சியாதலால் இது மூன்றும் கொடூர மர்மமாகும். ஓகத்திற்கும் (யோகம்) வர்மத்திற்கும் சம்பந்தம் உண்டு. இயங்க முடியாத நரம்படியால் வாதம் வருவதுண்டு. வர்ம அடியால் நரம்பு அறுபடலாம். அடிப்பதாலும், அடிபடுவதாலும் இது ஏற்படும்.

## வர்மம் கற்கத்தக்கவர்களுக்கு வேண்டிய பண்புகள்: -

பிறர்க்கு கேடு நினைக்காதவர்கள்; சூதுவாது பேதமற்றவர், காமவெறி, முன்கோபம் இல்லாதவர்; நாற்பது வயதுக்கு மேற்பட்டவர், மது — மாது பழக்கமற்றவர்; இறைப்பற்று, குருபற்று, மெய்மை, தன்னடக்கம் முதலிய அருங்குணவான்; சிலம்பம் முதலிய பயிற்சியில் முதிர்ச்சி பெற்றவர்; நிதானமான உடலுறவு — கலப்புணவுடன் உணவுக் கட்டுப்பாடு, சைவ உணவு உண்பவர், நோய் நொடி அற்ற உடல்வளமுள்ளவர்; ஐம்புலன் தூய்மை உடையவர் ஆகியோர்.

வர்ம அடிப்பட்டவர் சாதாரண அடியாக இருப்பின், வாயில் உமிழ்நீர் வடியும் (சுரக்கும் இது நச்சு நீராகும்) அதே இடத்தில் அதிக அடிப்பட்டிருந்தால், இரத்தம் வடியும், வலிமிகுந்துவிடும். உடல் இயங்காது. வாய் நுரைதள்ளி மயக்கமாகிவிடுவர்.

1. சின்னக்காது : குரண்டிக்கலம் என்ற ஓரிடம் உடலில் உண்டு. இவ்விடம் தாக்கப்பட்டால் (அல்லது அழுத்தப்பட்டால்) காது மந்தமாகிவிடும். நாளடைவில் காது செவிடாகிவிடும்; காது கேட்காது. நாலரை நாழிகைக்குள் (இரு மணி நேரம்) பரிகாரம் செய்துவிட வேண்டும். இது மிக அபாயமானது.

2. கொழுந்துக்கலம் : மார்பகம் — நெஞ்சுக்குக் கீழுள்ள முக்கிய பாகம் இது. வயிற்றுக்கு மேலே கடினமான இடம்; ஆபத்தான இது அடிபட்ட ஒன்றரை மணி நேரத்துக்குள் இதற்கு வைத்தியம் (வர்மா அடிதான் மிக முக்கியமானது) செய்யாவிட்டால் உயிருக்கே ஆபத்து விளையும். அடியும் கொடுத்து மூலிகை மருந்தும் தந்து உயிரை மீட்கலாம். இது ஆபத்தான நோயாகும்.

●

# யோகம்
# ஒரு முழுமையான அறிமுகம்

மருத்துவர் ந. சந்திரசேகர், தமிழகம்

யோகம் என்பது என்ன? யோகம் என்பது நாம் செய்யும் காரியங்களின் சிறப்பை மேம்படுத்துவதே ஆகும். காரிய சித்தியே யோகமாகும். ஆம், யோகம் என்பது ஒவ்வொருவருக்கும் அவரவர் ஈடுபட்டிருக்கும் வேலை சம்பந்தப்பட்டதும், அதனை மேலும் மேலும் சிறப்புடையதாக்கவும் உதவும் ஒரு செயலே ஆகும்.

இதனைச் சற்று விளக்கமாகப் பார்ப்போம். இவ்வுலகில் பிறந்த அனைவருக்கும், உணவு, உடை உறைவிடம் போன்றே இன்றியமையாத ஒன்று காரியம் ஆகும். ஒவ்வொருவரும், ஒவ்வொரு நிமிடமும் அறிந்தோ அல்லது அறியாமலேயோ ஏதாவது ஒரு காரியம் செய்து கொண்டுதான் இருக்கிறோம். தூக்கமும் கூட மனத்தின் ஒரு காரியம் தான். இவ்வாறு நாம் செய்யும் பலதரப்பட்ட காரியங்களை மிக்க சிறப்பாக செய்வதற்கு உதவும் ஒரு செயல்தான் யோகமாகும்.

நமக்கு நமது காரியங்களைச் செய்வதற்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற உபகரணம் நமது உடலும் மனமும்தான். எந்த ஒரு காரியமும் சிறப்பாக செய்வதற்கு, அதைச் செய்யும் உபகரணங்களும் சிறப்பாக இருத்தல் அவசியம். யோகாவின் முதல் நிலையே இதுதான். அதாவது உடலையும் மனதையும் செம்மையாக வைத்திருத்தல் வேண்டும்.

இரண்டாவதாக உபகரணங்கள் சிறப்பாக இருந்தால் மட்டும் போதாது. அதனைச் செய்ய வேண்டிய காரியங்களுக்குத் தக்கவாறு தயார்படுத்துதல் அவசியம். இது ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்ய வேண்டிய காரியங்களுக்குத் தக்கவாறு மாறுபடும். அலுவலகங்களில் உட்கார்ந்து கொண்டே வேலை செய்பவர்களுக்கு ஒரு மாதிரியாகவும், வெளியிடங்களில் அலைந்து திரிந்து வேலை செய்பவர்களுக்கு வேறு மாதிரியாகவும், கடின உடல் உழைப்புச் செய்பவர்களுக்கு அதற்கு தக்க மாதிரியும் உடலையும் மனத்தையும் தயார்ப்படுத்துவது யோகாவின் இரண்டாவது நிலையாகும்.

இவ்வாறு யோகத்தின் மூலமாக நமது உபகரணங்களாகிய உடலையும் மனதையும் செம்மையாக வைத்துக் கொண்டு, செய்ய வேண்டிய காரியத்திற்கு தக்கவாறு அதனைத் தயார்படுத்திக் கொண்டு பிறகு காரியங்களில் ஈடுபட்டால் காரியத்தின் சிறப்பு ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் கூடிக் கொண்டே போகும் அல்லவா?

யோகாவிற்கு இன்னமும் முக்கியமான ஒரு மூன்றாவது நிலை உள்ளது. எந்த ஒரு காரியம் ஆகட்டும், அது எவ்வளவுதான் உன்னதமான காரியமாகவே இருக்கட்டும், அதற்கும் சில எதிர்விளைவுகள் உண்டு. எல்லா காரியங்களுக்கும் அந்தந்த காரியங்களுக்குத் தக்கவாறு எதிர் விளைவுகள் உண்டு. அந்த எதிர் விளைவுகள் நமது உடலையும் மனதையும் பாதிக்காதவாறு செய்வதே யோகாவின் மூன்றாவது நிலையாகும்.

இவ்வாறாக யோகம் பயிலும் ஒவ்வொருவரின் உடலும், மனதும்ம செம்மையாகி, அதன் மூலம் அவரவர் செய்யும் செயல்களில் மேலும், மேலும் சிஹப்பைச் சேர்த்து அதன் மூலம் அவரவர் சார்ந்திருக்கும் சமூதாயம் மேன்மையுறச் செய்வதே யோகமாகும்.

யோகப் பயிற்சி மிகவும் எளிமையானது. சிறு குழந்தைகள் முதல் முதியோர் வரை எப்பொழுது வேண்டுமானாலும் பயிற்சி செய்ய ஆரம்பிக்கலாம். வேலை வேறு பயிற்சி என்பது வேறு. தகுந்த ஆசிரியர் துணை கொண்டுதான் பயிற்சி ஆரம்பித்தல் வேண்டும்.

நாளொன்றுக்கு 15—20 நிமிட பயிற்சியே போதுமானது. யோகப் பயிற்சி ஒவ்வொருவருக்கும் அவரவர் வயது, உடல் தன்மை, மனத்தின் இயல்பு, நோய்களின் இருப்பு, வேலையின் தன்மை போன்றவைகளுக்கு ஏற்ப மாறுபடும். எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க.

# ஈழத் தமிழர் இறையாண்மை

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே இறைமை படைத்த பேரரசுகளை தமிழர்கள் பரிபாலித்து வந்திருக்கின்றனர். எனினும் கால ஓட்டத்தில் தமிழர் ஆட்சி தளர்வுற்று, இன்று "எங்கேனும் உனக்கென்றோர் அரசுண்டா காட்டு?'' என்ற வினவில், வெட்கித் தலைகுனியும் நிலையில் தமிழினம் உள்ளது. இந்நிலையில், ஈழத் தமிழர்களுக்குரித்தான இறையாண்மையை வலியுறத்துவதே இச்சிற்றாய்வின் நோக்கமாகும்.

ஈழத்திலே தமிழர்களின் இருப்புக் குறித்து அண்மைக் காலத்தில் பெரும் சர்ச்சை கிளம்பியிருந்தமை யாமறிந்ததே! சனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கா தென்னாப்பிரிக்கத் தொலைக்காட்சிக்கு வழங்கியிருந்த செவ்வியொன்றில், ஸ்ரீலங்காவில் சிறுபான்மையினரான தமிழர்கள் — அவர்கள் இந்நாட்டுக்குப் பூர்வீகமல்லாதவர்களாக இருந்த போதிலும் — தனியான அரசொன்றை அமைக்கப் போராடுகின்றனர் எனக் குற்றம் சாட்டியிருந்தார். இதனையடுத்துத் தமிழர்களின் பூர்வீகம், இருப்புக் குறித்துக் காரசாரமான விவாதங்கள் ஈழத்தேசத்திலும் சருவதேச ரீதியிலும் தலையெடுத்தன. ஈழத் தமிழர்கள் இத்தேசத்துக்குப் பூர்வீகமற்றவர்களா? இக் காரணத்தினால் அவர்கள் அரசொன்றை அமைக்கும் அருகதை அற்றவர்களாகி விடுகின்றார்களா? இலங்கைத் தீவிலே அவர்கள் தமக்கென ஒரு அரசுக்கு இறையாண்மையற்றவராக உள்ளனரா என்பது விடை காணப் பட வேண்டிய வினாக்கள்! இலங்கையைப் போன்ற காட்டுப் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் வேடர் எனப்படும் சாதியினரே மெய்யான பூர்வீகக் குடிகள். இவர்களை விட, இன்று அற்றுப் போய்விட்ட நாகர் இயக்கர் என்ற சாதியினரே பூர்வீக இலங்கைக் குடிமக்கள். இவ்விரு சாதியாரின் வழித் தோன்றல்களாகவே இன்றைய வேடுவர் சாதியார் கருத்தப்படுகின்றனர். சரித்திரத்துக்கு முற்பட்ட காலத்து இராமாயணக் கதையில் வரும் ஈழ வேந்தன் இராவணன், இப்பூர்வீகக் குடியினரான இயக்கர் சாதியைச் சேர்ந்தவனே. இராவணன் திராவிட இனத்தினன் என்பதும், சைவ மரபைப் பேணி அதன் வழி நின்றவன் என்பதும் தெளிவு.

## சிங்களர்கள் பழங்குடிகளல்ல

ஈழ நாட்டில் இன்று வாழும் சிங்களவர்கள் வட இந்தியாவிலிருந்து துரத்தப்பட்ட விசயன்

என்ற அரசகுமாரனின் வழித் தோன்றல்கள். இவர்கள் தூய ஆரிய அடியையோ தூய திராவிட அடியையோ கொண்டிராத கலப்புச் சாதியினர். இச் சிங்கள இனத்தின் தோற்றம் பற்றிய ஐதீகக் கதையே விஞ்ஞானக் கொள்கைக்கு முரணானது. சிங்கம் ஒன்றுக்கும் மனிதப் பெண் ஒருத்திக்கும் பிறந்த குழந்தைகளில் இருந்தே சிங்கள இனம் உருவாகியது என்பதும், சிங்கத்தின் வழி வந்தவராதலால் சிங்களவர் பலம் பொருந்தியவரென்பதும் சிங்கள வரலாற்று நூலான மகாவம்சத்தின் அடிப்படையாகும். மகாவம்சமே சிங்களச் சாதியினரின் பிரதான வரலாற்று நூல். இந்நிலையில் அடிப்படையே பொய்யான மகாவம்சத்தின் பதிவுகளை ஏற்று, அதன் வழியில் ஈழத்தின் இறையாண்மைமிக்க குடிகள் யாவரென உய்த்துணரப் புறப்படுவது மடைமையாகும்.

விசயனின் வருகைக்கு முன்னரே இங்கு தமிழ்ச் சாதியினர் காணப்பட்டதை மறைத்து அவர்களை விசயனுக்குப் பின் இங்கு குடியேறியவர்களாகக் காட்டுவதேயாகும். ஈழ தேசத்தின் அரசுரிமையில் தமிழர்களுக்கும் சம பங்கு உண்டு. ஏனெனில் மதுரை இளவரசி ஈழத்துக்கு வருகை தரும் போது தன்னுடன் 1000 குடும்பங்களையும் அழைத்து வந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. எனவே பண்டைய ஈழத்தில் கணிசமானளவு திராவிட / தமிழ்ச் சாதியினர் வாழ்ந்திருக்கின்றனர் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

மேலும் காலத்துக்குக் காலம் இலங்கைத் தமிழ் அரசர்கள், தளபதிகள் தனித்தும், கூட்டாகவும் ஆண்டு வந்திருக்கின்றார்கள் என்பது சரிதம். இதன் மூலம் ஈழத்தில் தமிழர்களின் தனித்துவம் நிலைநிறுத்தப்பட்டது. இலங்கையில் தமிழர்களின் தனித்துவத்தை மேலும் உறுதிப்படுத்திய முக்கிய காரணி வட இலங்கையில் சுதந்திரமான ஒரு இராச்சியம் — யாழ்ப்பாண இராச்சியம் அமைக்கப்பட்டமையாகும். 13ம் நூற்றாண்டிலிருந்து 17ம் நூற்றாண்டு வரை யாழ்ப்பாண இராச்சியம் நடைமுறையிலிருந்தமை சிங்களவர்களிலிருந்து மட்டுமின்றி இந்தியாவில் வாழ்ந்த தமிழர்களிலிருந்தும் இலங்கைத் தமிழர்களின் தனித்துவத்தை நிலைநிறுத்த உதவியது. 16ம் நூற்றாண்டில் தமிழர்கள் நன்றாக வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குட்பட்ட பிரதேசங்களைத் தமக்கெனக் கொண்டிருந்ததோடு, அதனைத் தமது நிரந்தரத் தாயகமாகவும் கொள்ளத் தொடங்கினர். எனவே ஈழத் தமிழர்கள் 17ம் நூற்றாண்டு வரை தமக்கென தனியான ஒரு தாயகத்தையும் அரசையும் அரசோச்சும் இறையாண்மையையும் கொண்டிருந்தனர். இறைமை படைத்த சுதந்திர அரசாகத் திகழ்ந்த யாழ்ப்பாண அரசானது, தனது இறையாண்மையை மேற்கத்திய அரசுகளிடம் இழந்தது. இவ்வாறு தமிழர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட இறைமை மீண்டும் பிரித்தானியரால் தமிழர்களிடமே கையளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

## தமிழர்தேசியமே வெல்லும்!

சிங்கள தேசம் குறுக்கு வழியில் பிரித்தானியர்களிடம் இருந்து தமிழர்களது இறைமையையும் சேர்த்தே பெற்றுக் கொண்டுவிட்டது. எனவே தமிழர்களைப் பொறுத்தளவில், அவர்களது இறையாண்மை ஒரு போதும் சிங்களவரிடம் இழக்கப்படவில்லை. பிரித்தானியர் இலங்கையை விட்டு வெளியேறிய உடனேயே இவ் இறைமை தமிழ் மக்களிடம் மீள வந்தடைந்து விட்டது.

தமிழர்கள் சுய நிருணய உரிமைக்கு உரித்தடையவராகின்றனர். “ஒதுக்கப்படும் தேசிய இனத்தின் சுய நிருணய உரிமையை ஆதரிப்பதும், பிரிந்து செல்வதற்கான அதனது உரிமையை அங்கீகரிப்பதும் அடக்கும் தேசிய இனத்திலுள்ள சமூக ஜனநாயகக் கட்சிகளின் வரலாற்றுக் கடமை” என்பது இலெனின் வாதம். ஒரு தேசிய இனம் அடக்கி ஒடுக்கப்படும் போது அது தனது சுய நிர்ணய உரிமையைப் பிரயோகித்துத் தனது இறையாண்மையை நிலைநாட்டப் பூரண உரித்துடையதாகின்றது.

தமிழ்த் தேசத்துக்கெதிரான அடக்கு முறைகள் சட்டமூலங்கள், சட்டங்கள், அரசியலமைப்பு, தேசிய செயற்றிட்டங்கள், கல்வி வசதிகள், வேலைவாய்ப்புக்கள் எனப் பல்வேறு முனைகளினூடாகக் கட்ட விழ்த்துவிடப்பட்டவை உலகறிந்த விஷயமாக உள்ளது. எனவே, தமிழ்த் தேசம் தனது இறையாண்மையை ஈழ நாட்டில் நிலைநிறுத்தும் வகையிற் தனது சுய நிருணய உரிமையைப் பிரயோகிக்க உலக நாடுகள் உதவ முன்வர வேண்டியது அவசியமானதாகும்.

# தமிழர் குடிபெயர்வும் உலகளாவிய தொடர்புறவும்

திருவாட்டி சுதேசா முருகையன் (இலண்டன்)

வரலாறு முறையாக வரையறுத்து எழுதப்படாத காலத்தில் அதாவது ஏறத்தாழ 4500 ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய நாட்டின் வடபுலத்தில் மொகஞ்சதாரோ, அரப்பா பகுதிகளில் (இப்பகுதிகள் இந்நாளில் பாகிஸ்தானில் உள்ளன) வாழ்ந்த தமிழினத்தாராகிய திராவிடர் அப்பகுதிகள் ஊழி வெள்ளத்தால் அழியுறும் நிலை ஏற்பட்டபோது மரக்கலங்கள் அல்லது வலிய படகுகள் ஏறி உயிர்த் தப்பவும் புதிய வாழுமிடங்கள் தேடிக் குடியேறவும் மேற்றிசை நோக்கியும், தெற்கு நோக்கியும் சென்றனர்.

மேற்குநோக்கிச் சென்ற குழுவினர் சிந்து ஆறு வழியேயும், அராபியக் கடல் வழியேயும் போந்து இந்நாளில் இராக், ஓமான் என்று பெயர் கொண்டும், அந்நாளில் சுமேரியா என்றும் பின்னர் மெசபட்டோமியா என்றும் அழைக்கப்பட்டதுமான நாட்டின் ஒரு பகுதியில் குடியேறிப் பண்டைத் தமிழ் மரபுக்கேற்பத் தம் குடி இனப் பெயர் சாயல் மிளிர்ந்து தெரியும் வண்ணம் அக்குடியேற்றத்துக்கு ஊர் (UR) என்று பெயரிட்டனர்.

இவ்வாறு மற்றுமோர் மரக்கலத்தில் ஏறிச் சென்றோர் கிழக்கு நோக்கிப் பயணம் செய்து ஜப்பானில் குறியேறியிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். எந்த நாட்டு மொழியோடும் தொடர்பில்லாதது என்று கருதப்பட்ட ஜப்பானிய மொழியில் உள்ள வேளாண்மை தொடர்பான 300 சொற்கள் தமிழ்ச் சொற்களாகவே உள்ளதும், தமிழர் ஜப்பானியர் திருமணம் போன்ற வாழ்வியல் வினைச் செயல்கள் பல ஒன்றுபோலவே உள்ளதும் பழந் திராவிடர் ஜப்பானியத் தீவுகளில் குடியேறினர் என்று எண்ண இடம் தருகிறது.

அந்நாளைய சுமேரியாவின் ஊர் எனப் பெயர்கொண்ட குடியேற்றத்தில் வந்தேறியோர் மரபில் பிறந்தவரே யூத, கிறித்தவ, இசுலாமிய மத இனத்தவர்களின் மூதாதை என்று போற்றப்படும் ஆபிரஹாம். ஆகவே தமிழரின் தொன்மையான பல மதக் கோட்பாடுகளே இசுலாமிய மதக் கோட்பாடுகளாக உருப்பெற்றன.

கடைச் சங்க காலத்திலும், அதற்கு முன்பும் தமிழ்நாட்டுப் பாண்டியர் எகிப்து நாட்டை ஆண்ட மன்னர் குடும்பத்தினர்களோடு மணவுறவு கொண்டிருந்தனர். உரோமானியர்களுடனும், கிரேக்கர்களோடும் பண்டை நாளில் தமிழர் தொடர்பு கொண்டிருந்தனர். அதன் பொருட்டு அவர்களது நாடுகளுக்குச் சென்று அங்கேயே நிலையாகத் தங்கியிருக்கக் கூடும்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டிலும், அதற்குப் பின்னரும் தமிழ் மன்னர்கள் சாவகம், சோனகம், கடாரம், காம்போசம் முதலிய நாடுகளை வென்று ஆளுகை ஏந்துக்காகவும், தம் நல்லாட்சி நிலைப்பாட்டை முன்னிட்டும், அந்நாடுகளில் தமிழர்களைக் குடியேற்றினர்.

தற்போதைய இந்தோனேசியாவில் உள்ள ஊர்கள் சில மதுரை, மைதானம் போன்ற தமிழ்ப் பெயர்களைக் கொண்டனவாய் இன்றளவும் உள்ளன. பழங்காலத்தில் தமிழ் மரபுப்படி கட்டப்பட்ட கோயில்கல் பல இப்போதும் உள்ளதும், அந்நாட்டு மக்களின் பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் தமிழருடையன போலவே உள்ளதும், தாய்லாந்து (முன்பு சியம் என்று அழைக்கப்பட்ட நாடு) நாட்டு மன்னரின் முடிசூட்டு விழாவில் தேவார, திருவாசகப் பாடல்களைப் பாடுவதும், முன்பு காம்போசம் என்று அழைக்கப்பட்டதும் தற்போது கம்போடியா என்று அழைக்கப்படுவதுமான நாட்டில் தமிரின் சிற்ப வேலைப்பாட்டு அடிப்படையில் எழுப்பப்பெற்ற அங்கோர்வாட் போன்ற பல கோயில்கள் உள்ளதும், ஆங்கு ஆடப்படும் நடனம் தமிழரின் பரதநாட்டியப் பாணியில் மிளிருவதுமே அந்நாட்டவர்கள் தமிழரோடு நெருங்கிய குருதித் தொடர்புறவு கொண்டுள்ளதை மெய்ப்பிக்கும்.

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் பிற்காலச் சோழர்களான இராசராசன், இராசேந்திர சோழன் காலத்தில் அவர்களிடமிருந்து வலிமை மிக்க கடற்படையின் துணைகொண்டு இன்றைய மலேசிய நாட்டின் ஒரு பகுதியான கடாரத்தையும், நக்காவரம், மாலைத் தீவுகள், இலக்கத் தீவுகள் போன்றவற்றையும் வென்று அவற்றையெல்லாம் தம் பரந்த பேரரசின் ஆட்சியின் கீழ்க் கொணர்ந்ததோடு, ஆங்கெல்லாம் அவர்களின் ஆட்சி நிலைப்பாட்டுக்காகத் தமிழாட்சி அதிகாரிகளையும், அவர்களது குடும்பத்தாரையும் பற்பல வணிகர்களையும் குடியேற்றினர். அவ்வாறு குடியேற்றப்பட்டவாகளின் சந்ததியினரும் அவர்கள் வழிவந்தோரும் அயலினத்தாரோடு மணவுறவு கொண்டதால் பிறந்த கலப்பினத்தாரும் இன்றளவும் அந்நாடுகளில் வாழ்ந்து வருகிறார்கள்.

**கடலோடிகள் ஆப்பிரிக்கக் கண்டத்தை அடுத்துள்ள மொரீசியசு தீவைக் கண்டுபிடித்ததாக வரலாறு.** தமிழர்கள் அங்கு *1735* ஆம் ஆண்டளவில்தான் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டார்கள் எனலாம். இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள பாண்டிச்சேரி, காரைக்கால் பகுதியைக் கைப்பற்றிய பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்களைப் போலவே ஒல்லாந்து நாட்டவரிடமிருந்து அவர்கள் புதிதாகக் கைப்பற்றியிருந்த மொரீசியசு தீவுக்குத் தமிழர்களைக் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்ய அழைத்துப் போயினர். அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டோரின் வழித் தோன்றல்களில் பெரும்பாலானோர் இப்போதும் அங்கே வாழ்கின்றனர்.

மொரீசியசு தீவுக்கருகில் உள்ள இன்னொரு சிறு தீவான ரியூனியனுக்கும் தமிழர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இந்நாளிலும் கணிசமான எண்ணிக்கையிலான தமிழர்கள் அங்கே உழைத்து வருகிறார்கள்.

இந்தியாவிலும் இலங்கையிலும் முற்றாகத் தம் ஆட்சியை நிலைநிறுத்திக் கொண்ட ஆங்கிலேயர்கள் தமிழ்த் தொழிலாளிகளைக் கரீபியக் கடல் நாடான திரினிடாடுக்கும், தென்னமெரிக்காவிலுள்ள குயானாவுக்கும் கொண்டு சென்றனர்.

*1881*ஆம் ஆண்டுக்கும் *1884*ஆம் ஆண்டுக்கும் இடையே ஆண்களும் பெண்களும் *4500* தமிழர்களை ஆங்கிலேய ஆட்சியாளர் அவர்களின் பொறுப்பின் கீழ் வந்த தென்னாப்பிரிக்காவுக்கு தமிழர்களை கரும்பு சாகுபடிக்காகக் கொண்டு சென்றனர். *1857*இல் தென்னகத்தில் மிகக் கொடிய பஞ்சம் ஏற்படவே பல தமிழர்கள் அயல்நாடுகளில் குடியேறவும், கூலி வேலை செய்யவும் துணிந்தனர். அவர்களின் அவல நிலையை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு அவர்களை ஒரு கப்பலில் ஏற்றிக்கொண்டு அவர்களிடம் அவர்களது உறவினர் சிலர் வாழ்ந்த மலேயாவுக்குப் போவதாய் பொய் சொல்லி ஏமாற்றித் தென்னாப்பிரிக்காவுக்குக் கொண்டு சென்றனராம்.

*1879*ஆம் ஆண்டுக்கும் *1919*ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட கால கட்டத்தில் ஆங்கிலேயர் தங்கள் ஆட்சி ஆளுமைக்குட்பட்டிருந்த பீஜித் தீவுகளில் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்யவெனத் தமிழர்கதளை ஒப்பந்தக் கூலிகளாக அழைத்துச் சென்றனர்.அவர்கள் அங்கே பட்ட தொல்லைகளும், அவர்களுக்கு விளைந்த இன்னல்களும் சொல்லியடங்காது.

ஆண்கள் கரும்புத் தோட்டத்தில் வேலையின் பொருட்டு சென்றிருந்த நேரத்தில் ஓர் ஆங்கிலேயக் கயவன் ஒரு தமிழ்ப் பெண்மணியின் கற்பைச் சூறையாடி விட்டான். கற்புக்கரசி கண்ணகியின் மரபில் வந்த

அப்பெண்மணி அக்கயவனை அவனிடமி ருந்தே பறித்த துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டுத் தன்னுயிரையும் போக்கிக் கொண்டார்.

பாரதியார் ஆங்கிலேயக் கயவன் தமிழ்ப் பெண்ணுக்கிழைத்த இக்கொடுஞ் செயல் குறித்துக் "கரும்புத் தோட்டதிலே" என்ற ஒரு கவிதையை இயற்றித் தம் மனக் குமுறலை வெளிப்படுத்தி உலகறியச் செய்தார்.

கலப்பு மணம், குடியேற்றப்பட்ட பெரும்பான்மை இந்தியர்கள் பேசும் இந்தி மொழியின் மேலாண்மை தாய்நாட்டுத் தமிழரின் மாற்றாந்தாய் மனப்போக்கு, இந்திய நடுவணரசின் புறக்கணிப்பு ஆகியவற்றால் ஆங்கு வாழும் இளந்தலைமுறைத் தமிழர்கள் தம் தாய்மொழியை மறந்தனர்.

இப்போது மியான்மார் என்றழைக்கப்படும் பர்மாவுக்கு நெல்வேளாண்மைத் தொழிலை வளப்படுத்தவெனத் ஆங்கிலேய ஆட்சியாளர் இலக்கக் கணக்கான தமிழர்களை அந்நாட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

இரண்டு இலக்கம் தமிழர்கள் இப்போதும் போரும் தொல்லையுமாய் உள்ள அந்நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். மிகப் பெரும்பான்மையான தமிழர்கள் வேளாண்மைத் தொழிலேயே ஈடுபட்டுள்ளனர்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் எதிர்பாராத வகையில் மலேயா (இன்று மலேசியா என்று அழைக்கப்படுகிறது) நாட்டின் பாதுகாப்புரிமை பிரித்தானியர் எனப்படும் ஆங்கிலேயர் கையில் சிக்கியது. மலைகள் மிகுந்த அந்நாட்டுக்கு மலைநாடு எனப் பெயரிட்டவர்கள் தமிழரே. அதையொட்டிய தீவான இந்நாளைய சிங்கப்பூர் நாட்டுக்குச் சிங்காபுரம் என்று பெயர் சூட்டியதும் நீல உத்தமன் எனும் சோழ இளவவசனே என்று வரலாறு தெரிவிக்கிறது. மிகுந்த வெப்பமும் அதிக மழையும் உடையதாய் பூமத்தியப் பகுதியில் அமைந்துள்ளதால் ஆங்குள்ள இயற்கைக் காடுகளை அழித்துத் தென்னை, நொய்வம் எனப்படும் இரப்பர் மரங்களைப் பயிரிட ஏற்றவர்கள் வேளாண்மைப் பட்டறிவு மிக்க தமிழர்களே என உணர்ந்து பல்லாயிரம் தமிழரை அங்கே அழைத்துச் சென்றனர்.

தமிழிளவரசன் சிங்கபுரம் என்று பெயரிட்ட இந்நாளைய சிங்கப்பூரினை ஏறத்தாழ 180 ஆண்டுகளுக்கு முன் தாங்களே கண்டுபிடித்ததாய்க் கூறி ஆங்கிலேயர் குடியேற்ற நாடாக ஆக்கினர். வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்றபடி வரலாறு எப்படியெல்லாம் வளைந்து கொடுக்கிறது!

சிங்கப்பூரின் வள மேம்பாட்டுக்கும் தமிழர் நிறையப் பாடுபட்டுள்ளனர். சிங்கப்பூர் சாலைகளும் பற்பல கட்டடங்களும் தமிழர்களின் கைவண்ணத்தாலும், வியர்வையாலும் எழும்பியவையே.

இரண்டாம் உலகப்போருக்கு முன் சிங்கப்பூரில் தமிழர்களால் இராஜா பஸ் சர்வீஸ் என்ற பெயரில் பேருந்து நிறுவனம் சிறப்பாக நடத்தப்பட்ட செய்தி போன்றவை சிலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் வரலாற்று உண்மையை எவராலும் மறைக்க இயலாது. மலேயாவிலும் சிங்கப்பூரிலும் தொழில் வாணிக முதலீட்டுக்குத் தங்கள் தாயகமாகிய தமிழ் நாட்டிலிருந்து பணம் கொணர்ந்து வட்டிக்குத் தந்துதவியவர்கள் தமிழராகிய நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டியார்களே.

தமிழ், சிங்கள முடியுடை மன்னர்களால் ஆளப்பட்டு வந்த இலங்கை 1619இல் போர்ச்சுகீசியர்களால் கைப்பற்றப்பட்டது. அவர்களது ஆட்சி 1638 வரை நீடித்தது. பின்னர் அவர்களிடமிருந்து ஒல்லாந்து நாட்டினர் 1795 ஆம் ஆண்டுவரை ஆட்சி செலுத்தினர்.

1937 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் நுவரேலியா மாத்தளை போன்ற நாட்டின் நடுவணான மலைப் பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்களிலும் நொய்வ மரக் (இரப்பர்) காடுகளிலும் வேலை செய்யத் தமிழ் நாட்டிலிருந்து இலக்கக் கணக்கான தமிழர்களை ஆங்கிலேய ஆட்சியாளர் அழைத்துச் சென்று குடியேற்றினர். இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணியில் 60 விழுக்காடு வருமானம் இத்தொழிலாளர்களின் கடின உழைப்பின் வழியாகவே வருகிறது என்று அறிகிறோம்.

அவர்களை அங்கே தோட்டங்களில் பணி செய்ய அழைத்துச் செல்கையில், அவர்களுக்கு இலங்கையில் வாழும் ஏனைய மக்களுக்கொப்ப சரி நிகர் சமானமான உரிமைகள் வழங்கப்படும் என்று உறுதி கூறியே ஆங்கிலேய ஆட்சியாளர் அழைத்துச் சென்றிருந்தும், அந்நாட்டுக்கு 1948ஆம் ஆண்டில் சுதந்திரம் வழங்கியபோது தாங்கள் தந்திருந்த வாக்குறுதியைக் காற்றில்

பறக்கவிட்டுக் கட்டுநாயகா விமானத்தளம், திருகோணமலை கப்பல் தள வசதிகளைத் தமக்குப் பெறுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து பெற்று, இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களையும் அவர்களது குடும்பத்தாரையும் அவல நிலையில் விட்டுச் சென்றனர்.

ஆங்கிலேயர்களால் தமிழ்நாட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்கள் மற்றும் அவர்களது வழித்தோன்றல்கள் ஆகிய மூன்று இலக்கம் தமிழர்கள் இலங்கைக் குடியுரிமையோ அல்லது இந்திய நாட்டுக் குடியுரிமையோ அல்லது வேறு நாட்டுக் குடியுரிமையோ எதுவுமின்றி இப்போதும் நாடற்றவர்களாகவே உள்ளனர்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்குஅழைத்துச் செல்லப்பட்ட தமிழர்கள் நிலை மட்டும் தான் தற்போது இவ்வாறு அவலமாய் உள்ளது என்று எண்ணிவிடக்கூடாது. பரம்பரையாய் இலங்கையிலேயே பிறந்து வளர்ந்த தமிழர்களுக்கு தங்களது சொந்த நாட்டிலேயே அடிப்படை உரிமைகள் அற்றவர்களாய், எந்த நிமிடத்திலும் தங்களது உயிருக்கு ஆபத்து வருமோ என்றெண்ணி அஞ்சியவராய் வாழ்கின்றனர். தங்கள் சொந்த வீடு வாசலையும், சொந்த ஊரையும் துறந்து தாங்கள் பிறந்து வளர்ந்த சொந்த நாட்டிலேயே ஏதிலியராய் (அகதிகளாய்) ஏதிலிக் கொட்டகைகளில் தங்களுக்கு விடிவுகாலம் வருமா என்றெண்ணிக் கடவுளைத் துதித்தபடி வாழ்வோர் எண்ணிறந்தோர். தங்களது தாயகத்தைத் துறந்து உயிர் பிழைத்தால் போதும் என்றெண்ணி அயல்நாடுகளுக்குச் சென்று குடியேறியோர் மிகப் பலர்.

இவ்வாறு இலங்கை விடுதலையுற்ற சில ஆண்டுகளுக்குப் பின்னர் பெரும்பான்மை இன மக்கள் என்ற முறையில் நாட்டாட்சிப் பொறுப்பை ஏற்ற சிங்கள ஆட்சியாளர் ஆங்கு அன்று தொடங்கி இன்றளவும் காட்டிவரும் தமிழர், தமிழ் மொழி வெறுப்புக் கொள்கைகளின் காரணமாக அந்நாட்டிலிருந்து பல்லாயிரக் கணக்கான கற்றுணர்ந்த மருத்துவர், பொறியாளர், கணக்காளர், கல்விமான்கள் போன்ற பல்துறை வல்லுநர்கள் அந்நாட்டை விட்டு வெளியேறிவிட்டதால் வளமிக்க இலங்கை நாட்டுப் பொருளாதாரம் மற்றும் கல்வி போன்ற பல்வேறு துறைகளுக்கான பேரிழப்பு ஏற்பட்டது மட்டுமின்றி, அதுவே உலக நாடுகள் பல அயல்புலம் பெயர்ந்த தமிழர்களின் பல துறை அறிவுச் செல்வத்தின் பயனைப் பெற்றுயரக் காரணமாய் அமைந்தது. வருங்கால உலக வரலாறு இதனை தெளிவுப்படுத்தும்.

இன்று இலங்கையில் நிகழ்வுறும் இனவெறுப்புக் கொடுமை காரணமாக இன்று தமிழர் இல்லாத நாடில்லை என்று சொல்லும் அளவுக்குத் தமிழர், ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா, அமெரிக்கா எனும் எல்லாக் கண்டங்களிலும் உள்ள உலகின் எல்லா நாடுகளுக்கும் சென்று வாழ்கின்றனர். சென்று வாழும் நாடுகளில் எல்லாம் தமிழர்கள் பொருளாதார வசதியோடு வாழ்கின்றனர். என்று சொல்ல இயலாது. பெரும்பாலானோர் தங்கள் அவல நிலையை எண்ணி வருந்திய வராய் கிடைத்த வேலையை ஏற்று வாழ்க்கை நடத்துகிறார்கள். இலண்டனில் கல்லெண்ணெய் விற்பனை (பெட்ரோல் ஸ்டேஷன்) நிலையங்களில் பணியாற்றுவோர் அனைவரும் இலங்கைத் தமிழர்களே ஆனாலும், மனம் தளர்வுறாது எதிர்கால நல்வாழ்வில் நம்பிக்கை வைத்தவர்களாய் இளந்தலைமுறையினருக்கு உகந்த கல்வி புகட்டி வருதல் போற்றுதற்குரியது.

இலங்கையிலும் வேறு பல நாடுகளிலும் தமிழர் படும் அவதியினை, துன்பங்களை உலக நாடுகள் பலவும் கண்டும் காணாதவராய் இருக்கின்றனர். தமிழ்நாட்டரசும் தமிழரசியல்வாதிகளும் உலகத் தமிழர்த் தொல்லைகளை மூடி மறைக்காமலும், அவற்றுக்கெல்லாம் தாங்கள் எளிதில் தீர்வு கண்டுவிடப் போவதாகப் பாசாங்கு செய்யாமலும்

*ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்*

*செல்லும்வாய் நோக்கிச் செயல்*

என்ற திருக்குறளில் கண்டுள்ளபடி முயன்று முனைப்போடு உலகத்தமிழர் நலனுக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் செயல்பட வேண்டும். தமிழ் நாட்டரசு அயல்நாட்டில் வாழ்ந்துவரும் தமிழர்களின் நலக் கண்காணிப்புக்கென ஒரு தனித்துறை நிறுவிச் செயல்படலாம்.

இந்நாளில் தத்தம் கடமையைச் சரிவரச் செய்யாத தமிழ்த் தலைவர்களும், அரசியல்வாதிகளும் வருங்காலத்தில் வரலாற்றில் அவ்வாறே குறிப்பிடப்பட்டு எள்ளி இகழப்படுவர் என்பது திண்ணம்.

# என் உலகத் தமிழினம்

உலகில் இன்று பரந்துபட்டு வாழும் இரண்டு பழம் பேரினங்களில் தமிழினமும் ஒன்று. மற்றொன்று சீன இனம். உலகில் இன்று வாழும் தமிழ் மக்களின் மொத்த மதிப்பீடு ஏறத்தாழ பதினேழு கோடியாகும். சீன நாட்டில் சீ—மோ—லா(Tchi-mo-lo) என்ற மொழிபேசும் தமிழின மக்கள் ஏறத்தாழ நாலரைக் கோடியாகும் என்றும் பிரன்னீசு மலை நாடு, செருமனி, பிரான்சு, போர்ச்சுக்கல், இத்தாலி ஆகிய நாடுகளில் தாமோர் மொழி பேசும் தமிழின மக்கள் ஏறத்தாழ இரண்டரைக் கோடிப்பேர் என்றும் அறிஞர்கள் கூறுவர்.

சீ—மோ—லா, தாமோர், தொமூர் என்னும பீயர்ல்கள் தமிழ் என்னும் சொல் எங்ஙன் வேத ஆரியர்களிடை த்ரமுள் என்று திரிக்கப் பெற்று த்ரமிளம், திராவஇடம் என உறுமாறி வழங்கியதோ அங்ஙனமே அச்சொல் பல்வேறு நாடுகளில் பலவேறு வடிவங்களாய் திரிபுற்றும், கலப்புற்றும், சிதைவுற்றும், மாறியும் வழங்குகின்றது. கிரேத்தா, தீவில் தெர்மிலர் என்றும், திபெத்தில் திரிமிலர் என்றும் தமிழர் அழைக்கப்பெறுகின்றனர். மற்றும் தமிழ் மொழியும் தாமிட, தமுர், தாமாலி, தமார், தமிர், துமா, தொமிட, தெமலிக், தாமுரி, தாமல் முதலிய பெயர்களாகப் பல்வேறு நாடுகளில் வழங்குகின்றன.

மலேசியா, ஈழம், சிங்கப்பூர், அந்தமான், பர்மா, பிசி, பிரான்சு, இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா முதலிய நாடுகளில் நகர்ப்புறங்களில் கலப்பில்லாமல் இங்கிருந்து பலவகைப் பணிகள் தொடர்பாகப் போய் வாழும் தமிழின மக்கள்தாம் தம்மைத் தமிழர்கள் என்றும் தாம் பேசும் தாய் மொழியைத் தமிழ் என்றும் சிதைவில்லாமல் கூறி வருகின்றனர். தமிழீழமாகிய யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழினமும் தமிழும், பெயரிலும் வழக்கிலும் திரிபில்லாமல் இருப்பதற்குத் கரணியம், அங்குத் தமிழர் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே வாழ்ந்து வருவதுதான். மற்றபடி ஆத்திரேலியா, இந்தோனிசியா, மொரீசியசு முதலிய நாடுகளில் கூட தமிழினப் பெயரும் தமிழ் மொழிப் பெயரும் ஓரளவு சிதைந்தும் பெருவாரியாக வழக்கிழந்தும் போய்விட்டன. உலகில் தமிழினம் வாழும் வேறு நாடுகள் திபெத்து, பெலுச்சித்தானம், ஆபுகானித்தானம், மெக்சிகோ, கானா, கம்போடியா, சயாம், மார்த்தினிக்கு, மோரித்தீவு, பிரிட்டீசு கயானா, பிரெஞ்சு கயானா, வட வியத்நாம், தென் வியத்நாம், ரியூனியன், அன்ரீல்சு தீவு, நியு கலிட்டோனியா, குவைத்து, டிரினிடாட், ரொடீசியா, சூரினாம், தென் அமெரிக்கா, உகாண்டா, சப்பான், தென் ஆப்பிரிக்கா, முதலியன. உலகில் ஏறத்தாழ நாற்பத்து நான்கு நாடுகளில் தமிழினம் வாழ்கிறது. அங்கெல்லாம் தமிழ்மொழி கலப்புற்றும், சிதைந்தும்,திரிந்தும் வழங்கப்பெறுகிறது. சில நாடுகளில் தமிழினம் பழங்குடி மக்களாகவே வாழ்ந்து வருகின்றனர். சில விடங்களில் அவர்கள் திருந்திய மக்களாக நாகரிகமுற்ற மக்களாக, ஆனால் பிரஞ்சு ஆங்கிலம் முதலிய மொழிகள் பேசும் மக்களாக வாழ்கின்றனர்.

அவர்கள் சி—மோ—லா என்னும் திரிந்த மொழியினைப் பேசி வருகின்றனர் என்னும் கூறப்பெறுகிறது. இவர்களன்றி அண்மைக் காலங்களில் உருசியா சென்று வாழும் தமிழ் மக்களும் ஒரு கணிசமான எண்ணிக்கை உடையவர்களே.

—அமரர் பாவலரேறு
**பெருஞ்சித்திரனார்**

# தமிழீழமும் எம்.ஜி.ஆரும்

வே. தங்கநேயன்


சிங்களப் பேரினவாத அரசு ஈழத் தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கும் விதத்தில் கட்டவிழ்த்திட்டிருக்கும் வெறித்தாக்குதல்களை நிறுத்த மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் எடுத்த சீரிய முயற்சிகள் மனித வரலாற்றில் என்றும் அழியாத பக்கங்களாகும்.

தமிழ் மக்களின் பாதுகாப்பையும் எதிர்காலத்தையும் கருத்திற் கொண்டு எம்.ஜி.ஆர். அவர்களின் செயல்பாடுகள் அமைந்தன. அகதிகளாக வந்தவர்களுக்கு அடிப்படை தேவைகளை செய்து கொடுத்ததோடு, அவர்களின் பிள்ளைகளுக்கு தனி ஒதுக்கீடு செய்து கல்வி கற்கவும் பொறியியல், மருத்துவம், தொழில் நுட்பம் போன்ற உயர் கல்வி வசதிகள் கிடைப்பதற்கும் உத்தரவு பிறப்பித்தார்.

சிங்கள பேரினவாத அரசு நடத்திக் கொண்டிருக்கும் இனப் படுகொலைக்கு முடிவு கட்ட ஈழத்தில் போராடுகின்ற போராளிகளுக்கு உதவி செய்வது என்று தீர்மானித்தார். அவர்களின் துணையோடுதான் தமிழ் மக்களை பாதுகாக்க முடியும் என்று செயலில் இறங்கினார்.

பல பிரிவுகளாய் இயங்கி வந்த விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசியதுடன் அவர்களது செயல்பாடுகளையும் ஆய்ந்து அறிந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வெ. பிரபாகரன் அவர்களின் உறுதி, இலட்சிய, வேட்கை, செயற்பாடுகள் அவரைப் பெரிதும் கவர்ந்தன. தன்னை முன்னிறுத்தும் எண்ணம் துளியும் இன்றி மக்களைப் பற்றியே கவலைப்பட்ட வே. பிரபாகரன் அவர்கள் மக்கள் திலகத்தின் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்தார்.

ஈழத்தமிழர்களுக்காக உண்மையாக



போராடக்கூடியவர் பிரபாகரன்தான் என்பதை தொலைநோக்குடன் அன்றே கணித்தார் எம்.ஜி.ஆர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தார். நிதி உதவி, தன்னுடைய சொந்த பணத்தை கோடிக்கணக்கில் வாரி வழங்கினார். பிரபாகரன் முன் அனுமதியின்றி எந்த நேரத்திலும் தன்னைச் சந்திப்பதற்கு அனுமதி கொடுத்தார். பிரபாகரனைத் தனது குடும்பத்தில் ஒருவராக நினைத்து, ஏன் தனது பிள்ளையாகவே பார்த்துக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். அவர்கள் பிரபாகரன் இயக்கத்திற்குச் செய்து வந்த உதவிகளைத் தடுக்க அப்போதைய அதிகாரிகள் சிலர் பல வழிகளில் சூழ்ச்சி செய்தார்கள். ஆனால்

எம்.ஜி.ஆர். அவர்களின் பின்னால் தமிழினமே ஒருமித்து அணிவகுத்து நின்றதாலும், இந்திராகாந்தி அவர்களின் அரசோடு சுமுக உறவு இருந்ததாலும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

1983ஆம் ஆண்டு தமிழகத்தில்உள்ள முன்னணிக் கட்சிகளின் தலைவர்கள் இந்திய இராணுவத்தை அனுப்பி ஈழத் தமிழர்களை பாதுகாக்க வேண்டும் என்றார்கள். ஆனால் எம்.ஜி.ஆர். அவர்களோ தமிழீழ விடுதலைப்புலிகள் கேட்காத பட்சத்தில் இந்திய இராணுவத்தை அனுப்புவதென்பது பல சிக்கலை உருவாக்கும் என்று ஆணித்தரமாகக் கூறினார்.

சிறுபடையான் செல்லியிடம் சேரின் உறுபடையான் ஊக்கம் அழிந்து விடும். என்பது குறள். அதாவது தமிழர்படை சிறியதாக இருந்தாலும் அது தன் இலக்கை நோக்கிப் போராடினால் பெரிய படை உடையவன் அழிந்து போவான். இந்த இலட்சிய கொள்கையோடுதான் தனது போர்க்குணத்தை சட்ட மன்றத்திலேயே வெளிப்படுத்தினார் புரட்சித் தலைவர்.

எம்.ஜி.ஆர். அவர்கள் 14.4.84இல் திருச்சியில் நிருபர்களிடம் மெல்ல மெல்லச் சாவதைவிட நிச்சயமான சாவே மேலானதாகும் என்றார். புலிகளின் கொள்கையை முழுமையாக ஏற்றுக் கொண்டதற்கு இச்செய்தியே சான்று.

1982ஆம் ஆண்டு பிரபாகரன் அவர்கள் கைது செய்யப் பட்டிருந்தபோது சிங்கள காவல்துறையினர் சென்னை வந்து பிரபாகரனை ஒப்படைக்கும்படி கேட்டார்கள். ஆனால் தமிழர் உரிமைக்காக போராடுகின்றவரை ஒப்படைக்க முடியாது என்று மறுத்து விட்டார். இது வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

தமிழீழத்திற்கு உலக நாடுகள் அங்கீகாரம் தேவை என்பதை எம்.ஜி.ஆர். அவர்கள் உணர்ந்திருந்தார். அதற்காக தனது வலதுகரமாக விளங்கிய மின்துறை அமைச்சர் பண்ருட்டி திரு. ச. இராமச்சந்திரன் அவர்களை ஐக்கிய நாடுகளின் மன்றத்திற்கு அனுப்பி, தமிழீழத்தின் குரலை எதிரொலிக்கச் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு வலு சேர்த்தார்.

பெங்களூரில் நடைபெற்ற இராஜீவ் ஜெயவர்த்தனா பேச்சு வார்த்தையின்போது தமிழீழத்தின் கருத்தை அறிய எம்.ஜி.ஆர். அவர்களை இராஜீவ் காந்தி அழைத்திருந்தார். ஈழப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்





உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் விதத்தில்தான் எதுவும் செய்யப்பட வேண்டும் என்பதை நன்கு உணர்ந்திருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் தனக்கு உறுதுணையாக பிரபாகரன் அவர்களையும், அண்ணன் பாலசிங்கம், திலகர் ஆகியோரையும் தனி விமானத்தில் பெங்களூருக்கு வர வழைத்தார். இதன் மூலம் போலி இயக்கத்தை நிராகரித்ததோடு தமிழின விரோதிகளுக்கும் தான் யார் என்பதை தனது செயல்மூலம் தெரிவுப்படுத்தினார்.

பிரபாகரன் அவர்களின் கருத்துகளை, இராஜீவ் காந்தியிடம் விளக்கினார் எம்.ஜி.ஆர். அந்த நிகழ்ச்சியின்போது கொலை வெறியன் ஜெயவத்தனாவை சந்திக்க திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

தனது உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த நிலையிலும் விடுதலைப் புலிகளுக்கு உதவுவதை நிறுத்தியதில்லை. ஓய்வில் இருந்த எம்.ஜி.ஆர். அவர்களை தனது அமைச்சர்கள் கூட பார்க்க முடியாத நிலை அப்போது. ஆனால் பிரபாகரன் அவர்கள் மட்டும் எம்.ஜி.ஆர். அவர்களை பார்ப்பதற்கு எந்தவித தடையுமில்லை.

தமிழீழத்தில் போராடுகின்ற விடுதலைப் புலிகளை மட்டுமில்லாமல் பெண்புலி வீராங்கனைகளையும் சட்டமன்றத்தில் எம்.ஜி.ஆர். அரசு பாராட்டியது வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது.

நிதி உதவியைப் பற்றி சொல்வதென்றால் புரட்சித் தலைவர் அவர்கள் புலிகள் இயக்கத்திற்கு கொடுத்த பணம் கணக்கில் அடங்காது. பகிரங்கமாக சட்டமன்றத்தில் அறிவித்து வழங்கிய தொகைதான் 4 கோடி ரூபாய். அதோடு ஈழத்தமிழர்களுக்கென்று அரசு சார்பாக நிதி திரட்டிய பெருமை எம்.ஜி.ஆர். அவர்களை மட்டுமே சாரும்.

இலங்கை அரசின் சர்வாதிகாரப் போக்கையும் வெறித்தனத்தையும் எதிர்த்து உயிர்த் தியாகம் செய்கிறார்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். அவர்களை எல்லாம் நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம் எனவும், அவர்களுக்கு என்னென்ன உதவிகளைச் செய்ய வேண்டுமோ அதை இந்த அரசு செய்ய முன்வரும் என்றும் எம்.ஜி.ஆர். ஈழத்தில் போராடிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு பணம் கொடுப்பதால் இந்த ஆட்சி போனாலும் பரவாயில்லை என்றும் சொன்னவர் அவர்.

இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா, எம்.ஜி.ஆர். அவர்களைக் கண்டு நடுங்கினார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் தனிப்படை என வர்ணித்தார் ஜெயவர்த்தனா. இதன் காரணமாகத்தான் இராஜீவ்காந்தியோடு சேர்ந்து ஒரு போலி ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். விடுதலைப் புலிகள் கையெழுத்திடாத ஒப்பந்தம் அது.

தமிழீழத்தில் இருந்து சிகிச்சைக்காகக் கொண்டு வரப்பட்ட விடுதலைப்புலிகளுக்கு அரசாங்க மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார். தமிழ்நாட்டில் ஆட்சியில் இருப்பவர்கள் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் எங்கு பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்களை காக்கும் பொறுப்பு உண்டு —என்பதில் உறுதியாக இருந்ததோடு அதற்கு முன்மாதிரியாக செயல்பட்டார் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அன்னாரின் மறைவு ஈழத் தமிழருக்குப் பெரும் இழப்பு. பலர் வரலாற்றில் இடம்பெறக்கூடிய காரியங்களைத்தான் சாதித்தார்கள். எம்.ஜி.ஆர். அவர்களோ தம் சாதனை மூலம் வரலாற்று நாயகனானார்.

(எம்.ஜி.ஆரும், ஈழத்தமிழரும் என்ற என் நூலின் கருத்தோட்டத்தை இங்கு சுருக்கமாகத் தந்துள்ளேன். ஆ—ர்)

# தமிழ்-தமிழகம்

ஸ்ரீ காந்தன்
துணைத் தலைவர், வரவேற்புக்குழு

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஏழாவது மாநாடு — வெள்ளி விழா மாநாடாக நடந்து கொண்டிருக்கின்ற சமயத்தில் என்னுடைய கருத்துகளை தங்களுடன் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் அளித்த விழா வரவேற்பு குழு தலைவர்க்கு என் முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் தமிழ் எதிலும் தமிழ் எங்கும் தமிழ் என்று முழங்கிட மனம் விளைகிறது. ஆனால் வாழ வேண்டிய தொன்மையான தமிழ் உயிருடன் வாழ நாம் அனைவரும் கூடி தமிழ் வாழ்க என்று வாய்விட்டு கத்தினால் மட்டும் தமிழ் வாழுமா? வாழ்ந்து விடுமா என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். ஏன் என்றால் நம்மை ஆண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அவர்களே மறந்தாலும் அவர்களால் உருவாக்கப்பட்ட அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய நல்ல பழக்க வழக்கங்களை மறந்து விட்டு கழிவுகளை மட்டும் நாம் இன்றும் சுமந்து கொண்டிருக்கிறோம். இதை சொல்வதற்கு மிகவும் மனம் புண்படுகிறது என்ன செய்வது? உண்மைகளை மறைப்பதால் பயன் ஒன்றும் இல்லை.


தமிழை வளர்க்க முதன் முதலாக மூத்த தமிழறிஞர் கலைஞரின் முன்முயற்சியாக தமிழ்ப் பண்பாட்டுக்கு என்று ஒரு அமைச்சகம் உருவாக்கப்பட்டு அதற்கு நமது மூத்த சகோதரர் தமிழ்க் குடிமகன் தனது கடமைகளை சரிவர செய்து கொண்டு வருகிறார். இந்த நிலைமை ஏற்பட நமக்கு பிடித்த ஆண்டுகள் 1956 — 1996. அதாவது சி. சுப்பிரமணியம் என்ற நமது முன்னாள் அமைச்சர் தமிழகத்தில் பணியாற்றியபோது ஆட்சி மொழியாக உருவாக்கப்பட்டு சட்டம் இயற்றினாலும், 1978—79ல் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களால் அரசாங்க ஆணைகள் அனைத்திலும் பெரியார் தமிழைப் பயன்படுத்திட வேண்டும் என்ற திருத்தம் கொண்டுவரப்பட்டது என்றாலும் நடைமுறைக்கு பாதுகாக்கப்படவில்லை.

ஒரு மொழி வளர வாழ எத்தனை சட்டங்கள் போடப்பட்டாலும் அதனை பேசுகின்ற சமுதாயமுமாகிய நாம் அதனை உயிராக கருதினாலொழிய அதனைக் காப்பாற்ற எத்தனை மொழித் தியாகிகள் உருவானாலும் பென்சன் பணம் வேண்டும் என்றாலும் அரசாங்கத்தால் கொடுக்கப்படலாம்; சலுகைகள் அளிக்கப்படலாம்; ஆனால் நமது இனிய தமிழை காப்பாற்ற முடியாது.

நாம் செய்ய வேண்டியது கடமைகளில் ஒன்று நமது நடைமுறை பழக்க வழக்கங்களில் தமிழைத்தான் உபயோகிக்க வேண்டும் என்ற உணர்வுடன் வாழ வேண்டும்.

நமது குடுமபங்களில் பிள்ளைகள் வாழும்போதே தமிழின் இனிமையை உணர்த்தி அவர்கள் பேசுகின்ற மொழி தமிழாக இருக்க வேண்டும் அவர்கள் தமிழை முதன்மை பாடமாக கொண்டு தாய்மொழி பள்ளிகளில் சேர்ந்து அடிப்படை கல்வியை பயிலும் சந்தர்ப்பத்தை உருவாக்கி தர வேண்டும். பெற்றோர்கள் தான் இந்த கடமையை செய்ய வேண்டும். அரசாங்கமும் அடிப்படை கல்வியை போதிக்க தமிழை அடிப்படையாக

பிருகதீசுவரர் ஆலயம்



கங்கை கொண்ட சோழபுரம்

கொண்ட கல்வி நிலையங்களை திறப்பதற்கும், இருப்பதில் போதிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்திட வேண்டும். தமிழ் படிக்கத் தெரிந்த இளைஞர்களுக்கு தமிழகத்தின் அரசாங்க வேலைகளில் மட்டும் இல்லாது தனியார் ஆலைகளிலும் தொழிற் நிறுவனங்களிலும் வேலை கிடைத்திடும் வகையில் ஊக்குவிக்கப்பட வேண்டும். இதற்கு அனைத்து தரப்பிலும் ஆதரவு தர சமுதாயமும் முன் வர வேண்டும்.

தங்கள் கடைமைகளை மறக்கக்கூடாது. பிற சமுதாய மக்கள் நம் மண்ணில் இருந்தாலும் அவர்களிடம் நம்முடைய சமுதாய மேன்மைக்கு ஒத்துழைப்பு கொடுத்திடும் வகையில் சட்டத் திட்டங்கள் ஏற்படுத்த வேண்டும். பிற மொழி பேசும் இந்திய சகோதரர்கள் எத்தனை இளசங்களை நம் தமிழ் தாய்திரு நாட்டில் உருவாக்கினாலும் எடுத்துக் கொண்டு சென்று பிற மாநிலங்களில் செம்மையுற செய்தாலும் கவலை இல்லை. ஆனால் நம் தமிழை நாமே அதற்கு கருவியாக இருக்கக் கூடாது அதற்கு துணையாக தமிழ் அரசாங்கமும் போக கூடாது என்பதை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். தமிழுக்கு நாம் எடுக்கப் போகின்ற பாதுகாப்பு அரணகளை பிறர் புரிந்து கொள்ள தவிர்த்தாலும் அவர்களும் புரிந்திடும் வகையில் நமது செயல்பாடுகள் இருக்க வேண்டும். தற்போது அளிக்கப் பட்டு வருகின்ற நிதியினை தமிழ் ஆராய்ச்சிக்கு மேலும் உதவிடும் வகையில் பன்மடங்கு பெருகி தர நமது கலைஞர் ஏற்பாடு செய்து தர வேண்டும் என்றும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இக் கட்டுரையை முடிவுக்கு கொண்டு வருமுன் மீண்டும் சமுதாய உறுப்பினர்கள் தாமும் தமிழனாக பிறந்ததை மட்டும் பெருமையாக கருதாமல், தமிழனாக வாழ்ந்தால் மட்டும் போதாது நம்முடைய இளந்தோன்றல்களும் தமிழை மறக்காவண்ணம் வளர்ந்திட வேண்டும்.

யாழ் இனிது குழல் இனிது என்பது இனிய தமிழில் தம் மழலை குரல்கள் மீண்டும் அம்மா, அப்பா, என்று அழைப்பது முதல் சாகின்ற வரை தமிழை மறக்காமல் இருக்கின்ற அளவுக்கு தமிழ் என்ற உணர்ச்சியால் ஒவ்வொரு தாயும் தனது மழலைக்கு ஊட்டி மொழிப் பற்றுடன் வளர உதவி செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

# கடல் போலும் எழுக!

மு. அந்தாலனார் தலைவர், வரவேற்புக் குழு

*எண்ணிற் சிறந்தது தமிழ்!*
*எழுத்திற் சிறந்தது தமிழ்!*
*பண்ணிற் சிறந்தது தமிழ்!*
*பாரிற் பரந்ததும் தமிழ்!*
*மண்ணிற் பழையதும் தமிழ்!*
*மாசற் றொளிவதுந் தமிழ்!*
*கண்ணிற் சிறந்ததுந் தமிழ்!*
*கன்னிமை சான்றதும் தமிழ்!*
*தேனினுமினியது தமிழ்!*
*தெவிட்டாத சுவையது தமிழ்!*
*இலக்கணம் சிறந்தது தமிழ்,*
*இயல் வளம் சிறந்தது தமிழ்.*
*தன்னேரில்லாதது தமிழ்,*
*தனிப்புகழ் வாய்ந்தது தமிழ்!*

இத்துணைப் பெற்றியும் பெருமையும் வாய்ந்த தமிழ்மொழியை பாட்டாலும் உரையாலும் பல்வேறு தமிழ்ச் சான்றோர்கள் தரணி முழுவதிலும் பரணி பாடியுள்ளனர்.

உலகத் தமிழர் ஒன்பது கோடி நாவிலும் நனி சிறந்து மணந்திடும் மாத்தமிழ் இற்றைப் பொழுது தாய்த் தமிழகத்தில் எங்ஙனம் உள்ளது?

சங்க காலத் தமிழர் தமிழில் அனைத்தும் படைத்துக் காட்டினர். மருத்துவம், நீரியல், பொறியியல் கட்டிடக் கலை, சிற்ப கலை, கப்பல்துறை கனிமைத் துறை, ஆடற்கலை, அலங்காரக் கலை, இன்னம்பிற வாழ்வியல் கலைகள் அனைத்திலும் தலையாயவர்களாக வாழ்ந்து காட்டி, அவனி முழுவதும் பவனி வந்தனர்.

எகிப்து நாட்டுப் பேரழகி கிளியோபாத்ரா வின் வெண் சங்கு கழுத்தை பாண்டி நாட்டு முத்துக்கள் அலங்கரித்ததாக வரலாறு செப்புகிறது.

ரோம் நாட்டு மன்னன் தமிழகத்து மிளகையும், வாசனைப் பொருள்களையும் விரும்பி கொள்முதல் செய்துள்ளான். அற்றைய நாளில் நற்றமிழர் நாவாய் மூலம் நாநிலம் முழுவதும் வாணிகம் செய்துள்ளனர்.


சப்பான் மொழியியல் உள்ள 'அரிசா' என்ற சொல் தமிழகத்தின் அரிசியின் மறுச் சொல்லேயாகும் என மொழி ஆய்வாளர்கள் செப்புகின்றனர்.

அற்றை நாளில் குவலயப் பயணம் செய்த மெகசுதனீசு எனும் யாத்ரீகர் தென்னாட்டை சுற்றி வந்து, கண்டுகளித்து அவர் எழுதிய சான்றாதாரங்கள் இன்றும் குன்றின் மேலிட்ட ஒளிவிளக்காக தமிழனின் சிறப்பை ஒளிவிடுகிறது.

மெகசுதனீசு காலத்தில் தமிழகத்தையும் இலங்கையையும் ஒரு சிறிய ஆறு போன்ற கடல் பிரிந்தது. ஆகவே அன்றைய நாளில் தென்னாடும் இலங்கையும் ஒன்றுபட்டு இருந்தன எனக் கொள்ளுதல் பிழையாகாது. ஒரு காலத்தில் தாமிரபரணி ஆறு இலங்கை வரை சென்றதாக கருதப்படுகிறது.

எல்லம் என்பது ஈழம் என்றாயிற்று. லகரம் ழகரமாக உச்சரிக்கப்படும் சொற்களை மொழி ஆய்வினால் அறியப்படுகிறது.

ஆரியர் இந்தியத் துணைக் கண்டத்தை அடையுமுன், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் செந்தமிழ் மொழி. முழங்கிற்று என தமிழறிஞர் ந.சி. கந்தையாப்பிள்ளை தனது தமிழ் இந்தியா என்ற நூலில் தமிழின் பெருமையை



குறித்து சுட்டிக் காட்டியுள்ளார்.

இடைக் காலத்தில் தென்னாட்டில் நுழைந்த ஆரிய வம்சத்தினர் அந்நாளைய தென்னாட்டு சிற்றரசர்கள். வேந்தர்களின் பலவீனங்களை பக்குவமாக அறிந்து தங்களின் மொழி, நடை உடை, பாவனை கலாச்சாரம் அனைத்தும் நாட்டில் பரவிட வழி வகுத்தனர். இங்ஙனமாக பனிரெண்டாம் நூற்றாண்டில் செந்தமிழ் மொழி மணிப் பிரவாளமாக இரண்டாகப் பிளந்தது.

பின்னர் கிழக்கிந்தியக் குழுமம் தென்னாட்டில் கால் பதித்தது. அவர்களின் வணிக வளர்ச்சிக்காக தமிழ் மொழியில் ஆங்கிலம் கலக்கத் துவங்கியது. அதுதான் இன்று தமிங்கிலம் என்ற அளவிற்கு ஓங்கியுள்ளது. தமிழர்களின் நாவில் தமிங்கிலம் கூச்சமில்லாமல் உச்சம் அடைந்தது. 1938ஆம் ஆண்டில் பகுத்தறிவுப் பகலவன் பெரியார் தலைமையில் தமிழறிஞர்கள் ஒன்று கூடி தனித்தமிழ் இயக்கம் துவங்கினர்.

இந்த காலக் கட்டத்தில் மீண்டும் தமிழ் கூறு நல்லுலகில் தமிழர்களுக்கு தமிழ் நூல்கள் பெருமையும், திருக்குறள் மாண்பினையும் உணர்வதற்கு, ஊக்கம் அளிக்கப்பட்டது.

தமிழ் மாணவர்கள் தூய தமிழில் பெயர்கள் சூட்ட ஆரம்பித்தனர். தனித்தமிழ் இயக்கங்கள் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சியுற்று, அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் ஒளிவிட்டு திகழ்ந்தது. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்றாயிற்று. உலகத் தமிழர் அனைவரும் தாய் தமிழகம் வந்து, தமிழின், தமிழனின் சிறப்பை, உணர்வினைக் கண்டு கழிப்பேறுவகை எய்தினர்.

ஈழத் தமிழறிஞர் தலைமையில முதல உலகத் தமிழ் மாநாடு என்ற அமைப்பு கண்டு பல்வேறு நாட்டு தமிழறிஞர்கள் மலேசியாவில் ஒன்றுகூடி தமிழின் மாண்பை, தகமையை ஆய்வு செய்து அவனிக்கு எடுத்துக் காட்டினர்.!

மௌரியர்கள் காலத்தில் நமசுகாரம் வைத்த தமிழன், மொகலாயர்கள் காலத்தில் சலாம் வைத்த தமிழன், ஆங்கிலேயர்கள் காலத்தில் "குட்மார்னிங்" வைத்த தமிழன், தேசிய வாதிகள் காலத்தில் "ஜெய்ஹிந்த்" வைத்த தமிழன் தனித் தமிழ் இயக்கம் ஓங்கிய காலத்தில் "வணக்கம்" கூறினான்.

இங்ஙனமாக ஆயிரத்து தொளாயிரதது அறுபத்தேழாம் ஆண்டில் அறிஞர் அண்ணா ஆட்சி கட்டிலில் அமர்ந்து, இருமொழி சட்டம், தமிழ் ஆங்கிலம், இரண்டும் பயிற்று மொழியாக இருப்பதற்கு சட்டம் நிறைவேற்றினார்.

பின்னர் விண்ணாளாவிய தமிழ்மொழி வளர்ச்சியைக் கண்ட நடுவணரசில் உள்ள நயவஞ்சகர் சிலர் இதனைக் கண்டு பொறாமையும் புழுக்கமும் அடைந்தனர்.

இந்த வளர்ச்சியை இப்படியே வளரவிட்டால் பின்னர் ஒரு காலகட்டத்தில் இலங்கையில் தமிழ் ஈழ விடுதலை கோருவதைப் போன்று தமிழகத்திலும் பிரிவினை கோட்பாட்டினை தமிழர்கள் கேட்பார்கள் என்ற நச்சுக்கருத்து வடபுலத்தாரின் நெஞ்சில் நெகிழ்ந்தோடியது.

தமிழகத்தின் தெருக்களில் இந்தி மொழி உலாவரமுடியவில்லை என தெற்றெனத் தெரிந்தது. இந்நிலை நீடித்தால் தமிழகம் இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு தனித் தமிழ் நாடாகிவிடும் என எண்ணி தமிழ் வளர்ச்சியை தடுத்திட எண்ணினர்.

அதற்கு ஊற்றுக் கண் என்ன என தேடினர்.

தெருவெங்கும் பள்ளிகள் திறப்போம்! **ஆங்கி** மழலையர் பள்ளி திறப்போம் என **அடிமைத்** தமிழர்களை பூபாள இராகம் பாட **வைத்தனர்.**

இன்று தமிழக மெங்கும் ஐம்பதினாயிரம் ஆங்கில மழலையர் பள்ளி கூச்சமற வீச்சுடன் நிற்கிறது.

தமிழகத்து சின்னஞ்சிறு மழலையர் நாவில்

மம்மியும், டாடியும் மணக்கிறது. மம்மியும், டாடியும் கண்டு பெற்றோர்கள் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தனர்.

உரம் பெய்த செந்தமிழிற்கு, ஒன்றீங்கு நேர்ந்ததென உரைக்கக் கேட்டால், நரம்பெல்லாம் இரும்பாகி, நனவெல்லாம் உணர்வாகி, நண்ணீடிரோ? என்ற பாவேந்தரின் வீரவரிகள் அடிமைத் தமிழர்களின் காலால் மிதிக்கப்பட்டது.

“சதுமறை ஆரியம் வருமுன் சகமுழுவதும் உனதாயின், முதுமொழி நீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே!'' என மனோன்மணிய சுந்தரனாரின் தமிழ் மந்திரம் தமிழ் நாட்டில் உள்ள தமிழ்ப் பகைவர்களால் தூக்கி எறியப்பட்டது. பள்ளிகள் மேன்மையுற வளர்க்கப்பட்டு மேனாட்டு கலாச்சாரம், பண்பாடு தடுப்பாரின்றி, அரசியல் அதிகாரத்தினரின் ஆசியோடு ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடியது.

இங்கிலாந்து நாட்டு ஒரு குடிமகனை உனக்கு இலண்டன் மாநகர் வேண்டுமா? ஆங்கில மொழி வேண்டுமா? என்று கேட்டால் சற்றும் தாமதிக்காமல் ஆங்கில மொழிதான் வேண்டும் என்று செப்புவான். ஏனெனில் அவனின் தாய் மொழியை அவன் இழக்க ஆயத்தமாக இல்லை.

தமிழாய்ந்த தமிழன் தான் தமிழ்நாட்டில் முதலமைச்சராய் வருதல் வேண்டும் என பாவேந்தர் பறைசாற்றினார். அவரின் எண்ணப்படி கலைஞர் நான்காம் முறையாக முதலமைச்சராய் அரியாசனம் ஏறியுள்ளார்.

தமிழாய்ந்த தமிழன் ஆட்சியில் எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் மொழி பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்ச் சான்றோர் பேரவை. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் முன் வைத்தது.

தமிழை, பயிற்று மொழியாக ஆக்கலாமா கூடாதா என்று ஆய்வு செய்வதற்கும், மக்களின் கருத்துக் கணிப்பு தேவை என்று கூறிய கலைஞரை முதலமைச்சராக நாம் பார்த்தோம்.

வேறு எந்த நாட்டிலும் இந்நிலை இல்லை.

நீதிபதி மோகன் தலைமையில் கூடிய குழுமம் தனது பரிந்துரையை வழங்கியது. ஆனால் கலைஞரின் அரசு தேர்தல் கழித்து, நாள் நட்சத்திரம் பார்த்து ஆணையை பிரகடனப்படுத்துவாக அறிவித்தது.

தமிழர்களே! தமிழர்களே! வாருங்கள். உலகத் தமிழ்ப் பண்பாட்டு வெள்ளிவிழா மாநாட்டு அரங்கில் அமருங்கள் அருந்தமிழை ஆட்சியிலும் மழலையர் பள்ளியிலும் உயர்நிலைப் பள்ளியிலும் முதுகலையிலும் மருத்துவம் பொறியியலிலும் இன்னபிற துறைகளிலும் இன் தமிழ் ஏற்றமும் எழிலும் கண்டிட முடிவு காணுங்கள்!

நமக்கேன் இந்த வம்பு என்று சும்மா யிருப்பதே சுகம் என்று சோம்பலாகி விடாதீர்கள்.

சுந்தரத் தமிழை சுழன்றிடும் தமிழராக செய்யுங்கள். எம் தமிழர் கூட்டம் எழுந்தால் எங்கெங்கும் பகைவர் மாய்ந்திடுவர் என பறை சாற்றுங்கள்.

கடல் போலும் எழுக! கன்னல் தமிழை காத்திடுக!

உலகத் தமிழ்ப் பண்பாட்டு ஏழாவது மாநாட்டில் தமிழ் மறவர்களே ஒன்று கூடி நற்றமிழ் நானிலம் கண்டிட சபதமேற்போம்.

இனி ஒரு விதி செய்வோம்! அதனை எந்நாளும் காப்போம்!



# எங்கே தமிழியப் பேரரசு?

துருவன்

'நாம் தமிழர்' தந்தை ஆதித்தனார் 1942ல், தமிழ்ப் பேரரசான ஓர் அகன்ற பேரரசு எப்படி இருக்க வேண்டும் என ஒரு திட்டம் வெளியிட்டார்.

கி.மு. 4ம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 2வது நூற்றாண்டு வரை அறு நூறாண்டுக் காலவட்டமே, தமிழர் பொற்காலம் என்றார். அதன்பின் 600 ஆண்டுகள் தமிழர் வீழ்ச்சிக் காலம் என்கிறார் அவர். 3ம் நூற்றாண்டு முதல் அக்காலவட்டம் 8ம் நூற்றாண்டு வரை தமிழகத்தை வடக்கே உள்ளவர்கள் ஆட்சி செய்த காலமாம்.

முதல் மாட்சிக் காலத்தில்தான திருவள்ளுவரும், சங்கப் புலவர்களும் தோன்றி வாழ்ந்து வந்தனர். வீழ்ச்சிக் காலந்தொடங்கிய களப்பிரர் காலம் 'கி.பி. 200—ல் தொடங்கி 700ல் முடிந்தது. இது இருண்ட காலம். மதுரையை மையமாகக் கொண்ட தமிமொழிப்பு ஆட்சியாகும். இது சங்கம் மருவிய காலமாகி விட்டது.

சங்க காலத்திலேயே மௌரியர், கோசர், வடுகர் என்ற வடபுலத்தார் தமிழகத்தில் ஊடுருவி வென்றனர். பிறகு மராத்திய இராட்டிரகூடர், கல்யாணிச் சாளுக்கியர், போசளர் என்ற ஒய்சளர் பல பகுதிகளைப் பிடித்துத் தமிழகத்தினைச் சிதைத்து ஆண்டனர்.

ஆந்திராவின் தெலுங்கு மாமன்னரான கிருட்டிண தேவராயர் ஆட்சியும், பிறகு சிவாஜியின் மராத்தி ஆட்சியும், பின்னர் ஆற்காட்டு நவாப்புகளின் கொடுங் கோலாட்சிகள் படிப்படியாக வந்து தமிழகம் வீழ்ந்தது. இந்த அறுநூறு ஆண்டில் தமிழும் சிதைந்து, கலப்புத் தமிழுடன் பண்பாடும் தாறுமாறாகியது. புண்பாடுகள் பெருகி, கலாச்சாரக்கேடும், மதக் குழப்படியும் சாதிகளும் உருவாகிவிட்டன. ஏழாம் நூற்றாண்டில் தமிழுடன் சைவ சமயம் தேசியச் சமயமாக எழுந்தது. அதற்கு முன் புத்தமும் சமணமும் இலக்கியத்தில் படித்தளவு நாட்டை நல்வழிப்படுத்தவில்லை.

கீழ்க்கணக்கு, மேற்கணக்கு நூல்கள் அறிவுரைச் செறிவுகளாக இருந்த காலம் பொற்காலத்தில் கணக்கிடப்படுகின்றது. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பிறவும் நல்ல இலக்கியம் தந்தன. சமூக இரத்தக் கலப்பும் தமிழினக் கலப்பு மணமும் தனித் தன்மைகளை வீழ்த்திவிட்டன. தமிழியப் பண்பாடு, சாதிமதப் பண்பாடாகி கருவறுத்துவிட்டது. வீழ்ச்சியுற்ற அறுநூறு ஆண்டும் வடபுலக் கோளாறுகளால் நகரக் கலப்பினம் உருவாகியது. வடபுலப் பதினெட்டுப் பழங்குடிக் காட்டுக் கலாசாரம் ஓங்கித் தமிழயத்தைச் சாகடித்துவிட்டது.

மனம், மூளை, அறிவு எல்லாமே தலைகீழாக மாறி, தமிழரின் இதயமே ஆரியமாகிவிட்டது. ஐம்புலனறிவாலும் தீமைகள் உணர்வெடுத்து சித்தம் தடுமாறிய அடிமைக் காலகட்டம் 600 ஆண்டும் இருண்டு கிடந்தது. வடக்கே இருந்து

வந்தவனே தளபதி, இவனே பாளையப்பட்டுக்கு அதிபதி. கோமாளி ஆட்சி கொடூரமாகியது. தமிழனைப் பார்த்து ஒரு தமிழனே, தமிழனை நம்பாதேப்பா எனக் கூறக்கூடிய குழப்படிக் கோமாளிகள் பெருகினர்.

நாயுடு, நாயக்கர், ராவ், ரெட்டி, செட்டி இப்படி தமிழரல்லாதாரும், கலப்புத் தமிழரும், ஏமாளித் தமிழரும் சாதிகளை தமிழகத்தில் ஊர் ஊராக உருவாக்கி வளர்த்தார்கள். மதுரையில் ஒரு தளவாய் முதலியார் தலைகீழாகத் தமிழரை எடுப்பார் கைப்பிள்ளையாக ஆக்கிவிட்டார். அவர் அரியநாத முதலியார் என்ற ஆரியதாசர்.

நடுங்கத் தக்க நாயக்கராட்சிகள் வரலாறு :

நாயக்கர் காலம் கி.பி.1559 முதல் 1736 வரை 177 ஆண்டுகள் மதுரையில் இருந்தது. விசுவநாதன் கி.பி. 1559, திருமலை நாயக்கன் 1623, சொக்கநாத நாயக்கன் (சொக்கன்) 1662, மங்கம்மா 1689, விஜயரங்க சொக்கநாத நாயக்கன் 1704, மீனாட்சி (கடைசி) 1731 ஆகியோர் ஆண்டனர்.

பல்லவர் காலம் 717—880. தமிழரல்லாதாராகத் தொடங்கி கலப்பராகினர். காஞ்சியைத் தலைநகராக்கிக் கொண்டு வடபுலத் தமிழகம் தொண்டை மண்டலத்தை ஆண்டனர். நந்தி வர்மன்—பெயர் வரிசையில் மூவர். 163 ஆண்டுகிளில் மலாயா என்ற கெடாரம், சீயம், பர்மாவை இவர்கள் ஆண்டனர். அப்போது தான் அகன்ற தமிழப் பேரரசு இவர்கள் மூலம் தோன்றிது. இதற்கு இவர்களை மடைமாற்றியவர் தமிழ்ச் சைவக் குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசு நாயனார்.

14ம் நூற்றாண்டு வரை, சோழப் பேரரசர்கள், தென்னமெரிக்க பெருநாடு, சிலி, ஆத்திரேலியா, நியூசிலாந்து, தென்கிழக்காசியாவில் பர்மா, தாய்லாந்து, கம்பொடியா, அன்னம், மலாயா, கங்கை முதல் வட இந்தியா, கிழக்கிந்தியத் தீவுகள் யாவும் ஆண்டனர். இங்கும் புலிக்கொடிகள் பறந்தன. உலகத்தின் பாதியை ஆண்ட தமிழரசு ஓங்கி பட்டொளி வீசிப் பறந்து சிறந்தது. சோழர் கடல், வங்கக் கடலின் பெயராக இருந்தது. தமிழாட்சி எங்கும் நிலவியது.

தமிழ்மொழியும், தமிழ்க்கலைகளும், சிற்பம், ஓவியம், இசை யாவும், கீழை நாடுகளில் வேரூன்றின. தமிழகப் பொற்காலமது. இது ஆதித்தனார் கூறும் 2வது பொற்காலம். பின்னர் போலிச் சோழர் கலப்புருவாகி கலிங்கரிடம் வீழ்ந்து நாட்டை இழந்தனர். பொற்காலமான தமிழகத்தின் பகுதிகளில் சேர, சோழ, பாண்டியர் ஆண்ட விளத்தம் இது :

சேரன் நெடுஞ்சேரலாதன் இமயவரம்பன் கி.பி. 40—55.

பாண்டியன் மதுரை நெடுஞ்செழியன் கி.பி. 50—75. சோழன் கரிகால் பெருவளத்தான் 50—95. சோழன் நலங்கிள்ளி 95—105. கிள்ளி வளவன் 105—120.

இறை நெறியுடன், தமிழாட்சி நடந்த பொற்கால கட்டத்தில் தமிழகம் ஓங்கித் திகழ்ந்தது. தலைநிமிர்ந்திருந்தது.

புலிகேசி சாளுக்கியர் கி.பி. 500ல் நாடு புகுந்து ஆண்டனர். வடுகர்களுடன், தெலுங்கர் கலந்து விட்ட ஆட்சி, அப்போதும், சில பகுதிகளில் உண்டு.

மதுரை சுந்தர பாண்டியன் 1310லும், பிறகு டில்லி அரசின் உலுப்கான், மாலிக்கபூர் காலம் கி.பி. 1323ல் தொடங்கி 1351ல் முடிந்தது. கன்னட வடுகரான கம்பண்ணன் 1364ல் தொடங்கி ஆண்டான். கிருஷ்ணதேவராயர் 1509லும், விசயநகர வல்லரசு 1529லும் வந்தாண்டது. அரியநாதனின் அமைச்சு மட்டும் இவர்களது நான்கு தலைமுறையில் மதுரை சுடுகாடாகியது.

கட்டபொம்மு என்ற தெலுங்கராட்சிப் பரம்பரை ஏழாண்டுகள் பாஞ்சாலங் குறிச்சியில் (1791—97) ஆண்டது. இப்படிப் பலப்பல.

மராட்டியரான சிவாசி—வெங்காசி — தஞ்சை சோழநாட்டை ஆண்டனர். 1676—1677 கால கட்டம் இது.

டில்லி முகம்மதிய ஐதர் அலி படையெடுத்துப் பாழாக்கிய கால கட்டம் 1690—1780. தொண்ணூறு ஆண்டுகாலம் இது நீடித்தது.

1820ல் தமிழகச் சீர்திருத்தத்தைக் கொணர்ந்த தர்மஸ் மன்றோ காலம் தொடங்கி, 1947வரை

ஆங்கிலர் ஆட்சி மிக நீண்ட காலம் நீடித்தது. இந்திய விடுதலை என்ற பெயரில், தமிழகம் டில்லிக்குக் கப்பம் கட்டியபின் மீண்டும் வீழ்ந்தது. திராவிடம் எழுந்தது.

தமிழர் யார் எனத் திராவிட ஆட்சியில் தேட வேண்டியுள்ளது. இந்துப் பெயர்களில் திராவிடர்கள் மஞ்சள் குளிக்கின்றனர். தெலுங்கு, மராட்டி, மலையாளம், கன்னடம், மார்வாடி யாவரும், தமிழகத்தில் மட்டும் திராவிடர்களாகி தமிழரைக் குறைத்து விட்டனர்.

இப்போதும் தமிழக அரசு தமிழர் அரசாக இல்லை. 25 சதவிகிதம் தமிழர்கூட அதிகார பலமிக்க தமிழராக இதில் இல்லை.

1947—1997 ஐம்பது ஆண்டிலும் தமிழ்நாடு பொன்னாடாக இல்லை. இனியும் இருக்குமா?

தமிழர் தேசியம் தொடர்ந்து வீழ்த்தப் படுகிறது. ஆதித்தனார் கனவுப்படி 9ம் நூற்றாண்டு முதல் 14ம் நூற்றாண்டு வரை 600 ஆண்டு பொற்காலமாயில்லை. 15ம் நூற்றாண்டு முதல் 20ம் நூற்றாண்டு வரை அடிமைக் காலம் என்பதுதான் சரி 21ம் நூற்றாண்டிலும் தமிழ்நாடு பொற்காலமாகிவிடக் கூடாது என்பதுதான் திராவிடர் ஆசை. இது அவர்களது கனவு.

இராசேந்திரச் சோழன் பெருவுடையார் கோயில் முழுவதும், தம் தந்தையார் இராசராச சோழனது வெற்றியைப் பொறித்தான். கங்கை கொண்டான், கடாரங்கொண்டான், பழந்தீவு பன்னீராயிரம் கொண்டான் என்ற உலகப் புகழேந்தினான்.

பாண்டியர்-சோழர்-சேரர் மூவரசுக்குள் சதி செய்த வடமன்னர்களும், கொடுங் கோலர், களும் இவர்களைப் பிரித்தாண்டார்கள். உட்பகை நீறு பூத்த நெருப்புத் தீயாய் பரவியபோது நாட்டின் பல பகுதிகளைத் தமிழரசர்கள் இழந்தனர்.

15ம் நூற்றாண்டு முதல் 20ம் நூற்றாண்டு வரை உள்ள வீழ்ச்சியானது 2000குள் முடிவுற வேண்டும். 21ம் நூற்றாண்டு தமிழரசுடன் புதிய தமிழகம் பிறக்க வேண்டும். தமிழீழமும், தமிழகமும் தன்னாட்சி நாடுகளாகும். இக்கனவு பலிக்கும். தமிழர் வெல்வர். இது உறுதி.

ஐம்பொன் பார்வதி சிற்பம்
தஞ்சாவூரில் அமைந்தது



# தமிழீழமும் சங்கத் தமிழகமும்

கவிவேழம் பாரதிபர்லன், டென்மார்க்

தமிழர்தம் சங்க இலக்கியங்களில் ஈழத்துநாகனார், ஈழத்துப் பூதன் தேவனார், மதுரை ஈழத்து நாகனார் பற்றிய செய்திகள் உண்டு. அவ்வாறான சங்க காலத் தமிழீழம் பற்றி அறிந்திராத ஆரிய பார்ப்பனிய தமிழ் ஏடுகள் தமிழரை ஈழத்தின் வந்தேறு குடிகள் என்றும், சிங்களரே ஈழத்தின் பூமி புத்திரர்கள் என்றும் உண்மை வரலாற்றைத் திரித்து இருட்டடிப்புச் செய்து வந்திருக்கின்றன.

கீழ்க்கண்ட ஆய்வுகள் ஆரிய மாயைக்குள் இருந்து தமிழரை மீட்டேடுக்கக் கூடும்.

**பரந்த பழந்திராவிடம்**

சுவீடன் நாட்டைச்சேர்ந்த ஹெல்மர் எனும் அறிஞர் ''திராவிட மொழிகளுடன் அவுஸ்திரேலிய மொழியானது இலக்கண, ஒலி அமைப்புகளில் ஒன்றுபட்டுக் காணப்படுகிறது" எனும் ஆய்வை 1963-க்களில் முன்வைத்தார்.

இந்து சமுத்திரக் கடலடி ஆய்வாளர் கடல்நீருக்கடியில் சங்கிலிபோன்ற மலைத்தொடரொன்று இந்தியா, ஈழத்தீவுகளை அவுஸ்திரேலியாவுடன் இணைப்பதைக் கண்டுபிடித்தனர். இந்திய, அவுஸ்திரேலியாவின் புதைபொருள் ஆய்வுகள் ஓரேமாதிரியான கற்கால ஆயுதங்களை மீட்டெடுத்தன.

திருக்கோணமலையின் வரலாற்றுத் தொன்மையை நிருபிக்கும் சான்றாகக் கடல் நீருக்கடியில் மீட்க முடியாதபடி தொல்நாகரிகச் சின்னங்கள் இருப்பதை சுழியோடிகள் காலங்காலமாக கண்டுவந்து தெரிவித்தபடி உள்ளனர்.

அவுஸ்திரேலியத் தொடர்புடனான மொழியியல், கடலடி, புதைபொருள் ஆய்வுகள் "திராவிடர் நிலம் பரந்துவிட்டது" எனும் உண்மையை உலகுக்கு ஊட்ட முன்வரும்போது, எதிர்காலத்தின் நவீன கருவிகளின் துணையுடன் ஆய்வுகளை மேற்கொள்ளும்போது, இன்றைய ஈழ வரலாறு மட்டுமல்ல இன்றைய உலக வரலாறுகளாக நம்பப்படும் சங்கதிகள் பல மீண்டும் திருத்தி எழுப்படவேண்டிய தேவை ஏற்படலாம். புராண இதிகாசங்களென எம்மால் பயபக்தியுடன் பயிலப்படும் கற்பனைச் சிறையிலிருந்து விடுபட்டு உண்மைவரலாறுகள் உருப்பெற்று எழும் பிரமகணை, நாககணை (பிரமாஸ்திரம், நாகாஸ்திரம்) என்பவை இன்றைய ஏவுகணைகளை விட அதிசக்தி வாய்ந்தவை என்பதையும் அழிவின்(கடல்கோள்) பின்னர் எஞ்சி இருப்பதே இன்றைய உலகம் என்பதையும் ஆய்வுலகம் முடிவாக்கக் கூடும்..

**ஆதிசேடன்**

இந்துக்களின் நம்பிக்கை ஆதிசேடன் எனும் பாம்பில் இருந்து கிருக்ஷணப்பரமாத்மா உலகைக் காக்கிறார் என்பதாகும்.

ஆதியில் அழிந்தது போக, மீதி உலகை(ஆதியின்மீது) பகவான் காக்கிறார் என்ற நம்பிக்கையே ஆதிசேடன் எனும் பாம்பில் இருந்து பகவான் காக்கிறார் என பின்னர் இந்துக்களின் நம்பிக்கையாக்கப்பட்டுள்ளது.

ஆதிக்ஷேசா என்பதில் ஆதி என்பது மிகப் பழமை எனவும், க்ஷேசா என்பது மீதி எனவும் பொருள்கொள்ளத்தக்கது.

பூர்விக திராவிடர்தம் அண்டவெளி ஆய்வுகள் இன்றைய வல்லரசுகள் பூமி உட்பட ஏனைய கிரகங்களின் அடியையும், முடியையும் போட்டிபோட்டுக் கொண்டு தொட விழைவது போல வரலாற்றிற்கு முற்பட்ட ஆதியிலும் நடைபெற்று தோல்வியிலே முடிந்திருக்க வேண்டும். அதுவே பிரமாவும், விஷ்ணுவும் அன்னப்பட்சியாகவும், பன்றியாகவும் மாறி சிவனின் அடியையும் முடியையும் தொடவிழைந்து தோல்வியைத் தழுவியதாக புராணவடிவில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

திராவிடர் தலைவனின் கடற்படைத் தளம்

இராமாயணம் எனும் இதிகாசத்தில் அரக்கர் கோமானாகச் சித்தரிக்கப்படும் இராவண ஈசுவரன், ஈழம்(இலங்காபுரி) என்ற வல்லரசில் இருந்து உலகின் பலபகுதிகளை ஆண்டு இருக்கிறான். இராவணனின் கடற்படைத் தளம்அ திருக்கோணமலையிலே அமையப் பெற்றது. அங்குள்ள வரலாற்றுப் புகழ்மிகு கோணேசர் இராவணன் வழிபட்ட சிவத்தலம்.

''திருகோணமலையை எவன் தனது கட்டுப்பாட்டுக்குள் வைக்கிறானோ அவன் தென்கிழக்கு ஆசிய நாடுகள் அனைத்தையுமே தனது கட்டுப்பாட்டுக்குள் வைப்பான்" என நெப்போலியன் கூறி இருக்கிறான்.

**வின்சன்ற் சேர்ச்சில் கண்ட திருக்கோணமலை**

இலங்கைக்கு 48-க்களில் சுதந்திரம் வழங்கிய பிரித்தானியா 63-கள் வரை திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் நிலைகொண்டு இருந்துவிட்டு இலங்கையில் இருந்து வெளியேறு முன் தன்னிடம் இருந்த அதிக சக்திவாய்ந்த உபகரணங்களை அழித்தும் கடலிலே வைத்து எரித்தும் சென்றிருக்கிறது. ஒருமுறை வின்சன்ற் சேர்ச்சிலின் உதவியாளர் திரு. கோணமலையை பிழையாக தட்டச்சிலே பொறித்து விட்டார்.

"உலகத்திலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாவது தானத்தில் இருக்கும் ஒரு முக்கிய துறைமுகமான''றிங்கமலியை'' ''திங்கமல'' என்றுபிழையாக எழுதி இருக்கிறீரே?" என்று அவரை சேர்ச்சில் கண்டித்து இருக்கிறார். பிரித்தானியர் தம் அதிசக்தி வாய்ந்த கடற்படைத்தளம் அமைந்திருந்த திருக்கோணமலையில் இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது யப்பானியர் குண்டுகள் வீசி இருக்கின்றனர்... இன்றைய வல்லரசுகளின் தந்திரங்களால் தமிழர்தம் விடுதலை உரிய இலக்கை அடையாமல் இழுபட்டுச் செல்வதற்கும் இந்த இயற்கைத் துறைமுகம் மீதான கண்ணே பிரதான காரணம்..

**திராவிட ஈழத்தின் முதுமொழி**

கடல்கோளினால் தனித்தீவாக்கப்பட்ட ஈழத்தில் ஆதியிலே வாழ்ந்ததாகக் கூறப்பட்ட இயக்க, நாகர்களின் பேச்சுமொழி திருந்தாத தமிழாக எலு (ஈழ) என அழைக்கப் பட்டு இருந்திருக்கிறது.

கடல்வணிகம் முதலாக தமிழகத் தொடர்பால் கரையோரங்கள் சேர, பாண்டிய, சோழர்களால் காலத்திற்குக் காலம் திருந்திய தமிழாக வளம் சேரப்பெற்றது. முல்லை, குறிஞ்சி கொண்ட தென் பகுதி மக்கள் வாழ்ந்த திராவிடர் தம் மொழி எலுவில் இருந்து சிங்களமாக உருவெடுக்க தெலுங்கரான வடுகர் தம் ஒட்டுறவுவழி பௌத்தபாளி, சமஸ்கிருதம் காரணமாக இருந்திருக்கின்றன.

காலத்திற்குக் காலம் புதிப்பிக்கப்பட்டு பின்னாளில் கன்னட, கேரளப் படைகளின் கலப்பாலும் தமிழில் இருந்து சிங்களம் தனி இனமாகப் பிரிந்து போயிற்று. இன்னோரன்ன ஆய்வுகள் ஈழப் பூர்விகத்தில் ஒரே திராவிட இனமாக வாழ்ந்த இன்றைய தமிழ்ச் சிங்களர்தம் ஒரே பேச்சு மொழியே எலு எனும் ஈழமொழி என்பதை நிருபணமாக்கும். பௌத்த இதிகாசங்கள் கூறுவதுபோல சிங்களர் ஆரிய இனம் என்று கூறுவது எவ்வகைத்தானும் பொருந்தாது. இதனை ஒருதலைப் பட்சம் அற்ற சிங்கள அறிஞர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

**ஈழத்தில் ஆரிய ஊடுருவல்**

திராவிடர் தம் மரபுக்கொவ்வ தாய்வழித் தலைமை ஏற்று தனது ஈழநாட்டை ஆட்சி செய்துவந்த குவேனியை மணந்து அவளை வஞ்சித்து அரசைக் கவர்ந்தவனே விஜயன் என்று கூறப்படுகிறது. குவேனித் துரத்திய விஜயன், பாண்டிய அரச குமாரத்தியை மணந்து அவ்வாறே தனது தோழருக்கும் பாண்டி நாட்டுப் பெண்களை மணம்புரிய வைத்திருக்கிறான். இவ்வாறு சிங்கள இதிகாசங்கள் கூறிக் கொள்கின்றன. மேற்படி விஜயன் பரம்பரையில் இருந்தே சிங்களச் சந்ததி உருவாயிற்று என்றும் கூறிக் கொள்ளும் சிங்களருடாக அந்த விஜயனை மகாபாரதத்து ஆரியனான அருச்சுனனாக இனங்காண முடிகிறது.

## பூர்விக இந்தியாவிலே நாகத்தின் சிறகுகள்

பூர்விக மக்களாக பாரதம் முழுவதும் பரவி இருந்த திராவிட மூதாதையரான நாகர்கள் நாகரிகம் படைத்து கோட்டை கொத்தளங்களுடன் வாழ்த்திருக்கிறார்கள். அவர்களது நாகரிகத்தை நாடோடி ஆரியர் அழித்துச் சிதைத்திருக்கிறார்கள். ஆரியர் தலைவனான இந்திரனின் (இந்திரன் அருச்சுனனான விஜயனின் தந்தை) தலைமையிலே இப்பூர்வீக திராவிட நாகரிகச் சிதைப்பு நேர்ந்திருக்கிறது. "இந்திரன் நாகத்தின் சிறகரிந்தான்'' என்பதற்கு தப்பிதமான விளக்கத்தை பின்னைய ஆரியம் முன்வைத்திருக்கிறது.

அதாவது முன்னைய காலத்தில் மலைகள் சிறக்கை முளைத்து பறந்து திரிந்தன. அவை மக்கள் குடியிருப்புகள் மீது விழாதிருக்க இந்திரன் அந்த மலைகளின் சிறகுகளை அரிந்தான்.

இங்கே நாகம் என்பதற்கு மலை எனத் தவறாகப் பொருளுரைக்கப்பட்டுள்ளது கவனிக்கத் தக்கது. மேற்படி நாக வல்லரசின் தலைவனே துரியோதனன் என்பதை அவனது பாம்புக்கொடி வழி இனங்காணமுடிகிறது.

பூர்விகத் திராவிடரான துரியோதனன் முதலானோரை வஞ்சனையால் வென்று தாம் வேரூன்றிட ஆரியர் உள்ளூர் பெண்களை மணந்துகொண்டே தமது அரசுரிமையைத் தக்கவைத்தனர். பாண்டுவின் புதல்வர்களாக இல்லாமல் அருச்சுனன் முதலானோர் குந்திக்கு முனிவர்களின் உபதேசத்தால் ஆன பிறப்பு என்பதை நம்பூதிரிகளின் தந்திரங்களுக்கு பலியாகி தமது சேரநாட்டை கேரளம் ஆக்கிவிட்டு தமிழில் இருந்து விலகி இருக்கும் மலையாளிகளான நாகர்கள்(நாயகர்கள்) தமது பெண்களை நம்பூதிரிக்கு மூன்று இரவுகள் அனுப்பி வைக்கும் முறையுடன் ஒப்பிடலாம்..

இந்த நாகர்களும் அருச்சுனர்களும் (விஜயன்)ஆரிய திராவிடக் கலப்பாக (நாகார்சுனம்) வடுகவழி ஈழத்திலும் நிலைகொண்டனரா என்பது ஆயத் தக்கது..

## இராவணேசுவரமும் இராமேசுவரமும்

தமிழர்களாய், சிங்களராய் ஈழவர் பிளவுண்டுபோய் பெருவிரிசல் தோன்றக் காரணமே அந்நியர்தம் ஊடுருவல் எனபதே வரலாறுகளாய் இதிகாசங்களாய், புரணங்களாய் காட்சி தருகின்றன.

ஆதித் திராவிட மரபினரான இராவணன் ஈசுவரனுக்கு ஒப்பாக இராவணேசுவரன் என அழைக்கப் பட்டு இருக்கிறான். விபீசுடணன் போன்ற உடன்பபிறந்தே கொல்லும் வியாதிகளால் ஆரியனான இராமனின் ஊடுருவலும் அதனைத் தொடர்ந்து இலங்கையில் இராவண ஆட்சி அஸ்தமனம் ஆகியதும் திராவிடர்தம் இராவணேசுவரம் ஆரியர்தம் கலப்பால் இராமேசுவரம் ஆகிக் கொண்டதும் திராவிடம் பறிபோன பண்டைய சம்பவங்களைப் புலப்படுத்துகின்றன. திராவிடரை தமது கட்டுப்பாட்டுக்குள் வடஆரியர் கொண்டுவந்தனர் என்பதையே அச்செய்தி மெய்யகப்படுத்துவதாக மேற்படி ராமாயண சம்பவம் உணர்த்தும்.

## தமிழீழத்தில் இராவணேசுவரம்

தமிழீழத்தின் திருக்கோணமலைச் சிவாலய வரலாற்றுவழி இன்றும் திராவிடனான இராவணன் பூசித்துவரப் படுகிறான்.

திருநீற்றின் மகிமை உரைக்கப்போந்த திருஞான சம்பந்தர் "இராவணன் மேலது நீறு" என உரைப்பதில் இருந்தே அந்தத் திராவிடனின் பெருமை அரக்கனாக இழிக்கப்படத்தக்கதன்று என்பதைப் பகர்கின்றது.

தவிர இராவணனின் புகழைத் தாங்கும் பல புராதன இடங்கள் சிங்கள தமிழ் பேதம் இன்றி ஈழத்தில் விரவிக் கிடக்கின்றது...

தமிழ்க்கடவுள் முருகனும் இராவணனும் சிங்கள வழிபாட்டில். சிங்கள ஆதிவாசிகள் பூசை இயற்றும் தமிழ்க்கடவுளான தென்னிலைங்கை கதிர்காம முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் இராவணனுக்கு கோயில் உள்ளது.

ஈழத்தின் தென்கீழ் திசையில் இராவணனின் இரு கடல் கண்காணிப்பு வலயங்கள் இருந்திருப்பதை பூர்விக ஈழ வரலாற்றின் பெரிய இராவணன் கோட்டை என்ற வழக்கு இனங்காட்டுகிறது.

## திரிகோணமலையும் திரிகூட மலையும்

தமிழகத்தின் கி.பி.13ம் நூற்றாண்டுக்குரிய சாசனங்கள் இரண்டு சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் ஆகியோர் ஈழத்தை வெற்றி கொண்டதைத் தெரிவிக்கும்..

''திரிகோணமலையிலும் திரிகூட

மலையிலும் இருகயல் எழுதி...” என்பதாக வருகிறது.. சிதம்பரத்தில் இடம்பெற்றுள்ள மேற்படி சாசனம் சுந்தரபாண்டியனையும், திருக்கழுங்குன்ற சாசனம் ஜடாவர்மன் வீரபாண்டியனையும் திரிகோணமலை, திரிகூடமலை மீன் இலச்சினைக்கு உரிமையுடைத்தாக்கும்.

திரிசோணமலையில் போத்துக்கீசர் அமைத்த கோட்டையின் முகப்பிலே இடம்பெற்றிருக்கும் பாண்டியனின் மீன் இலச்சினையால் திருக்கோணமலையின் கடற்படைத் தளத்தின் முக்கியத்துவத்தை எடுத்துப் பேசும்.

இராவணன் தனது போர் படைகளை நிறுவி ஏனைய நாடுகளைக் கட்டிஆண்டிருக்கிறான் என்பது ஏலவே பெறப்பட்டது.

திருகோணமலையியே திரிகூடமலை என வரலாற்றாசிரியர் கூறிவரினும் திரிகூடமலை யானது இராவணன் தனது அரசமாளிகையை நிறுவிய பாதுகாப்பான இயற்கையான முக்கோண(திரிகோண) மலைப் பிரதேசமே என்பதும், அது திரிகோணமலையில் இருந்து வேறுபட்டது என்பதும், மத்திய மலைநாட்டில் அமைவு கொண்டது என்றும் கருத இடமுண்டாகிறது. இயற்கையான அழகுபற்றி இராமாயணம் தந்த வால்மீகி, கம்பர் முதலானோர் இலங்கை வர்ணனையை சுந்தர காண்டம் (அழகுப் பகுதி) என வர்ணித்திருப்பதற்கு ஏற்புடைத்தாக இப்பகுதி பொருந்தி வருகிறது. இன்றைய நுவரெலியா பகுதியை அண்டிய இடமாகவே அதனைக் கருத இடமுண்டாகிறது.

**அசோகவனம்**

நுவரெலியா பிரதேசத்திற்கு அருகில் இராமாயணத்துச் சீதை சிறை வைக்கப்பெற்ற அசோகவனம் உள்ளது. அதுவே அங்குள்ள திரராவிடத் தமிழர் (அன்றுள்ள புத்த சிங்களவர்) இராவணனுக்குப் பின் ஆரிய இராமரது தொடர்பால் தமது பழைமையில் இருந்து வழுவாது பயபக்தியான நம்பிக்கை மூலம் காப்பாற்றும் “சீத்த அலிய” எனும் பகுதியின் இராமர், சீதை ஆலய வழிபாடு ஆகும்.

இன்றைய சிங்கள புத்த துறவிகள் இவ்வழிபாட்டால் புத்த மதத்திற்கு கேடு வந்துவிடும் என்று கோயிலை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் அண்மைய ஈழச் செய்திகள் தெரிவிக்கின்றன.

**புஸ்பக விமானத்தளம்**

இராவணனிடம் இருந்த விமானங்களின் இறங்குதுறை பரந்து தாமரை மலர் போன்ற வடிவத்தை ஒத்து இருந்தது எனவும்: அதுவும் இன்று நுவரெலியாவுக்கு அணித்தாக உள்ள வாரியப்பொல எனும் பிரதேசம் என்றும் கூறப்படுகிறது. வாரியப்பொல என்பது தமிழிலே வாரிஉப்பலம் என வழங்கப்படும்.

அது பண்டைய இலக்கியங்களில் தாமரைக்கு வழங்கப்படுவதை இனங்காட்டும் தாமரை வடிவிலே தாபிக்கப்பட்ட நகரம் வாரிஉப்பலம் (வாரியப்பொல) ஆகி இருக்கிறது. இராவணனின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த தமிழகத்தின் பல இடங்கள் தாமரை வடிவிலே தாபிக்கப்பட்டு இருந்தன. மதுரை மாநகர் தாமரைவடிவிலே தாபிக்கப்பட்டதை தமிழக வரலாறு இனங்காட்டும். மேற்படி வாரியப்பொல தவிர இன்றைய தமிழ் ஈழத்தின் பிரதேசங்களின் வற்றாப்பளை, விறாத்துப்பளை என்ற மருவல்களும் வறக்காப்பளை எனும் மேல்மாகாணத்து பிரதேசம் ஒன்றின் மருவலும் தாமரைவடிவில் தாபிக்கப் பெற்ற இராவணனின் ஏனைய விமானத் தளங்களாக இருந்திருக்கக் கூடும்.

பண்டைய நாகரிகம் பற்றி இன்றைய வரலாறுகள் தேடிக் கொண்டு இருக்கும் பங்கயத்தீவு இராவணனின் விமானப் படைத்தளமா? திரிகோணமலையிலும் திரிகூடமலையிலும் “இருகயல் எழுதி..” எனவரும் பாண்டியர்தம் கல்வெட்டு இராவணனின் பூர்வீக அரசுக்குப் பெருமை சேர்க்கிறது இவை இவ்வாறிருக்க இலங்கைத் தீவுக்கு முற்பட்ட ஏற்கெனவே கூறியதுபோல் அவுத்திரேலியா வுக்கும் ஈழத்திற்கும் உள்ள தொடர்பை சிறிது ஆராய திருக்கோணமலையிலே மூதூர் எனும் தீவுக்குச் செல்வோம்...

**மூதூர் அவுத்திரேலியத் தொடர்புகள்**

இந்தப் பிரதேசத்தில் சில பின்தங்கிய கிராமங்களில் வாழும் ஆதிவாசிகளிடம் அவுத்திரேலியப் பழங்குடியினரின் தோற்றமும் அவர்களிடை நிலவும் பண்பாடுகள் சிலவும் ஒத்த தன்மைத்தனவாகக் காணப்படுகின்றன.

பிற்காலத் தமிழீ மன்னர்களின் யாழ்ப்பாண தலைநகராக கி.பி.16ம் நூற்றாண்டு வரை விளங்கிய நல்லூர் போல இங்கும் நல்லூர் எனும் பழைய கிராமம் ஒன்று இருக்கிறது. அங்கே மி

கவும் பிற்பட்ட ஆதிவாசிகள் (வேட்டுவர்) வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொண்டிருக்கும் தமிழ் பின்தங்கிய தமிழ். இன்றைய நாகரிகத்திற்கு மிகமிக மூத்தது. வாழ்வுமுறையும் அப்படியே. அவர்கள் மங்கல அமங்கலச் சடங்குகள் அவுத்திரேலியப் பழங்குடியை ஒக்கும். அவுஸ்திரேலியப் பழங்குடியினர் தமது எறிபடையாக பயன்படுத்திய பூமராங் எனும்வளைதடி இங்குள்ள காட்டுவாசிகள் அறிந்ததே. 17—ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாத்திரிகராக ஈழம்வந்த றொபேட்நொக்ஸ் இம் மூதூர் பகுதியில் ஆய்வு செய்திருக்கிறார்.

இந்த ஆய்வாளரை ஐரோப்பிய ஒற்றன் எனச் சந்தேகித்து கண்டி மன்னன் சிறைவைத்து விட்டான். மூதூரில் இன்றும் இவ் ஆய்வாளர் காலத்துப் புளியமரமும், நெடுஞ்சாலையும் இவர்தம் பெயருடன் விளங்குகின்றன. இவ்வாய்வாளர் இம் மூதூர் பகுதியைப்பற்றி செய்த ஆய்வுக் குறிப்புகள் கண்டியின் சிங்கள மன்னனால் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது.

இம் மூதூர்ப்பகுதியின் நல்லூர் உள்ளிட்ட பகுதிகள் புதைபொருள் ஆய்விற்கு உட்படுத்தப்படின் கிறிஸ்துவுக்கு முற்பட்ட தமிழர்தம் தொன்மைச் சிறப்புகள் பல வெளிவரலாம்.

அவுஸ்திரேலியா, ஈழம், தமிழக ஆய்வுகளுக்கு இப்பகுதியில் பல சான்றாதாரங்கள் கிட்டலாம். பிற்காலத் தமிழர்களின் நல்லூர் தலைநகர் சிங்களர்தம் இதிகாசங்கள் வழி தமிழீழத்தின் தலைநகராக கி.பி.13ம் நூற்றாண்டளவில் தலைதூக்கியதாக இனங்காணப்படும் யாழ்ப்பாணத்து நல்லூரரை, அதன் வரலாற்றுச் சின்னங்களை வரலாற்றுப் புகழ் மிகு முருகன் ஆலயம் அமைந்திருந்த மேற்படி பழைய இடத்தை பாதுகாக்கவோ அப்பிரதேசத்தை சிங்களர் தம் அனுராதபுரம் போன்று புனித நகராக்கவோ சிங்கள அரசுகள் முன்வரவில்லை.

யாழ்பாணத் தமிழ் அரசனின் பாழடைந்த நல்லூர் இராசதானி மற்றும் பூர்வீக முருகன் ஆலயப் பிரதேசம் (ஒல்லாந்தர் தேவாலயம் அமைந்த பகுதி) ஆகியன ஏனோதானோ என்று கைவிடப்பெற்று அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப் படாது அவ்வாய்வுப்பகுதிகள் பின்னாளில் கோயில் குத்தகைக்குரிய நிலங்களாக்கப்பட்டு பின்தங்கிய கிராம மக்கள் வந்து குடியேற வகைசெய்யப்பட்டு வரலாறுகள் மறைக்கப் பட்டன.

தமிழ் மன்னனின் கொடி சைவர்களின் நந்திக் கொடி எனவும் இந்த நல்லூர் பகுதியில் காலங்காலமாக வாழ்ந்து வருவோர் தம்மை நந்திகோத்திரர் என்று கூறி வருவதும் நோக்கற்பாலது.

**சங்ககாலத் தமிழீழம்**

தமிழீழத்தின் இன்றைய போர்க்காலச் சூழலுக்குள் எமது தமிழ் ஆய்வாளர்கள் மகத்தான பணிகளை மேற்கொண்டு வடதமிழீழத்தில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட தமிழர் தலைநகரொன்றை அகழ்வாய்வினால் கண்டுபிடித்துள்ளனர்.

அத் தலைநகர் வடமாகாணத்தில் உள்ள பூநகரி நல்லூர் ஆகும். அந்த நல்லூர், யாழ்பாணத்து நல்லூரைவிடவும் மூத்தது.

இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பூநகரி நல்லூர் ஆய்வுகள் வெளிக்கொணர்ந்த வரலாற்றுத் தரவுகள் ஈழவரலாற்றின் ஒரு திருப்புமுனை மட்டுமல்ல கி.பி.1—ம் நூற்றாண்டளவிலேயே தமிழாட்சி ஈழத்தில் தோன்றியது எனமகாவம்வத்தினூடே பௌத்தர்களால் புரளியாக கட்டி எழுப்பப்பெற்ற சிங்கள அத்திவாரம் ஆட்டம் எடுத்திடும் வண்ணம் பல தமிழீழ வரலாற்றுச் சான்றுகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றது.

அப்பூநகரி நல்லூரின் ஆய்வுகள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட தமிழர்களின் ஈழத்தையும், அவர்களது நாகரிகத்தையும் வெளி உலகிற்கு எடுத்தியம்பத் தொடங்கி இருக்கின்றன.

அகழ்வாய்வுகளின் மூலம் அங்கே, முதன் முதலாக 'ஈழ' 'ஈலா' எனும் உடைந்த மட்பாண்ட எழுத்துக்களும் மேலும் பல தொன்மைச் சாதனங்களும் பாரிய நாகரிகத்திலிருந்து அழிந்த அரண்மனை இடிபாடுகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இங்கு கிடைக்கப்பெற்ற பிராமிச் சாசனங்களை தமிழகத்தின் புகழ்மிக்க ஆய்வாளர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் பரிசோதித்து அவை கி.மு.2—அல்லது 3—ம் நூற்றாண்டிற்கு உரியவை எனவும் தமிழகத்தின் கடல்கொண்ட தமிழ்ச் சங்க காலத்திற்கு உரிய வழக்குகள் அவற்றிலே இனங்காணப்படுவதையும்

குறிப்பிட்டுள்ளார்.

**கி.மு.தமிழ்மன்னன் ஈழராஜா**

தமிழகத்தின் சோழர் படையெடுப்பால் சிங்கள பௌத்தரின் பேரரசு பறிபோயிற்று என உரைப்பதும் அவ்வாறு சிங்களப் பேரரசான அனுராதபுரத்தை கைப்பற்றிய மன்னனாக எலாரா(எல்லாளன்) என ஒரு சோழ மன்னனைக் கூறிக் கொள்வதும் பூநகரி நல்லூார் தரும் புதிய ஆய்வுகளால் திருத்தம் பெறுவதை எமது வரலாற்றுத் தமிழாய்வாளர்கள் நிரூபித்துள்ளனர்.

தமிழகத்தில் சோழர் மரபில் எலாரரா எனும் பெயர் இடம்பெறவில்லை என்பதை தமிழக வரலாறுகள் கோடிகாட்டுகின்றன.

இவற்றைக்கொண்டு எமது ஆய்வாளர்கள் பூநகரி நல்லூரை ஆண்ட குறுநில மன்னான ஈழராஜாவின் சிங்கள அனுராதபுரப் பேரரசு கைப்பற்றுகையையே சோழளனான எலாரா, எல்லாளன் என பௌத்தர்களால் சோடிக்கப் பெற்றது என்பதை முடிவாக்கி உள்ளனர். சிங்களர் தம் பாகுபாடான தமிழ் உறவுகள்

கிறிஸ்த்துவுக்கு முன் பௌத்த சிங்கள அரசு மட்டுமே ஈழத்தில் இருந்ததற்கான ஆதாரத்தைக் காட்டிச்செல்ல மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்களுக்கு சிங்கள இதிகாசங்கள் ஈழத்தமிழர்களை விரோதிகளாகவும், கள்ளத்தோணிகளாகவும் தமது ஏடுகளில் தமிழ்மரபினரான சேர, பாண்டியர்களை உறவினர்களாகவும் நண்பர்களாகவும காண்பித்து வந்திருக்கின்றனர்.

இது சந்தேகத்திற்குரிய விடயமன்றோ?
பாண்டியத் தாய் வழி சிங்களர்

சிங்கள மூதாதையான விஜயன் மணந்தது பாண்டிய அரசன் குமாரத்தி என்றும் அவனது தோழர்கள் அனைவரும் மணந்தது பாண்டிய நாட்டுப் பெண்கள் என்றும் அவர்கள் வழி சிங்களம் தோன்றியது என்றும் மகாவம்சம் கூறி நிற்கிறது.

**சேர நாட்டினரின் சிங்கள நட்புறவு**

எமது ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் சோழநாட்டில் பிறந்து பாண்டிய நாட்டில் வாழ்விழந்து, சேரநாட்டில் பத்தினித்தெய்வமான கண்ணகித் தாய்க்குக் கோயில் அமைக்க முனைந்த சேரமன்னன் செங்குட்டுவன் வட ஆரிய மன்னர்களான கனக விசயர்கள் தலையிலே இமயமலையில் இருந்து கல் சுமக்க வைத்து தமிழ் அணங்கான கண்ணகித் தாய்க்கு ஆலயம் எழுப்பினான் என்றும் அவனது நட்புறவான அழைப்பை ஏற்று கடல் சூழ் இலங்கைக் கயபாகு மன்னன் கண்ணகித் தாய் ஆலய வைபவத்தில் கலந்து கொண்டான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்விதமே சிங்களர் கண்டி தலதாமாளிகை பெரகரா ஊர்வலத்தில் இன்றுவரைக்கும் கண்ணகித்தாயையும் பத்தினித்தெய்யோ(பத்தினித் தெய்வம்) என பயபக்தியுடன் இடம்பெறச்செய்வதும் வரலாற்றின் உண்மைகளைப் புலப்படுத்து கின்றன.

**சோழர்களே சிங்களர் எதிரிகள்**

சிங்கள பௌத்தம் இவ்வாறாக தமிழ் மன்னர்களான பாண்டியர்களுடனும், சேரர்களுடனும் நட்புறவு கொண்டு சோழமன்னர்களை விரோதக் கண்கொண்டு பார்த்து வந்திருக்கிறது..

பின்னாளில் அந்தச் சோழர்களை ஈழத் தமிழர்களாக உள்வாங்கி உண்மைக்கு மாறான வரலாறு படைத்திருக்கிறது.

**திருப்பெருந்துறையே மாதோட்டம்**

எனது குருநாதர் கலாநிதி இராமச் சந்திர முதலியார் அவர்கள் தமது திருக்கேதீச்சர புராணத்தில் மாதொட்டம் என்பதை திருப்பெருந்துறை என்று குறிப்பிட்டிருக்கிறார். இது மன்னார் மாந்தையில் உள்ளது.

பண்டைய அரபிய,கிரேக்க,உரோம கடல்வணிகர்கள் திருப்பெருந்துறையின் பெருமை தமது நூல்களில் புகழ்ந்து உரைத்துள்ளனர்.

திருக்கேதீச்சரம் (இதுவே திருப்பெருந்துறைச் சிவாலயம், இது கி.பி.10—ம் நூற்றாண்டளவில் சோழர்களால் இராசராசேசுவரம் எனவும் பெயர் மாற்றம் பெற்றிருக்கிறது) எனும் சிவத் தலம் கொண்ட இப்பிரதேசம் மூர்த்தி, கலம், கீர்த்தம் என விசேடத் தன்மை வாய்ந்தது. மணிவாசகர் வரலாறு கூறும் அராபிய குதிரைகள் வந்து இறங்கிய திருப்பெருந்துறையாக இப்பகுதி இருக்கலாமா என்பதனூடாக நாயன்மார் காலப்பகுதி ஆய்வினர் தத்தமக்குள் முரணான

கருத்துக் கொண்டுள்ளனர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

சிங்கள மூதாதை விஜயனுக்கும் அவனது தோழர்களுக்கும் இரசு குமாரத்தியும் தோழிகளும் மணப் பெண்களாக பாண்டி நாட்டில் இருந்து மாதித்த எனும் இந்தத் துஜறயிலேயே இறங்கி இருக்கிறார்கள்...என்பதை பௌத்தர்களின் மகாவம்சம் தெரிவிக்கும்.

திருப்பெருந்துறை பௌத்தபாளி மொழியில் மாதித்த (மா—பெரிய தித்த—துறை) எனப் பொருள்படும். அதுவே சிங்களத்தில் மாதொட்ட (மா—பெரிய தொட்ட—துறை) என வழங்கப்பட்டு வந்திருக்கிறது

பின்னர் தமிழலும் தமது பெருமை மறந்து திருப்பெருந்துறை என்பதை மாதொட்டம் என வழங்கி கி.பி. 7—ம் நூற்றாண்டின் சைவத் திருமுறையில் திருஞானசம்பந்தர் பௌத்த ஈழதிற்கு வருகைதராது தமிழகத்தில் நின்றபடி மாதோட்டநன்னகரில் என திருக்கேதீச்சர பதிகம் பாடி இருப்பதை கி.பி.7—ம் நூற்றாண்டின் பின் எழுந்த வரலாறுகள் தெரிவிக்கின்றன.

**தமிழரின் ஈழராஜாவே பாளியின் எலாரா**

மேற்கண்ட வகையிலே கிறிஸ்துவுக்கு முற்பட்ட தமிழீழத்து தலைநகரான பூநகரி நல்லூரின் ஈழராஜா பாளிமொழியில் எலாரா என தமிழிலிருந்து மொழிமாற்றம்பெற்று பின்னாளில் தமிழர் அதனைப் பாளி வழியிலேயே எல்லாளன் அல்லது எலேலன் என வழங்கி வந்திருக்க வேண்டும் என்பதை இன்றைய ஆய்வுலகம் ஒப்புக்கொண்டுள்ளது.

எலாராவை சோழமன்னன் என்று பௌத்த மகாவம்சம் கூறக் காரணம் என்ன

சோழர்மீது சிங்கள பௌத்தம காழ்ப்புணர்ச்சி கொள்ளக் காரணம் என்ன?

அதன்வழி இன்றைய ஈழத்தமிழர் விரோதிகளானது எங்ஙனம்?

இவை அனைத்திற்கும் அன்றைய புத்த, இந்து மதப்போரே காரணம். பாண்டியரும்,சேரரும் பௌத்த மதம் பரம்பலுக்கு வகைசெய்ததும், சோழர் பௌத்தம் பரவிய இடங்களிலும் சென்று இந்து ஆலயங்க்ளை எழுப்பியதும், பர்மா, தாய்லாந்து, இந்தோசீனா உட்பட பல நாடுகளில் அழிபாட்டுடன் கூடிய இந்து ஆலயங்களே அதற்குச் சாட்சியாக இருப்பதையும் கொண்டு இதனைப் புரிந்துகொள்ளலாம்.

அண்மையில கம்பொடியாவின் அடர்ந்த காட்டிற்குள் ஓர் இந்து ஆலயம் மறைந்திருப்பதை றேடர்கருவி படம் பிடித்துள்ளது..

எமது உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத் தலைவர் கலாநிதி வீரப்பனார் அவர்கள் பல சிரமத்தின் மத்தியில் அண்மையில் கம்பொடியாவின் அடர்ந்த காடுகளுக்குள் சென்று சோழ மன்னர்களின் இந்து ஆலயங்கள், ஆட்சித் தடயங்களை பழந்தமிழர் நாகரிகங்களைப் பார்வையிட்டு வந்திருப்பதை அவர் இந்தோசீனாவில் இருந்து எனக்கு அனுப்பி வைத்த புகைப்படங்கள் உணர்த்துகின்றன. பர்மாவும், தாய்லாந்தும் தமிழர் என்பதற்கு தங்கள் அகராதிகளில் பயங்கர பைசாசங்கள் என பொருளுரைத்திருப்பதற்கு இந்துக்களுக்கு எதிரான புத்ததுறவியரின் பாரம்பரிய தூபங்களே காரணம்.

பர்மியத்தின் பௌத்த துறவியர் பர்மிய பூமி புத்திரர்களான தீவிரவாதிகளை ஏவி அங்கு செல்வச் செழிப்போடு தமது வைதிக மத சம்பிரதாயங்களுடன் வாழ்ந்த அன்றைய பாரதத் தமிழர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் இறங்கியமை அகதியர் ஆக்கியமை, மானபங்கப்படுத்தியமை, செல்வங்களைக் கொள்ளையிட்டமை அனைத்தும் தமிழர் அகதியத்தின் தொடக்ககால வரலாறு.

**தாய்லாந்து முடிசூட்டு விழாவிலே தமிழ்**

தாய்லாந்தின் அரசு முடிசூட்டு வைபவங்களில் தமிழரான சோழர் கலாச்சாரத்தை விளம்பும் சைவர்களின் திருப்பாவை, திருவெம்பாவை கொச்சைத் தமிழில் பாடப்படுதல் இன்றும் வழக்கமாகும் என்பதற்கு சோழர் தம் இந்துமதச் செல்வாக்கே காரணமாகும்.

**புத்தர்களின் வைதக வன்மம்**

இந்தியாவில் இருந்து வைதிகரால் புத்தம் விரட்டியடிக்கப் பெற்றதன் பழிவாங்குகைக்கே தமிழர் இந்துக்கள் என்ற காரணத்தில் இருந்து பிறந்து இன்று தமிழர் எம்மதத்தைக் கைக்கொண்டு இருந்தாலும் புத்தர்களால் பழிவாங்கப்படுவதாகக் கூறிக்கொள்ள இடமுண்டாகிறது.

தமிழர் தம் தேவாலய தகர்ப்புகளும், இசுலாமிர் தம் பள்ளிவாசல்கள் முன் நடைபெற்ற வன்முறைகளையும் மேற்படி சிங்கள பௌத்தர் தம் குருதியில் ஊறிய முன்னைய மதவழி வன்மமே காரணம் என்று கூற இடமுண்டாகிறது.

தமிழர் தீவிர பௌத்தர்களாகவும் இருந்திருக்கின்றனர், மணிமேகலை முதலாக மிகச் சிறந்த தமிழ்ப் பௌத்த நூலகளைப் படைத்திருக்கின்றனர்.

சுவீடன் பல்கலைக்கழகத்தில் மிகச் சிறந்த முறையில் தமிழர் தம் பௌத்த மணிமேகலை ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது என்பதும் இங்கே குறிப்பிடத் தக்கது.

தமிழீழத்தில் இன்று இந்துக்களான தமிழர்களைப் பழிவாங்கும் தலைமையை சிங்கள புத்த துறவியர் ஏற்றிருப்பதே தமிழர் விடுதலையின் தடைக்கல்லாக....

**தமிழர் வல்லரசு**

தமிழர் தமது சாதனைகளால் ஈழத்தில் மீளவும் தமது அரசைக் கட்டி எழுப்பி வரும் காலகட்டத்தில் பூநகரி நல்லூர் ஆய்வுகள் புதிய உற்சாகத்தைத் தந்து கொண்டு இருப்பதில் வியப்பில்லை.

பூநகரி நல்லூர் ஆய்வினைத் தொடர்ந்து கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல் திருக்கோணமலையின் மூதூர்ப் பகுதி நல்லூரும் ஆய்வுக்கு உட்படுத்தப்படின் தமிழகத்திலே இதுவரை கண்டுபிடிக்கப்படாத பழந்தமிழர் வரலாற்றுப் பொக்கிசங்களை மீட்டெடுத்தாலே அவுஸ்திரேலிய, ஈழ ஆய்களுக்கு பல சான்றாதாரரங்கள் கிடைக்கக் கூடும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

இது சாத்தியமாகுமா என்பது இன்று கேள்விக்குரிய விடயமே.



முன்னாள் தமிழக முதல்வரும், ஈழத்து காந்தி செல்வாவும்

# நாம் தமிழர்! நாம் தமிழரே!

ஆய்வறிஞர் குணா

இன்றையச் சூழலில் தமிழ்த் தேசியமே ஒரு மாற்றாகவும் விடிவெள்ளியாகவும் வளர்ந்து வருகின்றது. தமிழரின் ஓர்மை ஒரு செயற்கை உணர்ச்சி அன்று. மொழி வழியிலும் பண்பாட்டு வழியிலும் வரலாற்று வழியிலும் அமைந்த இயல்பான ஓர் உணர்ச்சியே தமிழின உணர்ச்சி. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழருக்கு 'நாம் தமிழர்' என்பது சொல்லாமல் விளங்கும். அதைச் சொல்லித்தர ஒரு புறத்தூண்டல் தேவையில்லை. ஆனால் தமிழரைத் தாங்கள் 'இந்தியர்' என நம்பச் செய்வதற்கு, இடையறாத ஒரு புறத்தூண்டலும் கருத்துத் திணிப்பும் தேவை.

இந்து மதத்தையும் சங்கத்தின் (சமற்கிருதத்தின்) போலியான இந்தி மொழியையும் அடிப்படையாகக் கொண்டு தமிழரை 'நாம் இந்தியர்' என நம்பச் செய்ய, செயற்கையாய் இடையறாத ஒரு பரப்பலை வந்தேறி வடக்கரின் அரசு செய்ய வேண்டும்.

தமிழை மீண்டும் வழிபாட்டு மொழியாகச் செய்வதை எதிர்ப்பதும், முருகன் போன்ற தமிழ்த் தெய்வங்களை 'இந்தி'யாவின் பிற தேசிய இனத்தார் ஏற்று வழிபட மறுப்பதும், ஒருகால் இந்தி(ய)த் தேசியத் தலைவர்களாய் இருந்த காமராசர், இராசகோபாலாச்சாரியார். சத்தியமூர்த்தி ஐயர் முதலான சில தமிழ் நாட்டுப் பேராயக் கட்சித் தலைவர்களையும்கூட வடக்கத்தியார் மதிக்காததும் போன்ற எண்ணரிய காட்டுகள் 'இந்து' என்பதும் ஒரு செயற்கைப் பாடமே என்பதை மெய்ப்பிக்கும்.

இதனால் தமிழ்த் தேசியத்தின் உருவகமாகவும் தலைவராகவும் தமிழரல்லாத தலைமக்களைக் காட்டுவது இனி வரும் தலைமுறையினரிடம் எடுபடாது என்பதை அறிய வேண்டும். தமிழ்த் தேசியத்தின் உருவகமாகவும் அடையாளமாகவும், ஈவெ. இராமசாமி நாயக்கரையோ, அம்பேத்கரையோ, காரல் மார்க்சையோ முன்னிருத்துவது பொருந்தாது.

### எல்லாளனை முன்னிருத்துவோம்

இதற்கு ஒரேயொரு மாற்றுதான் உண்டு. தமிழரினத்தில் பிறந்த தனித்தமிழனான வீரத்திருமகன் ஒருவனையே தமிழரினத்தின் தனிப்பெரும் நாயகனாகவும் சான்றோனாகவும் (முன் மாதிரியாகவும்) முன்னிருத்துவதே அம் மாற்று வழியாகும். அத் தகுதியைப் பெறத் தக்க ஒரே தமிழ்மகன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தானைத் தலைவனான தம்பி பிரபாகரன் மட்டுமே ஆவார். தமிழரினப் பற்றிலும், வீரத்திலும், ஒழுக்கத்திலும், கொள்கை உறுதியிலும் ஈடில்லாத் தலைமகனாக வானோங்கி வளர்ந்து, உலகத் தமிழ்க் குடியின் நெஞ்சங்களையே நம்முடைய திருக்குடிலாகக் கொண்டுவிட்டதால் மட்டுமே அத தகுதி அவருக்குக் கிடைத்துவிட வில்லை. ஈராயிரம் ஆண்டுகள் உலகத் தமிழரினம் தவமிருந்து பெற்ற தவப்புதல்வனே அந்த ஈழத் திருமகன். கொடியையும் கொற்றத்தையும் நாட்டையும் வீட்டையும் பெருமையையும் இழந்து, அடிமைத் தொழில் செய்தே கெடுக்கின்ற கூலிக்கார இனம் என்னும் இழிபெயரைத் தாங்கிய இனம் தமிழரினம். ஐரோப்பிய வந்தேறிகளால் நன்றியுள்ள நாய்கள் எனக் கருதப்பட்டு உலகெலாம் கப்பலேற்றி கொண்டுச் செல்லப்பட்ட ஓர் இனமும் அஃதாகும். இன்றுள்ளதைப் போல் தமிழரினம், என்றும் ஓர் உதிரி இனமாக இருந்ததில்லை. இனி அவ்வாறு இருக்கவும் போவதில்லை என்பதை உலகுக்கு நன்குரைத்து, போர்க்குணம் கொண்ட ஓரினமே எம் தமிழரினம் என்பதை நிலை நிறுத்திய ஒரு மீமிசை மாந்தனே பிரபாகரன் என்னும் எல்லாளன். பிரபாகரன் என்றாலும் எல்லாளன் என்றாலும் ஞாயிறு என்று பொருள்படுவதனால் மட்டுமே அவ்வாறு கூறவில்லை. ஈழத்து எல்லாளனின் தொடர்ச்சியே அந்தப் பிரபாகரன். தமிழினத்தின் இழந்த புகழை மீட்டிட நெருப்பால் நாண் கட்டி விடுதலை யாழை மீட்டுவரும் தன்னிகரில்லாத் தமிழரினத் தலைவனே தம்பி பிரபாகரன்.

## தமிழியம் என்போம் தலை நிமிர்வோம்!

*தமிழ்த்* தேசிய விடுதலைக் கொள்கையை இனிப் 'பிரபாகரனியம்' என அழைக்கலாமோ? இங்கு ஒரு சிறிய நெருடல் அப் பெயர் ஒரு சங்கத (சமற்கிருத)ப் பெயராக இருப்பதே ஒரு சிக்கல். போதாமைக்கு, 'பிரபாகரினியம்' என ஒலிப்பது நாக்கிற்குப் பெரும் பாடாகவும் உள்ளது. இதனால், அப் பிரபாகரன் உலகத் தமிழரினத்திற்குப் புலப்படுத்தியுள்ள தமிழ்த்தேசியக் கொள்கையை இனித் தமிழியம் என்போம்!

இதுபோன்ற அறுவை மருத்துவம் ஈழத்தில் மட்டும் எடுபட்டமைக்கு காரணம் என்ன? ஒரு தேசிய விடுதலை இயக்கம் தோன்றி வளர்ந்து ஆழ வேரோடிய சூழலே அக்காரணம் என்பதை இங்குக் கோடிட்டுக் காட்டியே ஆக வேண்டும். இவ்வாறு வளர்ந்த அத்தேசிய விடுதலை இயக்கம், சாதியொழிப்பு நெறியையும், தம்வயமாக்கிக் கொண்டமையே காரணமாகும். சாதியொழிப்பிற்கு வேண்டிய நேர்மையான ஆர்வத்தையும் முனைப்பையும் ஈடுபாட்டையும் இதனால் ஈழத்தில் மட்டுமே பார்க்க முடிகின்றது.

ஈழத்தில் நடந்த இன்னொரு நிகழ்ச்சியும் அதற்குச் சான்று கூறும். மேல்சாதிகளில் பிறந்த இரு புலிப்படைஞர்கள் ஓர் ஊரில் காவல்பணியில் ஈடுபட்டுவந்தனர். அவர்களைத் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒரு வீட்டினர் தம் வீட்டில் உணவுண்ணுமாறு அன்புடன் அழைத்தனர். இத்தகைய பணிகளின்போது, பொதுமக்களின் வீடுகளில் உணவைப் பெற்று உண்ணக் கூடாது என்னும் தங்களின் அமைப்புக் கட்டுப்பாட்டைக் கருதி, அவர்கள் உண்ண மறுத்துவிட்டனர். இதனால் வருந்திய அக்குடும்பத்தினர், நாங்கள் கீழ்ச்சாதியினர் என்பதாலேயே நம் வீட்டில் உண்ண மறுக்கின்றனரோ' எனக் கேட்டுவிட்டனர்.

இந்நிகழ்ச்சியைப் பற்றி கேள்வியுற்ற அவர்தம் டனடிப் படைத் தலைவர், அதற்காக மிகவும் வருந்தினார். உணவுண்ண மறுத்த இரு போராளிகளுக்கும் அடுத்த நாள் உணவேதும் தராமல், கால்நடையாகவே சென்று அந்த வீட்டில் உண்டுவிட்டு வருமாறு பணித்தார். அவர்களும் அவ்வாறே செய்தனர். நெஞ்சை நெகிழ்விக்கும் இது போன்ற பல நடவடிக்கைகள் சாதி உணர்வுகள் தகரவும், சாதிநெறி குலையவும் வழிகோலின. வந்தேறிகளின் மேட்டிமையைத் தூக்கி எறிவதன் வாயிலாகத் தமிழ்நாட்டில் கால்கொண்ட ஒரு சீரிய தேசிய விடுதலை இயக்கம், சாதியொழிப்பு ஓர்மையையும் கட்டுப்பாட்டையும் உள்ளடக்கியிருந்திருக்குமாயின், நாமும் இத்தகைய செய்திகள் பலவற்றை நம் காதாரக் கேட்டிருப்போம்.

தமிழ்நாடு கண்ட சாதியெதிர்ப்புக்கும், ஈழம் கண்ட சாதி யொழிப்புக்கும் இடையிலான வேற்றுமையைக் கோடிட்டுக் காட்டும் உரைகல்லாக இருப்பது துமுக்கி வழியில் நடத்தப்பெறும் ஒரு தேசிய விடுதலைப் போரே என்னும் மெய்ம்மையை நாம் உணர வேண்டும்.

அயலார் படையெடுப்பால் வந்த ஒரு போரிலோ, ஓர் உள்நாட்டுப் போரிலோ, தமிழகம் சிக்கியிருந்தாலும், இங்குச் சாதிகள் குலைந்து ஒன்றோடொன்று மயங்கிக் கெட்டிருக்கும். மலையா (மலேயா) போன்ற நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்ட தமிழர்கள், தங்களுக்கே இயல்பான சாதிகளையும் கூடக் கூடவே சுமந்து சென்றனர்.

இரண்டாம் உலகப் போரின் போது மலையாவின் மீது யப்பான் போட்ட குண்டுகளும், அந்த நாட்டின்மீது நடத்தப்பட்ட படைத் தாக்குதல்களும் மலையாத் தமிழரிடையே இருந்துவந்த சாதி உணர்வுகளையும் இறுக்கங்களையும் தளர்த்தி நெகிழ்த்தி விட்டதாக அறிந்தோர் சொல்லக் கேட்கலாம்.

சுபாசு சநதிரபோசு மலையாவில் கட்டியெழுப்பிய இந்தியத் தேசியப் படைக்கு அடிப்படையாக அமைந்து, அவருக்குப் பின்னால் அணிவகுத்து நின்றவர்களில் பெரும்பாலோர் தமிழர்களே ஆவர். இவ்வாறு போர்க்கோலம் கொண்ட நிலை, அம் மாற்றத்திற்குத் துணைபோனது. இது போன்ற பெரிய போர்ச்சூழலில் தமிழகம் அண்மையில் சிக்கிக் கொண்டதும் இல்லை.

அவ்வாறு நேர்ந்திருந்தாலும், தேசிய விடுதலை வேட்கையால் வந்த ஒரு தேசிய விடுதலைப் போருக்கு ஈடாகச் சாதிகளைக் குழப்பிக் குலைக்கும் அளவுக்கு அஃது இருந்திருக்காது. இப் பாடத்தை மனத்தில் ஊன்றிப் பதித்துக் கொள்வது நல்லது.

## தமிழ்நாடு தமிழர்க்கே!

மண்ணை இழப்பது கண்ணை இழப்பது போலாகும். செங்குருதியில் முக்குளித்து ஈழத் தமிழரின் விடுதலைக்குப் போராடி வரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் வீரவரலாறு ஒரு பெரிய பாடமாகும். ஈழத்தின் இனப்போரில் செம்மையாக அடிவாங்கிய பின்னரும், சிங்கள ஆண்டைகள் ஈழத் தமிழர்க்கு மொழியுரிமை, வேலைவாய்ப்புரிமை போன்ற சில்லறை உரிமைகளை மட்டுமே வழங்க முன்வருகின்றனர். வழி வழி மண்ணுரிமையை மட்டும் தமிழர்க்குத் தரச் சிங்கள இனம் விடாப்பிடியாக மறுத்து வருகின்றது. அதே போல், வரலாற்று வழியில்வந்த தமிழர் தாயகம் என்னும் மண்ணுரிமையைத் தமிழ்நாட்டுத் தமிழர்க்கு வழங்க இந்தி(ய) வல்லரசு என்றுமே முன்வராது. மண்ணுரிமை ஓர் அடிப்படை உரிமையாக இருந்தாலன்றி, தாம் போராடிப் பெற்ற வேறெந்தச் சின்ன உரிமையையும்கூடத் தமிழ்நாட்டுத் தமிழர்களால் பேணிக்காக்க முடியாது. 'தமிழ் நாடு தமிழர்க்கே!' என முழங்கினாலன்றித் தமிழரினத்திற்கு விடிவில்லை.

## வந்தேறிகள் நடத்தும் வீட்டுமனைச் சூதாட்டம்!

எஞ்சியுள்ள மண்ணுரிமையைக் கட்டிக்காத்துத் தேசிய விடுதலை என்னும் இனமீட்சியைத் தமிழகம் பெறவேண்டுமாயின், ஒண்டவரும் வேற்றினத்தார் தமிழ்மண்ணைப் பறிப்பதைத் தடுத்து நிறுத்தியே ஆகவேண்டும். இந்தி(ய) அரசுச் சட்டத்திற்கு உட்பட்டு தமிழ்த் தேசியத்தை வளர்க்கப் பார்க்கும் அமைப்புகளும் குழுக்களும் தமிழரினத்தைத் தட்டியெழுப்பி, அந்த இந்தி(ய) அரசுச் சட்டத்தின் 370வது பிரிவைத் தமிழகத்திற்கும் விரிவுபடுத்தச் சொல்லிப் போராட வேண்டும். காசுமீரத்திலோ மிசோரமிலோ உள்ளதைப் போல், வந்தேறி இனத்தவர்கள் தமிழகத்திலும் அசையாச் சொத்துகளை (குறிப்பாக, நிலபுலங்களையும், தோட்டம் துரவுகளையும், மனைக்கட்டுகளையும், வீடுகளையும், கட்டடங்களையும்) வாங்குவதைச் சட்டப்படி தடைசெய்ய வேண்டும். வீட்டுமனை முதலீட்டு வணிகம் என்னும் பெயரில் தமிழரின் மண்ணைக் கூறுபோட்டு விற்க, அதைத் தமிழரல்லாதோர் வாங்கி விலையைக் கூட்டி விற்கும் மண் சூதாட்டம் ஒழிக்கப்பட வேண்டும். வேற்றினத்தார் தமிழ்மண்ணை வைத்துச் சூதாடத் தொடங்கியுள்ளதால், தமிழ்நாட்டில் தமிழர்களே சொந்தமாக ஒரு வீட்டைக் கட்டிக் கொள்ளவோ வாங்கவோ முடியாத அளவுக்கு வீட்டுமனையின் விலை 200 மடங்கு உயர்ந்துள்ளதாகச் சொல்கின்றனர். இதனால், தாய்த் தமிழகத்தில் கையளவு நிலம்கூட வேற்றினத்து வந்தேறிகளுக்குப் போகாவண்ணம் நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். இருக்கின்ற மண்ணைக் காக்கவும், இழந்த மண்ணை மீட்கவும் என்றும் விட்டுக்கொடுக்காமல் போராட வேண்டும்.


நன்றி : **விழுதுகள்**

●

சான்பிரான்சிஸ்கோ கடற்கரையில் உ.த.ப.இ. தலைவர் வீரப்பனார்



# எழுக! உலகத் தமிழினம்!



பழ. நெடுமாறன்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் உயரிய கொள்கையை உலகிற்கு அளித்த பெருமைக்குரிய இனம் தமிழினம். திரை கடலோடித் திரவியம் தேடிய இனம் தமிழினம். தமிழருக்குக் கடல் தவழும் தொட்டிலாகத் திகழ்ந்தது. தமிழர்கள் கப்பல் கட்டுவதிலும் தொலைதூர கடற்பயணத்திலும் சிறந்து விளங்கினார்கள்.

கிட்டத்தட்ட கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே மேற்கே உரோமாபுரி, பாபிலோனியா, எகிப்து, கிரேக்கம் கிழக்கே இலங்கை, பர்மா, மலேசியா, இந்தோனேசியா, கம்போடியா, சீனம் முதலான நாடுகளுடன் தமிழர்களுக்கு வணிகத் தொடர்பு இருந்தது. தமிழகத்தின் பல பகுதிகளிலும் கிடைத்த உரோம நாட்டு நாணயங்கள் இதை மெய்ப்பிக்கின்றன.

பண்டைய தமிழகத் துறைமுகங்களில் குவிந்து கிடந்த பொருட்கள் பற்றிப் பட்டினப்பாலை பின்கண்டவாறு விவரிக்கிறது:

*"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்*
*காலின் வந்த கருங்கறி மூடையும்*
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்*
*குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்*
*தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்*
*கங்கை வாரியும் காவிரிப் பயனும்*
*ஈழத் துணவும் காழகத் தாக்கமும்*
*அரியவும் பெரியவும் நெளிய வீண்டி"*

தமிழகத் துறைமுகங்களில் யவனர், அரேபியர், சீனர் ஆகியோரின் கப்பல்கள் வந்து பொற்காசுகளைக் கொட்டிக் கொடுத்து நமது பொருட்களை வாங்கிச் சென்றன. நமது வணிகர்களும் பல்வேறு நாடுகளுக்கு வாணிபம் நடத்தச் சென்ற வண்ணம் இருந்தனர்.

**தமிழ்ப் புத்தர்கள்**

வணிகம் செய்வதற்காக மட்டுமல்ல புத்த மதத்தைப் பரப்புவதற்காகவும் தமிழ்ப் புத்தத் துறவிகள் கடல் கடந்து சென்றனர். கிழக்காசியாவில் புத்த மதத்தைப் பரப்பியதில் தமிழ்த் துறவிகளுக்குச் சிறப்பான பங்குண்டு.

இலங்கைத் தீவில் புத்த தர்மத்தைப் போதித்தவர்களில் புத்தமித்திரர், ஆசாரிய புத்த தத்த மகாதேரர், கணதாசர், தர்மபாலர் ஆகியோர் முக்கியமானவர்கள். பர்மாவில் புத்த மதத்தைப் பரப்பியவர் ஆனந்ததேரர் ஆவார். சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் புத்த மதத்தைப் பரப்பியவர் போதி தருமர். இவருக்கு இன்னும் சீனாவில் ஆலயம் உள்ளது. இவர்கள் அனைவரும் தமிழ்ப் புத்தத் துறவிகளே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

[redacted]

வட நாட்டில் ஹர்ஷ சக்கரவர்த்தியால் தோற்றுவிக்கப்பட்ட நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் தலைமைப் பேராசிரியராக விளங்கிய ஆசாரியா தர்மபாலா காஞ்சியைச் சேர்ந்த தமிழராவார்.

புத்த மதத்தைப் பரப்பச் சென்ற தமிழ் துறவிகளுக்கும், வாணிபம் நடத்தச் சென்ற தமிழ் வணிகர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கத் தமிழர்களின் கடற்படை சென்றது. கடற் கொள்ளைக் காரர்களை அடக்கியது. கீழைக்கடலிலும் மேலைக் கடலிலும் தமிழர்களின் ஆதிக்கமே ஓங்கி இருந்தது.

**ஒளியும் இருளும்**

இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தி அவன் அடக்கி ஆண்ட கடல் கடந்த நாடுகளைப் பட்டியலிட்டுக்காட்டுகிறது. அவை ஈழம், கடாரம், விஜயம் பண்ணை, மலையூர், மாயிருடிங்கம், இலங்காசோகம், பப்பாளம், விம்பங்கம் வளையபந்தூர், தக்கோலம், தமாலிங்கம், இலாமுரிதேசம், நச்சுவாரம் என்பன.

மதப்பிரச்சாரம், வாணிபம், படையெடுப்பு ஆகிய மூன்று வகையிலும் தமிழர்கள் கடல்கடந்து சென்றார்கள். உலகில் இன்று வலிமை வாய்ந்த இனங்களாக விளங்கும் பல இனங்கள் நாகரிகமறியாத இனங்களாக வாழ்ந்த காலத்தில் தமிழினம் உலகெங்கும் பரந்து சென்று தனது முத்திரையைப் பொறித்தது.

தமிழர் வரலாற்றில் அந்த மகோன்னதமான காலம் மறைந்தது. ஒளிமிகுந்த தமிழர் வாழ்வில் இருள் சூழ்ந்தது. வீரத்தின் விளைநிலமான தமிழகம் அன்னியரிடம் அடிமைப்பட்டது. ஆண்ட மரபினர் அடிமைகளாயினர்

எந்தெந்த நாடுகளை மன்னர் அடக்கி ஆண்டார்களோ அதே நாடுகளுக்கு 18—ஆம் நூற்றாண்டிலும் 19—ஆம் நூற்றாண்டிலும் தமிழர்கள் கொத்தடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்ட கொடுமை ஆரம்பமாயிற்று.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இராசேந்திர சோழனின் புலிக்கொடி பறந்த நாடுகளில் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் இராசேந்திர சோழனின் பரம்பரையினர் அடிமைகளாகக் குடியேறியது காலத்தின் கொடுமைதான்.

**பாரதியின் கவலை**

இலங்கை, பர்மா, மலேசியா, பிஜித் தீவு, மொரீசியஸ், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் ரப்பர், தேயிலை, கரும்புத் தோட்டங்கள் போடவும், சுரங்கங்களில் வேலை செய்யவும் கப்பல் கப்பலாகத் தமிழர்கள் கொண்டுபோகப்பட்டுச் சொல்லொணாதா கொடுமைகளுக்கு ஆளானதைக் கண்டு மனம் நொந்த பாரதி பின்வருமாறு பாடினான்

*"விதியே விதியே, தமிழச் சாதியை*
*என் செய நினைத்தாய் எனக்குரை யாயோ*
*ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலும்*
*தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்*
*பூமிப் பந்தின் கீழ்ப்புறத்தில் உள்ள*
*பற்பல தீவினும் பரவிய இவ்வெளிய*
*தமிழச் சாதி, தடியுதை யுண்டும்*
*காலுதை யுண்டும், கயிற்றடி யுண்டும்*
*வருந்திடும் செய்தியும் மாய்ந்திடும் செய்தியும்*
*பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது*
*செத்திடும் செய்தியும் பசியாற் சாதலும்*

[redacted]

[redacted]

*பிணிகளால் சாதலும் பெருந்தொலை உள்ளதும்*

*நாட்டினைப் பிரிந்த நலிவினால் சாதலும்*

*இஃதெலாம் கேட்டும் எனதுளம் அழிந்திலேன்"*

பாரதி பாடிய காலத்துக் கொடுமைகள் இன்னமும் தொடருகின்றன. கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் அங்கெல்லாம் இருந்து விரட்டியடிக்கப்பட்டு கப்பல் கப்பலாகத் தமிழகத்திற்கு அகதிகளாக அழுத கண்ணீரோடு வருகின்றனர்.

**நாதியற்ற தமிழன்**

பர்மாவில் உள்ள ஐராவதிச் சமவெளிப் பகுதி சதுப்பு நிலக்காடாகக் கிடந்தது. அதை வெட்டித் திருத்தி நல்ல நிலமாக மாற்ற மூன்று இலட்சம் தமிழர்கள் ஆங்கிலேயரால் கொண்டு போகப்பட்டனர். பல ஆண்டு கால கடும் உழைப்பிற்குப் பின் அவை பூத்துக் குலுங்கும் நன்செய் பூமியாக மாற்றப்பட்டன. ஆனால் இந்த முயற்சியில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் மலேரியா நோய்க்கு இரையாகி அழிந்தனர். அந்தத் தமிழர்களின் சந்ததியினர் 1947ஆம் ஆண்டில் பர்மாவிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டபோது தாய்த் தமிழகம் துடித்து எழவில்லை.

மலேசியாவில் இரப்பர், தேயிலைத் தோட்டங்களை அமைக்க அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்கள் அந்நாட்டைப் பொன் கொழிக்கும் பூமியாக மாற்றினார்கள். ஆனாலும் பல கொடுமைகளுக்கு ஆளானார்கள். மலேயாத் தோட்டத் தொழிலாளர்களின் இணையற்ற தலைவராக விளங்கிய மலேயா கணபதியைப் பொய்க்குற்றம் சாட்டி வெள்ளையர்கள் தூக்கிலிட்டபோது தாய்த் தமிழகம் துடித்து எழவில்லை.

பிஜி, மொரீசியஸ், தென்னாப்பிரிக்காத் தமிழர்கள் வாழ்வுரிமைகள் பறிக்கப்பட்டபோது, தமிழ்நாடு கொதித்தெழவில்லை.

1949ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார உயர்வுக்குக் காரணமாக மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டபோதும் தமிழகம் கண்டனக் குரல் எழுப்பிப் போராடவில்லை.

1948ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து ஈழத் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்பட்டு இனப்படுகொலைக்கு ஆளானபோதும் தமிழகம் சீறி எழவில்லை.

1983ஆம் ஆண்டு சூலை மாதம் கொழும்பு நகரில் 3,000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு அதைக் கண்டு உலகமே அதிர்ச்சி அடைந்தபோதுதான் தமிழகம் அசைந்து கொடுக்கத் தொடங்கியது.

**ஈழத் தமிழ் அகதிகள்**

சுமார் 2 இலட்சம் ஈழத் தமிழர்கள் உலக நாடுகளுக்கும் சுமார் 3 இலட்சம் ஈழத் தமிழர்கள் தமிழ் நாட்டிற்கும் அகதிகளாக ஓடிவந்தனர். பிற நாடுகள் ஈழத் தமிழ் அகதிகளுக்குச் செய்திருக்கிற மனிதாபிமான உதவியில் பாதியையாவது தமிழகத்தில் தஞ்சம் புகுந்த அகதிகளுக்குத் தமிழக அரசு செய்துள்ளதா? நிச்சயமாக இல்லை.

வேண்டாத விருந்தாளிகளாக அவர்கள் நடத்தப்படுகின்றனர். அகதிகள் முகாம்கள் உண்மையில் சிறைமுகாம்களாகத் தான் காட்சித் தருகின்றன. சிங்கள வெறியர்களிடம் அனுபவித்த கொடுமை பரவாயில்லை என நினைக்கும் அளவுக்கு ஈழத் தமிழர்கள் ஆளாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அளிக்கப்படும் உதவியில் பெரும் ஊழல்

[redacted]

[redacted]

நடக்கிறது. அவர்களது குழந்தைகளுக்குக் கல்வி மறுக்கப்படுகிறது. நம்மை நம்பி அடைக்கலம் புகுந்திருக்கும் நமது சகோதர — சகோதரிகளை பாச உணர்வுடன் நடத்தாமல் எதிரிகளைப் போல அரசு அதிகாரிகள் அவர்களை நடத்துகின்றனர்.

ஈழத் தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்தை நசுக்க இந்திய இராணுவம் அனுப்பப்பட்டபோது தமிழக அரசும் முக்கியக் கட்சிகளும் மௌனம் சாதித்தன. இந்திய இராணுவம் 7000 தமிழர்களை கொன்று குவித்துத் தமிழீழத்தைச் சுடுகாடாக மாற்றியபோது தாய்த்தமிழகம் உணர்வற்றுக் கிடந்தது. இந்தியாவின் முக்கியக் கட்சிகள் எதுவும் இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களைக் கண்டிக்க முன் வரவில்லை.

**தியாகத் தமிழர்கள்**

காந்தியடிகள் அரசியலில் அடியெடுத்து வைத்துத் தென்னாப்பிரிக்காவில் அறப்போராட்டம் தொடங்கியபோது அவருக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக நின்றவர்கள் தமிழர்கள். தில்லையாடி வள்ளியம்மையின் உயிர்த் தியாகம் காந்தியடிகளைக் கண்ணீர்விட வைத்தது.

இந்தியாவின் சுதந்திரத்திற்காக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஆயுதந்தாங்கிய போராட்டத்தைத் தொடங்கியபோது அவரது படையில் சேர முன் வந்தவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்.

காந்தியின் அறப்போராட்டமானாலும், நேதாஜியின் மறப் போராட்டமானாலும் அவர்களுக்கு தமிழர்கள் பெருந்துணையாக நின்று தியாகம் பல புரிந்தார்கள்.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்காகத் தமிழர்கள் தோள்கொடுத்துத் துணை நின்றார்கள். காந்தியடிகளும் நேதாஜியும் மனம் விட்டுப் பாராட்டும் அளவுக்குத் தொண்டு செய்தார்கள். ஆனால் சுதந்திர இந்தியாவின் படை நமது சகோதர்களை ஈழத்தில் கொன்று குவித்தது. இந்தச் சுதந்திரத்தைப் பெறுவதற்குத்தானா தமிழர்களும் சேர்ந்து போராடினோம் என நம் உள்ளங்கள் நோகின்றன.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் நிலை இப்படியென்றால், இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களின் நிலை இதைவிட மோசமாக உள்ளது. பிற நாட்டுத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழகத்தை நோக்கி ஓடிவந்த நிலைபோய், பிற மாநிலத் தமிழர்கள் அகதிகளாக ஓடிவருகிற நிலை உருவாகியுள்ளது.

கர்நாடகத்திலிருந்து ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் அடித்துத் துரத்தப்பட்டுக் கண்ணீரும் கம்பலையுமாகத் தமிழகம் வந்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்கும் இந்த நிலை நேரிட கூடிய அபாயம் நீடிக்கிறது.

உலகின் பல நாடுகளில் சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றனர். இந்தியாவின் பிற மாநிலங்களிலும் அதே அளவு தமிழர்கள் வாழ்கின்றனர். இந்த 2 கோடி தமிழர்களின் நலனைப் பாதுகாப்பது 5 கோடித் தாய்த் தமிழர்களின் கடமையாகும்.

தாய்த் தமிழகம் விழிப்புற்று இருந்தால்தான் தன்னையும் காக்க முடியும். சேய்த் தமிழர்களையும் காக்க முடியும்.

தாய்த் தமிழகம் போலித் தலைவர்களையும அவர்களின் ஆரவார அரசியலையும் நம்பி ஏமாந்துவிட்டது. தமிழினத் தலைவர்கள் எனத் தங்களுக்கு தாங்களே பட்டம் சூட்டிக் கொண்டவர்கள் தன்னலத் தலைவர்களாகக் காட்சி தந்தார்கள்.

உலகத் தமிழர்களுக்கு எழுச்சியூட்டி

[redacted]

[redacted]

வழிகாட்ட வேண்டிய கடமையில் இருந்து இவர்கள் தவறிவிட்டார்கள்.

**பிரபாகரன் பெருமை**

ஆனால் தாய் செய்யத் தவறிய கடமையைச் சேய் மேற்கொண்டுவிட்டது. ஆம்! பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் நடத்திவரும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழீழ மக்கள் மத்தியில் மட்டுமல்ல, உலகத் தமிழர்களின் நடுவே மகத்தான எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் தியாகமும் வீரமும் தமிழினத்தைத் தலைநிமிர வைத்துள்ளன. புலிகள் படைத்துவரும் புதிய புறநானூறு தமிழர்களின் பெருமையைப் பாரறியச் செய்துள்ளது. தமிழ்நாட்டுத் தலைவர்கள் எவரானாலும் இதுவரை தமிழினத்திற்கு தேடிக் கொடுக்க முடியாத பெருமையைப் பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் தேடித் தந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகெங்கும் உள்ள தமிழர்களிடையே தமிழ்த் தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இந்த உணர்வு மேலும் கட்டி வளர்க்கப்பட வேண்டும்.

பாலஸ்தீனிய விடுதலைப் போராட்டம் உலகெங்கும் உள்ள அராபியர்களைத் தட்டி எழுப்பி அவர்களிடையே அராபியத் தேசிய உணர்வை ஊட்டி ஒன்றுபட வைத்தது.

அதைப்போல தமிழீழ விடுதலைப போராட்டம் தமிழ்த் தேசிய உணர்வை ஊட்டி உலகத் தமிழர்களை ஒன்றுபட வைக்கும் அதற்கான முயற்சிகளில் ஒவ்வொரு தமிழரும் ஈடுபட வேண்டும்.

**நால்வகைத் திட்டம்**

இதற்காகக் கீழ்கண்ட திட்டங்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

1. உலகத் தமிழர் அமைப்பு
2. உலகத் தமிழர் நிதியம்
3. உலகத் தமிழருக்குக் கொடி
4. உலகத் தமிழர் கீதம், தேசிய உடை

உலகெங்கும் உள்ள தமிழர்களை ஒன்றுகூட்டி உலகத் தமிழர் அமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும். இப்போது இயங்கும் பல அமைப்புகளும் ஒரே அமைப்பாக இணைக்கப்பட வேண்டும்.

உலகத் தமிழர் நிதியம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். உலகத் தமிழர் முன்னேற்றத்திற்கான பல திட்டங்களை இந்நிதியத்தின் துணைக் கொண்டு நிறைவேற்ற வேண்டும்.

உலகத் தமிழ்க்கொடி ஒன்று உருவாக்கப்பட வேண்டும். எந்த நாட்டுத் தமிழர்களாக இருந்தாலும் அவர்கள் வாழும் நாட்டுக் கொடிகளுடன் உலகத் தமிழர் கொடியையும் சேர்த்துப் பறக்கவிட வேண்டும்.

உலகில் வாழும் தமிழர்கள் எங்கு கூடினாலும் அங்கு அவர்கள் அனைவரும் கூட்டாகப் பாட உலகத் தமிழர் கீதம் ஒன்று மிகமிகத் தேவை. தமிழ்மொழியின் சிறப்பு, தமிழர்களின் வீரம், பெருமை, பண்பாடு ஆகியவற்றைப் பற்றிப் பெருமிதம் தொனிக்க இக்கீதம் அமைய வேண்டும். தமிழருக்கே உரிய நாதசுவர இசை பின்னணியில் ஒலிக்க வேண்டும்.

ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தனித்தனித் தேசிய உடைகள் உள்ளன. ஆனால் தமிழருக்கென தனியான தேசிய உடை இதுவரை இல்லை. உலகினுக்கே முதன் முதல் ஆடை தந்த தமிழன் தனக்கெனத் தனித் தேசிய உடை இல்லாமல் இருப்பது நாணத்தக்கது. எனவே தமிழரது பாரம்பரியப் பண்பாட்டிற்கேற்ற தேசிய உடை வடிவமைக்கப்பட வேண்டும். உலகில் தமிழர்கள் கலந்து கொள்ளும் விழாக்களில் நமது தேசிய உடையுடன் மிடுக்காக நாம் கலந்து கொள்ள வேண்டும்.

மேற்கண்டவை பற்றி ஆராய்ந்து முடிவெடுக்க உலகத் தமிழர் சிறப்பு மாநாடு ஒன்றுகூட்டப்பட வேண்டும்.

உலகத் தமிழர்களின் சிந்தனைக்கு இவற்றை நான் படைக்கிறேன்.

[redacted]

# தமிழீழம்
# ஓர் உலகளாவிய பார்வை

முன்னாள் அமைச்சர் பண்ருட்டி
திரு. ச. இராமச்சந்திரன்

நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தனிநாடு கேட்பது தவறா? தனிநாடு கேட்பது தவறல்ல என்பதுதான் நமது பதில். என்ன காரணம்? 1983ஆம் ஆண்டு இலங்கையில் தமிழினப் படுகொலை நடந்தபோது ஐக்கிய நாட்டு மன்றத்துக்கு நான் சென்றேன். அங்கிருந்த நாடுகளின் எண்ணிக்கை அப்போது 157. இன்று ஐக்கிய நாடுகளின் பேரவையிலுள்ள உலக நாடுகளின் எண்ணிக்கை 185.

உலகமே ஒன்றாகி வருகிறது. தொழில்நுட்பம் ஒன்றாகிறது. தகவல் புரட்சி ஏற்படுகிறது. வாணிபத்திற்கான தடைகள் நீக்கப்படுகின்றன. எங்கு வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் செல்லலாம் என்று விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வேகமாக வளர்ந்து வளர்கிற இந்தக் காலத்தில் 157 நாடுகளில் இருந்து 185 நாடுகளாகி இருக்கின்றனவே அது எப்படி?

தனி நாடு கேட்பதே தவறு என்பதன் பொருளா, தனி நாடு கேட்பதே கூடாதென்பதன் பொருளா இது? நாடுகளின் எண்ணிக்கை வளருகின்ற காரணம் என்ன? ஒரு அடிப்படையான காரணத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு இருக்கின்ற நாடு என்பது ஒன்று. தேசிய இனம் என்பது வெறொன்று. தேசிய இனத்தின் அடிப்படையில் ஒரு நாடு அமைந்து விட்டால் பிரச்சினை இல்லை.

இங்கிலாந்து நாட்டை எடுத்துக் கொண்டால் ஆங்கிலம் பேசுபவர்களுடைய நாடு அது. பிரான்ஸ் நாட்டை எடுத்துக் கொண்டால் பிரெஞ்சு மொழி பேருபவர்கள் உள்ள நாடு அது. ஜெர்மனியை எடுத்துக் கொண்டால் ஜெர்மன் மொழி பேசுபவர்கள் உள்ள நாடு அது. இப்படி தேசிய இனத்திற்கென்று நாடு அமைந்துவிட்டால் பிரச்சினை இல்லை.

ஆனால் நாடு என்பது பூகோளத்தை அடிப்படையாகக் கொண்டு இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வரலாற்றில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக நாடுகள் சில எல்லைகளைக் கொண்டுள்ளன. வெள்ளைக்காரர்கள் ஆதிக்கம் செய்தபோது ஆப்பிரிக்கக் கண்டத்தை ஒரு சில நாடுகளாக கோடுபோட்டார்கள். குறுக்கும் நெடுக்குமாக கோடுபோட்டு ஒரு சில நாடுகளை நிர்வாகத்திற்காக ஏற்படுத்தி விட்டார்கள்.

விடுதலை கிடைத்தபிறகு அந்தந்த இனமும் தங்களுக்குரிய சுய நிர்ணய உரிமை வேண்டும் என்கிறது. ஜெயிலுக்கு குற்றவாளிகள் விலங்கு பூட்டப்பட்டு கொண்டு செல்லப்படுவார்கள். விடுதலை கிடைத்த பிறகு அவர்களை விலங்கோடா அனுப்புவது? அதுதான் இன்றைக்கு நடக்கிறது.

வெள்ளைக்காரன் வருவதற்கு முன்னால் தமிழ் மக்களின் தாயகம் இருந்தது. அவர்களுடைய அரசுரிமை இருந்தது. சிங்களருடைய அரசுரிமை இருந்தது. இன்னும்கூடச் சொல்லப்போனால் சிங்களருக்கும் சேர்த்து தமிழன்தான் அரசனாக இருந்தான்.

ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்னாலே

இரு அரசுகள் இருந்தன. ஆனால் அவர்கள் நிர்வாக வசதிக்காக இரண்டையும் சேர்த்து இலங்கையை ஒரு நாடாக ஆக்கினார்கள். நாடு என்ற இலக்கணமே இன்றைக்கு வெள்ளையர் களால் வரையறுக்கப்பட்ட பூகோளத்தை அடிப்படையாகக் கொண்டதே தவிர தேசிய இனத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல.

அதன் விளைவாகத்தான் இன்றைக்கு இவ்வளவு கலவரங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அதனாலேதான் தனிநாடு கோரிக்கை வலுத்து வருகிறது. தனிநாடு கோரிக்கையை உலகத்தி லுள்ள நாடுகள் எப்படிச் சந்திக்கின்றன?

சோவியத் ஒன்றியத்தில் அவர்களது அரசியல் சட்டத்திலே தன்னுரிமை பெற வழியிருக்கிறது. வேண்டுமானால் சேரலாம். வேண்டாவிட்டால் பிரியலாம். சோவியத் ஒன்றியம் 15 நாடுகளாக இன்றைக்கு அவர்களாகவே பிரிந்து விட்டார்கள். ஆயுதம் ஏந்திப் போராட அவசியம் இல்லை.



செக்கோஸ்லோவேகியா இன்றைக்கு செக் நாடு என்றும் லோவேகியா என்றும் இரண்டாக இருக்கிறது.

எப்படி ஒரு குடும்பத்தை நடத்துவதற்கு ஒரு வீடு தேவையோ அதைப்போல ஒரு இனத்தை முன்னேற்று வதற்கு ஒரு நாடு தேவை என்கிற உணர்வு உலக மெங்கும் உருவாகி வருகிறது. தனி நாடு கேட்பது தவறில்லை. தனி நாடு கேட்பது ஏன் என்றால் அந்த இனத்தை வாழ வைக்கத்தான். ஒரு உண்மை என்னவென்றால் உலகத்தையே கட்டி ஆண்ட இங்கிலாந்து நாட்டில் இன்றைக்கு ஆட்சி புரிந்து வருகின்ற டோனி பிளேயர் அவர்கள் ஸ்காட்லாந்துக்கு தனிப் பாராளுமன்றம் தந்திருக்கிறார். இன்னும் சில ஆண்டுகளில் ஸ்காட்லாந்து தனிநாடாகும்.

அதுபோல ஒவ்வொரு இனத்திலும் இன்றைக்கு இருக்கின்றவர்கள் தங்களுடைய இன மேம்பாட்டிற்காக தங்களுடைய சுய நிர்ணய உரிமையைப் பெறுகிறார்கள். அதற்கு நாகரிகமான சமுதாயம் வழிவிடுகிறது. காட்டுமி ராண்டிகள் அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கிறார்கள். அதனுடைய விளைவுதான் இன்றைக்கு புரட்சி ஏற்படுகிறது.

கனடா நாட்டில் 10 மாகாணங்களில் 9 மாகாணங்கள் ஆங்கிலம் பேசுபவை. 1 மாகாணம் பிரஞ்சு பேசுவது. அவர்கள் பிரிந்து போக வேண்டும் என்று கேட்கிறார்கள். அந்த மக்களிடையே இரண்டு முறை கருத்துக் கணிப்பு எடுத்தார்கள். நீங்கள் என்ன பிரிந்துபோக விரும்புகிறீர்களா? அல்லது சேர்ந்து இருக்க விரும்புகிறீர்களா? என்று கேட்டார்கள். அந்த நாட்டுப் பிரதமர் ஒன்றாக இருப்பதிலே என்ன இலாபம் என்று பேசுகிறார். அதற்காகச் செலவு செய்கிறார். அந்த நாட்டினுடைய முதலமைச்சர் இவர்களோடு ஒட்டிக் கொண்டிருப்பதால் என்ன இலாபம், வெட்டிக் கொண்டு போவதால் என்ன நட்டம் என்று கேட்டு பிரிவினையே நல்லது என்று பேசுகிறார்.

இரு முறை கருத்துக் கணிப்பு நடந்தது. இரு முறையும் ஒற்றுமையே வென்றது. ஆனால் மூன்றாவது முறை நடைபெற இருக்கும் கருத்துக் கணிப்பில் அநேகமாக பிரெஞ்சு பேசக்கூடிய கியூபெக் மாகாணம் அமைதி யாக பிரிவதற்கான வழி ஏற்படும்.

சோசலிச நாடு களில் எல்லாம் அரசியல் சட்டம் வகுக்கிற போது **சுயநிர்ணய உரிமையைச் சேர்த்து உருவாக்கினார்கள்.** அதனாலேதான் செக்கோஸ்லோவாக்கியா செக் என்றும் லோவாக்கியா என்றும் இரு நாடுகளாகப் பிரிந்தது. சோவியத் ஒன்றியத்தில் 15 நாடுகள் பிரிந்தன. ஆனால் முதலாளித்துவ நாடுகளில் அதற்கு சட்டத்திலே இடமில்லை.

தனிநாடு கேட்கிறார்கள் என்பதற்காக அவர்களைத் தடை செய்ய வேண்டும் என்றும் அவர்களை தகாதவர்கள் என்றும் சொல்லுபவர்கள் காலத்தை உணராதவர்கள். நாகரிகத்தை அறியாதவர்கள். நாடுகளின் போக்கினைத் தெரியாதவர்கள். உலக வரலாற்றினை உணர்ந்து கொள்ளாதவர்கள்.

இரண்டாவதாக நாம் சிந்திக்க வேண்டியது ஆயுதம் ஏந்திப் போராடுகின்ற அவசியம் ஏற்படுகிறது? என்பதைதான். உலகத்தை நாம் புரிந்து கொண்டால் தெரியும். ஒரு காலத்தில் ஐரிஸ் இராணுவம் என்பது வட அயர்லாந்தை சேர்ந்தது. அந்த ஐரிஸ் இராணுவம் பிரிட்டனைச் சேர்ந்த ஏன் இந்தியாவிற்கே சுதந்திரம் தந்த லார்ட் மவுண்ட் பேட்டன் படகிலே செல்லுகிறபோது வெடிவைத்து அந்தக் கப்பலை மூழ்கடித்தது ஐ.ஆர்.ஏ. என்கிற ஐரிஸ் இராணுவம். அப்போது பிரததமராக தாட்சர் இருந்தார். அவர் இலண்டனில் தன்னுடைய பொதுக் குழுக் கூட்டத்தை கூட்டினார். அவர் இருந்த மாடிக்குக் கீழே வெடிகுண்டு வைத்தார்கள். அவருக்கும் சேர்த்துதான். ஆனால் அவர் தப்பி விட்டார்.

அந்த போராட்டத்திற்குப் பிறகு இங்கிலாந்து அரசு அவர்களை எல்லாம் தடை செய்துவிட்டு அவர்களுடன் பேச மாட்டேன் என்று சொல்லி விட்டதா? அவர்களுடன் பேசி ஒப்பந்தம் போட்டிருக்கிறது.

இன்றைக்கு வட அயர்லாந்திலே கத்தோலிக்கர், புரட்டஸ்டண்டு என இரு மதத்தினரும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இரண்டு இனங்களில் ஏதாவது ஒன்றை பாதிக்கின்ற சட்டம் ஏதாவது வருமானால் அவர்களை பாதுகாத்துக் கொள்ள ரத்து அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருகின்றது.

ஒரு காலத்தில் ஜெர்மனியில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளச் சென்ற இஸ்ரேல் வீரர்களை எல்லாம் சாகடித்த பாலஸ்தீனியர்களுடன் பேசி ஒப்பந்தம் போடவில்லையா?


குர்திஸ் இன மக்களின் தலைவர் இன்றைக்கு பிடிபட்டு இருக்கிறார். குர்திஸ் இன மக்கள் அதே போலத்தான் தீவிரவாதிகள் என்று கருதப்பட்டார்களா? ஈராக் நாட்டில் வடபுலத்தில் குர்திஸ் மக்கள் ஒரு மகாணத்தை ஏற்படுத்தி ஐ.நா. சபையின் நேரிடை நிர்வாகத்தில் வைத்து இருக்கிறார்கள் அமெரிக்கா அதற்கு ஆதரவு தந்திருக்கிறது.

> **குர்திஸ் இன மக்களின் தலைவர் இன்றைக்கு பிடிபட்டிருக்கிறார். குர்திஸ் இன மக்கள் தீவிரவாதிகள் என்று கருதப்பட்டார்களா?**

கிழக்கு தைமூரில் தீவிரவாதிகள் என்று கருதப்பட்டவரின் தலைவர் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் வெளியே வருகிறார். அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மெடேலின் ஐபிரிட் அவரை கைகுலுக்கி மலர்ச்செண்டு கொடுக்கிறார். ஆகவே ஓர் எண்ணம் அதற்கான காரண காரியங்கள் என்று வருகின்றபோது அந்தப் பிரச்சினையை நேரில் சந்தித்து தீர்ப்பதற்கான சூழ்நிலையை அரசுகள் ஏற்படுத்த வேண்டுமே தவிர அவற்றைக் கிள்ளி எறிந்துவிடலாம் என்று கருதுவோமானால் அப்படிப்பட்டவர்தான் அழிவார்களே தவிர அந்தக் கருத்துக்கள் என்றுமே அழியாது என்பதற்கு இதைவிட சிறந்த எடுத்துக்காட்டு வேறொன்றுமில்லை.

காலாச்சக்கரத்தில் மனிதர்கள் அழிந்துவிடுவார்கள். போராளிகள் மடிந்தாலும் அவர்களின் கருத்துக்கள் அழிந்துவிடாது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளின் வேட்கை அழிந்துவிடாது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளின் வேட்கையை அழித்துவிடலாம் என்று கருதினால், சிங்கள அரசின் எதிர்காலம் அழிந்துவிட்டது என்றுதான் பொருள்.

வருங்காலம் தமிழர்களின் எதிர்காலம் செங்குருதி சிந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தமிழ் மக்கள் என்றும் ஆதரவு தர வேண்டும்.



# இந்தோனேசியா நாம் தமிழர் நமது மொழி தமிழ்

எம்.எஸ். இராமுலு

மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தீவுகளைக் கொண்ட செல்வம் கொழிக்கும் நாடு எங்கள் இந்தோனேசியா நாடு. நாடு சுபிட்சமாக இருப்பதால் மக்களும் நலமுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்தோனேசியர்கள் செயல் வீரர்கள், பண்பாலும் பாசத்தாலும் உயர்ந்தவர்கள். சமயத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்கள். ஒற்றுமையிலும், ஒன்றுபட்டு செயல்படுத்துவதிலும் தீரர்கள்.

ஆரம்பப் பள்ளியில் இருந்து பல்கலைக் கழகம் வரைக்கும் தமது இளமையான மொழியில் பாடங்களை நடத்தி பட்டதாரி களை உருவாக்கி, இந்தோனேசிய மொழியை ஆற்றல் மிக்க ஒரு மொழியாக உருவாக்கி வருகின்றனர்.

இந்நாட்டில் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புவது பண்பாடாகிவிட்டது. பிள்ளைகள் பள்ளிக்குப் போகாது இருப்பார்களேயானால் அதை கேவலமாக நினைக்கும் சமுதாயமிது.

இப்பேர்ப்பட்ட சிறப்புமிக்க நாட்டுக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழர்கள் வருகை தந்து தங்களது பண்பாலும், அன்பாலும், இந்நாட்டு மக்களைக் கவர்ந்து, அவர்களுடன் பாகுபாடு இன்றி கலந்து யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தத்துவ மொழிக்கு ஏற்ப தாங்கள் வந்த நாட்டை தங்களது நாடாகக் கருதி, இந்நாட்டவரை தங்களது உடன் பிறப்பாக ஏற்று தங்களின் சமய நெறிகளையும், பண்பாட்டையும் தமக்குத் தெரிந்த கைவண்ணங்களையும் இந்நாட்டு மக்களுக்கு நல்கியும், அவர்களுடன் ஒன்றி நின்று அன்று உருவாக்கப்பட்ட வரலாற்று சின்னங்கள் இன்றும் பிரமிப்பை ஊட்டுவனவாக உள்ளன. வரலாற்றுக் காலத்து தமிழர்கள் இன்றும் வரலாற்று ஏடுகளில் போற்றப்படுகின்றனர்.

பாராண்டு, சீராண்டு வையம் சிறக்கும் நெறியாண்ட பரம்பரையில் வந்த தமிழன் நால் வருணம் பேசி, ஒற்றுமையிழந்து, அடிமையாகி, பிறந்த நாட்டில் வாழ வழியின்றி பிற நாடு சென்று வாழ்வை வளமாக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் நூறு ஆண்டுகளுக்கு முன் இந்நாட்டில் கூலி வேலைக்காக குடியேறிய பரம்பரையில் வந்தவர்கள் நாங்கள்.

டச்சுக்காரன் தன் நாட்டை வளமாக்கிக் கொள்ள இந்தோனேசியாவை தன் பிடிக்குள் கொண்டுவந்து இந்நாட்டின் செல்வத்தைச் சுரண்ட அதற்கு ஆள் பலம் தேவைப்பட தமிழ் நாட்டிலே இருந்து தமிழர்களையும், சீனத்திலே இருந்து சீனர்களையும் கொண்டுவந்து குவித்தனர்.

இரண்டாம் முறையாக இந்நாட்டில் அடி எடுத்து வைத்த தமிழர்களைக் கண்ட இந்நாட்டு மக்கள் நிச்சயமாக கண்கலங்கி இருப்பர். தமிழ் மகனா? உன் பாட்டன் தனித் தாண்ட தென்னவனா? அன்பாலும் பண்பாலும் எங்களைக் கவர்ந்த இனமா? தாழ்ந்து போய் விட்டீர்களே! என்று நிச்சயமாக வருந்தி இருப்பார்கள்.

டச்சுக்காரர்கள் நடத்திய தோட்டங்களிலே கூலிகளாக பணியேற்று காட்டைச் செழிப்பாக்கி உயர்வான சோலைகளும் ஒளி மிகுந்த சாலைகளும் உருவாக்கித் தந்தான் தமிழன் டச்சுக்காரர்களின் அடக்கு முறைக்கு கட்டுண்ட தமிழன் — அவதியுற்ற தமிழன் பல வழிகளில் பின்னுக்குத் தள்ளப்பட்டான். எங்கள் நாடு 1945—ல் சுதந்திரம் கண்டது. தமி ழர்களுக்கு போதிய வசதி இல்லாமையால்

தங்களுடைய பிள்ளைகளுக்கு போதிய கல்வியை போதிக்க முடியாமல் போயிற்று. இதனால் பொருளாதாரத்தில் பின் தங்க வேண்டியதாகிறது.

நூறு ஆண்டுகள் ஆகியும் தமிழர்கள் இன்னும் தமிழர்களாகவே வாழ்கிறார்கள். இதற்கு காரணம் — தமிழர்கள் தங்களுக்குள்ளேயே திருமணத் தொடர்பு வைத்துக் கொள்வதுதான். இங்கு சாதி, பாகுபாடு கிடையாது. தமிழ் பேசுபவர்கள் "தமிழன்'' என்ற உணர்வுடன் தான் நடந்து கொள்வார்கள். முதலியார், நாயுடு, பிள்ளை, நாயக்கர், கவுண்டர் என்று **சாதி** வேறுபாடு பார்க்க மாட்டார்கள்.

ஏன்? பெரும்பாலோர் பிள்ளை நாயக்கர் கவுண்டர் என்று சாதிப்பெயரை போட்டுக் கொள்ளக்கூட வெட்கப்படுவார்கள்! கேவலமாக நினைப்பார்கள்!


சாதி சமய வேற்றுமையினால் தமிழர்களிடையே ''நான் உயர்ந்தவன் நீ தாழ்ந்தவன்" என்ற எண்ணங்களும், உங்களவன், எங்களவன் என்ற பிரிவினை பேதங்களும் தலை தூக்கி தமிழர்களின் ஒற்றுமை சின்னாபின்னமாகப் போய் தாழ்வு மனப்பான்மை உடையவர்களாய் அழிவுப் பாதையை நோக்கிச் சென்று கொண்டு இருக்கிறோம்.

திருத் தமிழர்களாக இருந்தபொழுது தமிழர்களின் வீரம் உலகெங்கும் பேசப்பட்டது. "இன்று தமிழனா அவன் தொடை நடுங்கி போடு ரெண்டு போடு" என்று போட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். நம்மவர்களும் வாங்கிக் கொண்டு இருக்கின்றார்கள். நாமும் பார்த்துக் கொண்டு இருக்கின்றோம்.

அச்சத்தை தவிர்த்து, ஆண்மையை வளர்த்து அன்று எப்படி வாழ்ந்தோம், இன்று எப்படி வீழ்ந்தோம் என்பதை உணர்ந்து, பாராண்ட வீரப்பரம்பரை என்பதை நெஞ்சில் பதிந்து, தாழ்ந்த நிலையில் தம் மொழி மறந்து பண்பாடு குலைத்து பரிதாபத்திற்குரியவர்களாக உலகெங்கும் சிதறுண்டு வாழும் தம் இன மக்களை ஒருங்கிணைக்கவும், காக்கவும் வேண்டிய நேரம் வந்துவிட்டது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இதற்கான வழி துறைகளை ஆராய்ந்து — செயல் மேற்கொள்ளுவோமாக!

இராமலிங்கேசுவரர் கோயிலின்
உட்புற மகா மண்டபம்



# தமிழர் தேசியப் போராட்டம்

வெற்றிவேலன், தமிழகம்

600 ஆண்டுகளுக்கு முன்பு முகமதியர்களும், அதன் பின்னர் ஆங்கிலேயர்களும், அதனைத் தொடர்ந்து தெலுங்கர்கள், பார்ச்சிகள், குஜராத்திகள், மார்வாடிகள் என பல்தரப் பட்டவர்களும் மாறி மாறி தமிழ் மண்ணை கொள்ளையடிக்க முயற்சி செய்தனர். அன்று முதல் இன்று வரை தொடரும் இந்த போராட்ட காலங்களில் அன்னியர்களை எதிர்த்து மன உறுதியுடன் போராடி வருகின்றவர் தமிழர்கள்.

நெற்கட்டுஞ் சேவலை ஆண்ட பூலித் தேவன் பிரெஞ்சு புரட்சிக்கு முன்னதாகவே ஆங்கிலேயருக்கு எதிராக தமிழகத்தில் மாபெரும் போர் நடத்தி தமிழ் மண்ணில் தமிழனைத் தவிர வேறு ஒருவனுக்கு இடம் இல்லை என பிரகடனப்படுத்தினார். தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்களையும் தளபதிகளாக, தனது ஆலோசனையாளர்களாக, நண்பர்களாக நடத்தினார். விழாக்களிலிருந்து இறுதிச் சடங்கு வரை எல்லோருக்கும் சமமாக மரியாதை தந்து மனித நேயத்தை உலகுக்கு பறை சாற்றிய பெருமை பூலித்தேவனையே சாரும்.

பூலித்தேவர் தொடங்கி வைத்த தமிழ் தேச போராட்டம் அன்று முதல் இன்று வரை தொடர்கின்றது. தலைமையும் இடமும் காலமும் மட்டுமே வேறுபடுகின்றவே தவிர தமிழ் தேசக் கொள்கைகளும் கோட்பாடுகளும் சிந்தனையும் ஒன்றாகவே ஒற்றுமையாகவே இன்று வரை இருக்கின்றன.

அதேபோல்தான் இன்று ஈழத்தில் நடைபெறுவதும் ஒரு மாபெரும் தமிழ்தேச போராட்டம். இலங்கை என்றொரு நாடே உருவானது சில நூற்றாண்டுகளுக்கு முன்பு தான். அதற்கு முன்பு வரை தமிழ்த் தேசத்தின் ஒரு பகுதியே இலங்கை. இயற்கையின் புவியியல் மாறுபாடுகள் காரணமாக துண்டிக்கப்பட்ட அந்த தீவில் வந்தாரை வாழவைக்கும் தமிழன் தான் முதலில் வசித்தான். வட இந்திய பகுதியிலிருந்து குடியேறிய சிங்கள விஜயன் தனது இனத்தை கூட்டம் கூட்டமாகக் கொண்டு சேர்த்து தமிழர்களை நம் மண்ணின் மைந்தர்களை கொடுமைப்படுத்தினார்கள். இதை அறிந்த தமிழ்ச் சிங்கமாம் சோழ மன்னர்கள் இலங்கை சென்று அவர்களை வென்று தமிழர்களைப் பாதுகாத்தனர்.

அதன் பின்னர் ஆங்கிலேயரின் ஆட்சியில் தமிழ்த்தேச போராட்டம் சற்று சோர்வடைந்து இருந்தது. காரணம் இந்திய விடுதலைப் போராட்டம் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் சிங்களர்கள் மக்கள் தொகை அடிப்படையில் தமிழர்களைவிட மேலோங்கிவிட தமிழ் மண் சிங்கள வெறியர்களால் அநியாயமாக பறிக்கப்பட்டது. நாடே சிங்கள நாடு என அறிவிக்கப்பட்டது. இந்த வேளையில்தான் தமிழ் தேச விடுதலையுணர்வு ஈழத்தில் உருவானது.

நம்முடைய மண்ணை மீட்கவும், நம்மை அடிமைப்படுத்திய தீய சக்திகளை அழித்து ஒழிக்கவும் நம் தமிழ் மண்ணின் மைந்தன் மாவீரன் பிராபாகரன் தலைமையில் இன்று சாதி மத வேறுபாடு இன்றி தமிழர், தமிழ் தேசம் என்ற மாபெரும் குறிக்கோளுடன் போராடி வருகிறான் ஈழத்து தமிழன்.

அந்த வகையில் தமிழனுக்கு என்றொரு தேசம், தமிழ்நாடு என்ற ஒன்று கிடைக்கும் என்றால் அது தமிழ் ஈழமே தவிர வேறு ஏதும் கிடையாது.

# வீரம் விளைந்த வில்லில் ஈரம் விளைந்த இசை

நாச்சிமார் கோயிலடி இராசன், செர்மனி

இசையோடிணைந்து இசைக்கு இசைந்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள். மழலைக்குத் தாலாட்டு, பிஞ்சுக் குழந்தைக்குச் சோறூட்ட நிலாப்பாட்டு, திருமணத்தில் வாழ்த்துப்பாட்டு, வயலிலே நாற்று நடுகைப் பாட்டு, ஏற்றப்பாட்டு, நாட்டுக்காகப் புறப்பட்டு போர் முகத்தே பரணி, இறை வழிபாட்டில் சிந்து, அம்மானை ஆனந்தக்களிப்பில் கும்மி, கோலாட்டப்பாட்டு, இறப்பிற்கு ஒப்பாரி.

வாழ்வின் சகல பருவங்களிலும் இசை இணைக்கப்பட்டு வளர்க்கப்பட்டிருக்கிறது. இசையால் தமிழர்கள் வளர்ந்திருக்கிறார்கள். இன்பத்துக்கும் துன்பத்துக்கும் இசையை நாடிய தமிழர்களின் போர்க்கருவி — காட்டில் வேட்டையாடகையாளப்பட்ட கொலைக் கருவி, கலைக்கருவியாக உருமாறி இசைபாட வைத்தது. அதுவே வில்லிசையாக வளர்ச்சி பெற்றது.

வில்லுப்பாட்டு தோன்றிய காரணங்களென பல கர்ணபரம்பரைக் கதைகள் சொல்லப் படுகின்றன.

வேட்டைக்குப் போன வேடன் உடல் சோர்ந்து களையைப் போக்க வில்லில் அம்பால் அடித்துப் பாடினான்..... அதன் வளர்ச்சியே வில்லுப்பாட்டு.

வில்லுப்பாட்டில் ஐந்து ஆறுபேர் பங்குகொள்கிறார்கள் என்றோர் புனைக்கதை சொல்லுவாருண்டு. இது நகைப்பற்கிடமான கதை. மகா பாரதக் கதையையும் பாண்டவர்களையும் வீர தீரம் நிறைந்தவர்களாகத் தமிழர்களுக்குக் காட்டியவர்களின் வழிவந்தோர்கள் — இட்டுக் கட்டிய செய்திதான் இது. ஏனெனில் இக் கதை உண்மையானதெனில் வட இந்தியாவிலும் வில்லிசை இன்று இருந்திருக்கும்.

தென்னகத்தில் திருவிதாங்கூர், நாஞ்சில் நாடு, திருநெல்வேலிப் பகுதியை ஆட்சி செய்த சேர மன்னன் ஒருவன் காட்டு மிருகங்களிடமிருந்து நாட்டு மக்களைக் காப்பாற்ற வேட்டைக்குச் சென்று பல மிருகங்களைக் கொன்று குவித்து — நாடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் — தான் கொன்று குவித்த மிருகங்களின் தொகையைக் கண்டு மனம் வருந்தினான். இவ்வளவு உயிர்களை வதைத்து விட்டேனே என வருந்திப் புலம்பி ... தான் செய்த பாவத்தைத் தீர்க்க வேண்டும் என ஏங்கிய வேளையில், அருகிருந்த அமைச்சர் அவன் துயரத்தை ஆற்ற எண்ணி, அரசே! தாங்கள் செய்த உயிர்க் கொலை மக்களைக் காக்கவே! இதைக் கொலை என்று சொல்ல முடியாது.... ஆனால் உங்கள் மனச் சாந்திக்காக வேண்டுமானால் இறைவனிடம் பாடிப் பிரார்த்தித்து வேண்டிக் கொள்ளலாம் என்று கூற வேட்டைக்கெனச் சென்ற இடத்தில் — வாத்தியக் கருவிகள் இல்லாமையால் தோளில் இருந்த வில்லை மடியில் கிடத்தி அம்புகளால் அடித்துப்பாட — சரிந்து விழுந்த வில்லை நிமிர்த்தி வைக்க காட்டுத்தேன் எடுத்து வந்த மட்குடத்தில் வில்லைப் பிணைத்துக் கட்டி மிருகங்களை விரட்டுவதற்காக எடுத்துச் செல்லப்பட்ட தோற்கருவிகளை படையினர் முழக்க அரசன் பாடினான். படையினர் சேர்ந்துபாடினர்.

கொலையுணர்வு மறைந்து கலையுணர்வு பிறந்தது. கொலைக்கருவி கலைக்கருவியானது. நாட்டுக்குத் திரும்பிய சேர மன்னன் அவைப் புலவர்களுக்கு காட்டில் நடந்த வில்லுப்பாட்டைப் பற்றிக் கூறி அதற்கு ஏற்ற வகையில் இலக்கண முறைகளை அமைக்கக் கட்டளையிட்டான். வில்லிசை பிறந்தது. இன்றும் அன்றைய சேர நாடண்டிய பகுதிகளான தென்னகத்தின் திருநெல்வேலி, நாஞ்சில், நெல்லை மாவட்டமே வில்லிசை நிலைத்து நிற்கும் பகுதிகளாக இருக்கின்றன. எனவே சேர மன்னனாகிய தமிழனால் அவன்

கொடியில் பறந்த **வில், தோளில் வீரத்தைப்** பறைச்சாற்ற **கிடந்தவில், வில்லிசைக்காக** வழங்கப்பட்ட**து என்பதே** வில்லிசையின் வரலாறு.

**புராணக் கதைகளை** பாமர மக்களுக்கு புரிய வைப்பதற்காகக் கிராமிய மெட்டுக்களைத் தனக்குரியதாக்கி தமிழிசை இயக்கங்கள் தோன்றுவதற்கு முன் இலகு தமிழால் தமிழிசையை வளர்த்தது வில்லுப்பாட்டு. இசை வளர்த்த வில்லுப்பாட்டுக்காரர்கள் இயற்றமிழையும் கதை சொல்லும் வேளையில் இன்பமாக இணைத்து வளர்த்தார்கள். இயலோடு இசையையும், நாடகத் தமிழையும் சேர்த்து வளர்த்தார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஒரு வில்லுப் புலவன் — தான் பாடும் கதாபாத்திரங்களை சீராக சித்தரித்து கேட்போர் பார்ப்போர் நெஞ்சங்களில் நிலைநிறுத்தி நவரச குணவியல்புகளை வெளிக்கொணர்ந்துவிடுகிறான். பாடும் பாடல் — கதையின் இடத்திற்கேற்ப அமையும் மெட்டு, அந்த மெட்டு தரும் உணர்விற் கேற்ற தாளம் பக்கப்பாடகர்களின் இசைவான ஓசை நயங்கள் இணைவதால் வில்லிசை எளிதாக இதயங்களை சென்றடைகிறது.

பழமையான கலையில் மரபு வழியாக வளர்க்கப்பட்ட இக்கலையில் புதுமை சேர்த்தவர் — கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன். நகைச்சுவை மூலம் நல்ல சமூகச் சீர்திருத்தக் கருத்துக்கள், புதிய சிந்தனைகளைப் பரப்பவில்லை தன் கையிலெடுத்தார் கலைவாணர். தமிழகத்தில் புரையோடிப்போன சாதீயம் — பக்தி என்ற பெயரில் பாமரமக்கள் நெஞ்சில் விதைக்கப்பட்ட மூடநம்பிக்கை — ஏமாற்று, போலித்தனம் இவற்றையெல்லாம் வில்லிசை உடைத்தெறிந்தது. போராயுதமான வில் இன்று தமிழீழப் போராட்டத்திற்காக பயன் விளையும் கருத்துக்களைப் பரப்பி வருகிறது.

விடுதலைக்காக இன்னுயிர் ஈந்த போராளிகளையும், இனவாத சிங்கள அரசும் — இந்திய வல்லரசும் இணைந்து தமிழீழ மக்களை அழிக்க எண்ணி இழைத்த கொடுமைகளையும் வில்லிசைத்துப் பாடிய வேளையில் — வில்லிசைக் கலைஞர்களோடு — பார்வையாளர்களும் இணைந்து தாளமிட்டு வில்லிசையோடு ஒன்றியது, வில்லிசையானது மக்களிடையே சிறந்த உணர்வு ஊடகமாக செயல்படுகிறது என்பதைப் புலப்படுத்தியது.

தமிழீழத்தில் அகதிகளாக்கப்பட்டு துன்பத்தில் துவளும் எம் தாயக மக்களின் துயர வாழ்வையும் — அவர்களின் துயரத்தில் பங்கு கொள்ளாது — ஐரோப்பிய வாழ்வின் சுகபோகங்களின் சுவையில் தம்மை இழந்து வாழ்வோர் பற்றியும் — வில்லிசைத்த வேளைகளில் பார்வையாளர்களில், கண்ணீர் சிந்தியோரையும், பகட்டு வாழ்வின் போலி கேட்டு முகம் மலர்ந்து சிரித்தோரையும் ஜேர்மனியில் பல கிராமங்களில் வில்லிசைக் கலைஞனாக நேரில் கண்டிருக்கிறேன். இது வில்லிசை மூலம் நேரிய கருத்துக்களை நெறியுடன் விளம்பினால், கேட்போர் வில்லிசையோடு இணைந்திடுவாரென்பதை உறுதிப்படுத்தியது. எண்ணும் கருத்தை — வில்லுப் புலவன் அம்பாக்கி கேட்போர் நெஞ்சில் ஆழப்பதித்திடுவான். இது வில்லின் பெருமை; பழமையான — தமிழ்க் கலையின் பெருமை.

●



# தமிழ் இசையைத் திருடியதும் பறிகொடுத்ததும்

சங்கமித்ரா

## கருப்பர் நாடுகள்

இசை உலகம் முழுவதும் கறுப்பு இனங்களின் அரிய சொத்தாக இருந்து வருகிறது. இன்றைக் கும் நீக்ரோக்கள் சிறந்த பாடகர்களாகவும் இசை வல்லுநர்களாகவும் இருப்பது கண்கூடு. இது சூரியனின் ஆற்றல் — பூமத்திரேகைப் பகுதியில் வாழ்கின்றவர்களின் பிதுரார்ஜிதம். பூ, செடி, கனி, பிராணி, மரம் எல்லாமும் உலகத்தில் சிறந்தவை பூமத்தியரேகைப் பகுதியில் இருப்பதைக் காணலாம். அப்படித்தான் பூமத்திய ரேகையின் கடும் வெயில் பிரதேசமான லெமூரியாவில் வாழ்ந்த தமிழர்கள் இசை ஆர்வலர்களாக, இசை மேதைகளாக வாழ்கிறார்கள்.

## புல்லாங்குழலும், தாளமும்

உலகின் மிகப் பழைய இசைக் கருவி புல்லாங்குழல்தான். மூங்கில் புல் இனம். வண்டு துளைத்த மூங்கில் காட்டில்—தென்றல் நுழைந்தபோது இசை இயற்கையில் பிறந்தது. மூங்கிலும், புல்லாங்குழலும் தமிழர்க்குரியவை. தாளால் (கால்களால்) தட்டுவது தாளம். மனித உடம்பில் கால்கள் பின் தூங்கி முன் எழுகின்றன. தூங்குபவனைக் காலில் தட்டினால் உடனே விழிப்பான். தப்பித்து ஓட உயிர் ராசிகளுக்கு இயற்கையாக அமைந்த தன்மை இது. இந்தத் தன்மைகளைக் கொண்ட தமிழன் லெமூரியாக் கண்டத்தில் 50,000 வருடம்—ஒரு லட்சம் வருடமாக இயல் இசை நாடகப் பேராற்றலுடன் வாழ்ந்திருக்கின்றான்.

## 8000 வருடங்களுக்கு முன்பே முதற்சங்கம்

தமிழை வளர்க்க 8000 வருடங்களுக்கு முன்பே தென்மதுரை முதற் சங்கம் இருந்திருக்கிறது. சுமார் 4000 வருடங்களுக்கு முன்பு கபாடபுரத்தில் இரண்டாம சங்கம இருந்தது. 2000 வருடங்களுக்கு முன்பு இப்போதுள்ள மதுரையில் (இது வடமதுரை என்று அப்போது வழங்கப்பட்டது) கடைச்சங்கம் இருந்தது. முதல் — இரண்டாம் சங்கம் இருந்த ஊர்கள் கடலில் மூழ்கின. 49 நாடுகள் — ஏழ்தெங்கநாடு, பெருவளநாடு போன்றவை கடலில் மூழ்கினவாம். மணிமலை போன்ற மலைகளுக்கும், முத்தூர் போன்ற ஊர்களுக்கும், பெருநூல், இயல்நூல் போன்ற நூல்களுக்கும் கூட இதே கதிதான். கடல் கோளினால் தமிழுக்கு பெரும் சரிவு, ஏற்பட்டிருக்க வேண்டும்.

## இசைத் தமிழ்

வேறு எந்த மொழியிலும் இசைக்கு ஒரு பிரிவு இல்லை. இசைக் கன்னடம், இசை ஆங்கிலம், இசை சமஸ்கிருதம் என்றெல்லாம் இல்லை. ஆனால் இசைத் தமிழ் என்று இருக்கிறது. பாணன், பாணினி என்று பாடுகிறவர்கள் அழைக்கப்படுகிறார்கள். சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப் படை என்று பாடகர்கள் இலக்கியங்கள் இருக்கின்றன.


இசைக்கொரு குழு — இசை வேளாளர் என்று இன்றும் வாழ்கிறார்கள். இப்படி எல்லாம் வளர்ந்த இசை கி.பி. 1900 க்குப் பிறகு—உடம்பெல்லாம் விஷமான பார்ப்பனர்கள் — தமிழ்ச் சான்றோர்களாகவும், தமிழாசான்களாகவும் உருவெடுத்த பிறகு திடீர் என்று மறைந்து விடுகிறது என்றால் என்ன அர்த்தம்?

## தமிழில இசைக்குப் பெயர்களும் சொற்களும்

இசை என்ற பொருள் தரும் சொற்கள் மட்டுமே — பண், சுரம், காமரப்பாட்டு, பாட்டு, தானம், கொளை, வரி, கந்திருவம், கீதம், ராகம், கேயம், நாதம் என்று பலவாக

வழங்கப்படுகின்றன. மேலும் தமிழர்கள் ஏழிசையை — குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், என்று அழைத்தார்கள். இதைப் பார்ப்பனத் திருடர்கள் — சட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்று மொழி பெயர்த்துக் கொண்டார்கள். உடனே தமிழிசை இல்லை என்று ஆகிவிடுமா? கர்நாடக இசை இவர்களுடைய அப்பன் வீட்டுச் சொத்து என்றால் — இவர்களுடைய அப்பன், பாட்டன் வாழ்ந்த மத்திய ஆசியா, ஈரான், ஈராக், ஆஃப்கானிஸ்தான் முதலிய இடங்களில் ஏன் கர்நாடக இசை இல்லை?

இன்னும் சொல்லப்போனால் காந்தாரம் முதல் — காமரூபம் வரையில் பாடப்படும் இந்துஸ்தானி இசைகூட கர்நாடக இசையின் (திராவிடர் இசையின்) ஒரு மாற்று வடிவம் தானே? தமிழர்கள் யாழில் மட்டும் — மருதயாழ், குறிஞ்சியாழ் என்று நிலத்துக்கேற்ப யாழ் செய்ததல்லாமல் — பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ், கீசக யாழ், மருத்துவயாழ் என்று பல யாழ்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். தமிழின் இனிய எழுத்து 'ழ' வரும்படி — தோற்கருவிகளை முழவு என்றும், துளைக்கருவிகளை குழல் என்றும், நரம்புக் கருவிகளை யாழ் — என்றும் அழைக்கிறார்கள்.



அதிர்வுக் கருவிகளான ஜால்ரா முதலியனவும் கண்டு பிடித்திருக்கிறார் கள். பனை ஓலையிலிருந்து சங்கு வரை எல்லாமே தமிழர்களுக்கு இசைக் கருவிகளாகப் பயன்பட்டிருக்கின்றன. வீரம், பயம், இழப்பு, அற்புதம், இன்பம், அவலம், நகை, நடுநிலை, உருத்திரம் என்பதான நவரசங்களையும் ஓசையில் காட்டும் ஒப்பற்ற நிபுணர்களாகத் தமிழர்கள் இருந்திருக்கிறார்கள்.

**கருணாமிருதசாகரம்**

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் எழுதி — 1917ல் முதன் முதலாகதப் பதிப்பான தமிழிசை வரலாற்று நூலில்—1365 பக்கங்களில் ஏ4 சைசில் இச்செய்திகள் கொட்டிக் கிடக்கின்றன. அரிய திராவிட இன உணர்வாளரும் இலக்கிய இரசிகருமான தோழர் கோ. இளவழகன் குடும்பத்தினர் இந்நூலை பெரும்பொருட் செலவில் 1994—ல் மறுபதிப்புச் செய்து, 1.1.95ல் உலகத் தமிழ் மாநாட்டில் தஞ்சையில் வெளியிட்டிருக்கிறார்கள் (விலை ரூ.1200). இந்த நூல் தமிழ் தமிழ்நாடு, தமிழன் என்று பேசித் திரிகின்ற ஒவ்வொவர் வீட்டிலும் இருக்க வேண்டுமல்லவா?


தமிழன் வரலாறு தெரியாமல், இயல் இசை நாடகச் செல்வச் செழிப்பு தெரியாமல், தமிழை வளப்படுத்தும் நோக்கம் இல்லாமல் தமிழ்த் தொண்டு என்றால் அது "பொறுக்கித் திங்கும்" தொண்டு தானே? (நூல் கிடைக்குமிடம் : இளவழகன், அன்றில் பதிப்பகம், சி.என்.கே. சாலை, சேப்பாக்கம், சென்னை. 5). இது இப்படி இருக்க

**ஊற்று - செப்டம்பர் 98**

பெங்களூர் தமிழ்ச் சங்க வெளியீடு "ஊற்றுல்" செப்டம்பர் 98 இதழில் தமிழில் நுண்கலைகள் என்ற தலைப்பில் அருமையான ஒரு கட்டுரை வெளிவந்திருக்கிறது. (இந்த கட்டுரையை எழுதியவரின் பெயரை வெளியிடாத இவர்களுடைய கவனக் குறைவு கண்டிக்கத் தக்கது) அக்கட்டுரையில் 'பாணர்' எனும் இசைக் குலத்தைப் பாழ்படவே தள்ளியதால் மானமுள்ள இசைத் தமிழும் மறைந்திட்டதே வழங்காமல்' என்று பாவாணர் வருந்தியதைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இக்கட்டுரையில்கூட தமிழிசைக் காலத்தை தொல்காப்பியர் காலம், பாணர் விறலியர் காலம், சிலப்பதிகாரக் காலம, நாயன்மார் — ஆழ்வார் காலம், தெலுங்கு மராட்டிய மன்னர் காலம், ஆங்கிலேயர் காலம் என்று பிரிக்கிறார் கள். தொல்காப்பியருக்கு முன்பு தமிழிசை இல்லையா? ஆபிரகாம் பண்டிதர் முதல் சங்க காலத்திலேயே (8000 வருடத்துக்கு முன்பு) இசைநூல்கள் இருந்தன என்று சொல்வது என்ன ஆனது?

தமிழ் இசைக் காலத்தை இரண்டே பிரிவாகத்தான் பிரிக்க வேண்டும். தமிழர்கள் இசையை வளர்த்த காலம், பார்ப்பனர்கள் அதை ஒழித்த காலம்— அவ்வளவுதானே? தொல்காப்பியர் காலத்தி லிருந்து இன்றுவரை தமிழ் இசை ஒழுந்துதானே வந்திருக்கிறது?



இக்கட்டுரையில், செம்பாலை ராகம், அரிகாம்போதியாகவும், படுமலைப் பாலை—நடபை ரவி என்றும், செவ்வழிப் பாலை— இருமத்தித்தோடி என்றும், அரும்பாலை—சங்கராபரணம் என்றும், கோடிப்பாலை—கரகரப்பிரியா என்றும், விளரிப்பாலை—தோடி என்றும், மேற்செம் பாலை—கல்யாணி என்றும் புதுப் பெயர் பெற்று பாப்பார வேடம் புனைந்ததைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

**உனக்குச் சொல்லிக் கொடுத்தவன் யார்?**

பார்ப்பனர்களின் மகாப் பண்டிதர்களுக்கு இசையைச் சொல்லிக் கொடுத்தவர்கள் தமிழர்கள். குறிப்பாக இசைவேளாளர்கள். பாட்டும் பரதமுமாக வாழ்ந்த இந்தத் தமிழர்களிடமிருந்து வெட்கமில்லாமல் இவற்றைக் கற்றுக் கொண்டவர்கள் ஒரு இடத்திலாவது குருவே சரணம் என்று அந்த சூத்திர குருமார்களின் பெயர்களைச் சொல்ல வேண்டுமா இல்லையா?


நடனத்தில் பந்தணைநல்லூர் பாணி, வழுவூர் ராமையாபிள்ளை பாணி என்கிறார்களே அது என்ன? தமிழ்ப் பாணி தானே! வேதமதத்தைப் பரப்ப வந்தோர் நிலத்தேவர் (பூதேவர்), அவர்மொழி தேவமொழி என்று நம்பப்பட்டுவிட்டது. சங்க காலத்து மூவேந்தரே அந்த நம்பிக்கைக்கு ஆட்பட்டு விட்டனர். அவர்கள் ஏமாந்ததற்குக் காரணியம் அவர்களது பழங்குடிப் பேதமையும், கொடைமடமும் மதவெறியுமே என்கிறார் பாவாணர்.


பின்னர் கிபி. நான்காம் நூற்றாண்டில் பல்லவராட்சி தொடங்கிய போது தமிழின் கீழிறக்கம் உறுதி செய்யப்பட்டு விட்டது (ஊற்று — செப்டம்பர் 98). ஆக பார்ப்பான் நெஞ்சான் குலையில் விஷம் வைக்கிறான். அரசர்களுக்கு போதை ஏற்றி அறிவை மயக்கி தேவைப்படும் போது பெண்டிரைக் கூட்டி கொடுத்து சாம பேத தான தண்டத்தில் இறங்கி வெற்றி ஒன்றே குறியென்று இன்றைக்கும் நடக்கிறானா இல்லையா?

இசைக்காகவும் இலக்கணத்திற்காகவும் வாழ்கிறேன் என்று அடக்கமாகக் குறிப்பிடும் புதுவைத் தமிழறிஞர் அய்யா திருமுருகனார் கேட்பார். இந்த மும்மூர்த்திகளுக்கும் முன்னே —முத்துத்தாண்டவர் (1535—1625), மாரிமுத்தாப் பிள்ளை (1712—1787), அருணாசலக் கவிராயர் (1711—1779) என்று ஆதி மும்மூர்த்திகள் இருந்தார்களே— அவர்களை ஏன் மறக்கிறீர்கள் — மறைக்கிறீர்கள்? அவர்களுக்கும் முன்பே அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்று படு ஆதி மும்மூர்த்திகள் இருந்தார்களே அவர்களைக் கூட ஏன் மறைக்கிறீர்கள்? ஏன் என்றால்—தமிழ்—தமிழ் அழிப்புத்தான் இங்கு பார்ப்பானுக்கு உள்ள One Line Agenda ஒருவரி அழிப்புத் திட்டம். பிற்பார்வையாகப் பார்க்கலாமே—சென்ற 2000 வருடங்களில் எத்தனை பார்ப்பனர்கள் தமிழ் — தமிழன் — தமிழ்நாடு மேம்பாட்டுக்கு ஏதாவது உழைத்திருக்கிறார்களா என்று!

இந்தியாவில் தேசிய இனங்களும், தமிழ்த் தேசியமும் என்ற இத்தலைப்பிட்ட நூலில் தோழர் கு.ச. ஆனந்தன், (பக்கம் 201 முதல் 229 வரை) 'திசை மாறிய தமிழ்த் தேசியம்' என்ற தலைப்பில் தமிழர்களின் இலக்கியமும் இசையும் அழிந்த கதையை நெஞ்சுருகச் சொல்லுகிறார்.

குறிப்பாக இசையைப் பற்றிக் குறிப்பிடும்போது—இசை ஒரு நுண்கலை. உள்ளத்தைத் தொட்டு ஈர்க்கும் இன்பவிசை. இசைப் பண்பாட்டின் எதிரொலி. மொழி மக்களின் அழகியல் ஊற்று. இசைக்கு ஈர்ப்பைக் கூட்டுவது. அதனுள் ஊடாடும் கருத்துப்





பொருள்—அப்பொருளை வடிவமைப்பது என்கிறார். கலித்தொகையும், நெடுநல்வாடையும், சிலப்பதிகாரமும் இசைக்கு ஏற்றம் தந்திருந்த பழந்தமிழகத்தில்—தமிழ்ச் சொல்லோவியங்களைக் கொண்ட இன்பப் பெட்டகங்கள் என்கிறார். இது எல்லாம் எப்படி அழிந்தது என்றால், தமிழ் அல்லாத எது வேண்டுமானாலும் தமிழ்நாட்டில் வளரலாம் என்கிற பார்ப்பன அணுகுமுறையில் அழிந்தது!

**31 ஆண்டு திராவிடர் ஆட்சியில்**

சுதந்திர இந்தியாவில் 1967 முதல் 31 ஆண்டுகள் திராவிடர் ஆட்சி நடந்து விட்டது. மிக மிக மிக என்று எத்தனை மிக வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள் என்று தன் இசை வேளாளர் சாதியைப் பற்றிச் சொன்ன கலைஞர் மு. கருணாநிதி நான்கு முறை முதலமைச்சராகி விட்டார்.

பள்ளிக் கூடங்களில் தமிழ் இசைதான் கடவுள் வாழ்த்து; இசைக் கல்லூரியில் தமிழ் இசைதான் பாடப்படும்; கோவில்களில் தமிழ் இசைதான் இனிமேல் என்று சொல்லி ஆட்சி கையில் இருக்கும்போது தமிழ் இசைக்கு உயர்வு, தமிழ் இசைக்கு வளர்ச்சி, தமிழ் இசைக்கு ஆய்வு, தமிழ் இசைக்குப் பாராட்டு, தமிழ் இசைக்குப் பரிசு, என்று செய்யலாமா இல்லையா? ஏன் செய்ய வில்லை? திராவிடர் இசை நூலை எழுதிய அறிஞர் தண்டபாணிக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசு கொடுத்தால் என்ன? கருணாமிருத சாகரம் நூலை — அனைத்துக் கல்லூரி பள்ளி நூலகங்களிலும் வைக்க ஏற்பாடு செய்தால் என்ன? தமிழ் இசையும் தமிழ் இலக்கணமும் எனது இரு கண்கள் என்று வாழும் திருமுருகனாருக்கு 100 பொற்காசுகள் (நூறு பவுன்) பரிசு வழங்கினால் என்ன?

வேறு எந்தக் காரணமும் இல்லை. அனறும் இன்றும் என்றும் தன் இன மேம்பாடு என்பதில் நூலிழைகூடப் பார்ப்பான் பிசகாமல் செயல்படுகிறான். அவன் தமிழ் இசையைத் திருடுவது உட்பட சர்வ அயோக்கியத் தனமும் செய்யச் சளைப்பதே இல்லை. ஆனால் தமிழன் — பயந்து பயந்து, தனது உறுதிப்பாட்டில் தளர்ந்து — தளர்ந்து எல்லாமும் எப்பவும் பறிகொடுக்கும் மடையனாக இருக்கிறான். நியாயங்களைப் பேசக்கூட — அநீதிகளை எதிர்க்கக் கூட தமிழன் தயங்குகிறான் என்றால் அவன் தோற்பதில் ஆச்சரியம் என்ன?

# யாப்பும் இசையும்

முனைவர் இரா. திருமுருகன், புதுச்சேரி

இசையை ஒரு கூறாக உடையது நம் தமிழ் மொழி கருத்தை உணர்த்துவதையே முதன்மை நோக்கமாகக் கொண்ட இயல்தமிச் செய்யுள்களின் அடிப்படை உறுப்புகளே இசையோடு தொடர்புடையவை. யாப்பு இலக்கணம் உணர்த்தப்புகுந்த தொல்காப்பியர்.

*அசையும் சீரும் இசையொடு சேர்த்தி*
*வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே*
(தொல். செய் 10)

என்கிறார். எனவே யாப்பு உறுப்புகளாகிய அசை, சீர், அடி, தொடை, தளை ஆகிய யாவும் செய்யுள்களின் இசை ஒழுங்கு பற்றிய செய்திகளே என்பது தெளிவாகிறது.

**இசைத்தமிழும் யாப்பிலக்கணமும்**


இசையின்பம் தருவதையே முதன்மை நோக்கமாகக் கொண்ட இசைத்தமிழ்ப் பாட்டுகளின் யாப்பிலக்கணம் இசையோடு எவ்வளவு தொடர்புடையதாயிருக்கும் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. இசைத்தமிழ் யாப்பு என்பது இயல் தமிழ் யாப்பு அமைப்புகளோடு வேறு சிலபண்புகளையும் உடையதாக உள்ளது. இயல்தமிழ்ச் செய்யுள்களுக்குப் பண் இயல்பு மட்டுமே போதும்; ஆனால் இசைத் தமிழ்ப் பாடல்களுக்குத் தாள இயல்புகளும் வேண்டப்படுகின்றன. எனவே, இயல் தமிழுக்கு இருப்பது போல இசைத் தமிழுக்கென்று தனியான யாப்பிலக்கணம் உண்டு. அதைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கு இசையறிவு ஓரளவு தேவைப்படுகிறது. இசைப்பாடல்களை இயற்றுவோர்க்கும், பதிப்பிப்போர்க்கும், பாடுவோர்க்கும் இசைத்தமிழ் யாப்பிலக்கண அறிவு இன்றியமையாதது என்பதை எடுத்தியம்புகிறது இக்கட்டுரை.

**இசைத் தமிழ்ப் பாடல்களின் வகைகள்**

இசைத் தமிழ்ப் பாடல்கள் தாளம் இல்லன, தாளம் உள்ளன என இருவகைப்படும் தாளம் இல்லாத பாடல்கள் சுத்தாங்கம் என்று தாளம் உள்ள பாடல்கள், இலயாங்கம், என்றும் கூறப்படும்.

**தாளம் இல்லன**

தாளம் இல்லாமல் வெறும் பண்ணுடன் மட்டுமே பாடப்படும் திருத்தாண்டகம் போல்வன இவ்வகையில் அடங்கும். எவ்வகை



இசைப் பாடல்களுக்கும் பொது இலக்கணமாகிய 'இழைபு' என்பது மட்டுமே இதில் அமைந்திருக்கும். இழைபு என்பது ஓங்கிய ஓசையமைப்பு. இது இசைப்பாடல்களுக்கு இன்றியமையாத பண்பு. வல்லொற்றுகள் வாராமை, நெடில்களும் மெல்லொற்றுகளும் மிகுதியாகப் பயின்று வருவது, ஓங்கிய ஓசையமைப்பாகும் இதனை,

*ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்து அடக்காது*
*குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து*
*ஓங்கிய மொழியான் ஆங்கனம் ஒழுகின்*
*இழைபின் இலக்கணம் இயைந்தது ஆகும்*

*(தொல். செய்.234)*

—என்று விளக்குகிறார் தொல்காப்பியர்

உதாரணம் :

*மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறை பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே*

(திருநாவுக்கரசர் தேவாரம் 90—1)

**தாளம் உள்ளன**

தாளம் உள்ள இசைப்பாடல்கள் நான்கு வகைப்படும். அவை சந்தப்பா, வண்ணப்பா, சிந்துப்பா, உருப்படி என்பன. இவையனைத்தும் மும்மை, நான்மை, ஐம்மை, எழுமை, ஒன்பான்மை ஆகிய நடைகளை உடைய பல வகைத் தாளங்களில் பாடப்படுவதற்கேற்றபடி அமைந்திருக்கும். இழைபு என்னும் ஒலியமைப்பு, அடி, மோனை, எதுகை, இயைபு ஆகியவை மேற்கண்ட எல்லாவகைப் பாடல்களுக்கும் பொதுவானவை. ஆனால் தாள நடைகள் சந்தம், வண்ணம், சொற்கட்டு, கலை, தொங்கல், எடுப்பு, தொடுப்பு, முடிப்பு, முடுகியல், முதலியன தாளம் உள்ள பாடல்களுக்கே சிறப்பானவை.

**யாப்பறிவும் இசைத்துறையும்**

இசைத்துறையில் உள்ள பாடலாசிரியர், பயிற்றுவோர், பாடகர், பாடல்களைப் பதிப்பிப்போர் ஆகியோருக்கு மேற்கண்ட யாப்பிலக்கணங்களில் அறிவு இன்றியமையாதது. இன்று இதுபற்றி யாரும் கவலைப்படாத நிலை உள்ளது. இசைப்பாடல் எழுதுவோரிற் பலர்க்கு இசையறிவும் இல்லை; இசைத்தமிழ் இலக்கண அறிவும் இல்லை. இயல் தமிழ் யாப்பிலக்கண அறிவு ஒன்றே இசைப்பாட்டெழுதப் போதுமானது என்று நினைக்கிறார்கள்.

இசைப்பாடல்களை மாணவர்க்குப் பயிற்றும் ஆசிரியர்கள் பலர்க்கு இசைத்தமிழிலக்கண அறிவு இல்லை. இசையை மட்டுமே சிறப்பாகக் கருதிப் பாடல்களின் யாப்பு அமைப்பைப் புறக்கணிக்கிறார்கள்.

பாடகர்களாவதற்குப் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு இசைத்தமிழ் இலக்கணத்தின் அடிப்படைகள் கூடப் பாடப் பொருளாகச்

சேர்க்கப்படுவதில்லை. பாடநூல்களிலும் இதுபற்றிய செய்திகள் சேர்க்கப்படுவதில்லை.

பாடிவரும் இசைவாணர்களும் பாடலின் ஒலியமைப்புகள் யாப்பழகு சீர்களில் அமைந்துள்ள சொற்கட்டுகள் முதலியன தோன்றும் படி பாட அறியாமல் இசைக்கே முதன்மை கொடுத்துக் குரலிசையைக் கருவியிசைபோல் செய்து வருகிறார்கள்.

இசைப்பாடல்களை அச்சிற்பதிக்கும் பதிப்பாளார்களும் அவற்றை தமிழ்ப் பாடல்களாகவே கருதி அச்சிட்டு வெளியிட்டு வருகின்றனர்.

**இசைத்துறையில் யாப்பறிவுக்கு இடமளிக்கப்படாமையால் ஏற்ப இழுக்குகள்**

இன்றுள்ள இசைக்கல்லூரிகளிலும், இசைப் பள்ளிகளிலும், இசை நூற்பதிப்பிலும் இசைத் தமிழ் யாப்பிலக்கணம் அறிந்தோர் இடம் பெறவில்லை. இன்றைய தமிழ்க் கல்வியின் எந்த மட்டத்திலும் இசைத்தமிழ் யாப்பிலக்கணம் கற்பிக்கப் பெறவில்லை. அதன் விளைவாகப் பின்வரும் குறைபாடுகள் தமிழிசையுலகில் காணப்படுகின்றன.

**1. இயற்பா - இசைப்பா வேறுபாடு உணரப்படாமை**

பாலும் தெளிதேனும் என்ற வெண்பாவை ஐந்தன் சாய்ப்பு (கண்ட சாபு) தாளத்தில் இசையமைத்து

*பாலும்தெ ளிதேனும் பாகும்ப ருப்புமிவை*
*நாலும்க லந்துனக்கு நான்தருவேன் — கோலஞ்செய்*
*துங்கக்க ரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்*
*சங்கத்தமிழ்மூன்றும் தா*

என்று ஒருவர் பாடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். சொற்கள் கண்டபடி சிதைந்தும் எழுத்துகள் வேண்டாத அளவு நீண்டும் குறுகியும் ஒலிக்கின்றன. வெண்பா ஆசிரியப்பாக்கள் இயல்தமிழ் பாக்கள் அதனைப் பாட எடுத்துக்கொண்டதே சரியில்லை. அதிலும் எவ்வகைச் சந்தமும் இடம்பெறாத அதனைத் தாள நடையில் அமைத்துப்பாடுவது சிறிதும் பொருந்தவில்லை. இவர் இப்படிச்செய்வதற்கு **இயற்பா**—இசைப்பா வேறுபாடு உணராமையே **காரண**மாகும்.

**2. தாளம் உள்ளதா இல்லதா என அறியாமை**

*பொன்னி லங்கு பூங்கொ டிபொ லன்செய் கோதை வில்லி*
*மின்னி லங்கு மேக லைக ளார்ப்ப வார்ப்ப எங்கணும்*
*தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்த டித்துமே*
*தேவ ரார மார்பன் வாழ்க என்று பந்த டித்துமே*

(சிலம்பு, வாழ்த்துக்காதை)

என்ற கந்துவரிப் பாடலை ஒருவர் 'பொன்னிலங்கு பூங்கொடி' என்று சுத்தாங்கமாகப் பாடினார். 'தகிட தகிட' என நடக்கும் அதன் மும்மை நடைச்சந்த அழகு உணரப்படவேயில்லை. பண்டைக்காலத்தில் மகளிர் கைகளால் பந்துகளை அடித்துத் தாளத்துடன் பாடிக்கொண்டே ஆடவும் செய்வர். அப்போது பாடுவதாக உள்ள இந்தச் சந்தப் பாடலை இலயாங்கமாக மட்டுமே பாடவேண்டும்.

**3. சீர்களின் சொற்கட்டுகளுக்குப் பொருந்தும் தாளம் இன்னதென அறியாமை**

*வேயுறு தோளி பங்கன்*
*விட முண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி*

திருஞானசம்பந்தர் தேவாரம், கோளறுபதிகம்)

என்ற பாடலின் சீரமைப்பு


$|_4$    8    8
தாங்கிட தகிட தகிட

$\cup_4$   8   $\cup$   8   $|_4$
தகதகிட தகிட தகதகிட தகிட தகதீம்

என்ற சொற்கட்டுகளை உடையது. ஆனால் இது இன்று ஏழன் சாய்ப்பு (மிசிரசாப்பு)த் தாளத்தில் ஒரு மாதிரியாகப் பாடப்படுகிறது. அதனால் அதன் சந்த அமைப்பும் அழகும் புலப்படவில்லை. இதனை மேலே குறித்துள்ளபடி உறுப்புத்தாளம் (அங்க தாளம்) போட்டு பாடுவது பொருத்தம்.

*ஒரு பொழு துமி ருச ரண நே சத் தே வைத் துண ரேனே* (திருப்புகழ், திருவாவிநன்குடி)

என்ற பாடல் மேற்குறித்தபடி ஒன்பான் இனச் (சங்கீர்ணசாதி) சம்பை தாளத்தில் பாடப்படுகிறது. இதன் முதல் இரு சீர்களும் 'ஒருபொழுது மிருசரண' என இரண்டு ஐம்மைச் சொற்கட்டுகளுடன் 'தகதகிட தகதகிட' எனத்



# உலகத் தமிழ்ப் பண்பாட்டு விழா : மொரீசியஸ் 19-7-80

**அ**ன்பிற்குரிய முதல்வர் அவர்கட்கு,

வணக்கம். மொரீசியஸ் நாட்டில் 1980 ஆகஸ்ட் 4 முதல் 8 வரை நடைபெற உள்ள இரண்டாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு விழாவுக்குத் தமிழக அரசின் சார்பில் ஒரு குழுவை அனுப்பி வைப்பது தொடர்பாக உங்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தோம். (உங்களை நேரில் சந்திக்கப் பலநாள் முயன்றும் முடியாததாலேயே கடிதம் மூலம் அதைத் தெரிவித்தோம்).

தமிழ் அறிஞர்களை அனுப்புவதைவிட இசை, பாட்டு, வாத்திய, நடனக் கலைஞர்களை அனுப்புவதே தக்கது என்று அரசு சார்பில் கருதப்படுவதாகவும் தெரிகிறது. அதுபற்றியே இப்போது இந்தக் கடிதம்...

1974-ல் யாழ்ப்பாணத்தில் என்னுடைய தலைமையில் உருவான உலகத் தமிழ்ப் பண்பாட்ட இயக்கம் உலகெங்கும் உள்ள அதிகம் படிப்பு இல்லாத எளிய தமிழர்களைப் பண்பாட்டு அடிப்படையில் ஒன்றுபடுத்தும் நோக்கத்தோடு உருவாயிற்று. அதனாலேயே, இந்த இயக்கம், உலகின் பல நாடுகளில் வாழும் தமிழர்களிடையே புதிய பெரிய எழுச்சியை உண்டாக்கியுள்ளது. அந்த அடிப்படையிலேதான், இப்போது உ.த.ப. இயக்கத்தின் மொரீசியஸ் கிளை இந்த இரண்டாவது விழாவை நடத்துகிறது.

முதலாவது விழா 1977-இல் சென்னையில் நடந்தபோது, தாங்கள் அதிலே நேரிடையாக ஈடுபட முடியாமல் போனதால் தமிழக அரசுக்கு இயக்கத்தைப் பற்றிய சரியான விவரம் தரப்படவில்லை. எனவே தமிழக அரசு, அப்போது, விழாவுக்குப் போதிய உதவியும் ஊக்கமும் தரவில்லை. நாங்கள் இருவரும் முன்வந்து, விழாவுக்கு வந்திருந்த வெளிநாட்டுத் தமிழர்களுக்கு மாமல்லபுரத்தில் (எங்கள் சொந்தச் செலவில்) விருந்தளிக்கத் திட்டமிட்ட பிறகே, தமிழக அமைச்சர் ஒருவர் தலையிட்டு அரசின் (சுற்றுலா வாரியத்தின்) சார்பில் அந்த விருந்து நடக்க ஏற்பாடு செய்தார். நாங்கள் திட்டமிட்டுத் தயாரித்த விருந்துதான் அரசின் செலவில் (அப்போது) நடந்தது. அதன் பிறகே நீங்களும் பேராளர்களுக்குத் தனிவிருந்து வழங்கினீர்கள்.

இந்தக் குறைகளும் விடுபாடுகளும் மீண்டும் ஏற்படக் கூடாது என்று கருதியே, நாங்கள் (நானும் என் மனைவியும்) 1979 முதலே இரண்டாவது விழாவைப் பற்றித் தமிழக அரசுக்கு எடுத்துச் சொல்லியும் வேண்டுகோள் விடுத்தும் வந்தோம். ஆயினும் அரசு இதில் தேவையான ஆர்வம் காட்டாதது எங்களுக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது.


இந்த இரண்டாவது விழாவைச் செப்பமுறை நடத்த வேண்டுமென்று மொரீசியஸ் கிளை கருதுகிறது. அதற்கு ஏற்ற முறையில், உலகத் தமிழ்ப் பண்பாட்ட இயக்க நிறுவர்கள் பங்குகொண்டு சரியான நன்முறைகளையும் திட்டங்களையும் எடுக்க வேண்டும் என்றும் பண்பாட்டு இயக்கம் கருதுகிறது. கலைஞர்கள் சென்று தொடர்பை வலுப்படுத்துவது நல்லதுதான். என்றாலும், அதற்கு ஏற்ற அடித்தளம் அமைக்கும் பணியே இந்த விழாவிலே நடைபெற வேண்டியுள்ளது. அதனாலேயே அறிஞர்களும் ஆர்வலர்களும் தமிழக அமைச்சர்கள் சிலரும் இந்த விழாவில் பங்குகொள்ள வேண்டியது மிகமிக அவசியமாகிறது.

நான் கொடுத்த பட்டியலிலே கண்ட அய்ந்துபேரையும் தமிழக அமைச்சர்களில் சிலரையும் ஒரு குழுவாக விழாவுக்கு அனுப்பிச் சிறப்பிக்குமாறு மீண்டும் உங்களை வேண்டுகிறோம். தமிழகத்தில் நடைபெறுகிற தமிழ் நிகழ்ச்சிகளுக்கு அரசு உதவினால், ''வாக்குச் சீட்டுகளுக்காக அரசு உதவுகிறது'' என்று பிறர் குறை சொல்லுவதற்குச் சிறிதேனும் வாய்ப்பு உண்டு; எங்கோ, உலகத் தமிழர்கள், தமிழ்ப் பண்பாட்டின் பேரால் சந்தித்துக் கொள்வதற்கு உதவியும் ஊக்கமும் அளிப்பதுதான் உண்மையான தமிழ் ஆர்வம்; இதிலே மேற்கண்ட விதமாக நல்ல முடிவு எடுங்கள்; தமிழுக்கு மெய்ம்மையான தொண்டு செய்த பெருமையைப் பெறுங்கள். (அறிஞர்கள் முன்வந்து, உரிய சமயத்திலே உரிய செய்திகளை நினைவூட்ட வேண்டியது கடமை என்பதாலேயே இதை இப்போது விரிவாக எழுதினோம்; சிரமத்தைப் பொறுத்திடுங்கள்.

அன்புடன்

**முனைவர் சாலை இளந்திரையன்**

நிறுவாகத் தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்.



தெளிவாக அமைந்துள்ளன. எனவே அந்த அமைப்புப் புலப்படும் வண்ணம் ஏற்ற தாளத்தில் பாட வேண்டும் இதனை.

ஒருபொழுது மிருசரண நேசத் தேவைத் துணரேனே!

என உறுப்புத்தாளத்தில் பாடுவது பொருத்தம்.

*சீர்சி றக்கு மே னிப சேல் ப சேல் என*
*நூபு ரத்தி னோ சைக லீர் க லீர் என*
*சேர விட்ட தாள் கள்சி வேல் சிச வேல் என*
*வரு மா னார்* (திருப்புகழ், பழ முதிர்சோலை)

என்ற திருப்புகழ் மேற்காட்டியபடி நான்கு எட்டன் மட்டத் (ஆதி) தாளத்தில் பாடப்படுகிறது. இதனால் சொற்கள் நெருங்கியும் நீண்டும் ஒலிப்பதைக் காணலாம். இதனை இப்படியின்றி,

*சீர் சிறக் கு$^{5}$ மே னிப சேல்$^{0}$ ப சேல்$^{0}$ என*
*நூ புரத் தி னோ சைக லீர் க லீர் என*
*சே ரவிட் ட தாள் கள்சி வேல் சி வேல் என*

*வரு மா....$^{14}$ னார்$^{0}$*

என்று மூன்று துள்ளல்களை மூன்று ஐம்மைத் திருபுடை வட்டணையிலும் (கண்டதிருபுடை ஆவர்த்தனம்), தொங்காலை மட்டும் ஓர் எட்டன் மட்ட (ஆதிதாள) வட்டணையிலும் பாடினால் பொருத்தமாக இருக்கும்.

(அண்ணாமலை பல்கலைக்கழகப்பதிப்பில் (1952: 52 )இதன் தாளம் கண்ட திருபுடை என்றே உள்ளது ஆனால் தொங்கலுக்குத் தனித் தாளம் குறிக்கபட்டவில்லை)

### 4. பாடலில் அமைந்துள்ள தாள நடையை அறியாமை

*பொன்னுலவு சென்னிகுள நன்னகரண்ணாமலைதன்*
*புந்தியில்ம கிழ்ந்துநித்தம் நின்றவன் — முந்தி*
*வெந்திறல ரக்கர்களை வென்றவன் — மயில்*
*போலவேனலின் மீதுலாவுதி ராதமாதுமு னேகியே அடி*
*பூவையேவு னதுதஞ்சம் என்றவன்*
*மாவையே இனிதுமென்று தின்றவன்*

(அண்ணாமலையார் காவடிச்சிந்து)

இதை நான்மை நடையில் பாடுவதால் அதில் உள்ள 'போலவேனலின்' என்று வரும் முடுகியல் அடி அழகின்றிப் போகும். அதை மட்டும் எழுமையில் பாடலாம் அல்லது பாடல் முழுவதையும் எழுமைநடையில் பாடினால் சிறப்பாயிருக்கும். காரணம் இதன் முடுகியற்சீர் ஒவ்வொன்றிலும் ஏழு சந்த மாத்திரைகள் உள்ளன.

### தொடைநயம் தோன்றப் பாடத் தெரியாமை

ஒரு நாட்டிய அரங்கில் 'ஆடப்பயின்றது' என்ற எட்டன் மட்டத்தாள உருப்படியைப் பின் வருமாறு பாடக் கேட்டேன்:

ஆடப்ப $^{14}$யின்றது யா $^{0}$ரிடத் $^{0}$தில்
பொன்னம்பல வாண னே நடனம் (ஆட)

இந்தப் பாடலில் ஆட என்பதறகு மோனையாக அம்பல என்ற சொல் அமைக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்டபடி மோனை எழுத்துள்ள சொல்லை உள்ளடக்கிப் பாடுவதால் தொடை நலம் தோன்றாமல் போகிறது. ஆட என்ற சொல் தாளத்தின் தொடக்கத்தில் 3/4 இடத்தில் எடுக்கப்படுவது சிறப்பு. எனவே அதை

ஆடப்ப $^{14}$யின்றது யா ரிடத்தில் $^{0}$பொன்
அம்பல வா ண |னே நட னம் (ஆட)

எனப்பாடவேண்டும். பாடகர்கள் பலர்க்குப் பாடலின் எதுகை மோனை அமைப்புப் பற்றிச்

சிறிதும கவலையில்லை என்பதற்கு இது ஒரு சான்று. இசைப்பள்ளிகளில் எதுகை மோனை இயைபு முதலிய அடிப்படை இலக்கணங்களை யாவது கற்பிக்க வேண்டும்.

'நீபோய் அழைத்துவாடி' என்று ஒரு பாடல் உண்டு. அதன் தொடுப்பு

*நினைந்து நினை"ந்து நெஞ்சம் புண்"ணா"குதே*

என்று பாடப்படுகிறது. இதில் புண்ணாகுதே என்ற சொல் முதல் திருதத்தின் தட்டில் எடுத்துப் பாடப்படுகிறது. இதில் நினைந்து என்பதற்கு ஏற்ற மோனை இல்லை. அங்கே நெஞ்சம் என்ற சொல்வரவேண்டும். மோனைகள் இலகுவிலே திருதத்திலோ தட்டு விழும் இடத்தில் வருமாறு பாடுவதே தொடை நயம் தரும். எனவே அதை,

*நினைந்து "நினைந்து |நெஞ்ச "ம்புண் ண"ாகுதே*

என்று பாட வேண்டும்.

**இயல்துறையில் இசைத்தமிழ் அறிவுக்கு இடமளிக்காமையால் ஏற்பட்ட இழுக்குகள்**

1. இசைப்பாடல்களில் உருப்படிகள் எடுப்புத் தொடுப்பு முடிப்பு முதலியன தெளிவாகத் தெரியும்படி அச்சிடப் படுகின்றன. ஆனால் தேவாரம் திவ்வியப்பிரபந்தம் திருவாசகம் திருவருட்பா முதலிய இசைப் பாடல்கள் விருத்தப்பாக்களைப் போலவே சீர்பிரித்து அச்சிடப்படுகின்றன. காரணம் பதிப்பாளர்க்கு அவை விருத்தம்போல் தோன்றுவதும் இசைப்பாடல்கள் என அறிய இயலாமையுமே. 'பொன்னார் மேனியனே' என்ற சுந்தரர் தேவாரம்

*பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து*

*மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே*

*மன்னே மாமணியே மடிபாடியுள் மாணிக்கமே*

*அன்னே உன்னை யல்லால் இனி ஆரை நினைக் கேனே (சுந்தரர் தேவாரம் (திருப்பனந்தான்)*

என்று அச்சிடப்பட்டுள்ளது.

ஓதுவார்களால் பாடப்படும் முறையில் இப்பாடலை அச்சிட்டால்

*பொன்னார் மேனியனே — புலித்*
*தோலை அரைக்கசைத்து*
*மின்னார் செஞ்சடைமேல் — மிளிர்*
*கொன்றை அணிந்தவனே*
*மன்னே மாமணியே — மழ*
*பாடியுள் மாணிக்கமே*
*அன்னே உன்னையல்லால் — இனி*
*ஆரை நினைக்கேனே*

என்று இருக்கும். இதில் ஒவ்வோரடியிலும் தனிச் சொற்கள் பிரிந்திசைப்பதைக் காணலாம். இப்போது உள்ளமுறையில் தனிச்சொற்களும் சீர்களாக இணைத்து எழுதப்படுகின்றன. பதிப்பாளர்கள் இயல் தமிழில் அறிவுடையவர்கள். அவர்களுக்கு இசைத் தமிழ் பற்றிய அடிப்படைகளேனும் கற்பித்திருந்தால் இக்குறை ஏற்படுவாய்ப்பில்லை.

2. இசைப்பாடல்களை இயற்றுவோர் இயல்தமிழ் மட்டுமே கற்றவர்கள். இயல்தமிழ் யாப்பிலக்கண அறிவு கொண்டே இசைப்பாடல்களை எழுதிவிடுகின்றனர். இது பல தவறுகளுக்குக் காரணமாகின்றது.

உருப்படிகளில் எடுப்பில் உள்ள எதுகை தொடுப்பில் வர வேண்டும் இந்த அமைப்பைக்கூட அறியாமல் பலர் இசைப் பாடல்கள் எழுதி நூலாகவே வேளியிட்டுள்ளனர்.

**முடிவுகள்**

i)இசைக்கல்வி நிறுவனங்களின் பாடத் திட்டத்தில் மாணாக்கர்களுக்குத் தமிழிசைப் பாடல்களின் சந்த அமைப்பு முறையை அறியும் திறனை உண்டாக்கும் நோக்கில் பலவகையான இசைப் பாடல்களின் யாப்பிலக்கண அடிப்படைகளைச் சேர்க்க வேண்டும். இயற்றமிழ் யாப்பிலக்கணமும் ஓரளவு கற்பிக்க வேண்டும்.

ii) இயற்றமிழ்க் கல்வி நிறுவனங்களில் இசைத் தமிழ்ப் பாடல்களின் யாப்பிலக்கணங்களைக் கற்பிப்பதுடன், சந்த, வண்ண, சிந்துப் பாக்கள், உருப்படிகள் இயற்றும் பயிற்சியையும் அளித்தல் வேண்டும்.

iii)தேவாரம், திவ்வியப்பிரபநதம், திருவாசகம், திருப்புகழ், திருவருட்பா, பல்வகைச் சிந்து நூல்கள் உருப்படி நூல்கள் ஆகிய இசைத்தமி ழ்ப் பனுவல்களை இசையும் தமிழும் ஒருங்கு வல்ல அறிஞர்களைக் கொண்டு மீள்பார்வையிட்டு, உரிய இசைக்குறிப்புகளுடன் இசைப்பாடல் நூல்களாகப் பதிப்பிக்க வேண்டும்.



உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
1974







2








DURBAN




4








26


6


VIVEKANAN AMIL SCHOO
கோலாலம்பூர்


27-1-91



DANGAN PAVENTHAR BARATHITHASAR
VIVEKANANDA TAMIL SCHOOL - K.L. 27-1-1991
MALAYSIAN MOVEMENT FOR TAMIL CULTURE
CENTENARY CONFERENCE
KUALA LUMPUR

8






9















30158





12





13










இயக்கம்


முத்துமன்றம்










U N E S





U N E S


CULTURE
நாடு
CULTURE
17


18


உலகத் தமிழர் ஆராய்ச்சி நிலையம்
RESEARCH CENTRE FOR
INTERNATIONAL TAMIL STUDIES
"THAMILAHAM" KURUMBASIDDY EAST.
TELLIPPALAI.


பிரஞ்சுத்தமிழர் பேரவை
முதல் மாநாடு
இடம்: கம்பன் கலையரங்கம் புதுவை.
24,25.12.94
LA 1ere CONFERENCE DE
L'ASSOCIATION DES TAMOULS
DES PAYS FRANCOPHONES
வருக!


20


21



22
1330
1996



இயக்கம்
TAMIL CULTURE


PAVENTHAR BARATHITHASAR (TAHUNAN KE-100)
BARATHITHASAR CENTENARY CONFERENCE
NANDA TAMIL SCHOOL - K.L. 27-1-1991
MALAYSIAN MOVEMENT


உலகத் தமிழ்
MOVEMENT FOR TAMIL CULTURE




ANDAMANS



25










27


28

























பொருளாதாரக் கருத்தரங்கு







பெண்கள் பயிற்சிப் பட்டறை

32






33











NGAN KEBANGSAAN
YANG 4 ANJURAN PERSATUAN KESUSASTERAAN































4-வது உலகத் தமிழ்ப்
பண்பாட்டு மாநாடு










42








கொழும்பு தமிழ்ச்








































49






52











உ
ரீனா அச்சகம்
RPE
























Baggage
Pick-up
GO Trains
Trains GO
Subway
Métro
Royal York
Hotel
Hôtel
Royal York










61










63



















கொழும்பு தமிழ்ச் சங்கம்












68
















CAMBODIA
PHNOM PENH
JULIANA HOTEL
PHNOM PENH




இவ் வைந்தாண்டுகளாக [1933 முதல் 1937 வரை] நாடகம் நடித்து நம்மவர்களைக் குதூகலப்படுத்திய ஊக்கமும் உற்சாகமும் மிகுந்த இளைஞர்கள்.


71

தமிழ்ப் பண்பாட்டு இயக்கம


# பட விளக்கம்

1.

2. எம்ஜி''ஆர் -1977

3. தமிழிசைக் கருவிகள்

4. பழந்தமிழ் பரதம்

5. நடனம் - கதகளி

6. தாய்லாந்து - கம்பொடியா பரதக்காட்சி

7.

8. சிந்தையள்ளும் விந்தை ஓவியங்கள்

9.

10. பெரும்பாறைச் சிற்பங்கள் - தமிழ்நாடு

11. கல்லோவியப் புடைச் சிற்பங்கள் வரலாறுகளைக் காட்டகின்றன.

12. இந்தோனேசியா - சாவாவில் 10ஆம் நூற்றாண்டு சிவன்-பிரமன் கோயில்கள்.

13.

14.

15. பாரிஸ் யூனொஸ்கோவில் NGO அதிகாரியை உ.த.ப.இ. பேராளர் வீ. தேவகுமார் சந்தித்தக் காட்சி -1986. பாங்காக் காட்சிகளில் நாகராசா, அ. இராசு, மங்கள ராயர், சுந்தரராசு.

16. பாரிசில் யூனெசுக்கோ தலைவர் திரு. இராவ் அவர்களைஉ.த.ப.இ. ஐரோப்பியத் தலைவர்கள் சந்தித்தக் காட்சிகள்-1998.

17. மலேசியக் காட்சிகள்: மாலையுடன் நிற்பவர் அமரர் மாசி அண்ணாமலை; கீழே அமர்ந்திருப்பவர் வலம், அமரர் பாவலர் அபு. திருமாலனார். வலப் படத்தில் (1971) அமரர் பாவலரேறு பெருஞ் சித்திரனார். பொன்னி ந. தியாகராசன், மாசி, சுவாமி விஞ்ஞானநந்தா, வீரப்பனார்.

18. அமரர் பாவலர் குறிஞ்சிக் குமரனார் பேருரை ஆற்றுகிறார்.

19.

20. உ.த.ப.இ. பலநாட்டுப் பேராளர்கள். தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா, புதுச்சேரி, சேலம், சுவிற்சர்லாந்து, தமிழீழம், பெங்களூர்.

21. உ.த.ப.இ. வெள்ளிவிழாவில் கலந்து கொள்ளும் பன்னாட்டுப் பேராளர்கள்.

22.

23.

24. தாய்லாந்திலுள்ள குவைத் ஆற்று மரணத்தொடர் வண்டிப் பாதை; சென்னை - அந்தமான் பயணக் கப்பல்; சேதுக்கால் வாயில் கப்பல் புகும்காட்சி.

25. இந்தோனேசிய - பாலித்தீவில் பரத நடன - நாட்டியக் கதைக் காட்சிகள்.

26. தாய்லாந்து-பாங்காக்பரதநாட்டியப் பண்பாட்டுக் கோலங்கள்.

27. அமரர் மா. தங்கணமுத்துவுடன் வீரப்பன் (1989இல் மோரிசியஸ் தமிழர் நினைவுத் தூணருகில்; மேடானில் தலைவர் மாமணியத்துடன் வீரப்பன் (1997)

28. தஞ்சாவூரில் இரு காட்சிகள் (1995)

29. மேலே திராவிடமணி பெரியார் நல்லதம்பிக்கு வீரப்பனார்பொன்னாடைபோர்த்துகிறார். மலேசிய அமைச்சர் சாமிவேலு, 'உலகத் தமிழர்' நூல் வழங்குகிறார்.

30. மலேசிய டாக்டர் டத்தின் ஸ்ரீ இந்திராணி சாமி வேலுவிடமிருந்து இராமன் திருக்குறள் பெறுகிறார். பிரெஞ்சு அறிஞர் துரைசாமி சிறப்புரை ஆற்றுகிறார். குறிஞ்சிக் குமரனுடன் மு. மணிவெள்ளையன்.

31. மலேசியா வந்திருந்த இளம்பிறை எம்.ஏ. ரஹ்மான் சை. பீர் முகம்மதுவுடன் காணப்படுகிறார். பண்பாட்டுக் கூட்டத்தில் எண்மர். சங்கொலி சோலை இருசன் பேசுகிறார்.

32. மலேசியாவில் இலாபு செம்பனைத் தோட்டத் திருவிழா காட்சிகள் (கீழே நிற்பவர் வீர. மதுரகவி) நடுவில் ஆடிப் பதினெட்டாம் நாளன்று மஞ்சள் ஏடுகள் முதலிய தீமைப்படங்கள் தீமூட்டப் பட்டன. இது மோரிப் கடலில் நடத்தப்பட்டது.

33. குரும்பசிட்டிஇரா.கனகரத்தினம் உரை யாற்றுகிறார் மலேசியாவில் நூற்காட்சி தமிழறிஞர்களும் நியூசிலாந்து வெள்ளிங்டனில் ஆய்வாளர் திருமதி கலையரசி உரையாற்றுகிறார்.

34. திரு.இராசதுரையுடன் வீரப்பன், கோ. நடேசன், வே.இராசு (மாநாட்டு வரவேற்பு- 1993)

35. பீஜி தமிழறிஞர் எம். ஆர். பாலகணபதியுடன், ஆக்லந்தில் வீரப்பன். நியூசிலாந்துத் தமிழர்கள் மற்றும் அகதிகளின் மெல்பர்ன் குடியிருப்பு. (...-1988)

36. கூட்டுறவுக் காவலரும், வள்ளலுமான டான்ஸ்ரீ சோமசுந்தரம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி, மாலை சூட்டி, பரிசளிக்கும் (1987) காட்சி.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டுக்கு வந்த அயலகப் பேராளர்கள்.

37. சுவிட்சர்லாந்து பெர்னில் நடந்த ஈழத்தமிழர் எழுச்சி மாநாட்டில் இடமிருந்து வலம். பொன். முருகவேள், த.இராசன், கமலநாதன், ம.மனோகரன், தனபாலசுந்தரம், சுவிஸ் செயலர், கணேசலிங்கம், ஒரு புது மணமக்கள்.

38. புதுச்சேரியில் முன்னாள் அமைச்சர் இரா. மணி மாறனுக்கு அருகில் வீரப்பனார் தம் துணைவி கு.நாகம்மைக்குப் பொன்னாடை அணிவிக்கிறார். கீழே ஒரு மலேசிய மாநாட்டில் நால்வர்.

39. மலேசிய கேமரன் மலைப் பயணத்தில் உள்நாட்டு, வெளிநாட்டுப் பேராளர்கள், ஒருங்கிணைந்த காட்சி.

கீழே திருக்குறள் ஓதும் மாணவியர், சுங்கைத் திங்கிமேரி தோட்டம்.

40. கீழே, பாங்காக் ஆசிய தொழில் நுட்பக் கல்லூரியின் மாணவர்களுடன், மங்களராயரும் வீரப்பனும்.

41. தாய்லாந்து உ.த.ப.இ. தூதர் சங்கர மணியத்துக்கு மும்மணி பட்டயம் வழங்கினார். அங்குள்ள ஒரு சிவனாலயம்; அரசவிழாவில் திருப்பாவை - திருவெம்பாவை ஓதி வரும் வாமதேவ முனிவர் இல்லத்தில் நால்வர்.

42. கீழே, நியூசிலாந்து ஆக்லந்தில் ஓர் அகதிக் குடும்பத்துடன் வீரப்பனார்(1992). மேலே, 1996இல் கனடா தொரந்தோவில் கே.பி. கனக்ஸ், வீரப்பன், இராசகுமார், காவேரிநாதன்.

43. செர்மணி லவகுசன் நகரின் தந்தை குத்துவிளக் கேற்றியபோது, திரு.வை.சத்தியகுமரன் இருக்கிறார்.

44. பர்மாவில் யாங்கூன், பகோ, பாகான், மண்டலைக் காட்சிகள்.

45. மியாமாவில்(யாங்கூன்) ஐயா டி.எஸ்.மணி, நல்ல காலம் ஆசிரியர் சுப்பிரமணியம், வீரப்பன், ரெ. மாரி முத்து,(நடுவில்) பாலன், யாதவன், வ.க. வல்லமைச்சன். (கீழே) மண்டலை மகாமுனி கோயிலில் ஐராவதம் என்ற மூன்று தலை யானைச் சிற்பம் (கம்பொடியா செப்புச்சிற்பம்)

46. தாய்லாந்து அரசரின் நீர் ஊர்வல அன்னவாகனம். நடுவில் பொருநை நாட்டரசரின் அரண்மனைப் படகும், அவரது பொற்கோபுரம் பள்ளிவாசலும்.

47. அன்னை வேளாங்கண்ணி ஆலயமும், கோயிலும், பாலசிவலிங்கம் குடும்பத்தினர் (புதுச்சேரி)

48. செஞ்சிக் கோட்டையிலுள்ள மர்மமாடிக் கோபுரமும், மாமல்லபுரக் கற்கோயில்களும்.

49. கங்கைகண்ட சோழபுரத்தில் இராசேந்திர சோழன் கட்டிய கோயில், சுவரருகில் நாகம்மை, மதுரகவி, கதிர் முத்தையன். மற்ற மாமல்லைக் கடற்கோயில் (7ஆம் நூற்றாண்டு)

50. தஞ்சைப் பெரிய கோயிலும், அதில் ஊழிக் கூத்தாடும் சிவனாரும். (10ஆம் நூற்றாண்டுச் சிற்பம்)

51. சேலத்தில் 1985 இல் நாகம்மை - வீரப்பன், வை.நாராயணன், க.சக்கரபாணி என்ற வீரசோழன்.

52. கோலாலம்பூரில் நால்வர்: வீரப்பனார், க.ப.அறவாணன், இரெ.ஜெயதேவன், மொரிசியசு. அரு. புட்பரதம்.

53. இந்தோனேசிய மேடான் நகரில் வ.நித்தியானந்தன், வாமதேவன் மற்றும் இருவர்.

54. மியாம்மாவில் திருக்குறள் தங்கராசன், மூழ்மீன் கந்தசாமி மற்றும் பலர் உள்ள நான்கு காட்சிகள்.

55. சிட்னி (ஆத்திரேலியா)யில் நடிகர் சிவக்குமார், பாலேந்திரா, டாக்டர்; சுவிசில் மனோகரன் நிற்கிறார். கலாநிதி ந.ஸ்ரீஸ்கந்தராசவுக் கருகில் அவரது மகன் சஞ்சயன். டர்பனில் அன்பனுடன் இருவர். நியூசிலாந்தில் டாக்டர் தம்பதியர்(மகேசன் ராசநாதன்) மலேசியாவில் ந. பச்சையப்பன், ச.சாமிவேலர், தியாகராசன்.

56. ரியூனியன் வீ. குமாரசாமி மு. அன்பன் (1989) கதிர்வேல் சொர்ணம், தங்கண முத்து. கீழே அன்பன், அருட்செல்வர் நா. மகாலிங்கம், வேலாயுதம், தங்கணமுத்து.

57. தஞ்சைத் தமிழாராய்ச்சி மாநாட்டுக் கோபுரக் காட்சி. நடுவில் வீரப்பன், இளம்பிறை ரஹ்மான, கவிஞர் அம்பிகைபாகர் (பாப்புவா நியூகினி) முல்லை வாணன், தென்மார்க் தருமகுலசிங்கம்(சென்னை). கீழ்: பொதினி, காவேரிநாதன், பொன்ஜேக்கப், நடேசன் (கோலாலம்பூர்)

58. பாரிஸ்-சுவிஸ் காட்சிப் படங்கள்.

59. செருமணியில் நடந்த எழுச்சி விழாவில் நன்மங்கலம் பெறுகிறவர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன். அருகில் முனைவர் இரா. சனார்த்தனம். நடுவில் கணேசலிங்கத்தின் அருகில் இருவர்.

60. நடுவில் தென்மார்க்கில் நடந்த ஈழத் தமிழர் எழுச்சி மாநாட்டில், கவிவேழம் பாரதிபாலன் (2 ஆவது படம்) தலைமையில் ஐவர்காட்சி; சுவிஸ் மாநாட்டில் பங்கு பற்றிய திராவிடர் கழகப் பொதுச்செயலர் கி.வீரமணியுடன் இருவர்.

61. பிரான்சு - தூணி நகரமன்றத்திற்கு வந்து, அந்நகரத் தந்தையுடன் பேசுகிறவர் இங்கிலாந்து பிலிப்ஸ் இளவரசர். அந்நகர மன்ற உறுப்பினர் அலன் ஆனந்தன் நடுவில் காணப்படுகிறார். கீழே கனடா துரந்தோ மாநகர முன்றிலில் வீரப்பன்,மனோகரன் (1996).

62. மகள் இசைக் கருவி மீட்டி இசையெழுப்பிய போது, அலன் ஆனந்தன் தம்பதியரும் மூத்த மகளும்.

சப்பான் கண்ணன் பழங்கோயிலில் வீரப்பனார்.

63. பெர்லினில் கணேசலிங்கம், அந் நகர நண்பர், அமரர் நீதியரசர் இராமலிங்கம், அவரதுதுணைவி, ஆசிரியை ஜமுனா. கீழே இராமலிங்கனார், புதுவை வயி.நாராயணசாமி மற்றும் அவர்களது நண்பர்கள்.

64. கம்பொடியா ஆங்கூர் கோயில் மேற்கோபுரக் காட்சி. இந்தோசீனாவின் சைகோன் தண்டாயுதபாணி கோயில்; ஓச்மின் சிட்டியில் தலைவர் ஓச்மின் சிலைக்கு முன் ஆய்வாளர்.

65 மைசூர் அரண்மனையின் இரு அற்புத உள்காட்சிகள்.

66. கருங்கற்பாறைகளில், பழந்தமிழரால் செதுக்கப் பட்ட புடையோவியக் காட்சிகள். அருமையான அரும்பொருட்கலைகள் இவை.

67. திருச்சி திருவரங்கக் கோயிலின் அற்புதக் கற்பனைக் கலைத்திறன் உத்திகளால் இன்றும் சிற்பச் செதுக்கோவியம் வளர்கிறது என்பதற்கு மாபெரும் சான்று இக்கோயிலின் இருதோற்றம்.

68. திருவண்ணாமலைத் திருக்கோயில்களும், அம் மலை சூழ்ந்த முகப்புக் காட்சிகளும். ஐம்பூதத்தின் ஞாயிற்றொளியைப் பிம்பமாக ஒளிரும் முழு நிலவின் கார் தவழும் கார்த்திகைத் தீபத்திருநாள்.

69. கம்பொடியாவில் பழங்காலத்தில் புடைச் சிற்பக் கதைகளாகக் காட்சிகளின் தொன்மையே இது. நாம் பெண் (புனம்பென்) பல்லவப் பேரரசன் முகக் காட்சியின் பேருருவம் இது.

70.

71. 60 ஆண்டுகளுக்கு முன் மலேசிய காப்பார் மெத்தடிஸ் தமிழ்ப்பள்ளியின் தோற்மே இது.

72. தமிழகம் - கடலூர் உ.த.ப.இ. உறுப்பினர்கள்.

CST 449420 | TNGST 3340941

**சென்னையில் நடந்திடும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஏழாவது மாநாடு வெள்ளிவிழா மாநாடு வெற்றி வாகை சூடிட வாழ்த்துக்கள்**

# லட்சுமி கிழங்கு அரவை ஆலை

# LAKSHMI STARCH MILLS

**152/1-பி, குமரக்கோட்டம்**
**பட்டுக்கோணாம்பட்டி - 636 906**
**பாப்பிரெட்டி பட்டி வட்டம்,**
**தருமபுரி மாவட்டம்**

**தொலைபேசி**

**ஆலை : 04346 - 48391**
**இல்லம் : 0427 - 419288**

**மரவள்ளிக் கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள்**

❖❖❖❖❖

**எங்களிடம் முதல்தரமான சவ்வரிசி எந்த நேரத்திலும் கிடைக்கும்**

# பொன் கணபதி
# P.J.K.

எரோசா மனுபெக்சரிங் நிர்வாகி


H/p : 012-3091104

PONN GANAPATHY

**ANBU AUTO SPAREPARTS (M) SDN BHD**

41, Lorong Selampit,
18A, Taman Klang Jaya,
41200 Klang, Selangor D.E.,
Tel.: 03-3241004/5/6 Fax : 03-3241006

# ஹர்ஷினி டிரேடிங்
# HAARSHINNI TRADING



இறை வழி பாட்டுக்குரிய பொருட்களும், கருங்கல் சிலை உறுமி, உடுக்கை, தவில், வீணை, மிருதங்கம், மாலைகள் மற்றும் யோகப் பொருட்கள் இவ்விடத்தில் கிடைக்கும். சில்லறை மற்றும் மொத்த வியாபாரம்

அணுக வேண்டிய முகவரி :

MR. CHANDRASEGARAN
No.7883, Jalan Teluk Batu 1,
Batu 4½, Jalan Kebun
Seksyen 36, 40470 Shah Alam
Selangor Darul Ehsan
H/p : 012-3881422
H/p : 012-3095351, Tel : 03-51623492

# AS CURRY HOUSE
## இந்திய உணவகம்

*Specialised Restaurant, Catering, Home Food Supply & etc.*



**A. MATHIYALAGAN**
(Marketing Executive)

**Res.:** No.5, Jajan 8, Tamam Eng Ann
41050 Klang, Selangor Darul Ehsan

**Off.:** 20, Jalan Marni 25/61
Taman Sri Muda, Shah Alam 40400
Selangor Darul Ehsan
H/p : 012-3135467

# சரிகாட் தனலட்சுமி
# SYARIKAT THANALAKSHMY
000550955-V

- *Dealing with CD, VCD, AUDIO TAPES, VIDEO TAPES*
- *All Types of Tamil Books & Magazines*

**K. INBAR RAJU**

No.27, Jalan Tengku Kelana,
41000 Klang,
Selangor Darul Ehsan
Tel : 03-3343146
Fax : 03-3245630

# பெ. சாமியப்பன்
# P. SAMIAPPAN

Syarikat Ros Dedai Runcit
Batu 4¾,Lot 10435
Kampong Jawa, Klang
Tel.: 3216652

## பாலமுருகன் உணவகம்

22, கம்போங் சிரி பூங்கா
தம்பாகான் சுங்கை பூலோ
தொலைபேசி : 6574914

சுங்கைபூலோ வட்டாரத்தில்
கம்போங் சிரிபூங்காவில்
அறுசுவை உணவிற்கு
நீங்கள் வரவேண்டியது

**பாலமுருகன் உணவகம்**

## Meselah Hardware Trading


**Perniagaan Logam-Logam**

மெசிலா ஆர்ட்வே டிரடிங்

**ஆறுமுகம்**
**த/பெ தங்கவேலு**
No.1, Batu 3 ¾, Jakab Jg, Jawa,
Kelang, Selangor Darul Ehasan
Tel : 3210728

## SURIA VIDEO CENTRE

No.58, Jalan 25/66
**TAMAN SRIMUDA**


**Saves and tape renting**
**V.C.D. & TV - Video Repairs**

## MEGANA TWO TRADING

THAMIL THENDRAL

No.52, Jalan Ria 25/62,
40400 Taman Sri Muda,
Shah Alam, Selangor Darul Ehsan
Tel : 03-5220641

**வீடியோ சீடி, ஒலிநாடா,**
**பயணப்பைகள்,**
**முக ஒப்பனைப் பொருட்கள்,**
**விளையாட்டு சாமான்கள்**
**மற்றும்**
**வீட்டுத் தளவாடப் பொருட்கள்**



# ஐஸ்வர்யா

# ISWARYA TEXTILE

*Importers of Handlooms &*
*Textiles Specialist in Wedding Pure Silk Sarees*

***R. SIVANYANAM***
**Proprietor**

**No. 89, Jalan Tengku Kelana, 41000 Klang,**
**Selangor Darul Ehsan. Tel : 03-3346433**

# REVATHI ENTERPRISE

Loory Transport & Second Hand Goods Scrap Metal Etc.,

# ரேவதி எண்டர்பெரைஸ்


பழைய இரும்பு சாமான்கள் வாங்குவது விற்பது மற்றும் வீட்டு
உடைமைகள் மாற்று வீட்டுக்கு எடுத்துச் செல்வது

*Mr. Ayappan*

No. 362 Kampung Rimba Jaya, Padang Jawa
41 800 KLANG, Selangor
Darul Ehshan
கை.தொ.பேசி:019–3830441
019–220442

# வணக்கம்

# WELCOME TO SINGAPORE



**EVS Publishers**
16, cuff Road, singapore 209727
Tel : 2915334. Fax : 2952105
**தமிழ்ப் புத்தக நிலையம்**
Tamil Book Specialist
Email : address :evsbk@sing.net.com.sq

அருந்தி மகிழுங்கள்...

# அட்லஸ் லவ்-ஓ ®

புத்துணர்ச்சியூட்டும்

## லவ்-ஓ

தயாரிப்பாளர்கள் :

லவ்ஜி. ஏ.கே. நாகராஜன்
தி சேலம் லவ் - ஓ பாட்லர்ஸ்
121, S.V.R. காலனி
தாதகாப்பட்டி,சேலம் – 636 006
போன் : 467797 / 67797

**WITH BEST COMPLIMENTS**

*from*

# VEENUS CATTLE FEED

79, SALEM CO-OPERATIVE INDUSTRIAL ESTATE
UDDAYARPATTY, SALEM - 636 140
TAMIL NADU

TNGST 2700981 CST 410255

TELEPHONE CODE : OFF : 0427 / 424 0348
RES : 0427 / 812439

துணிமணிகள், காலணிகள்,
சாதனப் பொருட்கள் யாவும்
இங்கே கிடைக்கும்!

**SRI MUDA SUPER STORE**

34, Jalan Fae dah 25/86
No. 7 Jalan Mewah 25/63

**Head Office**
Taman Srimuda, Shah Alam



உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க 7 வது மாநாடு
சிறப்புற எங்களின் இனிய வாழ்த்துகள்!

**PASARAYA SURYA SDN. BHD.**

**K. Subarmaniam**
Managing Director
010-7767759

*No. 1746/47/48, Jalan Sri Putri - 4,*
*Taman Putri Kulai, 81100 Johor.*
*Tel : 07-662 3403 / 019 - 7767759*

எங்களிடம் வீட்டிற்குத் தேவையான
அனைத்து மளிகை சாமான்களும் பிளாஸ்டிக், உலோக,
இயந்திர சாமான்களும் அழகு சாதனங்களும் மற்றும் அன்றாடத்
தேவைக்குரிய அனைத்தும் நியாய விலையில் கிடைக்கும்.
இன்றே எங்களை நாடுங்கள் — நன்றி!

# பயணம்

திங்கள் ஏடு

ஆசிரியர் மு. அந்தாலனார்

தமிழியல், இதழியல், மண்ணியல், மாந்தவியல், பகுத்தறிவியல், வரலாற்றியல், வேளாண்மையியல், அறிவியல், கல்வியியல், பெண்ணியம், மனித உரிமையியல், தமிழ் ஈழ விடுதலை அனைத்துத் துறைகளிலும் ஆழமாக ஆய்ந்து அறிஞர்களின் கருத்தோவியங்களை படைத்திடும் பைந்தமிழ் ஏடு!

●

தமிழனின் போர்க்களத்தில் போர்வாளாகவும் தமிழைக் காப்பாற்றும் கேடயமாகவும் பார்ப்பனீயத்தை எதிர்க்கும் எரியீட்டியாகவும் தமிழ் மண்ணில் இலட்சியப் பயணம் நடந்திடும் நற்றமிழ் ஏடு!

●

தமிழர்களே! தமிழின மொழி உணர்வுகள் ஊட்டிடும் 'பயணம்' ஏட்டினை வாங்கிப் படியுங்கள். படித்த கருத்துக்களை பாமரத் தமிழனிடம் பறைசாற்றுங்கள்.

ஆண்டிற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.100/–
புரவலர் நன்கொடை ரூ.1000/–

தொடர்பு முகவரி :

ஆசிரியர் : பயணம், திங்களேடு
க. அளம்பளம் அஞ்சல், விழுப்புரம் மாவட்டம் – 606 202
மு.அந்தாலனார்
ஆசிரியர் – பயணம், 11 மேட்டு மாரியம்மன் கோயில் தெரு
சேலம் – 636 001. தொலைபேசி : 416295

எல்லாவிதமான
மளிகைப் பொருட்களை
வாங்க
நீங்கள் நாட வேண்டிய
சிறந்த இடம்

KEDAI RUNCIT ROS
Batu 4¾, Lot 10436
Kampong Jawa
Klang
Tel 51623848

**RESTORAN MOHANA**

கிள்ளான் நகரில்
கடந்த முப்பது
வருடத்துக்குமேலாக
நடத்தப்பட்டு வரும்

**மோகனா**
**அறுசுவை உணவகம்**

No.119, Jalan Kelana,
41000 Klang,
Selangor Darul Ehsan,
West Malaysia
Tel.: 03-3327659

**KELEI WELDING WORKS**
**கலை வெல்டிங் வோர்க்ஸ்**

*Specialised in Welding Works, Swing, Grill, Iron Gates, Fencing, Awning, Antique Gates and Various type of iron works.*

**M. KRISHNAMURTHY**
No.3, Lot 1281 Batu 8,
Bukit Kemuning,
42450 Klang,
Selangor Darul Ehsan
Tel : 03-5214624
Fax : 03-5218392

**"Resound that our - Life and our Richness is shining Tamil"**
*- Baradhithasan*

**Speak Tamil -**
**It's your mother Tongue!**

**Read Tamil -**
**It's your Ancestor's Languages**

**Write Tamil -**
**It's your duty being A Tamil**

*IMTC-HQ.*

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

வெள்ளி விழா மாநாடு வெற்றிபெற வாழ்த்துகிறோம் !

இனிப்பு உலகின் மணிமகுடம்

**திருநெல்வேலி இனிப்பகம்**

எண். கஅஅ, நா.சு.கி. சாலை
ஆழ்வார் திருநகர், சென்னை – 87.

**க.ஆ. வீரசிங்கம்**

**Thirunelveli Halwa Stall**

**K.A. Veerasingam**

No.188, N.S.K. Road, (Arcot Road)
Azhwar Thirunagar
Chennai - 600 087, Ph : 4815288



எல்லாவிதமான மளிகைப் பொருட்கள்
எங்கள் பேரங்காடியில் கிடைக்கும்!

**PASAR RAYA PATMAH**

Lot 1592 Batu 3 1/4
Kampung Jawa, Klang, Selangor
Tel : 3344873

**PASAR MINI PATMAH**

No. 3. Ss 13/1G Tingat Bawah
Subang Jaya, Selangor,
Tel 7331758

**PASAR RAYA PATMAH**

No. 41A, Jalan Dato Yusuf Shahbudin 28
Taman Sentosa. KLANG. Tel : 3105220

KAIN PUTIH
MENJADI PUTIH
BERCERAH

# NILA BERTITIK CAP SURYA




எங்களின் தரம்
உங்களின் நம்பிக்கை ....

- Sistem mikro ultra super yang terkandung didalamnya merebak secara menyeleruh untuk memutih cerahkan kaindengan ketiadaan bintik - bintik

- kain sentiasa berputih cerah tanpa menghilangkan kecerahannya

- வெள்ளைத் துணிகளை
சூப்பர் வெண்மையாக்க
**சூர்யா**
சொட்டு நீலம்

- சூப்பர் அல்ட்ரா மைக்ரோசிஸ்டம் இதில் உள்ளதால் ஒரே சீராக பரவி துணிகளை பளிச்சிடும் வெண்மையாக்கும் (திட்டுதிட்டாக பரவாமல் தடுக்கும்)

- துணிகளின் வெண்மை மங்கிவிடாமல் எப்போதும் வெண்மையாக வைத்திருக்கும்

**K. PERIASAMY**
Managing Director
019 - 7767759

Imported & Marketed bv :

**RUITA SDN. BHD.**

81000 Kulai, Johor, Tel : 6621403, Tel / Fax 6631481

# நல்வாழ்த்துகள் !



## மயில் பயண நிறுவனம்

✤ உலகெங்கும் உங்கள்
உல்லாசச் சுற்றுலாவுக்கு
எங்கள் பயண நிறுவனம்
உங்களுக்கு உதவியாகவும்
உபயோகமாகவும்
இருக்கும்✤

## PEACOCK TRAVEL & TOUR
**Sdn.Bhd.**

12-A, TingKat Satu, Jalan Tengku Diauddin
41000 KLANG, Selangor Darul Ehsan
Tel.: **03-3332391-3312036**
Fax : **03-3312036** H/P **010-3350179**

**P. BASKARAN**
(Marketing Manager)

உலக அமைதி ஆண்டு
2000

For a Culture of
Peace and Non Violence

2000 INTERNATIONAL YEAR
FOR THE CULTURE OF PEACE

UNESCO



உ.த.ப. இன் வெள்ளிவிழாவும் ஏழாவது உலக மகாநாடும்
சிறப்புடன் வெற்றிபெற வாழ்த்துகிறோம்

விக்னா கல்வி நிறுவனம்

Vicknaa Tuition Centre
Jaffna

யாழ் நகரில் இயங்கி வரும் முன்னணிக் கல்வி நிறுவனம் நமதே.


உரிமையாளர் : மு. ஜெயந்தி குமார்

52, ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம், இலங்கை

52, STANLEY ROAD, JAFFNA, SRI LANKA

# திருக்குறள் புரவலர்



# A. RAMAN

**<u>OFFICE :</u>**
**No.119D, 2nd FLOOR,**
**BT, 31/2, JALAN KLANG LAMA**
**5800 KUALA LUMPUR**

## திருக்குறள் புரவலர் ஆகுங்கள்

உலகளாவிய திருக்குறள் நெறிப் பரப்புநர் ஆயிரம் பேர்களில் நீங்களும் ஒருவராக ஆகுங்கள். உங்களுக்குப் பின்னால் உங்களின் புகழ் அழியாதிருக்க திருக்குறள் புரவலர் நினைவு மலரில் நீங்களும் இடம் பெறுங்கள்!

திருக்குறள் திருப்பணியே பிறவிப் பயனாக கருதுங்கள்.

*தொடர்புக்கு :*

Reg. No. JM 0126264-U
GPO Box 12821, 50470 Kuala Lumpur
Office Address : Tamizh Panbaham, 198-B, 2nd Floor,
Jalan Tun Sambanthan, Brickfields, 50470 Kuala lUmbur
Tel.: **03-2723772**

உலகத் தமிழ்ப் பண்பாட்டு 7 ஆவது
மாநாடு சிறப்புற எங்களின் இனிய வாழ்த்துகள்!

## Aruna Trading

*Monanur Road,*
*Namakkal District*
*Tamil. Nadu*

Manufacturor & Sole Agent for Insesce Sticks.
*Nila Surya, Surya Bleach, (Import & Export)*

## Mr. K. Arunasalam

*Managing Director*

*Tel No: 04 2865 7146*
*- 0428 63 2306*



# INTAMM

ht tp : // www. intamm.com

International Tamils Power Base

உலகத் தமிழ்ப் பேராற்றல் தளம்

**Head Office:**
INTAMM TRADE LINK
1C, 1st Floor, JP Towers
Nungambakkam High Road
Chennai - 600 034, Tamil Nadu, India
Tel : 91 44 927 5639, 91 44 823 6473
E-mail : info@intamm.com


**Principal Office:**
251-1, 1st Floor, Jln Tun Sambanthan,
Brickfields, 50470 Kuala Lumpur
MALAYSIA
Tel : 03-272 1262 Fax : 03-272 1260
Email : intamm@po.jaring.my

# பொருளுதவிச் சங்கம்

கோலாலும்பூர் தமிழர் இறப்புப் பொருளுதவிச் சங்கத்தின்
32ஆம் ஆண்டு பொதுக்கூட்டம் சங்கத்தின் தலைவர்
**திரு. கோ. நடேசன்** தலைமையில் **20.6.1999** ஞாயிற்றுக் கிழமை
செந்நூல் தமிழ்ப்பள்ளியில் நடைபெற்றது. நூற்றுக்கு மேற்பட்ட அங்கத்தினர்கள்
கலந்து சிறப்பித்தார்கள்.

சிலாங்கூர் மாநில இந்து சங்கத்தின் தலைவர் **திரு. கண்ணனாத்தும்,**
சங்கத்தின் சட்ட ஆலோசகர் **திரு. வி. பசுபதியும்,**
சங்கத்தின் வளர்ச்சி பற்றி சிறப்புரை ஆற்றினார்கள்.

**திரு. வி. சண்முகம்** பொறுப்பிலிருந்து விலகியதால், **1999–2001** ஆம் ஆண்டுக்கு
பொருளாளராக திரு. **எம்.பி. சுந்தரசெல்வம்** கூட்டத்தில் ஏகமனதாக
**தேர்ந்தெடுக்கப்பட்டார்.**



படத்தில் தலைவர் **திரு. ஜி. நடேசன்,** துணைத் தலைவர் இ. கோபால் பி.பி.என்.,
உதவித் தலைவர் கே. பெருமாள், செயலாளர் எம்.பி. நாதன், துணைச் செயலாளர்
**எஸ். தமிழ் அரசு,** பொருளாளர் **எம்.பி. சுந்தரசெல்வம்** துணைப் பொருளாளர்
**கே. ஜெயராமன்**

நிர்வாக உறுப்பினர்கள்: கே. ராமசாமி, கு. பவித்திரன்,
**எம்.வீ. சிவலிங்கம், டி. ராமசாமி, பி. முருகன், ஐ. வத்துமலை, எஸ். சுப்பையா,**
**பி.ஜே.கே.எஸ். ஜெயராணி, வீ. சண்முகம்**

உட்கணக்காய்வாளர்கள் : **பி.எஸ்.தம்பிராஜா** பி.பி.என்., ஏ. அற்புதசாமி
சட்ட ஆலோசகர்: **வி. பசுபதி.**

அறுசுவை உணவுக்கு
அருமையான இடம்

Restoran
INDRA VINDRA

RAVICHANDRAN

**SHOP :**
No. 32 Jalan Kemuning - 2.
Taman Bunga Indah,
Seksyen 32, 40000 Shah Alam,
Selangor Darul Ehsan
Tel : 03 - 5225875

**KEDAI RUNCIT**
**PALANI**

**பழனி ஸ்டோர்**

No.27, Jalan 25/85
Srimuda
Shah Alam
Selangor

எல்லா விதமான மளிகைப் பொருட்கள்
இங்கே கிடைக்கும்!

# ஸ்ரீதேவி உணவகம்

# RESTAURAN SRI DEVI


No. 15, Jalan 25/85,

Taman Srimuda, 40000 Shah Alam Selangor



Mr. Peter Johnsan

Tel : H.P. 019-3660986



**சைவ அசைவ அறுசுவை உணவுக்கு**

**நீங்கள் நாட வேண்டிய சிறந்த உணவகம்.**

---

மக்கள் சேவையில் மகத்தான 85 ஆண்டுகள்
நிறைவு பெற்ற ஸ்தாபனம்

# Manonmoney Vilas Sdn. Bhd

Book Sellers and Publishers

91, Medan Bunus, Off Jalan Masjid India

50100 Kuala Lumpur. Talipon No. 03-2926596

எங்களிடம் பாலர்களுக்கு வேண்டிய பள்ளிக் கூட புத்தகங்கள்.
பயிற்சிப் புத்தகங்கள், மற்றும் கோயில் விக்ரகங்கள்.
பஞ்சலோகச் சிலைகள் மற்றும்

கோயிலுக்கு வேண்டிய பொருள்கள் கிடைக்கும்

**KOMATHI VILAS RESTAURANT**
**கோமதி விலாஸ் உணவகம்**
**No. 25, Jalan Batu Tiga,**
**41300 Klang, Selangor Darul Ehsan,**
**Tel : 03 - 3413586**

Specialised in
South Indian Food

***V. Jayaraman***
**Director**

**KOMATHI VILAS RESTAURANT**
**(M) SDN. BHD.**
**கோமதி விலாஸ் உணவகம்**
**(ம) சென். பெர்.**
**No. 36, Jalan Batu Tiga, 41300 Klang,**
**Selangor Darul Ehsan**
**Tel : 03-3413586**

# பூங்கா பதிப்பகம்
## POONGA PUBLICATIONS

***Book Publishing, Wedding Cards, Birthday Cards, Visiting Cards,***
***Rubber Stamp and other Printing Jobs.***
***We also undertake Translation works and Computer Type Setting***
***in Tamil, English and Bahasa Malaysia.***
***We also supply Tamil Books.***

**M. ABDUL LATIFF**

**Suite No. 6, 1st Floor,**
**67, Jalan Ampang**
**Wisma Ann Koai, Kuala Lumpur.**

**Tel : Fax : 03-2041901**
**H/P : 010 - 2182229**

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு !

தமிழர்களே வாருங்கள்!
தாரை சீட்டு நிறுவனத்தில் சேருங்கள்!
மாங்கனி நகரில் மங்காப் புகழுடன்
மணி விளக்காக ஒளிவிடும் நிறுவனம்
தாரை சீட்டு நிறுவனம்!

மாதச் சீட்டுகள் உண்டு.
10 நாட்களுக்கு ஒரு முறை
சீட்டு ஏலம் நடைபெறும்.

மாதச் சந்தா ரூ.500, ரூ.1000, ரூ.2000, ரூ.4000, ரூ.8000,
மேலும் பல திட்டங்கள் உண்டு
தங்களின் மதிப்புமிக்க நல்ல ஆதரவினை வழங்கி உதவும்படி
பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்

அன்புடன்

கவிஞர். தாரை-குமாரவேலு, எம்.ஏ. (இலக்கியம்)
தாரை சண்முகா சிட்பண்ட்ஸ்,
ஸ்ரீ சண்முகா டிரேடர்ஸ்
சேலம் & தாரமங்கலம்

தொலைபேசி
அலு. 264518, 266504
தாரமங்கலம் : 51606.

9, அண்ணா பேரங்காடி, போசு மைதானம் எதிரில் சேலம் –1 சேலம் இல்லம் : 446486



**C. MATHESWARAN**
proprietor

220667, 220668, 220669, 454592, 450666
Delivery 214235

## A-1. MATHESWARA LORRY SERVICE

**26, MARIAMMAN KOVIL MAIN ROAD,
ANNATHANAPATTY, SALEM - 636 002**

A-1 MLS REGULAR SERVICE TO
SALEM, ERODE, KOVAI & CHENNAI

**BRANCH OFFICE**

74-B, Park Road, Near Moolapattarai, Erode - 638 001 Phone : **211098, 210618**

Thiyasapical Club line, 23/3, Thomas Street, Kovai - 641 001
Phone : **394402. 393581**

250, Waltax Road, Chennai - 600 003, Phone **5353022. 5355161**

# நன்றி !

மாநாட்டில் கலந்து கொள்ள இசைவு தந்த
மாண்புமிகு அமைச்சர் மு. **தமிழ்க்குடிமகன்**
அவர்களுக்கும்,
மாண்புமிகு அமைச்சர் **முல்லை வேந்தன்**
அவர்களுக்கும்
இம்மாநாடு வெற்றியடைய ஒத்துழைப்பு நல்கிய
தமிழர் தேசிய இயக்கத் தலைவர்
**பழ.நெடுமாறன்**
அவர்களுக்கும்

வெள்ளி விழா சிறப்பு மலர் உருவாக்கத்துக்கு பணியாற்றிய பெருமக்கள்

இளம்பிறை எம்.ஏ. ரஹ்மான்
எழுத்தாளர் தேவகாந்தன்
இரா. பத்மநாபன்
வே. தங்கநேயன்
வழக்கறிஞர் ப. அமர்நாத்
தவ. பழனியப்பன்
சண். அழகு ஒளி
எஸ். பெருமாள்
கோ. பாலசிவலிங்கம்
கதிர். முத்தையன்
முல்லைவாணன்
ஆர்.சி. சின்னப்ப தமிழர்
புலவர் சுந்தரராசன்
பாவலர் இராமச்சந்திரன்
ஓவியர் புகழேந்தி
ஓவியர் சேகர்
திரு. பாரி
திரு. சண்முக சுந்தரம்
ஏ. இரமணிகாந்தன்

மற்றும் மாநாடு தொடர்பாக நிதி உதவியும் மற்றும் நிகழ்ச்சிகளிலும் உறுதுணை நல்கிய அனைவருக்கும் நன்றி பாராட்டுகிறோம்.

இங்கண்
**இர. ந. வீரப்பனார், மலேசியா**


ALL DOMESTIC & INTERNATIONAL
AIR TICKETS AVAILABLE ACROSS THE COUNTER
INSTANT COMPUTERISED RESERVATIONS
மதுரா டிராவல் சர்வீஸ் (பி) லிட்.
madura travel service (P) Ltd.
मदुरा ट्रेवल सर्वीस (प्रै) लिट.
Impala Complex, Gandhi Irwin Road, Opp. Egmore Railway Station,
Chennai-600 008. TamilNadu. INDIA
Tel : 825 2002, 825 3858, 825 2970 Fax : 825 6813
Website : www.maduratravel.com e-mail : india@maduratravel.com
WORKING HOURS
365 Days 24 Hours
VISA
MasterCard
WE ACCEPT ALL CREDIT CARDS
IATA
ASTA
PATA
MONEY CHANGER